அத்தியாயம் - 1

ஒரு பொருளாதார அடியாள் பிறக்கிறான்

வெகு இயல்பான ஆரம்பம்தான் அது.

சாதாரண நடுத்தரக் குடும்பத்தின் ஒற்றை வாரிசான நான் 1945ல் பிறந்தேன். பாரம்பரிய நெறிபிறழாத, தூய ஒழுக்கவாதிகளான என் பெற்றோர் இருவரும் முன்னூறு வருடங்களுக்கு முந்தைய நியூ இங்கிலாந்து யாங்கீ ஸ்டாக் வம்சாவழியினர். தீவிர குடியரசுக் கட்சி ஆதரவாளர்கள். குடும்பத்தில் முதன்முதலாக கல்லூரியில் காலடி வைத்து உதவித்தொகையிலேயே படிப்பை முடித்தவர்கள். என் அம்மா உயர்நிலைப்பள்ளி லத்தீன் மொழி ஆசிரியை ஆனார். அப்பா இரண்டாம் உலகப்போர் கட்டத்தில் கப்பற்படையின் லெப்டினென்டாகவும், அட்லாண்டிக் கடலில் மிதக்கும் வணிக வெடிமருந்துக் கப்பலின் ஆயுதக்காவலராகவும் இருந்தவர். அவர் டெக்ஸாஸ் மருத்துவமனையில் இடுப்பெலும்பு முறிவிற்குச் சிகிச்சைபெற்று வந்தபோது, நான் நியூஹாம்ப்ஷையரில், ஹனோவரில் பிறந்தேன். ஒரு வயது நிரம்பும் வரை நான் அவரைப் பார்க்கவேயில்லை.

பின்னர் அவர் நியூஹாம்ப்ஷையர் கிராமப்புற விடுதி டில்டன் பள்ளியில் மொழியாசிரியராகச் சேர்ந்தார். அப்பள்ளி வளாகம் குன்றின் உச்சியில் இருந்தது. அப்பள்ளியைச் சிலர் நகரத்தின் பெருமிதமாகவும், வேறுசிலர் அதையே அகங்காரமாகவும் நினைத்தார்கள். விசேசமான அப்பள்ளியில் ஒன்பதாம் வகுப்பில் இருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரைக்கும் ஒவ்வொன்றிலும் ஐம்பது மாணவர்கள் மட்டுமே சேர்க்கப்படுவார்கள். மாணவர்களில் பெரும்பாலானவர்கள் புவனஸ் அயர்ஸ், காரகாஸ், பாஸ்டன், நியூயார்க் நகரங்களின் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்..

எங்கள் தோற்றம் ஏழைகளுக்குரியவை இல்லை என்றாலும் எப்போதும் குடும்பத்தில் பணமுடைதான். பள்ளிஆசிரியர்களுக்கு சம்பளம் குறைவுதான் ஆனாலும் வீட்டுத்தேவைகளான உணவு, வீடு, எரிபொருள், தண்ணீர், புல் வெட்ட, பனி அகற்ற வேலைக்காரர்கள் எல்லாம் இலவசம். நான்காம் பிறந்தநாளில்

இருந்து பள்ளி உணவகத்தில் எனக்கு உணவு. அப்பா கால்பந்து பயிற்சியாளர் என்பதால் விளையாட்டுத் தொடர்பான சில்லரை வேலைகள் என் பொறுப்பு.

பள்ளியாசிரியர்களும் அவர்களது மனைவிமார்களும் தங்களைப் பற்றிய உயர்வெண்ணத்தை உள்ளூர்வாசிகளிடம் சொல்லமாட்டார்கள். பண்ணைவீட்டுப் பிரபுக்களையும், எளிய விவசாயிகளையும் ஊரான் என்று என் பெற்றோர் அவ்வப்போது தங்களுக்குள் கேலி பேசுவார்கள். ஆனால் அது வெறும் கேலி மட்டும் அல்ல.

எனது பள்ளிக்கால நண்பர்கள் ஏழைவிவசாய வர்க்கத்தினர். அவர்களது பெற்றோர் அழுக்குதோட்டக்காரர்கள், குதிரை மேய்ப்போர், ஆலைத்தொழிலாளர்கள். அவர்கள் எங்களை மலையுச்சி அரைவேக்காடு என்பார்கள். பதிலுக்கு என் பெற்றோர் மினுக்கிகள் என்றும், சோம்பேறிகள் என்றும் அழைக்கப்பட்ட ஊர்ப்பிள்ளைகளுடன் என்னைப் பழகவிடமாட்டார்கள். ஆனால் நான் அவர்களுடன்தான் இரவல் கொடுக்கல் வாங்கல் என அனைத்து உறவுகளையும் வைத்துக்கொண்டேன் ஆறாம்வகுப்பு வரை. அதில் ஆன்ன், பிரிசில்லா, ஜூடி ஆகிய மூவர் மீதும் காதலில் மூழ்கியிருந்தேன். என் பெற்றோரின் கண்ணோட்டத்தைப் புரிந்துகொள்ளும் வயதை நான் எட்டியிருக்கவில்லை. எப்படியானாலும் அவர்களுடன் உடன்பட முடியவில்லை என்னால்.

ஆண்டுதோறும் கோடைவிடுமுறையை மூன்றுமாத காலம் என் தாத்தா கட்டிய ஏரிக்குடிலில் கழித்தோம். காடுகள் சூழ்ந்த அங்கு இரவுநேரங்களில் ஆந்தையின் கூவலையும், சிங்கங்களின் உறுமலையும் கேட்க முடியும். அக்கம்பக்கத்தில் வீடுகளும் இல்லை, எனக்கு விளையாட்டுத்தோழர்களும் இல்லை. எனவே அங்கிருந்த மரம்செடிகளையும் பொருட்களையும் உயிர்ப் பாத்திரங்களாகவும், தோழிகளாகவும் பாவித்துப் பொழுதைக் கழிப்பேன்.

டில்டன் பள்ளியில் சேர்வதற்கான பயிற்சி இலவசமாகக் கிடைத்தது. பெற்றோர்கள் சுட்டிக்காட்டியதன் பேரில் அவ்வூர் நண்பர்களுடன் கொண்டிருந்த உறவுகளைத் துண்டித்துக் கொண்டேன். எனது புதிய சகமாணவர்கள் விடுமுறையில் ஆடம்பர மாளிகைகளுக்கும் பண்ணை வீடுகளுக்கும் செல்ல நான் மட்டும் குன்றில் தனித்திருந்தேன். அவர்களுடைய கன்னிப்பெண்கள் எனக்குத் தோழிகளாக இல்லை. எனக்குத் தெரிந்தவர்களும்

வேசிகள் என்று அழைக்கப்பட்டவர்கள். நானும் அவர்களிடமிருந்து விலகிவிட்டேன். அவர்களும் என்னை மறந்துவிட்டார்கள். எனவே பயங்கரமான விரக்தியில் தனித்திருந்தேன்.

எனது பெற்றோர்கள் உசுப்பேற்றுவதில் கில்லாடிகள். எனக்கு ஒரு அபூர்வமான வாய்ப்பு கிடைத்திருப்பதாகவும், அதற்காக ஒரு நாள் நான் நன்றி பாராட்டுவேன் என்றும் சத்தியம் செய்தார்கள். எங்களது தகுதிக்கும் தராதரத்திற்கும் எனக்கு ஒரு நல்ல மனைவி வாய்ப்பாள் என்றும் கதை கட்டினார்கள். பெண்பால் உறவிற்கு ஏக்கமுற்று வெளிப்படுத்தமுடியாத ஆத்திரத்தில் இருந்தேன். வேசிகள் பற்றிய சிந்தனை கிளர்ச்சியூட்டுவதாக இருந்தது.

என்றாலும் ஆர்ப்பாட்டம் செய்வதற்குப் பதிலாக, விரக்தியில் இருந்து மீள எனது கவனத்தை வேறுதிசைக்குத் திருப்பியதால் கவனிக்கத்தகுந்த மாணவனாக மாறினேன். இரண்டு குழுக்களுக்குத் தலைவனானேன். பள்ளிச் செய்திப்பத்திரிகையின் ஆசிரியனானேன். சக பணக்கார மாணவர்களுக்கு நான் யார் என்பதைக் காட்டிவிட்டு அங்கிருந்து எவ்வெப்போதைக்குமாக வெளியேறிவிடுவது என்பதுதான் என் எண்ணம். பள்ளியிறுதியாண்டின்போது உடற்பயிற்சிக் கல்விக்கான பிரவுன் பல்கலிக்கும், மேல்படிப்பிற்காக மிடில்பெரிக்கும் எனக்கு முழுமையான உதவித்தொகை வழங்குமாறு உத்தரவு வந்தது. நான் பிரவுன் பல்கலையைத் தேர்ந்தெடுத்தேன். அதற்குக் காரணம் எனது விளையாட்டார்வம் மட்டுமல்ல அப்பல்கலி நகரத்தில் அமைந்திருந்தது என்பது ஆகும். ஆனால் அம்மா, அப்பா இருவரும் மிடில் பெரியில் பட்டம் பெற்றவர்கள் என்பதால் என்னையும் அங்கேயே அனுப்ப முடிவெடுத்தனர்.

நீ விளையாடும்போது காலை உடைத்தால் என்னாவது. மேல்படிப்புதான் நல்லது என்று அப்பா கூற அப்படியே ஏற்றுக் கொண்டேன்.

டில்டன்னின் விரிந்த வடிவம்தான் மிடில்பெரி கல்லூரி என்பது எனது கண்ணோட்டம். என்ன வித்தியாசம் என்றால் இது நியூஹாம்ப்ஷையர் கிராமப்புறம், அது வெர்மாண்ட் கிராமப்புறம். இது இருபாலரும் படிக்குமிடம். ஆனால் மற்றவர்கள் பணக்காரர்கள், நானோ ஏழை. கடந்த நான்கு ஆண்டுகளாக பெண்களுடன் படிக்காதவன். ஆகையால் கூச்சம். தன்னம்பிக்கை இல்லை, ஒதுக்கப்பட்டவனாகவும், பரிதாபகரமாகவும் இருந்தேன். பாஸ்டன் சென்று வாழ்க்கையைப் பற்றி, பெண்களைப் பற்றி அறிய வேண்டும் என்பதே என் விருப்பம். அதற்காக எனது படிப்பை நிறுத்துங்கள் அல்லது ஓராண்டு விடுமுறை பெற்றுக் கொடுங்கள்

என்று அப்பாவைக் கெஞ்சினேன். சொந்த மகளையே கல்லூரியில் படிக்கவைக்க முடியாத ஆசிரியன் மற்றவர்களை கல்லூரிக்கு வரவழைக்க முடியுமா? என்ற கேள்வி எழுமே என்றார்.

வாழ்க்கையே எதேச்சைத் தொடர்களின் தொகுப்புதான் என்பதைப் புரிந்துகொண்டேன். நிகழ்கிற ஒவ்வொன்றிற்கும் ஆற்றும் எதிர்வினையைத்தான் பலரும் சுதந்திரமான முடிவு என்று சொல்லிக்கொள்கிறார்கள். விதிக்கப்பட்ட திருப்பங்களின் எல்லைக்குள் நின்று எப்படி ஆடுகிறோமோ அதைப் பொறுத்து தான் நாம் யார் என்பது தீர்மானிக்கப்படுகிறது. எனக்கு நிகழ்ந்த இரண்டு எதேச்சைகள்தான் என் வாழ்க்கையை வடிவமைத்தது. ஒன்று ஈரான் மன்னர் ஷாவின் தனிஆலோசகரான ஜெனரலின் மகன் மூலமாக வந்தது. இன்னொன்று எனது இளம்பருவத்துத் தோழி ஆன்ன் என்ற பெயருடைய இன்னொரு அழகான பெண்ணின் வடிவத்தில் வந்தது.

இந்த பர்கத் என்று அழைக்கப்படுகிற முதலாமவன் ரோம் நாட்டில் தொழில்முறை காற்பந்து விளையாட்டாளன். பெண்களைக் கவர்ந்திழுக்கும் கருத்த சுருள்முடி, மென் அரக்குநிறக் கண்கள், விளையாட்டு வீரனுக்குரிய கச்சிதமான உடலமைப்பும், நல்ல குடும்பப் பின்னணியும் கொண்டவன். என் வழிமுறைகள் பலவற்றிற்கு எதிரானவன். வருங்காலத்தில் மிகவும் பயன்படக் கூடிய பலவிசயங்களை எனக்குக் கற்றுக் கொடுத்தவன். வேறொருத்தனுடன் தீவிரமாகச் சுற்றிக்கொண்டிருந்த, இன்னொரு கல்லூரியில் படிக்கும் ஆன்ன் என்னைத் தன் செட்டைக் கதகதப்பில் அடக்கிக்கொண்டாள். எங்களது காவியத்தனமான உறவில் அதுவரை அனுபவிக்காத முதல் காதலைப் பெற்றேன்.

பெற்றோரின் ஒழுக்கவாதங்களை மீறி குடிக்கவும் விருந்துகளில் பங்கேற்கவும் பர்கத் எனக்கு ஊக்கமூட்டினான். படிப்பைக் கைவிடுவதென்று உறுதியான முடிவு எடுத்தேன். கல்விக்காலை முறித்து அப்பாவிற்கு பதிலடி தரவேண்டும். கல்வித் தகுதி சரிந்தது, உதவித்தொகை நின்றது. அப்பா கைகழுவிவிடுவேன் என்று மிரட்டினார். பர்கத் ஒரு பக்கம் ஆசை வார்த்தைகளால் நெருக்கினான். முதல்வர் அறைக்குள் நுழைந்த நான் பள்ளியை விட்டு வெளியேறினேன். என் வாழ்வின் முக்கியமான திருப்புமுனை அது.

அந்த நகரின் கடைசி இரவை ஒரு மதுச்சாலையில் கொண்டாடிக் களித்தோம் நானும் பர்கத்தும். அங்கிருந்த ஆஜானுபாகுவான விவசாயி அவனது மனைவியை வைத்துக் கொண்டிருப்பதாகக் கூறி என் கால்களை வாரித்தூக்கி சுற்றில் ஒரு அடியாளின் வாக்குமூலம் 31

வீசினார். எங்களுக்கிடையில் புகுந்த பர்கத் தன் கத்தியால் விவசாயியின் கன்னத்தில் கீறினான். அந்த அறையைக் கடந்து ஜன்னலுக்கு அழைத்துப்போய் தப்பிக்க வழி சொன்னான். இருவரும் எகிறிக் குதித்து ஓடி எங்கள் அறைக்கு வந்து சேர்ந்தோம்.

அடுத்தநாள் காலை போலீஸ் என்னைத் துளைத்து எடுத்தபோது அந்தச் சம்பவத்திற்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்று சொல்லிவிட்டேன். வேறுவழியின்றி பர்கத்தும் விடுவிக்கப்பட்டான். அங்கிருந்து பாஸ்டனுக்குப் போய் ஒரு அடுக்ககத்தில் தங்கினோம். நான் அங்கு ஹியார்ட்சின் ரெக்கார்டு அமெரிக்கன் பத்திரிகையில் ஞாயிறு விளம்பரச்செய்திப் பிரிவில் முதன்மை ஆசிரியரின் உதவியாளனாகச் சேர்ந்தேன்.

1965ன் இறுதியில் எங்கள் பத்திரிகையில் இருந்த என் நண்பர்கள் பலர் கட்டாய ராணுவச்சேவைக்கு அனுப்பப்பட்டனர். அதிலிருந்து தப்ப பாஸ்டன் பல்கலைக்கழகத்தில் வணிகவியல் கல்லூரியில் சேர்ந்துகொண்டேன். அதேசமயம் ஆன்ன் தனது காதல் நண்பனுடனான நட்பை முறித்துக்கொண்டதால் என்னைப் பார்க்க அடிக்கடி வந்துவிடுவாள். அவள் கவனம் என் பக்கம் திரும்புவதை வரவேற்றேன். என் இளங்கலை முடிய இன்னும் ஓராண்டு இருந்த நிலையில் 1967ல் ஆன்ன் பட்டம் பெற்றாள். திருமணம் ஆகும் வரை என்னுடன் தங்க இணங்கவில்லை. இந்தப் பிடிவாதம் என் பெற்றோரின் ஒழுக்கவாதத்தை நினைவூட்டி எரிச்சல் படுத்தினாலும், நாங்கள் சேர்ந்திருக்கும் நேரம் ஒரு சுகானுபவமாக இருந்தது. அதன்மீது மேலும் மேலும் ஆவல் கொண்டிருந்ததால். இறுதியில். நாங்கள் மணம் புரிந்தோம்.

ஆன்னின் அப்பா நுட்பமான பொறியாளர். முக்கியமான தர ஏவுகணை உருவாக்கத்தில் ஆதாரமாக இருந்தார் என்பதற்காக அதற்கு வெகுமதியாக கப்பற்படையின் உயர்ந்த பதவி அளிக்கப்பட்டது. அவரது நெருங்கிய நண்பர் ப்ராங் என்றழைக்கப்படுபவர் ஆன்னின் ஆண்பிரதியைப் போல இருப்பவர் தேசிய பாதுகாப்புத்துறையில் நிர்வாகப் பிரிவில் வேலை செய்தார். வெளியில் அதிகமாகத் தெரியாது என்றாலும் அதுதான் பெரிய உளவுப்படை அமைப்பு.

திருமணம் முடிந்த கையோடு ராணுவச் சேவை தேர்வுக்குத் தாக்கீது வந்தது. அதில் தேர்வும் பெற்றதால் பட்டம் வாங்கியதும் வியட்நாம் செல்லவேண்டியிருந்தது. போரின் மீது எனக்கு ஒரு கவர்ச்சி இருந்தாலும் தென்கிழக்கு ஆசியாவில் போர்முனையில் சண்டைபோட வேண்டும் என்பதை நினைத்தாலே நெஞ்சு

வெடித்துவிடும்போல இருந்தது. தாமஸ்பெய்ன், ஈதன் ஆலென் வழிவந்த எனது முன்னோர்களின் கதைகளைக் கேட்டு மனவெழுச்சிப் பெற்றவன்தானா நான். பிரஞ்சியருடனும், செவ்விந்தியருடனும் போர் நடந்த மேற்கு நியூயார்க்கில் உள்ள போர்க்களத்திற்குச் சென்று பார்த்திருக்கிறேன். புரட்சிப் போர்களைப் பற்றி அறிந்துவைத்திருந்தேன். வரலாற்றுப் புதின வாசிப்புகள் மூலமாக இவற்றையெல்லாம் தெரிந்துகொள்ள முடிந்தது. சொல்லப்போனால் தென்கிழக்கு ஆசியாவிற்குள் எங்களது முதல் சிறப்புப்படை நுழைந்தவுடன் கிடைக்கப்போகிற மகிழ்ச்சிகரமான செய்திக்காகக் காத்திருந்தேன். ஆனால் ராணுவம் அமெரிக்காவின் கொள்கைக்கு எதிராக அராஜகம் புரிவதை ஊடகங்கள் வெளியிட்டபோது எனக்குள் மனமாறுதல் ஏற்பட்டதை உணர்ந்தேன். ஆலன்பெய்ன் இருந்திருந்தால் இந்தப் போரில் எந்தப் பக்கம் நிற்பார் என்று ஒரு மனக்கணக்குப் போட்டுப் பார்த்தபோது வியட்நாமியர்களுக்கு எதிராகத்தான் நிற்கவேண்டி வரும் என்று பெற்ற பதில் அதிர்ச்சியளித்தது.

அங்கிள் பிராங்க் தனது முகமையில் (என்எஸ்ஏ) சேர்ந்தால் ராணுவச்சேவையை ஒத்திப்போட முடியுமென்று கூறி அடுத்தடுத்த நேர்காணல்களுக்கு ஏற்பாடு செய்து எனக்கு ஆசுவாசமளித்தார். இந்த நேர்காணல்களில் ஒருநாள் முழுதும் நடத்தப்பட்ட பாலிகிராப் (மறைக்கிற உண்மையைக் கண்டறிதல்) இயந்திர சோதனையும் அடக்கம். இந்தத் தொடர் நேர்காணலில் என்னைப் பற்றிய தெளிவான சித்திரத்தை உருவாக்கிய பின்னர்தான் வேலையளிப்பதா? இல்லையா என்பது தீர்மானிக்கப்படும். பாலிகிராப் சோதனையில் வியட்நாம் போர் குறித்த எண்ணம் வெளிப்பட்டுவிடுமாதலால் இந்த வேலை எனக்கு அளிக்கப்படுவதற்கான வாய்ப்பு குறைவுதான் என்று நினைத்தேன்.

வாய்மொழித் தேர்விலும் விசுவாசமிக்க அமெரிக்கன் என்பதால் போரை எதிர்ப்பதாகக் கூறியிருந்தேன். ஆனால் அந்த பதிலை நுணுகிநோண்டிப் பார்க்காதது ஆச்சர்யம்தான். அதற்குப் பதிலாக சொகுசான பணக்காரவீட்டுப் பையன்களுக்கிடையே ஒழுக்கமிக்கவனாக வளர்க்க நினைத்த எனது பெற்றோர் மீது எனக்கிருந்த எதிர்ப்புணர்வை கூர்மையாகக் கவனித்துப் பார்த்தார்கள். பணம், பெண்கள் போன்றவைப் போதியஅளவு கிடைக்கப்பெறாததால் ஏற்பட்ட விரக்தியின் விளைவு என்பதையும், எனக்குள் ஒரு கற்பனாஉலகத்தை உருவாக்கிக் கொண்டிருப்பதையும் அவர்கள் கண்டுகொண்டார்கள். எனக்கும்

பர்கத்திற்கும் உள்ள உறவையும், அவனைப் போலீஸில் இருந்து காப்பாற்றுவதற்கு நான் காட்டிய உறுதியையும் அவர்கள் ஆர்வத்துடன் கேட்டறிந்தவிதம் எனக்கு ஆச்சர்யமளித்தது.

இவையெல்லாம் என்எஸ்ஏவால் நான் நிராகரிக்கப்படுவதற்கான காரணங்களாக இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் பேட்டிகள் நிற்காமல் தொடர்ந்தன. உண்மையில் அவையெல்லாம் எனக்குச் சாதகமான அம்சங்கள் என்று பல ஆண்டுகளுக்குப் பின்னரே தெரிந்தது. நாட்டின் மீதான பற்றைவிட சொந்தவாழ்க்கை மீதான வெறுப்பு அவர்களுக்கு முக்கியமான ஒன்றாக இருந்தது. பெண்கள் மீதான ஈடுபாடு, பெற்றோர் மீது கொண்டுள்ள ஆத்திரம், தரமான வாழ்க்கை மீதான வெறி இவைதான் அவர்களுக்குக் கிடைத்த கொக்கி. பெற்றோருக்கு எதிரானக் கலகம், படிப்பில், விளையாட்டில் காட்டும் தனித்துவம், வெளிநாட்டினான பர்கத்துடன் பழகுதல் இவையெல்லாம் என்னுடைய சிறப்பானத் தகுதிகளாகவும், நான் தீமைகள் புரிவதற்கு ஏற்ற ஆளாகவும் கருதப்பட்டேன். பர்கத்தின் அப்பா அமெரிக்காவிற்கு உளவு சொல்கிற ஆள் என்பது பிறகுதான் எனக்குத் தெரிய வந்தது.

சில வாரச் சோதனைகள் முடிந்தபின், பட்டத்தைப் பெற்ற பிறகு உளவுக் கலைப்பயிற்சிக்காக எனக்கு ஒரு வேலையளிக்கப்பட்டது. அதைத் துவக்குவதற்கு முன்னர் ஒரு தன்னார்வத்தால் பாஸ்டன் பல்கலைக்கழகத்தில் நடந்த ஒரு கருத்தரங்கில் கலந்துகொண்டேன்.

அதில் பங்கேற்றது எதேச்சையானதுதான் என்றாலும் வாழ்க்கையில் முக்கியத்துவமான ஒன்றாகிவிட்டது. உலகின் எந்தெந்த பகுதிகளுக்குத் தன்னார்வத் தொண்டர்கள் தேவையென்பதை ஆளெடுப்பாளர்கள் விளக்கினார்கள். அதில் கூறப்பட்ட இடங்களில் ஒன்று ஐரோப்பியர் வருகைக்கு முந்திய வட அமெரிக்காவைப் போன்ற பழங்குடிகள் வாழும் அமேசான் மழைக்காடுகள்.

என் மூதாதை அப்னாகீக்குகள் இங்கு நியூஹாம்ப்ஷைரில் வந்து குடியமர்ந்த அந்த வாழ்க்கையை அடிக்கடி என் கனவுகளுக்குள் வாழ்ந்துகொண்டிருந்தேன். என் நாளங்களில் அப்னாகீ ரத்தம் ஓடிக்கொண்டிருப்பதாகவும், காச்சுவாசிகள் எளிதில் புரிந்துகொள்ளத்தக்கவர்கள் என்றும் எனக்குத் தோன்றியது. கருத்தரங்கம் முடிந்ததும் அமேசான் போவதற்கான வாய்ப்பு குறித்து விசாரித்தேன். அங்கு நிறைய தொண்டர்கள் தேவைப்படுவதால் நல்ல வாய்ப்பு இருப்பதாகச் சொல்லப்பட்டது. நான் அங்கிள் பிராங்கை அணுகினேன்.

அவரும் அதில் அக்கறை காட்டுமாறு கூறியது எனக்கு இன்ப அதிர்ச்சியாக இருந்தது. ஹனோயின் வீழ்ச்சிக்குப் பின் அமேசான் மிகவும் முக்கியத்துவம் பெற்றுவிடும் என்றார். அவரைப்போன்றவர்கள் கண்டிப்பாக வியட்நாம் தோற்கடிக்கப்படும் என்று நம்பினார்கள்.

அவர் மேலும் அப்பகுதியில் எண்ணெய்ப் பொங்கி வழிகிறது, அங்குள்ள பழங்குடிகளைப் புரிந்துகொள்ள நல்ல முகவர்கள் தேவை என்றார். அமைதிப்படையில் சேர்வது பயிற்சிக்கான வாய்ப்பாக இருக்கும் என்ற உறுதியுடன் நீ ஸ்பானிஷிலும் உள்ளூர்ப் பழங்குடியின மொழிகளிலும் உன் தகுதியை வளர்த்துக்கொள் என்றார். இறுதியில் அரசு சேவைக்குப் பதிலாக தனியாரிடம் வேலைசெய்கிற அடியாள் ஒருவனாகத்தான் மாறுவாய் என்று தலையை உலுக்கிக்கொண்டார்.

அப்போது அவர் சொன்னது எனக்குப் புரியவில்லை. அடியாள் என்ற வார்த்தை எனக்குத் தெரியாதென்பதால் அவர் சொன்னதைப் புரிந்துகொள்ள நான் அடியாளாகும் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. இந்த வேலைகளுக்காக நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியாது. அரசாங்கத்திடம் இருந்து நேரடியாகச் சம்பளம் பெறவில்லை என்றாலும் அவர்களின் உழைப்பு ஏகாதிபத்திய நோக்கத்திற்குத்தான் பயன்படும் என்பதும் எனக்குத் தெரியாது. இதில் இன்னும் விசேசம் என்னவென்றால் ஆண்டிற்கு ஆண்டு பெருகி வந்த அப்புதிய வகுப்பினருக்கு நானே தலைமைப் பாத்திரம் வகிக்க நேர்ந்ததுதான்.

அமைதிப்படைக்கு மனுப்போட்ட நானும், ஆன்னும் எங்களை அமேசான் பகுதிக்கு அனுப்புமாறு கேட்டிருந்தோம். எமது வேண்டுகோள் ஏற்கப்பட்டுக் கிடைத்த உத்தரவு பெருத்த ஏமாற்றத்தை அளித்தது. ஏனென்றால் அது நாங்கள் ஈக்குவடாருக்கு அனுப்பப்படுவோம் என்றது.

நான் அமேசானுக்குக் கேட்டதாகத்தானே நினைப்பு ஆப்பிரிக்கா இல்லையே.

உலகப்படத்தை எடுத்துவைத்துக்கொண்டு ஈக்குவடாரைத் தேடினேன். ஆனால் ஆப்பிரிக்காக் கண்டத்தில் ஈக்குவடாரைக் காணவில்லை. ஒரு வழியாகப் பட்டியலைப் பார்த்து லத்தீன் அமெரிக்காவில் ஈக்குவடாரைக் கண்டுபிடித்தேன். ஆண்டீஸ் மலைகளின் பனிப்படலங்கள் உருகிப் பெருகும் ஆறுதான் அமேசான் என்பதையும் அமேசான் காடுகள் வனப்பும், மிரட்சியும்

மிக்கவை என்பதையும் அங்கே பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக பூர்வகுடி மக்கள் வாழ்கிறார்கள் என்பதையும் தெரிந்துகொண்டோம். பணிநியமனத்தை ஏற்றுக்கொண்டோம்.

நானும் ஆன்னும் தென்கலிபோர்னியாவில் பயிற்சியை முடித்துக்கொண்டு 1968 செப்டம்பர் மாதம் ஈக்குவடாருக்குப் பயணப்பட்டோம். ஐரோப்பியர்கள் வருகைக்கு முன்பு அமெரிக்காவில் வாழ்ந்த பழங்குடி மக்களைப்போலவே இன்னமும் இருக்கும் ஷுவர் இன மக்களுடன் எங்கள் வாழ்க்கையைத் துவக்கினோம். ஆண்டிஸ் மலைச்சரிவுகளில் இன்காஸ் மக்கள் மத்தியிலும் வேலை செய்தோம். லத்தீன் அமெரிக்கா பற்றி எனது சக பள்ளிமாணவர்கள் மூலமாக என் நினைவில் இருந்த சித்திரத்திற்கு மாறாக இப்படியொரு பகுதி உலகில் இன்னமும் இருக்கிறதா என்று நினைக்கும்படியாகவும் இருந்தது. விவசாயத்தையும், வேட்டையையும் தொழிலாகக் கொண்டு வாழும் அப்பழங்குடி மக்களின் அனுதாபியானேன். அவர்கள் எனது நியூஹாம்ப்ஷையர் மக்களை நினைவூட்டுபவர்களாகத் தோன்றியதால் இனம் காணமுடியாத பிணைப்பு ஏற்பட்டுவிட்டது.

ஈக்குவடாரிலும், அதன் அண்டை நாடுகளிலும் நீர் மின்நிலையங்கள் போன்ற மேல்கட்டுமானத் திட்டங்களை அமைப்பதற்கு கடனுதவி செய்யும் மெய்ன் என்ற சர்வதேச ஆலோசனை அமைப்பின் துணைத்தலைவர் ஈனார் கிரீவ் அட்டகாசமான சூட் கோட்டுடன் எங்கள் பகுதியில் ஆகாய மார்க்கமாக வந்திறங்கினார். திருவாளர் கிரீவ் அமெரிக்க சேமத் தரை படையிலும் ஓர் அதிகாரி.

நான் கிரீவ்விடம் என்எஸ்ஏயில் தேர்வு பெற்றுள்ளதாகவும். அதில் சேரவிருப்பதாகவும் கூறினேன். அவர் பதிலுக்கு என்எஸ்ஏக்குத் தான் தரகராக இருந்ததாகவும், மெய்ன் போன்ற நிறுவனங்களில் பணியாற்றுவதால் கிடைக்கும் பலன்கள் பற்றியும் விளக்கினார். என்னுடைய திறன்களை அளவெடுப்பதாக இருந்தது அவர் பார்த்த பார்வை. என்னைப் பற்றிப் புரிந்துகொண்டிருப்பார் என்று நினைத்தேன். குறிப்பாக பிற வடஅமெரிக்கர்களுக்கு ஒத்து வராத சூழலில் என்னைப் நான் பொருத்திக்கொண்ட திறன் அவருக்குப் பிடித்திருக்கும்.

தொடர்ந்து இரண்டு நாட்களை என்னுடன் கழித்துவிட்டு, பின்னரும் அஞ்சல் தொடர்பில் இருந்தார். ஈக்குவடார் குறித்த ஆய்வறிக்கையை தயாரித்து அனுப்பும்படி கேட்டிருந்தார். என்னிடம் கையடக்கமான தட்டச்சு இருந்தது. அதுபோக

எழுதுவதில் விருப்பம் உடையவனென்பதால் அவரது உத்தரவு மகிழ்ச்சியூட்டியது. ஈக்குவடாரின் அரசியல், பொருளாதார எதிர்காலம் குறித்த எனது யூகங்களையும், எண்ணெய் நிறுவனங்களுக்கும் புதிய முயற்சிகளுக்கும் எதிராகப் போராட உள்ளூர் பழங்குடி மக்கள் உத்தேசிப்பதையும் ஓராண்டிற்குள் பதினைந்து நீண்ட கடிதங்களாக தொடர்ந்து எழுதினேன்.

அமைதிக்குழுவின் பணிக்காலம் முடிந்ததும், பாஸ்டனிலுள்ள மெய்ன் அலுவலகத்திற்கு கிரீவ் என்னை அழைத்தார். மெய்னின் வாடிக்கையாளரான உலகவங்கிக்குக் கிடைக்கும் உத்தேசத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டுதான் வேலைகள் தீர்மானிக்கப்படுகின்றன. எனவே உத்தேசத்திட்டங்களைத் தயாரிக்கும் பொருளாதார நிபுணர்கள் தேவைப்படுவதாகக் கூறினார். இதற்குமுன் தன்னால் நியமிக்கப்பட்ட மூன்று பொருளாதார வல்லுனர்களில் இருவர் முதுநிலைப் பட்டதாரிகள், மற்றொருவர் ஆய்வுப் பட்டம் பெற்றவர். என்றாலும் தேவைப்படும் உத்தேசத்திட்டங்களை அவர்களால் தயாரித்து அளிக்க முடிவில்லை என்றார்.

புள்ளிவிபரங்களின் அடிப்படையிலேயே வேலை செய்கிறவர்கள் என்பதால் சிலநாடுகளின் பொருளாதார வளர்ச்சி குறித்து உத்தேசத்திட்டங்கள் தயாரிக்க முடியவில்லை என்றார். இந்தோனேசியா, ஈரான், எகிப்து போன்ற நாடுகளில் உள்ளோடிய கிராமங்களில் கீழ்மட்டத் தலைவர்களைச் சந்திக்க வேண்டியிருப்பதையும், அக்கிராமங்களின் பொருளாதார வளர்ச்சி குறித்த தொலைநோக்கு மதிப்பீடுகளை அளிக்கமுடியவில்லை என்றும் கூறினார். இந்த வேலைகளை பனாமா கிராமத்தில் மேற்கொண்ட ஒருவருக்கு நரம்புமண்டல பாதிப்பு ஏற்பட்டு போலீஸ் பாதுகாப்புடன் விமானத்தில் ஏற்றி அனுப்பப்பட்ட கதையையும் குறிப்பிட்டார்.

எந்தப் புள்ளிவிபரங்கள் இல்லாதபோதும் நீ தயாரித்த கடிதங்கள் உன் திறமையை எடுத்துக்காட்டி விட்டன. அதிலும் ஈக்குவடார் சூழலில் தாக்குப்பிடித்துவிட்ட நீ எப்படிப்பட்ட இடத்தையும் சமாளிக்கத் தெரிந்தவன் என்பதை உறுதிப்படுத்துகிறது. நான் ஏற்கனவே ஒருவனை வேலையை விட்டு நிறுத்திவிட்டேன். உனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் இந்த வேலையை ஒப்புக்கொள்ளத் தயார் என்றால் மற்ற இருவரையும் துரத்திவிடுவேன் என்றார்.

இப்படியாக மெய்னில் 1971 ஜனவரியில் பொருளாதார வல்லுனராகும் வாய்ப்பு எனக்கு அளிக்கப்பட்டது. நான்

கணக்கிட்டுக்கொண்டிருந்த 26 ஆம் வயதை எட்டினேன். இனி ராணுவத்தில் சேரவேண்டிய நெருக்கடி இல்லை. இந்த விபரங்களை ஆன்ன் குடும்பத்தாரிடம் பேசினேன். ஊக்கமூட்டினார்கள். ஆக அங்கிள் பிராங்க் சொன்னது சரியாயிற்று. என்னுடைய ஈக்குவடார் அனுபவம், தகுதி திறமை மட்டுமே இந்த வேலை கிடைத்ததற்கான காரணமல்ல. அதில் அங்கிள் பிராங்க்கின் உள்கையும் இருந்திருக்கும். ஆனால் அது இறுதிவரை சொல்லப்படவேயில்லை.

பல வாரங்களாக தலை கனத்துபோய் மிதப்பில் அலைந்தேன். என் கையில் இருந்தது இளங்கலைப் பட்டம் மட்டுமே. ராணுவ விலக்கு பெற்ற மற்றவர்கள் வணிக-நிர்வாகவியல் பட்டம் பெற்றவர்கள் என்பதால் என்மீது பொறாமையில் குமைந்து கொண்டிருந்தார்கள். ''என்னை ஒரு உளவு மாயாவி போலவும், உலகின் அற்புதமான இடங்களுக்குச் செல்வது போலவும், மதுக்குப்பி ஏந்தி உல்லாசமாகச் சாய்ந்திருப்பது போலவும் துக்கிணியூண்டு உடையணிந்த பெண்கள் என்னைச் சூழ நிற்பது போலவும் இன்பக்கனவுலகில் தவழ்ந்தேன்.''

அவை வெறும் கற்பனைகள்தான் என்றாலும் நிஜமாவதற்கானச் சாத்தியங்களும் உண்டு. ஈனார் என்னைப் பொருளாதாரடியாளாகத்தான் அமர்த்தினார். ஆனால் என் வேலைகள் அதற்கும் அப்பால் ஒருபோதும் நினைத்திராத ஜேம்ஸ்பாண்ட்டிற்குப் பக்கத்தில் என்பதைப் போகப்போகத் தெரிந்துகொண்டேன்.

அத்தியாயம் - 2

பிழைப்பைத் தேடி

இரண்டாயிரம் பேர் வேலைசெய்யும் மெய்ன் நிறுவனத்தில் ஐந்து சதவீதமானோர் பங்குதாரர்கள் என்று வெளியுலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தனர். அவர்கள்தான் அனைவரையும் ஆளுகை செய்பவர்களாகவும் பணத்தை மூட்டை கட்டுபவர்களாகவும் இருந்தனர். அதிகாரத்தில் இருப்பவர்களுடனும், தலைமை நிர்வாகிகளுடனுமான உறவுகளைப் பராமரிப்பவர்களாக இருந்தார்கள் என்பதால் அங்குள்ள ஒவ்வொருவருக்கும் நிறுவனத்தில் பங்குதாரர்களாக வேண்டும் என்பது ஒரு கனவாக இருந்தது. நிறுவனத்தொடர்பான அனைத்தும் மிக மிக ரகசியமாகப் பாதுகாக்கப்பட்டது. பத்திரிகைகளுடனான உறவுத் தீண்டத் தகாதது. கொஞ்சம்கூடச் சகிக்கமுடியாத ஒன்று. அதனால் யாரும் மெய்னைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்க முடியாது. எங்களுடைய போட்டியாளர்களான ஆர்தர் டி.லிட்டில், ஸ்டோன் வெப்ஸ்டர், ப்ரௌன் ரூட், ஹாலி பர்டோன், பெக்டோல் போன்றவை எல்லாம் உங்களுக்குத் தெரிந்திருந்தாலும் எங்களைத் தெரியாது.

போட்டியாளர்கள் என்ற சொல்லை ஒரு வசதிக்காகப் பயன்படுத்துகிறேன். ஆனால் மெய்ன் தான் அனைத்திற்கும் முன்னணி. எங்களில் பலர் தொழில்முறைப் பொறியாளர்கள் என்றாலும் கட்டுமானக் கருவிகளோ, தளவாடக்கூடமோ எதுவும் கிடையாது. எங்களில் பலர் முன்னாள் ராணுவத்தினர். ஆனாலும் ராணுவத்தொடர்பான கட்டுமானச் சேவைகள் எதுவும் செய்ததில்லை. என்ன செய்கிறோம் என்பதைத் தெளிவாகச் சொல்லமுடியாது. என்னுடைய முதல் வேலைக்காக இந்தோனேசியத் தீவான ஜாவில் மிகப் பெரிய மின்நிலையம் கட்டுவதற்கான பதினோரு பேர் கொண்ட குழுவில் ஒருவனாகச் செல்லவிருந்தேன்.

அந்த வேலை பற்றி என்னுடன் பேசிய ஈனாரும், பிற அதிகாரிகளும் இந்தோனேசியாவில் மிகப்பெரிய பொருளாதார

வளர்ச்சி ஏற்படப்போவதாகவும், அதில் முன்னனுமானிக்கும் தனித்துவத்தை நிரூபித்தால் பேரும் - புகழும் பதவி உயர்வும் கிடைக்கும் என்று ஆசை காட்டினார்கள்.

சரியாகச் சொல்வதென்றால் இந்த வரை வரைபடத்தைத் தாண்டி கையை தலைக்கு மேலே உயர்த்திய ஈனார் பறவைபோல மேல் நோக்கிப் பறக்கும் என்றார்.

ஈனார் அடிக்கடி வெளியூர் வந்து போனார். ஆனால் ஒவ்வொரு முறையும் இரண்டுமூன்று நாட்களே இருப்பார். தனது வருகையின்போது அலுவலகத்தில் என்னைச் சந்தித்து ஒரு காபிகுடிக்கும் நேரத்திற்கு மேலாகச் சில நிமிடங்கள்தான் செலவிடுவார். ஒவ்வொரு முறையும் ஆன்னைப் பற்றி, புதிதாகக் குடியமர்ந்த அடுக்கக வீடுபற்றி, ஈக்குவடாரிலிருந்து அழைத்து வந்த பூனைபற்றி மிகுந்த அக்கறையுடன் விசாரிப்பார். இந்த சந்திப்பின் வழி என்னைப்பற்றித் தீர்மானகரமாகத் தெரிந்து கொண்டிருப்பார். ஆனால் வேலையின் மூலமாக நான் என்ன எதிர்பார்க்கலாம் என்பதற்கான எந்த சமிக்ஞையும் தரமாட்டார். அது குறித்து நான் பலமுறை கேட்டபோதும் கொடுத்த பதில்களில் என்னால் திருப்திஅடைய முடியவில்லை. உரையாடலின்போது பேச்சை மாற்றுவதில் கில்லாடியான ஆள் அவர். அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் விசித்திரமான ஒரு பார்வை பார்ப்பார்.

நீ ஒன்றும் கவலைப்படாதே. உன்னிடம் இருந்து நாங்கள் நிறைய எதிர்பார்க்கிறோம். குரலைக் கொஞ்சம் இழுத்தார், இனம் காணமுடியாத சிரிப்பு ஒன்றை உதிர்த்துவிட்டுச் சொன்னார். நான் சமீபத்தில் வாஷிங்டன் சென்றிருந்தேன். எப்படியானாலும் நமது அடுத்த திட்டம் குவைத்தில்தான். அதற்கு உன்னைத்தான் நியமிக்கலாம் என்றிருக்கிறோம். நாம் சீக்கிரமே இந்தோனேசியா போகவேண்டி இருக்கும். அதற்குமுன் குவைத் பற்றி படித்துக்கொள். பாஸ்டன் நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். தேவைப்பட்டால் எம்ஐடியில் இருந்தும் ஹார்வர்டிலிருந்தும் உனக்குப் புத்தகங்களை அளிக்கிறோம் என்றார்.

அதற்குப் பின்னர் எனது அலுவலகத்திற்கும், எனது வீட்டிற்கும் அருகில் இருக்கும் பாஸ்டன் நூலகத்திற்குச் சென்று அடிக்கடி பல மணி நேரங்கள் செலவிட்டேன். பிற நூலகங்களையும் பயன்படுத்திக் கொண்டேன். குவைத் பற்றி நன்றாகத் தெரிந்து கொண்டேன். உலகவங்கி, சர்வதேச நிதியம், அமெரிக்க, ஐக்கிய நாடுகள் சபை ஆகிய அமைப்புகள் வெளியிட்ட நூல்களில் இருந்து போதிய புள்ளிவிபரங்களைச் சேகரித்துக் கொண்டேன். முதலில்

நான் இந்தோனேசியா ஜாவா பொருளாதாரப்போக்கு குறித்த கணிப்பு மாதிரி என்னிடம் இருந்து எதிர்பார்க்கப்படுவதால் அதைத் தயாரித்து அளிக்கவேண்டும். அடுத்து குவைத்திற்கும் ஒன்று ஆரம்பிக்க வேண்டும்.

இளங்கலை வணிக நிர்வாகவியலில் என்னைப் போதியளவு தயார்படுத்திக் கொள்ளவில்லை என்பதால் தெளிவாகத் திட்டமிடுவதற்காக நீண்டநேரம் செலவிட வேண்டியிருந்தது. அவற்றைக் கற்றுக்கொள்ள இரண்டு பயிற்சி வகுப்புகளில் சேர்ந்தேன். பயிற்சிகளின் போக்கில் நான் தெரிந்துகொண்டது இதுதான் முடிவை முதலில் தீர்மானித்துக்கொண்டு அதற்கு ஏற்றவாறு புள்ளிவிபரங்களை அதில் திணித்து ஒப்பேற்றுகிற வேலைதான் திட்டத் தயாரிப்பு.

மெய்ன் ஒரு ஆணாதிக்க நிறுவனம். தொழில் முறைப்பொறுப்பில் நான்குபேர் மட்டுமே பெண்கள். மற்றபடி துணைத்தலைவர்களுக்கும் மேலாளர்களுக்கும் சுருக்கெழுத்தர்களும், தனிச்செயலர்களும் எனப் பெண்கள் இருநூறு பேர் இருக்கலாம். இந்தப் பாலின ஏற்றத்தாழ்வை சஜமாக ஏற்கப் பழகியிருந்தேன். இந்தச் சந்தர்ப்பத்தில் பாஸ்டன் பொதுநூலகத்தில் நடந்த சம்பவம் என்னை அதிர்ச்சியடைய வைத்தது.

எனக்கு எதிர்ப்புறத்து இருக்கையில் அடர் பச்சைநிறத்தில் ஆர்ப்பாட்டமான சூட்டணிந்த பெண் வந்து அமர்ந்தாள். மிகவும் வசதியானவள்போலத் தோன்றியது. அலுவலகத்தில் எனக்கு சீனியராக இருக்கவேண்டும் என்று நினைத்தேன். அவளைக் கவனிக்காததுபோல பார்வையை வேறுபக்கம் திருப்பிக் கொண்டேன். சிலநிமிடங்கள் கழித்து எதுவும் பேசாமல் என்பக்கம் ஒரு புத்தகத்தை நகர்த்திவிட்டாள். அந்நூலில் எனக்குத் தேவையான குவைத் பற்றிய தகவல்களுடன் அவளைப்பற்றிய அறிமுக அட்டையும் இருந்தது. பெயர் கிளாடின் மார்டின். பதவி ச்சாஸ் டி மெய்னின் சிறப்பு ஆலோசகர். நான் அவளது மென்பச்சைக் கண்களை ஊடுருவிப் பார்த்தேன். என்னை நோக்கி கையை நீட்டினாள்.

உனக்குப் பயிற்சியளிக்குமாறு கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறேன் என்று கூறினாள். நடப்பது எனக்குத் தானா? என்னால் நம்பவே முடியவில்லை.

அடுத்தநாள் முதலே புருடென்ஷியல் தலைமையகத்திற்குப் பக்கத்தில் பீக்கூன் தெருவில் உள்ள கிளாடின்னின் அலுவலகத்தில் சந்திக்கத் துவங்கினோம். சந்திப்பின் முதல் நிமிடங்களிலேயே எனக்கு அசாதாரணமான பொறுப்பு அளிக்கப்பட்டிருப்பதாகவும்,

அதன் ரகசியங்கள் மிகக் கவனமாகப் பாதுகாக்கவேண்டும் என்றும் எச்சரிக்கை விடுத்தாள். நீண்டநாட்களாக என்னிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள் என்ற கேள்விக்கு எனக்கு அவளேதான் பதிலாக இருந்தாள். என்னைப் பொருளாதார அடியாளாக உருவாக்குவது தான் தன்னுடைய வேலை என்றாள்.

அடியாள் என்ற சொல் என்னுள் பழங்காலத்து இடுப்பில் தொங்கும் குத்துவாளைப் படிமமாக கிளர்த்திவிட்டது. எனக்குள் இகழ்ச்சியான சிரிப்பு எழுவதை என் காதாலேயே கேட்க முடிந்தது பதிலுக்கு அவள் சிரித்துவிட்டு இந்த சொல் வேடிக்கையானதாகத் தான் தோன்றும் என்று உத்திரவாதம் அளித்துவிட்டுச் சொன்னாள். யார்தான் இதைப் பெரிதாகப் பொருட்படுத்தப் போகிறார்கள்.

பொருளாதார அடியாள் பற்றி எனக்குத் தெரியாதுதான் என்றேன்.

மீண்டும் அவள் இந்த வேலையைச் செய்யப்போவது நீ மட்டுமே அல்ல என்றபடி சிரித்தாள். நாமெல்லாம் அபூர்வப் பிறவிகள். நீ இந்த வேலையைச் செய்வது உன் மனைவி உட்பட யாருக்குமே தெரியக்கூடாது என்றாள். பின்னர் ஆழமான குரலில் சொன்னாள். நான் உன்னிடம் எதையும் மறைக்கப்போவதில்லை. அனைத்தையும் சிலவாரங்களில் உனக்குக் கற்றுத் தருகிறேன். அதற்குப் பின் நீ தன்னிச்சையாகச் செயல்படலாம். உன் முடிவே இறுதியானது. ஆனால் ஒருமுறை இதற்குள் அடியெடுத்து வைத்துவிட்டால் பின்னர் இதிலிருந்து மீளவே முடியாது என்று எச்சரித்தாள். அதற்குப் பின்னர் பொருளாதார அடியாள் என்ற விரிவான வடிவத்தை எப்போதாவதுதான் பயன்படுத்தினாள். மற்றபடி நாங்கள். வெறும் பொ.அக்கள்தான்.

என்னைப் பற்றி என்எஸ்ஏ திரட்டி வைத்திருந்த விபரங்களின் மூலமாக எனது பலவீனங்களையும் தெரிந்துவைத்திருந்தாள் என்பது எனக்குத் தெரியாது. அந்தத் தகவலை அவளுக்கு அளித்தது யார் என்பதும் எனக்குத் தெரியாது. அவற்றைப் பயன்படுத்துவதில் தேர்ந்தவள் என்பது மட்டும் தெரியும். உடலால் வளைத்துப் போடுவதிலும், வார்த்தைகளைத் திரிப்பதிலும் எனக்காகவே தரமான முறையில் தயார்படுத்தியதுபோல் இருந்தது. பல்வேறு தொழில்களில் நெருக்கடியான கட்டங்களில் இதுபோன்ற முயற்சிகள் பெருமளவு பயன்படுவதைப் பார்த்திருக்கிறேன். எங்கள் ரகசிய நடவடிக்கைகளை வெளிப்படுத்துவதன் மூலம் எனது திருமணத்தை நெருக்கடிக்குள்ளாக்கமாட்டேன் என்பதைத் துவக்கத்திலேயே தெரிந்துவைத்திருந்தாள். வேலைகுறித்த நிழல் பகுதிகளை மிகப் பயங்கரமாகப் புட்டுப் புட்டு வைத்தாள்.

அவளுக்குச் சம்பளம் தருவது யார் என்பது தெரியாது. ஆனால் அவளது அறிமுக அட்டையைக்கொண்டு பார்த்தால் மெய்னாக இருக்கமுடியும் என்று தோன்றுகிறது. அப்போது நான் ரொம்பவும் ஏமாளியாகவும், பயந்தாங்கொள்ளியாகவும், படுக்கை மோகியாவும் இருந்ததால் இன்றைக்குச் சாதாரணமானவற்றைக் கூட அன்று கேட்கத் தோன்றவில்லை. எங்களது நிறுவனத்தில் இருந்த தேர்ந்த ஒருஆள்தான் எதுவுமே தெரியாதபடிக்கு மூடி மறைத்திருக்கவேண்டும் என்பதைப் பின்னால் தெரிந்து கொண்டேன்.

எனது வேலைக்கு இரண்டு அடிப்படையான நோக்கங்கள் உள்ளதாக கிளாடின் கூறினாள். முதலாவது பெரிய சர்வதேசக் கடன்கள் வாங்குவதை நியாயப்படுத்தி வாங்கவைத்து மீண்டும் அந்தப் பணம் முழுதும் மகத்தான பொறியியல் மற்றும் கட்டுமான வேலைகள் மூலமாக மெய்னுக்கும், அமெரிக்க நிறுவனங்களுக்கும் கிடைக்குமாறு திருப்பிவிடவேண்டும். கடன் வாங்கிய நாடுகளில் இருந்து பணம் மெய்னுக்கும் மற்ற பிற நிறுவனங்களுக்கும் வந்து சேர்ந்த பிறகு அந்நாடுகளைத் திவாலாக்கிவிட வேண்டும் அப்படியானால்தான் மீண்டும் மீண்டும் கடன் வாங்கவும் அமெரிக்காவின் அடிமையாக வைத்திருக்கவும் முடியும். ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்காவிற்கு ஆதரவாக வாக்களிக்கச் செய்ய முடியும். எண்ணெய் போன்ற கனிமவளங்களை எளிதாகச் சுரண்ட முடியும்.

ஒரு நாட்டில் பில்லியன் கணக்கான டாலர்களை முதலீடு செய்யும்போது ஏற்படும் விளைவுகளை முன்னுரைக்க வேண்டும். குறிப்பாக திட்டங்களால் இருபது இருபத்தைந்து ஆண்டுகளில் வளர்ச்சி பிரமாண்டமானது என்று ஒரு பூதாகரமான சித்திரத்தை உருவாக்கவேண்டும். இதுதான் என்னுடைய வேலை என்றாள். உதாரணமாக ஒருநாடு சோவியத்யூனியன் பக்கம் சாய்ந்துவிடாமல் இருக்க ஒரு பில்லியன் டாலர் கொடுப்பது என்று தீர்மானித்து விட்டால் அந்தப் பணத்தை மின்நிலையங்கள், ரயில்வே, நெடுஞ்சாலை போன்றவற்றில் முதலீடு செய்தால் என்ன பலன் கிடைக்கும், தொலைத்தொடர்பு போன்றவற்றில் போட்டால் எவ்வளவு லாபம் கிடைக்கும் என்றெல்லாம் சொல்லி கடன் வளர்ச்சிக்காகத்தான் பெறப்படுகிறது என்ற பொதுக்கருத்தை உருவாக்கவேண்டும். பல திட்டங்கள் பரிசீலனைக்கு இருக்குமானால் மொத்த தேசிய வளர்ச்சிக்கு எது பயன்தரும் என்று முடிவெடுக்கத் தூண்டுவது. ஒரேஒரு திட்டம் மட்டுமே தயாரிக்கப்பட்டிருந்தால் அது எவ்வளவு தூரம் இன்றியமையாத ஒன்று என்பதற்கான ஆதாரங்களை உருவாக்கவேண்டும்.

இத்திட்டங்களால் எமது அமெரிக்க நிறுவனங்களுக்கு நேரடியான லாபமளிக்கும். இக்கடன் மூலமாக அந்நாடுகளில் உள்ள ஒருசில பணக்காரக் குடும்பங்களின் செல்வம் பெருகும். அனைத்திலும் மிக முக்கியமாக அந்நாடு முற்று முழுதாக அமெரிக்காவையே சார்ந்திருக்கும் நிலைக்குத் தள்ளப்படும். கடன்தொகை அதிகரிக்கும்போது அமெரிக்கா பெறும் பலன்களும் கூடும். அந்நாட்டைச் சார்புடையதாக்குவதற்கும் மேலாக கைப்பிள்ளையாக மாற்றிக்கொள்ளலாம். இவற்றையெல்லாம் நாங்கள் பேசமாட்டோம். கடன்பெறும் நாடு தன் நாட்டு மக்களுக்குச் செய்யும் அடிப்படைத் தேவைகளான கல்வி, சுகாதாரம் போன்ற செலவீனங்களைக் குறைக்கும் நிலைக்குத் தள்ளப்படும்.

தேசிய மொத்தவளர்ச்சி என்பதே ஒரு மோசடி வேலைதான். இவற்றைப் பற்றியெல்லாம் நானும் கிளாடின்னும் ஒளிவு மறைவற்ற வார்த்தைகளிலேயே பேசிக்கொள்வோம். நாங்கள் கொடுக்கும் கடனால் ஒரேயொரு நிறுவனம் பெருந்தொகையை லாபமாக ஈட்டும், இன்னொருவர் கொடிய வறுமைக்குள் தள்ளப்படுவார். ஆனால் இரண்டிற்கும் சராசரி கணக்குப் போட்டு அதை தேசத்தின் மொத்தவளர்ச்சி என்று கிராப் காட்டிவிடலாம்.

மின்நிலையங்கள், நெடுஞ்சாலைகள் போன்ற திட்டங்களால் அந்நாடு வளர்ச்சியடையும் என்றுதான் பொதுவாக அமெரிக்கக் குடிமக்களைப்போலவே மெய்ன் ஊழியர்களும் கருதுவார்கள். நமது நடவடிக்கைகள் அனைத்தும் வளர்ச்சிக்கானவை என்றுதான் கல்வியும் ஊடகங்களும் போதிக்கின்றன. எங்காவது அமெரிக்கத் தூதரகம் முன்பு ஆர்பாட்டம் நடக்கும்போதும், அங்கே அமெரிக்கக்கொடியை எரிக்கும்போதும் இந்தச் சனியன்களின் வளர்ச்சிக்கு ஏன் இத்தனை தூரம் பாடுபட வேண்டும். தூதரகத்தை மூடிப்போட்டு வறுமையில் சாகவிட வேண்டியதுதானே என்று சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

நாங்கள் உலகம் முழுதும் தூதரகங்கள் வைத்திருப்பது எங்களது நன்மைக்குத்தான் என்பதை அறியாத மெத்தப்படித்த மேதாவிகள்தான் இப்படிப் பேசுவார்கள். இவைதான் இருபதாம் நூற்றாண்டில் அமெரிக்காவை உலக ஏகாதிபத்தியமாக மாற்றிக் கொண்டுள்ளன என்பதை அறியமாட்டார்கள் இவர்கள். இருநூறு நூற்றாண்டுகளுக்கு தங்களது நிலங்களைப் பாதுகாக்கப் போராடிய செவ்விந்திய மக்களை சாத்தான்களின் கைக்கூலிகள் என்று இகழ்ந்த பழைய காலனியவாதிகளைப்போலவே கல்வியறிவு அற்றவர்கள்.

அடுத்த சிலமாதங்களுக்குள் நான் உலகில் மக்கள்தொகை அடர்த்தியான பகுதி என்று சொல்லப்படுகிற இந்தோனேசியாவின்

ஜாவாத்தீவிற்குப் பயணம் செய்யவேண்டி வந்தது. எண்ணெய் வளம்மிகுந்த அம் முஸ்லீம் நாட்டில் அப்போது கம்யூனிஸ்டுகள் மிகத்துடிப்புடன் செயல்பட்டு வந்தனர்.

வியட்நாமிற்கு அடுத்த நம்முடைய இலக்கு இந்தோனேசியாதான். அங்கு வெற்றிபெற்றேயாக வேண்டும். அங்கு தோற்றால் செத்தோம் என்று சொல்லி கழுத்திற்குக் குறுக்காக கையைக்கொண்டு அறுப்பதுபோல் பாவித்து இனிய சிரிப்பொன்றைச் சிந்தினாள். பொருளாதாரத் திட்டங்கள் நிறைவேறியதும் எப்படிக் காளான்களைப்போலக் கிடுகிடுவென வளர்ச்சி காணும் என்ற நம்பிக்கையை வளர்க்க உன்னைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றாள். அதுதான் உலகவங்கி போன்ற அமைப்புகளின் கடன்களை நியாயப்படுத்தும். உனக்கும் நல்ல வெகுமதி கிடைக்கும். ஆம் இன்னும் அற்புதமான இடத்திற்கு புதியதிட்டங்களுடன் நகரலாம். அப்புறம் இந்த உலகமே உனக்குச் சரக்கு அள்ளிப்போடும் கூடையாகிவிடும். தொடர்ந்து சொல்லிக்கொண்டே போனவள் உனக்குப் பின்னால் வங்கியின் நிபுணர்கள் வந்து நீ கட்டி வைத்தத் திரையில் பொத்தல் போடுவார்கள். அவர்களது வேலையே அதுதான். அவ்வாறு செய்யும்போது உன்னை மட்டமாகவும் அவர்களை உயர்த்தியும் காட்டும் என்னுடைய நிலை இக்கட்டானதுதான் என்பதைப் புரியவைத்தாள்.

ஒருநாள் கிளாடின்னிடம் என்னுடன் ஜாவா வரும் மற்ற பத்துப் பேர்களுக்கும் இதே பயிற்சிதான் அளிக்கப்பட்டுள்ளதா என்று கேட்டபோது இல்லையென்று உறுதிப்படுத்தினாள்.

அவர்கள் அனைவரும் மின்திட்டங்களைத் தயாரிக்கிற, சாலைகள், துறைமுகங்கள் போன்ற கட்டுமானத் துறைகளை வடிவமைக்கிற பொறியாளர்கள். நீ ஒருவன்தான் பொருளாதார எதிர்பார்ப்புகளை முன்னுரைப்பவன். உன்னுடைய ஹேஷ்யங்களைக் கொண்டுதான் அவர்கள் தங்களது திட்டங்களை வடிவமைப்பதும், கடன்தொகை தீர்மானிக்கப்படுவதும் நடக்கும். ஆகவே இதில் நீ நான் அச்சாணி போன்றவர்கள் என்றாள் கிளாடின்.

கிளாடின் வீட்டைவிட்டு வெளியேறுகிற ஒவ்வொரு முறையும் என்னை நானே கேட்டுக்கொள்வேன். நீ செய்வது சரியான காரியம்தானா? என்று மனதின் இன்னொரு மூலையில் இருந்து பதில் வரும் இல்லை என்று. ஆனால் என்னுடைய பழைய விரக்தி பின்னால் துரத்திக்கொண்டு வரும். எதெல்லாம் கிடைக்காமல் இருந்ததோ அவற்றையெல்லாம் மெய்ன் எனக்கு அளித்துக்

கொண்டிருப்பதாகத் தோன்றியது. இன்னொரு கோணத்தில் இருந்து பார்ப்பேன். டாம்பெய்ன் இதை ஒப்புக்கொள்வாரா? மாட்டார். இறுதியில் எனக்கு நானே சமாதானம் செய்துகொள்வேன். உள்ளிருந்து அனைத்தையும் தெரிந்துகொள்வேன். பின்னால் ஒருநாள் அனைத்தையும் பகிரங்கப்படுத்துவேன். பழைய நியாயம்தான் கூடவே இருந்து குழிபறிப்பது.

என் மனவோட்டங்கள் குறித்துக் கிளாடினிடம் பகிர்ந்து கொண்டபோது ஒன்றும் புரியாதபடிக்கு ஒரு பார்வை பார்த்தாள். முட்டாள்தனமாக உளறாதே. உள்ளே அடியெடுத்து வைத்துவிட்டால் பின்னர் வெளியேபோவது பற்றி நினைக்கவே முடியாது. இன்னும் தொடர்வதற்குள் நீ முடிவு எடுத்துவிட வேண்டும் என்று கூறினாள். அவள் என்னை மிரட்டுவதற்காகக் கூறியிருக்கவேண்டும் அங்கிருந்து நிதானமாக நடந்துவந்து நிச்சயமாக நான் மாறுபட்டவனாக இருப்பேன் என்று சொல்லிக் கொண்டேன்.

ஒருநாள் பனிபொழியும் மதியவேளையில் ஜன்னலருகே அமர்ந்து வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்தோம். நாம் ஒரு சிறிய விசேசமான குழுவைச் சேர்ந்தவர்கள். நமக்கு கொழுத்த தொகையைச் சம்பளமாகத் தருகிறார்கள் உலகநாடுகளில் பில்லியன் கணக்கான டாலர்களைச் சுரண்டுவதற்கு. அமெரிக்காவின் பொருளாதார ஆசைகளை நிறைவேற்றுவதற்கான வலையில் அந்நாடுகளின் தலைவர்களைச் சிக்கவைக்கும் உன்னுடைய வேலை மிக முக்கியமானது. கடன் நுகத்தடியில் சிக்கிக்கொண்ட பின் இறுதியில் அவர்கள் அமெரிக்காவிற்கு விசுவாசமாக இருப்பார்கள். அவர்களை நமது ராணுவ, பொருளாதார, அரசியல் தேவைகளுக்கு ஏற்றக் கைப்பாவைகளாக ஆட்டுவிக்கலாம். அதற்கு ஈடாக அளிக்கப்படும் தொழிற்பூங்கா, வளர்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றைக்கொண்டு தங்களது நிலையை உறுதிப்படுத்திக் கொள்வார்கள். இதற்கிடையில் அமெரிக்க பொறியியல் நிறுவனங்கள் தம் செல்வவளத்தைப் பெருக்கிக் கொள்வார்கள் என்றாள்.

இன்னொரு நாள் மதியம் கிளாடின் வீட்டில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். எங்களைச் சுற்றிலும் அழகான சூழல். பனி பொழிகிறது. அப்போதுதான் எனது தொழிலின் துவக்ககால வரலாற்றைக் கிளாடின் எனக்குச் சொன்னாள். ராணுவ பலத்தால் அல்லது ராணுவ மிரட்டலால்தான் பழைய சாம்ராஜ்ஜியங்கள் கட்டியெழுப்பப்பட்டன. ஆனால் இரண்டாம் உலகப்போரின்

முடிவில் சோவியத்யூனியனும், அணுஆயுதங்களும் உலக அரங்கிற்கு வந்ததைத் தொடர்ந்து ராணுவம் உபயோகமற்றுப் போனது.

பிரிட்டிஷ் பெட்ரோலியம் என்ற முன்னணி எண்ணெய் நிறுவனத்தின் ஈரானிய பெட்ரோல் உறிஞ்சுதலுக்கு எதிராக மக்கள் போர்க்கொடி உயர்த்திய 1951ல்தான் இப்படியொரு தீர்மானகரமான முடிவிற்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டது. மக்கள் செல்வாக்கு மூலம் ஜனநாயகரீதியாக 1951ல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஈரானியப் பிரதமர் முகமது மொசாதிக் அனைத்து எண்ணெய்க் கிணறுகளையும் அரசுடைமையாக்கினார். இரண்டாம் உலகப்போரில் தனது கூட்டணியின் முக்கியப் பங்காளியான அமெரிக்காவைத் துணைக்கு அழைத்தது இங்கிலாந்து. இருந்தாலும் சோவியத்யூனியன் ஈரானுக்கு ஆதரவாக நிற்குமோ என்ற அச்சம் இரண்டு நாடுகளுக்கும் இருக்கத்தான் செய்தது.

அமெரிக்கா தனது நீர்மூழ்கிகளை அனுப்புவதற்குப் பதிலாக சிஐஏ முகவரான தியோடரின் பேரன் ரூஸ்வெல்ட் கெர்மெட்டை அனுப்பியது. அவர் தந்திரமாக பணத்தால் அடித்தும், மிரட்டியும் காரியத்தைச் சாதித்தார். கூலிப்படையைக்கொண்டு ஈரானியத் தெருக்களில் தொடர் கலவரங்களை நடத்தினார். ஆட்சிக்கு ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளிக்கத் திறனற்றவர் மொஸாதிக் என்ற தோற்றம் உருவாக்கப்பட்டது. பதவிநீக்கம் செய்யப்பட்டு வாழ்நாள் முழுதும் வீட்டுச்சிறையில் அடைக்கப்பட்டார். அமெரிக்கக் கையாளான முகமது ரெஜே ஷா பதவியில் அமர்த்தப்பட கேட்பாரற்றச் சர்வதிகாரியாக விளங்கினார் ஷா. இவ்விதமாக புதிய தந்திரங்களுக்கு ரூஸ்வெல்ட் அடிகோலினார். அதே பாதையில்தான் நானும் ஒருவனாக இணைந்துள்ளேன்.

ஏகாதிபத்தியத்தை உருவாக்குவதற்கான பழைய தந்திரங்களில் இருந்து முற்றிலும் மாறுபட்ட ஒன்றை வழங்கியதுடன் ரூஸ்வெட் மத்தியகிழக்கு நாடுகளின் வரலாற்றையும் மறுஉருவாக்கம் செய்தார். அந்த நேரத்தில் கொரியாவிலும், வியட்நாமிலும் மேற்கொண்ட வரம்பிற்குட்பட்ட அணுஆயுத நடவடிக்கை அமெரிக்காவிற்கு அவமானகரமான விளைவைத் தந்ததால் ரூஸ்வெல்டின் பாதையே உவப்பானது என்ற எண்ணம், கருத்து மேலோங்கியது. சோவியத்யூனியனின் அணு ஆயுத மிரட்டலைச் சந்திக்கப் பொருத்தமான வழி நடைமுறைக்கு வந்தது.

அமெரிக்கா அரசின் நேரடி ஊழியரான ரூஸ்வெல்ட் ஒரு வெளிநாட்டு அரசைக் கவிழ்க்கும் வேலையில் ஈடுபடும்போது

பிடிபட்டிருந்தால் பிரச்சனையாக மாறுவதற்கான ஆபத்தும் அதில் உண்டு. எனவே இதுபோன்ற நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் வாஷிங்டன்னின் நேரடிக் கட்டுப்பாட்டில் இல்லாதவாறு பார்த்துக் கொள்வது என்ற புதிய அணுகுமுறை உருவாக்கப்பட்டது.

அதிர்ஷ்டவசமாக 1960ல் சர்வதேச வங்கிகளும், பன்னாட்டு நிறுவனங்களும் வலுப்பெற்றதால் புதிய புதிய தந்திரங்களை உருவாக்க வழிவகுத்தது. முதலில் அமெரிக்காவின் நிதியுதவியால் துவக்கப்பெற்ற இந்நிறுவனங்களுக்கு பின்னர் ஐரோப்பிய அரசுகளும் ஆதரவு அளித்தன. அரசுகளுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும், சர்வதேச வங்கிகளுக்கும் இடையே பரஸ்பர உறவு வலுப்பட்டது.

நான் பாஸ்டன் பல்கலைக்கழகத்தில் படிக்கச் சேர்ந்த நேரத்தில் சிஐஏ ரூஸ்வெல்ட் பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட்டிருந்தது. என்எஸ்ஏ உள்ளிட்ட உளவுநிறுவனங்கள் அடியாட்களைக் கண்டுபிடிப்பது அவர்களை பன்னாட்டு நிறுவனங்கள் தம் வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொள்வது என்று உத்தி நடைமுறைக்கு வந்தது. பொ.அ க்களுக்கு அரசு சம்பளம் வழங்காது. அதற்குப் பதிலாக தனியார் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்வார்கள். ஒருவேளை நாங்கள் பிடிபட்டாலும் அந்தக் கரும்புள்ளி நிறுவனங்கள் மீதுதான் விழும். அரசின் கொள்கைகளுக்கு அப்பால் அந்நிறுவனத்தின் பேராசையின் விளைவு என்று முத்திரை குத்தப்படும். மேலும் அடியாட்களை வேலைக்கு அமர்த்தும் தனியார் நிறுவனங்களை அரசு முகவர்கள், பொதுமக்கள் பார்வைக்குக் கொண்டுவராமல் தகவல் அறியும் உரிமை விதிகளுக்கு உட்படாத அமைப்பாக மூடிமறைத்துக் கொள்ளவும் வசதியாக இருக்கும்.

நீ ஆரம்பக்கல்வி பயின்றபோது அன்னாந்து பார்த்து பெருமைப்பட்ட பாரம்பரியமிக்கத் தலைமுறையின் அடுத்த வாரிசுகள் தான் புரிந்ததா? என்று முடித்தாள் கிளாடின்.

அத்தியாயம் - 3

இந்தோனேசியா அடியான் பாடம் பயில்கிறான்

ஒரு நாட்டில் வேலைகளை இலகுவாக முடிக்க அங்கு போவதற்கு முன்பே அந்நாட்டைப் பற்றிய விபரங்களைச் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும் என்ற கிளாடின்னின் வார்த்தைகளை மனதிற்கொண்டு புதிய தொழிலுக்குத் தயார்ப்படுத்திக்கொள்ளும் விதமாக, புத்தகங்களில் நீண்டநேரம் செலவிட்டு இந்தோனேசியா குறித்து தெரிந்துகொண்டேன்.

கொலம்பஸ் கடற்பயண ஏற்பாடுகளை 1492ல் செய்தபோது மசாலைத் தீவுகள் என்று அறியப்பட்ட இந்தோனேசியா செல்வது தான் நோக்கமாக இருந்தது. காலனியக் காலம் முழுவதும் அமெரிக்காவைக் காட்டிலும் இந்தோனேசியாவே செல்வப் பெட்டகம் என்ற கருத்து நிலவியது. ஆடம்பரமான துணிவகைகள், வாசனைமிகுந்த மசாலாப் பொருட்கள் எனப் பொங்கும் வளங்களுடன் ஜாவாப் பேரரசர்கள் கோலோட்சியதையும் அந்நாட்டைக் கைப்பற்ற ஸ்பானிஷ், டச்சுப், போர்ச்சுக்கல், இங்கிலாந்து கடற்பயணச் சாகசக்காரர்கள் தங்களிடையே முட்டிமோதிய காட்சிகளையும் அங்கே காணலாம். நெதர்லாந்தில் டச்சுக்காரர்கள் 1750ல் வெற்றிகரமாக இறங்கிவிட்டாலும் ஜாவா அவர்களது கைக்குள் வந்துவிட்டது என்றாலும் மற்ற தீவுகளை அடக்க அவர்களுக்கு 150 ஆண்டுகாலம் தேவைப்பட்டது.

இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் இந்தோனேசியாவை ஆக்கிரமிக்க முயன்றபோது டச்சுப்படைகள் ஓரளவு எதிர்ப்புக் காட்டின. அதன்விளைவாக ஜாவா கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது. ஜப்பானின் சரணடைவைத் தொடர்ந்து பிரபலமான மக்கள்தலைவர் சுகர்னோ நாடு விடுதலைபெற்றதாக அறிவித்தார். என்றாலும் நான்கு ஆண்டுகாலம் தொடர்ந்த போராட்டங்களுக்குப் பின்னர் 1949 டிசம்பர் 27 ல் தான் டச்சு தனது கொடியை இறக்கியது. அதன்பின்னரே. சுகர்னோ இந்தோனேசியக்

குடியரசின் தலைவர் ஆனார். இந்தோனேசிய மக்கள் மூன்று நூற்றாண்டு காலமாகப் போராட்டத்தையும் ஆதிக்கக் கொடுமையையும் தவிர வேறெதையும் அறிந்திருக்கவில்லை.

எனவே டச்சுவை முறியடித்த சுகர்னோவிற்கு இந்தோனேசியாவை ஆள்வது பெரிய சவால் என்பது நிரூபணமானது. பல்வேறு இனக்குழுக்கள், மொழிகள்கொண்ட 17,500 தீவுகள் ஆண்டாண்டு கால இனப்பகைமையால் கொழுந்து விட்டு எரிந்தது. அனைத்தையும் நசுக்கி, 1960ல் பாராளுமன்றதைக் கலைத்தார். 1963ல் தன்னை ஆயுட்கால அதிபராக அறிவித்தார். சோசலிச நாடுகளுடன் நட்புறவை வளர்த்துக்கொண்டு போர்த் தளவாடங்களையும், போர்ப்பயிற்சிகளையும் தன்னாட்டிற்குப் பெற்றுக்கொண்டார். தென்கிழக்கு ஆசியாவைக் கம்யூனிச மயப்படுத்தவும், சோசலிஸத் தலைவர்களின் வெற்றி உலகஅங்கீகாரம் பெறவேண்டும் என்பதற்காகவும் ரஷ்யத் துருப்புகள் தாங்கிய இந்தோனேசியக் கப்பலை மலேசியாவிற்கு அனுப்பிவைத்தார்.

அவருக்கு எதிர்ப்புகள் வலுக்க 1965ல் ரகசிய ஆட்சிக்கவிழ்ப்பு அரங்கேறியது. ஆசைநாயகியின் தந்திரத்தால் கொல்லப்படாமல் உயிர்தப்பினார். ஆனால் அவருக்கு நெருக்கமான உயர்ராணுவ அதிகாரிகளுக்குத் துரதிர்ஷ்டம் காத்திருந்தது. 1953 ல் ஈரானில் நடந்த காட்சிகள் மறுஅரங்கேற்றம் பெற்றன. ஆட்சிக்கவிழ்ப்பிற்கான பழி சீனாவுடன் உறவுகொண்ட கம்யூனிஸ்ட்கள் தலையில் சுமத்தப்பட்டது. ராணுவக் கலவரத்தால் மூன்றிலிருந்து ஐந்து லட்சம் பேர் வரை கொல்லப்பட்டனர். ராணுவத்தலைவர் சுகார்த்தோ 1968ல் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்தோனேசியாவை கம்யூனிச் சார்பில் இருந்து மீட்டெடுக்க வேண்டும் என அமெரிக்கா உறுதிபூண்டது. வியட்நாமில் அமெரிக்காவின் நிலை சொல்லிக்கொள்ளும்படியாக இல்லை என்பதால் 1969 கோடையில் அதிபர் நிக்ஸன் துருப்புகளைத் திரும்பப்பெறத் தொடங்கினார். உலகநாடுகளில் ஆட்சிகள் மாறும்போது அதிகாரம் கம்யூனிஸ்ட்களின் கைக்குப் போவதை கவனித்த அமெரிக்கா, அதிலிருந்து தடுக்கும் நோக்கத்துடன் உலகளாவியப் போர்க் கண்ணோட்டம் விட்டது. அதில் இரண்டு நாடுகளின்மீது அதன் கவனம் குவிந்தது. இரண்டில் முக்கியமான ஒன்று இந்தோனேசியா. இங்கே மெய்னின் மின்சார மயப்படுத்துதல் திட்டத்தை நிறைவேற்றினால் அது தென்கிழக்கு ஆசியாவில் மீண்டும் அமெரிக்கா ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கான துவக்கமாக இருக்கும்.

அமெரிக்காவின் வெளியுறவுக்கொள்கை ஈரான் மன்னர் ஷாவைப்போலவே சுகார்த்தோவும் வாஷிங்டன்னுக்குச் சேவை புரிவார் என்று யூகித்தது. இந்தோனேசியாவை அந்தப் பிராந்தியத்தின் முன்மாதிரியாக மாற்றுவதிலும் அமெரிக்கா நம்பிக்கை கொண்டிருந்தது. இந்தோனேசியாவில் கிடைக்கும் சாதகமான விளைவுகள் இஸ்லாமிய நாடுகள் முழுவதிலும் குறிப்பாகப் பற்றிளரியும் மத்தியகிழக்கில் தாக்கத்தை விளைவிக்கும் என்று வாஷிங்டன் கருதியது. இந்த ஊக்கம் போதாதென்றால் இந்தோனேசியாவில் இருக்கவே இருக்கிறது எண்ணெய். அங்குள்ள எண்ணெயின் அளவும், தரமும் பிறருக்குத் தெரியாதென்றாலும், எண்ணெய் நிறுவனங்களின் ஆழ்நிலவியலாளர்களுக்குத் தெரியும். அங்க அதிக எண்ணெய்ச் சாத்தியப்பாடு இருப்பதாகக் கருதினார்கள்.

நூல்களில் நுணுகிப்பார்க்கப் பார்க்க எனது ஆச்சர்யங்கள் பெருகிக்கொண்டே போயின. சாகசங்கள் எனக்காகக் காத்திருப்பதாகத் தோன்றியது. அமைதிப்படையின் இறுக்கிச் சுருட்டிய வாழ்க்கையுடன் ஒப்பிடுகையில் மெய்ன் தரும் வசதி உல்லாசமாகவும், கவர்ச்சிகரமானதாகவும் தோன்றியது. என் கனவுகள் நனவாகி வருவதற்கு கிளாடினுடன் நான் கழித்த பொழுதுகளே ஒரு முன்மொழிவாக இருந்தது. இது மேலும் உண்மையாகும் என்று தோன்றியது. ஆரம்பப்பள்ளிக் காலத்தில் பெற்றத் தண்டனைகளை இவை சரி செய்வதாகத் தோன்றியது.

என் குடும்பவாழ்க்கையில் ஏதோ நடக்க இருப்பதாகவும் தோன்றியது. நானும் ஆன்னும் ஒன்றாகப் பொழுதைக் கழிப்பதில்லை. நான் இரட்டைவாழ்க்கை வாழ்வதை மோப்பம் பிடித்துவிட்டாளோ என்று நினைத்தேன். வாழ்க்கையில் திருமணத்திற்கு முதலிடம் கொடுத்ததால் நேர்ந்த விளைவு இது என்று ஒரு நியாயத்தைக் கற்பித்துக்கொண்டேன். அமைதிப் படையில் பணியாற்றியபோது ஈக்குவடாரில் என்னை எவ்வளவு தூரம் போற்றிப் பாதுகாத்தாள். எவ்வளவு ஆதரவாக இருந்தாள் என்பதைக் கருத்திற்கொள்ளவில்லை நான். அவளை என் பெற்றோரின் தொடர்வடிவமாகவே பார்த்தேன். இதையெல்லாம் இப்போதுதான் நினைத்துப்பார்க்கிறேன். கிளாடினுடனான உறவை நான் அவளுக்குச் சொல்லாவிட்டாலும் ஆன்னால் புரிந்து கொண்டிருக்க முடியும். எப்படியானாலும் நாங்கள் வெவ்வேறு வீடுகளில் வாழ முடிவுசெய்துவிட்டோம். இதற்கு முக்கியமான காரணம் கிளாடின்தான் என்று உறுதியாகக் கருதுகிறேன்.

இந்தோனேசியா புறப்படும் முன் கிளாடின் வீட்டிற்குச் சென்றேன். மேசையில் பாலாடைக் கட்டிகளும், ரொட்டிகளும், பெஜோயல் மதுப்புட்டியும் இருந்தன. சுகானுபவத்தில் அவள் என்னைத் தோய்த்தெடுத்தாள்.

நீ முழுமையாக்கினாய் என்றேன். அவள் சிரித்தாள். அதில் ஏதோ ஒரு குறை தோன்றியது. நீ எங்களில் ஒருவன் என்றாள்.

பின்னர் சகஜமாகப் பேசிக்கொண்டிருந்தோம். அரைமணிநேரம் கழிந்திருக்கலாம். மதுப்புட்டிக் காலியாகும் தருணத்தில் இதற்குமுன் பார்க்காத ஒரு பார்வை பார்த்தாள். நமது சந்திப்புகள் பற்றி யாருக்கும் சொல்லக்கூடாது என்று கூறிவிட்டு அழுத்தமான குரலில் தொடர்ந்தாள் அப்படிச் சொன்னால் எனக்கு உன்னைத்தெரியாது என்று சொல்லிவிடுவேன். உன்னை ஒருபோதும் மன்னிக்கமாட்டேன். என்னை உற்றுப் பார்த்தாள். அவள் என்னை மிரட்டியதாக நான் உணர்ந்தது அந்த ஒரு முறைதான். பின் ஒரு குளுமையான சிரிப்பை உதிர்த்துவிட்டுச் சொன்னாள் நம்மைப்பற்றி யாருக்காவது சொன்னால் உயிருக்கே ஆபத்தாக முடியலாம் என்றாள்.

அது பயங்கரமாகத் தோன்றியது. அதிர்ச்சியடைந்தேன். பின்னர் புரூடென்சியல் மையத்திற்குப் பக்கத்தில் சென்றபோது திட்டத்தின் சாமர்த்தியம் என்று ஏற்றுக்கொண்டேன். நாங்கள் கழித்தநேரம் அத்தனையும் அவளுடைய அடுக்ககத்தில்தான் என்பதால் எங்களிருவரிடையேயான உறவிற்கு எந்தத் தடயமும் இல்லை. மெய்னில் இருக்கும் மற்ற யாரும் தோண்டித்துருவப் போவதில்லை. அவளது கண்ணியத்தைக் காப்பதில் எனக்கும் பொறுப்பு உண்டு. டில்டன்னிலும், மிடில்பர்ரியிலும் எனது பெற்றோர் ஏமாற்றியதைப்போல இவள் என்னை ஏமாற்றி விடவில்லை.

அத்தியாயம் - 4

கம்யூனிசத்தில் இருந்து காப்பது என்ற பெயரில்

நான் மூன்றுமாத காலம் வசிக்கவிருக்கும் இந்தோனேசியா குறித்து படித்த நூல்கள் வாயிலாகவும் அவற்றில் இருந்த படங்கள் வாயிலாகவும் விதவிதமான கற்பனைகளை வரித்துக் கொண்டிருந்தேன். பளபளப்பான நிறத்தில் சாரோங் (லுங்கி) கட்டிய அழகான பெண்கள், அற்புதமான பாலி நடனமணிகள், நெருப்பூதும் பேயோட்டிகள், புகையும் எரிமலைகளின் அடிவாரத்துக் கால்வாய்களின் பசும்நீல நீரில் துடுப்புப்போடும் படகோட்டிகள், பிரமாண்டமான கருந்திரைப் படகுகளில் தொடர் தொடர்களாக வரும் பூகிக் கடற்கொள்ளையர்கள் இன்னமும் பயணித்துக்கொண்டிருப்பார்கள் என்று நினைத்தேன். இக்கொள்ளையர்களிடம் மிரண்ட ஐரோப்பியக் கடற்பயணிகள் வீட்டிற்கு வந்ததும் தங்களை இம்சிக்கும் பிள்ளைகளிடம் ஒழுங்கா சேட்டை பண்ணாம இருக்கியா பூகிக் கொள்ளையனுக்குப் பிடிச்சிக் கொடுக்கவா என்று கேட்பார்கள். இதுபோன்ற காட்சிகள் என் மனதில் அலையடித்துக்கொண்டிருந்தன.

அந்நாட்டின் நிஜத்தைவிட வரலாற்றிலும், காவியங்களிலும் சொல்லப்பட்டவை ஏராளம். கோபக் கடவுள்களும், கோமாடோ ட்ராகன்களும், பழங்குடிச் சுல்தான்களும் தொன்மைக் கதைகளும் ஆசிய மலைகளைக் கடந்து பாரசீகப் பாலையை ஊடறுத்து மத்தியத் தரைப்பகுதியின் மக்களின் கூட்டுநினைவுகளில் ஏசு பிறப்பிற்கு முந்தியே ஆழப் பதிந்துவிட்டவை. இந்நாட்டின் தீவுகளாகிய ஜாவா, சுமத்திரா, போர்னியோ, லாவோஸ் போன்ற பெயர்களே மனதை மயக்குபவை. கொலம்பஸ் முயன்றுபெறாத பொக்கிஷம். ஸ்பானிஷ், ஹாலந்து, போர்ச்சுக்கல், ஜப்பான் போன்ற நாடுகளின் காதல் இளவரசி, அடையாத கனவு இத்தீவு.

கொலம்பஸைப்போலத் தேடிச்செல்பவர்களைக் காட்டிலும் என்னுடைய எதிர்பார்ப்புகள் மிக அதிகம். பெரும்பாலும்

கற்பனைகள் அளவிற்கு நிஜம் அழகாக இருப்பதில்லை என்பதால் என் கனவுகளுக்கு அணைபோட முயன்றேன். இந்தோனேசியா நிறைய செல்வங்களை அள்ளி வழங்கி இருக்கிறதுதான். ஆனால் அதுவொன்றும் ஜீவ ஊற்றல்லவே எப்போதும் பெருக்கெடுத்துக் கொண்டிருக்க. என் எதிர்பார்ப்பிற்கு இனிமேல்தான் போகஇருக்கிறேன். 1971 கோடையில் இந்தோனேசியாவின் தலைநகரான புகைமண்டிய ஜாகர்த்தாவை வந்தடைந்தேன். நகரத்தின் தோற்றம் எனக்கு அதிர்ச்சியளித்தது.

இன்னும் அழகாகத்தான் இருக்கிறது. குளுமையாகப் பூத்துக்குலுங்கும் வெப்பமண்டல மலர்கள். வண்ணமய உடையணிந்த பெண்கள், தெய்வீக நடனமணிகள், பல வண்ண நிற சைக்கிள்கள், வானவில்லின் நிறங்களில் இருக்கை அமைத்த கால்மிதி ரிக்ஷாக்கள், டச்சுக் காலனிய காலத்து மாளிகைகள், சின்னச் சின்ன மசூதிகள் போன்றவை இந்நகரத்திற்கு அழகு சேர்ப்பவைதான். ஆனால் மறுபுறம் அருவருப்பூட்டும் துயரம் கப்பிய நகரமும் உண்டு. கைகளல்லாமல் முளைகம்பு போன்றவை பொருந்திய உடலில் இருந்து ரத்தம் கசியத் தொங்கவிட்ட குஷ்டரோகிகள், சில சில்லறைக் காசுகளுக்காக உடலை விற்கும் அழகிய இளம்பெண்கள், நீர் நிரம்பி ஓடிய டச்சுக் கால்வாய்கள் இன்று சாக்கடையாகக்கருத்துக் குமிழ்விடும் அலங்கோலம், கறுத்த ஆறுகளின் கரைகளில் காகிதஅட்டை வீடுகளில் மொத்தக் குடும்பமும் வசிக்கும் கோரம் மூச்சு முட்டும் அழுகல் நாற்றம், அழகும், அறுவறுப்பும், கம்பீரமும், அசிங்கமும், ஆன்மீகமும், ஆபாசமும் எல்லாம் கலந்து இருந்தது ஜாகர்த்தாவில். சாக்கடையின் நாற்றத்துடன் ஆர்ச்சிட் மலர்களின் வாசம் முட்டிமோதி சண்டையிட்டுக்கொண்டிருந்தன.

வறுமை என் தரிசனத்திற்கு அப்பாற்பட்டதல்ல. என்னுடன் படித்த நியூ ஹாம்ப்ஷையர் மாணவர்கள் சிலர் தார்பூசிய காகித வீடுகளில் வசித்தவர்கள்தான். உறைநிலைக்கும் கீழான குளிர்ச்சியில் குளிர்தாங்காத மேலுடையும், கிழிந்த காலுறையும், துவண்டுபோன காலணிகளும் அணிந்து குளிக்காத உடம்பின் நாற்றம் கமழ பள்ளிக்கு வருபவர்கள்தான். ஆண்டிஸ் மலைக் கிராமக் குடிசைகளில் வசித்திருக்கிறேன். அந்த விவசாயிகளின் உணவு பெரும்பாலும் காய்ந்த மக்காச்சோளமும், உருளைக் கிழங்குமாக மட்டுமே இருக்கும். குழந்தைகள் பிறந்தநாளைக் காண்பதைப்போலவே இறப்பையும் எதிர்கொள்ளும். நான் கண்டிருந்த இத்தனை மோசமான வறுமையும் ஜாகர்த்தாவை எதிர்கொள்வதற்கான துணிவைத் தந்ததில்லை.

நகரம் எப்படிக் கிடந்தாலும் நகரின் உயர்தரமான விடுதியான அமெரிக்கன் ஏர்வேய்ஸுக்குச் சொந்தமான இண்டர் காண்டினன்டலில் எங்கள் குழு தங்கவைக்கப்பட்டது. எண்ணெய் நிறுவன அதிகாரிகள் போன்ற வெளிநாட்டவர்களின் தேவைகளை நிறைவேற்றும் ஆடம்பரமான விடுதி அது. இதுபோன்ற பல விடுதிகள் அவர்களுக்கு உலகமெங்கும் அங்கங்கே இருக்கின்றன. அங்கு வந்துசேர்ந்த அன்று திட்டமேலாளர் சார்லி இர்லிங் வொர்த் எங்களுக்கு கம்பீரமான அந்த விடுதியின் மொட்டைமாடியில் விருந்தளித்தார்.

சார்லி போர்க்கலையில் தேர்ந்தவர். தனது பெரும்பாலான ஓய்வுநேரங்களை வரலாற்று நூல்கள் வாசிக்கவும், மகத்தானப் போர்த்தலைவர்களைப் பற்றிய புதினங்களை வாசிப்பதிலும் செலவிட்டார். வியட்நாம் போரை ஆதரிக்கும் அந்த வெண்ணை வெட்டிச் சிப்பாய் வழக்கம்போலவே ராணுவ பாணி உடையணிந்திருந்தார்.

எங்களை வரவேற்றதும் சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துக் கொண்டார். நல்வாழ்விற்காக என்றபடி ஷாம்பைன் கோப்பையை உயர்த்தினார்.

நாங்கள் அவருடன் இணைந்துகொண்டோம். கோப்பைகள் உயர்ந்தன. நல்வாழ்விற்காக கிளிங். கிளிங்.

சிகரெட் புகை சார்லியை வலம் வந்தது. அறையை நோட்டம் விட்டார். நாம் இங்கே நன்றாக கவனிக்கப்படுவோம் என்றார். தன் கூற்றைத் தானே ஆமோதிக்கும் விதமாக தலையை உலுக்கிக் கொண்டார். பின் இந்தோனேசியர்கள் நம்மை நன்றாகப் பார்த்துக் கொள்வார்கள். அதுபோலவே அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்தவர்களும். ஆனால் நாம் இங்கே வந்ததற்கான நோக்கத்தை மறந்துவிடக்கூடாது. தலையைத் தாழ்த்தி கைக்குறிப்பைப் பார்த்துக்கொண்டார். ஆம் நாம் உலகில் அதிக மக்கள்தொகை நிறைந்த ஜாவாத் தீவை மின்சாரமயமாக்கும் மகத்தான திட்டத்திற்காக வந்துள்ளோம். ஆனால் அது பின்னால் நாம் நிறைவேற்றப் போகும் பல திட்டங்களில் ஒரு துளி மட்டுமே ஆகும்.

சட்டென்று அவரது பேச்சுத் தொனி மாறியது. அவர் தன்னுடைய ஹீரோவான ஜியார்ஜ்சியை நினைவூட்டினார். நாம் இந்த நாட்டை கம்யூனிசத்தின் பிடியில் இருந்து காப்பாற்ற வேண்டுமானால் செய்யவேண்டியதெல்லாம் இது ஒன்றுதான். நீங்கள் அறிந்தபடி இந்தோனேசியாவிற்கு நெடிய துயர வரலாறு உண்டு. இந்த இருபதாம் நூற்றாண்டில் அதற்கு இன்னொரு சோதனையும் வந்துள்ளது. தனது வடக்கு அண்டை நாடுகளான

வியட்நாம், கம்போடியா, லாவோஸ் ஆகியவற்றின் அடியொற்றிச் சென்றுவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மற்றெதையும் விட ஒருங்கிணைந்த மின்சாரத் திட்டமே அதற்குச் சிறந்த உபாயம். அதுவொன்றே முதலாளித்துவ ஜனநாயக ஆட்சியை உறுதிப்படுத்தும்.

சிகரெட்டை இன்னொரு முறை உறிஞ்சிக்கொண்டார். பின் கைக்குறிப்பில் இருந்து இரண்டு அட்டைகளை உறுவினார். நாம் எண்ணெய் குறித்து பேசவேண்டும். நமது எண்ணெய்த் தாகத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அந்த விசயத்தில் இந்தோனேசியா நமக்குத் தேர்ந்த பங்காளியாக விளங்கும். ஆகையால் நீங்கள் பெருந்திட்டத்தை விரிவுசெய்யும்போது அது மற்ற எண்ணெய், துறைமுகம் போன்ற துறைகளுக்கு அடுத்த இருப்பதைந்து ஆண்டுகளுக்கும் பயன்படும் விதமாக தயாரிக்கவேண்டும்.

குறிப்புகளில் இருந்து கண்களை விலக்கி நேரடியாக என்னைப் பார்த்தார். குறைத்து மதிப்பிடுவதற்குப் பதிலாக அதிகபட்ச அளவிற்கு கணிக்க வேண்டும். உங்கள் கைகளில் உங்கள் குழந்தைகளின், இந்தோனேசியக் குழந்தைகளின் ரத்தத்தைக் காண விரும்புகிறீர்களா? உங்கள் குழந்தைகள் சீனாவின் கட்டுப்பாட்டில் சுத்திஅரிவாளின் கட்டுப்பாட்டில் வாழ்வதை விரும்புவீர்களா?

நகரத்திலேயே அதிக உயரமான உயர் சொகுசான விடுதியில் எனது படுக்கையில் சரிந்தேன். கிளாடின் என் பக்கத்தில் இருப்பதுபோல் கற்பனை செய்துகொண்டேன். அந்நியக் கடன்கள் குறித்து நடத்திய உரையாடல்கள் நினைவுகளில் எழுந்தன. நான் கல்லூரியில் படித்தப் பாடங்களை நினைவுறுத்தி எனது சலனங்களை அடக்க முயன்றேன். நான் எனக்குள் சொல்லிக்கொண்டேன். மத்திய கால பொருளாதாரத்தில் இருந்து நவீனதொழில் உலகத்திற்கு இந்தோனேசியா வருவதற்கு நான் உதவுவதைவிட வேறென்ன செய்யப்போகிறேன். ஆனால் காலையில் எழுந்து இந்த விடுதியின் ஜன்னல் வழியாக அழகிய தோட்டங்களைக் கடந்து புல்வெளிகளைக் கடந்து அப்பால் வெகுதொலைவிற்கு அப்பால் பார்க்கவேண்டும். அப்போதுதான் என்னால் தெரிந்துகொள்ள முடியும். ஒருவாய்ச்சோற்றுக்கும், ஒரு குடம் தண்ணீருக்கும் வழியின்றி பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் செத்து மடிவதை, வயதடைந்தவர்கள் நோயால் துன்புறுவதை, கொடூரமான வாழ்க்கைச்சூழலை அப்போதுதான் புரிந்துகொள்ள முடியும்.

சார்லியும், என்னுடன் வந்த மற்ற குழு உறுப்பினர்களும், நானும் சுயநலத்தின் காரணமாகவே இங்கு வந்துள்ளோம். அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையையும், பன்னாட்டு

நிறுவனங்களின் பொருளாதார விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்காகவே இருக்கிறோம். பெரும்பாலான இந்தோனேசிய மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு மாறாக எங்களது பேராசையை பூர்த்திசெய்வதற்காகவே இருக்கிறோம். எனக்குள் ஒரு வார்த்தைத் திரண்டது. நிறுவனவியம். இதை முன்னரே கேட்டிருக்கிறேனா? அல்லது இப்போதுதான் கண்டுபிடித்தேனா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் இந்தப் புவிக்கோளத்தின் மீது ஆதிக்கம் செலுத்தவிரும்பும் புதிய மேலாதிக்கக் கும்பலுக்கு மிகவும் பொருந்துகிற சொல்லாட்சி நிறுவனவியம்.

சிலரிடையே சகோதரத்துவமான ஒரு பிணைப்பு உருவாகியிருக்கிறது. தங்களுக்குள் இலட்சியங்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள். இந்த சகோதரக்குழு உறுப்பினர்கள் அரசாங்கப் பதவிகளில் இருந்தும், நிறுவனப்பொறுப்பில் இருந்தும் சர்வ சகஜமாக இடம்மாறிக் கொள்கிறார்கள். உலகவங்கியின் தற்போதைய மேலாளர் ராபர்ட் மெக்நாமரா இதற்குப் பொருத்தமான உதாரணம் என்று தோன்றியது. அவர் போர்டு நிறுவனத்தலைவர் பொறுப்பில் இருந்து கென்னடி மற்றும் ஜான்சன் தலைமையிலான பாதுகாப்புத்துறைக்குச் செயலாளராக ஆனார். இப்போது உலகின் சக்திவாய்ந்த நிதி நிறுவனத்திற்கு வந்து விட்டார்.

எனக்கு மற்றொன்றும் தோன்றியது. இந்தப் பிரமாண்டமான பொருளாதாரத் திட்டங்களைப் பற்றி எனது பேராசிரியரால் கூடப் புரிந்துகொள்ள முடியாது. இந்தப் பொருளாதாரம் மிகச் சிலரை மட்டுமே பிரமீடின் உச்சியில் கொண்டுபோய் பணக்காரர்களாக உட்கார வைக்கிறது. ஆனால் அதேசமயத்தில் பெரும்பாலான மக்களை மேலும் கீழ்நிலைக்குத் தள்ளுவதோடு அவர்களது வளர்ச்சிக்காக ஒன்றுமே செய்வதில்லை. மத்தியகால நிலப்பிரபுத்துவ முறையின் சாயல்தானே தவிர முதலாளித்துவம் முறையில் புதிதாக ஒன்றும் இல்லை. யாராவது பேராசிரியர்களுக்கு இதைப்பற்றித் தெரிந்தாலும் என்னுடைய கருத்தை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். பெரிய நிறுவனங்களின் பணத்தில்தான் கல்லூரிகளும் நடத்தப்படுகின்றன. இந்த உண்மையை வெளிப்படுத்தினால் அது கண்டிப்பாக பேராசிரியர்களின் வேலைக்கே வேட்டு வைப்பதாகும். அதேபோல என்னையும் திருப்பியடிக்கும்.

நான் இந்தோனேசிய இண்டர் காண்டினென்டல் விடுதியில் தங்கியிருந்த ஒவ்வொரு இரவிலும் இதேபோன்ற சிந்தனைகள் எழுந்து என் தூக்கத்தை இடையூறு செய்யும். முடிவாக என்னைத்

தற்காப்பதுதான் முதன்மையான அம்சம் ஆகும். உயர்ந்தபட்சமாக இதில் இருப்பது தன்னலம்தான். நியூஹாம்ப்ஷையர் தொடக்கப்பள்ளியில் ஆரம்பித்த எனக்கு இந்த வரைவு முக்கிய திருப்புமுனையானது. அடுத்தடுத்த கலவையான எதேச்சை நிகழ்வுகள் எனக்கு இந்த நல்ல வாழ்க்கையை ஈட்டித் தந்துள்ளது. என் கண்களுக்குச் சரியென்று தோன்றியதைத்தான் நானும் செய்தேன். என்னுடைய பாதையில் வெற்றிகரமான மதிக்கத்தக்க பொருளாதார வல்லுனனாக இருக்கிறேன். எனது வணிகவியல் கல்லூரி என்னை எதற்காகத் தயார்படுத்தியதோ அந்த வேலையைத் தான் செய்துகொண்டிருக்கிறேன். உலகின் மிகஉயர்ந்த சிந்தனைத் தொட்டியின் வளர்ச்சிமுறையை என் அறிவிற்கு எட்டியவரை சரியாக அமுல்படுத்தி வருகிறேன். அவ்வளவுதான்.

இப்படியான குழப்பச் சிந்தனைகள் எனக்குள் தொடர்ந்து நீடித்துக்கொண்டே இருக்கும். நான் ஒருநாள் இந்த உண்மைகளை உலகிற்கு வெளிப்படுத்துவேன் என்று என் மனதிற்குச் சமாதானம் சொல்லும்வரை அது அடங்காது. அதற்குப் பிறகு பின்னிரவில் இமைகளை மூடுவதற்காக மேற்குலகின் துப்பாக்கிவீரர்கள் பற்றிய லூயீஸ் எல் ஆமெரின் புதினங்களை வாசித்தால்தான் தூக்கம் வரும்.

அத்தியாயம் - 5

எனது ஆன்மா விற்கப்பட்டது

அமெரிக்கத் தூதரகத்தில் பதிந்துகொள்வதற்காக ஜாகர்த்தாவிலேயே இருந்தோம். வெவ்வேறு அதிகாரிகளைச் சந்திப்பது, எங்களைத் தயார்ப்படுத்திக்கொள்வது, நீச்சல்குளத்தில் பொழுதைக் கழிப்பது என ஆறுநாட்களைச் செலவிட்டோம். ஓட்டல் இண்டர் காண்டினென்டலில் இவ்வளவு எண்ணிக்கையில் அமெரிக்கர்கள் இருப்பதைக் காண எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. தங்கள் பகல்பொழுதை நீச்சல்குளத்தில் கழிக்கும் அமெரிக்க எண்ணெய் நிறுவன அதிகாரிகளின் இளம்மனைவிமார்கள் மற்றும் அதிகாரிகளாக இருக்கும் பெண்களின் அழகை ரசிப்பது எனக்கு இன்பமயமான பொழுதாக இருந்தது. மாலைவேளைகளில் ஓட்டலைச் சுற்றிலும் உள்ள உணவகங்களில் நேரத்தைச் செலவிட்டோம்.

பின்னர் எங்கள் குழுவினரை சார்லி மலை நகரமான பாண்டுங்கிற்கு மாற்றினார். அந்நகரின் சீதோஷ்ணம் மிதமாக இருந்தது. அங்கு வறுமையோ வேறு இடையூறுகளோ இல்லாமல் இருந்தது. எங்களுக்கு டச்சுக்காலத்தில் கட்டப்பட்ட அரசு விருந்தினர் விடுதியான விஸ்மா அளிக்கப்பட்டது. விசாலமான நடைவெளியுடன், ஜாவாவின் எரிமலைச் சரிவுகளில் சுழன்று அமைந்திருக்கும் தேயிலைத்தோட்ட முகமாக உள்ள விஸ்மா ஒரு சொர்க்கம். அந்த வீடுளுடன் எங்களுக்கு சாலையில் பயணிக்க ஆளுக்கொரு டொயோட்டா காரும் ஒவ்வொன்றிற்கும் ஒரு ஓட்டுனரும், மொழிபெயர்ப்பாளரும் அளிக்கப்பட்டது. இறுதியாகப் பாண்டுங் கோல்ப் கிளப்பிலும், ராக்கெட் கிளப்பிலும் உறுப்பியமும் அளிக்கப்பட்டது. எங்களது தங்கும்விடுதிக்குப் பக்கத்திலேயே உள்ளூர் மின்சாரவாரியத் தலைமையகம் பெருசுகான் உமும், லிஸ்ட்ரிக் நெக்ராவும் இருந்தது.

சார்லி மற்றும் ஹாவர்டு பார்க்கருடன் கூட்டங்களுக்குப் போவதிலேயே என்னுடைய ஆரம்பநாட்கள் கழிந்தன. ஹாவர்டுக்கு வயது எழுபது இருக்கும். இங்கிலாந்து முறைசார

முறைமையின் தலைவராக இருந்தவர் அவர். அடுத்த இருப்பந்தைந்து ஆண்டுகளுக்கு ஜாவா தீவிற்கு தேவைப்படும் உத்தேச மின்சாரத்திட்ட வரைவாளராக இருந்தார். அதேசமயம் அதைப் பிரித்து உள்ளூர் அளவில் தேவைப்படும் அளவையும் கணக்கிட்டுச் சொல்பவராக இருந்தார். அவரது உத்தேச கணிப்பு என்னுடைய திட்டத்தைப் பொறுத்தே அமையும். எங்கள் குழுவில் உள்ள மற்றவர்களுக்கு எங்கே மின்சாரத்திட்டங்களை அமைப்பது, பிரித்து வழங்குவதற்கான அமைப்புகளை எங்கே ஏற்படுத்துவது என்பதை நிர்ணயித்து வடிவமைப்பது என்ற வேலை. நாங்கள் கூட்டங்களுக்குச் செல்லும் இடங்களில் எல்லாம் சார்லி என்னுடைய வேலை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை வலியுறுத்திச் சொல்லத் தவறமாட்டார். என்னுடைய முன்னுரைப்பு நம்பிக்கை உருவாகும் விதத்தில் அமையவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டிக்கொண்டே இருப்பார். என்னுடைய வேலை முக்கியத்துவம் வாய்ந்தது என்று கிளாடின் கூறியிருந்தது சரிதான்.

தகவல் சேகரிப்பிற்காக முதல் சிலவாரங்கள் இங்கே தங்கலாம் என்று சார்லி கூறினார்.

நான், ஹாவர்டு, சார்லி மூவரும் சார்லியின் தனியலுவலகத்தில் பிரமாண்டமான பிரம்புநாற்காலியில் அமர்ந்திருந்தோம். ராமாயணக் காட்சிகள் பதிக்கப்பட்ட திரைச்சீலைகள் அறையை அலங்கரித்தன. தடித்த சிகரெட் ஒன்றை சார்லி பற்றவைத்துக் கொண்டார்.

நடப்பிலுள்ள மின்னமைப்பு முறை, துறைமுகத்தின் திறன், சாலைகள், இருப்புப்பாதைகள் பற்றிய விபரங்களைப் பொறியாளர்கள் அளிப்பார்கள் என்று கூறிவிட்டு எனக்குச் சிகரெட்டைச் சுட்டிக்காட்டி இதப்போல நெருப்பாக இருக்க வேண்டும் நீ. பொருளாதார வளர்ச்சியால் நிகழவிருக்கிற மாயாஜாலங்கள் குறித்த முழுவிபரங்களும் ஹாவர்டிற்கு இம்மாத இறுதிக்குள் தேவைப்படுகிறது. இரண்டாம் மாதத்தில் பகுதிவாரியான நுணுக்கமான விபரங்கள் அவருக்கு வேண்டும். இறுதி மாதத்தில் மற்ற விபரங்களையும் கொடுத்து முடித்துவிட வேண்டும். இது கொஞ்சம் கஷ்டமான காரியம்தான். நமக்குத் தேவைப்படும் அனைத்துத் தகவல்களும் கிடைக்கும். நம் அனைவரது தலைகளும் மிகுந்த கவனத்துடன் விரைந்து செயல்பட்டால் நிச்சயமாக முடியக்கூடிய காரியம்தான். நன்றி சொல்லிவிட்டு வீட்டிற்குத் திரும்பவேண்டியதுதான். மீண்டும் இங்கு வருவது என்ற பேச்சுக்கே இடமில்லை. அதுதான் என் லட்சியம்.

ஹாவர்டு இளக்கமான தாத்தா போலத் தோன்றினாலும், ஏமாற்றத்தின் கசப்பேறிய கிழடாக இருந்தார். நியூ இங்கிலாந்து மின்னமைப்பில் உயர்ந்தபதவியை அவரால் அடைய முடிந்ததில்லை. ஆகையால் அதன்மீது கடுமையான வெறுப்புற்றிருந்தார். முடிந்துபோன ஒன்று. ஏனென்றால் அதற்கும் எனக்கும் ஒத்துவரவில்லை என்று என்னிடம் அடிக்கடி கூறிக்கொண்டிருந்தார். கட்டாய ஓய்விற்குப் பின் வீட்டில் மனைவியுடன் காலத்தை ஓட்டமுடியவில்லை அவரால். அதனால் மெய்ன் நிறுவனம் ஆலோசகர் பொறுப்பு அளித்தவுடன் ஏற்றுக்கொண்டார். இது அவருக்கு இரண்டாவது திட்டம். ஈனாரும், சார்லியும் என்னிடம் அவர் மீது ஒரு கண் வைத்திருக்க வேண்டுமென்று எச்சரித்துள்ளனர். பிடிவாதம், தன்னகங்காரம், பழிவாங்கும் புத்தி என்ற வார்த்தைகளின் மொத்த உருவம் ஹாவர்டு என்று கூறியிருந்தார்கள்.

காலப்போக்கில் அவரை எனது தகுதிவாய்ந்த குருவாக ஏற்றுக் கொண்டேன். அப்போது எனக்கு அதற்கானப் பக்குவமில்லை. கிளாடின் கொடுத்ததைப்போன்ற பயிற்சியொன்றும் எனக்கு அவர் அளிக்கவில்லை. அவர் மிகவும் வயதானவர், போதாதற்கு பிடிவாதக்காரரும் கூட என்று அவர்கள் நினைத்திருப்பார்கள். என்னைப்போன்ற முழுநேர ஊழியன் கிடைக்கும்வரை தற்காலிகமாக அவரைப் பயன்படுத்த நினைத்திருப்பார்கள். எப்படியானாலும் அவர்களது கண்ணோட்டத்தில் அவரொரு பிரச்சனைக்குரிய மனிதராக தோன்றி இருக்கிறார். அவர் என்ன மாதிரியான வேலைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைச் சூழலின் மூலம் புரிந்துவைத்திருந்தார். தன்னை ஒப்புக் கொடுப்பதில்லை என்பதில் தீர்மானமாக இருந்தார். ஈனாரும், சார்லியும் அவரைப் பற்றிச் சரியாகத்தான் கூறியிருந்தார்கள். அவருக்கிருந்த கடமைக்கும் மேலாக பிடிவாதம் மேலும் மேலும் வளர்ந்து வந்தது. அவர்கள் சொன்னபடி செய்யத் தயாராக இல்லை. பொருளாதார அடியாள் என்ற வார்த்தையை அவர் கேள்விப்பட்டிருப்பாரா என்பது சந்தேகம்தான். தன்னை ஏகாதிபத்தியத்திற்குப் பயன்படுத்த முயற்சிக்கிறார்கள் என்பதைப் புரிந்துவைத்திருந்தார். தான் அப்படிப் பயன்படுத்தப்படுவதை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

சார்லியுடன் ஒரு சந்திப்பின் முடிவில் என்னை ஒரு பக்கம் தனியாகத் தள்ளிக்கொண்டு போனார். தனது செவிட்டுச் சாதனத்தின் ஒலியைச் சுருதி சேர்த்து சட்டைக்குள் இடுக்கிக்கொண்டார்.

தணிந்த குரலில் நமக்குள் இருக்கட்டும் என்று ஆரம்பித்தார். எங்கள் இருவருக்குமான அலுவலகத்தின் ஜன்னலுக்குப் பக்கத்தில்

நின்றுகொண்டார். நான் வெளியே தேங்கிய குட்டையைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதில் நழுவும் தளர்வான சாரத்தைச் சுற்றிக்கொண்டு மற்ற அங்கங்கள் வெளித்தெரிய இளம்பெண் குளித்துக்கொண்டிருந்தாள். பொருளாதாரம் ராக்கெட் வேகத்தில் பறக்கப்போவதாக உன்னை நம்பவைக்க முயற்சிக்கிறார்கள். சார்லி ஒரு உதவாப்பயலும் உன்னை ஏறி மேய அனுமதிக்காதே என்றார்.

அவர் தனது வார்த்தைகளால் என்னை நிரப்புவதுபோலத் தோன்றியது. ஆனால் சார்லி சரியாகத்தான் சொல்கிறார். நம் மேலதிகாரிகளுக்குப் பணிந்துதான் பிழைக்கமுடியும் என்று நான் அவரைச் சமாதானப்படுத்த விரும்பினேன்.

கண்டிப்பாக இந்தப் பொருளாதாரம் வளர்ச்சியடையும் என்ற என் கண்களை குளக்காட்சி இழுத்தது. என்ன நடக்கிறது பார்க்கலாம்

ஆக நீ அங்கேதான் என்று முணுமுணுத்தார். எங்களுக்கு எதிரில் படும் காட்சியின் மீது கவனம் இல்லையென்பதை வெளிப்படுத்தினார். ஏற்கனவே உன்னை தங்கள் வழிக்கு கொண்டுவந்து விட்டார்கள் இல்லையா?

கால்வாயின் அந்தச் சூழணக் காட்சி என் கவனத்தை ஈர்த்தது. வயதான ஒருவர் கால்சட்டையைக் கழற்றிக்கொண்டே கரையின் சரிவில் இறங்கினார். குத்துக் காலிட்டு அமர்ந்து இயற்கைக் கடனைக் கழித்தார். அந்தப் பெண் அதைக் கண்டும் காணாமல் இருந்தாள். நான் பார்வையை ஜன்னலில் இருந்து திருப்பி ஹாவர்டைப் பார்த்தேன்.

நான் இதையெல்லாம் பார்த்திருக்கிறேன்.. நான் வயதில் குறைந்தவனாக இருக்கலாம். ஆனால் தென்னமெரிக்காவில் மூன்று வருடங்கள் இருந்துவிட்டு திரும்பியிருக்கிறேன். எண்ணெய் இருப்பதைக் கண்டுபிடித்தால் என்ன நடக்கும் என்பதைப் பார்த்திருக்கிறேன். எல்லாம் வேகமாக மாற்றமடையும்.

ஆஹா. நானும்தான் எல்லாவற்றையும் பார்த்திருக்கிறேன். வரலாற்றின் மகத்தான வருடங்களைப் பார்த்திருக்கிறேன். நான் உனக்கு ஒன்றைச் சொல்லவேண்டும். இந்த எண்ணெய்க் கண்டுபிடிப்பு அதுயிது என்று அவிழ்த்துவிட வேண்டாம். இரண்டாம் உலகப்போர் பொருளாதார மந்தம், பாஸ்டனின் ஏற்றம், இறக்கம் என அத்தனைக் காலங்களிலும் மின்சாரத்தேவைகளைக் கணித்தவன் நான். எல்லோரும் பிரமாதமாகப் பேசும் மசாசூட்ஸ் அற்புதங்கள் என்ன என்பதைப் பார்த்திருக்கிறேன். மின்சார உற்பத்தி வளர்ச்சியை ஆண்டிற்கு 7 லில் இருந்து 9 சதவீதத்திற்கு மேல்

கொண்டுபோகவே முடியாது. அதுகூட ஒரு நல்ல காலத்தில் என்று என்னால் அடித்துச்சொல்ல முடியும். 6 சதவீத வளர்ச்சி என்று சொன்னால் அதுதான் நியாயமாக இருக்கும்.

அவரையே உற்றுப் பார்த்தேன். அவர் சொல்வதை நானும் கூட ஓரளவு ஒப்புக்கொள்வேன். ஆனால் என்னைத் தற்காத்தாக வேண்டும். என் சொந்த மனசாட்சி நியாயப்படுத்து என்று கூவுகிறது. எனவே என் தரப்பு வாதங்களை அவர் ஏற்குமாறு செய்ய வேண்டும்.

ஹாவர்ட் இதென்ன பாஸ்டனா? இது வேறநாடு. இப்போ வரையிலும் மின்சாரம் கிடைக்காதவர்கள் நிறைய உண்டு இங்கே.

அப்படியே குதிகாலைத் திருப்பி எவ்வளவு முடியுமோ அவ்வளவு வேகமாக கைகளை அசைத்து என்னைத் துரத்தினார்.

என்னவோ பண்ணிட்டுப் போங்க, உறுமினார். வித்துடுங்க. எவ்வளவு கொட்டிக் கொடுத்தாலும், என் மனசாட்சியை நான் விற்க மாட்டேன். மேசைக்கு இப்பால் நாற்காலியில் சரிந்து தொப்பென்று விழுந்தார். என் மனதிற்கு என்ன தோன்றுகிறதோ அந்த அடிப்படையில்தான் வளர்ச்சியைக் கணித்துக் கொடுப்பேன். சும்மா அப்பம் ஆகாயத்தில் பறக்கும் என்று பொருளாதார ஆய்வை எழுதித் தர முடியாது. கையில் பென்சிலை எடுத்துக்கொண்டு தன் கவனத்தை காகிதத்தின் மீது குவித்தார்.

இது எனக்கு விடுக்கப்பட்ட சவால். நான் புறக்கணிக்க முடியாது. நான் நேராகப் போய் அவரது மேசைக்கு எதிரில் நின்றேன்.

இங்கே ஒவ்வொருவரும் கலிபோர்னியா தங்கவேட்டைக்குப் போட்டியான ஒரு பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்த்திருக்கும் போது, நீங்கள் மின்சார வளர்ச்சியை 1960 பாஸ்டனுடன் ஒப்பிட்டால் நீங்கள் அனைவருக்கும் பரிதாபத்திற்குரிய முட்டாளாகத் தோன்றுவீர்கள்.

தனது பென்சிலை அறைந்து கீழே வைத்துவிட்டு, என்னையே பார்த்தார். கல்நெஞ்சக்காரர்கள். நீயுந்தான். நீங்கள் ஒவ்வொரும். எழுந்து கைகளை விரித்து அந்த அலுவலகச் சுவர்களைப் பார்த்து கூவினார். நீங்கள் எல்லோரும் உங்கள் ஆன்மாவை பிசாசுக்கு விற்றுவிட்டவர்கள். இப்போது பணத்திற்காக அதனுடன் இருப்பவர்கள். இகழ்ச்சியாகச் சிரித்தார். பின் சட்டைக்குள் விரல்களை விட்டுத் துழாவினார். என் இரவல் காதை (ஹியரிங் எய்ட்) மூடிக்கொண்டு வேலை செய்யப் போகிறேன்.

என் குண்டலினியையே உலுக்கிவிட்டார். அங்கிருந்து சட்டென்று வெளியேறி சார்லி அலுவலகத்தை நோக்கிப் போனேன். பாதி வழியில் திரும்பி படியில் இறங்கினேன். கதவை விட்டு வெளியேறி உச்சிவெயிலில் நடந்தேன். குளித்துமுடித்த இளம்பெண் சாரத்தை இறுக்கிக்கட்டி கால்வாயை விட்டுக் கரையேறினாள். வயதான கிழவர் அங்கில்லை. பல பொடியன்கள் ஒருவர் மீது ஒருவர் தண்ணீரை வாரியிறைத்தும் கத்தியபடி விளையாடிக்கொண்டிருந்தார்கள். வயதான மாது முழங்கால் உயர நீரில் நின்று பல் துலக்கிக்கொண்டிருந்தாள். மற்ற சிலர் துணி துவைத்துக்கொண்டிருந்தனர்.

தொண்டையில் ஏதோ மேலேறி வருவது போலிருந்தது. ஒரு உடைந்த கூங்கிரீட் கல்லில் அமர்ந்தேன். உடைந்து வரும் கண்ணீரை அடக்க முயற்சித்தேன். கால்வாயில் இருந்து பரவி வரும் நாற்றத்தை மறக்க முயன்றேன். எனக்குள் பொங்கும் துயரத்தைத் துரத்தவேண்டும்.

நீ இங்கே பணத்திற்காகத்தானே இருக்கிறாய் என்ற ஹாவர்டின் குரல் மீண்டும் மீண்டும் என் செவிகளுக்குள் ஒலித்துக் கொண்டே இருந்தன. அவர் என் மூல நரம்புகளைத் தாக்கிவிட்டார்.

பையன்கள் தொடர்ந்து சந்தோசமாக விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது உற்சாகமான குரல்கள் காற்றை நிறைத்தன. அவர்களைப்போல மனக்கவலை ஏதும் இல்லாமல் இருப்பதற்கு நான் என்ன செய்வது.? இந்தக் கேள்வி என் இதயத்தைக் குடைந்தது. முதுகு வளைந்த வயதான மனிதர் கால்வாய்க் கரையில் நின்று பையன்களைப் பார்த்தார். அவர்களது சந்தோசத்தைப் பார்த்து, பல்லில்லாத வாயை முழுசாகத் திறந்து எகிறு தெரியச் சிரித்தார்.

நான் ஹாவர்டிடம் கூட நம்பிக்கை வைக்கலாம். நாங்கள் இருவரும் கலந்து பேசி ஒரு தீர்வை எட்டலாம். உடனே என்மனதின் பாரம் குறைந்ததுபோல் இருந்தது. ஒரு சிறு கல் எடுத்து நீர் குட்டையில் எறிந்தேன். அலைகள் எழுந்து அடங்கின. எனது கொந்தளிப்புகளும் அதுபோல் அடங்கிவிடும். ஹாவர்டோ தனது வாழ்க்கையில் முன்னேறுவதற்குக் கிடைத்தப் பல வாய்ப்புகளை நழுவவிட்டு வயதான காலத்தில் மனதில் வெறுப்புகளைச் சுமந்து அலைபவர். ஆனால் நான் அவரைப்போல இருக்கமுடியாது. கண்டிப்பாக என்னையும் அவரையும் ஒப்பிட்டுப்பார்க்க முடியாது. இப்போதுதான் வாழ்க்கையில் அடியெடுத்து வைப்பவன் நான். இன்னும் வயது இருக்கிறது. என் வாழ்க்கை நிச்சயமாக அவருடையதைப்போல துயரக்கதையாக வந்து முடிந்து விடக்கூடாது.

சாக்கடையாக நாறும் கால்வாயைப் பார்த்துக் கொண்டிருந்தேன். நியூஹாம்ப்ஷையர் பள்ளி, மலை, தனிமை நாட்கள், விடுமுறைப் பொழுதுகள் எல்லாம் என் நினைவில் ஓடின. எனது வருத்தங்கள் நிதானமாக அடங்கின. பேசிப் பகிர்ந்துகொள்ள எனக்கு ஒருவரும் இல்லை.

அன்றிரவு படுக்கையில் புரண்டு நீண்டநேரமாக யோசித்துக் கொண்டிருந்தேன். என் வாழ்க்கையின் முக்கியமான நபர்களான ஹாவர்ட், சார்லி, கிளாடின், ஆன்ன், எய்னார், அங்கிள் பிராங் போன்றவர்களை எல்லாம் சந்திக்காமல் போயிருந்தால் என்னவாகி ஆகியிருப்பேன். நான் எங்கே வாழ்ந்திருப்பேன்? கண்டிப்பாக அது இந்தோனேசியாவாக இருக்காது. அது மட்டும் உறுதி. எதை நோக்கிப் போயிருப்பேன். நான் எடுக்கவேண்டிய முடிவின் முன் வந்து நின்றேன். சார்லி தெளிவாகச் சொல்லிவிட்டார். வருடத்திற்கு 17 சதவீத வளர்ச்சியை எதிர்நோக்கும் விதமாகத் திட்டத்தைத் தயாரிக்குமாறு எனக்கும், ஹாவர்டுக்கும் உத்தரவு போட்டுவிட்டார். இதில் நான் செய்வதற்கு என்ன இருக்கிறது.?

என் முடிவு ஹாவர்டின் திட்டத்தைப் பொறுத்துதான் இருக்க முடியும். அவர் தன் பிடிவாதத்தை மாற்றிக்கொள்ள மாட்டார். அந்த வகையில் பிரச்சனைக்குக் காரணம் நான் அல்ல. எனவே என்மனம் சாந்தமடைந்தது. இது ஏன் முன்பே எனக்கு உதிக்கவில்லை. அவர் தனது விருப்பப்படி திட்டத்தைத் தயாரித்து கணிப்பை வழங்கட்டும். நான் எனது மேலதிகாரிகளின் விருப்பத்தை நிறைவேற்றித் தருகிறேன். தேவையில்லாமல் என்னுடைய வேலையை முக்கியமானதாக மாற்றுகிறார்கள். ஆனால் அது தவறானது என்பது எனக்குப் புரிந்ததும் மனப்பாரத்தை இறக்கி வைத்ததுபோல இருந்தது. தூக்கத்தில் ஆழ்ந்தேன்.

அடுத்த சிலநாட்களில் ஹாவர்ட் காய்ச்சலில் படுத்துவிட்டார். நாங்கள் அவரை மருத்துவமனைக்குத் தூக்கிக்கொண்டு போனோம். மருத்துவர்கள் மருந்து மாத்திரை கொடுத்து அமெரிக்காவிற்கு அவரை அனுப்புமாறு கூறிவிட்டார்கள். தன்னிடம் தகவல்கள் இருப்பதால்தான் பாஸ்டனில் இருந்தபடியே திட்டத்தைத் தயாரித்து அனுப்பமுடியும் என்று கூறிவிட்டார். அவர் பிரியும்போது சொன்ன வார்த்தைகள் அவரது பழைய எச்சரிக்கையை நினைவூட்டியது.

அவர் சொன்னது இதுதான். ஒரு திட்டத்தில் எண்களைப் போட்டு ஒப்பேற்ற வேண்டிய அவசியமில்லை. பொருளாதார மாயஜாலங்கள் குறித்து நீங்கள் என்ன சொன்னாலும் சரி. நான் உங்கள் மோசடிக்கு உடன்பட மாட்டேன்.

பாகம் இரண்டு

1971 – 1975

அத்தியாயம் - 6

விசாரணை அதிகாரி வேடம்

இந்தோனேசியா, ஆசிய வளர்ச்சி வங்கி, யுஎஸ்எஐடி ஆகியோருக்கு இடையில் ஏற்பட்ட உடன்பாட்டின்படி எங்கள் குழுவைச் சேர்ந்த திட்டத்தில் உள்ள ஒருவர் அதிகமான மக்கள் வசிக்கும் மையங்களைப் பார்வையிட வேண்டியிருந்தது. நீ அமேசான் காடுகளில் பாம்பு, பூச்சி, தண்ணீர் என எதையும் சமாளித்தவன் என்று சார்வி சொன்னபடி நான்தான் அதற்கு பொருத்தமான ஆளாக இருந்தேன்.

ஒரு ஓட்டுனர், மற்றும் மொழிபெயர்ப்பாளருடன் கிளம்பி சப்பையான விடுதிகளில் தங்கிச் அழகழகான பகுதிகளில் வலம் வந்தேன். உள்ளூர் வணிக, அரசியல் தலைவர்களைச் சந்தித்தேன். பொருளாதார வளர்ச்சியின் நோக்கத்தைப் பற்றிய அவர்களது கருத்துக்களைப் பட்டியலிட்டேன். என்னுடன் தகவல்களைப் பகிர்ந்துகொள்ளத் தயங்குகிறார்கள் என்பது தெரிந்தது. என்னுடைய இருப்பு அவர்களுக்கு அச்சமூட்டியிருக்கலாம்.. யாரை எதைக்கேட்டாலும் மேலதிகாரிகளைக் கேட்குமாறும், ஜாகர்த்தா தலைமையகத்தில் தெரிந்துகொள்ளுமாறும் ஒரேமாதிரியாகத்தான் பதிலளித்தார்கள். இது எனக்கு எதிரான சதியோ என்று கூட சிலநேரங்களில் நினைத்ததுண்டு.

வழக்கம்போல இரண்டு மூன்று நாட்கள் குறும் பயணங்களாகவே இருந்தன அவை. அவ்வப்போது பாண்டுங்கில் உள்ள விஸ்மா இல்லத்திற்கும் வந்து போனேன். அந்த இல்லத்தைப் பராமரித்து வரும் பெண்மணிக்கு என்னிலும் குறைந்த வயது மகன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் ரோஸ்மான். தன் தாயைத்தவிர மற்றனைவருக்கும் பிடித்தமானவனாக இருந்தான். உள்ளூர் பல்கலையில் பொருளாதாரம் பயின்ற அவன் என்னுடன் வேலை செய்வதில் ஆர்வம் காட்டினான். அதற்குக் காரணம் ஏதாவது சந்தர்ப்பத்தில் என்னிடம் வேலைக்கு அணுகுவதற்கோ என்றுகூட

யூகித்தேன். அதுபோலவே எனக்கு பாஷா இந்தோனேசியா (இந்தோனேசியாவின் தொடர்பு மொழி) கற்றுக்கொடுக்கத் துவங்கினாள்.

ஹாலந்திடமிருந்து விடுதலை பெற்ற இந்தோனேசியாவிற் கென்றே தனித்த மொழி வேண்டும் என்பதற்காக எளிதாகக் கற்றுக்கொள்ளும் வகையில் சுகர்னோ உருவாக்கிய மொழிதான் பாஷா இந்தோனேசியா. 350க்கும் மேலான மொழிகள் பேசும் மக்களிடையே பொதுக்கலாச்சாரத்தை உருவாக்க ஒரு பொதுமொழி அவசியம் என்பதை உணர்ந்தார் சுகர்னோ. அதற்காக மொழியியல் வல்லுனர்களை நியமித்தார். இறுதியில் மலாயை அடிப்படையாக வைத்து உள்ளூர் பல்லின மொழிகளில் காணப்படும் ஒழுங்கற்ற கூறுகளைக் களைந்து அதிவெற்றிகரமாக பாஷா இந்தோனேசியா உருவாக்கப்பட்டது. 1970 களின் துவக்கத்தில் பெரும்பாலான இந்தோனேசிய மக்கள் புதிய பாஷாவைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவந்தார்கள் என்றாலும் தங்களுக்குள் ஜாவானீஸையும் பிற குழு மொழிகளையும் தொடரத்தான் செய்தனர். ராஸி (ரோஸ்மான்)போன்ற நகைச்சுவை உணர்வுமிக்க மொழியாசிரியர் இருந்தால் பாஷாவை ஸ்பானிஷை விட, ஷூவரைவிட மிக எளிதில் கற்றுக்கொண்டு விடலாம்.

ராஸி ஒரு ஸ்கூட்டர் வைத்திருந்தான். அதில் என்னை ஏற்றிக் கொண்டு இதுவரை நீங்கள் பார்க்காத நகரத்தையும், மக்களையும் அறிமுகம் செய்விக்க அழைத்துச் சென்றான்.

நிழல் பாவைக்கூத்து, நாட்டுப்புற வாத்தியக் கச்சேரி, நெருப்பு வித்தை, கண்கட்டி வித்தை, நினைவுகளைக் கிளர்த்துகிற அமெரிக்கன் இசைநாடாக்களில் இருந்து பழங்குடிக் கலைப்பொருட்கள் வரை விற்கும் தெருக்கடைகள் அனைத்திற்கும் அழைத்துச் சென்றான். இளைஞர்கள் இளைஞிகள் மத்தியில் பிரபலமாகி வந்த பீட்டல்ஸ் இசைக்குழுவினர் பாணியில் உடையணிந்த கும்பல் நிரம்பிய சின்ன தெருவோரக் கடையில் இறுதியாக நுழைந்தோம். அங்கிருந்தவர்களது உடைபாணி என்னவாக இருந்தாலும் இந்தோனேசியத் தோற்றமே முன்னுக்கு நின்றது. ராஸி என்னை அவர்களுக்கு அறிமுகம் செய்வித்தான். ஒரு வட்டமான மேசையைச் சுற்றி அமர்ந்தோம்.

அவர்கள் அனைவரும் வெவ்வேறு தரப்பட்ட ஆங்கிலத்தைச் சரளமாகப் பேசினார்கள். ஆனாலும் எனது பாஷா பேசும் முயற்சிக்கு ஊக்கமூட்டினார்கள். அமெரிக்கர்கள் ஏன் தங்கள் மொழியைக் கற்பதற்கு முயற்சிப்பதில்லை என்றும், பிற அமெரிக்கர்கள் அல்லது

ஐரோப்பியர்கள் அனைவரும் கோல்ப் கிளப்களிலும், நட்சத்திர விடுதிகளிலும், உயர்தர உணவகங்களிலும், திரையரங்குகளிலும், பிரமாண்டமான வணிக வளாகத்திலும் சுற்றி வரும்போது நீ மட்டும் ஏன் இந்த நகரத்தின் ஒரு பகுதியாக மாறிவிட்டாய் என்றும் என்னிடம் வெளிப்படையாகக் கேட்டார்கள். அந்தக் கேள்விக்கு என்னிடம் பதில் இல்லை.

எப்போதும் என் நினைவில் வைத்திருக்கும்படியான இரவு அது. ராஸியும் அவனது நண்பர்களும் என்னை அவர்களில் ஒருவனாகவே பாவித்தார்கள். அவர்களது நகரத்தை, உணவை, இசையை, கிராம்பு மணக்கும் சிகரெட் வாசத்தை, அவர்களது வாழ்வின் மற்ற சுகந்தத்தை, வேடிக்கையை அவர்களுடன் சிரித்த நிமிடங்களை எனது வாழ்வின் பெருமகிழ்வுத் தருணமாகச் சுவைத்தேன். அமைதிக்குழுவில் இருந்த நாட்கள் மீண்டும் நிகழ்வதுபோல் இருந்தது. இவ்வளவு சுவையான அனுபவங்களை விட்டு மக்களைப் பிரிந்து நான் ஏன் நட்சத்திர விடுதிகளில் தங்கி, முதல்வகுப்பு பயணங்கள் செய்துகொண்டு திரியவேண்டும் என்று வியந்தேன். அந்த இரவில் என் நாடு ஏன் வியட்நாமுடன் போரிட்டது என்பதைத் தெரிந்துகொள்ளத் தீவிர ஆர்வம் காட்டினார்கள். அதை நியாயமற்ற ஆக்கிரமிப்பு என்ற அவர்கள் ஒவ்வொருவரும் மிகவும் பீதியுற்றிருந்தார்கள். நான் அவர்களது உணர்வைப் புரிந்துகொள்கிறேன் என்பதையறிந்த பின்னர் மனம் இலகுவானார்கள்.

நாங்கள் இருவரும் விஸ்மாவிற்குத் திரும்பும்போது நன்றாக இருட்டிவிட்டது. ராஸியின் உலகத்திற்குள் அழைத்துச் சென்றதற்காக மிகுந்த நன்றி பாராட்டினேன். தன் நண்பர்களிடம் மனம் திறந்து பழகியதற்காக அவனும் எனக்கு நன்றி கூறினான். இது நீடிக்க இருவருமே உறுதிபூண்டோம். ஆரத்தழுவி விட்டுப் பின் படுப்பதற்காகப் பிரிந்தோம்.

ராஸியுடன் பெற்ற அனுபவங்கள் மெய்னுக்கு வெளியே நேரத்தைச் செலவிடுவதற்கான ஆசையைத் தூண்டிவிட்டது. அடுத்தநாள் காலையில் சார்லியைச் சந்தித்து நமக்குத் தேவையான தகவல்களை உள்ளூர் மக்களிடம் இருந்து பெறுவதற்குள் போதும் போதும் என்றாகிவிடுகிறது. போதாக்குறைக்கு பொருளாதார வளர்ச்சியை கணிப்பதற்குரிய புள்ளிவிபரங்கள் அனைத்தும் ஜாகர்த்தாவிலுள்ள அரசுத் தலைமையகத்தில் மட்டுமே கிடைக்கிறது என்று கூறினேன். நானும் சார்லியும் ஜாகர்த்தாவில் மேலும் சிலநாட்கள் இருக்கவேண்டிய அவசியம் இருப்பதாக ஒப்புக்கொண்டோம்.

பாண்டுங்கை விட்டு புகை மண்டிய நகருக்கு நான் செல்ல நேர்வதற்காக சார்லி வருத்தப்பட்டார். ஜாகர்த்தா போவது, அந்தக் கம்பீரமான ஓட்டலில் தங்குவது அனைத்தும் எனக்கு விருப்பமானதுதான் என்றாலும் சலிப்பூட்டுவதாக நடித்தேன். ஜர்கர்த்தா போனதும் எனது கண்ணோட்டமே மாறியிருப்பதை உணர்ந்தேன். அமெரிக்கர்களைப் புதியவெளிச்சத்தில் பார்த்தேன். அந்த இளம்மனைவிகள் அப்படி ஒன்றும் பிரமாதமான அழகில்லையே. கால்வாயை மறிக்கும் கம்பிவேலியும், ஜன்னல் கம்பிகளும் என் கண்களை உறுத்தின. ஆர்வமூட்டிய உணவக உணவு வகைகளும் இப்போது என்னை ஈர்க்கவில்லை.

இன்னொன்றையும் கவனித்தேன். அரசியல் தலைவர்களையும், வியாபாரிகளையும் சந்திக்கும்போது என்மீதான அவர்களுடைய அணுகுமுறையை உள்ளார்ந்து பார்த்தேன். முன்னர் இதிலெல்லாம் கவனம் செலுத்தியதில்லை, ஆனால் இப்போது அவர்களுக்கு என்மீது ஒரு வெறுப்புணர்வு இருப்பதைப் பார்க்க முடிந்தது. உதாரணமாக என்னைப் பற்றி அவர்களுக்குள் பாஷா வில் அறிமுகம் செய்விக்கும்போது பெரும்பாலும் பயன்படுத்தும் சொற்களுக்கான அர்த்தத்தை அகராதியில் பார்த்தேன். அவை கிட்டத்தட்ட விசாரணையாளர், நுணுகி விசாரிப்பவர் என்ற அர்த்தம் தருவதாக இருந்தது. எனக்குப் பாஷா தெரியும் என்பதை வேண்டுமென்றே காட்டிக்கொள்ளாமல் இருந்தேன். என்னுடைய மொழிபெயர்ப்பாளர் கூட என்னால் சில சொற்களை மட்டுமே உதிர்க்கமுடியும் என்று நினைத்துக்கொண்டிருந்தான். நான் பாஷா-ஆங்கில அகராதி ஒன்றை வாங்கிவைத்துக்கொண்டு தனிமையில் அவர்கள் பேசிய சொற்களுக்கான அர்த்தங்களைச் சரியாகப் புரிந்துகொள்வேன்.

சொற்களைக் காணமுடிவது மொழியின் எதேச்சையா? அல்லது என்னுடைய அகராதி அமைக்கப்பட்ட விதம் அப்படியானதா? எதுவானாலும் நான் அவர்களுடன் இன்னும் கூடுதலான நேரம் செலவிட வேண்டியிருப்பதாக என் மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டேன். நான் அவர்களுக்கு ஒரு வேண்டாத விருந்தாளி, யாரோ சொன்னதன் பேரில் வேறு வழியில்லாமல் எனக்கு ஒத்துழைக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன். என்னுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்ட மேலிடம் எது. அரசு அதிகாரிகளா? வங்கியினரா? ராணுவத்தினரா? அமெரிக்கத் தூதரகமா? யார் என்பது எனக்குத் தெரியவில்லை. எனக்குத் தெரிந்ததெல்லாம் நான் போனால் ஒரு வரவேற்பு. ஒரு குவளைத் தேநீர் கேள்விகளுக்குப் பணிவான பதில்கள்

மேலோட்டமாகப் பார்த்தால் நல்ல உபசாரம். ஆனால் திரையை விலக்கிப் பார்த்தால் வேண்டாவெறுப்பு, ஒரு அசூயை என்மீது வெளிப்பட்டது.

என் கேள்விகளுக்குப் பதிலாக அவர்கள் அளித்த தகவல்களின் நம்பகத்தன்மை எனக்கு வியப்பூட்டியது. உதாரணமாக, நேராகப் போனோம் சந்தித்தோம் என்று இருக்காது. முன் அனுமதி பெறவேண்டும். அதில்லாமலா என்று கேட்கலாம். முன்னனுமதி பெறுவது ஒன்றும் சாதாரணமான காரியம் இல்லை. வருகையைத் தொலைபேசி மூலமாகத் தெரிவிக்கலாம். ஆனால் இணைப்பு எளிதில் கிடைக்காது. ஒவ்வொரு இடத்திற்கும் நெரிசலான தெருக்கள் வழியாகத்தான் போயாக வேண்டும். அந்த நெரிசலில் நான்கு அடுக்கத்தைக் கடக்கவே சில மணி நேரங்களாகிவிடும். இத்தனை கஷ்டப்பட்டுப் போனாலும் உடனே வாங்கிவிட முடியாது. காட்சி தருவது ஆண் செயலாளராகவே இருந்தாலும் ஜாவாவிற்கு உரித்தான கனிவு பணிவு அனைத்தையும் காட்டி படிவத்தை நிரப்பித்தரக் கோருவார். கேள்விகள் எந்த மாதிரியானவை என்பதைக் கேட்டுத் தெரிந்துகொண்டு பின் சந்திப்பிற்கான நேரத்தை அறிவிப்பார்.

சந்தேகமின்றி சந்திப்பிற்கான நாள் பல நாட்கள் தள்ளித்தான் இருக்கும். சந்திப்பு இடம்பெறும் நாளில் போதிய ஆவணங்களைக் கோப்பாக தயாரித்துக்கொண்டு போவேன். தொழிற்சாலையில் என்றால் அடுத்த ஐந்து அல்லது பத்து ஆண்டுகளுக்கு எதிர்நோக்கும் வளர்ச்சித் திட்டம், வங்கியாளர்கள் முன்னேற்ற வரைவு படம், அரசு அதிகாரிகள் திட்டங்களின் பட்டியல் போன்ற பொருத்தமான ஏதோ ஒன்றைக் கொடுத்துவிட்டு ஜாவா பெரும் பொருளாதார வீச்சினை எதிர்கொள்ள காத்திருப்பதாக ஒரு சித்திரத்தை உருவாக்குவார்கள். யாருமே பொருளாதார வளர்ச்சியின் சாத்தியம் குறித்துக் கேள்வியும் எழுப்பியதில்லை. பாதகமான தகவல்களைத் தந்ததும் இல்லை.

ஜாவா அனுபவங்களில் வியப்புற்று பாண்டுங் திரும்பினேன். உள்ளுக்குள் ஏதோ ஒன்று நெருடியது. இங்கு நேர்வது அத்தனையும் இயல்பை மீறிய விளையாட்டாகத் தோன்றியது. விளையாட்டில் இருக்கிற அனைவரும் அவரவர் துருப்புச்சீட்டை மறைத்து வைத்துக்கொண்டிருப்பதாகப் பட்டது. இந்த விளையாட்டின் விளைவுகள் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் பல பதின்களுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்துபவை என்பது தெரிந்திருந்தாலும், நாங்கள் ஒருவரை ஒருவர் நம்புவதும் இல்லை. எண்கள் மீதான நம்பகத்தன்மை குறித்து எங்களுக்குள் பேசிக்கொள்வதும் இல்லை.

அத்தியாயம் - 7

நாகரீகத்திற்கு ஒரு வெள்ளோட்டம்

இந்தோனேசியாவில் பிரபலமான பாவைக்கூத்தான தாலாங் பற்றி கேள்விப்பட்டதுண்டா? உங்களை அதற்கு அழைத்துப்போகிறேன். நகரில் இன்று இரவு ஒரு முக்கியமான நிகழ்ச்சி உள்ளது என்றான் ராஸி. நான் பண்டுங் திரும்பிவிட்டதில் ஏக சந்தோசம் அவனுக்கு.

நகரின் முக்கியமான பகுதிகள் வழியாக ஸ்கூட்டரில் அழைத்துப்போனான். கிழக்காசியப் பாணியிலான ஓடு வேய்ந்த கோயில்களின் ஏழ்மை வடிவம் போலத் தோன்றிய வரிசையான கம்போங் (கிராமத்து) வீடுகள் நிறைந்த தெருக்களைக் கடந்துசென்றது எங்கள் வாகனம். அதிகாரத்தின் வடிவமாக என் எதிர்பார்ப்பில் வளர்ந்து நின்ற, காலனிய டச்சு மாளிகைகளும், அரசு அலுவலகங்களும் கண்ணில் தென்படவே இல்லை. பெரும்பாலும் ஏழைகள்தான். இருந்தாலும் மகத்தான பெருமிதத்தை அவர்கள் முகங்களில் காணமுடிந்தது. சாயம் மங்கிய ஆனால் தூய்மையான பாத்திக் சாரங்களைக் கட்டியிருந்தார்கள். பளபளப்பான நிறங்களில் ரவிக்கையும் தலையில் வைக்கோலில் பின்னிய பெரிய தொப்பியுமணிந்து இருந்தனர். சென்றவிடமெல்லாம் புன்னகையும் சிரிப்பும் பொங்க வரவேற்றார்கள். வண்டி நிற்கும் இடங்களிலெல்லாம் சிறுவர்கள் வந்து எனது ஜீன்ஸ்துணிச் சொரசொரப்பைத் தடவிப் பார்த்தார்கள். ஒரு அழகான சிறுமி ஓடிவந்து மலர்ந்த வாசங் கமழும் பிராங்கப்பாணிப் பூவை என் தலையில் சொறுகிவிட்டுப் போனாள்.

சிலர் நின்றபடியும், நாற்காலிகளில் அமர்ந்தபடியும் மக்கள் நூற்றுக்கணக்கில் திரண்டிருந்த சாலையோர அரங்கின் அருகே வண்டியை நிறுத்தினோம். நன்றாக இருண்ட, அழகான இரவு. அங்கே பழைய பாண்டுங்கின் மையமான பகுதியாக இருந்தாலும், விளக்குகள் இல்லாததால் தலைக்கு மேலே நட்சத்திரங்கள்

ஜொலித்துக்கொண்டிருந்தன. மரக்கடைகளின் நெருப்பு, நிலக்கடலை, கிராம்பு ஆகியவற்றின் கலவையான வாசம் காற்றில் நிறைந்தது.

கூட்டத்தினிடையே காணாமல்போன ராஸி அன்று தேநீர்க்கடையில் சந்தித்த நண்பர்களை அழைத்துக்கொண்டு வந்தான். எனக்கு தேநீர், சின்ன கேக்குகள், சாத்தே (நெருப்பில் வாட்டிய இறைச்சி) போன்றவற்றை உண்பதற்கு அளித்தனர். முதலில் தயங்கினேன். பெண்மணி பக்கத்தில் கனன்ற நெருப்பைக் காட்டி சுடச்சுட சமைத்தது என்று சொல்லவும் ஆவலுடன் வாங்கி உண்டேன்.

கோயில்மணி போன்ற காமலாங் என்ற இசைக்கருவியின் மாயமாக கட்டிப்போடக்கூடிய இசை ஆரம்பமானது.

தோல் பாவையை ஆடச்செய்கிற ஒரே ஆள் ஆட்டத்தின் அனைத்துப் பாத்திரங்களுக்கும் பல குரலில் பேசினார், அதையும் பல மொழிகளில் பகுதிக்கு ஏற்றவாறு பேசிக்கொண்டே இசைக்கருவிகளையும் வாசிப்பார். அவர் பேசுவதை நாங்கள் உங்களுக்கு மொழிபெயர்த்துச் சொல்கிறோம் என்று காதுக்குள் கிசுகிசுத்தான் ராஸி.

தொன்மைக் காவியப் பாத்திரங்களுடன் தற்கால நிகழ்வுகளை இணைத்து நடந்த தனித்துவமான நிகழ்வு அது. ஒரு தெய்வீகச் சடங்குபோல இக்கலை நிகழ்வை நடத்துகிறவர் ஒரு இனக்குழுவின் சாமியாடி என்பது பின்னர் தெரியவந்தது. நூறு தோற்பாவைகளை ஆடச்செய்து பல்வேறு குரல்களில், பல மொழிகளிலும் ஒரேநேரத்தில் ஒரே நபர் பேசி நிகழ்ந்திய அக்கலை நிகழ்வு நடந்த இரவு என் வாழ்நாள் முழுமைக்குமான பெருந்தாக்கத்தை அளித்தது.

தொன்மைப் பிரதியான இராமாயணத்தில் இருந்து சில தேர்ந்த பாத்திரங்களின் சாயலில் ரிச்சர்டு நிக்சனை நினைவூட்டும்படியாக நீள மூக்கு ஆபரண அலங்காரங்கள் வரைந்த தோற் சித்திரத்தை தயாரித்திருந்தார்கள். நட்சத்திரங்களும், சிவப்பு நீலக் கோடுகளாலும் ஆன அங்கிள் சாம் உடை, நீளத்தொப்பி, பின்னால் வால் இது அமெரிக்க ஜனாதிபதிக்கு. மற்றொரு பாத்திரத்தின் கையில் டாலர் குறியீடு வரைந்த பக்கெட். இன்னொரு கை அமெரிக்கக் கொடியை அடிமைவிசிறியாக வீசுவதுபோல் வீசியது.

திரையில் அரபுநாடுகளைக் குறிக்கும் தேசப்படம் தொங்க விடப்பட்டிருந்தது. நிக்ஸன் வந்து தேசப்படத்தை ஒரு பழத்தைப் பறிப்பதுபோல் கொக்கியால் பறித்து ஆவலுடன் வாய்க்குக்

கொண்டுபோனார். சீச்சீ இந்தப் பழம் புளிக்கும் என்று வீசிவிட்டு இன்னொரு படத்தைப் பறித்து தனது பக்கெட்டிற்குள் போட்டுக் கொண்டார். பின் மற்ற நாடுகளைப் பறிக்கப்போனார்.

அவர் தென்கிழக்கு ஆசிய நாடுகளைப் பறிக்காதது வியப்பளித்தது. மத்தியகிழக்கு, பாலஸ்த்தீன், குவைத், சௌதி அரேபியா, ஈராக், சிரியா, ஈரான் போன்ற நாடுகளாக முடித்துவிட்டு அடுத்த பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் என்று திரும்பினார். நிக்ஸன் ஒவ்வொரு நாட்டைப் பறித்துப்போடும்போதும் நக்கலான முஸ்லீம் எதிர்ப்பு வார்த்தைகளை உதிர்த்தார். முஸ்லீம் நாய்கள், முகமதியச் சூன்யங்கள், இஸ்லாமியச் சாத்தான்கள் போன்றவைகளைச் சொன்னார்.

பார்வையாளர்கள் வெகுவாக ரசித்தார்கள். பக்கெட்டில் நாடுகளின் எண்ணிக்கை உயர உயர கோபமும் அதிகரித்தது. அதிர்ச்சியுற்றார்கள். சோகமுற்றார்கள். சில வேடிக்கைகளுக்குக் குலுங்கி குலுங்கிச் சிரித்தார்கள். நிகழ்ச்சியை இயக்கும் கலைஞரின் மொழிப் பார்வையாளர்களை உசுப்பேற்றியது. கூட்டத்தின் நடுவில் உயரத்தால் தனித்து நின்ற நான் கோபத்தின் நடுவே மாட்டிக் கொண்டதுபோல் தோன்றியது. பார்வையாளர்களுக்கு ஏற்றப்பட்ட அமெரிக்கா மீதான கோபம் என் பக்கம் திரும்பிவிடுமோ என்று பயந்தேன். கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் என் கபாலத்தைத் திறந்து வெளிச்சம் பாய்ச்சியது போலிருந்தது.

நிக்ஸன் இந்தோனேசியாவைப் பறித்து பக்கெட்டில் போட்டுவிட்டு, இதை உலகவங்கியிடம் கொடுத்துவிடு. அங்கிருந்து ஏதாவது கறக்கமுடிகிறதா என்று பார்ப்போம் என்று சொன்னது. அப்போது இருளில் இருந்து பாய்ந்து வந்த பாவைச் சித்திரத்தில் பிரபலமான பாண்டுங் அரசியல்வாதியின் பெயர் எழுதப்பட்டிருந்தது.

இந்த பொம்மை பாய்ந்து வந்து நிறுத்து இந்தோனேசியா சுதந்திரநாடு என்று முழங்கியதும் பார்வையாளர் பக்கமிருந்து கரவொலி எழுந்தது.

அமெரிக்கக் கொடி வைத்திருந்த பொம்மை இந்தோனேசியாவின் நெஞ்சில் ஈட்டியைப்போல குத்தியது. இந்தோனேசியா மரணமடைந்தது. பார்வையாளர்கள் ஆத்திரத்தில் பல்லைக் கடித்தார்கள். கைகளை உயர்த்தி ஆட்டினார்கள். நிக்ஸனும், பக்கெட்காரனும் பார்வையாளர்களைப் பார்த்தபடி நின்றார்கள். பின் குனிந்து வணங்கி விடைபெற்றார்கள்.

நான் உடனே போய்விடுவது நல்லது என்று நினைக்கிறேன் என்று ராஸியிடம் சொன்னேன்.

அவன் ஆதரவாக என் தோளில் கையைப் போட்டு, ஒன்றும் பயப்பட வேண்டாம். இது உங்களைத் தாக்குவதற்காகச் சொல்லப்பட்டதல்ல. அப்படியில்லை என்று நினைக்கிறேன் என்றான்.

அங்கிருந்து நாங்கள் எல்லோரும் டீக்கடைக்குச் சென்றோம். போகிற வழியில் இன்று நிக்ஸன், உலகவங்கி கூத்து தங்களுக்குத் தெரியாது என்று சொன்னார்கள். உங்களுக்குத் தெரியுமா? இந்தப் பாவைக்கூத்துக் கலைஞர்கள் எப்போது என்ன செய்வார்கள் என்று எதிர்பார்க்கவே முடியாது என்றார்கள்.

நான் சத்தமாக ஒருவேளை என்னைக் கௌரவிப்பதற்காக நிகழ்த்தியிருப்பார்களோ என்றேன். ஒருவன் பலமாகச் சிரித்து விட்டு உனக்கு ரெம்பத்தான் திமிர் என்றான். இன்னொருவன் செல்லமாக முதுகில் தட்டி அமெரிக்கர்களுக்கே உரியதுதானே என்றான்.

எனக்குப் பின்னால் இருந்தவன் இந்தோனேசியர்கள் அரசியல் உணர்வுள்ளவர்கள். உங்களைப்போன்ற அமெரிக்கர்கள் இந்த நிகழ்ச்சிகளுக்கு வரக்கூடாது என்றான்.

எனக்கு எதிரில் இருந்த பட்டம் பெற்ற அழகான பெண் நீங்கள் உலகவங்கிக்காகத்தானே வேலை செய்கிறீர்கள் இல்லையா? என்று கேட்டாள்.

நான் பதிலாக ஆம் உலகவங்கிக்கும், ஆசிய வளர்ச்சி வங்கிக்கும்தான் சேவை செய்கிறேன் என்றேன்.

எல்லாம் ஒன்றுதான். இன்றைய கூத்தில் சொன்னதுபோல அமெரிக்கா இந்தோனேசியாவையும், மற்ற நாடுகளையும் இப்படித்தானே ஒரு கொத்து என்றபடி வார்த்தை கிடைக்காமல் இழுத்தாள்.

பக்கத்திலிருந்து ஒருவன் திராட்சை என்றான்.

ரொம்பச் சரி. கொத்து திராட்சையைப்போல வேண்டியதை எடுத்துக்கொள்ளலாம். இந்தா இங்கிலாந்தை வைத்துக் கொள். சைனாவை விழுங்கு. இந்தோனேசியாவைத் தூக்கி வீசு.

அப்புறம் நீங்கள் எங்கள் எண்ணெய் அனைத்தையும் எடுத்துக் கொள்வீர்கள்.

என்னைத் தற்காக்க முயன்றேன். ஆனால் அதற்குச் சாத்தியம் கிடைக்கவில்லை. நான் இந்த நகரத்திற்கு வந்து, இங்கே நடந்த அமெரிக்க எதிர்ப்பு நாடகத்தையும், அதிலும் நான் தாக்கப்படலாம் என்ற நிலையில் பார்த்திருக்கிறேன் என்பதற்காகப் பெருமையடைந்தேன். என் குழுவைச் சேர்ந்த யாரும் பாஷாவைக்

கற்றுக்கொள்ளவோ, இவர்கள் கலாச்சாரத்தைத் தெரிந்து கொள்ளவோ அக்கறை காட்டாத நிலையில் நான் ஒருவனே இவற்றிற்கெல்லாம் துணிந்தவன் என்று சொல்ல விரும்பினேன். என்னை அவர்கள் அங்கீகரிக்க வேண்டுமென நினைத்தேன். ஆனால் அதைவிட முக்கியம் மேலும் சிலவற்றைத் தெரிந்துகொள்வது தான். இதில் ஏன் வியட்நாம் தவிர மற்றதெல்லாம் இஸ்லாமிய நாடுகளையே சமிக்ஞை காட்டினாரே ஏன் என்று கேட்டேன்.

அதுதானே உங்கள் திட்டம் என்று சிரித்தபடி கூறினாள் பட்டதாரிப் பெண்.

அது ஒரு பிடிமானத்திற்காக, காலூன்றுவதற்கான இடம் என்றான் ஒருவன். இன்னொருவன் நாஜிகளுக்கு ஹாலந்தைப் போல என்று எடுத்துக் கொடுத்தான்.

மெய்யான இலக்கு முஸ்லீம் உலகம்தான் என்று அந்தப் பெண் தொடர்ந்தாள்.

இனியும் பதில் சொல்லாமல் இருக்கக்கூடாது என்பதற்காக நிச்சயமாக. அமெரிக்கா ஒரு முஸ்லீம் எதிர்ப்பு நாடு என்று சொல்லப்படுவதை நீங்கள் நம்பக்கூடாது என்றேன்.

அதெப்படி முடியும்? இப்போதிருந்து உங்கள் சொந்த வரலாற்றாளர்களின் புத்தகங்களைப் படிக்க வேண்டும். டாய்ன்பீ என்ற பிரிட்டிஷார். 1950களுக்குப் பின்னர் நடக்க உள்ள போர் கம்யூனிஸ்டுகளுக்கும், முதலாளிகளுக்குமல்ல. முஸ்லீம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும்தான் என்று சரியாகவே முன்னுரைத்திருக்கிறார் என்றாள்.

ஆர்னோல்டு டாய்ன்பீ அப்படி சொல்லியிருக்கிறாரா? என்று அதிர்ச்சியுடன் கேட்டேன்.

ஆம் படித்துப் பார் சிவிலிசேசன் ஆன் ட்ரையல் மற்றும் தி வோர்ல்டு அண்ட் வெஸ்ட் நூல்களை.

அது சரி, கிறிஸ்த்தவர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இடையில் ஏன் இப்படி ஒரு பகைமை என்று நான் கேட்டேன்.

ஏனென்றால் நான் செவிடன் என்பதுபோல உரத்த குரலில் இருந்தது அவள் தொனி. மேற்குலகின் குறிப்பாக அதற்குத் தலைமை வகிக்கும் அமெரிக்கா மொத்த உலகத்தையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர உறுதிபூண்டுள்ளது. உலக வரலாற்றில் தானொரு மகத்தான பேரரசாக ஆக விரும்புகிறது. அது கிட்டத்தட்ட வெற்றி பெற்றுவிட்டது. சோவியத்யூனியன் தன்பாதையில் சென்று கொண்டிருக்கிறது. ஆனால் நீண்ட நாட்களுக்கு அதனால் தாக்குப்பிடிக்க முடியாது. சோவியத்

யூனியனுக்கு ஒரு மதம் இல்லை. கடவுள் நம்பிக்கையில்லை, உறுதியான பின்புலம் இல்லை. மனிதனைவிட மேலான சக்தி மீது ஒரு நம்பிக்கைத் தேவை என்பதை வரலாறு வலியுறுத்துகிறது. இவற்றைக் கூர்ந்து பார்த்திருக்கிறார் டாய்ன்பீ முஸ்லீம்களாகிய எங்களுக்கு உண்டு. இந்த உலகில் மற்றெவரைக் காட்டிலும் கிறிஸ்தவர்களுக்கு இருப்பதைவிட அதிகமான நம்பிக்கை எங்களுக்கு உண்டு. எங்களை இன்னும் வலிமையாக்கிக் கொள்வதற்காகக் காத்திருக்கிறோம்.

எங்களுக்கான நேரம் வரும்போது. பாம்புபோல் திடீரெனத் தாக்குவோம் என்று எங்கள் உரையாடலுக்குள் புகுந்த மற்றொருவன் சொன்னான்.

அந்தப் பட்டதாரி என்னைக் கூர்ந்து நோக்கினாள். பேராசை வெறியை, பெரும் சுயநலமியாக இருப்பதைக் கைவிடுங்கள். இந்த உலகில் மற்ற யாருக்கும் இருப்பதைவிட பெரிய மாளிகைவீடுகள், ஆர்ப்பாட்டமான அலங்காரக் கடைகள் உங்களுக்குத் தேவைப்படுகின்றன. என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். மக்கள் ஒருபுறம் பசியாலும், தாகத்தாலும் செத்துக்கொண்டிருக்கும்போது புதிய மோஸ்தரை பரப்புவதற்காக நவநாகரீகப் பருவ இதழ்கள் நடத்திக்கொண்டிருக்கிறீர்கள். நாங்கள் வறுமையில் மூழ்குகையில் எழுப்பும் அபயக் குரலுக்கு உங்களால் காது கொடுக்க முடியவில்லை. இந்த உதவிகோரும் குரல்களை கம்யூனிஸ்ட்களின், புரட்சிக்காரர்களின் அபாயக்குரல் என்று முத்திரை குத்துகிறீர்கள். வாழ்வின் அடித்தட்டில் இருக்கும் ஏழைமக்களை மேலும் மோசமான நிலைக்குள் தள்ளுவதற்குப் பதிலாக இதயத்தைத் திறந்துபார்க்க வேண்டும். இன்னும் காலம் கடந்து விடவில்லை. இப்போதாவது கண்திறந்து பார்க்காமல் போவீர்கள் என்றால் பயங்கரமான ஆபத்தைச் சந்திக்கவேண்டி வரும்.

அன்று நடந்த பாவைக்கூத்தில் அமெரிக்காவிற்கு எதிராகக் குரல் எழுப்பிய உள்ளூர் அரசியல்வாதி யாரோ அடையாளம் தெரியாத நபர்களால் வாகனம் ஏற்றிக் கொல்லப்பட்டார்.

அத்தியாயம் - 8

ஏசுவின் இன்னொரு தோற்றம்



தாலங் நினைவுகள் என்னுள் ஆழப் பதிந்துவிட்டன. அதைபோலவே ஆங்கிலப் பட்டதாரியின் வார்த்தைகளும். அந்தப் பாண்டுங் இரவு எனது சிந்தனைகளையும் உணர்வுகளையும் இன்னொரு கட்டத்திற்கு நகர்த்திவிட்டது. நாங்கள் இந்தோனேசியாவில் செய்துகொண்டிருக்கும் வேலைகளை ஒட்டு மொத்தமாகப் புறக்கணிக்காமல் வெறுமனே உணர்வு வயப்பட்டு எதிர்வினையாற்றிக் கொண்டிருந்தேன். தவிப்பான மனநிலைகளின் போது வழக்கமாக ஏதேனும் காரண காரியங்களை வரலாற்று உதாரணங்களை, உயிரியல் தேவையைத் தேடிக்கண்டுபிடித்து மனதைச் சமாதானப்படுத்திக் கொள்வேன். எய்னார், சார்லி போன்ற மற்றவர்கள் சொல்வார்களே ''என்னையும் குடும்பத்தையும் காப்பாற்றிக்கொள்ள வேறு என்ன செய்வது'' என்று, அதைப்போலவே என்னைச் சமாதானப்படுத்திக்கொள்வதே என்னுடைய இயல்பாகவும் இருந்து வந்தது.

தேநீர் கடையில் நடந்த விவாதம் பிரச்சனையின் இன்னொரு பக்கத்தைப் பார்க்கும்படி என் கண்களைத் திறந்துவிட்டது. தன்னலம் சார்ந்த வெளியுறவுக் கொள்கை வருங்காலத் தலைமுறைக்கும், யாருக்கும் உதவிகரமாகவோ, அவர்களைப் பாதுகாப்பானதாகவோ இருக்காது என்பதைப் புரிந்துகொண்டேன். இக்குறுகிய கண்ணோட்டம் ஆண்டறிக்கை தயாரிக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும், தேர்தல் சூதுஆடும் அரசியல்வாதிகளுக்கும், வெளியுறவுக்கொள்கை வகுப்பாளர்களுக்கும் மட்டுமே பயன்தரும்.

பொருளாதார கணிப்பிற்குத் தேவைப்படும் தகவல்களுக்காக அவ்வப்போது ஜாகர்த்தா சென்று வந்தேன். எனது தனிமையை எண்ணங்களை வளர்த்தெடுக்கவும், பத்திரிகைகளில் எழுதவும் பயன்படுத்திக்கொண்டேன். நகரத்தெருக்களில் சுற்றித்திரிந்தேன்.

பிச்சைக்காரர்களுக்குப் பணம் அளித்தேன். தொழு நோயாளிகளிடமும், விபச்சாரிகளிடமும் தெருவோரப் பிள்ளை கள்டமும் பேச்சுக்கொடுத்தேன்.

அந்நிய உதவிகள் பற்றிய எண்ணம் என்னை ஆக்கிரமித்தது. வளர்ச்சியற்ற நாடுகளின் வறுமையைப்போக்க பெரும் பன்னாட்டு நிறுவனங்கள் உதவமுடியும் என்று கருதினேன். பின்னர் எப்போது அந்நிய உதவி நியாயமாகவும், கைகொடுக்கவும் இருக்கிறது. எப்போது சுயநல நோக்குடனும் பேராசையுடனும் இருக்கிறது என்று பட்டியலிட்டுப் பார்த்தேன். உண்மையில் தன்னலமில்லாமல் தான் இருக்கிறதா அல்லது மாற்றப்படவேண்டிய நிலையில் இருக்கிறதா என்று கேள்வி எழுப்பிப் பார்த்தேன். என்னுடையதைப் போன்ற நாடுகள் வறுமையைப் போக்க, ஏழ்மையை விரட்டத் தீர்மானகரமான முடிவுகள் எடுத்தாகவேண்டும். ஆனால் பெரும்பாலும் அப்படியில்லை. அதனுடைய முதன்மையான நோக்கமே அநாவசியத் தலையீடுதான்.

மீண்டும் தொடங்கிய கேள்விக்கு வந்தேன். அந்நிய உதவியின் நோக்கம் ஏகாதிபத்தியமாவதற்குத்தான் என்றால் அதில் என்ன தவறு? உலகின் மற்ற நாடுகளின்மீது ஆதிக்கம் செலுத்தும் அரசியல் அமைப்புமுறையைக் கேள்விக்கிடமின்றி உறுதிபட நம்புகிற சார்லி போன்றவர்கள் மீது எனக்குப் பொறாமை தோன்றியது. ஒரு வரையறைக்கு உட்பட்ட இந்த உலகின் இயற்கையாற்றல் அமெரிக்காவின் ஊதாரித்தனமான வாழ்க்கைக்கு ஈடுகொடுக்குமா என்ற சந்தேகம் எழுந்தது. தன்னாட்டிலேயே ஒரு பகுதியில் கோடிக்கணக்கான மக்களை வறுமையில் ஆழ்த்திவிட்டு இந்த ஆடம்பரம் தேவைதானா? பிறநாடுகளைச் சேர்ந்த மக்கள் அமெரிக்காவின் ஆடம்பரமான வாழ்க்கைமுறையைத்தான் பெரிதும் விரும்புகிறார்கள். அதிலொன்றும் எனக்குச் சந்தேகமில்லை. அரசாங்கப் புள்ளிவிபரங்கள் சொல்கிறபடி இங்கு நடக்கும் கொலை, கொள்ளை, மனஅழுத்தம், போதைப்பழக்கம், விவாகரத்து, சமூகக்குற்றங்கள் அனைத்தையும் பார்த்தால்; வரலாறு நெடுகிலும் இதுவரை காணாத இத்தனை செல்வவளம் பெற்றும் அமெரிக்க மக்கள் ஒரு நிறைவற்ற வாழ்க்கை வாழ்வதைத்தானே உறுதிப்படுத்துகிறது. அப்படி இருந்தும் மற்றவர்கள் ஏன் எங்கள் வாழ்க்கைமுறையைப் பின்பற்றத் துடிக்கவேண்டும்?

கிளாடின் எனக்கு அளித்த எச்சரிக்கையில் இதையெல்லாம் சொல்லவில்லையே. அவள் என்னிடம் சொல்ல முயற்சித்ததுதான் என்ன? அறிவார்த்தமான பகுதியை ஒதுக்கிவைத்துப் பார்த்தால்

என்னுடைய வெகுளித்தனமான நாட்கள் கடந்துவிட்டன என்பதை நான் வருத்தத்துடன் தெளிவுபடுத்திக் கொண்டேன். எனது எண்ணங்களைப் பத்திரிகையில் பின்வருமாறு எழுதினேன்.

அமெரிக்காவில் குற்றமற்ற ஒருவர் உண்டா? எங்கள் வாழ்க்கைக்காக வளர்ச்சியுறாத நாடுகளைச் சுரண்டிக்குவித்த பிரமிடைச் சார்ந்துதானே நாங்கள் அனைவரும் இருக்கிறோம். இந்தோனேசியா போன்ற நாடுகளின் இயற்கைவளங்கள், மிகக் குறைந்தஊதியம் இவைதானே எங்கள் செல்வத்தின் ஆதாரம். நாங்கள் குறைந்த அளவே திருப்பிக்கொடுக்கிறோம். அந்நிய உதவிக்காக அளிக்கப்படும் கடன்கள் இன்று குழந்தைகளாக இருப்பவர்களிலிருந்து அவர்களது பேரப்பிள்ளைகள் வரை பலதலைமுறைகளை எங்கள் பிடியில் வைத்திருக்க உத்திரவாதப் படுத்துகிறது. கடன் பெறுகிற நாட்டுமக்கள் நாட்டின் இயற்கை ஆற்றல் அனைத்தையும் எங்களுக்கு வழங்கிவிட்டு தமது கல்வி சுகாதாரம் போன்ற மக்கள் நலத்திட்டங்களை மறந்துவிட வேண்டியதுதான். கொடுத்த கடனில் பெரும்பகுதிப் பணம் மின்சாரத்திட்டங்கள், அணைகள், நெடுஞ்சாலைகள், விமானநிலையம் போன்ற பெருந்திட்டங்களுக்காக மீண்டும் எங்கள் பன்னாட்டு நிறுவனங்களின் கைகளுக்கே வந்துவிடும். இந்த உண்மை கடன் விதிகளுக்குள் அடங்காது என்பதால் அமெரிக்கர்கள் நிறையப்பேருக்குத் தெரியாது. இந்த உண்மை தெரியாது என்ற வகையில் அமெரிக்கக் குடிமக்கள் அப்பாவிகள்தான்.

சொல்லப்படாதவர்களைக் கணக்கெடுத்தால் அதில் நானும் ஒருவன் என்ற உண்மை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

புனிதப்போர் எனப்படும் கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதில்லைதான். ஆனால் தொடர்ந்து அதைப்பற்றி யோசிக்கும்போது சாத்தியமாகும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அந்தப் போர் முஸ்லீம்களுக்கும் கிறிஸ்த்தவர்களுக்கும் என்பதை விட பணக்காரநாடுகளுக்கும், ஏழைநாடுகளுக்கும் இடையிலானதாக இருக்கும். ஏழைநாடுகளில் முன்னணி வகிப்பது முஸ்லீம்நாடுகள் என்பதால் அவர்களுக்கு எதிரானதாகத் தோன்றலாம். வளர்ந்தநாடுகளைச் சேர்ந்தவர்கள் இயற்கைவளங்களைப் பயன்படுத்துபவர்களாகவும், ஏழைநாடுகள் அவற்றை வழங்குகிற நிலையிலும் இருக்கின்றனர். மீண்டும் பழைய காலனிய வர்த்தகமுறைதான் நடைமுறைக்கு வருகிறது. குறைவான இயற்கைவளம் கொண்டிருந்தாலும் அதிகாரம் இருந்தால் அதிக வளமுடைய நாட்டில் இருந்து சுரண்டுவது எளிதான ஒன்றுதான்.

என்னிடம் டாய்ன்பீயின் நூல் கையில் இல்லை. ஆனால் தொடர்ந்து சுரண்டப்படுபவர்கள் ஒருநாள் அதற்கு எதிராக நிற்பார்கள் என்பதை வரலாறு எனக்கு உணர்த்தியுள்ளது. உதாரணம் காட்ட நான் மீண்டும் அமெரிக்கப் புரட்சிக்கும் டாம்பெய்னுக்கும் தான் போகவேண்டியுள்ளது. இங்கிலாந்து மீது வரி விதிக்கும்போது தாங்கள் பிரான்சிடமிருந்தும் (செவ்) இந்தியர்களிடமிருந்தும் அமெரிக்கர்களைப் பாதுகாக்க ராணுவத்தை அளித்திருக்கிறோம். எனவே வரி தவிர்க்கமுடியாதது என்று நியாயப்படுத்தினார்கள். காலனியவாதிகள் எப்போதும் தங்களுக்கான நியாயம் ஒன்றை வைத்திருப்பார்கள்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்திற்கும், அதன் உயர்குடி மனப்பான்மைக்கும் நேர்எதிராக டாம்பெய்ன் தனது காமன் சென்ஸ் என்ற நூலில் தனது நாட்டுமக்களுக்கு முன்வைத்த ஆன்மா என்ற கருத்தைத்தான் எனது இளம் இந்தோனேசிய நண்பர்கள் சிந்தனை, உயர்ந்தசக்தி அளிக்கும் நீதியின் பால் கொண்டுள்ள நம்பிக்கை, சுதந்திரமான மதம், சமத்துவம் என்ற வார்த்தைகளில் கூறுகிறார்கள். இஸ்லாம் கூறுவதும் இதைத்தான். வளர்ந்தநாடுகள் மற்ற நாடுகளை அடக்கியாள்வதற்கு உரிமையில்லை என்ற மன ஆற்றலை உயர்சக்தி மீது கொண்டுள்ள நம்பிக்கை அளிக்கிறது. காலனியாதிக்கத்திற்கு எதிராகப் போராடிய அமெரிக்கர்களைப்போல, பிரிட்டிஷார் 1770களில் போராடியதைப்போல, இன்று முஸ்லீம்கள் தங்கள் உரிமைக்காகப் போராடும்போது அதை அச்சுறுத்தல் என்கிறோம் அதை பயங்கரவாதம் என்று முத்திரை குத்துகிறோம். வரலாறு மீண்டும் திரும்புகிறது.

அமெரிக்காவும் அதன் கூட்டணி நாடுகளும் காலனிய போருக்காகச் செலவிடும் தொகையை ஏன் மூன்றாம்உலக நாட்டு மக்களின் கல்விக்காவும், மருத்துவத்திற்காகவும் செலவிடக்கூடாது. இயற்கை ஆதாரங்களான, நீர்ப்படுகைகள், காடுகள், தூயக்காற்று இவை மனித ஆன்மாவிற்கும், உடலுக்கும் அளிக்கும் ஊக்கத்திறனைப் பாதுகாக்காமல் போனால் நாளைய தலைமுறை தனது வாழ்வாதாரத்திற்கு எதை நம்பி இருப்பது. அமெரிக்காவை உருவாக்கிய முன்னோடிகள் கண்ட கனவாகிய வாழ்வுரிமை, ஜனநாயகம் சமஉரிமை அனைத்தும் தன் நாட்டிற்கு மட்டுமே சொந்தம் என்று கருதியிருக்கமாட்டார்கள். ஏகாதிபத்திய மதிப்பீடுகளுக்கு எதிராக எம் முன்னோர்கள் பின்பற்றிய அதே போர்த்தந்திரங்களை மீண்டும் நாம் ஏன் பின்பற்றக் கூடாது?

இந்தோனேசியாவில் இருந்து கிளம்புவதற்கு முந்தியநாள் இரவு கனவு கலைந்து, எழுந்து படுக்கையில் அமர்ந்து விளக்கைப் போட்டேன். என் அறையில் யாரோ இருப்பதுபோன்ற உணர்வு. பிரபலமான அந்த இண்டர் கான்டினென்டல் விடுதி அறையைச் சுற்றிலும் நோட்டம் விட்டேன். சுவற்றில் தொங்கும் திரைசீலையை விலக்கிப் பார்த்தேன். சட்டகத்தினுள் உள்ள பாத்திக் ஓவியத்தைக் கூர்ந்து பார்த்தேன். கனவு மீண்டும் தொடர்ந்தது.

என் எதிரில் ஏசுகிறிஸ்து தோன்றினார். நான் சிறுவனாக இருந்தபோது அன்றாடம் என்னுடன் பேசிய அந்த ஏசு போலவே இருந்தார். ஒவ்வொரு நாளும் வழக்கமான பிரார்த்தனை முடிந்த பின் எனக்குத் தோன்றுவதை அவருடன் பகிர்ந்துகொள்வேன். அதே ஏசுதான். ஆனால் சிவந்தநிற சருமம் இல்லை. சுருண்ட முடி, கறுத்தநிறம். அவர் முன்புறம் சரிந்து காட்டினார். தோளில் என்னவோ இருந்தது. நான் எதிர்பார்த்தது சிலுவை. ஆனால் அதற்குப் பதிலாக அங்கே இருந்தது ஒரு காரின் அச்சு விட்டம். (ஆக்சில் பீம்) அச்சு விட்டமும் தலையில் கார்ச்சக்கர ரிம்மும் பொருத்தப்பட்டிருந்தது. நெற்றியில் இருந்து ரத்தம் சொட்டுவதற்குப் பதிலாக கறுத்த கிரீஸ் வழிந்தது. நேருக்கு நேராக நின்று என் கண்களை ஊடுறுவிப் பார்த்தார். பின் சொன்னார் இப்போது இங்கே வந்திருப்பதால் உனக்கு வேறுவிதமாகத் தோன்றுகிறது இல்லையா? ஆம் அது ஏன்? ஏனென்றால் உலகம் மாறிவிட்டது.

கடிகாரத்தைப் பார்த்தேன். விடியப்போகிற நேரம். அப்போதுதான் தெரிந்தது தான் இரவெல்லாம் தூங்கவே இல்லை. உடையணிந்து ஆளரவமற்ற நெடிய விதானத்தைக் கடந்து சென்றேன். தோட்டப்பக்கமும், நீச்சல்குளத்தின் பக்கமும் உலாவினேன். நிலா வெளிச்சம் குளுமையாகப் பரவி இருந்தது. காற்றில் இனிய ஆர்ச்சிட் மலர்களின் நறுமணம் நிறைந்திருந்தது. வராந்தா நாற்காலியில் அமர்ந்தேன். என்னை நானே கேட்டுகொண்டேன். இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறேன். என் வாழ்வில் நிகழ்ந்த எதேச்சைகள் ஏன் என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்தது. என் வாழ்க்கை மாறியிருக்கிறது என்பது மட்டும் தெரிகிறது. ஆனால் இப்படித் தலைகீழாக மாற்றியது எது?

நான் நாட்டிற்குத் திரும்புகிற வழியில் மீண்டும் இளைஞர் நோக்கத்தில் ஆன்னைப் பாரீசில் சந்தித்தேன். ஓய்விற்காகப் பிரான்சிற்கு வந்த இடத்தில்கூட இருவரும் ஓயாமல் சண்டையிட்டோம். இருந்தாலும் அங்கே அழகான தருணங்கள்

வாய்க்கத்தான் செய்தன. ஒருவர்மீது ஒருவர் மாறி மாறி வெறுப்பையும், கோபத்தையும் உமிழ்ந்திருக்கிறோம் என்பதை உணர்ந்தோம். நிறைய மனத்தடைகள் இருந்ததால் அவளிடம் என்னால் ஒன்றும் சொல்லமுடியவில்லை. என்னால் எல்லாவற்றையும் மனம் விட்டு ஒருத்தியிடம் பேசமுடியுமென்றால் அது கிளாடின்தான். அவளையே நினைத்துக்கொண்டிருந்தேன். இருவரும் பாஸ்டனில் இறங்கி அவரவர் வீட்டிற்குத் தனித் தனியாகப் போனோம்.

அத்தியாயம் - 9

தேடிவந்த அதிர்ஷ்டம்

அங்கு வந்ததும் காலையில் முதல் வேலையாக எனது மெய்ன் தலைமை அலுவலகத்திற்குச் சென்றேன். அங்கேதான் மெய்யான இந்தோனேசியா சோதனை காத்திருந்தது. அலுவலக மாடிக்குப் போகும்போதுதான் மெய்னின் தலைமையதிகாரியான மெக்ஹால், ஈனாருக்குப் பதவிஉயர்வு கொடுத்து போர்ட்லாண்ட் ஒகின் அலுவலகத்திற்கு தலைமைஅதிகாரி ஆக்கியிருப்பதாகச் சக ஊழியர்கள் மூலம் கேள்விப்பட்டேன். ஆக இப்போது எனக்கு நேரடி மேலதிகாரி ஈனார் அல்ல புர்னோ ஜம்போட்டி.

ஜம்போட்டி கடுமையான பேர்வழி. தனக்குச் சவால் விடுகிற யாரையும் விழத்தட்டுவதில் வல்லவர். தலைமுடி வெள்ளையாக இருப்பதால் வெள்ளிநரி என்ற பட்டப்பெயர் உண்டு. கேரி கிராண்டி போன்ற கம்பீரமான தோற்றம் உடையவர். வணிக, நிர்வாகத்திலும், பொறியியலிலும் முதுகலைப் பட்டம் பெற்றவர். மெய்ன் மேற்கொள்ளும் திட்டங்கள் அனைத்தின் பொருளாதார அம்சங்களையும், மின்திட்ட விபரங்களையும் அத்துறை சார்ந்தவர்கள் சொல்லும்போது எளிதில் புரிந்துகொள்வார். வயதாகிக்கொண்டிருக்கும் முன்னோடி ஜேக்ட்டாபர் ஓய்வுபெறும்போது அந்தப் பதவியை பெறுவதற்கான வாய்ப்புள்ளவர். மெய்னின் மற்ற ஊழியர்களைப்போலவே எனக்கும் அவர் பெயரில் ஒரு பயம் ஏற்பட்டிருந்தது.

மதியஉணவிற்கு முன்னர் புருனோ அலுவலகத்தில் இருந்து அழைப்பு வந்தது. இந்தோனேசிய குறித்து மேலோட்டமாகப் பேசினோம். அவர் சொன்ன ஒரு வார்த்தை என்னை இருக்கையின் முனைக்கு இழுத்தது.

நான் ஹாவர்டு பார்க்கரை தீய்க்கப் (வேலையிலிருந்து நிறுத்தப்) போகிறேன். அந்த விபரங்கள் வேண்டாம். ஒன்று சொல்வேன். அவன் எதார்த்ததைப் புரிந்துகொள்வதில்லை அவருடைய மகிழ்ச்சிக்குக் காரணம் தெரியவில்லை.

மேசைமீதிருந்த காகிதக்கட்டின் மேல்விரல்கள் தாளமிட்டுக் கொண்டிருந்தன. ஆண்டிற்கு எட்டே சதவீத வளர்ச்சி இதுதான் அவனுடைய கணிப்பு. இந்தோனேசியா போன்ற வளம் மிகுந்த நாட்டில் இவ்வளவுதான் முடியும் என்றால் உன்னால் நம்ப முடிகிறதா

அவரது புன்னகை மங்க பார்வை என் கண்களில் நிலை குத்தியது. உன்னுடைய பொருளாதார கணிப்பு நம்முடைய இலக்கிற்குப் பொருத்தி வருகிறது. மின்வளர்ச்சி 20 சதவீதம் வரை இருந்ததால்தான் நியாயப்படும் என்கிறாய். அது சரியா?

ஆம் சரிதான்

எழுந்து நின்று எனக்குக் கை கொடுத்தார். வாழ்த்துக்கள். இந்த நிமிடத்தில் பதவிஉயர்வு பெறுகிறாய்.

நான் இதை உடனடியாக மெய்ன் சகாக்களுடன் கொண்டாடியாக வேண்டும். அல்லது எனக்கு நானாவது ஒரு விருந்தளித்துக்கொள்ள வேண்டும். அந்த நொடியில் என் மனம் கிளாடினைத் தேடியது. என்னுடைய பதவிஉயர்வையும் சமீபத்திய அனுபவங்களையும் சொல்வதற்குத் துடித்தேன். வெளிநாட்டில் இருந்துகொண்டு அவளுக்குத் தொலைபேசக்கூடாது என்று எச்சரித்திருந்தாள், அதனால் செய்யவில்லை. இப்போது அவள் எண் துண்டிக்கப்பட்டுள்ளது தெரிந்ததும் சப்பென்று ஆகிவிட்டது. அவளைப் பார்க்க வீட்டிற்குப் போனேன்.

அந்த அடுக்ககத்தில் இளம் தம்பதியர் உலவிக் கொண்டிருந்தனர். அது மதியநேரமாக இருந்தாலும் படுக்கையிலிருந்து எழுப்பிவிட்டேனோ? இல்லை. கிளாடின் பற்றிக் கொஞ்சம்கூடத் தெரியவில்லை. அவளுக்கு ஒன்றுவிட்ட சகோதரன் என்று சொல்லி வீட்டு முகவரிடம் கிளாடின் பற்றிக் கேட்டேன். அந்தப்பெயரில் யாரும் வீடு வாடகைக்கு எடுக்கவில்லை என்ற பதிலைத்தான் கோப்புகள் மூலம் பெறமுடிந்தது. கடைசியாக அந்த வீடு வாடகைக்கு விடப்பட்டது ஒரு ஆணுக்கு, ஆனால் அந்த விபரம் பிறருக்குத் தெரிவிக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. எங்கள் அலுவலகத்திலும் அவளைப்பற்றியத் தகவலைப்பெற முடியவில்லை. அவள் சிறப்பு ஆலோசகராக இருக்கலாம் என்று கூறினாலும், மேல்விபரங்களை நான் நுணுகிப் பார்க்க அனுமதியில்லை.

பிற்பகல் ஆயிற்று, உணர்வுகள் மரத்துத் தளர்ந்து போயிருந்தேன். மோசத்திலும் மோசமாக பயணத்தின் சுழற் திருகல் (ஜெட்லாக்) ஏற்பட்டுவிட்டது. என் வெறுமையான அடுக்கக வீட்டிற்கு வந்தேன். மீளமுடியாத தனிமையுணர்வு என்னைப்

புரட்டி எடுத்தது. பதவிஉயர்வு அர்த்தமற்றதாகத் தோன்றியது. என் விருப்பங்களுக்கு அடையாளமே இல்லாததுபோல் இருந்தது. படுக்கையில் சரிந்தேன். அவநம்பிக்கை என்னை ஆக்கிரமித்தது. கிளாடின் ஆட்டத்திற்குப் பயன்பட்டு இப்போது தூக்கியெறியப்பட்ட வெற்றுச்சீட்டு ஆகிவிட்டேனா? வேதனைகளுக்கு என்னில் இடம் தரக்கூடாது. அனைத்து உணர்வுகளையும் கட்டுப்படுத்திக் கொண்டேன். படுக்கையில் கிடந்தபடி வெற்றுச் சுவரை மணிக்கணக்காக வெறித்துக்கொண்டிருந்தேன்.

இறுதியாக ஒரு வழியாக என்னைத் தயார்ப்படுத்திக்கொண்டு ஒரு பீரை விழுங்கித் தீர்த்தேன். காலி போத்தலை மேசை மீது போட்டு நொறுக்கினேன். பின்னர் தூரத்தில் இருக்கும் தெருவையே பார்த்துக்கொண்டிருந்தேன். அவள் என்னை நோக்கி வருவதுபோல் இருந்தது. கதவுப்பக்கம் பார்த்தேன். வரவில்லை மீண்டும் ஜன்னல் வழியாகத் தெருவைப் பார்த்தேன். ஒரு பெண் நெருங்கி வந்தாள். பார்க்கக் கவர்ச்சிகரமாக இருந்தாள். அவளது நடை கிளாடினை நினைவூட்டியது. ஆனால் அது கிளாடின் அல்ல. என் மனம் துவண்டது. என்னுள் இருந்த கோபம் தணிந்து பயமானது.

கிளாடின் உருவம் பளிச்சிட்டது. பின் அது குண்டுமழையால் துளைக்கப்பட்டுக் கலைந்தது. தலையை உலுக்கி நினைவுகளில் இருந்து மீண்டேன். இரண்டு வேலியம் மாத்திரையைப் போட்டுக் கொண்டு தூங்குவதற்காகக் குடித்தேன்.

மறுநாள் காலையில் மெய்ன் அலுவலகத்திலிருந்து வந்து ஊழியன் என்னை ஆழ்ந்த நினைவின்மையில் இருந்து எழுப்பினான். எனக்கு ஓய்வு தேவை என்பதைப் புரிந்து கொண்டவன், ஆனால் மதியம் கண்டிப்பாக அலுவலகம் வரவேண்டுமென்று அவசரப்படுத்தினான்.

ஒரு நல்ல செய்தி, உனக்குள் வைத்துக்கொண்டால் நல்லது.

அவன் கோரிக்கையை ஏற்றேன். புருனோ சொன்னபடியே பதவிஉயர்வு கொடுத்து ஹாவர்டின் பழைய வேலைக்கு நியமித்தது மட்டுமல்ல. பொருளாதாரத் தலைவர் என்ற தகுதிக்கு உயர்த்தியிருப்பதாகச் சொன்னான். அது எனக்கு ஒரு சின்ன சந்தோசத்தை அளித்தது.

மதியத்திற்குப் பிறகு விடுப்பு எடுத்துக்கொண்டு, சார்லஸ் ஆற்றங்கரையில் பீர் பாட்டிலுடன் உலவிக்கொண்டிருந்தேன். பின் உட்கார்ந்து நீரில் மிதக்கும் படகுகளைப் பார்த்தபடி கடுமையாக மதுத்தொங்கலையும், சுழற்திருகலையும் தணித்துக்கொண்டிருந்தேன். மோர்மினோ சொன்னது சரிதான். கிளாடின் வந்தாள். அவள்

வேலையைச் செய்தாள். அடுத்த வேலையை நிறைவேற்றக் கிளம்பிவிட்டாள். ரகசியத்தைக் காப்பாற்றுமாறு எப்போதும் வலியுறுத்திக்கொண்டே இருந்தாள். மீண்டும் ஒருநாள் என்னை அவள் அழைப்பாள். என்னுடைய ஜெட்லாக்கும், கவலையும் நிதானமாகக் கரைந்தது.

அடுத்த சிலவாரங்களில் கிளாடினைப் பற்றிய நினைவுகளை ஒரு ஒரமாக ஒதுக்கிவைக்க முயன்றேன். இந்தோனேசியப் பொருளாதாரத்தில் ஹாவர்ட் முன்னுரைத்த அளவை உயர்த்தி அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தினேன். எனது மேலதிகாரிகள் காணவிரும்பும் மின்சாரத்தேவையின் வளர்ச்சியை 17 லிருந்து 19 சதவீதம் வரை அடுத்த எட்டு ஆண்டுகளுக்கும் மீதமுள்ள 25 ஆண்டுகளுக்கு சராசரியாக 15 சதவீதமாகவும் உத்தேசத்தைத் தயாரித்திருந்தேன்.

சர்வதேச முகவர்களின் முறைப்படியான கூட்டத்தில் என்னுடைய அறிக்கை முடிவுகளை முன்வைத்தேன். அவர்களது நிபுணர்குழு என்னிடம் விரிவான அளவில், சிறிதும் விட்டுக்கொடுக்காமல் கேள்வி கேட்டுத் துளைத்து எடுத்தார்கள். அதற்காக பள்ளிநாட்களில் போல விலகி ஓடாமல் கலகஉணர்வு மேலோங்க உறுதியான தீர்மானம் எடுத்துக்கொண்டேன். கிளாடின் நினைவுகள் விடாமல் சுழன்றடித்தன. ஆசிய வளர்ச்சி வங்கியின் பொருளாதார நிபுணன் தன் பெயரை தனித்து நிலைநாட்டும் வேகத்தில் பிற்பகல் முழுதும் என்னை வறுத்து எடுத்து விட்டான். பல மாதங்களுக்கு முன்னர் கிளாடின் பேன்கூன் தெருவில் நாங்கள் அமர்ந்திருந்தபோது சொன்ன வார்த்தைகள் என் நினைவிற்கு வந்தன.

இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் என்ன நடக்கும் என்று யாருக்குத் தெரியும். எல்லாம் ஒரு நம்பிக்கைதான். அவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்களோ அதையே நீயும் யூகிக்கிறாய். என்றாள்.

நான் ஒரு தேர்ந்த வல்லுனன் என்று எனக்கு நானே கருதிக் கொண்டேன். மேலும் என்னைவிட இரண்டு மடங்கு வயதில் என் வேலையை மதிப்பிடுபவனைக் காட்டிலும் இரண்டு மடங்கு வாழ்வனுபவங்களை வளரும்நாடுகளில் பெற்றவன், யாருமே போகவிரும்பாத அமேசான் காடுகளிலும், ஜாவாத் தீவுகளிலும் அலைந்து திரிந்தவன், இரண்டு சிறப்பு வகுப்புகளுக்குச் சென்று பொருள் அளவீடுகள் (எக்னோமெட்ரிக்) குறித்த நுணுக்கமான விபரங்களைக் கற்றுக்கொண்டவன் நான் என்பதை நினைவுறுத்திக் கொண்டேன். புள்ளியல் ஆதாரப்பொருள் அளவீட்டின் மீது

நம்பிக்கைக்கொண்ட புதுப்பிறவி நான். உலகவங்கி, போர்டு நிறுவனம் ஆகியவற்றின் முன்னாள் தலைவரும், ஜான் கென்னடியின் ராணுவச் செயலாளருமான ராபர்ட்மெக்நமராவிக்கே அறிக்கை தரும் செல்லக்குட்டி நான். அவர்தான் இங்கே நீண்ட காலத்திற்கு முன்னரே எண்ணிக்கையிலும், சாத்தியக் கோட்பாட்டிலும், கணிதவியல் வடிவங்களிலும் தனக்கான பெயரை உருவாக்கிய துணிச்சல்மிக்க மனிதர் என்று கருதுபவள் நான்.

எனது நேரடித் தலைவரான புருனோவையும், மெக்நமராவையும் என் முன்னோடிகளாகக் கருதியிருந்தேன். குறிப்பாக மெக்கின் பேச்சு, பாவனைகளை நகலெடுக்கவும், புருனோவைப் போல ஆவணப் பையை ஒருபுறம் தொங்கவிட்டுக் கொண்டு நடக்கவும் விரும்பினேன் நான். இப்போது நினைத்துப் பார்த்தால் அதெல்லாம் கூடுதலாகத் தோன்றுகிறது. எனது நிபுணத்துவமும், பயிற்சியும், ஞானமும் அப்படியொன்றும் பிரமாதமானது இல்லை. ஆனால் என் குறைபாடுகளை வாய்ச் சாமர்த்தியத்தால் சமாளித்தேன்.

அதுவும் நல்ல பலனைத்தான் கொடுத்தது. குழுநிபுணர்கள் எனது அறிக்கைகளுக்கு கண்ணை மூடிக்கொண்டு ஒப்புதல் முத்திரை குத்தினார்கள்.

மாதந்தோறும் அடுத்தடுத்து டெஹ்ரான், காரகாஸ், குவாதிமாலா, லண்டன், வியன்னா, வாஷிங்டன் ஆகிய நகரக் கூட்டங்களில் பங்கெடுத்தேன். வளரும்நாடுகளின் ஷா போன்றப் பிரபலத் தலைவர்களை ராபரட் மெக்நமரவுடன் சந்தித்தேன். எனது ஆரம்பப்பள்ளியைப்போல இந்தச் சந்திப்புகளும் ஒரே ஆண்மயமாக இருந்தது. என்னுடைய சமீபத்திய நடவடிக்கைகளால் சர்வதேச முகவர்கள் பிறரது அணுகுமுறையில் தாக்கத்தை உருவாக்க அது எனக்குப் பெற்றுத்தந்த வெற்றியைக் கண்டு பெரிதும் ஆச்சர்யமடைந்தேன்.

முதலில் என் மீது பரவிய புகழ் வெளிச்சத்தால் தலை கனத்துத் திரிந்தேன். ஒரு நாட்டின் மீது கையை அலைத்தது ஒளிசுடரச் செய்யும் மெர்லினாக என்னை நினத்துக்கொண்டேன். நான் கைகாட்டினால் போதும் ஒரு நாட்டில் தொழிற்சாலைகள் பூக்களைப்போல பூத்துக் குலுங்கும் என்று கருதினேன். பின்னர் அப்பிரம்மை அகன்றது. நானும் எனது சகாக்களும் எதற்காக இதைச் செய்கிறோம் என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. முலாம் பூசப்பட்டப் பட்டங்களும், தகுதிகளும் ஜாகர்த்தாவில் நாற்றமெடுத்தச் சாக்கடைக்கு அருகில் மரண வேதனையுடன்

வசிக்கும் ஒரு தொழுநோயாளிக்கு செய்யப்போவது என்ன? நோக்கங்களுக்கு ஏற்ப தன்னை இட்டு நிரப்பும் புள்ளிவிபரங்கள் எதிர்காலத்திற்குப் பயன்தருமா? என்ற கேள்விகளுடன் நாளைய உலகை வடிவமைப்பதாகக் கருதிக்கொள்பவர்களின் தகுதிகளையும், இலக்குகளையும் பற்றித் தெரியவந்த பின்னர் கூட்டங்களில் அந்த முகங்களைப் பார்க்கும்போதெல்லாம் எனக்குள் எழும் ஆத்திரத்தை அடக்கப் போராட வேண்டியிருந்தது.

என்னுடைய கண்ணோட்டமே மாறிவிட்டது. இந்த வேலைகளைச் செய்பவர்களில் பெரும்பாலானோர் தாங்கள் மிகவும் சரியான காரியங்களையே செய்வதாகக் கருதிக் கொண்டிருந்தனர். சார்லி போன்றவர்கள் தம் நடவடிக்கையால் ஏற்படும் எதிர்விளைவுகளைவிட கம்யூனிசமும், பயங்கரவாதமும் பெரும் தீயசக்திகள் என்று கருதினார்கள். உலகம் முழுவதையும் முதலாளித்துவ அமைப்பிற்குள் கொண்டுவருவது தங்கள் நாட்டிற்காகவும் கடவுளுக்காகவும் சந்ததிகளுக்காகவும் செய்யும் கடமை என்று கருதினார்கள். தகுதியுள்ளதே வாழும் என்ற கோட்பாட்டில் அழுத்தமான நம்பிக்கை கொண்டிருந்தார்கள். ஒரு வர்க்கத்தினர் அனைத்து வசதிவாய்ப்புகளையும் பெற்று உயர்வாக வாழ்வதும், ஒரு சாரார் அட்டையே கூரையாகவும், கோணிப்பைகளையே மறைப்பாகவும் கொண்ட வீடுகளில் வசிப்பவர்களின் நிலைக்குக் காரணம் அச்சந்ததியினர் பெற்று வந்த வரம் என்றும் கருதினார்கள்.

இவர்கள்தான் உண்மையான சதிகாரர்கள் என்றும் ஒருசமயம் அதிகார வலைப்பின்னலுக்குள் ஒரு முக்கியமான பகுதி என்றும் தீர்மானத்தின் தடுமாற்றத்திற்கிடையில் இருந்தேன். அமெரிக்காவின் தெற்குப்பகுதியில் நடைபெற்ற உள்நாட்டுப் போருக்கு முந்தைய பண்ணை உடைமையாளர்களுக்கும் இவர்களுக்கும் வேறுபாடு இல்லாததுபோல், சொந்த விருப்பங்களைப் பொதுநம்பிக்கையாக மாற்றுபவர்களுக்கும், கொள்ளையடிப்பதற்காக திருட்டுத்தனமாக ஒன்றிணைப்பவர்களுக்கும் இடையே வேறுபாடு இல்லை. என்று தோன்றியது. ஏகபோகப் பண்ணை உடைமை தங்களது அடிமைகளும், வேலைக்காரர்களுடன் இணைந்தே வளர்ந்தார்கள். எஜமானர்களாகிய தங்களது நம்பிக்கையையும், வாழ்க்கை முறையையும், மதத்தையும் ஹேதன்களைப் பின்பற்றச் செய்வதும், அதைப் போதிப்பதும் தங்களது கடமை என்று கருதினார்கள். அதற்கும் ஒருபடி மேலாக அடிமைமுறை ஒழிக்கப்பட்டால் சமூகக் கொந்தளிப்பு உருவாகும் என்று தாமஸ்ஜெப்பர்ஸன் போன்றோர் தத்துவார்த்த ரீதியாகச் சமூக ஏற்றத்தாழ்வை நியாயப்படுத்தினார்கள்.

இதே எண்ண ஓட்டத்தைத்தான் தற்போதைய அதிகார வர்க்கத்தினரும், பன்னாட்டு நிறுவனங்களை நடத்துபவர்களும் கொண்டிருக்கிறார்கள்.

மகத்தான அணைகள் கட்டுதல், போர்த்தளவாடங்கள் தயாரித்தல், போர் நடத்துதல், பழங்குடி மக்களின் பண்பாட்டையும், சுற்றுச்சூழலையும் நிர்மூலமாக்குதல் ஆகிய செயல்களால் பயன்பெறுவது யார்? பல லட்சம் மக்கள் உணவில்லாமலும், குடிநீர் இல்லாமலும், உயிர்காக்கும் மருந்தில்லாமலும் சாவதால் யாருக்கு லாபம்? அந்த லாபத்தை அடைகிறவர்கள் நீடித்துப் பெற முடியாது. சமூகத்தின் மேல்தட்டில் இருக்கிற ஒரு சிலர் தற்காலிகமாகப் பலனடைவதைப்போலத் தோன்றலாம்.

ஆனாலும் இந்நிலை என் இருக்கிறது? இன்னும் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும்? பலமே உரிமை என்ற பழைய சொல்முறை தான் இதற்கான பதிலா? அதனால்தான் நீடித்துக் கொண்டிருக்கிறதா? என்பன போன்ற கேள்விகள் தொடர்ந்து எழுகின்றன.

வலிமை மட்டுமே இச்சூழல் நீடிப்பதற்குப் போதுமானது என்று சொல்லமுடியாது. வலிமைக்கு முக்கியமான பங்கு உண்டு. ஆனால் அதுதவிர வேறுசில காரணங்களும் உண்டு என்றுதான் நினைக்கிறேன். எனது பொருளாதாரக் கல்லூரியில் ஆற்றலை ஒரு வரையறைக்குள் பயன்படுத்தி வந்தால் இயற்கை தொடர்ந்து வளம் அளித்துக்கொண்டே இருக்கும் என்ற வட இந்தியப் பேராசிரியரின் கூற்றையும், அடிமை உழைப்புக் கோட்பாட்டையும் நினைத்துப் பார்க்கிறேன். அப்படிப் பார்ப்போமானால் வெற்றிகரமான முதலாளித்துவ அமைப்பு அனைத்தும் அடிமை என்ற வகைப்பாட்டிற்குள் அடங்கும். பெரும் உழைப்புப் பட்டாளத்தை அடித்தளமாகவும் பல்வேறு படிநிலைகளில் கூம்பு வடிவிலான அதிகாரக் கட்டமைப்பையும் தன் கைவசம் வைத்துள்ளது. இதேபோன்ற பிரமிட் வடிவ அதிகார அமைப்பு முறையைத்தான் கடவுள் தமக்கு அளித்த உரிமையாக பெருநிறுவனங்கள் உலகம் முழுவதிற்கும் ஏற்றுமதி செய்துகொண்டிருப்பதாகக் கருதுகிறேன்.

இதை முதலில் துவங்கியவர்கள் நாங்களில்லையே. இந்த முறையை வடஆப்பிரிக்காவில், மத்தியகிழக்கில், ஆசியாவில், பாரசீகம், கிரீஸ், ரோம், கிறிஸ்தவப் புனிதச் சிலுவைப்போர்கள், கொலம்பஸிற்குப் பிந்தைய மேற்கத்தியப் பேரரசுகள் போன்ற நெடிய நம் முன்னோர்களின் பட்டியல் எங்களுக்கு முன்னரே நீண்டு கிடக்கிறது. ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சிதான் பல போர்களுக்கும், பெரும் படுகொலைகளுக்கும், பட்டினிக்கும், சூழல் கேட்டிற்கும்,

அரிய உயிரினங்கள் முற்றாக அழிக்கப்படுவதற்கும் காரணியாக இருந்திருக்கிறது. தங்களது குடிமக்களுக்கு நல்வாழ்வளிப்பதன் மூலம் அவர்களது மனசாட்சியின் மீது ஏகாதிபத்தியங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. ஏகாதிபத்திய வளர்ச்சியானது சமூகப் பதற்றத்தைத்தான் அதிகரித்துள்ளது. செல்வ வளமிக்க நாடுகள்தான் போதைப்புழக்கம், தற்கொலைகள், வன்முறை என அனைத்துக் கேடுகளுக்கும் நிலைக்களனாக விளங்குகின்றன.

இந்தக் கேள்விகள் குறித்தெல்லாம் விரிவாக யோசித்தேன். ஆனால் இதில் என்னுடைய பங்கு என்ன என்பதைப் பற்றி நினைக்கத் தவறிவிட்டேன். என்னை ஒரு பொருளாதார அடியாள் என்று நினைக்கவில்லை. நானொரு தலைமைப் பொருளாதார நிபுணன் என்று கருதிக்கொள்ளவே முயற்சித்தேன். அவ்வாறு கருதிக்கொள்வது அதிகம் சட்டப்பூர்வமானதென்றும், தேவைப்பட்டால் நான் மெய்னில் சம்பளம் பெறுகிறவன் என்பதன் மூலம் உறுதிப்படுத்தவும் முடியும். அரசு முகவரிடம் இருந்து ஒரு சல்லிப் பைசாவும் பெறவில்லை என்று கூறிக்கொள்ள முடியும். எனவே என்னளவில் ஒரு மனத்தெளிவுடன் இருந்தேன்.

ஒருநாள் புருனோ என்னைத் தன் அலுவலகத்திற்கு அழைத்தார். என் இருக்கைக்குப் பின்வந்து என் தோள்களைத் தட்டினார். அற்புதமான காரியத்தைச் செய்திருக்கிறாய். எனவே அதைக் காலகாலத்திற்கும் பாராட்டும் விதமாக, உன்னிலும் இரண்டு மடங்கு வயதானவர்களுக்குக்கூட கிடைக்காத ஒன்றை அளிக்கப்போகிறேன் என்று கூறினார்.

அத்தியாயம் - 10

மனங்கவர் நாயகனும், தலைவருமான டோரிஜோஸ்

வெப்பமண்டலப் பெரு மழைக்கிடையே பனாமாவின் டொக்குமென் பன்னாட்டு விமானதளத்தில் 1972 ஏப்ரல் இறுதியில் வந்திறங்கினேன். அந்த நாட்களில் அதிகாரிகள் அனைவரும் ஒரே வாடகைக் காரில் பயணித்தோம். ஸ்பானிஷ் தெரியுமென்பதால் எனக்கு ஓட்டுனருக்குப் பக்கத்து இருக்கை ஒதுக்கப்பட்டது. வண்டியின் காற்றுத்தடுப்பானுக்கு அப்பால் வெறுமனேப் பார்த்துக் கொண்டிருந்தேன். மழைத்தாரைகளின் காரின் முகப்பு ஒளியில் விளம்பரப்பலகையில் எடுப்பான புருவங்களுக்குக் கீழே மின்னும் கண்களுடன் கவர்ந்திழுக்கும் ஒரு மனிதஉருவைப் பார்த்தேன். அவரது அகன்ற விளிம்பு கட்டிய தொப்பி தனித்துவமாக ஒருபக்கம் மேல்நோக்கி வளைந்திருந்தது. அவர்தான் நவ பனாமாவின் நாயகனான ஓமர் டோரிஜோஸ் என்று அடையாளம் கண்டுகொண்டேன்.

வழக்கமான பயணப்பாணியில் போஸ்டன் நூலகத்தில் என்னைத் தயார்படுத்தியிருந்தேன். டோரிஜோஸ் பனாமாவின் சுயாட்சி உரிமைக்கும், பனாமா நீரிடை மீதான இறையாண்மைக்கும் உறுதியான பாதுகாவலர் என்பதால் மக்களிடம் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தார். படுகுழியில் வீழ்ந்த தன் நாட்டின் வரலாற்று அவமானத்தை துடைத்தெறியத் தலைமையேற்றவர் டோரிஜோஸ்.

அட்லாண்டிக் பெருங்கடலை பசிபிக்குடன் இணைக்க பிரான்ஸ் பொறியாளர் பெர்டினாண்ட் தே லெஸப்ஸ் யோசனையில் கீழ் மத்தியஅமெரிக்கா நில விளிம்புகளின் ஊடாக சூயஸ் கால்வாய் கட்டப்பட்டும் பனாமா கொலம்பியாவின் ஒரு பகுதியாகத்தான் இருந்தது. பிரான்ஸ் 1881ல் மேற்கொண்ட பெருமுயற்சி அடுத்தடுத்து தடைகளை எதிர்கொண்டது. இறுதியில் 1889ல் பெரும் பொருளாதாரக் குழப்பத்தால் நின்றே போனது. ஆனால் பிரான்சியர் கைகழுவிய அத்திட்டம் அமெரிக்க அதிபர் தியோடர்

ரூஸ்வெல்டின் கனவுத்திட்டமாக மாறியது. தனது நில விளிம்புகளை வடஅமெரிக்காவின் கூட்டமைப்பிடம் ஒப்படைக்க ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு வற்புறுத்த, கொலம்பியா மறுத்துவிட்டது.

அமெரிக்கப் போர்க் கப்பலாகிய நாஷ்வில்லேயை 1903 ல் ரூஸ்வெல்ட் அனுப்பிவைத்தார். தரையிறங்கிய அமெரிக்கச் சிப்பாய்கள் கொலம்பியா பிரபலமான உள்ளூர் ராணுவக் கமாண்டரை முற்றுகையிட்டு கொலை செய்தனர். பனாமா ஒரு சுதந்திரநாடாக அறிவிக்கப்பட்டது. பொம்மை அரசாங்கம் அமர்த்தப்பட்டு முதல் கால்வாய் ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன்மூலம் எதிர்கால கால்வாயின் இரண்டு பக்கமும் அமெரிக்காவின் பகுதியாக்கப்பட்டது. ராணுவத் தலையீடு சட்டப்பூர்வமாக்கப்பட்டது. புதிதாக உருவான சுதந்திரநாட்டின் கட்டுப்பாடு வாஷிங்டன்னின் கைக்கு அளிக்கப்பட்டது.

விசித்திரமான வகையில் பனாமாவிற்கும், கொலம்பியாவிற்கும் சம்பந்தமே இல்லாத அவ்வொப்பந்தத்தில் அமெரிக்கவின் ஹேமாநிலச் செயலாளரும், பிலிப்பே புனாவ்-வரில்லா என்ற பிரான்சுப் பொறியாளரும் கையெழுத்திட்டனர். ஆனால் ஒற்றைப் பனாமியனுக்கும் அதில் இடமில்லை. அதாவது அமெரிக்காவிற்குச் சேவை புரிவதற்காகவே கொலம்பியாவில் இருந்து பனாமா விடுவிக்கப்பட்டது. அமெரிக்கனுக்கும் பிரான்சியனுக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தால் புதிய வரலாறு துவங்கியது.

அடுத்த அரை நூற்றாண்டுகளுக்கு வாஷிங்டன்னுடன் தொடர்புடைய வலதுசாரித் தீவிரவாத சர்வாதிகாரக் குடும்பங்கள் அமெரிக்காவின் விருப்பங்களை நிறைவேற்றுவதையே பனாமாவின் ஆட்சி நடவடிக்கையாக்கின. இதையே பின்பற்றி இலத்தீன்அமெரிக்க சர்வாதிகாரிகளும் அமெரிக்காவிற்குச் சேவை செய்ய, சோசலிஸ சிந்தனை பரவக்கூடாது என்பதற்கான நடவடிக்கை என்று இதனை பறைசாற்றிக் கொண்டது பனாமா. இந்தப் புவிக்கோளம் முழுவதும் கம்யூனிச எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடும் சிஐஏ மற்றும் என்எஸ்ஏ அமைப்புகளுக்கு ஒத்துழைப்பு அளித்தனர். அமெரிக்காவின் மிகப்பெரிய எண்ணெய் நிறுவனமான ராக்பெல்லருக்கும், யுனைடெட் புரூட்டிற்கும் வேண்டிய உதவிகள் செய்தனர். பெரிய பண்ணைகளிலும், ஆலைகளிலும் மக்களை அடிமைக்கூலிக்குச் சேவகம் செய்விப்பதும், பெரும்பகுதி மக்களை வறுமையிலும் ஏழ்மையிலும் வதைபடச் செய்வதன் மூலமாகவே அமெரிக்காவின் விருப்பங்களை நிறைவேற்ற முடியும் என்பதைக் குறித்து பனாமாவின் பணக்காரக் குடும்பங்கள் கவலைப்படவும் இல்லை.

அமெரிக்காவிற்கு அளித்த ஆதரவிற்காக பனாமாக் குடும்பங்கள் பெரும் வெகுமதிகள் பெற்றன. பனாமாவின் சுதந்திரம் அறிவிக்கப்பட்டதற்கும் 1968க்கும் இடைப்பட்ட காலத்தில் ராணுவத் தலையீடு இரண்டு மடங்கு அதிகரித்தது. அதேகாலத்தில்தான் நானும் அமைதிப்படையில் ஈக்குவடாரில் தன்னார்வத் தொண்டனாக இருந்தேன். காலப்போக்கில் வரலாறு திடீரென்று திசை திரும்பியது. ரகசிய நடவடிக்கையால் சர்வதிகாரிகள் அணியில் கடைசியாக வந்த ஆர்னுல்போ அரியாஸ் தூக்கி எறியப்பட்டார். டோரிஜோஸ் பனாமாவின் புதிய அதிபரானார். இத்தனைக்கும் அவர் ரகசிய நடவடிக்கையில் முக்கியப் பங்கு வகித்தவரல்ல.

டோரிஜோஸ் கீழ்த்தட்டு, நடுத்தட்டு பனாமியர்களின் செல்வாக்குப் பெற்றத் தலைவராக இருந்தார். அவரது பெற்றோர் ஆசிரியப் பணியாற்றியவர்கள். சாண்டியாகோவின் கிராமப்புறத்தில் இருந்து வந்தவர் டோரிஜோஸ். 1960 களில் நிறுவப்பட்ட, வறிய மக்களின் செல்வாக்குடன் வளர்ந்த பனாமா தேசியக் காப்பு ஆரம்ப ராணுவப்படையில் தனது தகுதியை உயர்த்திக்கொண்டதன் மூலம் அறியப்பட்டவர். தனது தன்னல மறுப்பால் பரவலான புகழ்பெற்றார். அரசியல்வாதிகள் நுழையத் தயங்கும் சேரிப்பகுதிகளில் கூட்டங்கள் நிகழ்த்தினார். சாண்டியாகோ பகுதி சிறிய நகரங்களின் தெருக்களில் வலம் வந்தார். வேலையற்ற இளைஞர்கள் வேலை பெறுவதற்கு உதவிகள் செய்தார். தனது சக்திக்கு ஏற்றவாறு துன்பப்படும் மக்களுக்கும், நோய்வாய்ப் பட்டோருக்கும் பொருளாதார உதவிகள் செய்தார்.

வாழ்க்கையின் மீதான காதலும், மக்கள் பால் கொண்டிருந்த ஈடுபாடும் பனாமாவின் எல்லை தாண்டியும் புகழ்பெற்றது. அரசியல் தஞ்சம் தேடும் அகதிகளுக்கான புகலிடமாக பனாமாவை மாற்றவேண்டும் என்று டோரி உறுதிகொண்டிருந்தார். அரசியல் தஞ்சம் வருபவர்களின் பின்புலத்தைப் பற்றி அவர் அக்கறை காட்டுவதில்லை. சிலிநாட்டின் பினோசெட்டுக்கு எதிரான இடதுசாரிகளும், காஸ்ட்ரோவிற்கு எதிரான வலதுசாரிகளும் தஞ்சம் பெறுவோரில் அடக்கம். அதனால் அப்பிரதேசம் முழுவதும் புகழ்பெற்றத் தலைவராக விளங்கினார். குழு மனப்பான்மையுடன் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொள்ளும் லத்தீன்அமெரிக்க நாடுகளான ஹோண்டுராஸ், சிலி, அர்ஜென்டைனா, குவாதிமாலா, பெரு, கொலம்பியா, பராகுவே ஆகியவற்றிற்கு இடையேயுள்ள வேறுபாடுகளைக் கலையும் சக்தியாக டோரிஜோஸ் கருதப்பட்டார். சோவியத்யூனியனை உடைக்க முயன்ற பல்வேறு பிரிவுத் தொழிலாளர் தலைவர்கள் முதல் இஸ்லாமியப் புரட்சிக்காரரான

மும்பர் கடாபி வரை அனைவருக்கும் தன் சின்னஞ்சிறிய இருபது லட்சம் மக்கள்தொகை கொண்ட நாடு சமூக சீர்த்திருத்தத்தின் முன்னுதாரண சக்தியாகத் திகழவேண்டும் என்று கருதினார்.

பனாமாவில் முதல் நாளன்று இரவு, போக்குவரத்து சிக்னலுக்காகக் காத்திருந்தேன். காற்றுத்தடுப்பான் வழியாக ஊடுறுவிப் பார்த்தபோது விளம்பரப்பலகையில் இருந்து துணிச்சலும், ஈர்ப்பும் நிறைந்த மனிதர் என்னைப் பார்த்துப் புன்னகைத்தார். தன் நம்பிக்கையின் மீது நிற்கும் அவரை நூலக மணி நேரங்கள் வழியாக அறிந்தவன் நான். வாஷிங்டன்னின் கைப்பாவையாக இல்லாத ஒருவர் வரலாற்றில் முதன்முறையாக பனாமாவின் அதிபராகப் பொறுப்பேற்றுள்ளார். மாஸ்கோ அல்லது பெய்ஜிங்கின் தூண்டுதலுக்கு இரையாகாதவர் டோரிஜோஸ். சமூக சீர்திருத்தத்திலும், ஏழ்மையில் பிறந்தவர்கள் மேல்நிலையை அடையவேண்டும் என்பதிலும் நம்பிக்கை உடையவர். ஆனால் கம்யூனிசத்திற்குச் சார்பானவர் அல்ல. அமெரிக்கா எதிரிகளின் ஒத்துழைப்பு இல்லாமலே தன்னாடு அமெரிக்காவிடமிருந்து விடுதலைபெற வேண்டும் என்று தீர்மானித்தவர்.

ஒரு சஞ்சிகையில் டோரிஜோஸப் பற்றி எழுதப்பட்டக் கட்டுரையைப் படித்திருக்கிறேன். அமெரிக்காவின் மேலாதிக்கத்தை வீழ்த்தி இரு அமெரிக்கக் கண்டங்களின் வரலாற்றைத் திருத்தி எழுதப் பிறந்த மனிதர் என்று புகழ்ந்திருந்தது. செவ்விந்தியர்களைத் தோற்கடித்த 1840 களில் கடவுளின் ஆணைக்கு இணங்க இந்த வெற்றி ஈட்டப்பட்டது என்ற சொல்லாடல் பிரபலமாக கையாளப்பட்டது. அதை அடிப்படையாகக்கொண்டு உருவான கோட்பாடாகிய விதியின் ஆணை என்பதைத் துவக்கமாகக் கொண்ட அக்கட்டுரை கடவுளின் ஆணைக்கு இணங்க காட்டெறுமைகள் கொல்லப்பட்டன. செவ்விந்தியர்களும், காடுகளும் அழிக்கப்பட்டன. சதுப்புநில நீரின் போக்குமுறை செய்யப்பட்டது. வடஅமெரிக்கா ஒரு புனிதபூமி. அதன் பொருளாதாரமானது உழைப்பையும், இயற்கை ஆற்றலையும் சுரண்டுவதையே சார்ந்திருக்கிறது. இந்த அமைப்பு இப்படி இருப்பதற்குக் காரணம் மனிதன் அல்ல, கடவுளின் உத்தரவே என்று அனைத்துவிதமானதையும் கொடுமைகளையும் நியாயப்படுத்துகிறது அக்கோட்பாடு.

இந்த உலகத்தின் மீதான எனது நாட்டின் அணுகுமுறை குறித்து யோசிக்க வைத்தது. 1823ல் ஜனாதிபதியாக இருந்த ஜேம்ஸ் மன்றோ அறிவித்த மன்றோக் கோட்பாடு விதியின் ஆணைக் கோட்பாட்டை முன்னெடுத்துச்செல்ல உதவியது. அதை அடிப்படையாகக்கொண்டுதான் இந்தப் புவிக்கோளத்தில்

அமெரிக்காவிற்கு விசேச உரிமையுண்டு என்று 1850 களிலும் 60 களிலும் பிறநாடுகளைத் தன் கொள்கைகளைப் பின்பற்றுமாறு வற்புறுத்தியது. மன்றோக் கோட்பாட்டை பக்கத்துணையாக வைத்துக்கொண்டு, டொமினிக்கன் குடியரசையும், வெனிசுலாவையும் வல்லடியாக ஆக்கிரமித்த டொட்டி ரூஸ்வெல்ட் கொலம்பியாவில் இருந்து பிரித்து பனாமாவைச் சுதந்திரநாடாக அறிவித்தார். அவருக்குப் பின்வந்த ஜனாதிபதிகளான டாப்ட், வில்சன், ப்ராங்ளின் ரூஸ்வெல்ட் போன்றோரும் அமெரிக்காவின் நடவடிக்கையை இரண்டாம் உலகப்போர் வரை விரிவுபடுத்தினர். இருபதாம் நூற்றாண்டின் பாதிக்குப் பின்னர் கம்யூனிசப் பூச்சாண்டியைக் காட்டி வியட்னாம், இந்தோனேசியா போன்ற நாடுகள் வழியாக உலகின் மற்ற பாகங்களுக்கும் ஆக்கிரமிப்புக் கொள்கையை விஸ்தரித்தனர்.

இப்போது ஒரு மனிதர் வாஷிங்டன்னின் பாதைக்குக் குறுக்கே நிற்பதாகத் தோன்றியது. உண்மையில் அவருக்கு முன்னர் காஸ்ட்ரோ, அலெண்டே போன்ற தலைவர்களும் இருந்ததை நான் அறிவேன். ஆனால் தன்னை ஒரு கம்யூனிஸ்ட் தத்துவத்தைப் பின்பற்றும் புரட்சிக்கார இயக்கத்தைச் சேர்ந்தவன் என்று கூறாத முதல் மனிதராக இவரைக் கூறலாம். தனது மக்களுக்கு பனாமா நிலத்தின் மீதும், அந்நிலத்தை ஊடறுத்துச் செல்லும் நீர்வழி மீதும் உரிமை உண்டு என்பதுதான் எளிமையான வாதம். அமெரிக்க மக்கள் கூறிக்கொள்வதைப்போல இதுவும் தெய்வ அனுக்கிரகம் பெற்ற உரிமைகள்தான் என்கிறார்.

கால்வாய் பிரதேசத்தில் அமைந்திருக்கும் அமெரிக்க ராணுவப்பள்ளிகளையும், அமெரிக்கத் தெற்குப் பிரிவின் போர்ப்பயிற்சி மையத்தையும் அனுமதிக்கமுடியாது என்றார். அந்த மையத்தில் வந்து பயிற்சிபெறும்படி லத்தீனமெரிக்க சர்வாதிகாரிகளுக்கும், அவர்களது வாரிசுகளுக்கும், ராணுவத் தலைவர்களுக்கும் தொடர்ந்து பல ஆண்டுகளாக அழைப்பு விடுத்தபடி இருக்கிறது அமெரிக்கா. அமெரிக்காவிற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ள அனைத்து வசதிகளையும் கொண்ட பயிற்சி மையம் அது. விசாரணை உத்திகளையும், ராணுவத் தந்திரங்களையும் அங்கு கற்றுக்கொள்வதன் மூலமாக அப்பிராந்தியத்தில் உள்ள பன்னாட்டு நிறுவனங்களையும், எண்ணெய்க் கிணறுகளையும் பாதுகாத்துக் கொள்வதற்குப் பெரும் வாய்ப்பாக உள்ளது என்பது டோரிஜோஸின் கருதுகோள். இங்கிருந்தபடியே அமெரிக்க ராணுவத் தலைமையுடன் இறுக்கமான பிணைப்பு ஏற்படுத்திக்கொள்ள முடிகிறது.

அதில் பலன் பெறுகிற சில பணக்காரர்களைத்தவிர மற்ற அனைத்து லத்தீன்அமெரிக்கர்களின் கடுமையான வெறுப்பிற்கு உள்ளான மையம் அது. பல நாடுகளின் ஆதிக்கவாதிகளின் வலதுசாரி மரணப்படைகளுக்கும், சித்திரவதைகளுக்கும் பயிற்சிக்களனாகக் கருதப்பட்டது. இப்படியான ஒரு பயிற்சிமையம் அங்கிருப்பதை டோரிஜோஸ் இம்மியும் விரும்பவில்லை. கால்வாய்ப் பிரதேசம் தனது நாட்டின் எல்லைக்கு உட்பட்டது என்று அறிவித்துவிட்டார்.

விளம்பரப்பலகையில் தோற்றமளிக்கும் கவர்ச்சிகரமான ஜெனரலின் முகத்திற்குக் கீழேயுள்ள ஓமரின் இலட்சியம் விடுதலை. இலட்சியங்களைத் துளைக்கும் ஏவுகணைகள் கண்டுபிடிக்கப் படவில்லை என்ற வாசகத்தை வாசித்ததும் என் முதுகுத்தண்டில் நடுக்கம் பரவியது. பனாமாவின் எதிர்காலம் குறித்து எனக்குள் ஏதோ உள்ளுணர்வு தோன்றியது. இருபதாம் நூற்றாண்டில் பனாமா சந்திக்கவேண்டியது இன்னும் நிறைய உள்ளது. டோரிஜோஸ் பெரும் சிக்கலை ஏன் கடும் துயரத்தைக்கூட எதிர்கொள்ள நேரிடலாம்.

வெப்பமண்டலக் காற்று பலமாக அடித்தது. போக்குவரத்து பச்சைவிளக்கு எரிந்தது. எங்களுக்கு முன்னிருந்த காருக்காக எங்கள் ஓட்டுனர் ஹார்ன் ஒலியெழுப்பினார். அந்தச் சத்தத்தைப் போலத்தான் எனது நினைவுகளும் உரத்து ஒலித்துக் கொண்டிருந்தன. பனாமாவிற்கான மெய்னின் முதல் ஒருங்கிணைந்த வளர்ச்சித்திட்டத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் நான் இங்கே அனுப்பப்பட்டுள்ளேன். இந்தக் குட்டியூண்டு நெருக்கடி மிகுந்த நாட்டில் தனது பில்லியன் கணக்கான பெறுமான மின்சாரம், போக்குவரத்து, விவசாயம் தொடர்பான திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் உலகவங்கி, அமெரிக்க வளர்ச்சி வங்கி, ஒருங்கிணைந்த வளர்ச்சி வங்கிகள் தமது இருப்பை நியாயப்படுத்த முயல்கின்றன. அதாவது இவற்றை நிறைவேற்றுவதன் வாயிலாக பனாமாவை நிரந்தரக் கடனாளியாக்கி மீண்டும் ஒரு கைப்பாவையாக மாற்றுவதுதான் அதன் திட்டம்.

டாக்சி இரவை ஊடறுத்து ஓட, என்னில் குற்ற மின்னல் ஒன்று ஊடறுத்துப் பாய்ந்தது. ஆனால் அதை அப்படியேக் கரைத்து விட்டேன். அதை ஏன் நான் பொருட்படுத்த வேண்டும்? ஜாவாவிலேயே வெள்ளம் தலைக்குமேல் போய்விட்டது. என் ஆன்மா விற்கப்பட்டுவிட்டது. இப்போது நான் செய்யவேண்டியது வாழ்க்கை முழுமைக்குமான சாத்தியங்களை உருவாக்கிக் கொள்வதுதான். நான் பணக்காரனாக வேண்டும். நான் புகழடைய வேண்டும். ஒரே வீச்சில் அதிகாரம் பெற வேண்டும்.

அத்தியாயம் - 11

பனாமா கால்வாய்க்குள் புகுந்த கடற்கொள்ளையர்கள்

அடுத்த நாளே எனக்குப் பனாமாவைச் சுற்றிக்காட்ட ஒருவனை அனுப்பியது பனாமிய அரசு. பெயர் பிடல். கண்டதும் கவர்ந்துவிட்டான். நல்ல உயரத்தில் சன்னமாக இருந்த அவனுக்குத் தன் நாட்டைப் பற்றிய பெருமித உணர்வு உண்டு. ஸ்பெயினுடன் நடந்த விடுதலைப்போரில் பொலீவருடன் (லத்தீன்அமெரிக்க நாடுகளின் விடுதலை அடையாளம் - சைமன் பொலீவர்) பிடலின் தாத்தாவின் தாத்தா பங்கெடுத்திருக்கிறார். நானும் ஒருவகையில் டாம்பெய்னுடன் தொடர்புடையவன் என்பதைச் சொன்னேன். பிடல் ஸ்பானிஷில் பொதுஅறிவு படித்தவன் என்பது தெரிய வரும்போது எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. முதலில் ஆங்கிலந்தான் பேசினான். ஆனால் அவன் நாட்டு மொழியைச் சரளமாகப் பேசுவதைத் தெரிந்ததும் உணர்ச்சிவயப்பட்டான்.

உங்களாட்கள் பலர் வருடக்கணக்காக இங்கிருந்தாலும் எம் மொழியைக் கற்பதில் அக்கறை காட்டுவதில்லை என்றான்.

பிடல் என்னை பனாமாவின் வளமான பகுதிகளுக்கு அழைத்துச் சென்று இதுதான் புதிய பனாமா என்றான். குத்திட்டு நிற்கும் நவீன கண்ணாடி எஃகு வானக்கீறிகளைச் (உயரமான கட்டிடங்கள்) சுட்டிக்காட்டி ரியோ கிண்டேக்குத் தெற்கில் அதிக சர்வதேச வங்கிகளை உடைய நாடு பனாமா ஒன்றே எனக் கூறினான்.

இங்குள்ள வங்கிகள் தங்கள் வாடிக்கையாளர்களை அதிகம் துறுவிக் கேட்பதில்லை என்பதால் அமெரிக்காவின் ஸ்விட்ஜர்லாந்து ஆக மாறிவிட்டது எங்கள் நாடு என்றான்.

கதிரவன் பசிபிக் கடலுக்குள் சரிந்து விழும் பின்மாலைப்பொழுதில் குடாவை அடுத்த ஒரு சாலையில் சென்று கொண்டிருந்தோம். நீண்டவரிசையில் கப்பல்கள் நக்கூரமிட்டிருந்தன. பிடலிடம் நீரிணையில் ஏதேனும் பிரச்சனையா? என்று கேட்டேன்.

இதெல்லாம் சாதாரணம் என்றபடி சிரித்தான். தங்கள் முறைக்காக வரிசை கட்டி நிற்கின்றன கப்பல்கள். இதில் பாதி ஜப்பானில் இருந்து வந்தவையாக இருக்கும் அல்லது போகிறவையாக இருக்கலாம். அமெரிக்காவினுடையதைக் காட்டிலும் அதிகம் ஜப்பானுடையது என்றான்.

எனக்கு இது புதிய செய்திதான் என்றேன்.

வடஅமெரிக்கர்களுக்கு வெளியுலகம் பற்றி அதிகம் தெரியாது என்பதால், நீங்கள் சொல்வதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை என்றான்.

தொன்மைச் சிதைபாடுகளில் போகன்வில்லாப் படர்ந்த அழகான பூங்கா ஒன்றில் எங்கள் கார் நின்றது. ஆங்கில கடற்கொள்ளையர்களிடமிருந்து நகரத்தைக் காப்பதற்காக கட்டப்பட்டக் கோட்டை என்பதற்கான அறிகுறிகளைக் காண முடிந்தது. அங்கே ஒரு குடும்பம் மாலை உலாவிற்கான தயாரிப்புகளில் இறங்கியிருந்தது. அப்பா, அம்மா, மகள், மகன் அங்குள்ள வயதான முதியவர் பிள்ளைகளின் தாத்தாவாக இருக்கலாம். நெடிய அமைதி அவர்களைத் தழுவுவதற்காகக் காத்திருந்ததுபோல் தோன்றியது. நாங்கள் அவர்களைக் கடக்கும்போது அவர்கள் எங்களை நோக்கி கையசைத்து வாழ்த்துக் கூறினார்கள். நீங்கள் சுற்றுலாப் பயணிகளா என்று கேட்டேன். அனைவரும் சிரித்தனர். அந்த நபர் என்னை நோக்கி வந்தார்.

இந்தக் கால்வாய் உருவாக்கப்பட்ட மூன்றாம் ஆண்டில் என் தாத்தா இங்கே வந்தார். கப்பல்களை தளத்திற்கு இழுத்து வரும் ட்ராக்டர் ஓட்டுனராகப் பணியாற்றினார். குட்டிமேசையைப் பொருத்திக்கொண்டிருந்த முதியவரைச் சுட்டிக்காட்டி என் அப்பா ஒரு பொறியாளர். அவரைத் தொடர்ந்து நானும் ஒரு பொறியாளன். மூன்று தலைமுறைகளாக இப்பகுதியில் வசித்து வருகிறோம் என்று பெருமிதத்துடன் கூறினார்.

அப்பெண்மணி வந்து பிள்ளைகளுக்கும் மாமானாருக்கும் மேசையைப் பொருத்துவதில் உதவினார். அவர்களுக்குப் பின்னால் நீல நீருக்குள் சூரியன் அமிழ்ந்துகொண்டிருந்தான். அது ஒரு மொனெட்டின் ஓவியத்தை நினைவூட்டும் அற்புதமானக் காட்சி. நீங்கள் அமெரிக்கக் குடிகளா என்று கேட்டேன்.

என்னை அவக்குழப்பத்தில் பார்த்தார் ஆம். இக்கால்வாய்ப் பகுதி அமெரிக்கப் பிரதேசம். பையன் ஓடிவந்து தன் தந்தையிடம் உணவு தயார் என்றான்.

அப்படியானால் உங்கள் மகன் நான்காம் தலைமுறையைச் சேர்ந்தவன் இல்லையா?

அந்த மனிதர் இரண்டு கைகளையும் துதிப்பதுபோல் வானத்தை நோக்கி உயர்த்தினார்.

நான் ஒவ்வொரு நாளும் கடவுளை வேண்டிக் கொள்கிறேன். இந்தப் பிரதேசத்தில் வாழும் அற்புதமான வாய்ப்பை கடவுள் இவனுக்கு வழங்கட்டும். கையைக் கீழே இறக்கிவிட்டுப் பிடலை நேருக்கு நேராகப் பார்த்தார். மேலும் ஒரு ஐம்பது ஆண்டுகளுக்கு இவளைப் (பனாமாவை) பிடித்துவைத்திருக்கலாம் என்ற நம்பிக்கையில்தான் இருந்தேன். ஆனால் இந்த முரடன் டோரிஜோஸ் நிறைய பிரச்சனைகள் செய்துகொண்டிருக்கிறான். ஆபத்தான மனிதன்.

சட்டென்று ஒரு அவசரம் என்னை நெருக்க அவரிடம் ஸ்பானிஷில் சொன்னேன். ஆடியோஸ் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் இனிய பொழுது வாய்ப்பதாகுக. பனாமாவைப் பற்றி நிறையத் தெரிந்துகொள்வதாகுக என்றேன்.

என் மீது விரும்பத்தகாத பார்வை ஒன்றை வீசினார். நான் இவர்களின் மொழியைப் பேசுவதில்லை என்று சொல்லிவிட்டுக் குடும்பத்தினருடன் சிற்றுலாவில் மூழ்கிவிட்டார்.

பிடல் என்னை நெருங்கி வந்து என் தோளில் கைகளைப் போட்டு ஆதரவாக இறுக்கி நன்றி என்றான்.

மீண்டும் நகருக்குள் வந்து அவன் சேரி என்று சொன்ன பகுதிக்குள் நுழைந்தோம்.

எங்கள் ஊரின் மோசமான சேரியில்லை இது என்றாலும் அதன் சாயலைக் காணலாம் என்றான்.

மரத்தாலான வீடுகளையொட்டி சாக்கடை இறுகி நின்றது. தொட்டால் சரிந்துவிடும் போலிருந்த மரவீடுகள் சாக்கடை நீரின் மீது மிதக்கும் படகுகள் போலிருந்தன. அழுகல், சாக்கடை நாற்றம் காரை நிறைத்தது. உப்பிய வயிற்றுடன் குழந்தைகள் அங்குமிங்கும் திரிந்தனர். காரின் வேகம் மெதுவடைந்ததும் என்னைச் சூழ்ந்து அங்கிள், அங்கிள் என்று கூவி பிள்ளைகள் பிச்சை கேட்டது எனக்கு ஜாகர்த்தாவை நினைவூட்டியது.

பெரும்பாலான சுவர்களைச் சுவரொட்டிகள் மறைத்திருந்தன. அதில் சிலவற்றில் இரண்டு இதயங்களை வரைந்து அதற்குள் அவர்களின் பெயர்களை எழுதி இருந்தனர். பெரும்பாலானவற்றில் அமெரிக்க எதிர்ப்பு வாசகங்களே இடம்பெற்றிருந்தன.

கிரிங்கோவே வீடு திரும்பு எங்கள் கால்வாயில் மலம் கழிக்காதே சாம் அங்கிள் அடிமை நாயகன் பனாமா வியாட்னாம் அல்ல என்பதை நிக்ஸனுக்குச் சொல்லு அதிலிருந்த ஒரு வாசகம் என் இதயத்தை தில்லிடச் செய்தது. விடுதலைக்காக மரணிப்பதே கிறிஸ்துவை அடைவதற்கான பாதை. இவற்றிற்கு இடையே அங்கங்கே ஓமர் டோரிஜோஸ் படங்களும் இடம்பெற்றிருந்தன.

இப்போது வேறுபக்கம் போவோம் என்னிடம் அரசுக் கடவு உண்டு, நீங்கள் அமெரிக்கக் குடிமகன் என்பதால் அங்கே போவதற்கு இடையூறு இல்லை என்றான் பிடல். செக்கர் வானுக்கு அடியில் எங்கள் கார் கால்வாய் பிரதேசத்தில் ஊர்ந்தது. ஓரளவு யூகித்ததுதான் என்றாலும் இது நினைத்ததற்கும் மேலாக இருந்தது. நம்பமுடியாத செல்வச்செழிப்பு. வெளேரென்று மின்னும் பிரமாண்ட மாளிகைகள். அலங்கார வேலைப்பாடுகள் கொண்ட நெடிய விதானங்கள். ஆடம்பரமான வீடுகள். கோல்ப் மைதானங்கள். கடைகள். திரையரங்குகள்.

இவையனைத்தும் அமெரிக்கர்களுக்குச் சொந்தமானவை. அனைத்து வணிக வளாகங்களும், சவரக்கடைகளும், அலங்காரச் சலூன்களும், உணவகங்களும், எல்லாம் அவர்களுடையவைதான். பனாமா விதிகளில் இருந்து விலக்கும் வரி விலக்கும் பெற்றவை. இங்கே 18 ஓட்டை கோல்ப் அரங்கம் மட்டும் ஏழு உள்ளன. வேண்டிய இடங்களில் அஞ்சலகங்கள். அமெரிக்க நீதிமன்றங்கள், பள்ளிகள் அனைத்தும் உண்டு. ஒரு நாட்டிற்குள் மெய்யான இன்னொரு நாடு இங்கே உண்டு என்று விவரித்தான்.

என்ன ஒரு அவமானம்

பிடல் என்னை மேலிருந்து கீழ் வரை ஒரு முடிவிற்கு வந்ததுபோல் பார்த்தான். ஆம். சரியாகச் சொன்னீர்கள். அவமானம் பொருத்தமான வார்த்தை. தான் நகரத்தைக் காட்டிச் சொன்னான் அங்கே நகரச் சேரிகளில் ஒரு நபருக்கு ஆண்டு வருமானம் ஆயிரம் டாலர். வேலையற்றோர் முப்பது சதவீதம். அந்த நகரத்தில் ஒரு ஆயிரம் டாலரை நெருங்கவே முடியாது. வேலை யாருக்கும் எளிதில் கிடைக்காது என்றான்.

அப்படியானால் எப்படித்தான் வாழ்கிறார்கள்.

திரும்பி என்னை ஒரு பார்வை பார்த்தான். கோபத்தில் கனன்ற அவன் முகம் வருத்ததிற்குத் திரும்பியது.

நாங்கள் என்னதான் செய்வது. என்ன செய்வது என்று எனக்குத் தெரியாது. தலையை உலுக்கிக்கொண்டான். ஆனால்

ஒன்று மட்டும் சொல்வேன். டோரிஜோஸ் மேற்கொள்ளும் முயற்சியால் அவருக்கு மரணம் கூட நேரலாம். ஆனால் அவர் முயற்சிக்கத் தேவையான உறுதியை இந்த நரகம் அளித்திருக்கிறது. அவர் ஒருவரே மக்களுக்காகப் போராடும் மனிதர்.

கால்வாய்ப் பகுதிக்குப் போகும்போது பிடல் சிரித்தான். உங்களுக்கு டான்ஸ் ஆட விருப்பமா? எனது பதிலை எதிர்பார்க்காமலே சொன்னான். நாம் இரவு விருந்திற்குப் போகலாம். நான் பனாமாவின் இன்னும் ஒரு பக்கத்தைக் காட்டுகிறேன்.

அத்தியாயம் - 12

சிப்பாய்கள் வேசிகள்

சாறு சுவைக்கும் இறைச்சித்துண்டுகளையும், குளிர் பியரையும் அருந்திய பின் இருண்டதெருவிற்குள் எங்கள் கார் ஊர்ந்தது. இது நடக்கக்கூடிய பகுதியல்ல என்றான் பிடல். இங்கே வரும்போது காரின் முன் வலதுபக்கம் அமர்ந்துகொள்ள வேண்டும் என்று கூறிவிட்டு அதோ அந்த வேலிக்குப் பின்னால்தான் கால்வாய்ப் பகுதி இருக்கிறது என்று சுட்டிக்காட்டினான்.

கார் நிறுத்துவதற்கு வசதியான இடம் கண்டுபிடித்து நிறுத்தினான். ஒரு முதியவர் விந்தியபடி எங்களை நெருங்கினார். பிடல் விரைந்துசென்று அவர் முதுகில் தட்டி நேசத்துடன் கைகொடுத்தான்.

என் ராசாத்தியான இவளை நன்றாகப் பார்த்துக்கொள் என்றபடி ஒரு பில்லை அவர் கையில் திணித்தான்.

கார் நிறுத்தத்தில் இருந்து சிறிதுதூரம் நடந்து சென்றோம். பின் சட்டென்று தெருவிற்குள் நியான் வெளிச்சத்தில் மூழ்கினோம். இரண்டு பையன்கள் கையில் குச்சியைப்பிடித்துத் துப்பாக்கியால் சுடும் ஓசையை எழுப்பியபடியே ஓடிவந்து பிடலின் கால்களுக்கு இடையில் இடித்துக்கொண்டனர். பிடலின் தொடை உயரத்திற்கே இருந்த பையன்.

மன்னித்துவிடுங்கள் சார் என்று ஸ்பானிஷில் திக்கித் தடுமாறினான்.

பிடல் தன் கைகளையும் பையனின் தோளில் வைத்தான். பரவாயில்லை, தம்பி. நீங்கள் ஏன் சுட்டுக்கொண்டீர்கள் சொல்வீர்களா?

இன்னொரு பையன் வந்து முதலாமவனைப் பாதுகாப்பது போல் கையை வைத்துக்கொண்டு இவன் என் தம்பி. எங்களை மன்னித்துவிடுங்கள் என்றான்.

பிடல் அவர்களை இதமாகத் தடவிக்கொடுத்து. எனக்கொன்றும் அடிபடவில்லை. சரி நீங்கள் ஏன் சுட்டுக் கொண்டீர்கள்? அதைச்சொல்லுங்கள். எப்போதும் இதேபோல்தான் விளையாடுவீர்களா?

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். பின் பெரியவன் சொன்னான். இவன் கால்வாய்ப் பகுதியின் ஜெனரல் கிராங்கோ. என் அம்மாவை பலாத்காரம் செய்துவிட்டான். அதனால் அவனிடத்திற்கே அனுப்பிவைக்கிறேன் என்றான்.

பிடல் என்னை அரைப்பார்வை பார்த்து அவனைக் கேட்டான் எந்த ஊர்க்காரன் அவன்.

அவன் சொந்த ஊர் அமெரிக்கா

இங்கே உன் அம்மா வேலை செய்கிறாளா?

ஆம். அதோ அங்கே. மதுப் பரிசாரகர் என்று பெருமையுடன் தெரு நியான் விளக்கின்கீழ் சுட்டிக்காட்டினான்.

பிடல் அவர்களை கையில் நாணயத்தை வைத்து. சரி போங்க. ஜாக்கிரதை வெளிச்சத்திலேயே விளையாடுங்கள் என்றான்.

ஆகட்டும் என்று கூறிவிட்டு ஓடிப்போனார்கள்.

நாங்கள் நடையைத் தொடர்ந்தோம். பிடல் சொன்னான். பனாமியர் விபச்சாரம் செய்வதற்குச் சட்டரீதியான தடையுள்ளது இங்கே. மதுவும் நாட்டியமும் வழங்கலாம். ஆனால் உடலை விற்க முடியாது. மேற்படி இறக்குமதிக்காகவிடப்பட்டுள்ளது.

ஒரு பாருக்குள் நுழைந்தோம். உள்ளே பிரபலமான அமெரிக்கப் பாடல் முழங்கிக்கொண்டிருந்தது. அந்த இடத்திற்குப் பொருந்த கண்ணும், காதும் சிலநிமிடங்களை எடுத்துக்கொண்டன. இரண்டு கொழுத்த அமெரிக்கச் சிப்பாய்கள் கதவருகே நின்று கொண்டிருந்தனர். அவர்களது சீருடை புஜப் பட்டைகள் ராணுவக் காவலர்கள் என்பதைக் காட்டின.

பிடல் பாரினுள்ளே அழைத்துச் சென்றான். அங்கே மேடையிருந்தது. மூன்று இளம்பெண்கள் தலையைத் தவிர முற்றிலும் நிர்வாணமாக நாட்டியமாடிக் கொண்டிருந்தார்கள். ஒருத்தி மாலுமித்தொப்பி, அடுத்தவள் பச்சைத்தொப்பி, இன்னொருத்தி மாட்டுக்காரன் தொப்பியுமாக அணிந்திருந்தார்கள். விளையாட்டுப்போல இருந்தாலும் ஒருவருக்கொருவர் போட்டியிட்டு ஆட்டம் போட்டனர். மேடையமைப்பு இசை, நாட்டியம் அனைத்தும் பாஸ்டன் டிஸ்கோ போலவே இருந்தது, நிர்வாணம் தவிர.

ஆங்கிலத்தில் பேசிக்கொண்டிருந்த இளைஞர் கும்பலைக் கடந்து சென்றோம். டீ சட்டையும், நீல ஜீன்ஸும் அணிந்திருந்தாலும், முடி ஒட்டவெட்டிய தலை அவர்கள் கால்வாய்ப்பகுதி ராணுவச் சிப்பாய்கள் என்பதைக் காட்டியது. பிடல் பரிசாரகியின் தோளில் தட்டினான். அவள் திரும்பியதும் சந்தோசத்தில் கூவினாள். பிடலின் புஜத்தில் கைபோட்டுக் கட்டிக் கொண்டாள். இதைக் கவனித்த இளைஞர் குழு தங்களுக்குள் எரிச்சலுடன் பார்த்துக்கொண்டது. விதியின் ஆணை பனாமாப் பெண்களுக்கும் பொருந்தும் என்று அவர்களுக்குள் நினைத்திருப்பார்களோ என்று தோன்றியது. அப்பரிசாரகி எங்களை ஒரு மூலைக்கு அழைத்து நாங்கள் அமர இருக்கை, மேசையை ஏற்பாடு செய்தாள்.

நாங்கள் அமர்ந்த பின் பின்பக்கம் திரும்பி இரண்டு பேரிடம் ஸ்பானிஷில் வாழ்த்துக்கள் பரிமாறிக்கொண்டான் பிடல். அரைக்கைச் சட்டையையும், அதன் இஸ்திரிக் கூர் விளிம்புகளையும் பார்க்க, சிப்பாய்களாகத் தோன்றவில்லை. பரிசாரகி வந்து இரண்டு பல்போவா பியர்ப் புட்டிகளை வைத்தாள். அவள் திரும்ப எத்தனிக்கையில் பிடல் அவள் பிட்டத்தில் தட்டினான். அவள் சிரித்துக்கொண்டு அவனுக்கு ஒரு முத்தத்தைக் காற்றில் வீசினாள். இளைஞர் கும்பல் எங்களைப் பார்த்துக்கொண்டிருக்கவில்லை என்பதறிந்து நிம்மதிப் பெருமூச்சு விட்டேன். அவர்களது கவனம் ஆட்டத்தில் இருந்தது.

அங்குள்ள விருந்தினர்கள் பெரும்பாலும் ஆங்கிலம் பேசும் சிப்பாய்கள் என்றாலும் எங்களுக்குப் பக்கத்தில் இருப்பவர்களைப் போல பிறரும் அனேகப் பனாமியரும் இருக்கவே செய்தனர். அவர்களில் பலர் வெளியே நின்றுகொண்டிருந்தனர். ஏனென்றால் அவர்களது தலைமுடி சோதனைக்குத் தப்பாது. அதுபோக டி-சட்டைகளும் ஜீன்ஸும் அணிந்திருக்கவில்லை. சிலர் மேசையில் அமர்ந்திருந்தனர், சிலர் சுவற்றில் சாய்ந்துகொண்டு, ஆட்டு மந்தையை அணைந்திருக்கும் கூலிகளைப்போல மிகுந்த எச்சரிக்கையுணர்வுடன் நின்றிருந்தனர்.

மேசைகளுக்கிடையே உலவியும், ஆண்களின் மடியில் உட்கார்ந்தும், பரிசாகிகளை ஏவியும், சுற்றிச் சுழன்றும், தங்கள் முறை வருகிறபோது ஆடியபடியும் இருந்த பெண்கள் குட்டைப் பாவாடைகளும், டி சட்டைகளும், குதிஉயர் செருப்புகளும் அணிந்திருந்தனர். ஒருத்தி மட்டும் விக்டோரிய மோஸ்தர் கவுனும்,

முகத்திரையும் அணிந்திருந்தாள். மற்றொருத்தி பிகினி மட்டும் அணிந்திருந்தாள். மிகஅழகாகக் காட்டிக்கொள்ளும் பெண்களே இங்கே தங்களை ஒப்பேற்றிக்கொள்ள முடியும் போலும். இத்தனை பெண்கள் பனாமாவைத் தேடி வந்திருக்கிறார்கள் என்பதையும், இந்த நிலைக்கு அவர்களைத் துரத்திவிட்ட நெருக்கடியையும் நினைத்துப் பார்த்தேன்.

இசையின் இரைச்சலுக்கும் மேலாக உரத்து பிடலிடம் சொன்னேன் எல்லாம் மற்ற நாட்டுப் பெண்கள்.

மறுக்கும் விதமாகச் தலையை அசைத்து பரிசாரகியை சுட்டிக் காட்டி அவளைத் தவிர மற்றெல்லோரும் பனாமியர்கள் என்றான்.

எந்த நாட்டுக்காரிகள்

ஹோண்டுராஸ், எல்சல்வடார், நிகாரகுவா, குவாதிமாலா

அண்டை நாட்டினர்

முழுவதும் அல்ல. கோஸ்டாரிக்கா, கொலம்பியாதான் எங்களுக்கு மிக நெருங்கிய அண்டைகள்.

எங்களுக்கு மேசையளித்தப் பரிசாரகி பக்கத்தில் வந்து பிடலின் முட்டிக் காலில் அமர்ந்தாள். அவன் அவளது பின்புறத்தை இதமாகத் தடவினான்.

கிளாரிசா, என் வடஅமெரிக்க நண்பனுக்குச் சொல்லு ஏன் அவர்கள் எல்லாம் தங்கள் நாட்டைவிட்டு வருகிறார்கள் என்று கூறிவிட்டு ஆட்ட அரங்கத்தை நோக்கித் தலையை நீட்டினான். மூன்று நிர்வாணப் பெண்கள் உடையணிய அவர்களது தொப்பிகளை மற்ற பெண்கள் ஏற்றுகொண்டனர். புதிய பெண்களின் ஆட்டத்திற்காக இசை சல்சாவிற்குத் தாவியது. இசைக்கு ஏற்றவாறு நளினமாக உடைகளைக் களைந்தனர்.

கிளாரிசா தனது வலது கையை நீட்டி உங்களைச் சந்திப்பதில் தயை கனிகிறேன் என்றாள். வெற்றுப் போத்தல்களை எடுத்தபடி பிடலுக்குப் பதிலளிக்கும் முகமாக இந்தப் பெண்கள் உதைபடாமல் தப்புவதற்காக இங்கே வந்துவிட்டார்கள். இன்னும் இரண்டு பல்போவா கொண்டு வர்ரேன் என்றாள்.

அவள் போனபின்னர் பிடல் பக்கம் திரும்பி இங்கே அமெரிக்க டாலர்களுக்காக வந்திருக்கிறார்களா? சொல்லு என்றேன்.

உண்மை அதுதான். ஆனால் அனேகம் பேர் இனவெறியர்கள் ஆள்கிற நாட்டைச் சேர்ந்தவர்கள்.

என்ன விளையாடுகிறாயா? நான் பிடலை நேருக்கு நேர் பார்த்தபடி கேட்டேன். மேடையில் மூன்று பெண்களும் மென்சிரிப்புடன் தொப்பியைத் தூக்கிபோட்டுப் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

இல்லை. விளையாட்டாக இருக்கவேண்டும் என்பதுதான் எனது விருப்பமும். ஆனால் நான் சொன்னது செரிக்கமுடியாத நிஜம். இதிலுள்ள பெரும்பாலான பெண்கள் தங்கள் பெற்றோரை, உடன்பிறந்தவர்களை, காதலனை, கணவனை, குடும்பத்தை இழந்தவர்கள். அவர்கள் அனுபவித்த மரணச் சித்திரவதையைவிட இங்கே ஆடுவதும், விபச்சாரம் புரிவதும் கொடுமையாகத் தோன்றுவதில்லை. இங்கே நிறையப் பணம் சம்பாதித்து, எங்காவது போய் ஒரு சின்ன காபிக்கடை போன்ற ஒன்றை ஆரம்பித்து...

பாருக்குப் பக்கத்தில் இருந்துவந்த சப்தத்தில் அவன் பேச்சு நின்றுபோனது. சிப்பாய்களில் ஒருவனை நோக்கி உயர்ந்த பரிசாரகியின் முஷ்டி காற்றில் அலைந்துகொண்டிருந்தது. சிப்பாய் அவள் மணிக்கட்டைப் பிடித்துத் திருகினான். அவள் கையைப் பிடித்துக்கொண்டு முட்டிக்குள் தலைபுதைத்து கூச்சலிட்டாள். அவன் இகழ்ச்சியாகச் சிரித்தபடி தன் சகாக்களுக்கு அவளைக் காட்டினான். எல்லோரும் கூச்சலிட்டுச் சிரித்தார்கள். அவள் தனது இன்னொரு கையால் அவனைத் தாக்க முயன்றாள். அவன் பலவந்தமாக முறுக்கினான். அவள் முகம் வலியில் கோணியது.

காவலர்கள் கதவிற்குப் பக்கத்திலேயே நின்று அமைதியாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பிடல் பாதங்களை ஊன்றி பாருக்கு அருகில் போக முயன்றான். எங்களுக்குப் பக்கத்தில் இருந்த பிடலின் நண்பன் ஸ்பானிஷில் ட்லன்குய்லோ ஹெர்மெனோ என்றான். அதாவது அமைதியாய் இரு சகோதரா என்றிக் கவனித்துக் கொள்வான்.

மேடையின் நிழலிருந்து ஒரு உயரமான, சன்னமான பனாமியன் பூனைபோலப் பதுங்கி வந்து சட்டென்று சிப்பாய் மீது கவிந்தான். அவனது ஒரு கை சிப்பாயின் கழுத்தை இறுக்கியது. இன்னொரு கை தண்ணீரை அவன் முகத்தில் ஓங்கி அறைந்தது. பரிசாரகி அங்கிருந்து நகர்ந்துவிட்டாள். சுவற்றில் சாய்ந்து நின்று கொண்டிருந்த பனாமாவியர் என்றிக்கிற்குப் பாதுகாப்பாக வளையமிட்டு நின்றனர். அவன் சிப்பாயைத் தலைக்கு மேலே தூக்கி ஏதோ சொன்னான். எனக்குப் புரியவில்லை.

பின் ஆங்கிலத்தில் நிதானமாக ஒவ்வொரு வார்த்தையாக இசையைவிட உரக்கச் சொன்னான். பரிசாரகிகள் மீது கை வைக்கக்கூடாது. பிறர் மீதும் பணம் தருவதற்கு முன் கை படக்கூடாது.

இப்போதுதான் ராணுவக் காவலர்கள் காட்சிக்குள் வந்து என்ரிக் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்றார்கள்.

சிப்பாயைக் கீழிறக்கி தரையில் போட்டு இறுதிப் பிடியை இறுக்கினான். அவன் வலியால் ஹீனமாகக் கத்தினான்.

நான் சொல்றது புரிஞ்சதா? சலனம் அடங்கியது. நல்லது. இவனை வெளியேற்றுங்கள் என்று சிப்பாயை ராணுவக் காவலர்களை நோக்கித் தள்ளிவிட்டான்.

அத்தியாயம் - 13

ஜெனரலுடன் ஒரு சந்திப்பு

முற்றிலும் எதிர்பாராத அழைப்பு ஒன்று வந்தது. அதே 1972 ஆம் ஆண்டு பயணத்தின் போது எனக்குத் தரப்பட்ட பனாமா அரசிற்குச் சொந்தமான மின் பயனீட்டு நிறுவனத்தின் இன்ஸிடுடோ தே ரெக்ரூஸஸ் ஹைட்ராலிக்கோஸ் இ எலக்ட்ரிபிகேசியோன் அலுவலகத்தில் ஒருநாள் காலையில் அமர்ந்து, புள்ளி விபரங்களுக்குள் நான் நுணுகிக்கொண்டிருந்தபோது திறந்த கதவின் சட்டகம் தட்டப்பட்டது. என்னில் அப்பிக்கிடந்த எண்களை உதறிவிட்டு வந்தவரை வரவேற்றேன். தன்னை ஜெனரலின் உதவியாளர் என்று அறிமுகப்படுத்திக்கொண்ட அவர் என்னை ஜெனரலின் மாளிகைக்கு அழைத்துச்செல்லவிருப்பதாகக் கூறினார்.

அடுத்த ஒருமணி நேரத்தில் ஓமர் டோரிஜோஸுக்கு எதிர் இருக்கையில் அமர்ந்தேன். பனாமியருக்கு உரிய மோஸ்தரில் இயல்பான காக்கிநிற முழுட்ரவுசரும், மேலிரண்டு பொத்தாணிடப்படாத வெளிர்நீலத்தில் அடர்பச்சையில் மெடல்கள் பதித்த சட்டையும் அணிந்திருந்தார். நல்ல உயரம், கச்சிதமான உடலமைப்பு, கவர்ச்சிகரமான தோற்றம். அத்தனை பொறுப்புகளையும் சுமந்துகொண்டு நம்பமுடியாத அளவிற்கு இயல்பாக அமர்ந்திருந்தார். பரந்த நெற்றியில் கற்றை கறுப்பு முடி நழுவி இறங்கியது.

என்னுடைய சமீபத்திய இந்தோனேசியா, குவாதிமாலா, ஈரான் பயணம் குறித்து விசாரித்தார். அம்மூன்றுமே அவரைக் கவர்ந்த நாடுகள்தாம் என்றாலும் ஈரான் மன்னர் ஷா முகமட் ரெஜா பாலவி குறித்து கூடுதல் ஆர்வத்துடன் விசாரிப்பதுபோல் தோன்றியது. ஹிட்லருடன் தொடர்புகொண்டிருந்ததாக பிரிட்டிஷும், சோவியத்தும் குற்றம்சாட்டி ஷாவின் தந்தை பதவியில் இருந்து தூக்கிஎறியப்பட்டப் பிறகு 1941 ல் ஷா பதவிக்கு வந்தார்.

டோரிஜோஸ் என்னைக் கேட்டார் சொந்தத் தந்தையையே பதவியில் இருந்து கவிழ்ப்பதென்பதை உன்னால் கற்பனை செய்ய முடியுமா?

நிலைமைகள் தலைகீழாகத் திரும்பி, தனது முதல்மை அமைச்சரான முகமட் மொஷாடெக் 1951ல் எப்படி ஷாவை நாட்டை விட்டுத் துரத்தினார் என்பது பற்றியும், சிஐஏ எப்படி மொஷாடெக்கை கம்யூனிஸ்ட் என்று முத்திரை குத்தி மீண்டும் ஷாவைப் பதவியில் அமர்த்தியது என்பது பற்றியும் பேசினார். சிஐஏவின் இந்நடவடிக்கை ஏகாதிபத்திய வரலாற்றில் புதிய பக்கங்களைத் துவக்கி வைத்தது என்பது பற்றியும் கெர்மிட் ரூஸ்வெல்டின் தந்திரங்கள் குறித்தும் பேசுவதைத் தவிர்த்து விட்டார். தனது நாட்டிற்கு அப்பால் தொலைவில் உள்ள நாடுகளைப் பற்றி நுணுக்கமான விபரங்களை டோரிஜோஸ் துல்லியமாக அறிந்து வைத்திருந்தார்.

ஷா மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்ட பிறகு அடுத்தடுத்த புரட்சிகரமான திட்டங்கள் மூலம் தொழில்துறையை அறிமுகப்படுத்தி ஈரானைப் புதிய யுகத்திற்கு எடுத்துச் சென்றது என டோரிஜோஸ் பேச்சைத் தொடர்ந்தார்.

எப்படி இவ்வளவு ஆழமாக ஈரான் பற்றித் தெரிந்து வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டேன்.

ஷாவின் அரசியலை உயர்வானதென்று நான் நினைக்கவில்லை. தன் தந்தையைத் தூக்கி எறிந்திருந்தாலும், சிஐஏவின் கைப்பாவையாக இருந்தாலும் தனது நாட்டிற்குச் சில நன்மைகளைச் செய்திருக்கிறார். அவரிடம் சிலவற்றை நான் கற்றுக்கொள்ள வேண்டும். அவரும் உயிர்த்திருப்பாரா? என்று கேட்டார்.

மாட்டார் என்று நினைக்கிறீர்களா?

அவருக்கு சக்திவாய்ந்த எதிரிகள் உண்டு.

உலகில் தேர்ந்த மெய்க்காவலர்களும் அவருக்கு உண்டு

என்று நான் கூறியதும் என்னை ஏளனமாகப் பார்த்தார். சாவாக் என்ற அவரது ரகசியக்காவலர்கள் இரக்கமற்ற தக்கிகள் (இந்தியக் கொலையாளிகள்) என்ற பெயர் பெற்றவர்கள்தான் என்றாலும் அது நட்பினை ஈட்டித் தராது (எதிரிகளையே உருவாக்கும்) நீண்ட நாட்களுக்கு நிலைக்கமாட்டார் என்று கூறிவிட்டு, சற்று மவுனமாக இருந்தார். பின் கண்களை உருட்டி மெய்க்காவலர்கள்.? ஏன் என்னிடம் கூடத்தான் சில மெய்க்காவலர்கள் உண்டு என்று கதவுப்பக்கம் கையைக் காட்டினார். அவர்களால் என் உயிரைக் காக்க முடியுமா? உன் நாடு என்னைக் கொல்வதென்று முடிவு எடுத்து விட்டால்?.....

நிஜமாகவே அப்படி ஒரு வாய்ப்பை எதிர்நோக்குகிறாரா என்று கேட்டேன்.

இப்படி ஒரு கேள்வி கேட்கும் நீ என்ன முட்டாளா? (பின்னே இல்லையா) என்று கேட்கிற பாவனையில் தன் புருவங்களை உயர்த்தினார். எங்களிடம் ஒரு கால்வாய் உள்ளது. அது அர்பென்ஜையும் யுனைட்டெட் புரூட்டையும் விட மிகவும் பெரியது.

நான் குவாதிமாலாவில் ஆய்வு செய்தவன் என்பதால் டோரிஜோஸ் சொல்வதைப் புரிந்துகொள்ள முடிந்தது. பனாமாவின் கால்வாய் அளவிற்கு யுனைட்டெட் புரூட்ஸும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது. 1800 இல் நிறுவப்பட்ட அந்நிறுவனம் மத்தியஅமெரிக்காவில் வெகுவிரைவில் வலுவான சக்தியாக மாறியது. 1950 களில் பெரும் சீர்திருத்தவாதியாக அறியப்பட்ட ஜாக்கோபோ அர்பென்ஜ் குவாதிமாலாவில் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பிராந்தியமே அவரை ஜனநாயக அமைப்பின் முன்மாதிரியாக வரவேற்றது. அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட நேரத்தில் குவாதிமாலாவின் 70 சதவீத நிலம் 3 சதவீதமானோரின் கைகளில் இருந்தது. ஏழைமக்களின் பசியைக் குழிதோண்டிப் புதைக்க வழி வகுப்பேன் என்று வாக்குறுதி அளித்திருந்தார். அதன்படியே தேர்ந்தெடுக்கப்பட்ட பின் ஒருங்கிணைந்த நிலச்சீர்திருத்தத் திட்டத்தை அமுல்படுத்தினார்.

டோரிஜோஸ் கூறினார். இலத்தீன்அமெரிக்கா முழுவதிலும் அடித்தட்டு, நடுத்தட்டு மக்கள் அர்பென்ஜைப் பெரிதும் கொண்டாடினார்கள். தனிப்பட்ட முறையில் அவர் எனக்கு முன் மாதிரி நாயகன். ஆனால் நாங்கள் அவரை பிரமிப்புடன் தான் பார்த்தோம். குவாதிமாலாவின் பெரும் நிலப்பரப்பையும் ஆதிக்கத்தையும் தன்வசம் கொண்டிருந்ததால் யுனைடெட் புரூட்ஸ் அவருடைய நடவடிக்கைகளை எதிர்த்தது. மேலும் அவர்கள் கொலம்பியா, கோஸ்டா ரிக்கா, கியூபா, ஜமைக்கா, நிகாரகுவா, சாண்டா டொமிங்கோ இங்கே பனாமாவிலும் பெரும் நிலவுடைமையாளர்களாக இருந்தனர். அர்பென்ஜின் சிந்தனைகளில் மீதமுள்ளவர்களும் செல்வாக்குப் பெறுவதை யு.பு வால் பொறுத்துக்கொள்ள முடியாது.

பிறகு என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியும். யுனைடெட் அமெரிக்காவில் மக்கள்தொடர்பு இயக்கத்தை நடத்தியது. குவாதிமாலா சோவியத்தின் பிரச்சாரக் கருவி. அர்பென்ஜ் ரஷ்யாவின் கையாள் என்று அமெரிக்க மக்களையும்,

காங்கிரஸையும் நம்பச் செய்தது. சிஐஏ 1954ல் தனது கவிழ்ப்புச் சங்கினை ஊதியது. அமெரிக்க விமானங்கள் குவாதிமாலா நகரத்தில் குண்டுகளை வீசின. தேர்தல் மூலமாக ஆட்சிக்கு வந்த அர்பென்ஜ் தூக்கி எறியப்பட்டார். கர்னல் கார்லோஸ் கஸ்டிலோ அர்மாஸ் என்ற இரக்கமற்ற வலதுசாரிச் சர்வாதிகாரி அதிகாரத்தில் அமர்த்தப்பட்டான்.

புதிய அரசாங்கத்திற்கு வேண்டிய அனைத்தையும் யுனைடெட் புரூட்ஸ் செய்து கொடுத்தது. அதற்கு நன்றிக்கடனாக நிலச்சீர்திருத்தத்தைத் திரும்பப் பெற்றது குவாதிமாலா. வட்டி மீதான வரிகளை ரத்து செய்தது. அந்நிய முதலீட்டாளர்களுக்கு ஈவு வழங்கியது அரசாங்கம். ரகசிய வாக்கெடுப்புமுறை ரத்து செய்யப்பட்டது. இதை விமர்சிக்கிறவர்களை ஆயிரக்கணக்கில் சிறையிலடைத்தது. காஸ்டில்லோவிற்கு எதிராகப் பேசும் துணிச்சல் கொண்ட அனைவரும் தண்டனைக்குள்ளாயினர். இந்நூற்றாண்டின் பிற்பகுதியில் பீடித்திருந்த வன்முறை, பயங்கரவாத நடவடிக்கைகள் அனைத்தையும் யுனைடெட்-புரூட்-சிஐஏ ராணுவக் கர்னல் இவர்களுக்கு இடையிலான ரகசியமற்ற வெளிப்படையான கூட்டுதான் காரணம் என்பதை வரலாற்றாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

அர்பென்ஜ் கொல்லப்பட்டார். அவர் பின்பற்றிய அரசியலும் அவரது குணப்பண்பும் திரிக்கப்பட்டன என்று கூறிய டோரிஜோஸ் சிறிதுநேரம் மவுனமாக இருந்தார். பின் என்னைப் பார்த்துக் கேட்டார் நீயும் உன் நாட்டுமக்களும் எப்படி சிஐஏவின் கேவலமான செயல்களைச் சகித்துக்கொண்டிருக்கிறீர்கள்? இதை என்னால் அவ்வளவு சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. இங்கிருப்பது எனது ராணுவம்தான். ஆனால் அதை ஒருபோதும் அரசியல் கொலையில் ஈடுபடுத்தமாட்டேன் என்று சிரித்தார்.

சிஐஏவே என்னைக் கொல்ல இருக்கிறது

சிறிதுநேரம் அமைதியாக இருந்தோம். நீண்டகாலம் தன் சிந்தனையில் இருந்ததை டோரிஜோஸ் முதல்முறையாக என்னிடம் மனம்விட்டுப் பேசினார்.

கொஞ்சம் முன்னால் சரிந்து குரலைத் தாழ்த்திச் சொன்னார் இப்போது பெக்டெல்லுக்கு எதிராகக் குரல் எழுப்புவேன்

அப்படிச் சொன்னது என்னை உலுக்கியது. பெக்டெல் சக்தி வாய்ந்த பொறியியல் நிறுவனம். பல நிட்டங்களில் மெய்னுடன்

கூட்டாக இயங்குகிறது. பனாமாப் பெருந்திட்டத்தில் எங்களுக்கு முக்கியமான போட்டியாளராக இருக்கக்கூடும் என்று நான் நினைத்திருந்தேன்.

என்ன சொல்கிறீர்கள்.

கடல்மட்டத்தில் தடுப்பு இல்லாத புதிய கால்வாய் ஒன்றைக் கட்டுவது தொடர்பாக யோசித்து இருக்கிறோம். இப்போதுள்ளதை விட பெரிய கப்பல்களை அதில் கையாள முடியும். நிதியுதவி செய்ய ஜப்பானியர்கள் ஆர்வம் காட்டலாம்.

அவர்கள்தானே கால்வாயின் பெரும் வாடிக்கையாளர்கள்.

ரொம்பச் சரி. பணம் அளிக்கும் அவர்கள்தானே கட்டுமானத்தையும் மேற்கொள்வார்கள்.

அதிர்ச்சியடைந்தேன். பெக்டெல் சில்லிட்டு விரைத்துப் போகும்.

இந்தக் கால்வாய் கட்டும் பணி சமகால வரலாற்றில் மிகப்பெரியது. சிறிதுநேரம் அமைதி. நிக்ஸன், போர்டு மற்றும் புஷ்ஷிற்கு அணுக்கமானவர்களை உள்ளடக்கியது பெக்டல். இதில் புஷ் ஜநாவில் அமெரிக்காவிற்கானத் தூதுவர். போர்டு குடியரசுக்கட்சியின் அவைத்தலைவர். இவர்கள் எல்லோரும் அரசியல் தரகர்கள் என்பது டோரிஜோஸுக்குத் தெரியாததல்ல. தனக்குப் பாதகம் என்றால் குடியரசுக் கட்சிக்கான சரடினை பெக்டெல் குடும்பம் இறுக்கிப் பிடிக்கும் என்பது எனக்கு ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த உரையாடல் எனக்குள் ஒரு நெருக்கடி உணர்வை ஏற்படுத்தியது. அவரது வெறுப்பிற்கு உள்ளான அமைப்பில் நானும் ஓர் அங்கம் என்பது அவருக்குத் தெரியும். சர்வதேசக் கடன் பெறச் செய்வதும் அதற்கு மாற்றீடாக கட்டுமானங்களில் அமெரிக்க நிறுவனங்களை அமர்த்துவதற்கு அவரை ஒப்புக்கொள்ளச் செய்வதும்தான் என் வேலை. அது பெருஞ்சுவரில் முட்டியக் கதையாகிவிட்டது. நேருக்கு நேராகப் பேசி அவர் என்ன சொல்கிறார் என்பதைப் பார்க்கலாம் என்று நினைத்தேன்.

ஜெனரல், எதற்காக என்னை அழைத்தீர்கள்? என்று கேட்டேன்.

நேரத்தைப் பார்த்துப் புன்னகைத்தார். ஆமாம் நேரமாகி விட்டது. உனக்கான வேலைக்கு நீ கிளம்பியாக வேண்டும். பனாமாவிற்கு உனது உதவி தேவை. நான் உன்னிடம் அந்த உதவியை எதிர்பார்க்கிறேன்.

நான் அதிர்ந்துவிட்டேன். என் உதவியா? நான் உங்களுக்காக என்ன செய்யமுடியும்?

நாங்கள் கால்வாயை எங்கள் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்து விடுவோம். ஆனால் அதுமட்டுமே போதுமானதல்ல. தனது இருக்கையில் தளர்வாக அமர்ந்துகொண்டார். நாங்கள் ஒரு முன்மாதிரியாகச் செயல்படவேண்டுமென்று விரும்புகிறோம். எங்களது வறியமக்களின் பால் கவனம் செலுத்தியாக வேண்டும். எங்கள் சுதந்திரத்தைப் பெறுவதில் தீர்மானமாக நிற்பதற்குக் காரணம் ரஷ்யா, சீனா, கியூபா போன்ற யாரும் எங்களை ஆட்டிப்படைக்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்தவேண்டிய கடமையும் எங்களுக்கு உண்டு. பனாமா ஒரு நியாயமான நாடு. நாங்கள் நிற்பது அமெரிக்காவிற்கு எதிராக அல்ல. ஆனால் எங்கள் ஏழைமக்களின் உரிமைக்காக நிற்கிறோம் என்பதை இந்த உலகத்திற்கு நிரூபிக்கவேண்டி உள்ளது.

ஒரு காலை எடுத்து இன்னொரு கால் மேலே போட்டுக் கொண்டார். இதையெல்லாம் செய்துமுடிக்க இந்தப் பிராந்தியத்திலேயே இல்லாத அளவிற்கு பொருளாதார அடித்தளத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும். மின்சாரம். ஆம் மின்சாரத்தை ஏழ்மையிலும் ஏழ்மையான மக்களுக்கு மாய்ய விலையில் கிடைக்கச் செய்வது. அதுபோலவே மக்களுக்கு போக்குவரத்து வசதியும், தொலைத்தொடர்பு வசதியும் குறைந்த கட்டணத்தில் ஏற்படுத்தித் தருவது. குறிப்பாக வேளாண்மை செய்வோருக்கு. இவையனைத்தையும் செய்வதற்கு உங்கள் பணம், உலகவங்கியின் பணம், இண்டர் அமெரிக்கன் வளர்ச்சி வங்கியின் பணம் தேவைப்படுகிறது.

இன்னும் கொஞ்சம் முன்னகர்ந்தார். அவரது கண்கள் என்னைப் பிடித்து நிறுத்தின. எனக்குத் தெரியும். உங்கள் நிறுவனங்களுக்கு நிறைய வேலைகள் தேவை. வழக்கமாக அதைப் பெரியதிட்டங்கள் அகலமான பெருவழிச்சாலைகள், மகத்தான மின்திட்டங்கள், ஆழமான துறைமுகங்கள் என்று வீக்கமாகக் காட்டி உங்களுக்கு வசதியான முறையில் எடுத்துக்கொள்வீர்கள். இந்தமுறை கொஞ்சம் வேறுவிதமாகச் செய்வோம். நீங்கள் விரும்பும் வேலைகளை நான் உங்களுக்குக் கொடுத்துவிடுகிறேன். நீங்கள் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சிறப்பாக வேலைகளை எங்கள் மக்களுக்குச் செய்துகொடுத்து விடுங்கள்.

அவர் முன்வைத்த யோசனை முற்றிலும் எதிர்பாராத ஒன்று. ஒரேநேரத்தில் எனக்கு அதிர்ச்சியையும், ஆச்சர்யத்தையும் அளித்தது. நான் மெய்னில் கற்றுவைத்திருந்த தந்திரங்களை

எல்லாம் ஒன்றுமில்லாமலாக்கிவிட்டது. அந்நிய உதவி என்பது வெறும் கேலிக்கூத்து என்பதை அவரும் அறிந்திருப்பார். அல்லது இனிமேலாவது தெரிந்துகொள்ள வேண்டும். அவரது நாட்டைக் கடனில் தள்ளி அவரைப் பணக்காரர் ஆக்குவதற்குத்தான் அது இருக்கிறது. அது அங்கே இருப்பது பனாமா எவ்வெப்போதைக்கும் அமெரிக்காவிற்கும், நிறுவனவியத்திற்கும் பணிகிற ஒன்றாக மாற்றுவதற்கு. அது அங்கே இருப்பது லத்தீன்அமெரிக்காவை விதியின் ஆணைப் பாதையில் கொண்டுவந்து சேர்ப்பதற்கு. என்றென்றைக்கும் அதை வாஷிங்டன்னுக்கும், வால் ஸ்டீரீட்டிற்கும் பணிய வைப்பதற்கு. இந்த அமைப்பில் உள்ள அனைவரையும் ஊழல்வாதிகளாக மாற்றமுடியும் என்ற யூகத்தை அடிப்படையாகக்கொண்டுதான் அது இயங்குகிறது. டோரிஜோஸின் தீர்மானம் சொந்த நலனை அடிப்படையாகக் கொண்டதல்ல என்பதே அதற்கு மிரட்டலாகத் தோன்றும். புதிய வடிவிலான போக்கு இதில் அனுமதிக்கப்படுமானால் அதன் தொடர்விளைவுகளால் மொத்த அமைப்பையும் அது கலகலக்கச் செய்துவிடும் என்ற உண்மையை அவர் தெரிந்திருப்பார் என்பது உறுதி.

எனக்கு எதிரில் அமர்ந்திருக்கும் மனிதர் கண்டிப்பாக இதைப் புரிந்துகொண்டிருப்பார். கால்வாய் மீதான உரிமை தனிச்சிறப்பு வாய்ந்த சக்தி என்பதால் அதுவே அவரை மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கச் செய்திருக்கும். அவர் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். தன்னை வளரும் நாடுகளின் தலைவராக நிறுவி இருக்கிறார். தன்னுடைய உதாரண புருஷனான அர்பென்ஜைப்போல் அவர் ஒரு தெளிவான முடிவு எடுத்தால் உலகமே அதைத் திரும்பிப் பார்க்கும். அப்போது இந்த அமைப்பு முறை என்ன எதிர்வினையாற்றும்? மிகக் குறிப்பாக அமெரிக்காவின் எதிர்வினை என்னவாக இருக்கும்? லத்தீன்அமெரிக்காவின் வரலாறு ஏற்கனவே நாயக மரணங்களால் நிரப்பப்பட்டுள்ளது.

எனது சொந்த நடவடிக்கைகளுக்காக வடிவமைக்கப்பட்ட நியாயங்களுடன் சவாலுக்கு நின்ற மனிதரைத்தான் நான் பார்த்துக் கொண்டிருந்தேன் என்பது எனக்கும் தெரியும். சுயபலவீனங்களில் தனக்கான பங்கை அவரும் கண்டிப்பாகப் பெற்றிருப்பார். ஆனால் அவர் ஒரு கடற்கொள்ளையனோ, இங்கிலாந்து அரசர்களிடம் கடிதம் பெற்று அதன்மூலம் ,கடற்கொள்ளையை அதிகாரப் பூர்வமாகச் செய்த ஹென்றி மார்கனோ, அல்லது பிரான்சிஸ் டேர்க்கோ அல்ல. அந்த விளம்புரப்பலகையில் எழுதப்பட்ட வாசகங்களாகிய விடுதலையே ஓமரின் லட்சியம். லட்சியங்களைக்

கொல்லும் ஏவுகணைகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பவை அரசியல்வாதிகளுக்கே உரிய ஏமாற்று வாசகங்கள் அல்ல. இதுபோன்ற வாசகங்களை டாம்பெய்ன் கூட எழுதவில்லையே?

லட்சியங்கள் இறப்பதில்லைதான். ஆனால் அதற்குப்பின்னால் உள்ள மனிதர்களுக்கு என்ன நேர்ந்தது. சே, அர்பென்ஜ், அலெண்டே இப்போது கடைசியாக ஒருவர் மட்டுமே உயிரோடு இருக்கிறார். அதுவும் எத்தனை நாளைக்கு? மேலும் இன்னொரு கேள்வியும் எழுகிறது. டோரிஜோஸும் தியாகி பாத்திரம் ஏற்கும் வேட்கைகொண்டால் நான் எப்படிப் பொறுப்பு ஏற்பேன்?

அவரிடமிருந்து விடைபெறும்போது நாங்கள் இருவரும் ஒரு புரிதலுக்கு வந்தோம். பெருந்திட்டத்திற்கான ஒப்பந்தத்தை மெய்ன் பெறும். நாங்கள் செய்துமுடிக்கவேண்டிய டோரிஜோஸின் கடப்பாட்டை நான் பார்த்துக்கொள்ள வேண்டும். அதாவது திட்டங்கள் அதிகபட்ச நாட்டு மக்களுக்கு நன்மைகளை அளிக்க வேண்டும்.

அத்தியாயம் - 14

ஏழு எண்ணெய்ச் சகோதரிகள்

மெய்னின் தலைமைப் பொருளாதாரன் என்ற வகையில் துறையை கண்காணித்து வந்ததோடு புவிக்கோளம் முழுதும் நாங்கள் மேற்கொள்ளும் ஆய்வுகளுக்கும் நானே பொறுப்பு என்பது மட்டுமல்லாமல் தற்கால பொருளாதாரப் போக்கு மற்றும் கோட்பாடுகளில் நான் பரிச்சயம் பெற்றிருக்கவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. 1970 களின் துவக்கத்தில் சர்வதேசப் பொருளாதாரத்தில் மிகப்பெரும் தாவல்கள் நிகழ்ந்திருந்தன.

உலகின் ஏழு பெரும் எண்ணெய் நிறுவனங்கள் சுத்திகரிப்பு மற்றும் விற்பனையைத் தம் கையில் வைத்திருந்தன. சந்தையில் அடிக்கும் கொள்ளை லாபத்தில் எண்ணெய் வளநாடுகள் பங்கு பெற முடிவதில்லை. எனவே இவை கூட்டாக இணைந்து 1960 களின் போது எண்ணெய்க் கூட்டமைப்பை (ஒபெக்) உருவாக்கின. அது ஏழு சகோதரிகள் என்றழைக்கப்பட்ட எண்ணெய் நிறுவனங்களின் அதிகாரத்திற்குப் பேரிடியாக அமைந்தது. ஒபெக்கில் ஈரான் முன்னணி சக்தியாகத் திகழ்ந்தது. இத்தனைக்கும் தனது அரசியல் அதிகார நிலைத்தன்மையையும் உயிருக்கான உத்திரவாதத்தையும் மொஸாடெக்கிடமிருந்து காப்பாற்றிக்கொள்ள மன்னர் ஷா அமெரிக்காவின் சதிவலையை பயன்படுத்தியிருந்தார். உண்மையில் ஷாவை அச்சம் பீடித்திருந்த நேரமது. பிற எண்ணெய் வளப் பணக்கார நாடுகளின் அதிகாரத் தலைமைகளும் ஷாவிடம் அந்த எச்சரிக்கையுணர்வையும் சேர்த்தே பகிர்ந்துகொண்டிருந்தன. பெட்ரோல் விலையைக் குறைக்கும் ஏழு சகோதரிகளின் கூட்டுத் திட்டத்தையும் அறிந்தே இருந்தனர். இந்தப் பின்னணியில்தான் ஒபெக் துவக்கப்பட்டது.

ஒபெக் பிரமாண்ட ஆலை நிறுவனங்களை 1970 இல் மண்டியிடச் செய்தபோது பின்வரும் நிகழ்வுகள் அரங்கிற்கு வந்தன. அடுத்தடுத்த காய் நகர்த்தலின் இறுதியில் 1973 இல் ஏற்பட்ட எண்ணெய்த் தடைக்கு அமெரிக்க எரிவாயு நிரப்பு நிலையங்களில்

நின்ற நீண்டவரிசை அடையாளமானது. பொருளாதாரத் தாக்கம் பழைய பணவீக்கத்தைக் கொண்டுவந்துவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியது. அதை சிலர் முழுமையாக்கத் துவங்கியதால் வளர்ந்த பொருளாதார உலகிற்கு அடுத்தடுத்த அதிர்ச்சியாகவும், மிகப் பயங்கரமாகவும் இருந்தது.

அமெரிக்காவிற்கு அந்தநேரத்தில் மோசமான எண்ணெய் நெருக்கடி மட்டுமல்ல. அங்கு ஏற்கனவே குழப்பம், அச்சம் தன்னம்பிக்கையின்மை அனைத்தும் பீடித்திருந்தன, வியட்னாம் போரில் ஏற்பட்ட அவமானகரமான தோல்வியை அடுத்து ஜனாதிபதி ராஜினாமா செய்யவிருக்கும் நிலை. அனைத்தும் ஒருசேர வந்து சேர்ந்தது. தென்கிழக்கு ஆசியா, வாட்டர்கேட் ஊழலுடன் மட்டும் நின்றுவிடவில்லை நிக்ஸனுக்கான பிரச்சனைகள். அவர் பதவி ஏற்றதையடுத்து உலகின் அரசியலும், பொருளாதாரமும் புதிய யுகத்தை நோக்கி அடியெடுத்து வைக்கிறது என்ற எதிர்பார்ப்பும் (பொய்த்துப் போனதால்) இப்போது பின்னிருந்து தாக்கியது. ஒரு காலத்தில் குட்டிப்பையன்களாக இருந்த ஓபெக் உள்ளிட்ட நாடுகள் கூட இப்போது அமெரிக்காவிற்கு எதிராகக் கையை ஓங்கிக்கொண்டு வருகின்றன.

நான் உலகநிகழ்வுகளில் ஆர்வம் பெற்றிருந்தேன். நிறுவனவியம்தான் எனது ரொட்டிக்கு வெண்ணை தடவி விடுகிறது என்றாலும் அவரவர்களுக்கு உரிய பொருத்தமான இடத்தில்தான் என் எஜமானர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து நான் கள்ளச் சிரிப்பு சிரித்தேன். எனது குற்றவுணர்ச்சிக்கு அது ஒத்தடமாகக்கூட இருந்திருக்கலாம்.

தடையின் தாக்கம் அப்போது எங்களுக்கு முழுமையாகத் தெரிந்திருக்கவில்லை. மிக நிச்சயமாக எங்களுக்கான கோட்பாடுகள் இருந்தனதான் என்றாலும் அவற்றின் வழியாக பொருளாதாரத் தாக்கத்தின் தெளிவான சித்திரத்தைப் பெற முடியவில்லை. 1950 களில் இருந்து 60 கள் வரை இருந்ததைவிட அதற்குப் பிற்பட்ட காலத்தில் பாதியளவாகக் குறைந்துவிட்டது. கடுமையான பணவீக்கத்திற்கு எதிராக வளர்ச்சி தண்டது பெரிய விசயந்தான். வளர்ச்சி அடிப்படையிலேயே வேறுபட்டு வேலைவாய்ப்பை உருவாக்கவில்லை. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் நிலைப்படுத்திய நாணயப் பரிவர்த்தனை குலைந்து, பன்னாட்டு நிதிமுறைமை இறங்குமுகம் கண்டதுதான் அனைத்திலும் மேலான விசேசம் உடையது.

சாப்பாட்டு வேளையிலோ, வேலை முடிந்த பின்னர் பீர்களுக்காள சந்திப்பிலோ இதுபோன்ற விசயங்களை நான்

நண்பர்களுடன் அடிக்கடி விவாதிப்பதுண்டு. அந்த சந்திப்பில் என்னுடன் பணிபுரிகிற சுதந்திரச் சிந்தனையுடைய, நல்ல புத்திசாலிகளான இளவயது ஆண்களும், பெண்களும், பாஸ்டனின் சிந்தனைத் தொட்டிகளான பேராசிரியர்களும் அடக்கம். அதில் மாநில காங்கிரஸ் உறுப்பினரின் உதவியாளரும் ஒருவர் உண்டு. அது முறைப்படுத்தியக் கூட்டங்களல்ல என்பதால் இரண்டுபேர் கூடுவதும் உண்டு. இருபது பேர் கூடுவதும் உண்டு. காரசாரமானவை என்றாலும் வறட்டு விவாதங்கள் அல்ல. உயிரோட்டமானவை.

அந்தக் கூட்டங்களின் போது நிலவிய ஆணவத்தை நினைத்து அவ்வப்போது வருந்துவேன். எனது நண்பர்களைப்போல அங்கே நான் வெளிப்படையாகப் பெருமையடித்துக்கொள்ள முடியாது. ஏனென்றால் நான் உலகின் மிகப்பெரிய தலைமை ஆலோசனை நிறுவனத்தின் பொருளாதார நிபுணன், உலகம் முழுவதும் பறந்து திரிகிறவன் என்றாலும் டோரிஜோஸுடன் பேசுவதோ வேறு சிலவோ அங்கே பகிர்ந்துகொள்ள முடியாத ரகசியங்கள். இவையே என் ஆழ்மன முரட்டுத்தனத்திற்கும், விரக்திக்கும் ஆதாரங்களாயின.

குறிப்பாகக் குட்டிப்பையன்களின் சக்தி பற்றிப் பேசும் போதெல்லாம் மேற்படிக் குட்டிப்பையன்கள் கைக்கு அதிகாரம் என்று விடாமல் நிறுவனவியத்தைச் சேர்ந்த பொருளாதார அடியாட்களும், ஓநாய்க் கும்பலும் பார்த்துக்கொள்ளும் என்ற உண்மையை நான் உளறிவிடாமல் வாயைக் கட்டிக்கொள்ள வேண்டியிருந்தது. அர்பென்ஜ் -மொஸாடெக், சிஐஏவால் 1973ல் தூக்கிஎறியப்பட்ட சிலியின் அலெண்டே போன்ற உதாரணங்களை மட்டுமே நான் அங்கே வெளிப்படுத்தினேன். சொல்லப்போனால் ஏகாதிபத்தியத்தின் பிடி ஒபெக்கின் மீது மேலும் இறுகிக் கொண்டுதான் போகிறதேயல்லாமல் தளரவில்லை என்ற என் யூகத்தை பிற்காலத்தில் ஏகாதிபத்தியத்திற்கு ஒபெக் உதவி செய்யும் வரை என்னால் உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

எங்களது உரையாடல்கள் பெரும்பாலும் 1970 களுக்கும் 1930 களுக்கும் இடையில் உள்ள ஒற்றுமையைக் காண்பதிலேயே மையம் கொண்டிருந்தன. பிற்கால நெருக்கடிக்கான ஆதாரமான 1930 களின் உலகப் பொருளாதாரமே ஆய்விற்குட்படுத்தப்பட்டும் தொடரப்பட்டும் வந்தன. அந்த தசாப்தமே நிறுவனமயப்பட்டச் சந்தைகளுக்கும், ஆரோக்கியக் கேட்டிற்கும், வேலையின்மைக்கும் நஷ்டஈடு தருவதிலும் அரசாங்கம் முக்கியப் பங்கேற்க வேண்டும் என்ற கெனீசயப் பொருளாதாரக் கதவுகளைத் திறந்துவிட்டன. சந்தைகள் சுயஒழுங்குசெய்யப்பட்டவைகளாக இருக்க வேண்டும், அவற்றில்

அரசாங்கத் தலையீடுகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்ற பழைய கருதுகோள்களிலிருந்து வெகுதூரம் விலகி வந்துவிட்டோம்.

பணவீக்கத்தின் விளைவாக பொருளாதார ஒழுங்குகளை மேம்படுத்துவதற்கும், அரசின் பணத்தைப் பெருக்குவதற்கும், நிதிக்கொள்கையின் விரிவான அமுலாக்கத்திற்குமான புதிய அணுகுமுறையை உருவாக்கவேண்டி வந்தது. அத்துடன் இரண்டாம் உலகப்போரின் பணவீக்கம் உலகவங்கி, உலக நிதியம் போன்ற அமைப்புகளையும், வர்த்தகக் கட்டணப் பொதுஒப்பந்தம் என மேலுமிரண்டு நிறுவனங்களை உருவாக்க வழிவகுத்தது. புதிய செம்மைப் பொருளாதாரத்திலிருந்து கெனீசியனுக்கு மாறுகிற கட்டமாக 1960கள் இருந்தன. பொருளாதார மாற்றங்கள் கென்னடி மற்றும் ஜான்சன் ஆட்சிக்காலத்தில் நடந்தாலும் அதில் பெரும் செல்வாக்குமிக்க ஒற்றைச் சக்தியாக ராபர்ட் மெக் நமரா விளங்கினார்.

மெக்நமரா அடிக்கடி எங்களது குழுக் கலந்துரையாடல்களில் இடம்பெறும் பெயராக இருந்தது. மெக்நமரா போர்டு மோட்டார் நிறுவனத்தில் 1949ல் நிதிஆலோசகராகவும், 1960 களில் போர்டு குடும்பத்திற்கு வெளியில் இருந்து வந்து தலைவராகவும் உயர்ந்தவர். வெகுசீக்கிரத்திலேயே கென்னடி அவரை பாதுகாப்புத் துறைச் செயலாளராக நியமித்தார்.

கெனீசியன் அணுகுமுறையுடன் வியட்நாமில் கணக்கீட்டு மாதிரிகளைப் பயன்படுத்தியதிலும், சிறிய குழுக்களைத் தீர்மானிக்கப் புள்ளியல் விபரங்களுடன் நிதி ஒதுக்கீடு செய்வதிலும், பிற தந்திரங்களைக் கையாண்டதிலும் அரசாங்கத்திற்கு ஆதரவாக வாதிடுவதில் மிகவலுவான சக்தியாக இருந்தார் மெக்நமரா. அவரது ஆவேசமிக்கத் தலைமைப்பண்பு அரசு மட்டத்தில் மட்டுமல்லாமல் நிறுவனஅதிகாரிகள் மத்தியிலும் சிறப்பான முன்னுதாரணமாக இருந்தது. நிர்வாகவியலைக் கற்றுக்கொடுப்பதில் புதிய கோட்பாடாக வடிவமைக்கப்பட்டது. உலக ஏகாதிபத்தியத்தை உருவாக்கப் புறப்பட்ட புதியதலைமுறையைச் சேர்ந்த நிறுவனவியத் தலைமை அதிகாரிகளுக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது.

எங்களது கலந்துரையாடலில் உலகத்தின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் ஆர்வம் காட்டினோம். மெக்நமரா அரசின் பாதுகாப்புச் செயலாளர் பொறுப்பில் இருந்து விலகி போர்டு தலைவர் பதவியில் இணைந்தது பற்றி தீவிர கவனம்

செலுத்தினோம். ராணுவத் தொழிற்துறையின் புகழ்பெற்ற தின்னமாக அவரைக் கருதினார்கள் எனது நண்பர்கள் பலர். பல பெரும் நிறுவனங்களின் உயர் பொறுப்புகளைத் தன் கைவசம் வைத்திருந்தனர். ஒருவர் அரசின் அமைச்சகத்தில் இருந்தார், இப்போது அதிகாரமிக்க உலகவங்கித் தலைவர் பதவியில் இருக்கிறார். பதவியில் இருந்து அதிகாரத்தை இவ்வளவு வெளிப்படையாக பிரித்துவைத்தது கண்டு பலரும் வாயைப் பிளந்தார்கள். ஆனால் அதில் ஆச்சர்யமடையாமல் இருந்தவன் நான் ஒருவனாகத்தான் இருக்குமென்று நினைக்கிறேன்.

உலகவங்கியை வேடிக்கைப் பொருளாக்கி அமெரிக்கப் பேரரசின் முகவராக மாற்றுவதில் காட்டிய பெரிய பங்கையும் இத்தனை வஞ்சகத்தனத்தையும் மெக்நமராவைப்போல் வேறுயாரும் வரலாற்றில் இந்த அளவிற்கு செய்திருக்க மாட்டார்கள். அவர் ஒரு தலைவரையும் உருவாக்கினார். நிறுவனவிய முன்னணிக் கூறுகளுக்கு இடையே இருந்த வெளிகளை மிகச் சாமர்த்தியமாக இட்டு நிரப்புவார். உதாரணமாக ஜார்ஜ் ஷல்ட்ஸ் என்பவர் வருவாய்ச் செயலாளராகவும், நிதிக் கொள்கைத் தலைவராகவும் நிக்ஸனுக்குக் கீழ் பெக்டெல் தலைவராகவும் இருந்தார். பின்னர் ரீகன் தலைமையின் கீழ் அரசின் செயலாளராக உருவானார். காஸ்பர் வெய்ன்பெர்கர் என்பவர் பெக்டெல்லிற்கும், பொதுக்கவுன்சிலுக்கும் துணைத்தலைவராக இருந்தவர் பின்னர் ரீகன் தலைமையின் கீழ் செயலாளராக மாறினார். ரிச்சர் ஹெல்ம் என்பவர் ஜான்சனுக்குக் கீழ் சிஐஏவின் இயக்குனராக இருந்தார். பின்னர் நிக்ஸன் ஆட்சியில் ஈரானுக்கான தூதுவராக ஆனார். ஜார்ஜ் ஹெச்.டபுள்யூ. புஷ்ஷிற்குக் கீழ் பாதுகாப்புச் செயலாளராகப் பணியாற்றிய ரிச்சர்ட் சென்னே பின்னர் ஹாலிபர்டன் தலைவராகவும், ஜார்ஜ் டபுள்யூ புஷ்ஷிற்குத் துணைத்தலைவராகவும் ஆனார். அமெரிக்க ஜனாதிபதியான ஜார்ஜ் ஹெச்.டபுள்யூ.புஷ் பின்னர் நிக்ஸன் காலத்தில் ஜபட்டா பெட்ரோலியம் கார்ப்பரேசன் நிறுவனராகவும் ஐநாவிற்கான அமெரிக்கத் தூதராகவும் ஆனார். அடுத்து போர்டு காலத்தில் போர்டின் சிஐஏ இயக்குனராகவும் ஆனார்.

பின்னால் திரும்பிப்பார்க்கும்போது அந்நாளில் எத்தனை அப்பாவியாக இருந்திருக்கிறேன் என்று அதிர்ச்சியளிக்கிறது. உலக ஏகாதிபத்திய அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்றால் நாம் பழைய பாணிகளைத்தான் இன்னமும் கற்பனையில் வைத்திருக்கிறோம். ஆனால் ஈரானில் ஜனநாயகவாதியைத் தூக்கி எறிந்துவிட்டு அந்த

இடத்தில் ஒரு கொடுமை நிறைந்த சர்வாதிகாரியை இஜ்ஜ தந்திரத்தால் உட்கார வைத்ததன் மூலம் புதியபாதையை ஏற்படுத்தி விட்டார் கெர்மிட் ரூஸ்வெல்ட். இந்தோனேசியா, ஈக்குவடார் போன்ற நாடுகளில் பொருளாதார அடியாட்களான நாங்கள் சில வேலைகளைச் செய்து முடித்திருந்தாலும், வெகுசாதாரணமாக நாம் பழைய பாணியில் இறங்கிவிடுவோம் என்பதற்கு வியட்நாம் நமக்கு அதிர்ச்சியூட்டும் உதாரணமாக இருக்கத்தான் செய்கிறது.

ஒபெக்கின் முன்னணி உறுப்பு நாடான சௌதிஅரேபியா அந்தத் தந்திரத்தையும் மாற்றிக் காட்டிவிட்டது.

அத்தியாயம் - 15

சௌதிஅரேபியப் பணத்தின் உள்விவகாரம்

சௌதியின் தலைநகரான ரியாத் பற்றிய போட்டோக்கள் சிலவற்றை 1974ல் அந்நாட்டின் உயர் அரசு அதிகாரி எனக்குக் காண்பித்தார். அதில் அரசுக் கட்டடத்தில் வேண்டாமெனத் தூக்கி எறிந்த குப்பைகளுக்கு நடுவே ஒரு ஆட்டுமந்தை நின்று கொண்டிருந்தது. அதுகுறித்து விபரம் கேட்டதற்கு அந்த அதிகாரி இதுதான் நாங்கள் குப்பை அகற்றும் முறை என்றார். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

தன்மானமுள்ள சௌதியன் எவனும் குப்பையைத் தொடுவதில்லை. எனவே அந்த வேலையை விலங்குகளிடம் விட்டு விட்டோம்.

உலகின் மகத்தான எண்ணெய்ச் சாம்ராஜ்ஜியத்தின் தலைநகரில் ஆடுகளா? என்னால் நம்பவே முடியவில்லை

எண்ணெய் நெருக்கடிக்குத் தீர்வு காணும் ஆலோசனைக் குழுவில் நானும் ஒருவன். கடந்த மூன்று நூற்றாண்டுகளாக இந்த நாடுகள் பெற்றுள்ள வளர்ச்சியை அந்த ஆடுகள் எனக்கு உணர்த்தின. இதுபோன்ற துண்டு துண்டான காரணிகளை ஒன்றிணைத்து அதிலிருந்து ஒரு தீர்வை எட்டமுடியும் என்று எனக்குத் தோன்றியது.

வரலாறு நெடுகிலும் வன்முறையும், மதவெறியும் கொண்ட நாடு. இது மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் சௌதிஅரேபியாவில் வாகாபி எனும் பழமைவெறி கொண்ட ஒரு கும்பலை ஒன்றுதிரட்டி அதற்கு முன்னணி போர்த் தளகர்த்தனாக விளங்கினான் முகமது இபின் ஷாத். அடுத்த இரண்டு நூற்றாண்டுகளாக இஸ்லாத்தின் புனிதத்தளங்களான மெக்கா, மெதினா உள்ளிட்ட சௌதி தீபகர்ப்பத்தின் பெரும்பகுதியை இபின் ஷாத்தின் குடும்பத்தினரும் வாகாபி கூட்டணியும் ஆளுகை செய்து வந்தது.

தன் நிறுவனர்களின் தூய்மையான லட்சியவாதத்தின் பிரதிபலிப்பாகவே இருந்த சௌதி சமூகம் குர்ரான் நம்பிக்கைகளை சற்றும் பிசகாமல் பின்பற்றி வந்தது. மதக்காவலர்கள் ஒருநாளைக்கு

ஐந்துவேளைத் தொழுகையைக் கட்டாயமாக்கினர். பெண்கள் தங்களைத் தலைமுதல் பாதம்வரை மறைத்துக்கொள்ள வேண்டும். குற்றவாளிகளை நாற்சந்தியில் நிறுத்தி கல்லால் அடிக்கும் தண்டனைகள் சர்வ சகஜம். நான் முதன்முறையாக ரியாத் சென்றபோது ஒரு பொதுச்சந்தையில் காரைப் பூட்டாமல் அதில் பணப்பர்ஸ் முதல் அனைத்து விலைமதிப்புமிக்க பொருட்களையும் அப்படியே நான்குபேர் பார்க்கும்விதமாக விட்டுச் செல்லலாம் என்று எனது டிரைவர் கூறிய செய்தியைக் கேட்டு அதிர்ச்சியடைந்தேன்.

இங்கு எவனும் திருட முடியாது. திருடியவன் கைகள் வெட்டப்படும் என்றார் டிரைவர்.

அந்நாளின் பிற்பொழுதில் உங்களுக்குப் பிரபலமான பழிக்குப் பழி சதுக்கத்தைக் காண ஆசையா என்று கேட்டார். பிறரால் முரட்டுத் தூய்மைவாதம் என்று கருதப்படுகிற கடுமையான வாகாபிய தண்டனைமுறைதான். தெருக்களைத் திருட்டுக்களிலிருந்து பாதுகாக்கிறது என்றார். அந்தக் கொடுமையைக் கண்ணால் காண மறுத்துவிட்டேன்.

எண்ணெய்த் தடைக்கானப் பொருளாதாரக் கொள்கையை வகுப்பதில் மதப்பார்வைக்கு இருந்த முக்கியத்துவத்தைக் கண்டு மேற்குலகு அதிர்ச்சியடைந்தது. யூதர்களின் புனிதத்திலும் புனித நாளான யோக் கிப்பூர் நாளில் 1973 அக்டோபர் 6 அன்று எகிப்தும், சிரியாவும் அடுத்தடுத்து இஸ்ரேல் மீது போர்த்தாக்குதல் தொடுத்தன. அரபுநாடுகளிலும், இஸ்ரேலிலும் பேரழிவை உண்டாக்கிய உலகஅளவில் பெருந்தாக்கத்தை அளித்த நான்காவது போரின் அக்டோபர் துவக்கம். அமெரிக்காவுடனான இஸ்ரேலின் உறவிற்கு எதிராக எண்ணெய்யை ஆயுதமாகப் பயன்படுத்தி பதிலடி கொடுக்க சௌதி அரசர் பைசலை நெருக்கினார் எகிப்து அதிபர் அன்வர் சதாத். அதேயாண்டு அக் 16 ஆம் நாள் ஈரானும் மற்ற ஐந்து அரபுநாடுகளும் சௌதியும் எண்ணெய் விலையை 70 சதவீதம் உயர்த்துவதாக அறிவித்தன.

அரபுநாடுகளின் எண்ணெய் அமைச்சர்கள் குவைத்தில் கூடி அடுத்தகட்ட வாய்ப்புகள் குறித்துப் பேசினர். அமெரிக்காவை வன்மையாக எதிர்ப்பதில் ஈராக் முன்னணியில் நின்றது. மற்ற பிரதிநிதிகளை அரபு உலகில் உள்ள அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளியான இஸ்ரேலின் தொழில்களை தேசிய உடைமையாக்கினால், அமெரிக்க வங்கிகளில் உள்ள அமெரிக்கப் பணத்தை மீட்டுக்கொண்டால் அதன்மூலம் எண்ணெய்த் தடையை தீவிரப்படுத்தலாம் என்று யோசனை தெரிவித்தார். அரபு

வங்கிகளின் கணக்குகள் நிலைத்தன்மை பெற்றிருப்பதால் மேற்படி தடை 1929 ஆம் பணவீக்கத்தைப் போன்ற நெருக்கடியை ஏற்படுத்தாது என்று கூறினார்.

இந்தத் தலைகீழான திட்டத்தை ஏற்பதில் பிற அரபு அமைச்சர்கள் தயக்கம் காட்டினர். அக்டோபர் 17 முதல் தடையை மேலும் அதிகரிப்பது என்ற முடிவிற்கு வந்தனர். அதன்படி எண்ணெய் உற்பத்தியை உடனடியாக ஐந்து சதவீதம் குறைப்பது என்றும் தங்களது அரசியல் நோக்கம் ஈடேறும் வரைத் தொடர்ந்து மாதந்தோறும் ஐந்து சதவீதம் குறைத்துக்கொண்டே போவது என்ற முடிவும் மேற்கொள்ளப்பட்டது. இஸ்ரேலுக்கு ஆதரவான நிலைக்காக அமெரிக்கா தண்டிக்கப்பட வேண்டும், தடையை அதிகரிக்கவேண்டும் என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டனர். அக்கூட்டத்தில் கலந்துகொண்ட பலநாடுகள் உற்பத்திக் குறைப்பை ஐந்து சதவீதத்திற்குப் பதிலாக 10 சதவீதம் மேற்கொள்ளப் போவதாக அறிவித்தன.

அக் 19 அன்று அதிபர் நிக்ஸன் இஸ்ரேலுக்கு 2.2 பில்லியன் டாலர் உதவிக்கு காங்கிரஸின் ஒப்புதலைக் கோரினார். அடுத்த நாளே அரபு எண்ணெய் உற்பத்தியாளர்கள் அமெரிக்காவின் எண்ணெய் கப்பல்களுக்குத் தடைவிதித்தனர்.

தடை குறுகியகாலத்திற்கு 1974 மார்ச் 18 வரையே நீடித்தது என்றாலும் தடையின் பாதிப்பு மிகக் கடுமையானது. சௌதியின் விற்பனை விலை 1970 ஜனவரி 1ல் பேரலுக்கு 1.38 டாலராக இருந்ததில் இருந்து 74 இல் 8.32 டாலராக சட்டென்று உயர்ந்தது. அரசியலார்களும், நாளைய நிர்வாகமும் 1970 களின் மத்தியில் கற்றுக் கொண்ட பாடத்தை மறப்பதற்கில்லை. இந்த இக்கட்டான நிலை நிறுவனவியத்தின் ஆதாரத்தூண்களான பெருநிறுவனங்கள், பன்னாட்டு வங்கிகள், அரசுடனான நெருக்கம் இம்மூன்றையும் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு வலுப்படுத்திக்கொள்ள வேண்டியிருப்பதையும், அந்தப் பிணைப்பே நிறுவனவியத்தை நீடிக்கச்செய்யும் என்பதையும் உணர்த்தியது.

தடையின் விளைவால் அணுகுமுறைகளிலும், கொள்கையிலும் குறிப்பிடத் தகுந்த சிலமாற்றங்கள் நிகழ்ந்தன. மீண்டும் ஒரு தடையைத் தம்மால் தாங்கமுடியாது என்பதை வால்ஸ்ட்ரீட்டிற்கும், வாஷிங்டன்னிற்கும் உணர்த்தப்பட்டது. தமது எண்ணெய் வழங்கலுக்கு அளித்துவந்த முன்னுரிமை 1973 க்குப் பின்னர் எண்ணெய் மீதான தீவிர வேட்கையாக மாறியது. எண்ணெய்த் தடை சௌதிஅரேபியாவை உலகஅரசியலில் முன்னணி ஆட்டக்காரன் என்ற தகுதிக்கு உயர்த்தியது. நமது பொருளாதாரத்தில் தனது

சாம்ராஜ்ஜிய உத்திக்கு உள்ள முக்கியத்துவத்தை வாஷிங்டன்னை ஏற்குமாறு கட்டாயப்படுத்தியது. பெட்ரோ டாலர்களை மீண்டும் அமெரிக்காவிற்கே மடைமாற்றம் செய்வதற்குரிய வழிவகைத் தேடுமாறு நிறுவனவியத் தலைமையை நேரடியாகத் தூண்டியது. சௌதியில் காளான்போல முளைத்தெழும்பிய செல்வத்தைப் பராமரிக்கப் போதிய நிறுவனக் கட்டமைப்பு வசதியில்லை என்ற உண்மையையும் எடுத்துரைத்தது.

எண்ணெய் விலை உயர்வின் மூலம் கிடைத்த மிதமிஞ்சிய வருமானத்தின் விளைவு குழப்பத்தையும் கொண்டுவந்து சேர்த்தது. பில்லியன் டாலர்களைப் பெட்டகங்களில் கொட்டிய அதேநேரம் வாகாபிகளின் இறுக்கமான மதநம்பிக்கைகள் சிலவற்றைக் குழிதோண்டிப் புதைத்தது பெட்டகத்தில் குவிந்த பணம். பணக்கார சௌதிகள் உலகத்தை வலம் வந்தனர். மேற்குலக, அமெரிக்கப் பள்ளிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் சேர்ந்து பயிலத் தொடங்கினர். ஆடம்பரமான கார்களில் சவாரி செய்தனர். வீடுகளை மேற்கத்திய மோஸ்தரில் அலங்கரித்தனர். மதப் பழைமையினிடத்தை நுகர்வு லௌகீகம் ஆட்கொண்டது. எதிர்கால எண்ணெய் நெருக்கடி குறித்த அச்சத்திற்கு அதே லௌகீகமே தீர்வும் வழங்கியது.

தொழில்நுட்ப ஆதரவும், ராணுவ ஒத்துழைப்பும் பயிற்சியும் அளிக்க பேச்சுவார்த்தை நடத்திய வாஷிங்டன் இன்னொரு எண்ணெய்த் தடை ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்த சௌதியை இருபதாம் நூற்றாண்டிற்கு அழைத்துச்செல்வதாக வாக்குறுதியும் அளித்தது. பேச்சுவார்த்தையின் விளைவாக அமெரிக்க-சௌதி அரேபிய பொருளாதாரக் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது. பழைய முறையிலான அந்நிய உதவித்திட்டங்களுக்கு எதிராக, சௌதியைக் கட்டுமானம் செய்ய அமெரிக்க நிறுவனங்களுக்கு சௌதிப் பணத்தை அளிப்பதுதான் ஜக்கோர் என்ற அவ்வமைப்பின் புதிய குயுக்தியாகும்.

நிர்வாக மேலாண்மையிலும், நிதி அதிகாரத்திலும் அமெரிக்காவின் கருவூலத்துறையின் உறுப்பியம் இருக்குமென்றாலும் இக்கூட்டமைப்பு அதிகபட்சத் சுதந்திரம் உடையது. அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு பில்லியன் கணக்கான டாலர்களைச் செலவிடுவதுதான் அதன் இறுதியிலக்கு. ஏனென்றால் பிற அமெரிக்க நிதியமைப்புகள் இதில் சம்பந்தப்படவில்லை. கருவூலத்துறைதான் பாத்திரம் வகித்தது என்றாலும் காங்கிரஸும் இதில் தலையிட முடியாது. வளரும் நாடுகளுடன் அமெரிக்கா மேற்கொண்டுள்ள மற்ற ஒப்பந்தங்களைப் போலல்லாமல் இது நெருங்கமுடியாத ஒன்றாக உள்ளது என்ற முடிவிற்கு ஜக்கோரை

நுணுக்கமாக ஆராய்ந்த டேவிட்ஹோல்டனும், ரிச்சர்டு ஜான்ஸும் வந்தனர். சௌதி சாம்ராஜ்ஜியத்தினுள் அமெரிக்கா ஊடுறுவதற்கான சாத்தியத்தையும், பரஸ்பர சார்பிற்கான கருத்தமைவையும் இக்கூட்டமைப்பு கொண்டிருப்பதாகக் கூறினர்.

அதில் ஆரம்பகட்ட ஆலோசகராகப் பணிபுரிய மெய்னைக் கேட்டுக்கொண்டது அரசின் கருவூலத்துறை. என்னுடைய வேலை மிகவும் சிக்கலானது என்றும், செய்கிற வேலையில் ரகசியம் காக்க வேண்டியது அதிமுக்கியமானது என்றும் எனக்கு அறிவுறுத்தப்பட்டது. என் மீதுள்ள நல்லெண்ணத்தால் அந்த ரகசியம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தோன்றியது. இதில் மெய்ன்தான் முன்னணி பாத்திரம் வகிப்பதாக நம்பத் தலைப்பட்டேன். எங்களுடையதைப்போலவே பல ஆலோசகர்களின் நிபுணத்துவமும் அதற்குத் தேவைப்படுகிறது என்பதைக் காலப்போக்கில் புரிந்துகொண்டேன்.

அனைத்தும் அதிமர்மம் என்பதால் மற்ற ஆலோசகர்களுடன் கருவூலத்துறை நடத்திய உரையாடல்கள் எனக்குத் தெரிவிக்கப்படவில்லை. எனவே இந்த ஒப்பந்தத்தில் எனக்கான முக்கியத்துவம் என்ன என்பதையும் என்னால் யூகிக்க முடியவில்லை. ஏகாதிபத்தியமாவதில் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றத்தை இந்த ஒப்பந்தத்தின் மூலம் அடையமுடியும் என்பதால் பொருளாதார அடியாட்கள் தங்களது தகுதியை மேலும் அதிகரித்துக்கொள்ள வேண்டியிருந்தது. பலவற்றின் அமுலாக்கத்திற்கு என்னுடைய ஆய்வுகள் பயன்படுகின்றன என்பதையும், அதற்காக சௌதியிடம் நல்ல வெகுமதியும் ஆண்டு போனஸும் பெறும் நிறுவனங்களில் மெய்ன் முதன்மையானது என்பதையும் நான் தெரிந்துகொண்டேன்.

உள்கட்டமைப்பிற்காக பெருந்தொகை முதலீடு செய்தால் எந்தளவு இலாபம் பெறலாம் என்று முன்னுரைப்பதும், செலவீட்டிற்கான திட்ட வரைபடத்தை உருவாக்குவதும் என்னுடைய வேலை. அமெரிக்க பொறியியல், மற்றும் கட்டுமான நிறுவனங்களின் விதிகளுக்கு இணங்க பில்லியன் கணக்கான டாலர்களை சௌதியில் முதலீடாகக் கொட்டுவதை நியாயப்படுத்த எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் எனது கற்பனைத் திறனை உபயோகிக்கவேண்டுமென்றும், எனது சகாக்களை எதிர்பார்க்காமல் சுயமாகவே மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டேன். எங்கள் துறை அலுவலகம் அமைந்திருந்த பலமாடிக் கட்டடத்தின் ஒருசிறிய அறையில் என்னைப் போட்டு வறுத்தெடுத்தார்கள். என்னுடைய வேலை

மெய்னுக்கு பெரும் லாபம் ஈட்டித்தர வல்லது, நாட்டின் பாதுகாப்பு தொடர்பானது. எனவேதான் இவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டியுள்ளது என்று சமாதானம் கூறினார்கள்.

முதன்மை நோக்கம் வழக்கத்திற்கு மாறானது. இந்த நாட்டின் மீது சுமத்தப்படும் கடன்சுமைத் திரும்ப வசூலிப்பதற்காக அளிக்கப்படுவதல்ல, மாறாக பெரும்பகுதியை பெட்ரோ டாலராக அமெரிக்காவிற்கு உத்திரவாதப்படுத்தும் ஒரு வழிதான் என்பது புரிந்தது. அந்தவகையில் சௌதிஅரேபியாவின் பொருளாதாரக் காற்றின் சுழற்சி எங்களைச் சார்ந்தே வீசும், அத்துடன் மேற்கத்திய பாணியிலேயே வளர்த்தெடுக்கப்படும் என்பதால் எங்களது இயங்குமுறைக்கு சார்பாகவே இருக்கும் என்பது எதிர்பார்ப்பு.

எனது வேலையைத் துவங்கியதும், ரியாத் தெருக்களில் சுற்றும் ஆடுகள் எனக்கு ஓர் அடையாளச் சின்னம். அதுதான் சௌதிகளை விமானம் ஏற்றி உலகமெங்கும் பறக்கத் துரத்தும் பலவீனமான புள்ளி என்பதைப் புரிந்துகொண்டேன். நவீன உலகிற்குள் நுழையத் துடிக்கும் பாலைநிலப் பேரரசிற்குத் தன்னைவிட பொருத்தமான மாற்றுக் கண்டுபிடிக்குமாறு அந்த குப்பை மேயும் மந்தைஆடுகள் என்னைக் கெஞ்சின. ஒபெக் எண்ணெய் வள நாடுகள் தமது பெட்ரோலுக்கு ஈடாக மதிப்பு மிகுந்த மாற்றைப் பெறத் துடிக்கின்றன என்பதை நானும் அறிந்தே இருந்தேன். கச்சா எண்ணெயை ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக அங்கேயே சுத்திகரித்து பெட்ரோலியப் பொருட்களை உற்பத்தி செய்தால் அது நல்ல லாபத்தை அளிக்கும் என்ற மாற்றுவழி தேடும் நெருக்கடியில் பொருளாதாரவாதிகளும் இருந்தனர்.

இந்த இரண்டு புரிதல்களும் புதிய உத்திக்கான கதவைத் திறந்துவிட்டன. இடம்பெறும் இரண்டு தரப்பினருக்கும் பலன் தரக்கூடிய சூழல். ஆடுகள் இதில் வெறும் நுழைவுப் புள்ளிதான். எண்ணெய் வருமானத்தைக்கொண்டு அமெரிக்கக் கம்பெனிகளை அதிநவீனமாக குப்பை அள்ளச் செய்யலாம். தாங்களும் தொழிற் கலையை கையாளும் அதிகாரம் பெற்றவர்கள் என்று சௌதிகளும் பெருமையடித்துக் கொள்ளலாம்.

மன்னராட்சியின் பொருளாதாரப் பிரிவில் அமெரிக்கக் கருவூலத்துறையும், எனது மெய்ன் தலைமையும் பெரும்பகுதிக் கணக்கீட்டில் மன்னர் குடும்பத்தினர் கண்களுக்கு ஆடுகளை வெற்றிகரமான சூத்திரமாகக் காட்டமுடியும் என்று நினைத்தேன். இந்த சூத்திரத்தை ஒதியே பணத்தைக் கறந்து தொழில்மயப்படுத்தி கச்சா எண்ணெய்யை ஏற்றுமதிக்கு உகந்த உற்பத்தியாக மாற்றி விடலாம். பாலைநிலத்தில் பெட்ரோ வேதித்தொழில்

வளாகங்களை எழுப்பி விடலாம். அவற்றைச் சுற்றி பிரமாண்டமான தொழிற்பூங்காக்களைக் கட்டலாம். பிறகு இயற்கையாகவே அவற்றை இயக்குவதற்கு பல்லாயிரம் மெகாவாட் மின்உற்பத்தி நிலையங்களுக்கான, பெட்ரோ பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் ஓடுவதற்கான போக்குவரத்துச் சாலைகள் மற்ற உள் கட்டுமானத் தேவைகள் ஏற்பட்டுவிடும்.

உலகின் பிறபகுதிகளிலும் திட்டங்களை எப்படி உருவாக்குவது என்பதற்கான முன்மாதிரியாகவும் சௌதித் திட்டம் பயன்படும் என்று நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டோம். எங்களைப் போற்றும் பாடல்களை சௌதிகள் உலகத்திற்கே கேட்கும்படிக் கூவுவார்கள். அற்புதமான மாயாஜாலங்கள் எவ்வாறு நிகழ்த்தப்பட்டுள்ளன என்பதைக் காட்டுவதற்காக பிறநாட்டுத் தலைவர்களைத் தங்கள் நாட்டிற்கு வரவேற்பார்கள். அவற்றைப் பார்த்துவிட்டு ஒபெக் வளையத்திற்கு வெளியே தங்கள் நாட்டிலும் இதேபோன்ற கட்டுமானத்திற்கு உதவுமாறு எங்களை அழைப்பார்கள். அவற்றைக் கட்டுவதற்குத் தேவையான கடனை உலகவங்கி ஏற்பாடு செய்யும். உலகப் பேரரசாகும் அமெரிக்காவின் கனவு நிறைவேறிவிடும்.

இதற்கான சிந்தனைகளை ஒருங்கமைத்துக்கொண்டிருந்த போதே ஆடுகளைக் காட்டி டிரைவர் சொன்னது தன்மானமுள்ள எந்தச் சௌதியனும் குப்பையள்ள மாட்டான் என்ற வாசகம் என் காதுகளுக்குள் ஒலித்துக்கொண்டிருந்தது. வெவ்வேறு பொருத்தப்பாடுகளுக்கு அவ்வாசகம் தெளிவுடன் ஒலித்தது. கீழ்மட்ட உடலுழைப்பு வேலைகளைச் செய்யும் பக்குவம் சௌதிகளிடம் இல்லை. தொழிற்சாலைகளுக்கும், கட்டுமான வேலைகளுக்கும் இங்கு வேலையாட்கள் கிடைப்பது சந்தேகமே. முதலாவதாக சௌதிகளின் எண்ணிக்கையே குறைவு. அத்துடன் அரண்மனையானது அவர்களுக்கு அளிக்க இருப்பதாகக் கோடி காட்டிய கல்வியின், வாழ்க்கை முறையின் தரமானது உடலுழைப்பிற்கு மேலான ஒன்று. சௌதிகள் பிறரை மேலாண்மை செய்யத் தகுதியானவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்கள் ஆலை, கட்டுமானத் தொழிலாளர்களாக ஆவதற்கு விருப்பமோ எண்ணமோ இல்லாதவர்கள். எனவே குறைந்த கூலிபெறும் நாடுகளில் இருந்து உழைப்புச்சக்தியை இறக்குமதி செய்தாக வேண்டும். முடிந்தால் மற்ற இஸ்லாமிய, மத்தியகிழக்கு நாடுகளான எகிப்து, பாலஸ்தீன், பாகிஸ்தான் ஏமன் நாடுகளில் இருந்து வரவழைக்க வேண்டும்.

இந்த எதிர்பார்ப்பும் வளர்ச்சிச் சாத்தியங்களை அதிகமாக்கும். இவ்வாலைத் தொழிலாளர்கள் குடியிருப்புகளுக்காக பிரமாண்டமான கட்டடங்கள் எழுப்பவேண்டும். தொடர்ந்து அவர்களுக்கான வணிகவளாகங்கள், மருத்துவமனைகள், காவல்துறை, தீயணைப்பு, தண்ணீர், கழிவுநீர் தூய்மையாக்கத் திட்டங்கள், மின்சாரம், தொலைத்தொடர்பு வலைப்பின்னல் இவற்றின் ஒட்டுமொத்தமாக இறுதியில் ஒரு காலத்தில் பாலையாக விரிந்துகிடந்த நிலத்தில் நவீன நகரம் உருவாக்கப்படும். பின் நவீன நகரத்திற்குரிய தொழில்நுட்பங்களாக கடல்நீரைச் சுத்திகரிக்கும் நிலையங்கள், நுண்அலைத் திட்டங்கள் ஆரோக்கியக் காப்பு வளாகங்கள், கணினித் தொழில்நுட்பங்கள் பெருகும்.

சௌதியை வடிவமைத்தவர்களின் கனவு நிஜமானது. வடிவமைப்புடன் சம்பந்தப்பட்ட பொறியியல் கட்டுமான தொழிலைச் சார்ந்தவர்களும் கற்பனையை எதார்த்தமாவதைக் கண்டனர். எந்த வளர்ச்சியும் அற்ற ஒரு நாட்டில் பணத்தைக் கொட்டி விருப்பத்தை நிறைவேற்றும் இத்தனை விரைவான மாற்றங்களை வரலாறு நெடுகிலும் பார்த்திருக்க முடியாது.

இந்த வேலைகளின் மீது எனக்கிருந்த அளவற்ற விருப்பத்தை ஒப்புக்கொண்டாக வேண்டும். எப்படிப்பட்ட பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவது என்பதற்கான திட்டவட்டமான தரவுக் கருதுகோளோ அல்லது பொருளாதார அளவீட்டு மாதிரியையோ சௌதியில் இருந்தோ, பாஸ்டன் நூலகத்தில் இருந்தோ நான் கிடைக்கப்பெறவில்லை. இத்தனை பிரமாண்டமான அளவில் ஒரு தேசத்தை உடனடியாக மாற்றிஅமைப்பதற்கான ஆதாரங்களை வேறெங்கும் காணமுடியாது. இருந்தாலும் பொருத்தமற்றதாகவே இருக்கும்.

யாரும் இதுபோன்ற பெரிய ஆய்வுகளை எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். குறைந்தபட்சம் துவக்கநிலையிலும் கூட கணக்கிட்டிருக்க முடியாது. மன்னரவையை திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக புனைவான ஒரு அறிக்கையை எனது கற்பனையின் வழியாகவே தயாரித்திருந்தேன். குத்துமதிப்பாகவே இத்தனையாயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்திக்கு இவ்வளவு செலவாகும், இத்தனை கிலோமீட்டர் சாலை போட வேண்டும். ஒரு தொழிலாளிக்குத் தேவையான தண்ணீர், கழிவுநீர், பொதுச்சேவை போன்றவற்றை வரையறை செய்தேன். இவற்றைத் துல்லியமாக வரையறுக்கவோ. இறுதி முடிவிற்கு வரவோ இல்லை. நான் செய்த வேலை ஒன்றைத்தொட்டு ஒன்று என்ற எளிமையான விளக்கம் மட்டுமே. அல்லது மிகச் சரியாகச்

சொல்வதானால் ஒரு தொலைநோக்குப் பார்வையில் உத்தேசமாக இதையிதை செய்துமுடிக்க இவ்வளவு செலவாகலாம் என்ற தோராயக் கணக்கு மட்டுமே போட்டிருந்தேன்.

மெய்யான குறிக்கோளை மனதில் இறுத்திவைத்துக் கொண்டேன். அமெரிக்க நிறுவனங்களுக்கு அதைப் பெரிதுபடுத்திக் காட்டியிருந்தேன். அந்தத் திட்டங்களுக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு அதிகமாக சௌதிஅரேபிய அமெரிக்காவை சார்ந்திருக்குமாறு வடிவமைத்தேன். இருவரும் ஒருவரை ஒருவர் நெருங்கிப்போக வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு நீண்டகாலம் தேவைப்படக்கூடாது. ஒரு திட்டம் துவங்கியதும் அதைப் பராமரிக்கவும் அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்லவும், நவீனப்படுத்தவும் சௌதி அமெரிக்காவின் உதவியை நாடியே ஆக வேண்டும் என்ற விதத்தில் அமைக்கப்பட்டிருக்கும். ஒன்று திட்டம் எதிர்நோக்கும் கட்டுமான வடிவம், அதைக் கட்டும் நிறுவனம். மற்றது அதனை நீண்டகாலத்திற்கு பராமரிக்கவும், சேவை வழங்குவதன் மூலம் மெய்ன், பெக்டெல், பிரௌன்ரூட், ஹாலிபர்டன், ஸ்டோன்வெப்ஸ்டர் போன்ற நிறுவனங்களுக்கு அடுத்து வரும் பதினாண்டுகளுக்கு கணிசமான வருமானத்தை ஈட்டித் தருவது. இவை இரண்டையும் தனித்தனிப் பட்டியலாக என் மனச்சித்திரத்தில் உருவாக்குவேன். பின்னர் இவையிரண்டையும் பொருத்துவது இதுதான் என் வேலை.

சௌதி முழுமையாக எங்களைப் பொருளாதார ரீதியாகச் சார்ந்திருக்கச் செய்வதற்கு அப்பால் இன்னொரு மாற்றுவழி முடிச்சும் இதில் உண்டு. எண்ணெய்வள மன்னரவையை நவீனப்படுத்திவிட்டால் அதிலிருந்து மற்றொரு எதிர்வினை உருவாகும். இஸ்ரேலிற்கும் பிற அண்டை நாடுகளுக்கும் நவீனமயம் மிரட்டலைத் தரும். அதுவே சௌதியின் பழமைவாத முஸ்லீம்களுக்கு ஆத்திரமூட்டும். நவீனமயத்தைப் பாதுகாக்க அரேபியத் தீபகற்பத்தில் இன்னொரு தொழில் முகிழ்த்தெழும். அதாவது ராணுவத்தொழில். அதில் தேர்ந்த அமெரிக்காவும், அதன் நிறுவனங்களும் புதிய ராணுவ ஒப்பந்தங்களைப் பெறலாம். அவற்றின் இருப்பையொட்டி மேலும் விமானத்தளம், ஏவுகணைத்தளம், தனியார் விமானத்தளங்கள் போன்ற உள்கட்டுமான வேலைகளுக்கான பல பொறியல் துறை வேலைகளும் இடம்பெறும்.

எனது அறிக்கையை மூடி, முத்திரையிட்டு கருவூலத்துறை, திட்டமேலாளர் முகவரியிட்டு உள்ளஞ்சலில் அனுப்பினேன். மெய்ன்

துணைத்தலைவரையும், வேறுபல உயர் அதிகாரிகளையும் எதேச்சையாக குழுச் சகாக்கள் இருவருடன் சந்தித்தேன். இத்திட்டத்திற்கு இதுவரைப் பெயரிடவில்லை. இன்னும் ஜக்கோரின் பகுதியாக ஏற்றுக்கொள்ளப்படாமல் ஆய்வு மேம்பாட்டுக் கட்டத்திலேயே இருந்தது. அதுபற்றிப் பேசும்போது சாமா என்று குசுகுசுப்போம். அதாவது சௌதி அரேபியன் மணி லாண்டரிங் அபையர் என்ற புரிதலோடு. ஆனால் அதுவும்கூட ஒரு உச்சரிப்பு விளையாட்டுதான். முடியரசின் மத்திய வங்கியான சௌதி அரேபியன் மானிட்டரி ஏஜன்சியும் சாமா என்றுதான் அழைக்கப்பட்டது.

சிலசமயம் கருவூலப் பிரதிநிதிகளும் கூட்டங்களில் கலந்து கொள்ளும்போது கேள்விகள் எழும். முக்கியமாக நான் வேலைகளைப் பற்றி விளக்கும்போது விமர்சிப்பார்கள். என்ன கேட்டாலும் அதை ஏற்றுக்கொள்ள முயற்சிப்பேன். நான் வைத்த நீண்டகாலச் சேவை மற்றும் நிர்வாக ஒப்பந்தங்கள் தொடர்பான என்னுடைய பரிந்துரைகளில் துணைத்தலைவரும், கருவூலப் பிரதிநிதிகளும் வெகுவாகக் கவரப்பட்டிருந்தனர். கவரப்பட்ட எங்கள் துணைத்தலைவர்களில் ஒருவர் முடியரசு பற்றி உருவாக்கிய சொற்றொடர் ஒன்று மீண்டும் மீண்டும் எங்களால் மொழியப்பட்டது. பொழுது சாய்ந்து தூங்கப்போகும் வரை நமக்குப் பால் தரும் பசு அது. இப்போது என்னை ஆக்கிரமித்திருந்த படிமத்தில் ஆடு போய் பசு வந்து நின்றுகொண்டது.

நான் தயாரித்தத் திட்டங்களைப் போலவே பல போட்டியாளர்களும் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் என்பது இந்தக் கூட்டங்களின் போது எனக்குத் தெரிய வந்தது. இறுதியில் எங்கள் முயற்சிக்கேற்ப கொழுத்த ஒப்பந்தங்கள் வெகுமதியாக அளிக்கப்படும் என்று அனைவருமே எதிர்பார்த்தோம். மெய்னும் மற்ற நிறுவனங்களும் தொப்பியைக் கழற்றி வளையத்தில் பணையம் வைக்கும் ஆட்டத்தை துவக்கத்தில் ஆடித்தான் ஆக வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. எனது யூகத்தை மெய்ப்பிக்கும் விதமாக அனைத்தும் என்மீது சுமத்தப்பட்டதாக ஏற்றுக்கொண்டு கடுமையாக உழைக்கவேண்டியிருந்தது. இந்த அணுகுமுறை திட்டங்களின் ஆய்வு மேம்பாட்டுக் கட்டத்திற்கே உரிய வழக்கமான ஒன்றுதான். துவக்க முதலீடு வழக்கத்தைவிட அதிகமாகத் தோன்றியது. ஆனால் நிறுவனங்களின் துணைத் தலைவர்கள் இவையாவும் திரும்பக் கிடைக்கக்கூடியதுதான் என்பதில் மிகுந்த நம்பிக்கையுடன் இருந்தனர்.

இதில் பெரும்போட்டி நிலவியபோதிலும் அனைவருக்கும் போதிய வேலைகள் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. நிறுவனங்கள் தயாரித்தளித்துள்ள திட்டங்களைக் கருவூலத்துறை ஏற்றுக்கொள்வதைப் பொறுத்தும், ஆலோசகர்கள் எடுத்துக் கூறுவதைப் பொறுத்தும் நல்ல ஒப்பந்த வெகுமதிகள் கிடைக்கும் என்று நினைக்குமளவிற்கு நானும் நீண்டகாலமாக இந்த வேலையில் அனுபவம் பெற்றுள்ளேன். நான் உருவாக்கும் சித்திரம்தான் அங்கே மாதிரியையும் கட்டுமான நிலையையும் உருவாக்கும் என்பதால் அதை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டேன். மெய்ன் நிர்வாகத்தில் எனது ராசியும் பிரகாசமாக ஜொலித்துக் கொண்டிருந்தது. நாங்கள் வெற்றிகரமாகக் காய் நகர்த்தினால் சாமாவில் நாங்கள் வகிக்கவிருக்கும் உத்திரவாதமான பாத்திரம் கூடுபிடிக்கும்.

சாமாவும் ஜெக்கோரும் ஏற்படுத்தும் புதிய திறப்பு குறித்து எங்கள் கூட்டங்களில் வெளிப்படையாகவும், இணக்கமாகவும் எங்களுக்குள் பேசிக்கொண்டோம். சர்வதேச வங்கிகளின் கடனுதவி இல்லாமலே புதியமுறையில் நல்ல பணம் கொட்டும் வேலைகளை சில நாடுகளில் உருவாக்குவதற்கு இது சிறந்த முன்மாதிரி. இதுபோன்ற வேலைகளை அடுத்து மேற்கொள்வதற்கு ஈரானும், ஈராக்கும் வசதியான நாடுகள் என்று உடனே மனதில் தோன்றியது. சௌதியின் முன்மாதிரி அந்நாடுகளின் தலைவர்களை முயற்சித்துப் பார்க்கத் தூண்டுவது மனிதஇயல்புதானே. 1973 இல் உருவாக்கிய எண்ணெய்த் தடை முதலில் பாதகமான விளைவுகளைத் தருமோ என்ற சந்தேகத்தை உருவாக்கினாலும் இறுதியில் பொறியியல் துறைக்கு எதிர்பாராத பரிசுகளை அள்ளி வழங்கியதும் மட்டுமல்லாமல் உலக ஏகாதிபத்தியத்திற்கு புதியபாதையை வகுத்துக் கொடுத்திருக்கிறதுதானே.

ஒரேநேரத்தில் பல நெருக்கடிகள் இல்லாதிருந்ததால் எட்டுமாத காலம் எனது அறையில் தனித்துக் கிடந்தும், பாஸ்டன் வீட்டில் இருந்தபடியும் கற்பனைத் திட்டத்திற்கு எழுத்து வடிவம் கொடுத்தேன். எனது சகாக்கள் சுயஅக்கறையுடன் தங்கள் வேலைகளைச் செய்து வந்தாலும் நானும் அவ்வப்போது அவர்களைக் கண்காணித்து வந்தேன். எங்கள் வேலை குறித்த ரகசியம் குறைந்து வந்தது. சௌதியில் பெரிதாக ஏதோ ஒன்று நடக்கவுள்ளது என்பதைப் பலரும் தெரிந்துகொண்டனர். விருப்பார்வங்கள் ஊதிப்பெருகின, வதந்திகள் சுழன்றன. துணைத்தலைவர்களும், கருவூலப் பிரதிநிதிகளும் மேலும் சிறிது

வெளிப்படையாக இருந்தார்கள். நேரடியாக இறங்கினால்தான் திட்டத்தை முழுமையாக்க கூடுதல் தகவல்கள் பெறமுடியும் என்பதற்காக அவ்வாறு செய்திருக்கலாம் என்று நினைக்கிறேன்.

எண்ணெய் வழங்கலிலும், விலையிலும் ஏற்றமிறக்கமிருந்தாலும் அது அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகள் ஏற்றுக்கொள்ளும்படியாகவே இருக்கும் என்ற உத்திரவாதத்தை சௌதிகள் கொடுத்தால்தான் திட்டத்தை முழுமையாக்குவது என்ற எண்ணம் வாஷிங்டன்னுக்கு இருந்தது. அமெரிக்காவிற்கு எண்ணெய் வழங்கும் நாடுகளான ஈரான், ஈராக், இந்தோனேசியா, வெனிசுலா போன்றவை தடைவிதிப்பதாக அறிவித்தாலும் அப்பற்றாக்குறையை சௌதி ஈடுசெய்ய வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் பிறநாடுகள் எண்ணெய்க்கு தடை விதிக்கும் நினைப்பே வராத அளவிற்கு சௌதி அமெரிக்காவுடன் கைகோர்த்து நிற்கவேண்டும். அப்படியொரு உத்திரவாதம் வழங்கப்படுமானால் அதற்கு ஈடாக நம்பமுடியாத அளவிற்குப் பிரமாண்டமான இதுவரைக் கேள்விப்பட்டிராத கவர்ச்சிகரமான கைமாறு வழங்கப்படும். சௌதியின் அரண்மனைக்கு அரசியல் ஊறு, ராணுவ இடைஞ்சல்கள் என எதையும் சமாளித்து காலகாலத்திற்கும் மன்னரே ஆள்வதற்கான உத்திரவாதத்தை வாஷிங்டன் செய்து கொடுக்கும்.

ராணுவப் பலமின்மை, ஈரான், சிரியா, ஈராக், இஸ்ரேல் போன்ற அண்டைநாடுகளின் தாக்குதலுக்குச் சாத்தியமான சௌதியின் புவியியல் அமைப்பு ஆகியவற்றை மனங் கொண்டால் வாஷிங்டன் நீட்டும் ஆதரவுக் கரத்தை சௌதி அரண்மனை மறுக்கமுடியாது. வாஷிங்டன் தனது சாதகமான சூழலைப் பயன்படுத்தி இன்னொரு நிபந்தனையும் விதித்தது. அந்த பொருளாதார அடியாள் பாத்திரத்திற்கே இன்னொரு விளக்கமாக ஆனது. அதே முன்மாதிரியைப் பின்னர் மற்ற நாடுகளில் குறிப்பாக ஈராக்கில் பயன்படுத்த முயற்சித்தோம். இப்போது நினைத்துப் பார்க்கும்போது அந்த நிபந்தனையை சௌதி எப்படி ஏற்றது என்பதைப் புரிந்துகொள்வதே கடினமாக இருக்கிறது. வாஷிங்டன்னின் நெருக்குதலுக்குப் பணிந்து சௌதி அரண்மனை ஏற்றுக்கொண்ட ஒப்பந்த விதிகள் வெளியுலகுக்குத் தெரிய வந்தபோது மற்ற இஸ்லாமிய நாடுகளும், ஓபெக் நாடுகளும் அதிர்ச்சியடைந்தன.

வாஷிங்டன் சுமத்திய நிபந்தனை இதுதான். விற்பனையில் பெறுகிற பெட்ரோ டாலர்களை சௌதி அமெரிக்காவின் பங்குப் பத்திரமாக மட்டுமே வாங்கவேண்டும். அதற்கான வட்டித்

தொகையைக்கொண்டு அமெரிக்கா மத்தியகாலத்தில் இருக்கும் சௌதியை நவீனதொழிற்சாலைகள் நிறைந்த நாடாக மாற்றும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் சௌதி தனது எண்ணெய் மூலமாக வட்டியாகப் பெறும் பல்லாயிரம் கோடி டாலர்கள் அமெரிக்க நிறுவனங்களின் (இதில் எமது போட்டியாளர்களும் அடக்கமே) கனவான சௌதியை தொழிலதிகாரமிக்க நாடாக மாற்றும் நிஜத்திற்கான கூலியாக வழங்கப்படும். எங்களது சொந்த அமெரிக்கக் கருவூலம் சௌதியின் செலவில் எங்களை அமர்த்தி மொத்த அரேபியத் தீபகர்ப்பத்தையே உள்கட்டுமானத் திட்டங்களாலும், நகரங்களாலும் நிரப்பிவிடும்.

எப்படிப் பட்டத் திட்டங்களை என்பதற்கான உரிமை சௌதிகளிடம்தான் இருக்கும் என்றாலும், பழமைவாத வாகாபி கோட்பாடுகள் நிறைந்த முடியாட்சியுடைய அரேபியத் தீபகர்ப்பத்தில் அதன் பொருளாதார ஒப்பனையைத் அந்நியர்களின் பெருநிறுவனங்கள் தான் (முஸ்லீம்களின் கண்களில் நாத்திகக் கும்பல்) தீர்மானிக்கும். இது அவர்கள் பக்கம் நேர்ந்துள்ள மிகப்பெரிய நம்பிக்கை மாற்றமாகத் தோன்றினாலும் வாஷிங்டன் கொடுத்த அரசியல் மற்றும் ராணுவ நெருக்கடிகளால் கொண்டு வரப்பட்ட மாற்றம் என்பதில் சந்தேகமில்லை. சௌதி மன்னர் குடும்பத்தினருக்கு வேறு ஏதேனும் மாற்று இருக்கலாம் என்று என்று யூகித்தேன்.

எங்களுடைய கண்ணோட்டத்தின்படி இதில் அளவற்ற லாபம் கொழிக்கும் என்று தோன்றியது. அனைத்திலும் மேலான அதிகாரத்தை வழங்க இருக்கும் மனதிற்கு இனிய உடன்படிக்கை. அதற்கும் மேலாக இன்னொரு இனிப்பான செய்தி இவ்வுடன்படிக்கை நிறுவனங்களின் வெறுப்பிற்குரிய காங்கிரஸின் ஒப்புதலைப் பெறவேண்டிய அவசியம் இல்லை. குறிப்பாக மெய்ன், பெக்டெல் போன்ற தனியாருக்குச் சொந்தமான நிறுவனங்கள் தங்கள் புத்தகங்களின் ரகசியத்தை மற்ற யாருடனும் பகிர விரும்புவதில்லை. இந்த உடன்படிக்கையின் மவுனமான பகுதிகள் குறித்து முன்னாள் பத்திரிகையாளரும் மத்தியகிழக்குக் கழகத்தைச் சேர்ந்த அறிவுஜீவியுமான தாமஸ் டபுள்யூ.லாப்மென் இவ்வாறு தொகுத்து எழுதினார்.

பணத்தில் புரளும் சௌதிகள் பல்லாயிரம் பில்லியன் டாலர்களை அமெரிக்கக் கருவூலத்திற்குக் கொட்டிக் கொடுப்பார்கள். அது தொழிலாளர்களுக்கோ, நிறுவனங்களுக்கோ தேவைப்படும் வரை அங்கே நிறுத்திவைக்கப்பட்டிருக்கும். இந்த சுழல்முறையானது சௌதிப் பணம் அமெரிக்காவிற்குச் செல்வதை

உறுதிப்படுத்துகிறது. திட்டங்களை நிறுவும் மேலாளர்கள் தாங்கள் விரும்பும் திட்டங்களையே பயனுள்ளவை என்று காங்கிரஸிற்குத் தெரிவிக்காமலே சௌதியும், அவர்களும் ஏற்றுக்கொள்வார்கள்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அளவுகோல்களை யாராலும் நம்பமுடியாத குறுகியகாலத்தில் நிறுவினார்கள். அதற்குப் பின்னர் அதை எப்படி அமுலாக்கப் போகிறோம் என்பதை தெளிவுபடுத்தினோம். செயல்பாடுகளைத் துவக்கி வைக்க அரசின் உயர்மட்ட அதிகாரி யாரோ ஒருவர் சௌதிஅரேபியாவிற்கு அதிரகசிய நோக்குடன் அனுப்பிவைக்கப்பட்டார். யாரென்று உறுதிபடக் கூறமுடியாது. ஆனால் அந்த ரகசியத்தூதர் ஹென்றி கிஸ்ஸிங்கராக இருக்கலாம்.

அந்தத் தூதர் யாராகவோ இருக்கட்டும். ஆனால் வந்ததும் முதல் வேலையாக மன்னரின் அரண்மனைக்குச் சென்று அண்டை நாடான ஈரானில் பிரிட்டிஷ் பெட்ரோலியத்தின் விருப்பங்களுக்கு எதிராக நடக்க முயன்ற மொஸாடக்கிற்கு நேர்ந்த கதியை நினைவுறுத்தி இருப்பார். அடுத்ததாக இத்திட்டங்களின் கவர்ச்சிகரமான அம்சங்களைச் சொல்லி இறுதியாக சௌதிகளுக்கு ஒருசில மாற்றுகள் அளிக்கப்படும். தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான நமது ஒத்துழைப்பைப் பெறுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை என்ற முடிவிற்கு வருவார் என்பது சந்தேகத்திற்கு இடமற்ற ஒன்று. நமது ஆதரவை மறுத்தால் மன்னருக்கு இருப்பது மொஸாடக் வழிதான். சௌதி நமக்கு இணங்கிவிட்டது என்ற செய்தியுடன் தூதுவர் வாஷிங்டன் திரும்பினார்.

அதில் ஒரே ஒரு சின்னத் தடங்கல் நாம் சௌதி அரசாங்கத்தின் முக்கியப் பொறுப்பில் உள்ளவர்களை மட்டும் இனி ஏற்றுக்கொள்ளச்செய்ய வேண்டியிருந்தது. இது குடும்ப விவகாரம் என்று கூறப்பட்டது. சௌதிஅரேபியா ஜனநாயக நாடல்ல என்றாலும் அரண்மனைக்குள் இருக்கும் அனைவரின் சம்மதத்தையும் பெற்றாக வேண்டும்.

முக்கிய நபர்களில் ஒருவரை இணங்கச்செய்யவேண்டிய பொறுப்பு 1975ல் எனக்கு அளிக்கப்பட்டது. நான் அவரை எப்போதும் இளவரசர் திரு டபுள்யூ என்றுதான் நினைத்துக் கொள்வேன். அவர் முடி இளவரசரா இல்லையா என்பதை நானறியேன். சௌதிஅரேபியாவுடனான கொடுக்கல் வாங்கல் பண விவகாரம் அவருடைய நாட்டிற்கும், தனிப்பட்ட முறையில் அவருக்கும் லாபம் அளிக்கக்கூடிய ஒன்று என்பதை அவரை ஏற்றுக் கொள்ளச் செய்வதுதான் எனக்களிக்கப்பட்ட வேலை.

பொருளாதார அடியாளின் வாக்குமூலம்

இது முதலில் நினைத்ததுபோல் அத்தனை எளிதாக முடியவில்லை. திரு டபுள்யூ நீவிர வாகாபி பற்றாளர். தனது நாடு மேற்கத்திய வணிகமயத்தைப் பின்பற்றப்போவதை அவரால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. ஒரு உள்நோக்கத்துடனே இத்திட்டங்கள் துவக்கப்பட்டுள்ளது தனக்குத் தெரியும் என்று கூறினார். ஆயிரம் வருடங்களுக்கு அங்கு புகுந்த சிலுவைப் போராளிகளுக்கும், இப்போது நவீனப்படுத்துவதாகக் கூறும் உங்களுக்கும் நோக்கம் ஒன்றுதான். அது அரபு உலகத்தை கிருத்துவமயமாக்குவது. அவர் கூறுவது கிட்டத்தட்ட சரிதான். சிலுவைப் போராளிகளுக்கும் எங்களுக்கும் இடையே தர வேறுபாடு உள்ளது. மத்தியகால கத்தோலிக்கர்கள் முஸ்லீம்களை பாவங்களிலிருந்து காக்கப் புறப்பட்டதாகக் கூறினார்கள். சௌதிகளை நவீனப்படுத்தப் போவதாக நாங்கள் கிளம்பி இருக்கிறோம். சிலுவைப் போராளிகளானாலும், பன்னாட்டு நிறுவனவியமானாலும் சரி இருவரின் நோக்கம் தங்கள் சாம்ராஜ்ஜியத்தை விஸ்தரிப்பதுதான்.

மத நம்பிக்கைகள் ஒருபுறம் இருக்க இளவரசர் டபுள்யூவிற்கு இருந்த ஒரு பலவீனம் துடிப்பான அழகிய பெண்கள் மீது. புறம்பான காரியங்களுக்குச் சொல்லப்படும் ஒரேவிதமான அற்பமாகத் தோன்றும். பல சௌதிகளிடையே இளவரசர் டபுள்யூவை நான் சிறப்பித்துச் சொல்லியாக வேண்டும். தன்னை என்னிடம் வெளிப்படுத்திக்கொண்டது அவர் ஒருவரே. வரலாற்று ஒப்பந்தத்தை ஒழுங்குசெய்வதில் பெண்மோகம் எத்தனை முக்கியமான பங்காற்றியது என்பதையும், அளிக்கப்பட்ட வேலையை முடிப்பதற்கு எவ்வளவு தூரத்திற்குப் போவேன் என்பதையும் அது எனக்கு உணர்த்தியது.

அத்தியாயம் - 16

ஓசாமாவுக்கு ஏற்பாடு செய்த பணமும், மேலும் சிலவும்

ஆரம்பத்திலிருந்தே இளவரசர் டபுள்யூ பாஸ்டன் வரும் போதெல்லாம் தனக்கு இஷ்டப்பூர்வமான பெண் சஹி வேண்டுமென்றும், அதுவும் அவளொரு புறத்துணை என்பதற்கும் மேலான ஒன்றாக இருக்கவேண்டுமென்றும் எதிர்பார்த்தார். கண்டிப்பாக தொழில்முறைப் பெண்ணாக இருக்கக்கூடாது. அவள் தெருவிலோ, விருந்துகளிலோ தனக்கோ, தன்குடும்பத்தினரின் கண்களுக்கோ பட்டுவிடக்கூடாது என்றார். எனக்கும் இளவரசர் டபுள்யூவிற்குமான சந்திப்பு ரகசியமான இடத்தில் நடைபெறுவதால் அவருடைய விருப்பங்களை நிறைவேற்றுவது எளிதாயிற்று.

பாஸ்டன் பகுதியிலேயே வசிக்கும் ஷாலி பசுந்தளிர் மேனியும், நீலக்கண்களுமுடைய அழகான மாது. அவளது கணவன் யுனைடெட் ஏர்லைன்ஸின் விமானி. வேலையின் பொருட்டும், அதில்லாமலும் அடிக்கடி வெளியூர்ப் பயணம் போகிறவன் என்பதால் ரகசிய உறவை மறைக்கக் கஷ்டப்பட வேண்டியதில்லை. கணவனின் அணுகுமுறை மீது எரிச்சல் அவளுக்கு உண்டு. அவனது சம்பளமும், பிரமாதமான பாஸ்டன் வீடும் அவளது வரவேற்பிற்குரியது. விமானியின் வாழ்க்கைத் துணைக்குரிய சலுகைகளை அந்நாட்களில் முழுமையாக அனுபவித்துக்கொண்டாள். நெறியற்ற பாலுணர்வை சகஜமாகக் கொண்ட ஹிப்பி வாழ்க்கையில் பத்தாண்டுகளுக்கு முன்னர் இருந்தவள். ரகசிய வருமானத்தில் கவர்ச்சி இருப்பதையும் அறிந்து கொண்டாள். இளவரசர் டபுள்யூவின் முயற்சிக்கு இணங்க ஒப்புக்கொண்டாள் ஒரு நிபந்தனையின் பேரில். அவரது அணுகுமுறையைப் பொறுத்துதான் அவள் தனது உறவை நீடிக்க முடியும் என்பதைத் தெளிவுபடுத்தி விட்டாள்.

என் அதிர்ஷ்டம், இவருக்கும் ஒருவரையொருவர் பிடித்துப் போனது.

சௌதியின் திரைமறைவு பணவிவகாரத்தில் ஷாலி ஒரு இளைக் கதையாகி தனித் தொல்லைகளை உருவாக்கிவிட்டாள். தன்னுடைய கூட்டாளிகள் யாரும் திரைமறைவு வேலைகளில் இறங்குவதற்கு மெய்ன் கண்டிப்பான தடை விதித்திருந்தது. ஷாலியின் சேவைக்கான பணத்தை எங்கிருந்து பெறுவது. மஸாசுட்ஸோ இதுபோன்ற களியாட்டங்களைச் சட்டவிரோதமாக்கி இருந்தது. என் செலவுகளுக்குக் கட்டுப்பாடு வைக்கவில்லை கணக்குத் துறை. அதனால் தப்பித்தேன். பாஸ்டன் உயர்தர உணவகங்களில் நான் பரிசாரகர்களுக்குத் தாரளமாகக் கைப்பணம் அளிப்பவன் என்பதுடன் அது கணினி யுகமல்ல என்பதால் வெற்றுப் பில்களைப் பெற்று நிலைமைகளைச் சமாளித்து வந்தேன்.

போகப்போக இளவரசர் டபுள்யூவிற்குத் துளிர் விட்டு விட்டது. சௌதியில் உள்ள தன் தனிப்பட்ட உல்லாச மாளிகைக்கு ஷாலியை வரவழைக்கும் ஆசை அவருக்குத் தோன்றிவிட்டது. மத்தியகிழக்கிற்கும், அமெரிக்காவிற்கும் இடையே இளம்பெண்கள் சர்வசாதாரணமாகப் பறந்துகொண்டிருந்த அந்நாளில் இளவரசரின் விருப்பம் கேள்விப்படாத அதிசயம் ஒன்றும் இல்லை. அமெரிக்கப் பெண்கள் குறிப்பிட்டக் காலத்திற்கு இங்கு வந்து இருப்பது பின் ஒப்பந்தம் முடிந்ததும் வங்கிக் கணக்கை நிறைத்துக்கொண்டு நாடு திரும்புவது வழக்கமான ஒன்றுதான். மத்தியகிழக்குக் கணக்குகளைக் கையாண்ட சிஐஏ அதிகாரி ராபர்ட் பயர் கூறுவது பெட்ரோ டாலர்கள் மடைதிறந்து பாயத்தொடங்கிய 1970 களில் முடிஇளவரசர்களுக்கு செக் புத்தகங்களைக் கையாளத் தெரியாததைப் பயன்படுத்தி இளவரசர்களின் அந்தரங்கத் தேவைகளை நிறைவுசெய்து வந்த லெபனானியர் பலர் பெரும் பணக்காரர்களாகிவிட்டனர்.

எனக்குப் பழகிப்போன சூழல்தான் அது. இந்த ஒப்பந்தங்கள் செய்து தருவோரையும் எனக்குத் தெரியும். ஆனாலும் அதில் இரண்டு தடைகள் இருந்தன. ஷாலியும், அவளுக்கானக் கட்டணமும். பாலை மாளிகைக்கு அவள் வருவாளா என்ற சந்தேகம் ஒருபுறம். மற்றொருபுறம் வெற்றுப் பில்களால் ஈடுசெய்ய முடியாத செலவு என்பதில் சந்தேகமே இல்லை.

இதில் பிற்பாதி செலவுப் பிரச்சனை தீர்ந்தது. தனது காமக் கிழத்திக்கான செலவுத் தொகையை இளவரசர் டபுள்யூவே ஏற்கச் சித்தமாக இருந்தார். அடுத்தது தேவையான ஏற்பாடுகளைச்

செய்வது. அதற்கும் என் வயிற்றில் பால் வார்த்தார் இளவரசர். அதாவது தனக்குப் பழைய பாஸ்டன் ஷாலிதான் வேண்டுமென்பதில்லை, ஏதேனும் ஒரு ஷாலி போதும் என்று சொல்லிவிட்டார். லண்டனிலும், ஆம்ஸ்டர் டாமிலும் தொடர்புடைய லெபனானிய நண்பர்கள் பலரைத் தொலைபேசியில் பிடித்து இரண்டே வாரங்களில் மாற்றான் ஷாலியுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டோம்.

இளவரசர் டபுள்யூ ஒரு சிக்கலான ஆள். ஷாலியிடம் பூரண நிறைவுதான், அவருக்கு நான் செய்த ஏற்பாடுகள் மூலமாக என்மீது நம்பிக்கை ஏற்பட்டிருந்தது இருந்தாலும் அமெரிக்க - சௌதி ஒப்பந்தத்தைப் (சாமா) பரிந்துரைக்கு அவ்வளவு எளிதில் கையெழுத்திட்டுவிடவில்லை. எப்படியாவது நான் வெற்றி பெற்றுவிடவேண்டுமென கடுமையான முயற்சிகள் மேற்கொண்டேன். புள்ளிவிபரங்கள் திரட்டிக் கொடுத்து அவற்றை அவர் ஆய்விற்கு உதவியாக மற்ற நாடுகளின் பொருளாதார அளவீடுகள் உட்பட பல திட்டங்களையும் எடுத்துக்காட்ட பல மணி நேரங்கள் செலவிட்டேன். இந்தோனேசியாப் புறப்படுமுன் கிளாடினிடம் பெற்ற பயிற்சியையும் கையாண்டு பார்த்தேன். அதற்குப் பின்னரே இணங்கினார்.

ஒப்பந்தத்தில் பங்கு வகிக்கும் பிறரை இணங்க வைப்பதற்குப் பொ.அ. சகாக்கள் என்ன உத்திகளைக் கையாண்டார்களோ எனக்குத் தெரியாது. ஒட்டுமொத்தத் திட்டமும் அரண்மனையால் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது. அமெரிக்கக் கருவூலத்துறையின் கட்டுப்பாட்டின் மூலம் முதல் பெருந்தொகை ஒப்பந்தம் மெய்னுக்கு வழங்கப்பட்டது. செல்லாக் காசாகிவிட்ட சௌதியின் மின்சாரத்துறையை ஒரங்கட்டி விட்டு ஒரு சர்வே மேற்கொண்டு அமெரிக்கா மின்முறைக்கு நிகரான ஒரு அமைப்பை இங்கு நிறுவுவதற்கான ஒப்பந்தம் அது.

சௌதியின் பொருளாதார மேம்பாடு, எதிர்நோக்கும் மின் அமைப்பு ஆகியவற்றை கணக்கெடுப்பதற்காக வழக்கப்படி முதல் குழுவுடன் நானும் என்னுடன் சர்வதேசத் திட்டங்களில் அனுபவசாலிகளாகிய இன்னும் மூன்று பேரும் ரியாத் கிளம்புவதற்காக இருந்தோம். ஒப்பந்தப்படி முழுமையாகச் செயல்படுவதற்கான அலுவலகத்தை ஓரிரு வாரங்களில் தயார்படுத்திக் கொள்ளுமாறு மேலிட உத்தரவு வந்தது. இந்தச் சரத்து ஒரு மாத காலமாக கிடப்பில் போடப்பட்டிருந்தது. திட்டச் சாதனங்கள் அமெரிக்காவிலோ அல்லது சௌதியிலோ உற்பத்தியானவையாக இருக்கவேண்டும் என்று ஷரத்து மேலும்

வலியுறுத்துகிறது. சௌதியில் அவற்றை உற்பத்தி செய்வதற்கான வசதியில்லாததால்அமெரிக்காவிலிருந்துதான் கொண்டுசெல்ல வேண்டும். ஏற்கனவே நீபகர்ப்பத் துறைமுகத்தில் சரக்குவண்டிகள் நீளமாக வரிசைகட்டி நிற்கின்றன. எங்கள் சாதனங்களைக் கப்பலில் அனுப்பினால் உரிய இடம் சேர மாதக்கணக்காகும்.

இரண்டு அலுவலகத் தளவாடங்கள் போடமுடியாமல் இத்தனைப் பெருந்தொகை ஒப்பந்தத்தை மெய்ன் இழந்து விடுவதா? இதற்காக மெய்ன் பங்குதாரர்கள் அனைவரும் மாநாடு போட்டு மண்டையை உடைத்துக்கொண்டிருந்தார்கள். இறுதியில் ஒரு போயிங் 747 பிடித்து முழுக்க மேசை, நாற்காலி ஏற்றி சௌதியில் கொண்டுபோய் இறக்கிவிடுவது என்று முடிவானது. இப்படித் தளவாடங்கள் கொண்டுபோகப் பிடிக்கும் விமானம் யுனைட்டெட் ஏர்லைன்சிற்குச் சொந்தமானதாக இருந்துவிடக்கூடாது, அதிலும் அதன் பைலட்டின் மனைவி முக்கியமான மேற்படி பாத்திரம் வகிப்பவளாக இருந்துவிடக்கூடாது என்பதில் எச்சரிக்கையாக இருந்தேன்.

ஒப்பந்தம் கையெழுத்தான ஒரே ராத்திரியில் சௌதியே அடையாளம் தெரியாமல் மாறிவிட்டது. குப்பைமேட்டில் மேய்ந்து கொண்டிருந்த ஆடுகளை அமெரிக்காவிலிருந்து வந்திறங்கிய அடக்கமான மஞ்சள் வண்ண குப்பை வண்டிகள் துரத்திவிட்டன. இவ்வண்டிகள் குப்பை நிர்வாகத்திலுடனான 200 மில்லியன் டாலர் ஒப்பந்தத்தின்படி வரவழைக்கப்பட்டவை. இதே மோஸ்தரில் சௌதியின் விவசாயம், மின்சாரம், கல்வி, தொலைத்தொடர்பு என ஒவ்வொரு துறையும் நவீனமாக்கப்பட்டன. தாமஸ் லிப்மான் 2003 இல் கூறியதைப்போல

அமெரிக்கர்கள் பரந்த சமவெளியில் குத்திட்டு நிற்கும் மேய்ச்சல் நாடோடிகளின் கூடாரங்களையும், விவசாயிகளின் மண் குடிசைகளையும் தங்களது சொந்த கற்பனைக்கு ஏற்றவாறு நாற்சந்திகளில் ஸ்டார் பக்குகளாகவும், (ஸ்டார் பக் - பெரும் வணிக நிறுவனம்) சற்கர நாற்கலிகள் உருளும் நெடிய விதானங்களுடைய பொதுக்கட்டடங்களாகவும் மாற்றிவிட்டனர். சௌதி இன்று நெடுஞ்சாலைகளாலும், கணினிகளாலும், பெருங்கண்ணாடிகள் பொருத்திய குளிரூட்டப்பட்ட ஷாப்பிங் மால்களாலும் நிரப்பப்பட்டு அமெரிக்க நகரப் பகுதிகள் போல பிரமாண்ட ஹோட்டல்களாகவும், துரிதஉணவுக் கடைகளாகவும், தொலைக்காட்சிகளாகவும், அதிநவின மருத்துவமனைகளாகவும், உயரடுக்கு அலுவலகங்களாகவும், கேளிக்கைப் பார்க்குகளாகவும் காட்சியளிக்கிறது.

இங்கு வடிவமைத்தத் திட்டங்கள் அரபுநாடுகளின் எதிர்காலத் திட்டங்களுக்கு முன்னோடியாக அமைந்தன. கெர்மிட் ரூஸ்வெல்ட் ஈரானில் நிறுவியதற்கு அடுத்த நிகரான சாதனை இப்பீடபூமியில் சாமா, ஜெக்கோர் ஒப்பந்தங்கள் என்று கருதப்பட்டது. அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது அடுத்தத் தலைமுறை சிப்பாய்கள் கையாளுவதற்கு ஏற்ற புதுவிதமான அரசியல் பொருளாதார ஆயுதக் கண்டுபிடிப்பாக இவ்வொப்பந்தங்கள் அமைந்தன.

சௌதியின் திரைமறைவுப் பணவிவகாரமும், கூட்டு நடவடிக்கையும் உலகக்கோட்பாட்டு விதிகளுக்குப் புதிய செயல்முறையை உருவாக்கின. இதற்குப் பொருத்தமான சாட்சி இடிஅமீன். உகாண்டாவின் சர்வாதிகாரியாக இருந்து அரசியல் நெருக்கடியில் தப்பிக்க சௌதியில் அடைக்கலம் ஆனார். அவர் கொன்று குவித்த மக்கள்தொகை சுமார் மூன்று லட்சம் இருக்கும். இடிஅமீனுக்கு அரச குடும்பம் அளித்த ராஜபோகமான வசதிகள் அமெரிக்காவிற்கு எரிச்சலை மூட்டியது என்றாலும் ஒப்பந்தங்களை மனதிற்கொண்டு மேல் நடவடிக்கை எடுக்காமல் இருந்தது. தனது இறுதிநாட்களை சௌதிக் கடற்கரையில் உல்லாசமாகக் கழித்த இடி அமீன் தனது எண்பத்தி மூன்றாம் வயதில் 2003 இல் சிறுநீரகப் பாதிப்பில் ஜெட்டாவில் இறந்தார்.

சர்வதேசப் பயங்கரவாதத்திற்கு சௌதி நிதியுதவி செய்வதை அமெரிக்கா கண்டுகொள்ளாமல் இருந்ததுடன் அதிகபட்ச நாசவேலைக்கும் அனுமதி வழங்கியது. 1980களில் ஆப்கானில் சோவியத் துருப்புக்களுக்கு எதிராகப் போராடிய ஒசாமா பின் லேடனுக்கு சௌதி அரண்மனை வங்கியாகச் செயல்பட வேண்டும் என்ற அமெரிக்காவின் விருப்பத்தில் எந்த ஒளிவுமறைவும் இல்லை. அத்துடன் முகாஜதீன்களுக்கு வாஷிங்டன்னும், ரியாத்தும் 3.5 பில்லியன் டாலர்கள் வழங்கின. உண்மையில் அவர்களது பங்களிப்பு அதற்கும் மேலானதாகும்.

யு.எஸ். நியூஸ் வோர்ல்டு ரிப்போர்ட் என்ற இதழ் த சௌதி கனெக்க்ஷன்ஸ் என்ற தலைப்பில் ஒரு ஆய்வு மேற்கொண்டது. அமெரிக்க மற்றும் பிற நாடுகளின் உளவுத்துறை ஆவணங்கள், அறிக்கைகள், நீதிமன்றப் பதிவுகள் ஆகியவற்றை ஆராய்ந்தது. மத்தியக்கிழக்குத் தீவிரவாதத்தில் அக்கறை செலுத்துவோர், அதிகாரிகள் ஆகியோரிடம் பேட்டி கண்டு கூறிய முடிவு பின்வருமாறு கூறுகிறது.

உலகின் பெரும் எண்ணெய் உற்பத்தியாளரும், அமெரிக்காவின் நெடுங்காலக் கூட்டாளியுமான சௌதிஅரேபியா

மூத்த கருலுல அதிகாரி கூறுவதுபோல பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்வதில் புவியில் மையப்புள்ளியாகி விட்டது என்பது மறுக்கமுடியாத ஆதாரம்.

ஈரானியப் புரட்சி, ஆப்கானில் சோவியத் ஆக்கிரமிப்பு என இரட்டை அதிர்ச்சி ஏற்பட்ட 1980 களில் சௌதி அரேபியாவின் தொண்டமைப்பான க்வாஸிஜிகாத் இயக்கத்திற்கு மிகப்பெரும் நிதியாதாரமாக வளர்ந்தது. 20 நாடுகளில் ராணுவப்பயிற்சி எடுக்கவும், ஆயுதங்கள் வாங்கவும், அமைப்பிற்கான ஆட்களைத் திரட்டவும் அப்பணத்தைப் பயன்படுத்திக்கொண்டது ஜிகாத் இயக்கம்.

அமெரிக்க அதிகாரிகளின் கவனத்தை வேறுதிசைக்குத் திருப்ப சௌதியின் பெருந்தொகை வசதியாயிற்று. சௌதித் தூதர்களையும், சிஐஏ நிலைய அதிகாரிகளையும், கையாள்வதற்கும், ஒப்பந்த ஒப்புதலுக்கும், பல்லாயிரம் பில்லியன் டாலர் சௌதிப் பணம் செலவிடப்பட்டதாக, சில முக்கியமான முன்னாள் அமெரிக்கப் போர்டு அதிகாரிகள் கூறினார்கள்.

அல்கொய்தாவை மட்டுமல்லாமல் வேறுபல தீவிரவாதக் குழுக்களுக்கும் பண உதவி செய்து வந்துள்ளனர் என்பது அரச குடும்பத்தினரின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்டதன் மூலம் தெரியவந்தது.

ரியாத் அரச குடும்பத்திற்கும், வாஷிங்டன்னுக்கும் இடையிலான வேறுபல மர்மமான உறவுகளும் இருந்துள்ளன என்பதற்கான ஆதாரங்கள் செப் 11 2001 உலக வர்த்தக மையம், பெண்டகன் தாக்குதலுக்குப் பின் வெளிப்பட்டுள்ளது. வெர்னிட்டி பேர் என்ற இதழ் முன்னர் வெளிப்படாத பல உண்மைகளை சௌதியர்களைக் காப்பதற்காக என்ற தலைப்பில் 2003 ல் வெளியிட்டது. புஷ் குடும்பத்தார், பின்லேடன் சௌதி அரச குடும்பம் இவர்களுக்கு இடையில் இருந்த நெருக்கமான உறவை அப்பத்திரிகை அம்பலப்படுத்தியதில் எனக்கொன்றும் வியப்பாகத் தெரியவில்லை. இவ்வுறவு 1974 திரைமறைவுப் பணிவிவகாரத்தில் இருந்தே தொடங்கிவிட்டது. 1971ல் இருந்து 1973 வரை ஜார்ஜ்எச்.டபுள்யூ புஷ் அமெரிக்காவிற்கான ஐ.நா. சபைத் தூதுவராகவும், பின்னர் 76 லிருந்து 77 வரை சிஐஏ தலைவராகவும் இருந்தபோதும் இருக்கத்தான் செய்தது. எனக்கு ஆச்சர்யமளித்தது என்னவென்றால் வேனிட்டி பேர் வெளிப்படுத்திய உண்மையின் இறுதித் தீர்மானம்தான். அது கூறுவது

உலகின் இரண்டு மிகப்பெரிய சாம்ராஜ்ஜியங்களான ஜார்ஜ் புஷ் குடும்பமும், சௌதி அரசர் குடும்பமும் இருபது வருடங்களாக தங்களுக்குள் மிக நெருக்கமான அரசியல், வியாபார உறவுகளைப் பேணி வருகின்றன.

ஜார்ஜ் புஷ்ஷின் மூலதனத்தைக் கொண்ட நிவால் நிலைமையில் தத்தளித்துக்கொண்டிருக்கும் ஹர்கேன் எனர்ஜி என்ற தனியார் எண்ணெய் நிறுவனத்தை சௌதிகள் தாங்கிப் பிடிக்கிறார்கள். புஷ்ஷும் அவரது நீண்டகாலக் கூட்டாளியும் முன்னாள் செயலாளருமான ஜேம்ஸ் பேக்கர் 111 கார்லைல் குழுமத்திற்கு ஆதரவாக சௌதி நிதியாளர்கள் கூட்டத்தில் தோன்றி, அதற்கு உலகெங்கும் பல இடங்களில் பெரும் ஈவுத்தொகை வருவதாக வாதாடினார். இன்று அந்நிறுவனத்திற்கு முன்னால் ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் மூத்த ஆலோசகராக இருக்கிறார்.

செப் 11 நிகழ்வு முடிந்த ஒரு சிலநாட்களில் பணக்கார சௌதி அரேபியர்களும், பின்லேடன் குடும்பத்தினரும் அமெரிக்காவை விட்டு தனியார் ஜெட் விமானத்தில் பறந்து சென்றிருக்கிறார்கள். அவ்விமானத்தைப் பறக்க அனுமதித்ததற்கு யாரும் இன்றுவரைப் பொறுப்பேற்றுக் கொள்ளவில்லை. அவற்றில் பயணித்தவர்கள் இன்றுவரை விசாரிக்கப்படவும் இல்லை. புஷ் குடும்பம் சௌதிகளுடன் கொண்டுள்ள நீண்டகால உறவின் காலமாகத்தால் இவை நிகழ்ந்தனவோ.

பாகம் மூன்று

1975 – 1981

அத்தியாயம் - 17

பணமாக் கால்வாய்ப் பேச்சுவார்த்தையும், கிரகம் கிரீனும்

சௌதிஅரேபியா பலருக்கும் வாழ்வளித்தது. எனக்கும் சரியான பாதை அமைந்துவிட்டது. ஆனால் பாலைச் சாம்ராஜ்ஜியத்தில் எனக்குப் புதிய கதவுகள் திறந்தன என்பதை மறுப்பதற்கில்லை. இருபது ஊழியர்கள் சூழ பாஸ்டன் அலுவகத்தில் எனக்கான ஆளுகையை உருவாக்கிக்கொண்டேன். உலகம் முழுதும் அங்கெங்கே மெய்னுக்கான ஆலோசகர்களை நியமித்துக்கொண்டேன். நூறாண்டு கால வரலாறுடைய எங்கள் நிறுவனத்தில் இளைய பங்குதாரராகிவிட்டேன். மூத்த பொருளாதார அதிகாரி என்ற பொறுப்பிற்கு மேலாக பொருளாதார மேலாளர் மற்றும் மண்டல திட்டஅதிகாரி என்ற பதவியும் அடைந்தேன். ஹார்வர்டு பல்கலைக்கழகம் போன்ற பல இடங்களில் விரிவுரைக்கு அழைப்பட்டேன். பல செய்தித்தாள்கள் என்னிடம் கட்டுரைகள் கேட்டு வெளியிட்டன. எனக்குச் சொந்தமாக உல்லாசப் படகு ஒன்றும் வைத்திருந்தேன். அதை வரலாற்றுப் புகழ்மிக்க போர்த்தளமான கான்ஸ்ட்டியூசனுக்கு அருகில் பாஸ்டன் துறைமுகத்தில் நிறுத்திவைத்திருந்தேன். ஒல்டு அயர்ன்ஸ் என்றழைக்கப்பட்ட பிரபலமான அக்கப்பல்தான் புரட்சிப்போருக்குப் பின்னர் கடற்கொள்ளையர்களின் கொட்டத்தை ஒடுக்கப் பயன்படுத்தப்பட்டது. நாற்பதாவது வயதை எட்டு முன்னரே மில்லியனராகும் அளவிற்கு பங்குகளைச் சேர்த்து வைத்திருந்தேன். கைநிறைய சம்பளம் பெற்று வந்தேன். என் மணவாழ்க்கை முறிந்துவிட்டது உண்மை என்றாலும் பல கண்டங்களைச் சேர்ந்த அழகழகான கவர்ச்சிகரமான பெண்களுடன் எனது நாட்கள் உல்லாசமாகக் கழிந்தது.

திட்ட முன்னுரைப்பில் அளவீட்டில் கணக்கியலாளரான ரஷ்யர் ஒருவரது கோட்பாட்டின் அடிப்படையில் புதுவிதமான

அணுகுமுறையை புருனோ உருவாக்கினார். குறிப்பிட்டத் துறையில் பொருளாதாரம் எந்தவிதமான வளர்ச்சிபெறும் என்ற காரிய சாத்தியமான முன்னுரைப்புடன் ஆய்வாளனின் முடிவை இணைப்பதற்கு இந்த அணுகுமுறை ஏற்றதாக இருந்தது. அந்தக் கணக்கீட்டு முறை உனக்குப் பயன்படுமா பார் என புருனோ என்னைக் கேட்டிருந்தார். பெருங்கடன்கள் பெறுவதற்கான திட்டங்களை ஊதிப்பெரிதாக்கிக் காட்ட வசதியான கருவியாகத் தோன்றியது எனக்கு.

நான் எம்ஐடியைச் சேர்ந்த இளம் கணிதவியலாளர் டாக்டர் நாதிபுரம் பிரசாத்தை எனது துறைக்கு அழைத்துவந்து ஒரு பட்ஜெட்டை அளித்தேன். அவர் கணக்கீட்டு மாதிரியாக மார்க்கவ் என்ற முறையை வளர்த்தெடுத்தார். நாங்கள் இருவரும் சேர்ந்து பொருளாதார வளர்ச்சிக்கான முதலீட்டு முன்னுரைப்பிற்கு மார்க்கவ் முறைதான் ஆகப் புரட்சிகரமானது என்று ஆணித்தரமாக அடித்துக் கூறும் ஆவணங்களைத் தயாரித்தோம்.

உதவி என்ற பெயரில் நாங்கள் கடனளிக்கும் நாடுகள் திருப்பிச் செலுத்தவேமுடியாத நிலைக்குத் தள்ளப்படும் என்பதை அறிவியல் பூர்வமாக நிரூபிப்பதற்கு மிகச்சரியாகப் பொருத்தமான கருவி இதுதான். மார்க்கவ் அடிப்படையில் உருவாக்கும் முன்னுரைப்பின் மீது மிக நுணுக்கமான பொருளாதார வல்லுனர்கள் மட்டுமே கேள்வி எழுப்பவோ விபரங்களைப் புரிந்துகொள்ளவோ முடியும். அந்த கணக்கீட்டு முறையை பல மாநாடுகளிலும், பல்கலைக் கழகங்களிலும் முன்வைக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டதால் எங்கள் துறையில் மிகவும் பிரபலமாக விளங்கினோம். முன்னணி நிறுவனங்கள் பல அக்கட்டுரைகளை வெளியிட்டன.

நானும் ஓமர் டோரிஜோஸும் எங்களுக்குள் செய்துகொண்ட ரகசிய உடன்படிக்கைக்கு ஏற்ப நடந்துகொண்டோம். பனாமாவிற்கானத் திட்டங்கள் வெறுமனே ஊதிப்பெருக்கினதாக இல்லாமல் ஏழைமக்கள் பயன்பெறுமாறு அமைந்துள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொண்டேன். அவை சோசலிசத் தன்மையானவை என்ற முணுமுணுப்பும் கூட என் காதில் விழத்தான் செய்தது. ஆகையால் டோரிஜோஸிடமிருந்து எங்கள் மெய்ன் நிறுவனத்திற்குத் தொடர்ந்து ஒப்பந்தங்கள் கிடைத்து வந்தன. எனது திட்டங்கள் பனாமாவில் இருந்த பழைய உள்கட்டுமானத்தில் பாரம்பரியமான விவசாயம் செய்வதற்கான மகத்தானத் திட்டத்தையும் உள்ளடக்கி இருந்தது. பனாமாக் கால்வாய் குறித்த மறுபேச்சுவார்த்தையில் டோரிஜோஸையும், ஜிம்மிக் கார்டரையும் கவனித்து வந்தேன்.

கால்வாய் குறித்த பேச்சுவார்த்தை உலக நாடுகளிடையே பெரும் ஆர்வத்தையும் பரபரப்பையும் உருவாக்கி இருந்தது. அமெரிக்கா பனாமாவிற்கு உரிய கால்வாயை பனாமாவிடமே ஒப்படைப்பது என்ற உலகமக்கள் சரியென்று கருதும் செயலை செய்யப்போகிறதா? அல்லது வியட்நாமில் உலுக்கி எடுக்கப்பட்ட விதி வலியது என்ற உலகமரபிற்கு ஏற்பவே செயல்படப் போகிறதா என்பதையறிய உலகமக்கள் ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தனர். சரியான அத்தருணத்தில் நியாயத்திற்குக் கட்டுப்படும் இளகிய மனமுடைய ஒரு மனிதர் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகப் பலரும் கருதினர். என்றாலும் தேசியப் பாதுகாப்பில் முக்கியத்துவம் பெற்ற, தென்னமரிக்காவின் அதிர்ஷ்டங்களை நீர்நாடாவாகக் கட்டிப்போட்டிருக்கிற அந்தக் கால்வாயை, அமெரிக்கா எப்படி விட்டுத்தர முடியும்? என்று வாஷிங்டன்னின் மரபுவாதிகளும் வலதுசாரி மதவாதிகளும் திரியைக் கொளுத்திப் போட்டார்கள்.

நான் பனாமா செல்லும்போது காண்டினெண்டல் ஓட்டலில் தான் தங்குவது வழக்கம். எனது ஐந்தாவது பயணத்தின் போது அங்கே சீரமைப்புப் பணிகளாலும், கட்டுமான வேலைகளாலும் இரைச்சலாக இருந்தது. என் வீடு கையை விட்டுப்போனது போன்ற வெறுப்பு ஏற்பட்டது. ஆனால் அதைவிட சிறப்பான ஓரிடத்திற்கு இப்போது வந்து சேர்ந்தேன். ஆடம்பரமான விதானத்தில் மரத் துடுப்பு போன்ற நீண்ட இறக்கையுடைய காற்றாடியின் கீழ் அமர்ந்திருந்தேன். காஸாபிளாங்கா படத்தில் இடம்பெறும் காட்சியில் நான் இருப்பதுபோலவும் அப்படத்தின் நாயகன் எந்நேரமும் அங்கே வரக்கூடுமென்ற கற்பனையில் என்னை மிதக்கச் செய்யும்படியாக இருந்தது அந்த இடம். பனாமா குறித்த கிரகம் பெல்லின் கட்டுரை வந்திருந்த நியூயார்க் ரிவீவ்யூ ஆப் புக்ஸைப் படித்துவிட்டு மூடினேன். மேலே சுழன்ற காற்றாடி என்னை இரண்டாண்டுகளுக்கு மூந்தைய மாலைநேரத்திற்குப் பின்னோக்கி இட்டுச் சென்றது.

கம்பீரமான மின்விசிறிகள் சுழலும் அக்கட்டடத்தில் நடந்த கூட்டத்தில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டிருந்த வெளிநாட்டவர் களில் நானும் ஒருவன். போர்டு பலவீனமான ஜனாதிபதி. ஆகையால் அவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார் என்று டோரிஜோஸ் 1975ல் அனுமானித்திருந்தார். அதனால்தான் பனாமாக் கால்வாய் பற்றியப் பேச்சுவார்த்தையை முடுக்கி விட்டிருக்கிறேன்,

இதுதான் பனாமாக் கால்வாயை மீட்டெடுப்பதற்கான அரசியல் போரைத் துவக்குவதற்குச் சரியான நேரம் என்று செல்வாக்கான பனாமியர்கள் குழு மத்தியில் பேசும்போது அவர் குறிப்பிட்டார்.

அவரது பேச்சு என்னை மிகவும் கவர்ந்துவிட்டது. எனவே அறைக்கு வந்ததும் முதல் வேலையாக பாஸ்டன் குளோப் என்ற பத்திரிகைக்கு ஒரு கட்டுரை எழுதி அனுப்பினேன். அக்கட்டுரை பத்திரிகை ஆசிரியருக்குப் பிடித்துப்போனதால் அதை ஆசிரியர் கருத்திற்குப் பதில் என்பதுபோல எழுதிக்கொடுத்தால் போடலாம் என்று போனில் கூறினார். அவர் சொன்னபடியே நான் எழுதிய கடிதம் அந்நாளிதழில் 1975ல் பனாமாவில் காலனியத்திற்கு இடமில்லை என்ற தலைப்பில் அரைப்பக்கத்திற்கு செப் 19 அன்று அதே ஆண்டில் வெளியானது.

பனாமாக் கால்வாயை பனாமாவிற்குத் திருப்பித் தருவதற்கு அவசியமான காரணங்கள் மூன்றை அக்கட்டுரையில் குறிப்பிட்டேன். முதலாவது அதைக் கைப்பற்றியிருப்பதற்கு என்ன காரணங்கள் கூறினாலும் அது நியாயமற்றது. இரண்டாவது திருப்பிக் கொடுப்பதைவிட கட்டுப்பாட்டில் வைத்திருக்க வழி செய்யும் போதுள்ள ஒப்பந்தம் பாதுகாப்பு அம்சத்தில் நிறைய பிரச்சனைகளைக் கொண்டு வரும். இக்கருத்தை ஒரு நபர் ஒரே ஒரு குண்டு வைத்தால் போதும் இரண்டு ஆண்டுகளுக்கு இக்கால்வாய்ப் போக்குவரத்தை இரண்டு ஆண்டுகளுக்கு நிறுத்திவிட முடியும் என்ற இண்டர் ஓசோனிக் கமிஷன் வெளியிட்ட முடிவை மேற்கோள் காட்டியிருந்தேன். இதை டோரிஜோஸும் கூறியுள்ளார். மூன்றாவது கால்வாயைப் பனாமாவிற்குத் திரும்பத் தராமல் இருந்தால் தென்னமெரிக்காவினுடனான அமெரிக்க உறவு மேலும் சீரழியும் என்று கூறி அக்கட்டுரையை இவ்வாறு முடித்தேன்.

கால்வாயைத் திறம்படப் பயன்படுத்துவதற்கான சிறந்த வழி அதைப் பனாமாவியர் பொறுப்பில் விட்டுவிடுவதுதான். அவ்வாறு அளித்துவிடுவோமானால் இருநூறு ஆண்டுகாலமாக நாம் கூறிவரும் பிறரது இறையாண்மையில் தலையிட மாட்டோம் என்ற கடப்பாட்டிற்கு நாம் விசுவாசமாக இருக்கிறோம் என்று நாம் பெருமிதம் கொள்ளலாம்.

காலனியம் பற்றிய எந்தக் கருத்தும் இல்லாத 1775 க்கும் 1900 க்கும் இடைப்பட்டக் காலத்தில் ஒப்பந்தத்தின் விதிகள் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்திருக்கும். இன்று ஒப்பந்தத்தை நியாயப்படுத்த முடியாது. இன்று 1975ல் காலனியத்திற்கு இடமில்லை. சுதந்திரத்தின் இரண்டாவது நூற்றாண்டைக்

கொண்டாடிக் கொண்டிருக்கும் நாம் சுதந்திரம் என்றால் என்னவென்று புரிந்துகொண்டிருக்கிறோமா? அதற்கு ஏற்றவாறு நடந்துகொண்டு வருகிறோமா?

இப்படியொரு கட்டுரையை எழுதுவதற்குத் துணிச்சல் வேண்டும். குறிப்பாக தன் நிறுவனத்தைச் சார்ந்த யாரும் பத்திரிகைகளுக்குப் பேட்டி தரவோ எழுதுவதோ கூடாது என்று எதிர்பார்க்கப்படும் மெய்னில் இளைய பங்குதாரராக சேர்ந்திருக்கும் நான் இங்கிலாந்தின் பிரபலமான பத்திரிகையில் எழுதுவது சாதாரணமாக எடுத்துக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல. அலுவலக உள் அஞ்சலில் கேவலமாகத் திட்டியெழுதப்பட்ட மொட்டைக் கடிதம் ஒன்று வந்தது. அதை எழுதியது சார்லி இலிங்வொர்த் என்பதைக் கையெழுத்தின் மூலமாகக் கண்டுகொண்டேன். மெய்னில் பத்தாண்டிற்கும் மேலாக திட்டமேலாளராக இருப்பவன் அவன். அவனுக்குப் பின் மெய்னில் சேர்ந்து ஆறே ஆண்டுகளில் பங்குத்தாரராக ஆகிவிட்டேன் என்ற வயிற்றெரிச்சலில் எழுதப்பட்டக் கடிதம் அது. எச்சரிக்கையூட்டும் அபாயகரமான மண்டையோடும் குறுக்கெலும்புகளும் பிரபலச் சின்னத்தை வரைந்து இந்த கம்யூனிஸ்ட் மெய்னின் உண்மையான பங்குதாரரா? என்ற எளிய வாசகத்தையும் எழுதியிருந்தான்.

புருனோ தன் அறைக்கு வருமாறு அழைத்து மெய்ன் மிகவும் கட்டுப்பெட்டியான நிறுவனம். அதனால் பிரச்சனை இத்துடன் முடியக்கூடிய ஒன்றல்ல. நீ ஒரு புத்திசாலி என்பதால் நான் சொல்வதைப் புரிந்துகொள்வாய் என்று நினைக்கிறேன். உன் கட்டுரையின் பிரதியை டோரிஜோஸிற்கு அனுப்பி இருப்பாய். அது அவனுக்கு மிகவும் பிடித்திருக்கும். டோரிஜோஸை சோசலிஸ்ட் என்று நினைக்கும் இந்த அலுவலகத்திலுள்ள வேடிக்கையாளர்கள் தங்களுக்கு அங்கிருந்து வேலை கிடைத்துக்கொண்டிருக்கும் வரை எதையும் கண்டுகொள்ளமாட்டார்கள் என்றார்.

வழக்கம்போல புருனோ சொன்னது சரிதான். ஜிம்மி கார்டர் அதிகாரத்தில் இருக்கும் 1977 இல் வெள்ளை மாளிகையில் கால்வாய் குறித்த பேச்சுவார்த்தைகள் ஓடிக்கொண்டிருந்தன. அரசின் கொள்கைக்குப் புறம்பாக நடந்த மெய்னின் போட்டியாளர்கள் பல் பனாமாவில் இருந்து வெளியேற்றப்பட்டனர். ஆனால் எங்களுக்கு மேலும் மேலும் வேலைகள் பெருகின. நான் இப்போது பனாமா ஓட்டலில் அமர்ந்து கிரகம் கிரீனின் கட்டுரையை வாசித்து முடித்திருந்தேன்.

பனாமாவின் தேசியப் பாதுகாப்புப் படையில் உள்ள அதிகாரிகளின் ஊழலைப் பற்றிப் பேசும் ஐந்து எல்லை நாடுகளுடன் ஒரு நாடு என்ற தலைப்பில் சீற்றம் நிறைந்த கட்டுரை அது. அவர்களுக்கு நான் அளிக்காவிட்டால் ஜிஐஏ அளிக்கும் என்று ஜெனரலே சில அதிகாரிகளுக்கு சில சிறப்புச் சலுகைகள் அளித்திருப்பதாக ஒப்புக்கொண்டிருப்பதையும் கட்டுரையாளர் சுட்டிக்காட்டிருந்தார். அதாவது கார்டரின் விருப்பங்களுக்கு எதிராகக் கீழறுப்பு வேலைகளைச் செய்வது என்று உளவுத்துறைத் தீர்மானித்துவிட்டது, அவசியமானால் பேச்சுவார்த்தைகளுக்கு முட்டுக்கட்டைப் போட பனாமா ராணுவத் தலைமைக்கு உளவுத்துறை லஞ்சம் கொடுக்கவும் தயாராக உள்ளது என்பதுதான் இதன் பொருள். டோரிஜோஸைக் குள்ளநரிகள் சூழ்ந்துவிட்டால் என்னால் ஒன்றும் செய்யமுடியாதே என்று வருத்தமுற்றேன்.

நியூஸ் வீக் அல்லது டைம்ஸ் ஏதோ ஒரு பத்திரிகையின் மக்கள் பகுதியில் டோரிஜோஸுடன் கிரகம் கிரீன் அமர்ந்துள்ள போட்டோவைப் பார்த்திருக்கிறேன். அதில் அடிக்குறிப்பில் சிறப்பு விருந்தினர் நல்ல நண்பரானார் என்று அடிக்குறிப்பிட்டிருந்தது. ஜெனரலின் சிறந்த நண்பர் எழுதிய இக்கட்டுரையை அவர் எப்படிப் புரிந்துகொள்வார் என்று எனக்குள் ஒரு கேள்வி கேட்டுக் கொண்டேன். தான் 1972ல் காபி அருந்தியபோது பேசிய ஒரு அம்சம் குறித்து கட்டுரையாளர் ஒரு கேள்வியும் எழுப்பி இருந்தார். இந்த அந்நிய நிதியுதவியானது அவரை பணக்காரராக்கி, நாட்டைக் கடன் பிடியில் சிக்கவைக்கக்கூடியது என்பதையும், இந்த அணுகுமுறை அதிகாரத்தை ஊழல் நிறைந்ததாக மாற்றும் என்பதும் அவருக்குத் தெரியாததல்ல, ஆனாலும் இந்தக் கடன் தன்னலனுக்காக இல்லாமல் முற்றிலும் தன்னாட்டு மக்களின் நலன் கருதி எடுக்கப்பட்ட முடிவு ஆகும். கடனுதவி நாட்டின் மொத்த அமைப்பையும் நிலைகுலையச் செய்துவிடும். அவரது ஒவ்வொரு அசைவும் பனாமாவைத் தாண்டி வெகுதொலைவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் அவரையும், அவரது நடவடிக்கைகளையும் கவனித்து வருகிறது என்பதால் இதைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது.

கடனுதவி நாட்டை நெருக்கடிக்குள்ளாவதற்குப் பதிலாக அம்மக்களுக்குப் பயனுள்ள வகையில் செலவிடுவதற்கு பன்னாட்டு நிறுவனவியம் எப்படி எதிர்வினையாற்றும் என்ற ஆச்சர்யம் எனக்கு. நானும் டோரிஜோஸும் அன்று எட்டிய உடன்பாட்டிற்கு எப்போதாகிலும் வருந்தியிருப்பாரா? எனக்குள் ஏற்பட்ட உணர்வு

என்ன என்பதை தெளிவாகச் சொல்ல முடியவில்லை. ஆனால் பொ.அ.ஆள் என்ற வகையில் ஒருஅடி பின்னிறங்கி விட்டேன். அதிக ஒப்பந்தங்கள் கிடைக்கவேண்டுமென்பதற்காக டோரிஜோஸ் வலியுறுத்திய கண்ணியத்தைக் காப்பாற்றினேன். அதனால் மெய்னுக்கு லாபம்தான் என்றாலும் கிளாடின் என்னுள் ஊன்றிய விதைக்கு மாறாக, ஏகாதிபத்திய நலன்களுக்கு முரணாக நடந்திருக்கிறேன். அதுதான் ஓநாய்களை இறக்கிவிடக் காரணமானதோ?

அன்று டோரிஜோஸின் மாளிகையை விட்டு வெளியேறும்போது இலத்தீன் அமெரிக்கா வரலாறு முழுவதும் வீரத்தியாகிகளால் நிறைந்திருக்கிறது என்ற எண்ணம் தோன்றியது. சாதாரண மனிதர்களை நேர்மையற்றவர்களாக்குவது என்பதையே அடிப்படையாகக் கொண்ட அமைப்புமுறையானது ஊழலுக்குப் பணியாத பொதுமனிதர்களுக்குக் கருணை காட்டாது.

எனக்குப் பரிச்சயமான ஒரு உருவம் பரந்த விதானத்தில் நடந்துசெல்வது போலத் தோன்றியது. கண்கள்தான் என்னை ஏமாற்றுகின்றனவோ? முதலில் அது ஹம்ரி போகார்டோ என்று குழம்பினேன். ஆனால் அவர் தான் இறந்துவிட்டாரே என்பது நினைவிற்கு வந்தது. அது ஆங்கில நவீன இலக்கியத்தில் மகத்தான மனிதரின் உருவம் என்பதை உணர்ந்துகொண்டேன். த பிரைட் அண்ட் குளோரி, த காமடியன், அவுர் மேன் இன் ஹவானா போன்ற நூல்களுக்கும் சற்று முன் வாசித்தக் கட்டுரையையும் எழுதிய கிரகம் கிரீன் எனக்குப் பக்கத்து மேசையில் இருந்தார். ஒரு நிமிடம் தயக்கத்துடன் சுற்றிலும் பார்த்துவிட்டு பின் எழுந்து ஒரு காப்பிக்கடை நோக்கி நகர்ந்தார்.

எனக்கு அவரை அழைப்பது அல்லது பக்கத்தில் நெருங்குவது என்று தோன்றியது. ஆனால் கட்டுப்படுத்திக்கொண்டு அவருக்கு தனிமை தேவைப்படலாம் என்றும், அவர் என் மீது எரிச்சலடையலாம் என்றும் உள்ளுக்குள் சொல்லிக்கொண்டேன். நியூயார்க் ரிவீயூவ் இதழைக் கையில் எடுத்துக்கொண்டு என்னையறியாமல் காப்பிக்கடையின் கதவருகே சென்றுவிட்டேன்.

சற்றுமுன்தான் அங்கு காலை உணவு உண்டிருந்தேன் என்பதால் அங்கிருந்த பரிசாரகர் என்னைத் தயையுடன் பார்த்தார். ஒரு நோட்டம் விட்டேன். கிரகம் கிரீன் சுவற்றிற்குப் பக்கத்தில் தனிமையில் அமர்ந்திருந்தார். அவருக்குப் பின்பக்க இருக்கையைக் காட்டினேன்.

அங்கே அமர்ந்து இனியொருமுறை சாப்பிடலாமா? என்று பரிசாரகரைக் கேட்டேன்.

நான் தாராளமாகக் கைப்பணம் தருபவன் என்பதால் பரிசாரகர் கனிவான புன்னகை சிந்தி வழிவிட்டார்.

கிரீன் தன் செய்தித்தாளுக்குள் புதைந்திருந்தார். நான் எனக்கொரு காப்பியும், தேன் தடவிய ரொட்டியும் தருமாறு பணித்தேன். கிரகம் கிரீன் டோரிஜோஸ் குறித்தும் கால்வாய்ப் பேச்சுவார்த்தை குறித்தும் என்ன நினைக்கிறார் என்று அறிய விரும்பினேன். ஆனால் பேச்சை எப்படித் துவங்குவது என்று தெரியவில்லை. ஒரு மடக்கிற்காகத் தனது கோப்பையைப் பார்த்தார்.

தங்கள் தயை என்றேன்.

என்னை வெறித்துப் பார்த்தார் அல்லது அப்படித் தோன்றியது.

ஆம் என்றார்.

தங்களை இடையூறு செய்ய விரும்பவில்லை, நீங்கள் கிரகம் கிரீன் தானே?

கனிவான புன்னகையுடன் ஆம் அதற்கென்ன என்றார். இங்கு பனாமாவில் என்னைப் பலருக்கும் அடையாளம் தெரியாது.

அவர் எனக்குப் பிடித்த நாவலாசிரியர் என்பதையும், நான் மெய்னில் வேலை செய்கிறேன், டோரிஜோஸைச் சந்தித்திருக்கிறேன் என்பது உட்பட மொத்த வரலாற்றையும் மளமளவென்று கொட்டிவிட்டேன். பனாமாவை விட்டு அமெரிக்கா வெளியேறவேண்டும் என்று யோசனை கூறி போஸ்டன் குளோப் இல் கட்டுரை எழுதியது நீங்கள்தானா என்று கேட்டார்.

எனக்குக் குதூகலமாகிவிட்டது.

உங்கள் நிலைக்கு நீங்கள் செய்வது துணிச்சலான காரியம். என்னுடன் அமரலாமே என்றார்.

அவருக்குப் பக்கத்தில் அமர சுமார் ஒன்றரை மணி நேரம் பேசிக்கொண்டிருந்தோம். அவர் பேச்சின் மூலம் டோரிஜோஸிற்கு எவ்வளவு நெருக்கமானவர் என்பதை உணரமுடிந்தது. சில நேரங்களில் ஒரு தந்தைத் தன் மகனைப் பற்றிப் பேசுவது போலப் பேசினார்.

ஜெனரல் தனது நாட்டைப் பற்றி எழுதுமாறு என்னைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். அதைத்தான் செய்துகொண்டிருக்கிறேன். எனது வழக்கமான எழுத்து முறையில் இருந்து மாறுபட்ட ஒன்றாக, புனைவு அற்றதாக இருக்கும் என்றார்.

நீங்கள் புதினத்திற்குப் பதிலாக அபுனைவு ஒன்றை எழுதலாமே என்றேன்.

புனைவு பாதுகாப்பானது. நான் எப்போதும் வியட்நாம், ஹெய்டி, மெக்சிகோ புரட்சி போன்ற மாற்றுக் கருத்தையே முன் வைக்கிறேன். இந்த விசயங்களை நேரடிக் கட்டுரையாக வெளியிட பெரும்பாலான வெளியீட்டாளர்கள் அச்சம் கொள்கின்றனர். அங்கிருந்த நியூயார்க் டைம்ஸ் இதழைக் காட்டி இதெல்லாம் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் எழுத்துக்கள் என்றபடி சிரித்தார். அதையெல்லாம் கடந்து எனக்குப் புனைவு எழுதுவதுதான் பிடித்தமானது. அது எனக்குப் பெரும் சுதந்திரத்தை அளிக்கிறது. என்று கூறிவிட்டு என்னைக் குறிப்பாகப் பார்த்தார். நீங்கள் கால்வாயைப் பற்றி எழுதியதைப்போல முக்கியமானவற்றை கட்டுரையாக எழுதித்தான் ஆகவேண்டும் என்று கூறினார்.

பனாமாவை ஆளுகை செய்கிற மனிதர் தன்நாட்டின் ஏதுமற்ற ஏழைமக்களிடம் பெற்றுள்ள மிகுந்த செல்வாக்கைப் போலவே ஒரு இலக்கியுவாதியிடமும் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார். டோரிஜோஸ் மீதான அவரது பெருமிதம் இயற்கையானதே. அதே போல தனது நண்பரின் உயிரைப் பற்றி வைத்திருந்த பயமும் இயற்கையானதுதான்.

நீண்ட பெருமூச்சிற்குப் பின் வடக்குப் பயங்கரத்திற்கு எதிராக அவர் சவால்விட்டிருக்கிறார். அது அவரது உயிரைப் பற்றிய பயத்தை எனக்கு அளிக்கிறது என்றபடி தலையை உலுக்கிக் கொண்டார்.

நாங்கள் பிரியவேண்டிய நேரம் வந்துவிட்டது.

நிதானமாக எழுந்து என் கையைப்பற்றி குலுக்கிவிட்டு நாள் பிரான்ஸ் கிளம்புவதற்கான விமானத்தைப் பிடிக்கவேண்டியுள்ளது என்றார். பின் என் கண்களை ஊடுறுவிப் பார்த்து நீங்கள் ஏன் புத்தகம் எழுதக்கூடாது? அது உங்களுக்குள் இருக்கிறது. ஆனால் அந்த விசயம் குறித்து நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் என்று நாள் கொண்டிருந்த எண்ணத்திற்கு ஊக்கம் கொடுத்தார். திரும்பி வெளியேறி நடந்தார். பின் நின்று மீண்டும் உணவகம் நோக்கி சில அடிகள் எடுத்து வைத்தார்.

என்னிடம் வந்து கவலை வேண்டாம், ஜெனரல் வெற்றி பெறுவார். கால்வாயைத் திரும்பப் பெற்றுவிடுவார் என்றார்.

டோரிஜோஸ் ஜனாதிபதி கார்ட்டருடன் வெற்றிகரமான பேச்சுவார்த்தை நடத்தி புதிய உடன்படிக்கைகள் மூலம் கால்வாயை

பனாமியர்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார். வெள்ளை மாளிகை அமெரிக்கக் காங்கிரஸைச் சமாதானப்படுத்த நெடிய போராட்டம் நடத்தவேண்டியிருந்தது. இறுதியில் ஒரு வாக்கு வித்தியாசத்தில் கால்வாய் ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பழமைவாதிகள் பழிதீர்க்க சபதம் பூண்டனர்.

டிரகம் கிரீன் எழுதிய கெட்டிங் டு நோ த ஜெனரல் என்ற ஜெனரல் பற்றிய நூல் பல ஆண்டுகள் கழித்து வெளியானது. அந்நூலை தனக்கும் டோரிஜோஸிற்கும் நிகாரகுவா, எல்சால்வடார், பனாமாவில் இருக்கும் நண்பர்களுக்காக அர்ப்பணித்திருந்தார்.

அத்தியாயம் - 18

ஈரான் சாம்ராஜ்ஜிய சக்கரவர்த்தி

நான் ஈரானுக்கு 1975 க்கும் 78 க்கும் இடைப்பட்ட காலங்களில் பலமுறை சென்று வந்தேன். சிலநேரங்களில் இந்தோனேசியா, டெஹ்ரான், இலத்தீன்அமெரிக்கா எனச் சுற்றிச் சுழல நேரிட்டது. மன்னருக்கெல்லாம் மன்னராகிய, அதாவது அரபு அரச மொழியில் கூறுவதானால் ஷாக்களின் ஷாவாகிய ஈரான் ஷா தனது நாட்டில் முற்றிலும் வேறுபட்ட சூழலை உருவாக்கி வைத்திருந்தார்.

சௌதிஅரேபியாவைப்போல ஈரானும் வளமான எண்ணெய் வளத்தைக் கொண்டிருந்தது. திட்டங்களை நிறைவேற்றுவதற்கானக் கடன் அந்நாட்டிற்குத் தேவைப்படவில்லை. சௌதியைக் காட்டிலும் அதிக அளவிலான மக்கள்தொகையைக் கொண்டிருந்தது. மத்தியக்கிழக்கு இஸ்லாமிய நாடாக இருந்தாலும் அது அரபு நாடு அல்ல. அத்துடன் வரலாறு நெடுகிலும் உள்நாட்டு, அண்டைநாட்டு அரசியல் கொந்தளிப்பில் சிக்கிய நாடாக இருந்தது. அதனால் இதனைக் கையாள மாறுபட்ட அணுகுமுறைத் தேவைப்பட்டது. மன்னர் ஷாவை முற்போக்கு அடையாளமாக முன்னிருத்த வாஷிங்டன்னும் அதன் வணிகச் சமூகமும் தீர்மானித்தது.

ஜனநாயகக் கூட்டாளியின் தேவைகளை நிறைவேற்றுவதில் அமெரிக்காவின் பெரும் நிறுவனம் எந்தளவிற்கு உறுதியான அரசியல் ஆர்வம் கொண்டுள்ளது என்பதை உலகிற்குக் காட்ட அளவற்ற ஆற்றலைச் செலவிட்டோம். ஜனநாயகத்திற்குப் புறம்பான அவரது பதவியைப் பொருட்படுத்தவில்லை. அல்லது ஜனநாயகப்பூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்நாட்டின் தலைவரைக் கவிழ்க்க சிஐஏவைப் பயன்படுத்தியதற்காகக் கூச்சப்படவும் இல்லை. அமெரிக்கா மீது கடும் எதிர்ப்புணர்வு கொண்டுள்ள ஈராக், லிபியா, சீனா, கொரியா போன்ற நாடுகளுக்கு மாற்றாக ஷாவை முன்னிறுத்த வேண்டுமென்று வாஷிங்டன்னும் அதன் ஐரோப்பியக் கூட்டாளிகளும் தீர்மானித்துவிட்டனர்.

பெரும் நிலப்பிரபுக்கள் கையில் இருந்த நிலங்களை உழுபவர்களுக்கு அளிக்கவேண்டுமென 1962 இல் உத்தரவிட்ட வகையில் ஷா வாழ்வின் அடித்தட்டு மக்களுக்கு நண்பனாக, முற்போக்காளராகக் காட்சியளித்தார். அடுத்த ஆண்டில் விரிவான சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்ட வெண்மைப் புரட்சியைத் துவக்கி வைத்தார். 1970 களில் ஒபெக்கின் வளர்ச்சியையடுத்து ஷா உலகில் செல்வாக்கு மிக்கத் தலைவராகத் திகழ்ந்தார். அதேநேரத்தில் ஈரான் மத்தியகிழக்கில் பலமிக்க ராணுவ சக்தியாகத் தன்னை வளர்த்துக்கொண்டது.

வடக்கே பல நாடுகளையும் உள்ளடக்கிய காஸ்பியன் கடற்கரையோரச் சுற்றுலாத் தளங்களில் இருந்து தெற்கே ஹார்மூஷின் நீரிணையில் ராணுவக் கண்காணிப்பு அமைப்பது வரை அனைத்துத் திட்டங்களுக்கும் மெய்ன் ஒப்பந்தம் பெற்றிருந்தது. மீண்டும் மண்டல வளர்ச்சித்திட்ட முன்னுரைப்புகளையும் அவற்றிற்குத் தேவையான மின்ஆற்றலையும், ஆற்றல் வழங்குமுறைக்கான திட்டங்களைத் தயாரிப்பது எனது வேலையாகி விட்டது.

நான் ஈரானின் முக்கியமான பகுதிகளைச் சுற்றி வந்தேன். பழைய பாலை மலைப்பிரதேசங்களில் கிர்மானிலிருந்து பாண்டார் அப்பாஸ் வரை இழுவைக் கேரவனைப் பின்தொடர்ந்தேன். உலகின் அதிசயங்களில் ஒன்றான பாரசீகப் பழம் பேரரசுகளின் அரண்மனைச் சிதைவுகளில் உலவினேன். அந்நாட்டின் சுற்றுலாத் தளங்களான ஷிராஸ், இஸ்பகான் போன்ற நகரங்களுக்கும் மன்னர் ஷா தனக்கு முடிசூட்டிக் கொள்ளும் வைபவத்திற்காக பிரமாண்டமான கூரையமைத்த நகரத்தையும் சென்று பார்த்து வந்தேன். இந்தப் பயணத்தில் இந்நாட்டின் நிலத்தையும், கலவையான மக்களையும் நேசிக்கத் தொடங்கிவிட்டேன்.

ஈரானை மேலோட்டமாகப் பார்த்தால் கிருத்துவர்களும், முஸ்லீம்களும் இணைந்து ஒற்றுமைக்கு இலக்கணமாகத் திகழ்வது போலத் தோன்றினாலும் உள்ளுக்குள் ஒருவர்மீது ஒருவர் ஆழமான வெறுப்புணர்வைக் கொண்டிருந்தனர்.

1977 இன் பிற்பகுதியில் ஒருநாள் மாலை என் அறைக்குத் திரும்பியபோது கதவில் ஒரு குறிப்புஅட்டைத் தொங்கிக் கொண்டிருந்தது. அதில் இருந்த யாமின் என்ற கையெழுத்து என்னைத் திடுக்கிடச் செய்தது. அவரை நான் சந்தித்ததில்லை என்றாலும் ஒரு கலகப் போராளி என்று அரசுக் கூட்டங்களில் கேள்விப்பட்டிருக்கிறேன். குறிப்பிட்ட ஒரு உணவகத்தில் சந்திக்க

வருமாறு தெளிவான ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. என்னைப் போன்ற நிலையில் இருப்பவர்கள் பார்க்க விரும்பினால் பார்க்காத பகுதிகளைக் காட்டுவதற்கான எச்சரிக்கைதான் இந்தக் கடிதம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. உண்மையில் என் நிலையென்ன என்பது யாமினுக்குத் தெரிந்திருக்குமோ என்ற வியப்பு ஏற்பட்டது. ஏதோ பெரிய சிக்கலான நிலையை எதிர்கொள்ளப் போகிறோமோ என்று தோன்றியது. ஆனாலும் அந்த மர்ம மனிதனைச் சந்திக்கும் ஆவலைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

மிகப்பெரிய சுவற்றிலுள்ள சின்னக் கதவுக்கு எதிரில் காரில் இருந்து இறங்கினேன். சுவற்றிற்குப் பின்புறம் என்ன இருக்கிறது என்பதை நான் பார்க்க முடியாது. நெடிய கருப்பு அங்கியணிந்த ஒரு அழகான பெண்மணி என்னை அலங்கார விளக்குகள் தொங்கும் நீண்ட விதானத்தின் வழியாக அழைத்துச் சென்றாள். இறுதியில் வைரம் போல மின்னி கண்களைக் கூசச் செய்யும் ஒளி பொங்கும் அறைக்குள் சென்றோம். சூழலுக்கு என்னை நிதானத்துக்கொண்டு ஒளிக் கற்களாலும் முத்துக்களின் பிறப்பிடமான சிப்பிகளாலும் அறையின் சுவர்கள் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அந்த ஓட்டல் முழுதும் நுணுக்கமான வேலைப்பாடுடைய வெண்கலச் சரங்களில் உயரமான மெழுகுவர்த்திகள் ஏற்றிவைப்பட்டிருந்தன.

யாமின் மிகவும் கண்ணியமான மனிதர். என்னிடம் பேசியதை வைத்துப் பார்க்கும்போது நான் ஒரு பொருளியலாளன் என்று மட்டுமே நினைத்துக்கொண்டிருக்கிறார். எனது மர்மமான நோக்கங்கள் அவருக்குத் தெரியாது. நான் அமைதிப்படைமீது தொண்டனாகப் பணிபுரிந்தவன் என்பதாலும், வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் மக்களுடன் கலந்து உறவாடுபவன் என்பது தனக்குத் தெரியவந்ததால்தான் இந்த சந்திப்பிற்கு ஏற்பாடு செய்ததாகக் கூறினார்.

இந்தத் தொழிலிலுள்ள மற்றவர்களைக் காட்டிலும் நீ இளையவனாக இருக்கிறாய். எங்களது வரலாற்றைத் தெரிந்து கொள்வதில் நிஜமான ஆர்வம் காட்டுபவனாக இருக்கிறாய். எங்களது நம்பிக்கைக்கு இடம் தருவாய் என்று கருதுகிறேன் என்று யாமின் கூறினார்.

மிக உயர்வான உணவக ஏற்பாடுகளும், அவரது தோற்றமும் அவர் பேசின விதமும், பலருக்கு மத்தியில் இருக்கிறேன் என்பது எனக்குச் சற்று ஆசுவாசமான நிலையை அளித்தது. இந்தோனேசியாவில் ராஸி, பனாமாவில் பிடல் போன்ற நண்பர்கள் கிடைக்கிறார்கள். அவர்களுடன் என்னால் எளிதில் தொடர்பு

விடமுடிகிறது. இவற்றைச் சூழல் எனக்கு அளிக்கும் பரிசுகளாகக் கருதுகிறேன். நான் பிற அமெரிக்கர்களிடமிருந்துத் தனித்துத் தோன்றுகிறேன். காரணம் இடங்களுக்கு தக்கவாறு என்னைத் தகவமைத்துக் கொள்கிறவன் நான். நீங்கள் போகிற இடத்தில் மக்களின் கலாச்சாரத்திற்கு கண்களையும், காதுகளையும், இதயத்தையும் திறந்துவைத்தால் போதும், அவர்கள் உங்களுக்கு இடமளிப்பார்கள் என்பது நான் கற்றுத் தெரிந்த அனுபவப் பாடம்.

உனக்கு பாலைநிலத்தில் பூக்கச் செய்யும் திட்டம் பற்றித் தெரியுமா? ஒரு காலத்தில் இது பெரும் விளைநிலமாகவும், மலர்க் காடுகளாகவும் இருந்ததென்று ஷா நம்பிக்கொண்டிருக்கிறான். மகா அலெக்ஸாண்டர் படையெடுத்து வந்தபோது அவனது பெரிய படைதான் அவற்றையெல்லாம் நிர்மூலமாக்கிவிட்டது என்பது அவனது கொள்கை. அதன்படி மீண்டும் இப்பாலையை உழுது மரங்கள் நட்டால் பூத்துக்குலுங்கித் தொடர்ந்து மழைப்பொழிவு சீராகும் என்பது அவனுடைய நம்பிக்கை. இதற்கான திட்டங்கள் நிறைவேற்றப்படுமானால் உன்னுடையதைப் போன்ற பெருநிறுவனங்கள் வேண்டுமானால் லாபத்தை அறுவடை செய்யலாம் என்று கூறியபடி விரக்தியான புன்னகை ஒன்றைச் சிந்தினார்.

இதனைப் பசுமையாக்கும் கொள்கை மீது உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?

பாலை என்பது எங்களுடைய அடையாளம். விவசாயத்தைக் காட்டிலும் பெரிய காரியம், இதைப் பசுமையாக்குவது...

அலங்கார வேலைப்பாடமைந்த பெரிய உணவுத் தட்டுகளில் நேர்த்தியாக மலர்த்தப்பட்ட ஈரானிய உணவு வகைகளை ஏந்தியபடி எங்கள் மேசையைச் சுற்றிப் பரிசாரகர்கள் நின்றிருந்தனர். முதலில் என் அனுமதிபெற்று உணவுப் பதார்த்தங்களைத் தேர்வு செய்து விட்டு மீண்டும் பேச்சுக்குத் திரும்பினார்.

உன்னை ஒன்று கேட்கிறேன் பெர்கின்ஸ் உன் நாட்டின் பூர்வகுடி மக்களாகிய செவ்விந்தியரின் கலாச்சாரத்தைச் சீரழித்தது எதுவாக இருக்கும் என்று நினைக்கிறாய்?

எமது பேராசையில் இருந்து மேலாதிக்க ஆயுதங்கள் வரை பல காரணிகள் இருக்கும் என்று நினைக்கிறேன்.

ஆம், உண்மை. அவை எல்லாமும்தான். ஆனால் அதற்கும் மேலாக ஒன்று இருக்கிறது. நான் சூழல் அழிவைப் பற்றி இப்போது பேச வரவில்லை என்று சொல்லிவிட்டு, அடர்ந்த காடுகளை,

அதிலிருந்த காட்டு எருமைகளை, மிருகங்களை அழித்ததுடன் உங்களவர்கள் காட்டிற்குள் நுழைந்ததும் முதலில் கைத்தது செவ்விந்திய மக்களின் அடிப்படையான கலாச்சாரத்தைத்தான் என்றார்.

இங்கு நடப்பதும் அதுதான். இந்தப் பாலை நிலம்தான் எங்களது இயற்கையான சூழல். இதைப் பூக்கச் செய்வதாகச் சொன்னால் இதனுடன் பின்னிப் பிணைந்திருக்கும் ஒட்டு மொத்தத்தையும் அழிப்பதாகத்தான் அர்த்தம். அதை எப்படி நாங்கள் வேடிக்கை பார்க்க முடியும் என்று கேள்வி எழுப்பினார்.

இந்த எண்ணம் உங்கள் மக்களிடம் இருந்துதான் வந்திருக்கும் என்று நான் நினைத்ததாகக் கூறினேன். அதற்கு அவர் இகழ்ச்சியாகச் சிரித்துவிட்டு இந்த எண்ணத்தை முதலில் ஷாவின் மனதில் நட்டு வைத்ததே அமெரிக்காதான். ஷா அமெரிக்காவின் கைப்பாவை. அமெரிக்க அரசு ஆட்டுவிக்கும்படி ஆடுவான் என்றார்.

ஒரு மெய்யான பாரசீகனால் இதை அனுமதிக்க முடியாது என்று கூறிய யாமின் பாலைநிலத்திற்கும் தன்னுடைய பெதூனிய மக்களும் இடையேயுள்ள நீண்டநெடிய உணர்வுப்பூர்வமான பிணைப்பை விளக்கினார். பல நகர்ப்புற ஈரானியர்கள் தங்களது விடுமுறை நாட்களை பாலைநிலத்தில் கழிக்க விரும்புகிறார்கள். பாலைவனத்தில் தங்கள் குடும்பம் முழுமைக்கும் தேவையான கூடாரத்தை அடித்து அதில் வாரக்கணக்காகத் தங்கி குடும்பம் நடத்திக் களிக்கிறார்கள் என்றார்.

நாங்கள் இந்த நாட்டின் மக்கள். இப்பாலை மண்ணின் பிரிக்க முடியாத அங்கமாக இருக்கிறோம். ஷாவின் ஆளுகையில் இருப்பதாகச் சொல்வது வெறும் பாலைநிலம் மட்டுமல்ல. பாலையும், அதன் மைந்தர்களுமே.

அதற்குப் பிறகு பாலைநிலத்தில் தனக்கு ஏற்பட்ட சொந்த அனுபவங்களைக் கூறினார் யாமின். மாலைநேரமானதும் உணவகம் இருந்த கோட்டை மதில் வரை தனது ஆட்களுடன் வந்தார். எனது டாக்ஸி தெருவோரத்தில் நின்றிருந்தது. யாமின் தன்னுடன் இந்த நேரத்தைச் செலவிட்டதற்காக நன்றி கூறி கை குலுக்கி விடை கொடுத்தார். மீண்டும் ஒருமுறை இந்தச் சின்ன வயதில் வெளிப்படையாக இருப்பதற்கும், நான் இந்தத் தொழிலில் இருப்பது நல்ல எதிர்காலத்தை வழங்கும் என்ற நம்பிக்கையை அவருக்கு அளிப்பதாகவும் கூறினார்.

உங்களைப் போன்ற மனிதர்களுடன் இந்த நேரத்தைச் செலவிட முடிந்ததற்காக பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன் என்றேன். அவர் பற்றியிருந்த என் கையை விடவே இல்லை. நான்

அவ்வளவு சாதாரணமாகக் கேட்கவில்லை. நீ எனக்கு இன்னும் ஒரு சகாயம் செய்ய வேண்டும். அதைச் செய்தால் நாம் சேர்ந்திருக்கும் இந்த இரவை அர்த்தமுள்ளதாக ஆக்கும். உனக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

நான் என்ன செய்ய வேண்டும்?

என்னுடைய நெருங்கிய நண்பர் ஒருவரை உனக்கு அறிமுகம் செய்விக்கிறேன். அவர் உனக்கு அரசர்களின் அரசரைப் பற்றி நிறைய விபரங்கள் கூறுவார். ஒன்று மட்டும் உறுதி. அந்தச் சந்திப்பு நிச்சயமாக உனக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

அத்தியாயம் - 19

திரைக்குப்பின் மன்னர் மன்னன்

சிலநாட்களுக்குப் பிறகு என்னை யாமின் டெஹ்ரானுக்கு வெளியே தூசியும் மணலும் அலையும் நகரங்கள் வழியாக பழைய ஒட்டகத் தடத்தில் பாலையின் விளிம்பிற்கு அழைத்துச் சென்றார். பனை மரங்கள் சூழ்ந்த குடிசைப்பகுதியில் வண்டியை நிறுத்தினார்.

இது மிகப் பழமையான பாலைவனச் சோலை. மார்கோ போலோவிற்கும் பல நூற்றாண்டுகள் முந்தையது என்று கூறிவிட்டு என்னை ஒரு குடிசைக்கு அழைத்துச் சென்றார். உள்ளிருந்த மனிதர் பிரபலமான பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். அவர் பெயரைத் தெரிவிக்கப் போவதில்லை. அதற்கான காரணத்தை விரைவில் தெரிந்துகொள்வாய். ஒரு வசதிக்காக டாக்டர் என்று வைத்துக்கொள்வோம்.

யாமின் ஒரு மரக்கதவைத் தட்டினார். உள்ளிருந்து கரகரப்பான கேட்டது. யாமின் கதவைத் தள்ளி என்னை உள்ளே அழைத்தார். ஜன்னலற்ற அந்தச் சின்ன அறையில் ஒரேஒரு விளக்கு மட்டும் மூலையில் ஏற்றி வைத்திருந்தது. அழுக்கடைந்த தரையில் பாரசீகக் கம்பளம் விரித்திருந்ததை கண்கள் வெளிச்சத்திற்குப் பழகிய பின்னர் பார்த்தேன். நிழலுருவமாகத் தென்பட்ட மனிதர் கண்களுக்குப் புலப்பட்டார். விளக்கொளியை மறைத்து உட்கார்ந்திருந்ததால் முகம் மறைந்திருந்தது. போர்வையைப் போர்த்தி தலைக்கு முக்காடு போட்டிருந்தார் என்பதை மட்டும் சொல்வேன். மேசைக்குப் பின்புறம் சக்கரநாற்காலியில் அமர்ந்திருந்தார். அதுவொன்றே அங்கிருந்த தளவாடம். என்னைக் கம்பளத்தில் அமருமாறு யாமின் சைகை காட்டினார். முன் சென்று டாக்டரைத் தழுவினார். அவர் காதில் ஏதோ முணுமுணுத்து விட்டு என் பக்கத்தில் வந்து அமர்ந்தார்.

நான் முன்னரே உங்களுக்கு பெர்கின்ஸ் பற்றிக் கூறியுள்ளேன். உங்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்ததற்குப் புண்ணியம் செய்திருக்க வேண்டும் அய்யா என்று கூறினார்.

திரு பெர்கின்ஸ், நீங்கள் வரவேற்கப்படுகிறீர்கள் என்ற குரல் ஜீவனற்றுத் தணிவாக ஒலித்தது. அந்த சின்ன வெளிக்குள் இன்னும் கொஞ்சம் முன்னகர்ந்து காதைக் கூர்மையாக்கவேண்டும் போல் இருந்தது. இப்போது நீங்கள் பார்ப்பது ஒரு ஜனமுற்ற மனிதனை. முன்னர் நானும் உங்களைப்போல பலவானாக இருந்தவன்தான். மன்னர் ஷாவின் நம்பிக்கைக்குரிய ஆலோசகராக இருந்தவன். ஒரு நீண்ட மௌனம். மன்னர் மன்னன் ஷா குரல் உயர்ந்தது. அதில் சோகத்தைவிட கோபம் அதிகம் என்று தோன்றியது.

உலகத் தலைவர்கள் நிக்ஸன், எய்சின்ஹோவர், தே கௌலா போன்ற பலரையும் எனக்குத் தெரியும். நான் ஈரானை முதலாளித்துவ முகாமிற்குள் கொண்டுவந்து சேர்ப்பேன் என்று நம்பினார்கள். ஷாவும் கூட அப்படித்தான். அவர் தொடர்ந்து எழுப்பிய உரத்த ஒலியை சிரிப்பு என்று நினைத்தேன். ஆனால் அது இருமல். ஷா எனக்குக் கொடுத்த வாக்குறுதியை நம்பினேன். உலகை இஸ்லாத்தின் புதியபாதைக்கு அழைத்துச் செல்ல, அதற்குத் தலைமை ஏற்கவேண்டிய பொறுப்பு ஈரானுக்கு இருக்கிறது. அதை நிறைவேற்றவேண்டிய வரலாற்றுக் கடமை அதற்கு உண்டு. அந்த உன்னதமான இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்வது எங்களுக்கென்றே விதிக்கப்பட்டவை என்று உளப்பூர்வமாகக் கருதினேன்.

போர்வை சுற்றிய முண்டம் நகர்ந்தது. சக்கர நாற்காலி மெல்லிய சத்தத்துடன் திரும்பியது. அந்த மனிதரின் முகத்தை மேலோட்டமாகப் பார்க்க முடிந்தது. புதர் போன்ற தாடியை. இன்னும் கூர்ந்து பார்த்தேன். மூக்கு இருக்கவேண்டிய இடத்தில் தட்டையாக இருந்தது. மூக்கே இல்லை. எனக்கு நடுக்கம் எடுத்தது. மூச்சே நின்றுவிடும்போல் இருந்தது.

என்ன திரு பெர்கின்ஸ் சகிக்கமுடியவில்லைதானே? நல்ல வெளிச்சத்தில் பார்த்தால் இன்னும் மோசமாக இருக்கும். துரதிர்ஷ்டம்தான்! மீண்டும் குலுங்கிக் குலுங்கி சிரிக்கும் ஓசை. நான் தலைமறைவாக இருப்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. கொஞ்சம் முயற்சித்தால் நான் இறந்தோர் பட்டியலில் இருப்பதைத் தெரிந்துகொள்ள முடியும். சட்டப்படி இப்போது நான் உயிரோடு இல்லை. இருந்தாலும் உங்களை நம்புகிறேன் கவலைப்பட வேண்டாம். நீங்களும் உங்களைச் சேர்ந்தவர்களும் நான் யார் என்பதைத் தெரிந்துகொள்ளாமல் இருப்பதே நல்லது. ஷாவின் கைகளும், அரசின் உளவுப்படையும் இண்டு இடுக்குகளில் புகுந்துவிடக் கூடியவை.

சக்கரநாற்காலி திரும்பி மீண்டும் பழைய நிலையை அடைந்தது. வன்முறைக்குள்ளான முகத்தில் இருந்து தொலைவிற்கு வந்ததால் எனக்கு ஆசுவாசமாக இருந்தது. அந்தநேரத்தில் எனக்கு இஸ்லாமியக் கலாச்சாரம் தெரியாது. அக்கலாச்சாரத்தில் சமூகத்தையோ சமூகத் தலைவர்களையோ அவமரியாதை செய்பவர்களின் மூக்கை அறுத்து காலமெல்லாம் மூளியாக விடுவது ஒரு எச்சரிக்கை நடவடிக்கையாகக் கருதப்பட்டது.

திரு பெர்கின்ஸ் ஏன் அழைத்தேன் என்பது உங்களுக்கு ஆச்சர்யமாக இருக்கலாம் என்று கேட்டவர், என்னுடைய பதிலை எதிர்பார்க்காமலே தொடர்ந்தார். தன்னை மன்னர்களின் மன்னன் என்று அழைத்துக்கொள்கிற ஒருவன் உண்மையில் ஒரு சாத்தான். அவனது தந்தை சிஐஏவால் தூக்கி எறியப்பட்டான். இதைச் சொல்வது எனக்கு அவமானமாக இருக்கிறது. நானும் அதற்கு உடந்தை. எனக்கு அதற்காக சொல்லப்பட்டக் காரணம் அவர் நாஜிகளுடன் உறவு கொண்டிருந்தார் என்பது. மொஸாடெக் பேரழிவு நிகழ்ந்தது. இன்று ஹிட்லரின் தீமைகளே பரவாயில்லை என்று சொல்லும் பாதையில் எங்கள் ஷா போய்க்கொண்டிருக்கிறார். அதுவும் உங்கள் அரசின் எண்ணப்படியும் ஆதரவாலும் நடந்துகொண்டிருக்கிறது.

அதற்கு என்ன காரணம்?

மிக எளிமையானது. மத்தியகிழக்கில் ஷா மட்டுமே உங்கள் கூட்டாளி. தொழிற்சாலைகள் சுழல்வதற்கு மைய அச்சாகிய எண்ணெய் மத்தியகிழக்கில் கிடைக்கிறது. ஆம் உங்களுக்குத்தான் இஸ்ரேல் இருக்கிறதே. ஓ! அது வெறும் விசுவாசி மட்டுமே அதனிடம் செல்வம் இல்லை. எண்ணை இல்லை. உங்கள் அரசியல்வாதிகளுக்கு யூதர்களின் ஓட்டு வேண்டும். தேர்தல் பிரச்சாரத்திற்கு யூதர்களின் பணம் வேண்டும். அதனால் இஸ்ரேலுடன் ஒட்டிக்கொண்டு இருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். எப்படியானாலும் உங்கள் எண்ணெய் நிறுவனங்களுக்கு சக்திவாய்ந்த ஈரான் எண்ணெய்தான் மிகவும் முக்கியமானது. இப்போது உங்களுக்குத் தேவை ஷா. அல்லது நீங்கள் நினைப்பதைச் செய்வீர்கள். தென்வியட்நாமில் இருந்து ஊழல் பேர்வழித் தலைவர்கள் தேவைப்படுகிறார்கள்.

ஈரான் வியட்நாமிற்கு நிகரானதென்றா நினைக்கிறீர்கள்?

வியட்நாமின் ஆற்றல் இல்லை. முஸ்லீம் நாடுகளும் ஷாவை வெறுக்கத் துவங்கிவிட்டன. அரபுநாடுகள் மட்டுமல்ல. முஸ்லீம்கள் அனைவரும், ஷா இனி நீண்டநாட்களுக்குத் தாக்குப் பிடிக்க முடியாது. இந்தோனேசிய முஸ்லீம்கள், உங்கள் நாட்டில்

இருப்போர், பெர்சிய முஸ்லீம்கள் அனைவரும், ஏன் தன் சொந்த நாட்டு மக்களே அவனை வெறுக்கிறார்கள். அவனொரு தீய சக்தி. பெர்சியர்கள் நாங்கள் அனைவருமே வெறுக்கிறோம். நாற்காலியை நகர்த்தும் மெல்லொலி கேட்டது. பின் நீண்ட அமைதி. நீண்ட பெருமூச்சு விட்டுத் தன்னை ஆற்றிக்கொண்டார்.

டாக்டர் முல்லாக்களுக்கு நெருக்கமானவர் என்றார் யாமின் மிகத் தாழ்ந்தகுரலில் அடக்கமாகக் கூறினார். இங்குள்ள அனைத்து மத நிறுவனங்களுக்குள்ளும் அடியோட்டமான ஒருங்கிணைப்பு உண்டு. அவையனைத்தும் மக்களில் கணிசமான பகுதியினரை தம் வசத்தில் வைத்துள்ளன. ஷாவின் முதலாளித்துவத்தால் தொழில் பலனடைவோர் மட்டுமே அவற்றில் இருந்து விலகி நிற்கின்றனர்.

நீங்கள் சொல்வதில் எனக்குச் சந்தேகம் இல்லை. ஆனால் என்னுடைய நான்கு பயணத்திலும் ஷாவிற்கு எதிர்ப்புக் குரல் ஒன்றையும் கேட்கவில்லையே. அனைவரும் அவரது பொருளாதார வளர்ச்சித்திட்டத்தை ஆதரிப்பதாகத்தானே தெரிகிறது.

நீ பார்ஸிகள் கூறுவதைக் கணக்கில் எடுக்க வேண்டியதில்லை. அவர்கள் வெளிநாடுகளில், இங்கிலாந்தில் படிக்கத் துவங்கியதும் ஷாவிடம் பலன் பெற்றவர்கள் என்பதால் அவனுக்கு ஆதரவாகத்தான் பேசுவார்கள். டாக்டர் மட்டுமே அதற்கு விதிவிலக்கு.

சற்றுநேரம் அமைதியாக இருந்தார். தனக்குள் எதையோ தேடுவது போலிருந்தது. உங்கள் பத்திரிகைகளும் அப்படித்தான். ஷா ஆதரவுப் போக்கையே கடைப்பிடிக்கின்றன. ஷாவுக்கு நெருக்கமானவர்களிடமே பேசுகின்றன. அவர்கள் என்ன சொல்கிறார்களோ அதையே தேசத்தின் கருத்தாக மாற்றி விடுகின்றன. பத்திரிகைகள் பெரும்பாலும் எண்ணெய் நிறுவன ஆதரவுக் கொள்கை உடையவை. தங்கள் விளம்பரதாரர்கள் என்ன விரும்புகிறார்களோ அதைத்தான் பொதுமக்கள் கருத்தாக முன் வைப்பார்கள். அதைத்தான் எழுதுவார்கள் என்று பொரிந்து தள்ளினார்.

டாக்டரின் குரல் முன்னிலும் கரகரப்பாக ஒலித்தது. இச்சந்திப்பிற்காகத் திரட்டிய சக்தியெல்லாம் வடிந்து விட்டதுபோல் சன்னமாகப் பேசினார். இதையெல்லாம் உங்களுக்கு ஏன் சொல்கிறோம் தெரியுமா பார்கின்ஸ்? எங்கள் பேச்சைக் கேட்டு நீங்களும் உங்கள் நிறுவனமும் இந்நாட்டை விட்டு ஓடிவிட வேண்டும். இங்கிருந்து நிறைய பணம் சம்பாதித்துக்கொண்டு போகலாம் என்று நினைத்தால் அது வெற்றுக் கற்பனை. நீங்கள் இங்கு கொட்டும் பணத்தால் ஈரான் அரசிற்கு ஒன்றும் நஷ்டம்

ஏற்பட்டுவிடாது. மீண்டும் சக்கர நாற்காலியை திருப்பும் சத்தம் கேட்டது. இங்கே அமையவுள்ள புதிய அரசு பழைய திட்டங்களை நடத்துகிற நிறுவனங்கள் மீது எந்த அனுதாபத்தையும் காட்டாது என்று எச்சரிக்கவே உங்களை அழைத்தோம்.

எங்களுக்குத் தரவேண்டிய பணம் அளிக்கப்பட மாட்டாது என்கிறீர்களா?

டாக்டருக்கு இருமல் வெட்டி வெட்டி இழுத்தது. யாமின் அவரருகே சென்று முதுகைத் தடவிக் கொடுத்தார். இருமல் நின்ற பிறகு யாமின் அவரிடம் ஏதோ பார்ஸி மொழியில் பேசிவிட்டுப் பின் தன்னிடத்திற்கு வந்து அமர்ந்தார்.

உங்கள் கேள்விக்கான பதில் ஆம். வேலைக்கான பணம் திருப்பியளிக்கப்பட மாட்டாது. சரி போதும். நம் உரையாடலை இங்கே நிறுத்திக்கொள்வோம். நீங்கள் தொடங்கிய வேலையை செய்துகொண்டே இருக்கலாம். ஆனால் செய்த திட்டங்களுக்கானப் பணத்தைப் பெறப்போகும் போது அங்கே ஷா இருக்கமாட்டான். ஒடிப்போய்விடுவான் என்று கூறினார் யாமின்.

நாங்கள் வண்டியில் திரும்பிக்கொண்டிருந்தபோது நீங்கள் எதிர்பார்க்கும் மெய்னுக்கு ஏற்படவுள்ள பொருளாதாரச் சீரழிவிலிருந்து ஏன் எங்களைக் காப்பாற்ற முயற்சிக்கிறீர்கள் என்று கேட்டேன்.

உங்கள் நிறுவனம் திவாலாக வேண்டும். அதுதான் எங்கள் விருப்பம். இருந்தாலும் அதற்கு முன்னால் வெளியேறிவிடுவது தான் நல்லது. இங்கிருந்து வெளியேறும் போக்கை உங்கள் நிறுவனம் துவக்கிவைக்க வேண்டுமென விரும்புகிறோம். இங்கே ஒரு ரத்த ஆறு ஒடுவதை நாங்கள் விரும்பவில்லை. ஆனால் ஷா இங்கிருந்து ஓடிவிட வேண்டும். எதுவானாலும் அதைச் சிக்கலில்லாமல் செய்துமுடிக்கவே முயற்சிப்போம். இங்கிருந்து வெளியேறுவதற்கு ஜம்போட்டியை நீங்கள் தயார்ப்படுத்துவதற்கான நேரம் இன்னும் முடிந்துவிடவில்லை. நாங்களும் உங்களுக்காக அல்லாவிடம் பிரார்த்திக்கிறோம்.

அது ஏன் நானாக இருக்கவேண்டும்?

அன்று இரவு உணவின் போது பாலையைப் பூக்கச் செய்தல் திட்டம் குறித்துப் பேசியதில் இருந்து நீ வெளிப்படையாக உண்மை பேசுபவன், உன்னைப்பற்றிக் கூறியதெல்லாம் சரியானவை என்பதைப் புரிந்துகொண்டேன். இரண்டு பேர்களுக்கும் மத்தியஸ்தனாக இருப்பதற்கு நீதான் பொருத்தமானவன்.

அவர் என்னைப்பற்றித் தெரிந்துவைத்திருப்பது வியப்பளித்தது.

அத்தியாயம் - 20

வீழ்ந்தார் மாமன்னர்

அது 1978. ஒருநாள் மாலையில் டெஹ்ரான் இண்டர் காண்டினண்ட் ஓட்டலின் ஆடம்பரமான மதுச்சாலையில் தனிமையில் அமர்ந்திருந்தேன். என் தோளில் ஏதோ கனம் இறங்குவது போலிருந்தது. திரும்பிப் பார்த்தேன். கம்பீரமான கோட்டு சூட்டுடன் கனத்த உருவம் நின்றிருந்தது.

ஜான் பெர்கின்ஸ் என்னைத் தெரியலையா?

என் கல்லூரிக் கால நண்பன் பர்கத். முன்னால் கால்பந்து விளையாட்டாளன். ஏகத்திற்கும் எடை போட்டிருந்தான். ஆனால் குரல்தான் அவனைக் காட்டிக்கொடுத்தது. அவனைப் பார்த்துப் பத்தாண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஒருவரையொருவர் தழுவிக் கொண்டு அமர்ந்தோம். சீக்கிரமாகவே என்னைப் பற்றியும், என் வேலை பற்றியும் பெரும்பகுதி தெரிந்துகொண்டான். அதுபோல அவனது வேலை பற்றிக் கூற விருப்பம் இல்லாததுபோல் தெரிந்தது.

அவன் விருப்பப்படி எங்களுக்கான இரண்டாவது பீரைத் தருவித்தோம். நேரடியாக விசயத்திற்கு வருகிறேன். நாளை நான் ரோமிற்குப் பறக்கவிருக்கிறேன். என் பெற்றோர் அங்கே இருக்கிறார்கள். அங்கே போவதற்கான பயணச்சீட்டு இருக்கிறது. இங்கே எல்லாம் சரிந்துகொண்டிருக்கிறது. நீ வெளியேறிவிடுவது தான் நல்லது. இந்தா உனக்கான பணச்சீட்டு என விமான டிக்கட்டை நீட்டினான். அந்தநேரத்தில் எனக்கு மாற்றுச் சிந்தனை எழவில்லை.

ரோமில் பர்கத்தின் பெற்றோருடன் அமர்ந்து உணவு உண்டோம். அவனது அப்பா ஒய்வுபெற்ற ஜெனரல். ஷாவை நோக்கிப் பாய்ந்த துப்பாக்கிக் குண்டை மறித்து நின்றவர். தனது முன்னால் பாஸ் குறித்த பிரம்மைகள் நொறுங்கிவிட்டதாகக் கூறினார். அவரது உண்மையான நிறம், பேராசை, வன்மம் அனைத்தும் வெளிப்பட்டு விட்டதென்பதைக் கூறினார்.

இஸ்ரேலைத் தாங்கிப் பிடிக்கும் அமெரிக்காவின் கொள்கையை, மோசடித்தலைவர்களை, சர்வாதிகார அரசுகளைக் கடுமையாக விமர்சித்தார். அவையனைத்தும் மத்தியகிழக்கை துடைத்தெறிய விருப்பதாக கடுமையாகச் சாடினார். இன்னும் ஓரிரு மாதங்களிலேயே ஷா எங்காவது ஓடிவிடுவான் என்ற யூகத்தை வெளிப்படுத்தினார்.

உனக்குத் தெரிகிறதா? ஐம்பதுகளில் நீங்கள் மொஸாடெக்கிற்கு எதிராக மிகச் சாதுர்யமாகக் கலக விதைகளைத் தூவிவிட்டதாக நினைத்துக்கொண்டிருந்தீர்கள். ஆனால் இன்று அவை மீண்டும் கலகமாகவே வெடித்துத் துரத்துகிறது, உங்களையும் எங்களையும்.

அவர் சொன்னதைக் கேட்டு பிரமித்துவிட்டேன். கிட்டத்தட்ட இதையேதான் யாமினும், டாக்டரும் சொன்னார்கள். ஆனால் இவரது கூற்று இன்னொன்றின் அறிகுறி. இங்கே இஸ்லாமிய அடிப்படைவாதம் ஆழமாக வேர் விட்டிருப்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான். ஆனால் ஷா எதனாலும் அசைக்கமுடியாத அளவிற்கு அரசியல் செல்வாக்குப் பெற்றிருப்பதாகக் கருதியிருந்தோம். ஆனால் ஜெனரலின் உறுதி என் எண்ணத்தை உலுக்கியது.

அவர் தீர்மானகரமாகச் சொன்னார். இப்போது எழுதி வைத்துக் கொள். ஷா வீழ்ச்சி ஒரு தொடக்கம்தான். இஸ்லாமிய உலகம் எதை நோக்கிப் போகவிருக்கிறது என்பதற்கான ஒரு முன்னோட்டம் மட்டுமே இது. எங்கள் ஆத்திரம் நீண்டகாலமாகப் பாலை மணலுக்கடியில் கொதித்துக்கொண்டிருக்கிறது. வெகு விரைவில் பொங்கித் தெறிக்கவிருக்கிறது

எங்கள் இரவு உணவின்போது அயத்துல்லா ருகொல்லா கொமெய்னி குறித்துத் தெரிந்துகொண்டேன். ஷாவும் அவரது தந்தையும் தீவிர ஷாயித்தை ஆதரிப்பதில்லை என்பது தெளிவுபடுத்தியிருந்தார்கள். ஆனால் ஷாவிற்கு எதிராகப் பின்னப்பட்டுள்ள சதிகளில் ஜெனரல் உற்சாகம் கொண்டிருப்பது தெரிந்தது. கொமெய்னி என்றால் கடவுளின் ஆசி பெற்றவர் என்பது பொருள். டெஹ்ரானுக்கு அருகில் ஒரு கிராமத்தில் தம்மை ஷியாக் கோட்பாட்டிற்கு ஒப்புக்கொடுத்த மதாச்சாரியர்கள் குடும்பத்தில் 1902ல் பிறந்தவர்.

தான் மொஸாடெக் ஷா சண்டையில் தலையிடப் போவதில்லை என்பதை 1950 களிலேயே தெளிவுபடுத்திவிட்டார். ஆனால் 1960 களில் ஷாவிற்கு எதிராக நிற்பதில் தீவிரம் காட்டினார். துருக்கிக்கு நாடு கடத்தப்படும் அளவிற்கு ஆட்சிக்கு எதிராக நின்றார். பின்னர் ஈராக்கில் உள்ள ஷியா நகரமான நஸாப்பில்

இருந்து தொடர்பில் இருந்தார். கடிதங்கள், கட்டுரைகள், ஒலிநாடாக்கள் ஆகியவற்றை அனுப்பிவைத்து ஈரானிய மக்களுக்குக் கிளர்ச்சியூட்டி ஷாவிற்கு நெருக்கடி கொடுத்தார்.

இந்த இரவுணவு மேசை உரையாடல் முடிந்த அடுத்த இரண்டாம் நாள் ஈரானில் அங்கங்கே வெடிகுண்டுக் கலவரம் நடப்பதாகச் செய்தி வந்தது. நாட்டைத் தங்களது கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ளும் அளவிற்கு கொமெய்னியும் முல்லாக்களும் நாக்குதல் கொடுத்துக்கொண்டிருந்தனர். பர்கத்தின் அப்பா உரையாடிலின் போது வெளிப்படுத்தியக் கோபம் இஸ்லாமிய எழுச்சியாக உயர்ந்தது. 1979 ஜனவரியில் ஷா நாட்டை விட்டுத் தப்பி எகிப்து வந்தார். அவருக்குப் புற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அங்கிருந்து சிகிச்சைக்காக நியூயார்க் மருத்துவமனை வந்தார்.

ஆதரவாளர்கள் கொமெய்னியை நாட்டிற்கு வருமாறு அழைப்பு விடுத்தனர். நவம்பர் 1979 இல் இஸ்லாமிய போராளிக் கும்பல் டெஹ்ரான் அமெரிக்கத் தூதரகத்தை முற்றுகை இட்டது. அமெரிக்க விருந்தாளிகள் ஐம்பத்திரண்டு பேருக்கு 444 நாட்கள் பிணை அறிவித்தார்கள். பிணையாளிகளை விடுவிக்க கார்டர் பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தை தோல்வியுற்றதால் 1980 ஏப்ரலில் ராணுவ மீட்புக் குழுவை இறக்கினார்கள் பேரழிவில் முடிந்த மீட்பு நடவடிக்கை இறுதியில் கார்டரின் ஜனாதிபதி பதவியை சவப்பெட்டியில் வைத்து மூடி ஆணியை ஆழமாக அடித்து இறக்கியது.

புற்றுநோயின் பாதிப்பிற்குள்ளான ஷாவை அமெரிக்காவை விட்டு வெளியேற்ற வேண்டுமென அரசாங்கத்திற்கு பல்வேறு அரசியல் வணிகக்குழுக்கள் கடும் நெருக்கடி கொடுத்தன. டெஹ்ரானை விட்டுக் கிளம்பிய நாள் முதற்கொண்டே ஷாவிற்கு புகலிடம் ஒரு பிரச்சனையாயிற்று. பழைய நண்பர்கள் அனைவரும் அவரைக் கைகழுவி விட்டனர். ஷாவின் அரசியல் டோரிஜோஸுக்குப் பிடிக்காதபோதிலும் பனாமாவில் அடைக்கலம் நர முன்வந்தார். பனாமாக் கால்வாய் பேச்சுவார்த்தை நடந்த அதே உல்லாச விடுதியில் ஷாவிற்கு புகலிடம் அளிக்கப்பட்டது.

ஷாவைத் திரும்ப அளிப்பதாக இருந்தால் அமெரிக்கத் தூதரகத்தில் பிடித்து வைத்துள்ள பிணைக்கைதிகளை விடுவிப்பதாக பேரம் பேசினர் ஈரான் முல்லாக்கள். கால்வாய் உடன்படிக்கை எதிர்ப்பாளர்கள் ஷாவிற்கு அடைக்கலம் தந்ததற்காக டோரிஜோஸிற்கு ஷாவுடன் கள்ளக் கூட்டணி உண்டு என்று குற்றம் சாட்டினார்கள். அதனால் அமெரிக்க குடிமக்களின் உயிருக்கு ஆபத்து விளையும்

என்று வாதிட்டனர். ஷாவைக் கொமெய்னியிடம் ஒப்படைத்து விட்டு பிணைக்கைதிகளை மீட்கவேண்டும் என்றனர். இதில் முரண்நகை என்னவென்றால் இதே ஆட்கள்தான் சிலமாதங்களுக்கு முன்னர் வரை ஷாவுடன் கூடிக்குழாவி அவரது அதிகாரக் கனியை ருசித்தவர்கள். மன்னர்களுக்கெல்லாம் மன்னர் என்று பெருமையடித்துக்கொண்ட ஷா மீண்டும் எகிப்திற்கு வந்து அங்கேயே புற்றுநோயால் இறந்தார்.

டாக்டரின் யூகம் நிஜமானது. மெய்ன் மில்லியன் கணக்கான டாலர்களை ஈரானில் இழந்தது. எங்கள் போட்டியாளர்களுக்கும் அதுதான் கதி. மறுதேர்தலில் கார்டரும் பதவி இழந்தார். பிணைக் கைதிகளை முல்லாக்களிடமிருந்து விடுவிப்போம். பனாமாக் கால்வாய்ப் பிரச்சனைகளைத் தீர்ப்போம் என்ற முழக்கத்துடன் புஷ் ரீகன் அணி அதிகாரத்தைக் கைப்பற்றியது.

மறக்கமுடியாத பாடங்கள் பலவற்றை நான் கற்றுக் கொண்டேன். அமெரிக்காவின் நிஜமுகத்தைச் சந்தேகத்திற்கு இடமின்றித் தோலுரித்துக் காட்டியபோதிலும் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை அமெரிக்கா. ஷா பற்றியும் அவர் மீது வெறுப்பலைகள் மோதிக்கொண்டிருக்கின்றன என்பது பற்றியும் எங்களுக்குப் போதிய தகவல்கள் அளிக்கப்படவில்லை. எங்கள் மெய்ன் போன்ற நிறுவனங்கள் அந்நாட்டில் நேரடியான அலுவலகங்களை வைத்திருந்தும்கூட இந்தக் கொந்தளிப்புத் தெரிந்துகொள்ளவில்லை. என்னுடனான 1972 இல் நடத்திய சந்திப்பிலேயே டோரிஜோஸ் என்னிடம் பகிர்ந்துகொண்ட செய்தியை தேசியப் பாதுகாப்புப் படையும், சிஐஏவும் காணத் தவறி விட்டது. எங்களது சொந்த உளவுத்துறையே கண்களை மூடிக்கொள்ளுமாறு வேண்டுமென்றேத் தூண்டிவிட்டிருக்கிறது.

அத்தியாயம் - 21

எதேச்சைகளில் குறுக்கிட்ட இன்னொரு பெண்

எங்களுக்கு ஆழ்ந்த படிப்பினைகளையும் மறக்கமுடியாத அனுபவங்களையும் சௌதிஅரேபியா, ஈரான், பனாமா ஆகிய நாடுகள் கொடுத்திருந்தாலும் ஒன்றிற்கொன்று வேறுபாடுகள் இருந்தன. சௌதியும், ஈரனும் எண்ணெய் வளம் கொண்டிருப்பவை என்றால் பனாமா கால்வாய் முக்கியத்துவம் பெற்றது. எல்லாம் ஒரே படித்தானவையல்ல. கொலம்பியாவின் சூழல் இதிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. அங்கே கட்டப்படவுள்ள நீர் மின்திட்ட வடிவமைப்பாளராகவும், கட்டுமானப் பொறியாளராகவும் இருந்தது எங்கள் மெய்ன்.

கொலம்பியாவின் நிலவியல் முக்கியத்துவமிக்கது என்று டெட்டி ரூஸ்வெல்ட் நிலவரைப் படத்தைக் காட்டிக் கூறியதாக இரண்டு அமெரிக்கப் பெருநிலங்களின் வரலாற்றைப் புத்தகமாக எழுதிய கொலம்பியக் கல்லூரிப் பேராசிரியர் சொன்னார். அமெரிக்க ஜனாதிபதியும் முன்னாள் முரட்டுக்குதிரை ஓட்டியுமான அவர் தென்னமரிக்காவின் நுழைவாயிலுக்கான மைல்கல் கொலம்பியா என்று கூறியதாகச் சொன்னார். தனக்கு மேலுள்ள கண்டத்தைத் தாங்கிக்கொண்டும் கீழுள்ள இன்னொரு கண்டத்தை பிடித்து நிறுத்திக்கொண்டும் இருப்பதாகச் சொல்வது உண்மை தானாவென்று நான் ஒரு மேப்பை எடுத்துவைத்துக்கொண்டு பார்த்ததில்லை. ஆனால் பனாமாவின் நீர்த்திட்டுதான் தென்னமரிக்காவையும் வடஅமெரிக்காவையும் இணைக்கும் கண்ணியாக இருக்கிறது.

கொலம்பியாவை எந்தக் கண்ணோட்டத்தில் வர்ணித்தார் என்பது எனக்குத் தெரியாது. அதன் நிலஅமைப்பின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்ட அமெரிக்க ஜனாதிபதிகளில் ஒருவர் ரூஸ்வெல்ட். கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக

கொலம்பியாவை முக்கியத்துவம் உள்ள ஒன்றாக அல்லது இன்னும் சரியாகச் சொல்வதானால் தென்னமரிக்கா பூமுனையின் வணிகம் மற்றும் அரசியலுக்கான நுழைவாயில் என்றுதான் பார்த்தனர்.

அதற்கும் மேலாக அங்கே பனை மரங்கள் அணிவகுக்கும் ஒரு புறம் அட்லாண்டிக் மறுபுறம் பசுபிக் கடற்கரைகளும், நிமிர்ந்து நிற்கும் மலைகளும், வடக்கே விரிந்து பரந்திருக்கும் (வட அமெரிக்காவின்) பம்பாஸ் பசும் புல்வெளியும், தெற்கே (தென்னமரிக்காவின்) பல்லுயிர் செழித்த நிலவூட்டும் அமேசான் மழைக்காடுகளும் என எழில் சூழ அமைந்துள்ளது கொலம்பியா. அம்மக்களும் அப்படியே தோற்றத்திலும் கலாச்சாரத்திலும் கலை நுணுக்கத்திலும் செழுமையான பின்னணி உடைய டைரோனாவில் இருந்து ஆப்பிரிக்க, ஆசிய, ஐரோப்பா, மத்தியகிழக்கு வரையும் பல்வேறு இனக்குழுக்களையும் சேர்ந்தவர்கள்.

லத்தீன்அமெரிக்கக் கலாச்சாரத்திலும், வரலாற்றிலும் கொலம்பியா சிக்கலான பாத்திரத்தை வரலாற்று ரீதியாக வகித்துள்ளது. காலனியக் காலகட்டத்தில் வடக்கே பெருவிற்கும் தெற்கே கோஸ்டாரிக்காவிற்கும் ஸ்பானிய பிரதேசங்களின் வைராயின் தலைமைப் பீடமாக இருந்துள்ளது. கொலம்பியாவின் துறைமுக நகரமான கார்ட்டாஜினாவில் இருந்துதான் தென்னமரிக்கா சிலியின், அர்ஜென்டைனாவின் விலைமதிக்க முடியாத பெட்டகங்களைச் சுமந்த பல்லடுக்குத் தங்கக் கப்பல்கள் ஸ்பெயின் நோக்கிச் சீறிப்பாய்ந்தன. நெருக்கடியான குழலில் விடுதலைக்காலப் போராட்டங்கள் கொலம்பியாவில் இடம்பெற்றுள்ளன. உதாரணமாக ஸ்பெயின் அரசர்களை வெற்றி கொண்ட முக்கியத்துவம் வாய்ந்த போரை சைமன் பொலிவர் தலைமையிலான படைகள் பொயக்கா களத்தில் 1819 இல் நடத்தின.

தற்போதைய நவீனகாலத்திலும் லத்தீன்அமெரிக்க அறிவுத் திறமிக்க எழுத்தாளர்களின், கலைஞர்களின், கோட்பாட்டாளர்களின், பிறதுறை புத்திமான்களின் உருவாக்கத்திலும், சுதந்திர அரசுகளின் உருவாக்கத்திலும் கொலம்பியா பெயர் பெற்று விளங்குகிறது. தேசிய அரசுக் கட்டுமானத் திட்டத்தை உருவாக்கிய கென்யாத்தா லத்தீன்அமெரிக்கா முழுமைக்குமான முன்மாதிரியாகத் திகழ்ந்தது. குவாடிமாலாவை போல் சிறிய உருவாக்கத்திற்குப் பெயர் பெற்றதாகவும், எல்சல்வடாரைப்போல் பொம்மை அரசாகவும் இல்லாமல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரச ஆட்சி செய்த கொலம்பியாவில். தென்னமரிக்காவின் வலிமைமிக்க நாடுகளான அர்ஜென்டைனா, பிரேசில் போல் கொலம்பியாவிற்கு அமெரிக்க

மீது அவநம்பிக்கை கிடையாது. போதைமருந்து கடத்தல் என்ற களங்கம் அதன்மீது இருந்தபோதும் அமெரிக்காவின் நம்பகமான கூட்டாளி கொலம்பியா.

கொலம்பிய வரலாற்றில் சிறப்பான அம்சங்களைப் போலவே அதன்மீது வன்முறைக்கும், வெறுப்பிற்கும் இடமுண்டு. ஸ்பானிய வைஸ்ராயின் தலைமைப் பீடம் எதேச்சதிகாரத்தின் இருப்பிடமாகவும் இருந்தது. செவ்விந்திய, ஆப்பிரிக்க அடிமைகளின் எலும்புகளால் கட்டப்பட்டிருந்தது. பிரமாண்டமான கோட்டைகளும், நகரங்களும், நிரவிய சமவெளிகளும். புனிதப் படையலாகவும், உன்னதக் கலைப்படைப்பாகவும் உருவாக்கிய ஆபரணங்களை தொன்மைப் பழங்குடி மக்களின் இதயத்தில் இருந்து பறித்து பெட்டகங்களில் அடைப்பதற்கு வசதியாக உருக்கி ஊற்றினார்கள் ஆட்சியாளர்கள். அவர்களின் பெருமைக்குரியக் கலாச்சாரங்கள் ஆக்கிரமிப்பாளர்களின் வாள் முனையாலும் நோய்ப் பிணியாலும் தரையோடு தரையாக நசுக்கப்பட்டன. மிகச் சமீபத்தில் 1945ல் நடந்த சர்ச்சைக்குரிய ஜனாதிபதித் தேர்தலில் அரசியல் கட்சிகளுக்கு இடையே நடந்த (1948-57) லா வைலன்சியா மோதலில் இரண்டு லட்சம் மக்கள் கொல்லப்பட்டனர்.

இத்தனை மோதல்களும், முரண்பாடுகளும் இருந்தபோதிலும் வாஷிங்டன்னும், வால்ஸ்டரீட்டும் இரண்டு அமெரிக்காக்களின் அரசியல் வணிக முன்னேற்றத்தில் கொலம்பியாவை வரலாற்றுரீதியாகவே முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகத்தான் பார்க்கிறது. பல்வேறு காரணிகளோடும் பகோட்டாவின் நிலவியல் அமைப்பும், இருப்பும் இப்பிரதேசத் தலைவர்களுக்கு தாக்கத்தையும், வழிகாட்டுதலையும் அளிக்கிறது. இன்னொரு உண்மை அமெரிக்காவிற்கு பொருட்களுக்குச் சந்தையாகவும் கொலம்பியா அமெரிக்காவிற்கு காப்பி, வாழைப்பழம், துணிப் பொருட்கள், அலங்காரக் கற்கள், மலர்கள், எண்ணெய், கோகொய்ன் ஆகியவற்றை வழங்குவதிலும் ஆதாரமாக உள்ளது.

இருபதாம் நூற்றாண்டின் பிற்காலத்தில் நாம் கொலம்பியாவிற்கு வழங்கிய இன்னொரு முக்கியமான சேவை பொறியியல் மற்றும் கட்டுமான வல்லமை. பல இடங்களைப் போலவே கொலம்பியாவிலும் வேலை செய்திருக்கிறேன். அந்நாட்டில் நிறைவேற்றப்படும் திட்டங்களிலிருந்தும், ஆதாரவளங்களில் இருந்தும் பெறுகிற பெருங்கடனுக்கான தவணையைத் திரும்பச் செலுத்திவிடலாம் என்பதை அவர்களுக்குப் புரியவைப்பது மற்ற பகுதிகளைக் காட்டிலும் எனக்கு எளிதாக இருந்தது. கொலம்பியாவிற்குத் தேவையான மின்திட்டங்கள், நெடுஞ்சாலைகள், தொலைத்தொடர்பு ஆகியவற்றை நிர்மாணிக்கத்

தேவையான பெருந்தொகையைக் கடனாகப் பெற்றால் அவற்றிற்கான தவணையும், வட்டியும் செலுத்தப் போதுமான வருவாயை அமேசான் பிரதேசத்தில் இருந்து பெறும் எண்ணெய் ஏற்றுமதி மூலம் பெற முடியும்.

உலகின் மற்ற பகுதிகளில் கையாண்ட கோட்பாட்டைப் போலவே இங்கும் கடன் அளிப்பதன் மூலமாக கொலம்பியாவைக் கையகப்படுத்தி தனது ஏகாதிபத்திய எல்லையை விரிவாக்குவது தான் அமெரிக்காவின் உள்நோக்கம். மற்ற பகுதிகளில் செய்வதைப் போலத்தான் என்றாலும் இங்கே அதிகமான தொகையை கடன் பெறச் செய்ய வேண்டும். கொலம்பிய டோரிஜோஸைப் போலப் பயனடையப் போவது இல்லை. எனவே திட்டங்களை பூதாகரமாக ஊதிப்பெருக்கிக் காட்டுவதைத்தவிர வேறு வழியில்லை எனக்கு.

குற்றவுணர்வு அதிகரிக்கும் போதெல்லாம் அதிலிருந்து தப்பிக்க நான் கொலம்பியவில் தஞ்சமடைந்து விடுவேன். 1970 களில் நானும் ஆன்னும் இங்கே இரண்டு மாதங்கள் தங்கியிருந்தோம். கரீபியன் கடற்கரை மலையடிவாரத்தில் ஒரு சிறிய காப்பிப் பண்ணையை வாங்குவதற்கான முன்தொகை கூடக் கொடுத்து வைத்திருந்தோம். நாங்கள் ஒருவருக்கொருவர் கீறிக் கொண்ட காயங்களைக் காலம் ஆற்றிவிடும் என்று நம்பிக் கொண்டிருந்தேன். ஆனால் அதற்கு மாறாக மேலும் ஆழமாகவே செய்தது. திருமணத்திற்குப் பின்னர் வரையிலும் நான் தனித்து விடப்பட்டதில்லை. நாங்கள் இருவரும் சேர்ந்து சுற்றிய காலங்களில் உண்மையில் இந்த நாட்டோடுதான் அவளுடைய அறிமுகம் கிடைத்தது.

1970 காலகட்டங்களில் மெய்ன் நிறுவனத்திற்கு காடுகளுக்கு மத்தியில் அமைந்த உயர் மலை நகரங்களில் மின்சார அமைப்பை உருவாக்குவதற்குரிய பல்வேறு ஒப்பந்தங்கள் கிடைத்தன. கடற்கரை நகரமான பாரன்குவில்லாவில் எனக்கு ஒரு அலுவலகம் 1977ல் அளிக்கப்பட்டது. அங்கு என் வாழ்வின் போக்கையே மாற்றிய அழகான கொலம்பியப் பெண்ணைச் சந்தித்தேன்.

பாவ்லா, நீளமான மென்மையான பொன்னிறக் கூந்தல் உடையவள். கொலம்பியர்களிடம் காணமுடியாத பளிச்சென்ற பச்சை நிறக் கண்கள். அவளது அப்பா, அம்மா இருவரும் வடக்கு இத்தாலியில் இருந்து இங்கே குடிபெயர்ந்தவர்கள். தனது பாரம்பரிய அழகைக் காத்துக்கொண்டே நாகரீக ஆடை வடிவமைப்பாளினியாக இருந்தாள். அடுத்த கட்டமாக தனது வடிவமைப்பை ஆடைகளாக மாற்றும் சிறிய தொழிற்கூடத்தையும் கட்டினாள். அங்கு தயாராகும் ஆடைகளை பனாமா, வெனிசுலா

போன்ற நாடுகள் முழுவதும் பல்வேறு பகுதிகளில் உள்ள விற்பனை நிலையங்களுக்கு அனுப்பி வைத்தாள். இயல்பிலேயே இரக்கமனம் படைத்த பாவ்லா எனக்கு ஏற்பட்ட மணமுறிவு உலைச்சலில் இருந்து மீள்வதற்கும் பெண்கள் பால் நான் கொண்டிருந்த எதிர்மறையான அணுகுமுறையை மாற்றிக்கொள்ள பெரிதும் உதவிகரமாக இருந்தாள். அவள் எனக்குக் கற்பித்தப் பாடங்களை எனது தொழில்முறையான அணுகுமுறைக்கும் பயன்படுத்திக் கொண்டேன்.

நமது கட்டுப்பாட்டை மீறிய எதேச்சைகளின் தொகுப்புதான் வாழ்க்கை என்பதை நான் முன்னரே இங்கு கூறியுள்ளேன். ஒரு பள்ளி ஆசிரியரின் மகனாகப் பிறந்த நான். பெண்களின் நளினம் காண முடியாத கிராமப்புற. பள்ளியில் பயின்றேன். ஆன்னைச் சந்தித்தேன், அவள் மூலமாக அங்கிள் பிராங்கைச் சந்தித்தேன். வியட்னாம் போர் வந்தது. எய்னார் கிரீவ் சந்திப்பு நடந்தது இவற்றையெல்லாம் கடந்ததுதான் என் வாழ்க்கையும். எதேச்சைகள் நிகழும்போதே அதில் வாய்ப்புகளும் எதிர்படும். எதேச்சைகளுக்கு எப்படி எதிர்வினையாற்றுகிறோம் என்பதிலிருந்தே மாற்றங்கள் அனைத்தும் நிகழ்கின்றன. உதாரணமாகப் பள்ளியில் இருந்து வெளியேறினேன். ஆன்னை மணம்புரிந்தேன். அமைதிப் படையில் நுழைந்தேன். பொருளாதார அடியாளாகத் தேர்வானேன். இப்படி அடுத்தடுத்த முடிவுகள் என்னை இன்று இந்த நிலையில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது.

இதேபோல பாவ்லாவும் இன்னொரு எதேச்சை. அவள் என்னில் நிகழ்த்திய தாக்கம் என் வாழ்வின் போக்கை மாற்றியது. அவளைச் சந்திக்கும் வரை இந்த அமைப்பினுள் எல்லாம் சுமூகமாகத் தான் இயங்கிக்கொண்டிருந்தது. அவ்வப்போது நான் என்ன செய்துகொண்டிருக்கிறேன் என்று என்னை நானே கேட்டுக் கொள்வேன். சிலநேரங்களில் அது குறித்த குற்றவுணர்வும் ஏற்படும். இந்தப் பொருத்தமான நேரத்தில்தான் பாவ்லா நுழைந்திருக்கிறாள். பாவ்லாவைச் சந்திக்காவிட்டாலும் இந்த அமைப்பில் இருந்து வெளியேறிவிடுவதற்கான சாத்தியங்கள் உண்டுதான். சௌதிஅரேபியாவில், ஈரானில், பனாமாவில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் என்னை அந்தத் திசைவழியில்தான் தள்ளிக்கொண்டிருந்தன. ஆனால் என்னை அடியாளாக மாற்றும் ஒரு கருவியாக இருந்தவள் கிளாடின் என்ற பெண்தான். அதிலிருந்து வெளியேற இன்னொரு பெண் பாவ்லா இந்த நேரத்தில் தேவைப்பட்டிருக்கிறாள். நான் செய்த வேலைகள் அனைத்தையும் திரும்பிப்பார்த்தால் அது மகிழ்ச்சி அளிப்பவையாக இருக்கின்றனவா என்று கேட்டு, இல்லை என்பதைப் புரியச் செய்தவள் பாவ்லாதான்.

அத்தியாயம் - 22

அமெரிக்கக் குடியரசும் உலக ஏகாதிபத்தியமும்

நான் வெளிப்படையாகவே கேட்கிறேன் என்று பாவ்லா ஒருநாள் கடையில் காப்பி அருந்திக்கொண்டிருக்கும்போது திடீரென்று ஆரம்பித்தாள். நீங்கள் கட்டிக்கொண்டிருக்கும் அணையால் ஆற்றின் கரையோரம் வாழ்கிற மக்கள் உங்கள் மீது வெறுப்புற்றுள்ளனர். அந்த அணையால் நேரடியாகப் பாதிக்கப்படாத நகரத்து மக்களும் கட்டுமான நிறுவனத்தின் மீது தாக்குதல் தொடுக்கும் கொரில்லாக்களுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். உங்கள் அரசோ அவர்களைக் கம்யூனிஸ்ட்கள், பயங்கரவாதிகள், போதைப்பொருட்கள் கடத்துபவர்கள் என்று முத்திரை குத்துகிறது. ஆனால் உண்மையில் அவர்கள் உங்கள் கம்பெனிகளால் அழிக்கப்படும் நிலத்துக்கு அவர்கள்தானே சொந்தக்காரர்கள்?

மெய்னில் பொறியாளனாகப் பணியாற்றும் மானுயேல் டோர்ஸைப் பற்றிச் சமீபத்தில்தான் பாவ்லாவிடம் கூறியிருந்தேன். டோரிஸ் அணைக் கட்டுமானத் தளத்தில் கொரில்லாக்களால் தாக்கப்பட்டிருந்தான். மானுயேல் ஒரு கொலம்பியன். வெளியில் இருந்து ஆட்களை வேலைக்குக் கொண்டுவருவதை ஒப்பந்தம் தடைசெய்கிறது என்பதால் உள்ளூர்ப் பொறியாளர்களையே நியமனம் செய்திருந்தோம். எங்கள் கொலம்பிய சகாக்கள் உட்பட எக்ஸ்பெண்டபிள் கோட்பாடு (நமது நோக்கம் நிறைவேற எதையும் பலி கொடு) என்பதற்கு உடன்பட்டவர்கள் கொலம்பியர்கள் என்று பேசிக்கொண்டிருந்தோம். அந்தக் கோட்பாட்டில் எனக்கு உடன்பாடில்லை. ஏனென்றால் அக்கோட்பாடு என்னை சுயதன்மையுடன் வாழவிடுவதில்லை.

அன்று கொரில்லாக்கள் ஏ.கே 47 வைத்து வானத்தில் ஒரு குண்டும், மானுயேல் பாதத்திற்குப் பக்கத்தில் ஒரு குண்டும் சுட்டார்கள். தன்னைச் சுட்டது குறித்து மானுயேல் பெரும்

பதட்டத்துடன்தான் சொன்னான். உண்மையில் அவன் மனநிலை பாதிக்கப்பட்டிருந்தது. பொதுவாக கொரில்லாக்கள் யாரையும் சுடுவதில்லை. படகில் வந்து கடிதம் கொடுத்துவிட்டு ஆற்றின் போக்கில் போய்விடுவார்கள். இதைத்தான் நான் பாவ்லாவிடம் சொன்னேன்.

அடக்கடவுளே அதற்கே பயந்துவிட்டானா? என்று வியப்படைந்தாள் பாவ்லா.

ஆம் உண்மை தான். நான் அவனிடம் உன்னைச் சுட்டது எப்ஏஆர்சி யா அல்லது எம் -19 னா என்று கேட்டேன். இவை இரண்டும்தான் கொலம்பியாவில் புகழ்பெற்ற கொரில்லாக் குழுக்கள்.

அப்புறம்

இரண்டுமல்ல இந்தக் கடிதத்தைக் கொடுத்த மற்றவர்களாக இருக்கலாம் என்றான்.

நான் கொண்டுவந்திருந்த செய்தித்தாளை எடுத்து பாவ்லா உரக்கப் படித்தாள்.

அன்றாடங்காய்ச்சிகளாகிய நாங்கள் எங்கள் முன்னோர் ரத்தத்தின் மீது ஆணையிட்டுச் சொல்கிறோம், ஆற்றின் குறுக்கே ஒரு போதும் அணை கட்ட அனுமதிக்கமாட்டோம். நாங்கள் சாமான்ய செவ்விந்தியர்கள், மெஸ்டிஜோர்கள்தான். எங்கள் நிலங்கள் நீரில் மூழ்கடிக்கப்படுவதைவிட நாங்கள் சாவதே மேல். எங்கள் கொலம்பியச் சகோதரர்களை இதன்மூலம் எச்சரிக்கிறோம். கட்டுமான நிறுவனங்களுக்கு வேலை செய்வதை நிறுத்திவிடுங்கள் பாவ்லா பேப்பரைக் கீழே வைத்துவிட்டு இதற்கு என்ன சொல்கிறாய்? என்று கேட்டாள்.

ஒருநிமிடம் தயங்கிவிட்டுச் சொன்னேன்.கம்பெனியின் அடியொற்றிப் போவதைத்தவிர வேறு வழியில்லை. யாராவது விவசாயி இதுபோல எழுதியிருப்பார்கள் என்று நினைக்கிறாயா என அவனிடம் கேட்டேன்.

பாவ்லா கனிவுடன் என்னைப் பார்த்தாள்.

தன் தோள்களை மட்டும் வெறுமனே உலுக்கிக்கொண்டாள். நான் பாவ்லாவின் கண்களைப் பார்த்தேன். என் மீதே எவ்வளவு வெறுப்பாக இருக்கிறது தெரியுமா?

அடுத்து என்ன செய்யப் போகிறாய் என்று என்னை நெருக்கினாள்.

நான் முஷ்டியால் மேசை மீது குத்திக் கேட்டேன். விவசாயிகளுக்கு ஏ.கே47 ஐக் கையாளு முடியுமா? அதைக் கண்டுபிடித்தது யார்?

சொன்னானா?

ஆம், சொன்னான். ஆனால் அவன் சொல்வதைக் கேட்க முடியவில்லை. ருஷ்யன் என்று சொன்னான். நீ சொன்னது சரிதான் என்று உறுதிப்படுத்தினேன். அதைக் கண்டுபிடித்தவன் கம்யூனிஸ்ட். களானிஷ்கோவ். செம்படையில் (இரண்டாம் உலகப்போரில் ஹிட்லருக்கு எதிராகத் திரட்டப்பட்ட ருஷ்யப்படை) முக்கியமான பதவியை அலங்கரித்தவன். சுற்றி வளைத்து இதை எழுதியவன் விவசாயி அல்ல. கம்யூனிஸ்ட்தான் என்பதைப் புரியவைத்தான்.

நீயும் அப்படித்தான் நம்புகிறாய் இல்லையா?

அவள் கேள்வி என்னைத் தடுத்துநிறுத்தியது. நான் எப்படி நேர்மையான பதிலைத் தரமுடியும். இரண்டு உலகங்களுக்கிடை சிக்கிக்கொண்ட மனிதன் என்று என்னைப் பார்த்து ஈரானில் யாமின் சொன்னதை நினைத்துப் பார்த்தேன். கொரில்லாக்களால் தாக்கப்பட்ட முகாமில் இருந்திருக்க வேண்டும் அல்லது கொரில்லாக்களுடன் இருந்திருக்க வேண்டும். என்னுள் பழைய நினைவுகள் கவிந்தன. யாமின் மற்றும் டாக்டர் மீதும், கொலம்பியப் புரட்சியாளர்கள் மீதும் எனக்கு லேசான பொறாமைத் தலைகாட்டியது. தங்களுக்கான கடப்பாடு கொண்டவர்கள். அவர்களுக்கான நிஜமான உலகங்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள் ஜனங்களுக்கு மத்தியில்.

நானும் அப்படிப்பட்ட காரியத்தைத்தான் செய்ய வேண்டும் என்றேன் இறுதியாக.

அவள் மென்மையான புன்னகையொன்றை உதிர்த்தாள்.

நான் தொடர்ந்தேன். எனக்கு இது எரிச்சலூட்டுகிறது. என் நினைவுகளில் அடிக்கடி வந்து மோதும் ஒரு மனிதரைப் பற்றி நினைத்துக் கொண்டேன். டாம் பெய்ன். மற்ற பல போராளிகள், கடற்சாகசக்காரர்கள், முன்னணியில் நிற்போர் ஆகியோரை நினைவில் நிறுத்தினேன். அவர்கள் யாரும் நடுவாந்திரமாக நிற்கவில்லை. ஒரு சார்பாகத்தான் நின்றார்கள். தங்களுக்கான ஒரு இலட்சியத்தை நிர்ணயித்து அதற்காகவே வாழ்ந்திருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் என் வேலையின் மீதான வெறுப்பு அதிகரித்துக்கொண்டே போகிறது.

உனது வேலையின் மீதுதான் வெறுப்பா? அவள் தலையசைத்தவுடன் என்னுள் ஆசுவாசமான உணர்வை உணர்ந்தேன்.

எங்களது கண்கள் சந்தித்துக் கொண்டன. வேலையை நான் தானே செய்துகொண்டிருக்கிறேன் என்று அவளது பார்வை குற்றம் சாட்டுவது எனக்குப் புரிந்தது.

என் கையை முறுக்கினாள். எனக்கு உடனே அதிலிருந்து விடுபட்டாக வேண்டும் போல் இருந்தது. ஆகையால் ஆம் நான் தான் அந்த வெறுப்பிற்குரிய வேலையைச் செய்கிறேன் என்பதை ஒப்புக்கொண்டேன். அடுத்து என்ன செய்யப்போகிறாய் ஜான்?

என்னிடத்தில் பதில் இல்லை. அவள் பிடியில் இருந்து விடுபட்டு, இப்போது என்னைத் தற்காக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டேன். வழக்கமான நியாயங்களையே முன் வைத்தேன். அதாவது என்னால் முடிந்த மட்டிலும் நல்லது செய்யவே விரும்புகிறேன். அவ்வமைப்பிற்குள் இருந்தபடியே அதை மாற்ற முயற்சிக்கிறேன். மேலும் இருக்கவே இருக்கிறது கைவசமுள்ள வார்த்தைகள். நானிருக்கும் அந்த இடத்தில் வேறு யாராவது அமர்ந்தால் நிலைமை இன்னும் மோசமாகும் என்றபோது அவள் பார்க்கிறப் பார்வையைப் பார்த்தால் நான் சொல்லும் சமாதானங்களை அவள் ஏற்கும் நிலையில் இல்லை என்பது தெரிந்தது. அது என்னுடைய வேலையல்ல என்ற உண்மையை நான் புரிந்துகொண்டாக வேண்டும் என்று வற்புறுத்தினாள். ஆனால் அவள் கூறுவது என்னைக் குற்றம் சாட்டுவதாகவே தோன்றியது.

இறுதியாகக் கேட்டேன். நான் என்ன செய்யலாம் என்று நினைக்கிறாய்?

சற்றே வெட்கப்பட்டாள். எனது கையை விடுவித்தாள். நீ பேச்சை மாற்ற முயற்சிக்கிறாய்.

நான் மறுக்கும் விதமாகத் தலையசைத்தேன்.

சரி, நான் சொல்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. மீண்டும் ஒரு நாள் திரும்ப வரும். கையில் ஒரு ஸ்பூனை எடுத்துக்கொண்டாள். எனக்குத் தெரியும் சில கொரில்லாக்கள் ரஷ்யாவிலும், சீனாவிலும் பயிற்சி பெறுகிறார்கள். தனது ஸ்பூனை காப்பிக் கோப்பைக்குள் (கட்டிப் பாலும் காபி டிகாஸனும் தனித்தனியாக இருக்கும் நிலையில்) விட்டு நன்றாக அடித்துக் கலக்கினாள். பின் ஸ்பூனை எடுத்து அதிலுள்ள கட்டிப் பாலைச் சுவைக்க நக்கினாள். அவர்களுக்கு வேறென்ன வழியிருக்கிறது. உங்களுடைய ராணுவப்பள்ளியில் இருந்து வெளியேறும் சிப்பாய்களை அதிநவீன ஆயுதங்கள் கொண்டு வேற் எப்படித்தான் எதிர்க்க முடியும். சிலநேரங்கள் தங்களுக்கான ஆயுதங்கள் பெறவேண்டி பணத்திற்காக கோகெய்ன் கடத்தலும் கூடச் செய்வார்கள். வேறெப்படி துப்பாக்கிகள் வாங்க முடியும். அவர்கள்

பயங்கரமானவர்களை எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. தற்காக்க உங்கள் உலகவங்கி உதவுமா? சொல்லப்போனால் அவைதான் இந்த நிலைமைக்கு அவர்களைத் தள்ளுகின்றன. ஒரு மடக்கு காப்பியை எடுத்துக் குடித்துக்கொண்டாள். நீங்கள் கட்டி முடிக்கும் அணையால் ஏதோ கொஞ்சம் பணக்காரக் கொலம்பியர்கள் பயனடைவார்கள். ஆனால் பல்லாயிரக்கணக்கான விவசாயிகளும் மீனவர்களும் பாதிப்படைவார்கள். நீரில் விஷம் ஏறி மீன் பிடிக்க முடியாது.

எங்களுக்கு எதிராகப் போராடுபவர்களுக்கு ஆதரவாக அவள் பேசியதைக் கேட்டு மனம் குன்றிப் போனேன் என் கைகள் பிசுபிசுப்பது போல் இருந்தன.

அது எனக்கு தேவையற்ற கேள்விதான் என்றாலும் என்னையறியாமல் கேட்டுவிட்டேன். கொரில்லாக்களைப் பற்றி எப்படி உனக்கு இவ்வளவு விபரங்கள் தெரியும்?

அதிலுள்ள பலர் என்னுடன் படித்தவர்கள். தனது காப்பிக் குவளையை நிதானமாக நகர்த்திவிட்டுத் தயங்கியபடி சொன்னாள் என்னுடைய அண்ணன் அந்த இயக்கத்தில் இருக்கிறான்.

அவளைப் பற்றி எல்லாம் எனக்குத் தெரியும் என்று நினைத்திருந்தேன். ஆனால் இது எப்படி எனக்குத் தெரியாமல் போனது. முற்றிலுமாக நொறுங்கிப் போனேன். வெளியில் சென்று விட்டு வந்த கணவன் உள்ளே தன் மனைவி இன்னொருவனுடன் படுக்கையில் இருப்பதைப்போன்ற நிலையில் என்னை உணர்ந்தேன்.

நீ எப்படி என்னிடம் இதை மறைக்கலாம்?

இதைச் சொல்லியாக வேண்டும் என்ற கட்டாயம் இல்லையே? இதென்ன தம்பட்டம் அடித்துக்கொள்கிற விஷயமா? சற்று மௌனம். அவன் ஜாக்கிரதையாக இருக்கவேண்டியுள்ளது. நானே அவனைப் பார்த்து இரண்டாண்டுகள் ஆகிவிட்டன.

அவன் உயிருடன் இருக்கிறான் என்று எப்படி நம்புகிறாய்?

இருப்பான் என்று எதிர்பார்க்கவில்லை. சமீபத்தில் அரசாங்கம் அறிவித்த தேடப்படுவோர் பட்டியலில் அவன் பெயர் இருப்பதால் நல்ல அறிகுறியாகத் தோன்றுகிறது.

நான் இப்போது நியாயம் கற்பித்தாக வேண்டும் அல்லது என்னைத் தற்காத்துக்கொண்டாக வேண்டும். என்னிடம் உள்ள போராளிகள் மீதான பொறாமை உணர்வை அவளறியமாட்டாள் என நம்புகிறேன். அவன் எப்படி இயக்கத்தில் சேர்ந்தான்?

நல்லவேளையாக அவளது கண்கள் காப்பிக் கடை மீது இருந்தன. பழங்குடிகளை காடுகளில் இருந்து வெளியேற்றிவிட்டு

அவர்களது நிலத்தில் எண்ணெய்க்காக துளையிடுவதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அதற்கு எதிராக எண்ணெய் நிறுவன அலுவலகத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். ஒரு விபத்தாகத்தான் அண்ணனும் அவனது நண்பர்கள் பன்னிரண்டு பேர்களையும் ராணுவம் அடித்துத்துவைத்துச் சிறையில் தள்ளியது. அவர்கள் ஒன்றும் சட்டத்திற்குப் புறம்பாக செய்துவிடவில்லையே. கட்டடத்திற்கு வெளியே நின்று அட்டைகளை ஏந்தி தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். அவள் எங்களுக்குப் பக்கத்தில் இருந்த ஜன்னலின் மீது பார்வையைப் பதித்தாள். அவனை ஆறு மாதம் சிறையில் அடைத்தார்கள். எங்களிடம் எதுவுமே பேசவில்லை அவன். ஆனால் வெளியில் வந்தபோது வேறு ஒரு மனிதனாக இருந்தான்.

இதுபோன்று பாவ்லாவுடன் நடந்த பல உரையாடல்களில் இதுதான் முதலாவது. இந்த உரையாடல் அடுத்து என்ன செய்யப் போகிறோம் என்ற இடத்தில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது. ஒரு பதினுக்கு முன்னர் 1968 இல் தேசியப் பாதுகாப்புப்படைக் கண்டறிந்த பணத்தின் மீதான வெறி போன்ற பலவீனங்கள் இன்னும் அப்படியேதான் நீடித்துவருகின்றன என்பதை நினைத்து என் ஆன்மா இரண்டாகப் பிளந்துவிட்டதுபோல் இருந்தது. எனது மேலோட்டமான ஆசைகளுக்கு அடியில் கடற்கொள்ளையனாக வேண்டும் என்ற வெறி வேர்விட்டிருப்பதை உணர்ந்தேன். ஒரு தீர்வை நோக்கிய விசாரணையைத் தூண்ட பாவ்லா எனக்கு உதவினாள்.

கொலம்பியாவில் நானிருந்த காலங்களில் எனக்கு ஏற்பட்டத் தடுமாற்றங்களுக்கு அப்பால் பழைய அமெரிக்கக் குடியரசிற்கும் அதன் இன்றைய ஏகாதிபத்திய வெறிக்குமான வேறுபாடுகளைத் துல்லியமான இனம் காணமுடிந்தது. பழைய அமெரிக்கக் குடியரசு உலகமக்களுக்கு ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கைச் சின்னம். லௌகீகத்தைக் கடந்த ஆன்ம அறத்தைக் கோட்பாடாகக் கொண்டது. அனைவருக்கும் சமநீதி, சமஉரிமை என்பதை அடிப்படையாகக் கொண்டது. அதை வெறும் கற்பனாவாதக் கனவாக இல்லாமல் சொல் செயல், பேச்சு, மூச்சு அனைத்திலும் நீக்கமற நிறைத்தது. தரையில் வீழ்ந்துகிடந்தவர்களை தனது இரு கரங்களால் வாரி அணைத்துக்கொண்டது. கருத்தளவில் தாக்கம் அளித்ததுடன் அவசியமான நேரங்களில் காரியமாற்றவும் தித்தமாக இருந்தது. இரண்டாம் உலகப்போரின் போது அது தனது கோட்பாட்டின் பக்கம் நின்றதைக் கண்கூடாகப் பார்த்தோம். உலக நிறுவனங்களில் அடிப்படை மாற்றத்திற்கு வழிகோலவேண்டிய அமெரிக்க சிறிய நிறுவனங்கள், பெரிய நிறுவனங்கள், வங்கிகள்,

அரசு அதிகாரவர்க்கத்தினர் என அனைத்து அமைப்புகளும் தங்கள் கடமைக்கு எதிராக குடியரசிற்கே அச்சுறுத்தலாக மாறிவிட்டன. நிறுவனங்களுக்கு இடையேயுள்ள வலைப்பின்னலையும், தொடர்புகளையும், போக்குவரத்து முறைகளையும் பயன்படுத்தி நோய்களுக்கும், பட்டினிக்கும், போர்களுக்கும் அனைத்துச் சமூகத் தீமைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கமுடியும். அதைச் செய்யும் மனத்திடம் மட்டும் இருந்தால்போதும், எல்லாம் தானாகக் கைகூடும்.

மறுபுறத்தில் உலக ஏகாதிபத்தியம் என்பது குடியரசு கோட்பாட்டிற்கு நேர்எதிரானது. அனைத்திற்கும் தன்னை மையப்படுத்துவது. யாவும் தனக்கானவை என்று கருதுவது. பேராசை கொண்டது. லௌகீகத்தை முன்னிலைப் படுத்துவது. வணிகமுறையை அடிப்படையாகக் கொண்டது. முந்தைய பேரரசுகளைப் போலவே தனது இரண்டு கரங்களையும் விரித்து அனைத்து வளங்களையும் அள்ளிக்கொள்ளத் துடிப்பது. கண்ணில் படும் அனைத்தையும் தனதாக்க விரும்புவது. ஆள்வோர் கையில் அதிகாரத்தைக் குவிக்கவும், மேலும் மேலும் செல்வம் படைத்தவர்களாக மாற்றுவதற்காகவும் தனது ஒவ்வொரு அடியையும் எடுத்து வைப்பது.

நான் வகிக்கும் பாத்திரம் குடியரசிற்கும் உலக ஏகாதிபத்தியத்திற்குமான வேறுபாட்டை வளர்த்தெடுக்கிறது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டேன். மெய்னில் வேலையை ஒப்புக்கொண்டால் செய்யவேண்டிய கடமை என்ன என்பதை கிளாடின் எனக்கு நேர்மையாக உணர்த்திவிட்டாள். அவை அமுலாகும்போது என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை நானும் நேரடியாக இந்தோனேசியா, பனாமா, ஈரான், கொலம்பியா ஆகிய நாடுகளில் கண்கூடாகப் பார்த்துவிட்டேன். அதனுடன் பாவ்லாவின் சொந்தக் கதையும், அவளது கனிவும், காதலும் இப்போது சேர்ந்துள்ளது. நான் அமெரிக்கக் குடியரசிற்கு விசுவாசமானவன் தான். ஆனால் புதிய ஏகாதிபத்தியமாக மாறுவதற்கு அது மேற்கொண்டுள்ள பொருளாதார நடவடிக்கைகள் வியாட்னாமை ராணுவரீதியாக ஒழித்துக்கட்ட மேற்கொண்ட முயற்சிகளுக்குச் சற்றும் குறைந்ததல்ல. ராணுவ நடவடிக்கைகளுக்கு ஒரு வரையறை உண்டு என்பதை எங்களுக்கு தென்கிழக்கு ஆசியா நிரூபித்த பின்னர் அதைவிட தேர்ந்த திட்டங்களை பொருளாதார வல்லுனர்கள் இப்போது தயாரித்துவிட்டார்கள். அந்நிய உதவி முகமைகளும், தனியார் கட்டுமான ஒப்பந்ததாரர்களும் அத்திட்டங்களை நிறைவேற்றும்போது லாபத்தை ஈட்டித் தருவதாகவும் இருக்கின்றன.

நேரடியாக பொருளாதார அடியாட்கள் சம்பந்தப்படாத பல்வேறு துறைகளிலும், அமெரிக்கப் பெருநிறுவனங்களிலும் தாம் செய்யும் வேலைகளின் விளைவுகள் என்பதை அறியாமலே நாசகரமான வேலையை அனைத்துக் கண்டங்களிலுமுள்ள நாடுகளில் எத்தனையோ ஆண்களும், பெண்களும் அன்றாடம் செய்வதைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். தாம் செய்கிற வேலை வறுமையை அகற்றி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குப் பதிலாக இனிப்பகங்களில், காலணி, தானியங்கித் தொழிற்சாலைகளில் எண்ணற்ற மக்களை மத்தியகால அடிமைத்தனத்திற்குள் தள்ளுவதற்கானக் குழியைப் பறிக்கிறார்கள். மெய்ன் பொறியாளர்களைப் போலவே இதன் பலன் என்ன என்பதையறியாமல் கண்ணை மூடிக்கொண்டு அந்த வேலையைச் செய்கிறார்கள். கடும் சுரண்டலுக்கு ஆளாகி ஐரோப்பிய இருட்டுகுகைகளிலும், ஆப்பிரிக்கக் காடுகளிலும், பழங்கால அமெரிக்கக் கொடுங்காடுகளிலும் மோசமான சூழலில் வாழ்ந்ததாகச் சொல்லப்படும் அடிமைகளைப் போலன்றி தமது வாழ்க்கை மிகவும் நாகரீகமானது என்று இவர்கள் நம்ப வைக்கப்பட்டுள்ளனர்.

நான் மெய்னில் நீடிப்பதா அல்லது விலகிவிடுவதா என்பதில் ஒரு முடிவிற்கு வரவேண்டிய கட்டாயத்துடன் மனப் போர்க்களத்தில் தள்ளப்பட்டிருந்தேன். வெளியேறிவிடுவதுதான் ஆழ்மன விருப்பம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் மறுபக்கம் எனது தொழில் சிந்தனை தடுமாறியது. மேலும் அதிக நாடுகளில், மேலும் அதிகத் தொழிலாளர்களுடன் என் சொந்தப் பேரரசு விரிவாக்கப்பட வேண்டும். பல்வேறு துறைகளில் உள்ள எனது பங்குகள் உயர்ந்து புகழ் பரவவேண்டும். அதிகார உச்சத்தின் வாழ்க்கைமுறை மற்றும் பண மயக்கத்தோடு இங்கிருந்து வெளியேற முடியாது என்று கிளாடின் அளித்த எச்சரிக்கையும் நினைவிற்கு வந்தது.

இவற்றையெல்லாம் பாவ்லா புறக்கணித்தாள். அவளுக்கு என்ன தெரியும்? என்றாள்.

அனைத்துப் பெரிய விஷயங்களும் அவள் சொன்னபடிதான் நடந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டினேன்.

அதெல்லாம் நீண்டகாலத்திற்கு முன்னர். வாழ்க்கை மாறி விட்டது என்றாலும் உனக்குள் ஏற்படுத்தியது என்ன? உனக்குள் சந்தோசம் இல்லைதானே. இனி இதைவிட வேறென்ன மோசமான நிலையை கிளாடின்னோ மற்றவர்களோ உருவாக்கிவிட முடியும்?.

தான் கூறிய விசயங்களையே மேலும் தெளிவாகக் கூறினாள். இருந்தாலும் அவளது கருத்தை ஒப்புக்கொண்டேன். எனக்குள் ஏற்பட்டிருக்கும் மனஅழுத்தம், குற்றவுணர்வு, மன அவஸ்தைகள் இவையனைத்தையும் பணம், உல்லாசம், புகழ், சாகசம் ஆகியவற்றால் நியாயப்படுத்திக்கொள்ள முடியவில்லை. மெய்னில் பங்குதாரன் என்ற வகையில் பணக்காரனாகத்தான் இருக்கிறேன். ஆனால் இனியும் தொடர்ந்து நீடித்தால் பொறிக்குள் நிரந்தரமாக சிக்கிக்கொள்வேன்.

ஒருநாள் பழைய ஸ்பானிஷ் கோட்டையான கர்டாஜினோவிற்கு அருகே கடற்கரையில் நானும் பாவ்லோவும் உலாவிக் கொண்டிருந்தோம். அந்த இடம் கடற்கொள்ளையர்களின் எண்ணற்ற தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கும். எனக்குத் தோன்றாத ஒன்று பாவ்லாவின் அணுகுமுறையால் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. திடீரென்று பாவ்லா கேட்டாள் உனக்குத் தெரிந்ததெல்லாம் சொல்லாமல் இருந்துவிட்டால் என்ன?

நான் அமைதியாக இருந்துவிடலாம் என்கிறாயா?

ஆம் அதேதான். பின்னால் உனக்கு தொந்தரவிற்கு இடம் தரக்கூடாது. சொல்லப்போனால் குட்டையைக் கலக்காமல் அனைத்து வகைகளிலும் உன்னை விலக்கி வைப்பதற்கானச் சூழலை உருவாக்க வேண்டும்.

அது நல்ல யோசனை. அற்புதம். ஏன் எனக்கு முன்னரே தோன்றாமல் போய்விட்டது. உண்மைகளைப் பறைசாற்றும் புத்தகங்களை எழுதாமல் நான் இருக்கும் இடம் தெரியாமல் இருந்து விடலாம். நானொரு சாமான்யனாக இருப்பதற்குப் பதிலாக புனிதப் போராளியாக முடியாது. பாவ்லாவுடன் புதிதாகத் துவங்கும் குடும்ப வாழ்க்கையை அனுபவிப்பதிலும், ஊர்சுற்றுவதிலும் கவனம் செலுத்தலாம். இங்கிருந்து வெளியேறிவிட்டால் போதுமானது.

கிளாடின் உனக்குக் கற்றுக்கொடுத்ததெல்லாம் எப்படி ஏமாற்றுவது என்பதைத்தான். உன் வாழ்க்கையே பொய்மை நிறைந்தது. அனுதாபச் சிரிப்பொன்றை உதிர்த்தாள். சமீபத்தில் வெளியான உன்னைப் பற்றிய சான்றுக் குறிப்புகளைப் பார்த்தாயா?

இல்லையென்று கூறினேன்.

அதைப் பார். நான் ஸ்பானிஷ் செய்தித்தாளில் படித்தேன். முதல்நாள் ஆங்கிலத்தில் வெளியாகியிருக்க வேண்டும். நீ படித்துப் பார்த்தால் சுவாரஸ்யமாக இருக்கும் என்று கூறினாள்.

அத்தியாயம் - 23

நயவஞ்சகத்தைப் பூசி மெழுக ஜிலுஜிலுப்பான பட்டங்கள்

நான் கொலம்பியாவில் இருந்தபோது மெய்ன் தலைவர் பதவியிலிருந்த ஜேக்டெவ்பர் ஒய்வுபெற்றதாகச் செய்தி கிடைத்தது. எதிர்பார்த்தபடியே டெவ்பேரின் இடத்தில் புருனோவை நியமித்தார் சேர்மேனும் தலைமை நிர்வாகியுமான மெக்ஹால். பாஸ்டனுக்கும் பாரன்குயில்லாவிற்கும் இடையிலான தொலைபேசி இணைப்புகள் சிணுங்கிய வண்ணமிருந்தன. எனக்கும்கூட பதவிஉயர்வு பெறுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகப் பேச்சு அடிபட்டது. அனைத்திற்கும் மேலாக நான் புருனோவின் அதிவிசுவாசமான ஊழியன் வேறு.

இந்த மாற்றங்களும், உலவும் வதந்திகளும் என் நிலையை புதுப்பித்துக்கொள்ள ஊக்கமளிப்பதாக இருந்தன. இதற்கிடையில் பாவ்லா சொன்னபடி என்னைப்பற்றி வந்திருந்த செய்தியின் ஸ்பானியப் படியைப் படித்தேன். அது எனக்கு அதிர்ச்சியளிப்பதாக இருந்தது. பாஸ்டனில் இருந்து வெளிவரும் பன்னாட்டு நிறுவன இதழான மெய்ன்லைன்ஸின் நவம்பர் மாத பதிப்பை வாங்கி ஆங்கில மூலப்பிரதியை வாசித்தேன். மெய்னின் புதிய சேவையில் வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்படும் சிறப்புச் சலுகைகள் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியாகி இருந்தது.

எனது தகுதிக் குறிப்புக் குறித்து நான் கர்வம் கொண்டிருந்தது ஒரு காலம். இப்போதோ பாவ்லாவின் பார்வையில் பார்க்கும்போது ஆத்திரமும் விரக்தியும் பொங்குகிறது. அந்த ஆவணங்களில் அளிக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் திட்டமிட்ட ஏமாற்று வேலையாக இருந்தது. உலகஏகாதிபத்திய நோக்கியப் பயணத்திற்கு ஆதரமான அவை, புறத்தோற்றத்திற்காக கணக்கிட்டுத் தயாரிக்கப்பட்ட ஓர் உத்தி, என் வாழ்க்கைக் கதையைக் கோடிட்டுக் காட்டக்கூடியது. செயற்கையான தளத்தின் மீது மெருகேற்றிய பளபளப்பு.

அப்படி ஒரு தகுதிச் சான்றிதழ் பெறுவதில் எனக்கும் பொறுப்பு உண்டு என்பதால் அது மகத்தான நிறைவைத் தருவதாய் இல்லை. நிரந்தரமான இயங்கு விதிப்படி அடிப்படையான தகுதிச் சான்றுகளுடன் வாடிக்கையாளர்கள் குறித்த தகவல்களையும் எந்த விதமான வேலைகள் முடிக்கப்பட்டன என்பதற்கான ஆதாரக் கோப்புகளையும் நான் வழங்கவேண்டி இருந்தது. எங்கள் நிறுவனத்தைச் சார்ந்த மற்ற சிலர் என்னுடைய தகுதிச் சான்றிதழை தமக்கு உட்படுத்த நேரும்போது போதுமான ஆதாரத்தை நிறுவ வேண்டும்.

உதாரணமாக மத்தியகிழக்கில் சிறப்பான அனுபவம் பெற்றவன் என்பதைக் குறிப்பிட விரும்பலாம் அல்லது உலகவங்கி போன்ற சர்வதேச நிறுவனங்களுக்கு திட்ட ஆதாரங்களைச் சிறப்பாக அளித்தேன் எனலாம். அப்படிச் சான்றிதழ் அளிப்பவர் திருத்தப்பட்டச் சான்றிதழ் வெளியிடும் முன் என்னுடைய ஒப்புதலைப் பெறவேண்டும். மற்ற மெய்ன் ஹாழியனைப் போன்றவன் என்றபோதிலும் அடிக்கடி பயணம் மேற்கொண்டதால் சான்றுகளைப் புதுப்பித்தல் செய்வதில் என்னுடைய ஒப்புதலுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. எனவே பாவ்லா கூறியபடி ஆங்கில சான்றாதாரப் படியைப் பார்க்கும்போது ஆதாரங்கள் என்னுடைய கோப்பிலிருந்தே எடுக்கப்பட்டிருந்தபோதிலும் அது எனக்கு முற்றிலும் புதியதாகத் தோன்றியது.

மேலோட்டமான பார்வைக்கு சாதாரணமாகத் தோன்றலாம். ஆனால் நான் அமெரிக்க, ஆசிய, லத்தின்அமெரிக்க, மத்தியகிழக்கு நாடுகளில் பெரும் பெரும் திட்டங்களுக்குப் பொறுப்பாளனாக பொருளாதார முன்னுரைப்பு, மின்சாரத் தேவைக்கான முன்னுரைப்பு போன்றவற்றில் எனக்கிருந்த அனுபவமும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தப் பகுதி அமைதிப்படையில் நான் செய்த சேவையுடன் முடிவு பெற்றிருந்தது. இது ஏதோ பெரிய உலோக நிறுவனத்தில் தொழில் மேலாளராக இருந்தவன் அதை விட்டுவிட்டு கூட்டுறவு செங்கல் தயாரிப்பில் தொண்டனாக சேர விரும்பியதைப்போன்ற தாக்கத்தை அளிப்பது போலிருந்தது.

நீளமான வாடிக்கையாளர் பட்டியலைக் கொண்டிருந்தது. அப்பட்டியலில் உலகவங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, குவைத் அரசாங்கம், ஈரானிய ஆற்றல் அமைச்சகம், சௌதிஅரேபியாவில் அரேபிய அமெரிக்க எண்ணெய் நிறுவனம் போன்றவற்றை உள்ளடக்கிய பல பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. இத்தனை பெயர்களும் எனது கோப்பில் இருந்தாலும் ஒரே பட்டியலாக அச்சில் பார்க்கும்போது எனக்கே ஆச்சர்யமாகத்தான் இருந்தது.

தகுதிச் சான்றை ஒருபுறம் ஒதுக்கிவைத்துவிட்டு மெய்ன் லைனில் வந்திருந்த என்னைப் பற்றிய கட்டுரையைப் பார்த்தேன். அகத்தூண்டுதலும், திறமையும் வாய்ந்த பெண்மணியான அதன் ஆசிரியர் என்னுடன் கண்ட பேட்டி தெளிவாக என் நினைவிற்கு வந்தது. அதை வெளியிடுவதற்கு முன் படிவத்தை ஒப்புதலுக்காக எனக்கு அனுப்பியிருந்தார். நன்றிப்பெருக்குடன் அதனை வாசித்த நிமிடம் இன்னும் என்னுள் பசுமையாக இருக்கிறது. என்னைப் பற்றி தேர்ந்த சித்திரமாக வரையப்பட்ட அக்கட்டுரையைத் திருத்தம் சொல்லாமல் வெளியிட ஒப்புக்கொண்டதால் உரிய பாரத்தை என் தோள்களும் சுமக்கவேண்டியதாயிற்று. அக்கட்டுரை இப்படித்தான் துவங்கியது.

சமீபத்தில் மெய்னில் உருவாக்கப்பட்டுள்ள பொருளாதார மற்றும் மண்டல வளர்ச்சித்திட்டத்தை வெறுமனே இருக்கையில் அமர்ந்தபடி நோட்டம் விடும்போது எளிதானது போலத் தோன்றலாம்.

இதன் உருவாக்கத்தில் பலரும் தம்முடைய செல்வாக்கைச் செலுத்தியிருக்கிறார்கள் என்றாலும் அதற்குத் தலைமை தாங்கும் ஜான் பெர்கின்ஸின் அளப்பரிய ஆற்றலையே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

மெய்னில் சாதாரண உள்ள பொருளாதார வல்லுனர்களைப் போலவே 1971ல் ஜான் மின்திட்ட முன்னுரைப்பாளராக பணியில் அமர்த்தப்பட்டார். பதினோரு பேர் கொண்ட குழுவைத் தலைமை ஏற்று இந்தோனேசியாவில் கடமையாற்றுவதற்கான வாய்ப்பு அவருக்கு அளிக்கப்பட்டது.

மெய்னில் நான் பணியாற்றிய மொத்தப் பணிக்காலத்தையும் சுருக்கமாகத் தொகுத்தளிக்கும் அக்கட்டுரை ஈக்குவடாரில் நான் பணியாற்றிய மூன்றாண்டு காலத்தை பின்வருமாறு வர்ணித்தது.

எய்னார் கிரீவை ஈக்குவடார் பாட் நகரத்தின் மின்திட்டத்தில் பணியாற்றியபோதுதான் சந்தித்தார். எய்னார் இப்போது டக்ளஸ் கேஸ் அண்ட் நிறுவனத்தின் தலைவராக இருக்கிறார். எய்னுடன் திரு ஜான் கொண்டிருந்த உறவின் வழியே மெய்னில் இந்த வேலையைப் பெற்றார்.

சாதாரணப் பொருளியல் நிபுணராகப் பணியாற்றியப் பின்னர் வாடிக்கையாளர்களின் தேவையைக் கருதி ஓராண்டிற்குப் பின்னர் மெய்ன் திரு ஜானை தலைமைப் பொருளாதார முன்னுரைப்பாளராக நியமித்துக் கொண்டது.

என்னுடைய தகுதிச் சான்றிதழில் கூறப்பட்டிருந்த எதுவும் உண்மைக்குப் புறம்பாகத் திரித்துக் கூறப்பட்டவையல்ல. எனது கோப்பில் உள்ளபடியேதான் இருந்தது. ஆனால் அதன் நோக்கம் தான் திரிக்கப்பட்டது என்பதை இப்போதுதான் கண்டு கொண்டேன். ஆவணங்களை வழிபடுவதைக் கலாச்சாரமாகக் கொண்டுள்ள ஒரு நாட்டில் இது கூடுதல் மோசடியாகும். திட்டமிட்ட பொய்கூட ஒரு வகையில் ஒப்புக்கொள்ளப்படலாம். ஆனால் இவை உண்மையான ஆவணங்கள் மீது ஏற்றப்பட்ட பளபளப்பாகும். உலகவங்கி போன்ற பன்னாட்டு அமைப்பால் மதிக்கப்படுகிற இன்னொரு நிறுவனத்தினுடையது என்பதால் அவ்வளவு எளிதாக எனது தகுதிச் சான்றிதலை மறுக்கமுடியாது.

மெய்னின் முத்திரையிடப்பட்ட இச்சான்றிதழ் அதிகாரப் பூர்வமான சான்றாகும். இதற்கு எதிராக யாரும் கேள்வி எழுப்ப முடியாத அளவிற்கு உலகஅளவில் விரிவான தகுதி பெற்றது.

உதாரணமாக அதில் தேசியப் பாதுகாப்புப் படையின் மூலமாக நான் தேர்வு பெற்றது அதில் குறிப்பிடப்படவில்லை. எய்னார் கிரீவ் குறித்த பிறகுறிப்புகளும் அதில் இடம்பெறவில்லை. பொருளாதார வளர்ச்சியின் முன்னுரைப்பிற்காக நான் நிர்பந்திக்கப்படுகிறேன் என்பதோ, இத்திட்டங்களுக்காக அளிக்கப்பட்ட கடனை இந்தோனேசியா, பனாமா போன்ற நாடுகள் திரும்பச்செலுத்தமுடியாத நிலைக்குத் தள்ளக்கூடியவை என்பது பற்றியோ எதுவும் அது விவாதிக்கவில்லை. நான் ஏற்றிருந்த பொறுப்பை எனக்கு முன்னர் வகித்த ஹாவர்டு பார்க்கரைப் புகழ்ந்துரைக்கும் சொற்களும் அதில் இடம்பெறவில்லை. என்னுடைய வாடிக்கையாளர்கள் பட்டியலில் சௌதிஅரேபியாவும், அமெரிக்காவின் கருவூலத் துறையும் இடம்பெற்றிருந்ததுதான் எனக்குக் குழப்பமாகவும், ஆச்சர்யமாகவும் இருந்தது.

அதை வாசிக்கிற யாருக்கும் அமெரிக்கக் கருவூலத்துறைக்கும், சௌதிஅரேபியாவிற்கும் என்ன தொடர்பு என்ற கேள்வி எழலாம். வெவ்வேறு பகுதியில் இடம்பெற வேண்டிய வாக்கியங்கள் இங்கே ஒன்றிணைந்து இடம்பெற்றுவிட்டனவோ என்று நினைக்கலாம். ஆனால் அதன் முக்கியத்துவம் குறித்து அதில் நான் ஆற்றிய பங்கு குறித்து முன்னரே தெரிந்த துறை சார்ந்தவர்களுக்குத்தான் அது புரியும். ஒரு கட்டுமானத் திட்ட ஒப்பந்தம் சௌதியின் மன்னர் குடும்பஆட்சியை உத்திரவாதப்படுத்தவும், அமெரிக்காவிற்கு நிரந்தரமான எண்ணெய் வழங்கலையும், இடியமீன், ஓசாமா பின்லேடன் போன்ற சர்வதேசக் கிரிமினல்களுக்கு சௌதி நிதி வழங்குவதைக் கண்டுகொள்ளாமல் இருக்கவும் வகை செய்தது

என்பதை சில குழூவுச் சொற்களால் குறிப்பிடப்பட்டிருப்பதன் மூலம் நான் எத்தனை பெரிய காரியங்களையும் சாதுர்யமாக நிறைவேற்றக்கூடிய மெய்ன் பொருளாதார நிபுணன் என்பதை உணர்த்துவதற்காகவே என் தகுதிச் சான்றில் அந்தப் பகுதியைச் சேர்த்திருக்கிறார்கள்.

மெய்ன் லைன்ஸ் கட்டுரையில் இறுதிப் பத்தியில் என்னைப் பற்றிய அவதானிப்பாக ஆசிரியர் கூறியிருப்பவை என் மூல நரம்புகளையே சில்லிடச் செய்பவைகளாக இருந்தன.

மெய்ன் ஊழியர்கள் ஒவ்வொருவரும் எத்தனை திறமை வாய்ந்த கடின உழைப்பாளிகள் என்பதை அதன் துரிதமான பொருளாதார வளர்ச்சிக்கட்டத்தில் ஜான் சரியாகவே உணர்ந்திருந்தார். தனது சகாக்கள் தனக்கு வழங்கிய ஆதரவையும், அவர்களின் பால் தான் கொண்டிருந்த பெருமித உணர்வையும் இந்நேர்காணலில் வெளிப்படுத்தத் தீவிர ஆர்வம் கொண்டிருந்தார்.

என்று அதை முடித்திருந்தார்.

உண்மையில் நானொரு தகுதிவாய்ந்த பொருளாதார நிபுணன் என்று என்னை ஒருபோதும் கருதிக்கொண்டது கிடையாது. பாஸ்டன் பல்கலைக்கழகத்தில் அறிவியல் வணிக நிர்வாக மேலாண்மையில் இளங்கலைப் பட்டம் பெற்றிருந்தேன். கணக்கிலும், புள்ளியலிலும் நான் எப்போதும் ஓர் அரைகுறைதான். மிடில் பர்ரி கல்லூரியில் அமெரிக்க இலக்கியத்தை முதன்மைப் பாடமாகப் பயின்றதால் எனக்கு எழுந்து சரளமான ஒன்றாயிற்று. தலைமை பொருளாதார நிபுணன் மற்றும் பகுதித் திட்டபொருளாதார மேலாளர் போன்ற பதவிகள் எல்லாம் என் சக்திக்குக் கூடுதலானவை. பொருளாதாரத்திலும், திட்டத்திலும் எப்படி செயல்படுவது என்பதையும், எனக்கு மேலுள்ளவர்களின் மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் திட்டஆய்வுகளையும், முடிவுகளையும் தயாரிப்பதற்கான சூட்சுமங்களையும் சொந்த விருப்பத்தின் பேரில் பின்னர் கற்றுக்கொண்டேன். எனது துறை சார்ந்த நுட்பங்கள் பயின்ற பட்டதாரிகளையும், முனைவர்களையும் வேலைக்கு அமர்த்திக் கொள்வதில் தேர்ந்தவனாக இருந்தேன். அதை நுணுக்கமாகப் புரிந்துகொண்டுதான் அக்கட்டுரையாளர் இறுதி வார்த்தைகளாக தனது சகாக்கள் தனக்கு வழங்கிய ஆதரவையும், அவர்களின் பால் தான் கொண்டிருந்த பெருமித உணர்வையும் இந்நேர்காணலில் வெளிப்படுத்த தீவிர ஆர்வம் கொண்டிருந்தார் என்று குறிப்பிட்டிருந்தார்.

என்னுடைய அலுவலகத்தின் மேசையின் மேல் இழுப்பறையில் பல ஆவணங்களுடன் இதையும் வைத்துக் கொண்டு அடிக்கடி எடுத்து வாசித்துப் பார்த்தேன். எனது ஊழியர்கள் இந்த அலுவலகத்திற்கு வெளியிலான உலகத்தில் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குமான இடைவெளியை அகலிப்பதற்காகத்தானே இத்தனை பாடுபடுகிறார்கள் என்பதை நினைத்து அவ்வப்போது குற்றவுணர்வில் ஆழ்ந்துவிடுவேன். எங்கள் ஊழியர்கள் ஆடம்பரமான ஓட்டல்களில் தங்கி, உயர்தரமான உணவகங்களில் தின்று நிறுவனத்தின் வளத்தை நாளும் நாளும் பெருக்கிக்கொண்டிருக்க உலகில் கோடானு கோடி மக்கள் பட்டினியால் செத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அவ்வப்போது நினைத்துக் கொள்வேன்.

என்னிடம் பயிற்சி பெறுகிறவர்கள் பொருளாதார அடியாட்களாகத்தானே உருமாற்றம் அடைகிறார்கள் என்றும் நினைத்துக் கொள்வேன். நான்தான் அவர்களை இங்கே கொண்டு வந்திருக்கிறேன். நான்தான் பயிற்சி அளிக்கிறேன். நான் இங்கே சேரும்போது நிலைமை இப்போதிருப்பதைப் போல இருக்கவில்லை. நிறுவனவியத்தை நோக்கி உலகம் வேகவேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறது. மேலும் மேலும் பேரழிவை ஏற்படுத்தக்கூடியதாக மாறிவிட்டது. இங்கே உழைப்பவர்கள் என்னிலிருந்து வேறுபட்ட இன்னொரு வகையான பிறவிகள். தங்கள் வாழ்க்கையில் என்னைப்போல தேசியப் பாதுகாப்புப் படையையோ அல்லது கிளாடின்னையோ சந்தித்திராதவர்கள். இவர்களுக்கு உண்மையறியும் கருவியோ, அடியாள் என்ற வார்த்தையோ உலக ஏகாதிபத்தியத்திற்கு இவர்கள் ஆற்றவேண்டிய கடமை குறித்தோ எதையும் விளக்கிக்கொண்டிருக்கத் தேவை ஏற்படவில்லை. தங்கள் கடமை என்ன என்பதை உணர்ந்துகொள்வதற்கு நான் அளிக்கும் தண்டனைகளும், பாராட்டுதல்களுமே போதுமானதாக இருந்தன. எனது விருப்பம் என்ன? அதை எப்படி நிறைவேற்றுவது என்பது தெரியும். அதைப் பொறுத்துதான் அவர்களது சம்பளம், போனஸ், ஏன் இங்கே நீடிப்பதுகூட சாத்தியப்படும் என்பதை உணர்ந்து இருந்தார்கள்.

முடிந்தவரை அவர்களது பாரத்தைக் குறைக்கவே முயற்சித்தேன். நாம் அளிக்கும் முன்னுரைப்புகளும், நாடுகள் பெறுகிற பெருங்கடன்களும் மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் பயன்படக்கூடிய ஒன்று என்பதை நம்பி ஊக்கமுடன் உழைக்கும் விதமாகத்தான் நான் எனது ஊழியர்களுக்கு அளிக்கும்

உரைகளையும், குறிப்புகளையும் தயாரித்து அளிப்பேன். நெருக்கடி, அச்சுறுத்தல் ஆகியவற்றிற்குப் பதிலாக எதிர்பார்க்கும் பலன்களுக்கு ஏற்றவகையில் ஊழியர்களை மூளைச்சலவை செய்கிற போக்குதான் கடந்த ஒரிரு தசாப்தங்களாகப் பின்பற்றப்படுகிறது. என் அறைக்குப் பக்கத்தில் அலுவலகத்தில் மேசையில் அமர்ந்து ஊழியர்கள் மாய்ந்து மாய்ந்து செய்கிற வேலைகள் அனைத்தும் ஏகாதிபத்திய இலக்கை நிறைவேற்றக்கூடிய பொருளாதார அடியாட்களாக மாற்றக்கூடியவைதான். கிளாடின் எனக்கு அளித்த பயிற்சியைக் காட்டிலும் கூடுதலாக இவர்களுக்கு அளித்துள்ளேன். ஆனால் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதைப் போலல்லாமல் ஒருவிதமான தெளிவை அவர்களுக்கு ஊட்டியிருக்கிறேன்.

என்னைப் பலவாறாகச் சிந்தித்து இமைமூட முடியாமல் விழித்திருந்த இரவுகள் பலவாயின. பாவ்லா என்னுடைய தகுதிச் சான்றிதழ் பற்றிக் குறிப்பிட்டது பண்டோராப் பெட்டியை (கிரேக்கத் தொன்மத்தில் விளங்கும் பிரச்சனைகளை உருவாக்கும் சைத்தான் பெட்டி) திறந்தது போலாயிற்று. என்னுடைய ஊழியர்களின் அப்பாவித்தனத்தின் மீது எனக்குப் பொறாமை ஏற்பட்டது. நான் திட்டமிட்டு ஏமாற்றியது ஒருவகையில் அவர்கள் மனச்சாட்சி உறுத்தலின்றி இருப்பதற்கு வசதியாகவே ஆனது. என்னைப்போல அவர்கள் சுய அறவுணர்வுடன் மல்லுக் கட்டிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை.

தொழிலில் உள்ளார்ந்த நிஜத்திற்கும் மேலெழுந்தவாரியான தோற்றத்திற்கும் இடையே நடக்கும் மோதலில் இணக்கத்தை உருவாக்கமுடியுமா என்று பெருமுயற்சி மேற்கொண்டேன். வரலாறு நெடுகிலும் மக்கள் அதிகாரத்தால் ஏமாற்றப்பட்டே வந்துள்ளனர். உண்மைக்குப் புறம்பானவற்றையும், மோசடிகளையும் வேண்டிய மட்டும் எடுத்துரைக்கப்பட்டுவிட்டன. நிரம்பக் காவியங்களும் நாட்டுப்புறக் கதைகளும் சொல்லப்பட்டுவிட்டன. அரசர் அணிந்துள்ள ஆடை மெய்யானவர்களின் கண்களுக்கு மட்டுமே புலப்படும் என்ற வார்த்தையைக் கேட்டு ஏமாந்து நிர்வாணமாக வலம் வந்த சக்கரவர்த்தியின் கதை நாம் அறியாததல்ல.

இந்த ஏமாற்று காலங்காலமாகத் தொடர்வதுதான். என்னுடைய தகுதியை குறைத்து மதிப்பிட்ட மெய்னின் இச்செயல் ஒன்றும் இயல்புக்கு மாறானதல்ல என்றாலும் என் ஆழ்மனது அதை ஒப்புக்கொள்ள மறுத்தது. காலத்திற்கு ஏற்றவாறு ஏமாற்றுதலும் மாறிவிட்டிருக்கிறது. இந்த ஏமாற்று நமது பெரும் வீழ்ச்சிக்கு வழி

வகுக்கும். அது அற வீழ்ச்சியாக மட்டுமல்ல வெகு விரைவில் நாம் விழிப்படையவில்லையானால் உடலியல் ரீதியான, கலாச்சார ரீதியான வீழ்ச்சியில் கொண்டுபோய்விடும்.

அமைப்புரீதியாக ஒழுங்கு செய்யப்பட்டக் குற்றங்களைப் பார்க்கும்போது ஒரு படிமம் தோன்றுகிறது. தெருப்பொறுக்கிதான் மாபியாக் கொள்ளைத் தலைவனாகிறான். ஒரேநாளில் தனது புறத்தோற்றதை மட்டும் மாற்றிக்கொள்கிறார்கள். ஏதோ மிகப்பெரிய வணிகத்தில் ஈடுபட்டிருப்பவர்களைப்போல பந்தா காட்டி சமூகத்தின் மேல்மட்டத்தைச் சார்ந்தவர்கள் என்ற போர்வையைத் தமக்குத் தாமே போர்த்திக்கொள்கிறார்கள். உள்ளூர் மட்டங்களில் உள்ள அற நிறுவனங்களுக்குப் பணம் அளித்துச் சமூக அங்கீகாரம் பெறுகிறார்கள். மீளமுடியாத நெருக்கடியில் இருப்பவர்களை வெகு எளிதில் அணுகிவிடுகிறார்கள். ஜான் பெர்கின்ஸ்ஸைப் போன்ற மெய்னின் தகுதி பெற்றவர்கள்தான் இந்தச் சமூகத்திற்கு முன்மாதிரியான மனிதர்கள். பளபளப்பான பூச்சுக்களுக்கு அடியில் தந்திர வலை பின்னப்பட்டிருக்கும். கடன் பெற்றவர்கள் திருப்பிச்செலுத்தமுடியாத நிலையேற்படும்போது அடியாட்கள் பணத்திற்கு ஈடாக சதையை அறுத்துத் தருமாறு நெருக்குவார்கள். அதுவும் முடியாதபோது குள்ளநரிகளின் கைகளுக்குள் சிக்கவேண்டிய நிலை ஏற்படும். இறுதியாக அவர்களுக்கு முன்னால் துப்பாக்கி முனைகள் நீளும்.

சக்கரவர்த்தியை ஒரு துணிவியாபாரி ஏமாற்றியதைப்போல நான் ஏமாற்றிவிட முடியாது. அதனால் தலைமைப் பொருளாதார நிபுணன், மண்டல திட்டஅதிகாரி போன்ற பட்டங்கள் தேவைப்படுகின்றன என்பதைப் புரிந்துகொண்டேன். அற்ப நரித்தனங்களுக்கு மேலான மோசடி முறையால் இதுவரை உலகம் கண்டிராத புதிய வடிவிலான தந்திரத்தால் எதிர்பாராத வாடிக்கையாளரை வஞ்சிக்கும் மோசடிக் கும்பலில் நானும் ஒருவன். இந்த மோசடிக் கும்பலில் உள்ள எனது ஊழியர்கள் அனைவருக்கும் விதவிதமாக பொருளாதார ஆய்வாளர், சமூகவியலாளர், பொருளாதார வல்லுனர், தலைமைப் பொருளியலர், பொருளிய அளவீட்டாளர், நிழல் விலை நிபுணர் போன்ற பட்டங்கள் ஆளுக்கு ஏற்றபடி கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒட்டுமொத்தத்தில் இவர்கள் அனைவரும் உலக ஏகாதிபத்திய உருவாக்கத்திற்கான பொருளாதார அடியாட்களே.

இந்தப் பட்டங்கள் அளிக்கப்பட்டதால் பனிமலையின் உச்சியில் நிற்கும் என் ஊழியர்களுக்கு தங்களுக்கு அடியில் உறைந்திருக்கும் உண்மை தெரிவதில்லை. காலணி விற்பதில்

தொடங்கி, விளையாட்டுப் பொருட்கள், கனரக, ராணுவ சாதனங்கள் வரை தயாரித்து விற்கிற பன்னாட்டு நிறுவனங்கள் வரை ஒவ்வொன்றும் தமக்கான அடியாட்களை வைத்திருக்கின்றன. அவர்களுடைய அணிவகுப்பு இப்புவிக்கோளம் முழுவதையும் மிக வேகமாகச் சுற்றி வருகிறது. அவர்களது நயவஞ்சகம் யாவையும் அணிந்துள்ள பளபளப்பான மேலாடையும், பரபரப்பானப் பயணங்களும் மறைத்துவிடுகின்றன. தங்களது தலைமையகங்களான சான்பிரான்சிஸ்கோ, நியூயார்க், சிகாகோ, லண்டன், டோக்கியோ போன்ற நகரங்களில் இருந்து புறப்படும் ஆண்களும் பெண்களுமான ஊழியர்கள் கண்டங்கள் தோறும் பரவி நாடுகளையும், அதன் தலைவர்களையும் அதிகாரத்தையும் தங்களது நிறுவனவியத்திற்குப் பணியச் செய்கிறார்கள். இனிப்பகங்கள் தொடங்கி பெரும் தொழிற்சாலைகள் வரை துயருரும் மக்கள் தங்கள் உழைப்பை விற்குமாறு தூண்டப்படுகிறார்கள்.

என்னுடையத் தகுதிச் சான்றிதழில் எழுதப்பட்ட வார்த்தைகளின் பின்னால் சொல்லப்படாத விசயங்கள் உள்ளன என்பதையும், மர்மமாகச் செயலாற்றும் ஒரு அமைப்பினுள் நம்மைப் பிணைப்பவை, சுயஅழிவிற்கு வழிகோலுபவை என்பதையும் புரிந்துகொள்ளும்போது அது என் நிம்மதியைக் குலைத்தது. சொல்லப்பட்ட வரிகளுக்கு இடையில் மறைந்திருக்கும் சொல்லப்படாத அர்த்தங்களைப் புரிந்துகொண்டு எனது வாழ்க்கையை மாற்றும் பாதையில் மேற்கொள்ளும் பயணத்தை விரைவுபடுத்துமாறு தூண்டினாள் பாவ்லா.

அத்தியாயம் - 24

எண்ணெய்ப் பெரு நிறுவனங்களுக்கு எதிரான ஈக்குவடாரின் போர்

எனது வீட்டிற்கு வெளியில் இன்னொரு வீடாகவும் என்னைத் தன்னுள் ஈர்த்துக்கொண்ட, முதல் பயணத்திற்குரிய நாடாகவும் இருந்த பனாமாவிற்கு அடிக்கடி சென்றுவர வாய்ப்பளித்தது பனாமா மற்றும் கொலம்பியாவில் எனக்கு இருந்த வேலை. ஈக்குவடார் சர்வாதிகாரியாலும், அதிகாரத்தைத் தம் பிடியில் வைத்திருந்த வலதுசாரி கும்பலின் அமெரிக்கச் சார்புச் சுரண்டலாலும் கடுமையான பாதிப்பிற்குள்ளாகி இருந்தது. நிகரற்ற வாழைப்பழக் குடியரசான ஈக்குவடாரில் நிறுவனவியம் பேராதிக்கத்தை நிலைநாட்டியிருந்தது.

ஈக்குவடாரின் அமேசான் பகுதியில் பெருமளவு எண்ணெய் உறிஞ்சுதல் பின் 1960 களில் துவங்கிவிட்டது. எண்ணெய்ச் செல்வத்தைக் கணக்கில் கொண்டு அதிகாரத்தில் இருந்த சில குடும்பங்கள் அந்நாட்டை உலகவங்கிகளின் கடன் வலைக்குள் தள்ளின. நாடெங்கிலும் தேசிய நெடுஞ்சாலைகள் விரவின. அணைகளும், மின்திட்டங்களும் கட்டி எழுப்பப்பட்டன. பொறியியல் நிறுவனங்கள் மீண்டுமொருமுறை தங்கள் பொக்கிஷங்களை நிரப்பிக்கொண்டன.

நிறுவனவியத்தின் பெருங்கொள்ளைக்குத் துணைபோதலே அரசியல் என்றிருந்த நாட்டில், ஆண்டிஸ் மலைத்தொடருக்கு நடுவே ஒரு புதிய விடிவெள்ளி முளைத்தது. அந்த விதிவிலக்கான மாமனிதர் பல்கலைப் பேராசிரியரும், வழக்குரைஞருமான ஜெய்மே ரோடோல்ஸ். பல சந்தர்ப்பங்களில் நான் அவரைச் சந்தித்தபோது தனது நாற்பதாவது வயதில் இருந்த அவர் அழகும் கவர்ச்சியும் நிறைந்தவர். அவரது ஈர்ப்பிற்கு ஆளான நான் அழைத்தால் போதும் உடனே குய்டோவிற்குப் பறந்து வந்து ஆலோசனை வழங்கத் தயாராக இருப்பதாகக் கூறியிருந்தேன்.

கூறியது விளையாட்டுப் போலத்தான் என்றாலும் ஒழிந்த பொழுதுகளை அவருக்காகச் செலவளிக்கச் சித்தமாகவே இருந்தேன். அவரைப் பிடித்ததைப்போலவே அவரது நாட்டையும் எனக்கு மிகவும் பிடித்திருந்ததால் அடிக்கடி வருகை தந்து அன்புத் தொல்லை தருவேன் என்று கூறினேன். அவரும் சிரித்தபடி என் விருப்பத்திற்கு இணங்க வாய்க்கும் போதெல்லாம் எண்ணெய் விலைத் தொடர்பாக தன்னைச் சந்திப்பதற்கான வாய்ப்பை வழங்கினார்.

தன் நாட்டின் அடித்தட்டு மக்களுக்கு செல்வாதாரத்தின் மீது உரிமை இருப்பதையும், அதை உறுதிப்படுத்தவேண்டிய பொறுப்பு அரசியல்வாதிக்கு உள்ளது என்ற தன்னுடைய நம்பிக்கையை மக்கள் மத்தியில் நிலைநாட்டினார். 1978ல் ஜனாதிபதித் தேர்தல் நடந்த போது தன் நாட்டு மக்களின் கவனத்தை ஈர்த்தத் தலைவராக உயர்ந்தது மட்டுமன்றி எந்தநாடுகளில் எல்லாம் அந்நியர்களால் அந்நாட்டின் வளம் சுரண்டப்படுகிறதோ அங்கெல்லாம் மக்களின் நம்பிக்கைக்கு உரிய தலைவராக மாறினார் ஜெய்மே ரோல்டோஸ். தம் நாட்டிற்கு வெளியில் உள்ள சக்திகளின் பிடியில் சிக்கித் தவித்த மக்களுக்கெல்லாம் நம்பிக்கையூட்டும் தலைவராக இருந்தார் ரோல்டோஸ். எதிரியின் வல்லமை கண்டு அஞ்சாத அபூர்வமான மனிதர் அவர். எண்ணெய் நிறுவனங்களையும், அவற்றை ஆதரிக்கும் அமைப்புகளையும் கடுமையாகச் சாடினார்.

உதாரணமாக அமெரிக்க கிருத்துவ மிஷினரிமார்கள் நடத்தி வந்த சம்மர் இன்டிடியூட் ஆப் லிங்குஸ்டிக்ஸ் என்ற நிறுவனம் எண்ணெய் நிறுவனங்களுடன் ரகசிய உறவு கொண்டுள்ளது என்று குற்றம் சுமத்தினார். நான் அமைதிப்படையில் பணியாற்றிய காலத்தில் இவ்வமைப்பைப் பற்றி தெரிந்து வைத்திருந்தேன். ஈக்குவடாரிலும் மற்ற பிறநாடுகளிலும் பழங்குடி மக்களின் மொழிகளை கற்று ஆய்வு செய்வது என்ற நோக்கத்துடன் இவ்வமைப்பு ஊடுருவியது.

ஈக்குவடாரில் எண்ணெய் வளம் இருப்பதைக் கண்டுபிடித்த காலகட்டத்தில் மிஷினரிமார்கள் ஐந்துபேர் ஹுவாரனி பழங்குடிகளின் ஈட்டியால் குத்தப்பட்டு இறந்து கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் ஹுவாரனியினர் மிஷினரி அங்கிருந்து வெளியேற வேண்டும் என்ற எச்சரிக்கவே இந்தக் கொலை என்று செய்தி அனுப்பினர். ஆனால் அவர்களது எச்சரிக்கை கண்டுகொள்ளப்படாதது மட்டுமல்ல பழங்குடிகளுக்கு எதிரான விளைவுகளையும் உருவாக்கியது. கொல்லப்பட்டவர்களின்

சகோதரி துறவி ராச்சல் அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தங்களது இன்டிடியூட் ஆப் லிங்குவிஸ்டிக்ஸிற்கு நிதி உதவியும், ஆதரவும் வழங்குமாறு தொலைக்காட்சி மூலமாக மக்களுக்கும், எண்ணெய் நிறுவனங்களுக்கும் வேண்டுகோள் விடுத்தார். அவ்வாறு அளிக்கப்படும் உதவி ஹுவாரனி பழங்குடி மக்களுக்குக் கல்வி வழங்கவும், அவர்களை நாகரீகம் மிக்கவர்களாக மாற்றவும் பயன்படும் என்றும் கூறிக்கொண்டார்.

டோரிஜோஸ் உருவாக்கிய பாதையில் ரோல்டோஸ் நடைபயின்றது என்னை மிகவும் ஈர்த்தது. இருவரும் உலகின் பிரமாண்டமான சக்திக்கு எதிராக நின்றனர். டோரிஜோஸ் தனது கால்வாயை மீட்பதற்கு நின்றார் என்றால் ரோல்டோஸ் உலகின் செல்வாக்கு மிக்க எண்ணெய் நிறுவனங்கள் தன் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற கருத்தில் உறுதியாக நின்றார். டோரிஜோஸைப் போலவே ரோல்டோஸும் ஒரு கம்யூனிஸ்ட் அல்ல. ஆனால் தங்கள் நாட்டின் விதியை தாங்களே தீர்மானித்துக் கொள்வது என்ற கொள்கையை உருவாக்கிக்கொண்டவர்கள் ஆவர். அரசியல் பண்டிதர்கள் டோரிஜோஸுக்கு ஆருடம் கூறியது போலவே ரோல்டோஸுக்கும் சொன்னார்கள். இவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் குவாதிமாலாவில் அர்பேன்ஸுக்கும், சிலியில் அல்லெண்டேக்கும் நேர்ந்த கதிதான் ஏற்படும் என்றார்கள்.

இந்த இருவரும் லத்தீன்அமெரிக்க அரசியலில் புதிய இயக்கத்திற்கு அடித்தளம் அமைப்பதாகத் தோன்றியது எனக்கு. இந்த அடித்தளம் புவிக்கோளத்தில் உள்ள பாதிக்கப்பட்ட நாடுகள் அனைத்திலும் பெரிய மாற்றத்தைக் கொண்டுவரும். இவர்கள் இருவரும் காஸ்ரோக்களோ, கடாபிகளோ அல்லர். இவர்கள் இருவரும் சோவியத்துடனோ, சீனாவினுடனோ அல்லது அல்லெண்டேயைப் போல உலக சோசலிஸ இயக்கங்களுடனோ உறவாடியவர்கள் அல்லர். தமது தத்துவத்தைவிட நடைமுறை சார்ந்து நிற்பவர்கள். தம்மக்களிடம் பலமான செல்வாக்குப் பெற்ற தலைவர்கள். தமது தேசியத்தின் பால் ஆழ்ந்த பற்றுடையவர்கள். ஆனால் அமெரிக்க எதிர்ப்பாளர்கள் அல்ல. நிறுவனவியம் தனது தந்திரங்களைக் காட்டி பன்னாட்டுப் பெரு நிறுவனங்கள், சர்வதேச வங்கிகள், திரைமறைவு அரசாங்கம் ஆகிய மூன்று தூண்களை நிறுவ முயன்றால் அவற்றை மக்கள் சக்தியால் தூக்கி எறியமுடியும் என்பதை நிரூபித்துக் காட்டியவர்கள் டோரிஜோஸும், ரோல்டோஸும்.

ரோல்டோஸின் முக்கியமான பங்களிப்பு என்று எடுத்துக் கொண்டால் அது ஹைடிரோகார்பன் பாலிசி என்று அறியப்பட்ட நீர்ம எரிபொருளான பெட்ரோல் கொள்கைதான். ஈக்குவடாரின் முக்கியமான கனிம வளம் பெட்ரோல்தான் அந்த வருமானத்தில் பெரும் சதவிதத்தை பெரும்பகுதி மக்களுக்குப் பயன்படும் விதமாகச் செலவிடவேண்டும் என்பது தான் அவருடைய கொள்கையின் அடிப்படை. அடித்தட்டு மக்களுக்குச் சேவை புரிவதற்குத்தான் அதிகாரம் என்ற கருத்தில் உறுதியான நம்பிக்கை உடையவர். தான் விரும்பும் சமூக சீர்திருத்தத்தை முன்னெடுக்க ஹைட்ரோ கார்பன் கொள்கை பெரிதும் உதவும் என்பதில் நம்பிக்கைக் கொண்டிருந்தார். தனது கொள்கையில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தவர் என்றாலும் அதை நிறைவேற்ற தடாலடியானப் போக்கைக் கடைப்பிடித்தவர் அல்ல. மற்ற நாடுகளைப்போலவே சில பணக்காரக் குடும்பங்களின் ஒத்துழைப்பு இல்லாமல்தான் ஈக்குவடாரில் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட முடியாது என்பதையும், அவர்களின் ஆதரவின்றி தனது கொள்கைகளை நிறைவேற்ற முடியாது என்பதையும் தெரிந்தே வைத்திருந்தார்.

இந்தச் சிக்கலான தருணத்தில் வெள்ளை மாளிகையில் கார்டர் அதிகாரத்தில் இருந்தது எனக்குத் தனிப்பட்ட முறையில் ஆறுதலாக இருந்தது. ஈக்குவடார் அரசியலில் தலையிடுமாறு டெக்ஸாகோ போன்ற எண்ணெய் நிறுவனங்களில் இருந்து நெருக்குதல்கள் வந்தாலும், வாஷிங்டன் மேடையில் இருந்து விலகி இருக்கவே விரும்பியது. குடியரசு, ஜனநாயகக் கட்சிகளும் எண்ணெய் நிறுவனங்களுக்கு ஆதரவாக இருக்கவில்லை என்பது எனக்குத் தெரியும்.

நீண்டகால சர்வதிகார ஆட்சிக்குப் பின்னர் ரோல்டோஸை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்து கியாட்டோவிற்கு அனுப்ப மற்றெதைக் காட்டிலும் அவர் முன்வைத்த ஹைட்ரோகார்பன் பாலிசி ஒன்றே ஈக்குவடார் மக்களுக்கு போதுமானதாக இருந்தது. அக்கொள்கையை வகுத்து அறிமுகம் செய்யும் 1979 ஆகஸ்ட் 10 விழாவில் அவர் பேசியது.

''இந்த தேசத்தின் ஆற்றல் வளத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டிய காலகட்டம் வந்து விட்டது. நாட்டின் பொருளாதார ஏற்றுமதியை அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தாக வேண்டும். தேசிய நலன் ஒன்றை மட்டுமே மனதிற்கொண்டு எந்த முடிவையும் எடுக்க வேண்டும். எதன் பொருட்டும் தேசிய இறையாண்மையை விட்டுத்தர முடியாது.''

ரோல்டோஸ் அதிகாரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் முதல்வேலையாக முக்கிய ஆட்டக்காரனாக விளங்கும் டெக்ஸாகோ எண்ணெய் நிறுவன விசயத்தில் கவனம் செலுத்த வேண்டி இருந்தது. அதனுடனான அவருடைய உறவு மிகவும் கடினமானதாக இருந்தது. அந்நிறுவனம் புதிய ஜனாதிபதியுடனும், அவரது புதிய கொள்கையிலும் பங்கேற்க விரும்பவில்லை. அக்கொள்கைக்கு உடன்பட்டால் அதுவே மற்ற நாடுகளுக்கும் முன்மாதிரியாகிவிடும் என்று உஷாரானது.

அந்நிறுவனத்தின் அணுகுமுறை குறித்து ரோல்டோஸின் சிறப்பு ஆலோசகர் பேசியது

''நமது பங்காளி (டெக்ஸாகோ) அரசுடன் உடன்படாது என்றால், எண்ணெய் வளக் கண்டுபிடிப்பில் முதலீடு செய்ய விருப்பம் இல்லையென்றால், குறிப்பிட்ட பகுதிகளில் எண்ணெய் எடுப்பதில் விருப்பம் இல்லை என்றால் அந்தப் பகுதிகளில் மற்ற பங்காளிகளுக்கு எண்ணெய் எடுக்கும் உரிமை வழங்கப்படும்.''

அந்நிய நிறுவனங்கள் என்றாலும் நமது உறவு நியாயமாகவே இருக்க வேண்டுமென விரும்புகிறோம். நாம் விட்டுத் தரத் தயாராக இல்லை. எந்த நெருக்கடியையும் சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும். ஆனால் அதேநேரம் அந்நிய நிறுவனங்களுடனான பேச்சுவார்த்தையில் அச்சத்தையோ, தாழ்வெண்ணத்தையோ வெளிப்படுத்தக் கூடாது.

1980 புத்தாண்டுப் பிறப்பன்று ஒரு தீர்மானம் மேற்கொண்டேன். அது புதிய தசாப்தத்தின் துவக்கமாக இருந்தது. இன்னும் இருபத்தியெட்டு நாட்களில் எனக்கு முப்பத்தைந்து வயது ஆக இருக்கிறது. நான் மேற்கொள்ள இருக்கும் பெரிய மாற்றத்தின் மூலம் அடுத்த ஆண்டில் பல பிரச்சனைகளுக்குத் தீர்வு காண வேண்டும். எதிர்காலத்தில் எனது நாயகர்களாகிய ஜெய்மே ரோல்டோஸையும், ஓமர் டோரிஜாஸையும் முன்மாதிரியாகக் கொண்டு என் வாழ்வை வடிவமைத்துக்கொள்ள வேண்டும்.

அதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் அதிர்ச்சிகரமான நிகழ்வொன்று நடந்தது. மெய்னை மிகவும் லாபகரமான நிறுவனமாக உயர்த்தி வெற்றிகரமான வரலாறு படைத்த புரூனோவிற்கு எச்சரிக்கையைக் கூடத் தராமல் சட்டென்று வேலையை விட்டுத் தூக்கி எறிந்தார் மெக்ஹால்.

அத்தியாயம் - 25

வேண்டாம் அடியாள் வேலை

புருனோவின் வேலை நீக்கம் மெய்னுக்கு ஒரு பூகம்பம். கம்பெனியே கிடுகிடுத்து விட்டது. புருனோவின் எதிரிகள் சிலருக்கு இதில் மகிழ்ச்சி இருந்தாலும் பலருக்கு கிலி பிடித்துக் கொண்டது. இந்நடவடிக்கைக்குக் காரணம் மெக்ஹாலுக்கு உள்ள பொறாமைத்தான் என்று பெரும்பாலான ஊழியர்கள் கருதினர். தன்னைவிட பதினைந்து வயது இளையவனான புருனோ நிறுவனத்தின் லாபத்தை புதிய எல்லைக்கு இட்டுச்செல்வதை மெக் ஹாலால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அதனால்தான் இப்படிச் செய்துவிட்டதாக ஊழியர்கள் மதியஉணவின் போதும், காப்பி குடிக்கும்போதும் கூடிக்கூடி பேசிக்கொண்டார்கள்.

புருனோ நினைத்தால் நம்மை மாடு மேய்க்க அனுப்பி விடுவான் என்ற பயம் கிழவனுக்கு வந்துவிட்டது. அந்த எல்லைக்குப் புருனோ போவதை எப்படி மெக்ஹாலால் சகித்துக் கொள்ள முடியும் என்று ஒரு ஊழியர் கூறினார்.

அவர் சொன்னதுபோலவே மெக், பால் பிரிட்டியை புதிய தலைவராக நியமித்தார். பால் நீண்டகாலமாக துணைத்தலைவராக இருந்தவன். என் அபிப்பிராயத்தில் மந்த புத்திக்காரன். ஆனால் மெக்கிற்கு மிக நன்றாக ஜால்ரா அடிக்கும் பேர்வழி. அவனது திறமை மெக்கை சவாலுக்கு இழுக்கக்கூடியதல்ல என்று என்னைப் போலவே பலரும் கருதினர்.

புருனோவின் வெளியேற்றம் எனக்குப் பெரும் வீழ்ச்சியாகும். எனக்கு அவர்தான் வழிகாட்டி. சர்வதேச வேலைகளில் முக்கியமான சக்தி. மறுபுறம் பால் உள்ளூர் வேலைகளில் கவனம் செலுத்தக்கூடிய ஆள். வெளிநாட்டு வேலைகளில் அவனுக்குத் தெரிந்ததெல்லாம் சொற்பமே. சரி இனி கம்பெனி என்ன செய்யும். இதுதான் என் கேள்வி. என்னைத் தன் வீட்டிற்கு அழைத்த புருனோ தன்னளவில் தெளிவாகத்தான் இருந்தார்.

ஹாலைப் பற்றி என்னிடம் பேசினார். நல்லது ஜான். என்னை வெளியேற்றுவதற்கு மெக்கிடம் பொருத்தமான காரணம் கிடையாது. அதுதான் சாக்கு என்று கணிசமாக தொகை கேட்டேன். பெற்றுக்கொண்டேன். நிர்வாகக் குழுவில் அவனுக்கு ஆதரவாளர்கள் அதிகம். அதனால் அவனை எதிர்த்து நான் எதுவும் செய்ய முடியாது. பன்னாட்டு வங்கிகளுக்கு அவர் அழைக்கப்படுகிறார் என்பது அவரது பேச்சில் இருந்து தெரிந்தது.

அடுத்து நான் என்ன செய்யலாம் என்று கேட்டேன்.

மிகக் கவனமாக இரு. எதுவும் நடக்கலாம் என்றார் புருனோ. அங்கே என்ன நடக்கிறது என்பது மெக்கிற்குத் தெரியாது. அதை எடுத்துச்சொல்வதற்கும் அங்கே ஒருவனும் இல்லை. எனக்கு நேர்ந்த கதியைப் பார்த்து இருந்த கொஞ்சநஞ்ச தைரியத்தையும் இழந்துவிட்டிருப்பார்கள்.

புருனோ வேலைநீக்க அதிர்வில் இருந்து மீளாத நிலையில் 1980 மார்ச் இறுதியில் நான் வெர்ஜின் தீவுகளுக்குப் பயணம் மேற்கொண்டேன். மெய்ன் ஊழியையான மேரி என்ற இளம்பெண் என்னுடன் வந்திருந்தாள். பயணத்திற்கு அந்தத் தீவை நான் தேர்ந்தெடுத்தபோது எனக்குள் எந்த யோசனையும் இல்லை. ஆனால் அப்பகுதியின் வரலாறு என்னுடைய நியூயார்க் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு உதவியாக இருந்தது. இங்கிலீஷ் வெர்ஜின் தீவுகளிலிருந்து அமெரிக்காவைத் துண்டிக்கும் சர் பிரான்சிஸ் ட்ராக் கால்வாயில் செயிண்ட் ஜான் தீவைச் சுற்றி வந்துகொண்டிருந்த ஒரு மதியவேளையில் ஒரு கீற்று எனக்குள் பளீரிட்டது.

இந்தக் கால்வாய் வழியாகச் சென்ற ஸ்பானியத் தங்கக் கப்பல்களில் ஆங்கிலேயர்கள் அடித்த கொள்ளைச் சாகசத்தின் நினைவாக அப்பெயர் சூட்டப்பட்டிருந்தது. அடித்தது கொள்ளை, சூறை. ஆனால் அதற்குக் கிடைத்தது பாராட்டு. ஹென்றி மார்க்கனுக்கும், சர் பிரான்சிஸ் டிரேக்கிற்கும் பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. கொள்ளைகளைக் கௌரவிக்கும் பாரம்பரியத்தில் வந்த நான் பனாமா, இந்தோனேசியா, கொலம்பியா, ஈக்குவடார் போன்ற நாடுகளைக் கொள்ளையடிக்க ஏன் மனசாட்சியைத் துணைக்கு அழைக்க வேண்டும். அமெரிக்காவின் வரலாற்று நாயகர்களான ஈதன் ஆலென், ஜெபர்சன், ஜார்ஜ் வாஷிங்டன், டேனியல பூன், டேவிக்ரோகெட், லூயிஸ் கிளார்க் போன்றவர்களில் சிலரைத் தவிர மற்றனைவரும் செவ்வியந்தியர்களையும், அடிமைகளையும் கொன்று குவித்தவர்கள், சுரண்டிக் கொழுத்தவர்கள். நான் குற்றவுணர்விற்கு ஆட்படும் போதெல்லாம் அவர்களையும் அவர்களது

சாகசங்களையும் நினைத்து மனதைத் தேற்றிகொள்வது வழக்கம். ஆனால் இந்தக் கலக மனப்பான்மை எவ்வளவு முட்டாள்தனமானது என்ற ஞானோதயம் இப்போது டிரேக் கால்வாயில் பயணிக்கும்போது தோன்றியது.

பல ஆண்டுகளாக சௌகர்யமாகப் புறக்கணித்து வந்துள்ள பல விசயங்கள் ஒவ்வொன்றையும் நினைத்துப் பார்த்தேன். ஈதன் ஆலென் நாற்றமடிக்கும் பிரிட்டிஷ் கப்பல் சிறை நெரிசலில் பல மாதங்களாக அடைபட்டுக்கிடந்த பெரும்பாலான நாட்கள் அவர் கால்களில் முப்பது பவுண்ட் இரும்புச்சங்கிலி பிணைக்கப் பட்டிருந்தது. மோண்ட்ரியேல் களத்தில் 1755ல் பிரிட்டிஷ் அரசிடம் சிறைப்பட்ட அவரைப் போலத்தானே ஜெய்மி ரோல்ட்ஸும், ஒமர் டோரிஜோஸும் தம் மக்களின் விடுதலைக்காகப் போராடி வருகின்றனர். இதே லட்சியத்திற்காகத்தானே தாமஸ் ஜெப்பர்ஸனும், ஜார்ஜ் வாஷிங்டன்னும் மற்றும் பல தேசப்பிதாக்களும் தம் இன்னுயிரைப் பணையம் வைத்தார்கள், அவர்கள் காலத்திலேயே சுதந்திரத்தை அளிப்பதற்கான எந்த உத்திரவாதமும் கிடையாது. போரில் பிடிபட்டால் துரோகிகளைப் போல தூக்கிலிடப்படுவோம் என்பதை அறிந்தே களத்தில் இறங்கினார்கள். தங்களைக் கடும் தியாக ஆகுதிக்கு அர்ப்பணித்துக் கொண்டார்களே டேனியல் பூன், டேவி க்ரோக்கெட், லேவிஸ், கிளர்க் போன்றோர்.

ட்ரேக்கும், மார்க்கனும் இந்த வரிசையைச் சேர்ந்தவர்கள் தானா? வரலாற்றில் இந்த இடம் எனக்கு எப்போதுமே தெளிவில்லாமல்தான் இருக்கிறது. ஆனால் அமெரிக்கப் புரோட்டஸ்டண்ட் ஸ்பெயின் கத்தோலிக்கின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருந்தது என்பது மட்டும் நன்றாக நினைவில் இருக்கிறது. விருப்பம் என்பதற்கும் மேலாக இங்கிலாந்துத் தூய்மைவாதத்தைப் பாதுகாக்கவும், ஸ்பெய்னின் இதயத்தைத் தாக்கவுமே சுயார்வத்துடன் கடற்கொள்ளையர்களாக அவதாரம் எடுக்கத்திருக்க வேண்டும் என்பதையும் நான் ஒருவகையில் ஒப்புக்கொள்கிறேன்.

படகு கால்வாய்க்குள் போகப்போக என் எண்ணச் சுழற்சி தீவிரப்பட்டது. கடலில் இருந்து மேலெழும் மலைகளை நெருங்கினோம். வடக்கே மகா தட்ச் தீவு, தெற்கே செயிண்ட் ஜான் தீவு. என் நினைவுகளில் இருந்து மீளமுடியவில்லை. ஜிம்மி பப்பெட் பாடலின் இசையை அதிகரித்துவிட்டு மேரி என் கையில் ஒரு பியரைக் கொடுத்தாள். பொதுவாக அழகு சூழ்ந்த கடற்பயணங்கள் மனம் விடுதலையாகிப் பறக்கும் உணர்வை எனக்கு அளிக்கும். ஆனால் ஏனோ ஆத்திரம் பொங்கியது. பீரை ஒரே மூச்சில் குடித்து முடித்தேன்.

நினைவுகளின் அழுத்தத்தில் இருந்து மீளவே முடியவில்லை. என் சொந்தப் பேராசைக்கு வரலாற்றைப் பயன்படுத்திக்கொண்ட என்மீதே எனக்கு ஆத்திர ஆத்திரமாக வந்தது. என் பெற்றோர் மீது, குன்று மீதான டில்டன் பள்ளியின் மீது, என் மீது திணிக்கப்பட்ட வரலாற்றின் மீது, அனைத்தின் மீதும் அடங்கமாட்டாத ஆத்திரம் பொங்கியது. இன்னொரு பாட்டில் பீரை உறிஞ்சித் தீர்த்தேன். புருனோவிற்கு இழைத்ததற்காக மெக்ஹால் மீது எனக்குக் கொலைவெறி ஏறியது.

பல்வண்ண வானவில் கொடியுடன் வந்த ஒரு படகு எங்களைக் கடந்து சென்றது. இருபுறமும் பாய் புடைத்த அப்படகில் இருந்த அரை டஜன் யுவர்களும், யுவதிகளும் எங்களை நோக்கி கையசைத்துக் கூவினர். அடர்நிறத்தில் உடையணிந்த ஹிப்பிகளில் ஒரு ஜோடி முழு நிர்வாணமாக முன் படகில் தொற்றிக் கொண்டிருந்தது. அவர்கள் அனேகமாக படகில் கொம்யூன் வாழ்க்கை நடத்துபவர்களாக இருக்கவேண்டும். நாடோடிகளான அவர்களுக்கு எந்த மனத்தடையும் இல்லை. நவீன கடற்கொள்ளையர்கள்.

எனக்கும் கூட அவர்களுக்கு கையசைக்கவே ஆசை. ஆனால் பொறாமையில் கையெழவில்லை.

படகுத் தளத்தில் நின்றபடி அவர்கள் தூரத்தில் புள்ளியாகி மறையும் வரை மேரி அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்து விட்டு, இவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டாள்.

என்னால் வெறுக்கப்படவேண்டியது என் பெற்றோர்களோ, டில்டன் பள்ளியோ, மெக்ஹாலோ அல்ல. நான் தேர்ந்தெடுத்த வாழ்க்கைமுறைதான் என்பது புரிந்தது. நானே அனைத்திற்கும் பொறுப்பாளி.

நான் புரிந்துகொள்ளவியலாமல் மேரி ஏதோ கூச்சலிட்டாள். பின் என்னருகே வந்து இன்றிரவு படகு நங்கூரமிட வேண்டிய லெனிஸ்டர் விரிகுடா வந்துவிட்டது என்று கூறினாள்.

தங்கம் சுமந்த கப்பல்கள் செயிண்ட் ஜான் தீவிற்குச் சொந்தமான இந்த இடத்தைக் கடக்கும்போதுதான் அவற்றைக் கொள்ளையடிப்பதற்காக கொள்ளையர்கள் காத்திருப்பார்கள். தரைக்குப் பக்கத்தில் படகை அணைந்து விட்டு சுக்கானை மேரியிடம் கொடுத்துவிட்டு மேல் தளத்திற்குச் சென்றேன். தர்பூசணிக் கிற்றுப்போன்ற கப்பலை மேரி லாவகமாக துறையில் கொண்டு வந்து நிறுத்தினாள். நான் பாயை மேலேற்றிக் கட்டிவிட்டு நங்கூரத்தைக் கடலுக்குள் இறக்கினேன். பளிங்கு போன்ற நீரில் கலகலவென்று இறங்க கப்பலின் அலைவு நின்றது.

கப்பலை நிலைக்குக் கொண்டுவந்ததும், மேரி சற்று நீந்தி விட்டு ஒய்வெடுத்தாள். நான் அவளிடம் சொல்லிவிட்டு, சிறிய படகை எடுத்துக்கொண்டு சிதைக்கப்பட்ட பழைய கரும்பு வயல் கடற்கரைப் பகுதிக்குச் சென்று உலாவினேன். அங்கே அமர்ந்து மனக்கொந்தளிப்பை அடக்கி வெற்று மனதுடன் இருக்க முயன்றேன். ஆனால் அம்முயற்சி தோல்வியுற்றது.

அந்தி சாயும் வேளை பழங்கால கரும்பு வயல்களின் சிதைவுற்ற வரப்பின்மீது ஏறி நின்று நங்கூரமிட்ட எங்கள் கப்பலை நோட்டமிட்டேன். கரீபியன் கடலுக்கள் சரியும் சூரியனைப் பார்த்தபோது அது இந்த வயல்வெளிகளில் நூற்றுக்கணக்கான ஆப்பிரிக்க அடிமைகள் இங்கே மாளிகைகள் எழுப்பவும், கரும்புகளை வெட்டவும், அவற்றைப் பிழிந்து சர்க்கரைப் பாகு எடுத்து ரம் தயாரிக்கவும் ரத்தம் சிந்துவதைப்போன்ற படிமம் என்னுள் தோன்றியது. இப்பிராந்தியமெங்கும் அத்தனை வரலாற்றுக் கொடூரங்களையும் விழுங்கிவிட்டு அமைதி முகமூடி போர்த்தியிருக்கிறது.

தீவின் விளிம்பு மலையடிவாரத்தில் சூரியன் மறைந்தது. வானம் செம்மை நிறத்தில் ஜொலித்தது. கடலில் இருட்டுப் படர்ந்தது. ஏழை நாடுகளைக் கடனில் தள்ளுவதற்காக மெய்னுக்குத் திட்டம் வகுத்துத்தந்த அடியாளாகிய நானும்கூட ஒரு அடிமைதான் என்ற எண்ணம் என் முகத்தில் அறைந்தாற்போல் தோன்றியது. என்னுடைய திட்டங்கள் பயன்பட்டது எண்ணெய் உறிஞ்சுவதற்காக மட்டுமல்ல, அமெரிக்காவை ஏகாதிபத்தியமாக மாற்றுவதற்காக மட்டுமல்ல. இங்கே செத்துமடிந்தவர்களின் வாரிசுகளை ஒட்டச் சுரண்டுவதற்காகவும்தான்.

கடந்த பத்தாண்டுகளாக ஆப்பிரிக்கக் காடுகளுக்குச் சென்று ஆண்களையும், பெண்களையும் அடிமைகளாகப் பிடித்து கப்பல்களில் ஏற்றுவதற்காகத்தான் நான் காத்துக் கிடந்திருக்கிறேன். ஆனால் என்னுடைய ஆள்பிடிப்பு முறை பழையதில் இருந்து மாறுபட்டது. செத்து நாறும் பிணங்களை நேரடியாகப் பார்க்க நேராமல் இருக்கலாம். அவர்களின் வேதனை ஓலங்கள் என் காதுகளில் அறையாதிருக்கலாம். ஆனால் பழைய வஞ்சகத்திற்கும், குரூரத்திற்கும் சற்றும் குறைந்ததல்ல நான் செய்யும் வேலை. சொல்லப்போனால் பன்மடங்கு அதிகம்.

கடல் அலைகளுக்கு அப்பால் தூரத்தில் நிற்கும் எங்கள் கப்பலை மங்கிய வெளிச்சத்தில் உற்று நோக்கினேன். மேரி மர்கரிட்டாவை அருந்திவிட்டு ஒரு கோப்பை எனக்களிப்பதற்காக காத்திருக்கலாம். நேற்றிரவு இந்நேரத்தை நினைத்துப் பார்க்கிறேன்.

பிறரை அடியாட்களாக மாற்றுவதே தொழிலாகக் கொண்ட என்மீது மேரி எத்தனை பூரணமான நம்பிக்கை வைத்திருக்கிறாள். நான் செய்வது எத்தனை பெரிய நம்பிக்கை மோசடி. கிளாடின் கூட அனைத்து உண்மைகளையும் வெளிப்படையாகக் கூறிவிட்டாள். ஆனால் நான் சம்பள உயர்வுகள், விருந்துகள், பரிசுகள் நயமான பேச்சுக்கள் ஆகியவற்றின் மூலம் எனக்குக் கீழ் உழைப்பவர்களை அடிமைகளாக மாற்றிவைத்திருக்கிறேன்.

கடலின் மீதிருந்தும், வானத்தின் மீதிருந்தும் என் பார்வையைத் திருப்பினேன். அவர்களது ஆப்பிரிக்க வீடுகளில் இருந்து கதறக் கதற இழுத்துவரப்பட்ட அடிமைகளைக் கொண்டு எழுப்பிய சுவர்களின் இடிபாடுகளைப் பார்த்தேன். அனைத்து நினைவுகளில் இருந்தும் என்னை முற்றாக விலக்க முயன்று கண்களை மூடிக்கொண்டேன். சற்றுநேரம் கழித்துப் பார்த்தபோது தூரத்தில் பந்து மட்டையைப்போல இருமடங்கு நீளமான ஒரு கழி இருப்பது தெரிந்தது. அம்மட்டையை எடுத்து கற்சுவர் மீது கண் மூடித்தனமாக விளாசினேன். வேர்த்துக் களைப்படையும் வரை தொடர்ந்து விளாசிக்கொண்டே இருந்தேன். பின்னர் பசும் புல்தரையில் படுத்து தலைக்கு மேலே அலையும் மேகங்களைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

எழுந்து புதர்களுக்கு இடையிலும் வழி கண்டுபிடித்து கரைக்கு வந்துவிட்டேன். நீல நீரில் நங்கூரமிட்ட கப்பலை அங்கிருந்து பார்த்தேன். என்ன செய்யவேண்டும் என்பது புரிந்தது. மீண்டும் மெய்ன் வேலைக்குத் திரும்பினால் நான் நானாக இருக்க முடியாது. மெய்ன் அளிக்கும் சம்பள உயர்வுகள், பதவி உயர்வுகள், பங்குகள், ஈவுகள், சொகுசுகள் இவற்றின் மீளமுடியாத சுழலுக்குள் சிக்கிக்கொள்வேன். பல வருடங்கள் அதற்குள் மாட்டிக்கொண்ட பின்பு அதிலிருந்து வெளிவர முடியாது. அடிமையாகவே கிடக்க வேண்டியதுதான். இப்போது எழும் கேள்வி நான் கற்சுவர்களுக்குள் முட்டி மோதிக்கொண்டிருப்பதா? அல்லது அங்கிருந்து வெளியேறி விடுவதா?

இரண்டு நாட்கள் கழித்து பாஸ்டன் திரும்பினேன். 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி என் வேலைக்கு விலகல் கடிதம் அளிப்பதற்காக பால் பிரைட்டியின் அலுவலகத்திற்குள் சென்றேன்.

பாகம் நான்கு

1981 முதல் தற்போது வரை

அத்தியாயம் - 26

ஈக்குவடாரின் ஜனாதிபதி கொல்லப்பட்டார்

மெய்னை விட்டு வெளியேறுவது அத்தனை எளிதானதல்ல. நான் அளித்த ராஜினாமாக் கடிதத்தை ஏதோ ஏப்ரல்பூல் வேடிக்கை என்று பால் பிரைட்டி ஏற்க மறுத்துவிட்டார்.

இது விளையாட்டல்ல நிஜம்தான் என்று உறுதி கூறினேன். நான் இங்கிருந்து வெளியேறினால் அடியாள் வேலையைப் பற்றி எந்த ரகசியத்தையும் வெளியில் சொல்லமாட்டேன் என்று வேலைக்குச் சேரும்போது கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைவூட்டினார். மெய்ன் எனக்குச் செய்தவை அனைத்தும் பெரும் உபகாரங்களே என்றாலும் இப்போது வெளியேறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது என்றும் கூறினேன். மெய்ன் எனக்கு அறிமுகம் செய்வித்த உலகம் சுற்றலையும், மனிதர்களையும் பற்றி அரசியல் கலவாமல் எழுத விருப்பம் கொண்டிருப்பதாகக் கூறினேன். தொடர்ந்து நாடுகள் தோறும் பயணித்து நேஷனல் ஜியாகரபி போன்ற இதழ்களில் எழுதும் சுதந்திரப் பத்திரிகையாளனாகச் செயல்படவிருப்பதாகக் கூறினேன். மீண்டும் ஒருமுறை மெய்னுக்கு எனது விசுவாசத்தை உறுதிப்படுத்தி வாய்க்கும்போதெல்லாம் அதன் புகழ்பாடத் தவறமாட்டேன் என்று கூறினேன். இறுதியில் எனது ராஜினாமா ஏற்கப்பட்டது.

ஊழியர்கள் அனைவரும் எனது பதவி, பெறும் சம்பளம் ஆகியவற்றை நினைவூட்டி எனது ராஜினாமாவைத் திரும்பப் பெறவைக்க முயற்சித்தார்கள். நான் செய்வது பைத்தியக்காரத்தனம் என்று குற்றம்சாட்டினார்கள். மெய்ன் செய்வதே பைத்தியக்காரத்தனமானதுதானே. தம்மைவிட்டு விலகிச்சொல்பவனை பைத்தியம் என்று சொல்லவில்லையானால் தாம் பைத்தியம் ஆகிவிடுவோமோ என்ற பயம். தம் மனநிலை பற்றி ஆராய்வதைவிட எனக்குப் பைத்தியப் பட்டம் கட்டுவது எளிது.

குறிப்பாக என் முடிவு சகாக்களைக் கடுமையாகப் பாதித்து விட்டது. அவர்களை நிச்சயமற்ற நிலையில்கை கழுவிவிட்டதாகத் தோன்றுகிறது. எது எப்படியானாலும் நீண்ட தடுமாற்றத்திற்குப் பின் எடுத்த என் முடிவை மாற்றிக்கொள்ளப் போவதில்லை. முற்ற முழுதாக வெளியேறிவிடுவது என்று தீர்மானித்துவிட்டேன்.

துரதிர்ஷ்டவசமாக எனது எண்ணப்படி நடக்கவில்லை. உரிய காலத்திற்கு முன்னரே வேலை விட்டு விலகியதால் நிறுவனத்தில் பங்குதாரராக முடியவில்லை. ஆகி இருந்தால் பெரும் மில்லியனராக இருந்திருப்பேன்.

ஒருநாள் பால் பிரட்டி தனது அலுவலகத்திற்கு வருமாறு தொலைபேசியில் அழைத்தார். ஒரு வாடிக்கையாளர் உனது திறமையை முன்னிட்டுத்தான் நம்முடன் இணைந்து பணியாற்று வதாகவும், உன் சான்றாதாரம் இல்லாத நிலையில் தன்னுடைய சேவையை தம்முடன் தொடரமுடியாது என்று மிரட்டுவதாகக் கூறினார்.

சற்று ஆழமாக யோசித்தேன். இப்போது தருவதைவிட மூன்று மடங்கு அதிகமான சம்பளம் தர வேண்டும் என்று கேட்டேன். வியப்பூட்டும் விதமாக ஒப்புக்கொள்ளப்பட்டது. மீண்டும் பணியைத் தொடர்ந்தேன்.

அடுத்த பல ஆண்டுகளுக்கு அமெரிக்க மின் கட்டுமான நிறுவனங்களின் புதிய மின்திட்டங்களை பொதுப் பயன்பாட்டுக் குழுமத்தின் ஒப்புதலுக்கு அனுப்பும் அதிக ஊதியம் பெறுகிற சான்றாதார வல்லுனராகப் பணியாற்றினேன். இதில் நியூ ஹாம்ஸ்பையர் பொதுச்சேவை நிறுவனமும் என் வாடிக்கையாளர்களில் ஒன்றாக இருந்தது. அது கட்டவிருந்த சர்ச்சைக்குரிய சீபுரூக் அணுமின் நிலையத்தின் பொருளாதாரப் பலன்கள் குறித்து நான் எடுத்துக்கொண்ட சத்தியப் பிரமாணத்திற்கு நியாயம் செய்யும் வகையில் சான்றளிக்க வேண்டியது என் கடமை.

லத்தீன்அமெரிக்காவுடனான விசயங்களில் நான் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்றாலும் அங்கு நடைபெறும் நிகழ்வுகளை கவனித்துதான் வந்தேன். சான்றாதரங்கள் அளிப்பதற்கு நீண்டகால அவகாசம் இருந்ததால் போதிய நேரம் கிடைத்தது. பாவ்லாவுடனான தொடர்பைப் பராமரித்தேன். எண்ணெய் நிறுவனங்கள் மூலமாக உலக அரசியலின் மையத்திற்கு வந்துவிட்ட நாடாகிய ஈக்குவடாரில் எனது அமைதிப் படைக்காலத்தில் பெற்ற நண்பர்களின் உறவையும் புதுப்பித்தேன்.

தான் ஏற்றுக்கொண்ட உறுதியின்படி ஜெய்மே ரோல்ட்ஸ் எண்ணெய் நிறுவனங்களின் மீது முழு வீச்சில் தாக்குதல் தொடுத்து வந்தார். பனாமாக் கால்வாய்க்கு இரண்டு பக்கங்களிலும் பார்க்கத் தவறியவற்றின் மீது தெளிவான கவனம் கொண்டிருப்பதாகத் தோன்றியது. உலக ஏகாதிபத்தியமாக மிரட்டிக்கொண்டிருக்கும் அமெரிக்கா தன் மக்களை மோசமான அடிமை நிலையில் கொண்டுபோய்ச் சேர்க்கும், என்று அவர் கருதினார். அவரைப் பற்றி படிக்கும் பத்திரிகைச் செய்திகள் மூலமாக அவரது கடப்பாடுகளை மட்டுமல்ல, ஒரு விசயத்தை எவ்வளவு ஆழமாக ஊடுருவிப் பார்க்கிறார் என்பதையும் உணர்த்தியது.

1980 அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் கார்டர் ரொனால்ட் ரீகனிடம் தோல்வியுற்றார். ஆனால் அமெரிக்காவின் சுதந்திர அறிவிக்கை மீது உறுதியான நிலைப்பாடு அவருக்கு இருந்தது. விடுதலைக் கோட்பாட்டை இந்த தேசத்தின் அடையாளமாக்கிய முன்னோடிகளின் பாதையில் நடை பயிலவேண்டும் என்று விரும்பினார் கார்டர். தமது அன்றாட இலக்கை வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொள்கிறவர்களுக்கு மத்தியில் அபூர்வமான மனிதர் கார்டர். அவர் காண விரும்பிய உலகம் அடியாட்களுக்கு உவப்பற்றது.

மறுபுறத்தில் நிறுவனவியத்திற்கு சலாம் போடும் ரீகன் அமெரிக்காவை ஏகாதிபத்தியமாக்குவதற்குத் தீவிரமாக உழைத்தவர். இயக்குனரின் உத்தரவிற்கு ஏற்ப நடிக்கும் ஹாலிவுட் நடிகனாக இருந்த ரீகன், மொகலாயர்களின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிவதில் மிகப் பொருத்தமானவராக இருந்தார். பன்னாட்டுப் பெரு நிறுவனங்களின், உலகவங்கிகளின் ஏவலாளாக அரசு அரங்கங்களில் உலவினார். தான் செய்தது மட்டுமல்ல தனக்கு ஏற்ற துணைத்தலைவர் ஜார்ஜ் டபுள்யூ புஷ், உள்விவகாரச் செயலாளர் ஜார்ஜ் ஷல்ட்ஜ், பாதுகாப்புச் செயலாளர் காஸ்பர் வெய்ன் பெர்கர், ரிச்சர்ட் செனி, ரிச்சர்ட் ஹெல்ம்ஸ், ரிச்சர் மெக்கன்மெரா போன்றவர்களையும் உருவாக்கியிருந்தார். உலகின் வளங்களை அமெரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர இவர்கள் செய்யும் வேலைகளுக்கு ஒத்து ஊதுவார். அமெரிக்கா வகுத்த இராணுவ விதிகளுக்கு எல்லாம் இந்த உலகம் உடன்பட வேண்டும் என்று எதிர்பார்த்தார். உலகின் அனைத்து வர்த்தக, வங்கி நிறுவனங்களும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தைத் தமது தலைமையகமாக நினைத்து ஆதரிக்க வேண்டும் என்று கருதினார்.

இதேபோக்கில் போனால் உலகின் எதிர்காலமே பொருளாதார அடியாட்களுடையதாகத்தான் இருக்கும்.

வரலாற்றில் மீண்டும் ஒருமுறை எனக்கான ஒரு வாய்ப்பை விதி வழங்கி இருப்பதாக நினைத்தேன். அதற்கு ஏற்றவிதமாகவே நானும் நடந்துகொண்டதாகக் கருதினேன். இது எனக்கு உரியநேரம் என்பது எனக்குத் தெரியும்.

ஆனால் இந்தப்போக்கு எத்தனை வருடங்களுக்கு நீடிக்கும் என்று சொல்ல முடியாது. காலக் கடிகாரத்தின் ஊசல் எப்போதும் ஒரு பக்கமாக ஆட முடியாது. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவாக மட்டுமே காற்று அடிக்கும் என்று கருத முடியாது. என்னைப் பொறுத்தமட்டில் ரீகன் ஒரு வளமையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். ஈக்குவடாரின் புதிய ஜனாதிபதியும் இப்போதைய சூழலைச் சரியாகப் புரிந்துகொண்டிருப்பார் என்று நம்புகிறேன். டோரிஜோஸின் பற்றாளராகிய அவருக்கு பனாமாக் கால்வாய் விசயத்தில் கார்டரின் துணிச்சலான அணுகுமுறை பிடித்திருந்தது. டோரிஜோஸிடம் கற்றுக்கொண்ட பாடத்தின்படி பிறநாட்டுத் தலைவர்களிடம் இணக்கமான போக்கையே கடைப்பிடிப்பார் என்பதால் ரீகன் விசயத்தில் தவறுவதற்கு வாய்ப்பு இல்லை.

1981 இன் துவக்கத்தில் ரோல்டோஸ் நிர்வாகம் ஈக்குவடார் காங்கிரஸிற்கு புதிய ஹைட்ரோகார்பன் கொள்கையைப் பரிந்துரைத்தது. அதைப் பின்பற்றினால்தான் எண்ணெய் நிறுவனங்களுடனான உறவு சீர்படும். பலவகைகளிலும் ஒரு புரட்சிகரமான திட்டம் அது. அதுவரைப் பின்பற்றப்பட்ட வணிக முறையில் இருந்து முற்றிலும் மாறுபட்ட ஒன்றாக இருந்தது. அக்கொள்கை பெரும்பாலான லத்தீன்அமெரிக்க நாடுகளிலும், பின்னர் உலகநாடுகள் முழுவதிலும் பெரும் செல்வாக்குடன் விரிவு செய்யப்பட்டது.

எதிர்பார்த்தபடியே எண்ணெய் நிறுவனங்கள் அச்சட்டத்திற்கு எதிரான பிரச்சாரத்தை தீவிரமாக முடுக்கிவிட்டன. ஜெய்மேரோல்ட்ஸை வில்லனாக முன்னிறுத்தி எண்ணெய் நிறுவன அதிகாரிகள் கியாட்டோவிலும், வாஷிங்டன்னிலும் பணப் பெட்டிகளாலும், மிரட்டல்களாலும் வஞ்சக வலை விரித்தார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஈக்குவடார் ஜனாதிபதியை நவீன காஸ்ட்ரோ என்று பீதி கிளப்பினார்கள். ஆனால் இதற்கெல்லாம் மசிபவராக இல்லை ரோல்டோஸ். அரசு, எண்ணெய் நிறுவனங்கள், மதபீடங்கள் ஆகியவற்றிற்கு இடையே நிலவிவந்த நிரைமறைவுச் சதியை அம்பலப்படுத்தத் துணிந்தார். தன்னிடம் எந்த ஆதாரங்களும்

இல்லாதபோதும் சம்மர் இன்ஸ்டிடியூட் ஆப் லிங்குவிஸ்டிக்கிற்கும், எண்ணெய் நிறுவனங்களுக்கும் உடன்பாடு இருப்பதாகக் குற்றம்சாட்டி நாட்டை விட்டு வெளியேறும்படி உத்தரவிட்டார்.

சட்ட வரைவை காங்கிரசிற்கு அனுப்பிய சில வாரங்களிலேயே ரோல்டோஸ் அனைத்து வெளிநாட்டு எண்ணெய் நிறுவனங்களின் நடவடிக்கைகளையும் நிறுத்தும்படியாக உத்தரவிட்டார். தனது கொள்கையை நிறைவேற்றுவது ஈக்குவடார் மக்களுக்குச் செய்யும் மிகப்பெரிய உதவியாக இருக்கும். முடியாதவர்கள் நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவார்கள் என்றார். ரோல்டோஸ் ஈக்குவடார் அடால்பா ஒலிம்பிக் மைதானத்தில் மகத்தான உரை ஒன்றை நிகழ்த்தினார். பின்னர் அங்கிருந்து தெற்கு ஈக்குவடாரின் மலைச் சிறுபான்மை மக்களைச் சந்திக்க விமானத்தில் புறப்பட்டார்.

1981 ஆம் ஆண்டு மே 24 ஆம் நாள் பயங்கரமான விமான மோதலில் கொல்லப்பட்டார்.

உலகமே அதிர்ந்தது. லத்தீன்அமெரிக்க மக்கள் கடும் ஆத்திரமுற்றனர். இது சிஐஏவின் படுகொலை என உலகப் பத்திரிகைச் செய்திகள் தூற்றின. ரோல்ட்ஸ் எண்ணெய் நிறுவனங்களின் கடும் வெறுப்பிற்கு ஆளாகி இருந்தார். இதுதவிர இந்தக் கொலைக்கு வேறு சில காரணங்களும் இருந்திருக்கக்கூடும். ஆனால் இதுவரை எந்த ஆதாரங்களும் கிடைக்கவில்லை. தான் கொல்லப்படலாம் என்பதை முன்னரே யூகித்திருந்தார் ரோல்ட்ஸ். அதனால் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் மேற்கொண்டிருந்திருக்கிறார். அவரது பயணத்திற்கு எப்போதும் இரண்டு விமானங்கள் தயாராக இருக்கும். அன்றைய பயணத்தின் கடைசிநிமிடத்தில் பாதுகாப்பு அதிகாரியின் வற்புறுத்தலின்படிதான் அந்த விபத்து விமானத்தில் பயணித்திருக்கிறார். அது பற்றி எரிந்திருக்கிறது.

உலகப் பத்திரிகைகள் அனைத்தும் செய்தி வெளியிட்ட போதும் அமெரிக்க ஊடகங்கள் வாயைத் திறக்கவில்லை.

ஒஸ்வல்டோ ஹர்டடோ அடுத்த ஜனாதிபதியாகப் பதவியேற்றார். சம்மர் இன்ஸ்டிடியூட் ஆப் லிங்குவிஸ்டிக் அமைப்பினர் ஈக்குவடாரில் தமது வேலையைத் தொடர்வதற்கு அனுமதி பெற்றனர். அதன் உறுப்பினர்களுக்கு சிறப்பு விசா வழங்கப்பட்டது. அதே ஆண்டின் இறுதியில் டெக்ஸாகோவும் இதர

என்னைப் நிறுவனங்களும் தாகத்துடன் காத்திருந்த அமேசான் பகுதியில் கூடுதல் துளையிடல் நிட்டத்தைப் புதிய ஜனாதிபதி தூக்கி வைத்தார்.

அஞ்சலி செலுத்திய டோரிஜோஸ் ரோல்டோஸைத் தனது சகோதரன் என்று குறிப்பிட்டார். தன் தலைக்கு மேலும் மிகப்பெரிய நெருப்புப் பந்து சுழன்றுகொண்டிருக்கிறது. எந்தநேரமும் தன்னைப் பலி கொள்ளலாம் என்றார். அது நிதர்சனமாயிற்று.

அத்தியாயம் - 27

பனாமாவையும் துரத்திய சிஐஏவின் படுகொலை

தெரிந்ததுதான் என்றாலும் ரோல்டோஸின் மரணம் என்னை உலுக்கிவிட்டது. அர்பென்ஸ், மோசாடெக், அலெண்டே இவர்களைப் போன்ற இன்னும் பலரின் மரணம் குறித்து நான் அறியாதவனல்ல. நிறுவனவியத்திற்கு எதிராக நின்றதால் படுகொலை செய்யப்பட்டவர்கள் என்பதை வரலாறும், பத்திரிகைகளும் எடுத்துரைத்திருக்கின்றன. ஆனாலும் இந்த அப்பட்டமான படுகொலை எனக்கு அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

சௌதிஅரேபியாவில் அடியாட்களின் அணுகுமுறைக்குக் கிடைத்த வெற்றிக்குப் பின்னர் நேரடியான படுகொலை செய்வது காலாவதியான உத்தி என்று நினைத்திருந்தேன். ஓநாய்கள் விலங்குக் காப்பகத்தில் அடைக்கப்பட்டுவிட்டிருக்கலாம் என்று கருதினேன். அது தவறு என்பது புரிகிறது. ரோல்டோஸின் மரணம் விபத்து அல்ல. அது சிஐஏ அரங்கேற்றிய படுகொலை என்பதற்கானக் கூறுகள் அதில் தென்பட்டன. தனக்குப் பணியாதவர்களுக்கு என்பதைப் புரியவைப்பதற்காக விடுக்கப்பட்ட எச்சரிக்கை என்பதைப் புரிந்துகொண்டேன். துப்பறியும் ஹாலிவுட் நடிகராகிய ரீகன் தலைமையிலான நிர்வாகம் கடைப்பிடிக்க உகந்த உத்தி இதுதான். ஓநாய்கள் மீண்டும் களமிறங்கிவிட்டன. நிறுவனவியத்திற்கு எதிரான புனிதப் போரில் இறங்கும் டோரிஜோஸைப் போன்ற ஒவ்வொருவர் ரத்தத்தையும் சுவைப்பது என்று துணிந்துவிட்டன ஓநாய்கள்.

டோரிஜோஸ் இதற்கெல்லாம் மசிகிற ஆள் இல்லை. தனக்கு அளிக்கப்படும் எச்சரிக்கையில் மிரண்டுபோகிறவர் இல்லை. சம்மர் இன்டிடியூட் ஆப் லிங்குவிஸ்டிக்னரைத் தன் நாட்டைவிட்டு வெளியேற்றுவதிலும், கால்வாய் ஒப்பந்தத்தின் மீது மறு பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்ற ரீகன் நிர்வாகத்தின் குரலை புறக்கணிப்பதிலும் உறுதியாக நின்றார்.

ரோல்டோஸ் கொலைசெய்யப்பட்ட அடுத்த இரண்டாவது மாதத்தில் 1981 ஜூலை 31 அன்று டோரிஜோஸும் விமானவிபத்தில் கொல்லப்பட்டார்.

லத்தீன்அமெரிக்காவும், உலகமும் மீண்டும் ஒருமுறை அதிர்ச்சியடைந்தன. பனாமாக் கால்வாய் மீதான தனது உரிமையை நிலைநாட்டுவதில் ரீகனுக்குப் பணியாமல் நின்றவர் என்ற வகையில் உலகம் முழுதும் நன்கு அறியப்பட்ட, மிகுந்த மரியாதைக்குரிய மனிதர். ஈரான் மன்னர் ஷா உட்பட அரசியல் தஞ்சம் வேண்டுவோர் அனைவரையும் இருகரம் நீட்டி வரவேற்றவர், மனிதஉரிமைக்காக குரல் கொடுப்பதில் முன்னுதாரண புருஷன், நோபல் பரிசிற்காக பரிந்துரைக்கப்பட்டவர் இப்போது கொல்லப்பட்டிருக்கிறார். சிஐஏவின் படுகொலை மீண்டும் ஒருமுறை பத்திரிகைகளின் தலைப்புச் செய்தியாகிவிட்டது.

ஓட்டல் பனாமாவில் சந்தித்தபோது எழுதிக்கொண்டிருந்த கெட்டிங் டு நோ தி ஜெனரல் என்ற நூலை கிரகம் கிரீன்

''ஆகஸ்ட் 1981 ல் எனது ஐந்தாவது பனாமாப் பயணம் முடிந்து கிளம்பத் தயாராக இருந்தேன். அப்போது தொலைபேசி வழியாக எனது நெருங்கிய நண்பரும் என்னை இங்கு அழைத்தவருமான டோரிஜோஸ் இறந்த செய்தி கிடைத்தது. கெக்கலசீமா என்ற மலைப்பகுதியில் பயணம் செய்யும்போது ரோல்ஸ்டோவிற்குச் சொந்தமான சிறியவிமானம் வெடித்துச் சிதறியது. அதிலிருந்த யாரும் உயிர் தப்பவில்லை. அவரது மெய்க்காவலராக இருந்த கவிஞரும், பனாமாப் பல்கலைக்கழகத்தில் மார்க்சிய தத்துவமும், கணிதமும் கற்பித்த பேராசிரியருமான சார்ஜெண்ட் சூச்சு என்றழைக்கப்பட்ட ஜோஸ் டி மார்ட்டினெஸ் சிலநாட்கள் கழித்து என்னிடம் தொலைபேசியில் அழைத்து விமானத்தில் வெடிகுண்டு இருந்தது எங்களுக்குத் தெரியும். ஆனால் அந்த விபரத்தைப் போனில் சொல்ல முடியாது'' என்று துவங்கி இருந்தார்.

ஏழைப்பங்காளன், ஆதரவற்றோரின் காவலன் என்று பெயர்பெற்ற இம்மனிதனின் மரணத்திற்கு மக்கள் துக்கம் கொண்டாடினார்கள். சிஐஏவின் நடவடிக்கை விசாரிக்கப்பட வேண்டும் என்று கோரினார்கள். இந்தக் கோரிக்கை நிறைவேறவில்லை. டோரிஜோஸை வெறுப்போரின் பட்டியல் நீளமானது. அதில் அளவற்ற அதிகாரத்தைத் தம் கையில் கொண்டுள்ள ஜனாதிபதி, ரீகன், துணை ஜனாதிபதி புஷ், பாதுகாப்புச் செயலாளர் வெய்ன்பெர்கர் போன்றோரும். இணைத் தலைமையகத்தின் அலுவலர்களும், பன்னாட்டு நிறுவனங்களின் தலைமை நிர்வாகிகளும் அடங்குவர்.

கார்டர் டோரிஜோஸ் ஒப்பந்த சரத்துக்களின்படி அமெரிக்காவின் தென்பிராந்திய கமாண்டோக்களின் வெப்ப மண்டலப் போர்முனைப் பள்ளி மூடப்பட்டதையடுத்து நிறைய பிரச்சனைகள் உருவானதால் கடுங்கோபம் கொண்டிருந்தது ராணுவத்தலைமை. ஒன்று புதியஒப்பந்தத்தின்படி செயல் படுவதற்கான வழிமுறையைக் கண்டடைவது அல்லது பள்ளி நடத்துவதற்கான வசதியை ஏற்படுத்தித் தரும் இன்னொரு நாட்டைக் கண்டுபிடிப்பது. இது இருபதாம் நூற்றாண்டின் முடிவு தசாப்தங்களில் விரும்பத்தகாத ஒன்றாக இருந்தது. அடுத்த சாத்தியமான ஒரேவழி டோரிஜோஸை அகற்றிவிட்டு தம்மால் நியமிக்கப்படுகிற பொம்மை ஜனாதிபதியுடன் புதிய ஒப்பந்தம் போடுவதுதான்.

டோரிஜோஸின் எதிரிகளில் பலரும் லத்தீன்அமெரிக்க நாடுகளின் உழைப்பாற்றலையும், எண்ணெய், மரம், ஈயம், தாமிரம், பாக்ஸைடு போன்ற கனிம ஆதாரங்களையும், விவசாய நிலங்களையும் சுரண்டிக் கொழுப்பவர்கள், அமெரிக்க அரசியல் அதிகாரத்தில் இருப்போருக்கு நெருக்கமான பன்னாட்டு நிறுவன பெருமுதலைகள். உற்பத்தி, தொலைத்தொடர்பு நிறுவனங்களை நடத்துபவர்களும், கப்பல் மற்றும் போக்குவரத்துத் துறைகளைத் தம் கைக்குள் வைத்திருப்போரும் இதில் அடக்கம்.

அமெரிக்க அரசாங்கத்துடன் தனியார் நிறுவனங்கள் கொண்டுள்ள நெருக்கமான உறவிற்கு மிகச் சரியான எடுத்துக்காட்டு பெக்டெல் குழுமம், இங் நிறுவனங்களின் தலைமைப் பொறுப்பில் உள்ள ஜார்ஜ் ஷல்ட்ஜும், கஸ்பர் வெய்ன்பர்கரும். எங்களது மெய்ன் நிறுவனம் பெக்டெல்லுடன் இணைந்து பல வேலைகள் செய்வதாலும், அதன் மூத்த கட்டுமானப் பொறியாளர் எனக்கு மிக நெருங்கிய நண்பர் என்பதாலும் அந்நிறுவனத்தைப் பற்றி நன்றாகத் தெரியும். பெக்டெல் அமெரிக்காவில் செல்வாக்கு மிக்க கட்டுமான மற்றும் பொறியியல் நிறுவனம். பனாமாவில் இப்போதிருப்பதைக் காட்டிலும் அதிகப் பயன்பாடுடைய இன்னொரு கால்வாயை வெட்டுவதற்கு ஜப்பானுடன் கூட்டுத்திட்டம் ஒன்றை வகுத்திருப்பதால் பெக்டெல்லின் உயரதிகாரிகள் டோரிஜோஸ் மீது கடும் எரிச்சலில் இருந்தார்கள். கால்வாய் மீதான அமெரிக்காவின் பாத்தியதை மறுக்கப்படுகிறது என்பதோடு இந்நூற்றாண்டின் மிகப்பெரிய லாபமளிக்கும் பொறியியல் திட்டத்திலிருந்து பெக்டெல்லை விலக்கிய ஆத்திரமும் அதில் அடங்கும்.

எந்தப் பெரிய காரியத்தையும் பதட்டமில்லாமல் மிகுந்த ஈடுபாட்டுடன் விளையாட்டைப் போல செய்து வந்த டோரிஜோஸின் மரணத்திற்குப் பின் அவரிடத்திற்கு வந்த மானுயேல் நோரிகா என்பவர் டோரிஜோஸ் அளவிற்கு புத்திக் கூர்மையும், கம்பீரமும் செல்வாக்கும் மிக்கத் தலைவர் என்று சொல்லமுடியாது. ரீகன்களும், புஷ்களும், பெக்டெல்களும் நிறைந்த உலகத்தில் அவர் தாக்குபிடிப்பது கடினம் என்று பலரும் கருதினார்கள்.

டோரிஜோஸின் மரணம் தனிப்பட்ட முறையில் என்னைப் பெரும் துயரத்தில் ஆழ்த்தியது. டோரிஜோஸுடன் நடத்திய உரையாடலை மீண்டும் மீண்டும் என் நினைவுகளில் சுழலவிட்டுக் கொண்டிருந்தேன். பத்திரிகைகளில் வந்திருந்த போட்டோவை எடுத்துவைத்துக்கொண்டு முதன்முறையாக நான் பனாமா வந்தபோது மழையிரவில் காரில் இருந்தபடி கண்ட டோரிஜோஸின் பிரமாண்டமான படத்தையும், அதன் கீழிருந்த விடுதலையே டோரிஜோஸின் லட்சியம். லட்சியத்தைத் தகர்க்கும் ஏவுகணை இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்ற வாசகத்தையும் கண்டதும் ஏற்பட்ட உணர்வை அசைபோட்டபடி நீண்டநேரமாக அமர்ந்திருந்தேன் ஓர் இரவு முழுவதும்.

டோரிஜோஸ் கார்ட்டருடன் இணக்கமான உறவை ஏற்படுத்தி பனாமாவின் மீதான உரிமையை மீட்டெடுப்பார் என்றோ, லத்தீன் அமெரிக்க நாடுகளில் உள்ள சோசலிஸ்ட்களுக்கும் சர்வாதிகாரிகளுக்கும் இடையே ஒரு இணைப்புப் பாலத்தை உருவாக்குவார் என்றோ அதனால் ரீகன், புஷ் நிர்வாகம் ஆத்திரமுற்று கொலை செய்யத் துணிவார்கள் என்றோ பின்னர் அதற்கான சான்றுகள் வெளிப்படும் என்றோ நான் கற்பனைகூட செய்திருக்கவில்லை. இன்னொரு இருட்பொழுதில் வழக்கமான விமானத்தில் அவரது டுவின் ஒட்டரில் நாற்பத்தி இரண்டே வயதில் டோரிஜோஸ் சிஐஏவால் கொல்லப்படுவதை அமெரிக்காவிற்கு வெளியில் இருக்கும் உலகமே தெரிந்துகொள்ளும் என்பதையும் நான் நினைத்துப் பார்க்கவில்லை.

டோரிஜோஸ் கொல்லப்படாதிருந்தால் மத்திய மற்றும் தென்னமெரிக்காவில் நிலவும் வன்முறைக்கு முடிவு கட்ட ஏதேனும் செய்திருப்பார் என்பதில் சந்தேகமே இல்லை. அவருடைய நடவடிக்கைகளை வைத்துப்பார்க்கும்போது கொலம்பியா, ஈக்குவடார், பெரு போன்ற அமேசான் மண்டலத்தில் செய்யப்படும் எண்ணெய்ச் சுரண்டலைத் தடுத்திருப்பார் என்றே தோன்றுகிறது.

வாஷிங்டன் அடிக்கடி குறிப்பிடும் பயங்கரவாதத்திற்கு போதைக்கு எதிரான போர் என்ற முரண்பாடுகளை டோரிஜோஸின் செயல்பாடுகள் முடிவிற்கு கொண்டு வந்திருக்கும். அவரது நடவடிக்கைகளால் ஏழைமக்களும் அவர் தம் குடும்பங்களும் வீடும் பாதுகாக்கப்படுவதைக் கண்ணாரக் கண்டிருப்பார். இன்னும் குறிப்பாக அமெரிக்க, ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த புதிய தலைமுறைத் தலைவர்களுக்கு சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்திருப்பார். ஆனால் அதை அமெரிக்காவால், அமைதிப் படையால், சிஐஏவால், பொருளாதார அடியாட்களால் பொறுத்துக் கொள்ள முடியுமா?

அத்தியாயம் - 28

நான் என்றான் ஜார்ஜ் டபுள்யூ புஷ்

டோரிஜோஸ் கொல்லப்பட்ட சமயம், சில மாதங்களாகவே நான் பாவ்லாவைப் பார்க்காமல் இருந்தேன். பெக்டெல்லின் தலைமைக் கட்டடவியலாளராக ஆக இருந்தவரின் மகளான மெய்னின் சூழலியத் திட்டத்தில் பணிபுரிந்த வின்னிபிரெட் எனும் இளம்பெண் உட்பட பிற பெண்களுடன் உறவில் இருந்தேன். பாவ்லா மற்றொரு கொலம்பிய பத்திரிக்கையாளனுடன் உறவு கொண்டிருந்தாள். பிறருடன் காதலுறவு கொண்டிருந்தபோதிலும் எங்களுக்கிடையே நட்புறவு நீடித்தது.

எனது சான்றாதார வல்லுனர் வேலையுடன் குறிப்பாக சீப்ரூக் அணுமின் திட்டத்திற்கு அளிக்கவேண்டிய சான்றாதாரத்துடன் அல்லாடிக்கொண்டிருந்தேன். அற்பப் பணத்திற்காக மீண்டும் என்னை விற்றது போலிருந்தது. என்னை ஆற்றுப்படுத்திக்கொள்ள வின்னி பிரட் பெரிதும் உதவினாள். அவள் தீவிரமான சூழலியவாதி. ஆனால் அதேநேரத்தில் அதிகரித்து வரும் மின் தேவையை ஈடுசெய்ய வேண்டும் என்பதையும் புரிந்துகொண்டவள். சான் பிரான்சிஸ்கோவின் பெர்க்லே பகுதியில் பிறந்து வளர்ந்து பெர்க்லே பல்கலையில் பட்டம் பெற்றவள். என்னுடைய பெற்றோர், ஆன்ன் ஆகியோரின் தூய்மைவாதத்திற்கு முரணாக கட்டற்ற வாழ்வின் மீது நம்பிக்கை கொண்டவள்.

எங்களுக்கிடையேயான உறவு வலுப்பெற்றது. வின்னிபிரெட் மெய்னில் விடுப்பு எடுக்க நாங்கள் இருவரும் அட்லாண்டிக் கடற்கரையோரமாக ப்ளோரிடாவிற்கு மிதவைப் பயணம் மேற்கொண்டோம். அவ்வப்போது படகைத் துறையில் நிறுத்திவிட்டு பறப்புப் பயணம் செய்து எனது சான்றாதார வேலையும் நான் மேற்கொள்வதுண்டு. ப்ளோரிடாவில் மேற்கு பாம் பீச் ஒரு அடுக்கு வீட்டையும் வாடகைக்கு எடுத்துக்கொண்டோம். நாங்கள் மணம் புரிந்துகொள்ள எனது மகள்

ஜெஸிகா 1982 மே மாதம் 17 அன்று பிறந்தாள். முதல் குழந்தையைக் காணத் தவிப்பவர்களிடையே ஒப்பீட்டளவில் நான் வயதானவன். எனக்கு வயது 36.

சிப்ரூக் அளிக்கும் அணுமின் திட்டம் அம்மாநிலத்தின் மின் தேவையைப் பூர்த்தி செய்வதில் செலவு குறைந்தது என்று நியூ ஹாம்பையர் பப்ளிக் சர்விஸ் கமிஷனை ஏற்றுக்கொள்ளச் செய்வது என்னுடைய பொறுப்பாகும். அதற்கு நான் முன் வைக்கும் விபரங்கள் போதுமானது என்ற நிறைவு எனக்கே இல்லை. கிடைக்கப்பெறும் ஆய்வு முடிவுகள் ஒவ்வொரு நாளும் மாறிக்கொண்டே இருக்கின்றன. அணுஆற்றலை விட பிற மின் நுட்பங்கள் சிக்கனமானதாகத் தோன்றுகிறது.

அணுசக்தியின் பாதுகாப்பு அம்சங்கள் குறித்தும் கேள்விகள் எழத் தொடங்கிவிட்டன. புதிய நுட்பங்களில் போதிய பயிற்சி இன்மையால் தவறுகளுக்கான வாய்ப்புகளும் அதிகம். நுட்பச் சாதனங்களில் பிரச்சனை ஏற்படும்போது மனிதத்தவறு ஏற்படுதல் இயல்பானதே. அணுக்கழிவை அகற்றுவதும் சிக்கலானது. சட்டத்தின் மீது ஆணையாக உறுதியளிக்கவேண்டியவன் என்ற சூழலில் எனது நிலை நெருக்கடிமிக்கதாக இருந்தது. அதே நேரத்தில் சுற்றுச்சூழலுக்கு உகந்த புதிய மின்னாற்றல் நுட்பங்கள் சிக்கனமானவை என்ற கருத்தும் எனக்குள் உருவாகிக்கொண்டு வந்தது. குறிப்பாக குப்பைகளிலிருந்து மின்சாரம் தயாரித்தல் சாத்தியமானதாகத் தோன்றியது.

ஒருநாள் நியூ ஹாம்பையர் உட்டிலிட்டி கம்பெனியைச் சேர்ந்த உயரதிகாரிகளிடம் என்னால் தொடர்ந்து சான்றளிக்க முடியாது என்று கூறிவிட்டேன். பணம் கொழிக்கும் வேலையைத் தூக்கி எறிந்தேன். புதியநுட்பத்தின் அடிப்படையில் இயங்கும் தொழில் ஒன்றைத் துவக்குவதென்று முடிவு செய்தேன். அப்போது தான் குடும்பம் நடத்தத் துவங்கி இருக்கிறோம், புதியதொழிலுக்கே உரிய நிச்சயமற்ற நிலை இதெல்லாம் இருந்தாலும் வின்னி நூற்றுக்கு நூறு எனக்கு ஆதரவாக இருந்தாள்.

சூழலியல் ரீதியாகப் பலனளிக்கும் வகையில், என்னைப் போன்ற சிந்தனை உடையவர்களுக்கு முன்னோடியாக, இண்டிபென்டண்ட் பவர் சிஸ்டம் என்ற நிறுவனத்தை ஜெஸிகா பிறந்த 1982 ஆம் ஆண்டின் இறுதியில் துவக்கினேன். இதுபோன்ற பல நிறுவனங்கள் தோல்வியுற்ற நிலையில் ஆபத்தான தொழிலில் இறங்கினேன். பழைய வேலை குறித்து வெளியில் வாயைத் திறக்க

மாட்டேன் என்ற வாக்குறுதியின்படி நடந்துகொண்டதால் புதிய தொழிலில் நெருக்கடி தோன்றும்போது தற்செயலாக கைகொடுப்பவர்கள் இருந்தார்கள்.

புரூனோ ஜம்போட்டி இண்டர் நேஷனல் அமெரிக்கன் டெவலப்மெண்ட் பேங்கில் ஒரு உயர்பதவியை ஏற்றுக்கொண்டார். எனது நிறுவனத்திற்கு அடமானத்தின் பேரில் தனது வங்கி மூலமாக நிதியுதவி செய்ய ஒப்புக்கொண்டார். பேங்கர்ஸ் ட்ரஸ்ட், இஎஸ்ஐ எனர்ஜி, புருடென்சியல் இன்சூரன்ஸ், சாட்போர்ன்பெர்க் (வால்ஸ்ட்ரீட்டின் முன்னணி சட்ட நிறுவனம்) ஆகியவற்றின் ஆதரவும் கிடைத்தது. ஆஷ்லேண்ட் எண்ணெய் நிறுவனத்திற்குச் சொந்தமான, மாற்று மின்னாற்றல் உற்பத்தியில் பெயர் பெற்ற ரில்லே ஸ்டாக்கர் நிறுவனத்தின் ஆதரவுடன் அமெரிக்கக் காங்கிரஸ் வரிவிலக்கு வழங்கியதால் எங்களைப் போட்டியாளர்களிடமிருந்து தனித்துக் காட்ட வசதியாயிற்று.

புதிய தொழில்நுட்பத்தில் கழிவு நிலக்கரியில் இருந்து புகை வெளிப்படுத்தாத முறையில் மின்னாற்றல் கட்டுமான வேலையை எங்களது ஜபிஎஸ்ஸும், பெக்டெல்லும் ஒரேநேரத்தில் 1986ல் தனித்தனியாகத் துவக்கினோம். அந்த தசாப்தத்தின் இறுதியில் ஆற்றல் உற்பத்தியில் எமது நிறுவனங்கள் புரட்சிகரமான மாற்றத்தை அறிமுகப்படுத்தின. அதுவரை அத்துறையில் இருந்த நிறுவனங்கள் சூழல் மாசின்றி ஆற்றல் உற்பத்தி சாத்தியமில்லை என்று கூறிவந்ததைப் பொய்யாக்கி கழிவு நிலக்கரியில் இருந்து அமில மழைப் பொழிவிக்காத மின்னாற்றல் திட்டங்களுக்கு அடிகோலின எங்கள் நிறுவனங்கள். அதையொட்டி புதிய மாசுக் கட்டுப்பாடுச் சட்டங்களும் கொண்டுவரப்பட்டன. பாரம்பரியமான முறையில் அல்லாத மாற்று சிறிய தொழில்நிறுவனம் வால்ஸ்ட்ரீட்டின் நிதியாதரவைப் பெற முடியும் என்பதற்கும் நாங்கள் ஒரு நிரூபணமாக இருந்தோம். அதுபோக கூடுதலான சிறப்பம்சம் என்னவென்றால் ஜபிஎஸ் அளவிற்கான ஒரு தொழிற்சாலை மூன்று ஏக்கர் பரப்பு குளிர்வு குளங்கள்அமைத்து வெப்பத்தைத் தணித்து பசுமைக் குடிலுக்கு அனுப்பவேண்டும் ஆனால் எங்களுக்கு ஒன்றரை ஏக்கர் போதுமானதாக இருந்தது.

ஜபிஎஸின் தலைவர் என்ற முறையில் ஆற்றல் தொழிலின் உள் விவகாரங்களுக்கு நிறைய பங்களிப்பு செய்தேன். செல்வாக்குமிக்க வக்கீல்கள், சூத்திரதாரிகள், முதலீட்டு வங்கியாளர்கள், முன்னணி நிறுவனங்களின் உயரதிகாரிகள் ஆகியோரிடம் என்னால் எளிதில் உறவாட முடிந்தது. பெக்டெல்லில் முப்பதாண்டுகள் பணியாற்றிய என்னுடைய மாமனார் சௌதிஅரேபியாவில் நகரக்

கட்டுமானத்திற்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். நான் 1970களில் சௌதியில் பணிவிவகாரங்களில் பணியாற்றியவள் என்ற செல்வாக்கும் ஐபிஎஸிற்கு உதவிகரமாக இருந்தது. தனது பட்டத்தை முடித்ததும் பெர்க்லே பெக்டெல்லில் முதன்முதலாக வேலைக்குச் சேர்ந்த வின்னியும் இப்போது பெக்டெல்லின் சான்பிரான்ஸிஸ்கோ தலைமையகத்தில் பன்னாட்டு நிறுவன குடும்ப உறுப்பினராகிவிட்டாள்.

மின்னாற்றல் தொழில்கள் அனைத்தும் மறு கட்டுமானம் செய்யப்பட்டு வந்தது. உள்ளூர் அளவில் தொழிலில் ஏகபோகம் செலுத்திவந்த சிறிய நிறுவனங்களை பெரிய நிறுவனங்கள் விழுங்க ஏதுவாயிற்று. தொழிலின் விதிகளை மீறுவதும் ஒரே ராத்திரியில் புதிய சட்டங்களை உருவாக்குவதற்கும் அதிகாரத்தில் உள்ளவர்களைச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு பயன்படுத்திக்கொள்ள முடிந்தது. ஆற்றல் வேட்கை யுகத்திற்குள் பழைய நிறுவனங்களை மூழ்கடித்தனர் தொழில் வல்லுனர்கள்.

அந்த வேகத்தில் மெய்னும் பலியானது. புருனோ யூகித்தது போலவே மெக்ஹால் எதார்த்ததுடன் தொடர்பறுபட்டுப் போயிருந்தார். அவருக்கு உண்மையை எடுத்துரைப்பார் யாரும் இல்லை. பால் பிரைட்டி சூழலைக் கையாள முடியாதவராக இருந்தார். மாறிவரும் சூழலுக்குத் தகுந்தவாறு மெய்ன் தன்னைத் தயார்படுத்திக்கொள்ள முடியாதது மட்டுமல்ல தொழிலில் இருந்து தூக்கி எறியப்படுவதற்கான தொடர் தவறுகளையும் அது செய்திருந்தது. புரூனோ தன் காலத்தில் மெய்னின் லாபத்தில் சாதனையை நிகழ்த்திக் காட்டினார். அவர் வெளியேற்றப்பட்ட பின்னர் கடும் நிதி நெருக்கடியில் சிக்கிக்கொண்டது. பொருளாதார அடியாட்களுக்கும் அங்கே வேலையில்லை. மெய்னின் பங்குதாரர்கள் அதை மற்றொரு பெரும் பொறியியல் கட்டுமான நிறுவனத்திற்கு விற்றுவிட்டனர். அது தன் சீட்டுக்களை சரியான முறையில் விளையாடியது.

நான் எனது மெய்ன் பங்குகளை 1980ல் முப்பது டாலர்களுக்கு வாங்கி இருந்தேன். அடுத்த நான்காண்டுகள் கழித்து மற்ற பங்குதாரர்கள் அவற்றை பாதி விலைக்கு விற்றுத் தீர்த்தார்கள். ஒரு நூற்றாண்டு காலமாக பெருமையுடன் நடைபயின்ற ஒரு நிறுவனம் இன்று அவமானத்தில் தன்னை முடித்துக்கொண்டது. அந்நிறுவனம் மூடப்படுவது எனக்கு வருத்தத்தை அளித்தாலும் நல்ல வேலையாக அங்கிருந்து வெளியேறினேன் என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டேன். புதிய முதலாளிகள் மெய்னின் பெயரையே பயன்படுத்தி

வந்தனர். பின்னர் சிலகாலம் கழித்து புதிய பெயரைச் சூட்டிக்கொண்டனர். ஒருகாலத்தில் உலகத்தின் நினைவில் அழுத்தமாகப் பதிந்திருந்த சின்னம் காலப்போக்கில் மங்கி மறைந்தது.

சூழலுக்குத் தகுந்தாற்போல் தன்னை மாற்றிக்கொண்டு முன்னேற முடியாமல் போனதற்கு நல்ல உதாரணம் மெய்ன். அதற்கு மாறாக துடிப்பான மாற்றங்களுக்கு உட்படுத்திக்கொண்டு பிரமாண்டமான வளர்ச்சி கண்ட நிறுவனம் என்ரான். என்ரான் தொழிலில் திடீர் வளர்ச்சி கண்டது. சட்டென்று உதித்ததைப் போலத் தோன்றினாலும் பிரமாண்டமான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது. வணிக நிறுவனக் கூட்டங்களில் தங்கள் கோப்பைகளில் காப்பி ஊற்றி, காகிதங்கள் எடுத்துவைத்து இருக்கையில் அமர்ந்து தமக்கானப் பேச்சைத் துவங்கும் வரை பெரும்பாலும் என்ரான் பற்றிய பேச்சுக்களே அசைபோடப்படும். என்ரான் எப்படி இத்தனை பெரிய சாதனைகளை நிகழ்த்தியது என்று வியக்காதவர்களே இல்லை. அதன் உள்ளே இருப்பவர்களோ வாயே திறக்காமல் வெறும் புன்னகையை மட்டுமே சிந்துவார்கள். மிகவும் அழுத்திக் கேட்டால் நிர்வாக உத்தி என்றும், புதிய நிதிப் பயன்பாட்டு முறை என்றும், உலகநாடுகளில் உள்ள அதிகார மையத்தில் இருப்போருடன் உறவாடும் திறமைவாய்ந்த நிர்வாகிகள் என்றும் மேலோட்டமாகக் கூறுவார்கள்.

அதெல்லாம் அடியாட்களுக்கான வேறு பெயர்கள் போல என் காதில் விழும். உலகஏகாதிபத்தியம் புதிய தடத்தில் வேகம் பிடித்திருக்கிறது என்று நினைத்துக் கொள்வேன்.

சர்வதேச எண்ணெய் விவகாரத்தில் ஆர்வம் காட்டக்கூடிய என்னைப் போன்றோர் அடிக்கடி கலந்துரையாடும் விசயம் துணை ஜனாதிபதியின் மகன் ஜார்ஜ் டபுள்யூ புஷ் குறித்து. அவர் முதலில் துவக்கிய மின்னாற்றல் நிறுவனம் அர்பெஸ்டோ (புஷ் என்பதன் ஸ்பானிய உச்சரிப்பு) தோல்வியுற்றதையடுத்து அதை மீட்டெடுக்க 1984ல் ஸ்பெக்டரம் - 7 வுடன் இணைக்கப்பட்டது. அர்பெஸ்டோவின் விஷம் ஸ்பெக்டரம்மிற்கும் பரவி திவாலாக மீண்டும் அது ஹர்கன் எனர்ஜி கார்பரேஷனால் வாங்கப்பட்டது. அதில் ஜார்ஜ் டபுள்யூ புஷ் ஆண்டிற்கு 120,000 டாலர் ஊதியம் பெறும் ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

எதையும் சாதிக்காமலே ஒருவன் இவ்வளவு பெரிய சம்பளம் பெற வேண்டுமென்றால் அவன் தந்தை நாட்டின் துணை ஜனாதிபதியாக இருக்கவேண்டும் போலும் என்று நாங்கள்

நினைத்துக்கொண்டோம். பன்னாட்டு நிறுவன வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு உலகம் முழுதும் இத்தனை இளைகளை ஹார்கன் துவக்கியதும், மத்தியகிழக்கில் எண்ணெய்த் தொழில் முதலீடு செய்வதற்கான ஆய்வில் ஈடுபட்டதும் எதேச்சையானது அல்ல. வேனிடி பேர் என்ற பத்திரிகை எழுதியது புஷ் பொறுப்பேற்றதும் ஹார்கன்னுக்கு அற்புதங்கள் நிகழத் துவங்கியது. புதிய முதலீடுகளுக்கான நிதியாதாரங்களும், எண்ணற்ற துளையிடும் உரிமைகள் ஆகியவை அளிக்கப்பட்டன.

கடற்கரையை ஒட்டிய பகுதியில் துளையிடும் உரிமைக்காக அமோகோ நிறுவனம் 1989 இல் பஹ்ரைன் அரசுடன் பேச்சுவார்த்தையில் இறங்கியது. அப்போதுதான் புஷ் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். முதல் வேலையாக அமெரிக்கத் தூதரான சார்லஸ் ஹோஸ்ட்லருக்கு அரசு ஆலோசகராக நியமனம் பெற்ற மைக்கேல் அமீன் அவசர அவசரமாக ஹார்கன்னுக்கும் பஹ்ரைன் அரசிற்கும் இடையே சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்தார். துளையிடும் உரிமையை அமோகோவிற்குப் பதிலாக ஹார்கன் பெற்றதும் அதன் பங்குத்தொகை 20 சதவீதம் உயர்ந்து 4.50 லிருந்து 5.50 ஆனது.

எல்லாம் தெரிந்த ஏகாம்பரங்களுக்குக்கூட பஹ்ரைனின் இந்நடவடிக்கை அதிர்ச்சியளித்தது. ஆற்றல் துறையில் நிபுணரான என்னுடைய வக்கீல் நண்பர் வால்ஸ்ட்ரீட் முனையில் உள்ள உலக வர்த்தக மையத்தின் மொட்டைமாடியில் உள்ள காக்டெய்ல் பாரில் சோகத்துடன் தலையை உலுக்கிக்கொண்டு சொன்னார் இளைய புஷ் தொழில் நடத்துகிறேன் என்று மூத்த புஷ்ஷின் பதவியைப் பறிக்காமல் இருப்பானா? என்று ஆச்சர்யப்பட்டார்.

நான் குவைத், சௌதி அரேபியா, எகிப்து, ஈராள் அரசுகளுக்காக வேலை செய்தவன் என்பதால், அவர்களது பழங்கால நிலப்பிரபுத்துவ அணுகுமுறைக்குப் பழகிப் போனவள். என்ரான் நிர்வாகிகளைப் போல புஷ்ஷும் அடியாட்களில் ஒருவர் என்பதை அறிந்தவன் என்பதால் எனக்கு இது பெரிய அதிர்ச்சியொன்றும் அளிக்கவில்லை.

அத்தியாயம் - 29

லஞ்சத்திற்கு நீண்ட என் கைகள்

என் வாழ்நாளிலேயே உலகம் ஒரு புதிய பொருளாதார சகாப்தத்தினுள் நுழைகிறது என்பதைப் புரிந்துகொண்டேன். என் உதாரண புருஷராகத் திகழ்ந்த மெக்னமேரா பாதுகாப்பு அமைச்சகச் செயலாளர் மற்றும் உலகவங்கியின் தலைவர் பொறுப்பில் இருந்து விலகியபோது நடந்த சம்பவங்களைக் கண்டு பீதியுற்றேன். அவரது தடாலடி அணுகுமுறை பொருளாதார வல்லுனர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது. கெனீசிய பாணித் தலைமைத்துவத்திற்கு ஆதரவாக அவர் வாதாடியது பரவலான கவனத்தைப் பெற்றது. அடியாட்கள் பாணியிலான நிர்வாகிகள் அனைத்துத் தொழில்களிலும் பரவியிருந்தனர்.

பழைய பொருளாதார அடியாட்களுக்கும் இவர்களுக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால் இவர்கள் உலக வங்கிகளிடமிருந்து பணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. புதிய தொழில்களும் பழைய தொழில்களும் ஒன்றிற்குகொன்று போட்டிபோட்டுக்கொண்டு வளரவேண்டிய நிலையில் வஞ்சகங்கள் புதிய உருவெடுத்தன. 1980 களில் இடைநிலை அதிகாரிகளாக துறைக்குள் அடியெடுத்து வைத்தவர்கள் இன்று உயர்நிலைக்கு வந்து தமது வெற்றியை ஈட்டுவதற்கு செய்யும் அனைத்துச் செயல்களையும் நியாயப்படுத்தத் துணிந்தவர்களாக இருந்தனர். லாபத்தை அதிகரித்துக் கொள்வதற்கான எளிய பாதை உலகின் ஏகாதிபத்தியமாவதுதான்.

நான் சார்ந்துள்ள ஆற்றல் தொழிலிலும் புதிய போக்குகள் பரவலாயின. பொதுப் பயன்பாட்டு முறைமைக் கொள்கை அரசாங்கத்தால் 1978 இல் உருவாக்கப்பட்டு கடுமையான சவால்களை எதிர்கொண்டு இறுதியில் 1982ல் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. மாற்று எரிசக்தியைக் கொண்டு மாற்று ஆற்றலை உற்பத்தி செய்யக்கூடிய என்னைப் போன்ற சிறிய சுதந்திரமான நிறுவனங்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன்

மேற்படி கொள்கை உருவாக்கப்பட்டது. மேற்படி சட்டம், ஆற்றலைப் பயன்படுத்தும் பெரும் நிறுவனங்கள் எங்களைப் போன்ற சிறிய நிறுவனங்களிடமிருந்து கட்டுப்படியாள நியாய விலை கொடுத்து மின்சாரம் பெற வேண்டும். அமெரிக்காவின் எண்ணெய்ச் சார்பையும், எண்ணெய் இறக்குமதியையும், அனைத்திற்கும் எண்ணெய் என்பதையும் குறைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கார்டர் உருவாக்கியது மேற்படி கொள்கை. இது தற்சார்பு நிறுவனங்களின் வளர்ச்சியையும், மாற்று ஆற்றலையும் ஒருசேர ஊக்குவிக்கக்கூடியது. அமெரிக்காவின் புதிய முயற்சியில் கொண்டுள்ள ஈடுபாட்டைக் காட்டுகிறது. ஆனால் எதார்த்தத்தில் முற்றிலும் மாறுபட்டது.

1980 களிலும் 90 களிலும் தொழில் முனைப்பைவிட விதிமீறல்களிலேயே அதிக கவனம் செலுத்தினர், என்னுடையதைப் போன்ற சிறிய நிறுவனங்களையும், பொதுப் பயன்பாட்டு நிறுவனங்களையும் பெரும் கட்டுமான நிறுவனங்கள் விழுங்குவதைப் பார்த்தேன். சட்டத்திற்குப் புறம்பாக ஆற்றல் உற்பத்தி செய்யும் நிறுவனங்களையும், தற்சார்பு சிறிய நிறுவனங்களையும் தன்வயப்படுத்துவதற்காக சட்டத்தில் ஓட்டைகளை உருவாக்கினார்கள். சிலர் முரட்டுத்தனமானத் திட்டங்கள் வகுத்து சிறிய நிறுவனங்களை திவாலாக்கி பின்னர் தாங்களே வாங்கிக்கொண்டனர். சில பெரிய நிறுவனங்களோ மிகச் சாதாரணமாக தாங்களே வேறு பெயரில் சிறிய தற்சார்பு நிறுவனங்களைத் துவக்கிக்கொண்டனர்.

அதனால் எண்ணெய்ச் சார்பைக் குறைப்பது என்ற கொள்கை காலவதியானது. ரீகன் எண்ணெய் நிறுவனங்களுடன் ஆழமாகப் பின்னிப் பிணைந்திருந்தார். புஷ் எண்ணெய்க்காரனாக இருந்து பெருஞ்செல்வம் சேர்த்திருந்தார். அரசின் சூத்திரதாரிகள் செனட்டர்கள், அமைச்சகத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் எண்ணெய் அல்லது கட்டுமான நிறுவனம் நடத்திக்கொண்டோ அல்லது அவற்றுடன் நெருக்கமான தொடர்பிலோ இருந்தார்கள். ரீகன் அணியினர் மட்டுமல்ல ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என அனைத்து அரசியலர்களும் எண்ணெய், கட்டுமான நிறுவனங்களால் லாபம் பெறுபவர்களாகவும் அவற்றின் பிடியில் சிக்கிக்கொண்டவர்களாகவும் இருந்தனர்.

சுற்றுச்சூழலுக்குப் பயனளிக்கும் ஆற்றல் தயாரிப்புக் கொள்கையைத் தொடர்ந்து பேணி வந்தது எமது ஐபிஎஸ். மாற்று எரிசக்தி, மாற்று ஆற்றல் கொள்கையில் கடப்பாடு கொண்டிருந்தோம். வாழ்க்கையும் மகிழ்ச்சிகரமாக இருந்தது. தற்சார்பு சிறிய

நிறுவனங்களில் நாங்கள் தப்பிப்பிழைத்தவர்கள் என்பது மட்டுமல்ல முன்னேறிக்கொண்டுமிருந்தோம். அதற்குக் காரணம் நான் முன்னர் நிறுவினயத்திற்குத் தொண்டு செய்தவன் என்பதுதான்.

ஆற்றல் துறை உலகம் முழுதும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதைத்தான் இப்போதைய போக்கு எடுத்துக் காட்டுகிறது. சமூகநலம், வாழ்க்கைத் தரம், சுற்றுச்சூழல், மற்ற பிற அறங்கள் அனைத்தையும் பின்னுக்குத் தள்ளி பேராசை முன்னிற்கிறது. இப்போக்குதான் தனியார் தொழிலையும் வளர்த்தெடுக்கிறது. கம்யூனிசத்தை வீழ்த்த முதலாளித்துவத்தை வளர்த்தாகவேண்டும் என்று இப்போக்கை முதலில் நியாயப்படுத்தினார்கள். உண்மையில் அப்படியொரு வாதமே அனாவசியமானது. அரசு முன்வைக்கும் திட்டங்களைவிட தனிப்பட்டத் தொழில் முதலாளிகளின் திட்டங்களே உயர்ந்தவை என்ற எண்ணம் மக்கள் மனதில் ஆழப்படிந்திருக்கிறது. இதைப் பயன்படுத்திக்கொண்டு அரசின் வசமுள்ள தண்ணீர், கழிவுநீர், தொலைத்தொடர்பு, பயன்பாட்டுத் துறை அனைத்தும் தனியார் வசம் இருந்தால்தான் மக்களுக்குச் சிறப்பான சேவை கிடைக்கும் என்றும், அதற்கு ஏற்றவகையில் சட்டங்களில் மாற்றங்கள் கொண்டுவர வேண்டும் என்றும் தனியார் நிறுவனங்கள் வாதிட்டன.

அந்தவகையில் பொருளாதார அடியாள் கருத்தோட்டம் சமூக மயமாக்கப்பட்டது. தனியார் நிறுவன அதிகாரிகளிடம் எங்களது வேலை கைமாற்றித் தரப்பட்டது. எங்களில் சிலரும் கூட அவற்றில் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். குறைந்த கூலிக்குத் தொழிலாளர்களை, எளிதாகச் சுரண்டுவதற்கு ஏற்ற கனிம வளங்களை, பெரும் சந்தைகளை தேடித் தேடி அலைந்தனர். தங்கள் அணுகுமுறைக்கு எந்த அறமும் தேவையில்லை. நான் இந்தோனேசியாவில், பனாமாவில், கொலம்பியாவில் செய்த அதே அடியாள் வேலையைத்தான் தனியார் துறை அதிகாரிகள் செய்கிறார்கள். திரைமறைவு காரியங்களுக்குப் புதிய புதிய உத்திகளை வகுத்திருக்கிறார்கள். வளர்ச்சியைக் காட்டி கடனைத் தருவதற்குப் பதிலாக தனியார் துறையை வளர்ப்பதன் மூலம் எத்தகைய சாதனைகள் நிகழ்த்தலாம் என்று கனவுகளை ஊட்டி அநேக நாடுகளைப் படுகுழியில் தள்ளினார்கள். பள்ளிகளைக் கட்டினார்கள், நெடுஞ்சாலைகளைப் போட்டார்கள், இலவசப் போன்கள், தொலைக்காட்சிகள், மருத்துவச் சேவை வழங்கினார்கள். அப்போதிருப்பதைவிட மலிவான கூலியில் தொழிலாளர்களோ அல்லது கனிமவளமோ கிடைக்கும் இடத்திற்கு மூட்டை கட்டிக்கொண்டு பறந்தார்கள். அவர்களால்

நம்பிக்கையூட்டப்பட்ட சமூகம் கைவிடப்படும்போது பேரழிவைச் சந்தித்தது என்றாலும் மனசாட்சியை மீறுவதற்கு அவர்கள் எந்தத் தயக்கமும் காட்டவில்லை.

பேரழிவின் விளைவுகள் உளவியல்ரீதியாகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துமே என்ற கேள்வி எனக்கு எழுந்தது. அது அவர்களுக்குள் எழாமல் போய்விடுமா? குளக்கரையில் ஒருவன் மலம் கழிக்க அதே குளத்தில் இன்னொரு இளம்பெண் குளிக்கும் காட்சியை இவர்கள் கண்டதில்லையா? இப்படியான சிக்கலான கேள்விகள் எழும் ஹார்வர்டு பார்கரை இவர்கள் கடந்ததில்லையா?

எனது ஐபிஎஸ் நிறுவனத்தையும், குடும்பத்தையும் வெற்றிகரமாக நடத்தி வந்தபோதிலும் என்னை அழுத்தும் மன அழுத்தங்களிலிருந்து மேடேற முடியவில்லை. நான் இப்போது ஒரு இளம்பெண்ணுக்குத் தந்தை. அவளது எதிர்காலம் குறித்த அச்சம், நான் முன்னர் ஆடிய ஆட்டங்கள் குறித்த குற்றவுணர்வு எல்லாம் என்னை அலைக்கழித்தன.

வரலாற்றுப் போக்குகளும் எனக்கு அயர்ச்சியூட்டுபவனவாக இருந்தன. இரண்டாம் உலகப்போரின் முடிவில் எனது சொந்த மாநிலமான நியூஹாம்பையர் பிரெட்டன் உட்ஸில் நடைபெற்ற பல்வேறு நாட்டுத் தலைவர்களின் சந்திப்பில்தான் தற்போதைய உலக நிதி முறைமை உருவாக்கப்பட்டது. போரால் சிதைவுற்றிருந்த ஐரோப்பாவைப் புனர்நிர்மாணம் செய்ய உருவாக்கப்பட்ட சர்வதேச நிதி ஆணையமும், உலகவங்கியும் வெற்றிகரமான சாதனைகளை நிகழ்த்தி இருந்தன. அந்த முறை மிகவேகமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டது. இதுவொன்றே உலகை அடக்கியாள்வதற்கு ஏற்ற நிவாரணி என்று அமெரிக்காவின் முக்கிய கூட்டணி நாடுகளால் போற்றிப் புகழப்பட்டது. இதுதான் கம்யூனிசத்தின் பிடியில் இருந்து நம்மைக் காப்பாற்றும் என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

இது நம்மை நல்ல நிலைக்கு இட்டுச்செல்லும் என்ற பயம் என்னை ஆட்டிப்படைக்கிறது. 1980 களின் இறுதியில் சோவியத் யூனியன் வீழ்ச்சியைத் தொடர்ந்து கம்யூனிச இயக்கமும் வலுவிழந்தது. அப்படியானால் இப்போதைய இலக்கு கம்யூனிசத்தை நிர்மூலமாக்குவது அல்ல. அதே வேகத்தில் முதலாளித்துவத்தில் ஆழமாக வேரை விட்டுள்ள கேட்பாரற்ற உலக ஏகாதிபத்தியமாக ஆவதுதான். உலகக் கூட்டமைப்பின் தலைவர் ஜிம் கேரிசன் கூறுவது

"நெடுங்கால முதலாளித்துவக் கனவை நிறைவேற்றுவதற்காக பொருளாதார ரீதியாக உலகமயமாக்கலையும், நாடுகளுக்கிடையே ஒருங்கிணைப்பையும் ஏற்படுத்தியதன் மூலம் ஏகாதிபத்தியம்

தடையற்ற சந்தை உரிமையை நேரடியாகப் பெற்றுவிட்டது. உலகமயமாக்கல் என்ற ஈர்ப்பிற்குப் பலியாகாத நாடுகளே உலகில் இல்லை. உலகவங்கி, சர்வதேச நிதி நிறுவனம் ஆகியவற்றின் கட்டுப்பாடுகளுக்கும் உள்கட்டுமானச் சீரமைப்பிற்கும் சில நாடுகள் மட்டுமே தப்ப முடிந்தது. இதுவரையில் ஒரு நாடு உலகப் பேரரசிற்குத் தண்டனிடுவது அல்லது அதன் தண்டனைக்கு உள்ளாவது எப்படியானாலும் தனது முட்டியைப் பெயர்த்துக் கொள்வதுதான் உலகமயமாதல் என்பதன் பொருளாகும். உலக நாடுகளின் ஒன்றிணைவை, உலகம் முழுமைக்குமான ஒற்றைப் பொருளாதாரத்தை ஏற்ற இறக்கங்களுடன் நம் காலத்தில் தடையற்ற சந்தை வழியாக மட்டுமே காண முடிந்துள்ளது.''

என்ற நினைவுகளுடன் நான் திணறிப் போயிருந்தேன். எனவே இவற்றை எல்லாம் ஒரு பொருளாதார அடியாளின் மனசாட்சி என்ற தலைப்பில் புத்தகமாக எழுதுவதற்கு இதுதான் சரியான நேரம் என்று தீர்மானித்தேன். ஆனால் என்னால் ரகசியமாக வைத்திருக்க முடியவில்லை. இன்றும்கூட தனிமையில் அமர்ந்து எழுதுகிற எழுத்தாளன் அல்ல. நான் செய்யப்போகும் வேலை குறித்து கலந்துரையாட வேண்டியிருப்பதாக நினைத்தேன். இந்நூலை எழுதுவதற்குத் தாக்கம் பெற்ற நிகழ்வுகளுடன் தொடர்புடைய மனிதர்களிடமிருந்து நினைவுறுத்த உதவுமாறு கோரினேன். சில பகுதிகள் நண்பர்களுடன் செய்த வேலையின் போது நிகழ்ந்தவை என்பதால் அவர்கள் படித்துப் பார்த்து கூறும் கருத்துக்களை அறிய விரும்பினேன். இது கொஞ்சம் ஆபத்தானது தான் என்றாலும் அதைத்தவிர வேறுவழி தெரியவில்லை. அதுவும் நான் மெய்னில் வேலை செய்த காலம் குறித்துப் புத்தகமாக எழுதுவதால் ரகசியமாக இருந்துவிடப்போவதில்லை.

மெய்னின் முன்னாள் பங்குதாரர் ஒருவர் 1987 ஆம் ஆண்டு ஒரு நாள் நண்பகலில் வந்து ஸ்டோன் அண்ட் வெப்ஸ்டார் நிறுவனத்திற்கு ஆலோசகர் என்ற பணம் கொழிக்கும் ஒப்பந்தம் ஒன்றை வழங்கினார். அந்த நேரத்தில் உலகின் முன்னணி பொறியியல் மற்றும் கட்டுமான நிறுவனமாக விளங்கிய அந்நிறுவனம் தன்னைச் சூழலுக்கு ஏற்றவாறு ஆற்றல் தொழிலுக்குத் தாவ விரும்பியது. என்னுடைய ஐபிஎஸ் போன்ற மாதிரியில் உருவாக்கப்பட்ட ஸ்டோன் வெப்ஸ்டர் நிறுவனத்தின் துணை அமைப்பிற்கு நான் ஆலோசனைகள் வழங்கவேண்டும் என்று என்னுடன் தொடர்புகொண்டவர் கூறினார். இது அடியாள் போன்ற இன்னொரு வேலைத்திட்டமல்ல என்ற வகையில் எனக்கொரு ஆசுவாசம்.

இதில் எனக்கொன்றும் பிரமாதமான வேலை இல்லை. தற்சார்பு நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்தி வருபவன் என்றமுறையில் தொழில் வட்டாரத்தில் எனக்கொரு நல்ல மரியாதை ஏற்பட்டுள்ளது. ஆலோசனைக் குழுவின் என்னை இணைத்துக்கொள்வதன் மூலம் அதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்து என்பதே அவர்களது விருப்பம். பல வகைகளிலும் எனக்குப் பயனுள்ளதாகத் தோன்றியது. ஏனென்றால் நான் ஐபிஎஸை விற்கத் தீர்மானித்திருந்தேன். இப்போது ஸ்டோன் வெப்ஸடருடன் இணைத்துவிட்டால் கணிசமான தொகை பெறவும் வாய்ப்பு உள்ளதாகத் தோன்றியது.

நான் வேலையில் சேர்ந்த அன்றே ஸ்டோன் வெப்ஸ்டரின் தலைமை நிர்வாகி என்னை மதியஉணவிற்கு அழைத்துச் சென்றார். சிறிதுநேரம் உலக நடப்புகள் பேசிக்கொண்டிருந்தோம். எங்கள் உரையாடல் வழியாக சிக்கலான ஆற்றல் தொழில் நடத்துவதை விட நானொரு ஆலோசனை நிறுவனம் நடத்தலாம் என்று எனக்குத் தோன்றியது. இப்போது நான் பெறும் ஊதியத்தை எப்படிச் செலவழிக்கலாம் என்று கணக்குப்போடத் துவங்கிவிட்டேன். இங்கிருந்து பெறுவதற்கு அப்பால் ஒரு லாப நோக்கமற்ற நிறுவனம் ஒன்றை நடத்துவது என்று தீர்மானித்துவிட்டேன்.

விருந்தின் இறுதிச்சுற்று முடிந்தபின்னர் என்னை உபசரித்தவர் பேச்சைப் புத்தகத்தின் பக்கம் திருப்பினார். நான் எழுதி வெளியான ஸ்ட்ரெஸ் ப்ரீ ஹேபிட் புத்தகத்தில்தான் அறிந்திராத பல அற்புதமான விசயங்கள் இருப்பதாகக் கூறினார். பின்னர் என் கண்களை உற்றுநோக்கி வேறு ஏதேனும் புத்தகம் எழுதும் எண்ணம் உண்டா என்று கேட்டார்.

எனக்கு வயிறு மிகவும் இறுக்கமாக இருந்தது. எதற்காக இதையெல்லாம் கேட்கிறார் என்பதை நான் புரிந்துகொண்டேன். தாமதிக்காமல் உடனே பதில் சொன்னேன். இல்லை. இப்போதைக்குப் புத்தகம் எழுதும் எண்ணம் இல்லை என்றேன்.

மிகவும் நல்லது. நாங்களும் மெய்னைப் போலவே தனித்துவத்தைக் காக்க விரும்புகிறோம்.

புரிகிறது.

இருக்கையில் நன்றாகச் சாய்ந்து தளர்வாக உட்கார்ந்து கொண்டார். உண்மை தான். நீங்கள் முன்னர் எழுதிய புத்தகத்தில் உள்ள அனைத்தும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியவை தான். சொல்லப்போனால் மன அழுத்தமடைகிற யாரும் நீங்கள் சொல்வதைப் பின்பற்றினால் தங்கள் தொழிலில் நல்ல இடத்தை

அடையலாம். இந்நிறுவனத்தில் இருந்துகொண்டே புத்தகங்கள் வெளியிடுவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு என்று சொல்லி விட்டு என்னிடம் பதிலை எதிர்நோக்கினார்.

நீங்கள் சொல்வதைக் கேட்க மகிழ்ச்சியாக இருக்கிறது.

ஆம். இங்கே செய்யும் வேலையைப் பற்றியோ, அல்லது மெய்னில் செய்தது பற்றியோ எதுவும் குறிப்பிடாமல், நிறுவனத்தின் பெயரைப் போடாமல் புத்தகம் வெளியிடுவதைக் கண்டிப்பாகத் தடுக்கமாட்டோம். அரசியல் விசயங்களையோ, உலகவங்கித் தொடர்பானவற்றையோ நீங்கள் எழுதினால் நாங்கள் அதில் தலையிடப் போவதில்லை. சுருக்கமாகச் சொல்வதானால் ரகசியங்களை வெளிப்படுத்தக்கூடாது என்று கூறிவிட்டு என் கண்களையே பார்த்தார்.

அது சொல்லாமலே புரிந்துகொண்டதுதான் என்று உத்திரவாதம் கொடுத்தேன். அந்த நொடியில் இதயத்துடிப்பே நின்றுவிடும்போல் இருந்தது. மீண்டும் பழைய நினைவுகள் என்னுள் ஓடியது. இந்தோனேசியாவில் ஹார்வர்டு பார்க்கருடன் பேசியது, பனாமா நகரத்தில் பிடலுடன் சுற்றியது, கொலம்பியாவில் பாவ்லாவுடன் காபிக் கடையில் பேசியது அனைத்தும் மனத்திரையில் ஓடின. மீண்டும் என்னை நானே விற்றுக் கொள்கிறேன். சட்டப்படி பார்த்தால் இது லஞ்சமாகாது. ஆனால் நிஜமாகப் பார்க்கும்போது இது ஒரு கைமாறுதான். என்னுடைய பெயரைத் தங்களது ஆலோசனைக் குழுவில் சேர்த்துக் கொள்வதாகவும் அழைக்கும்போதெல்லாம் சென்று ஆலோசனை கூறவேண்டும் என்றுதான் கூறினார்கள். ஆனால் உண்மையில் நான் விற்கப்படுகிறேன் என்பது அப்போதுதான் புரிந்தது.

அந்நிறுவனத்தின் உயரதிகாரிக்கு நிகரான சம்பளத்தை ஆண்டுக்கணக்கில் அளிப்பதாகக் கூறினார்.

அன்று பிற்பகலில் புளோரிடாவிற்குத் திரும்புவதற்காக விமானநிலையத்தில் இறுக்கமான மனநிலையுடன் காத்திருந்தேன். என்னை ஒரு வேசியாக உணர்ந்தேன். சொல்லப்போனால் அதிலும் மோசமாக என் மகளுக்கு, என் குடும்பத்திற்கு, என்னுடைய தேசத்திற்கு அனைத்திற்கும் துரோகம் இழைப்பதாகக் கருதினேன். இந்த அழைப்பை ஏற்காவிட்டால் வேறுவிதமான பிரச்சனைகளை எதிர்கொள்ள நேரிடும் என்று என்னைச் சமாதானப்படுத்திக் கொண்டேன்.

அத்தியாயம் - 30

அமெரிக்காவின் கையில் பனாமா

டோரிஜோஸ் இறந்துவிட்ட பின்னரும் என் இதயத்தில் பனாமாவிற்கு சிறப்பிடம் ஒன்று இருக்கத்தான் செய்தது. தெற்கே புளோரிடாவில் வசித்தாலும் மத்தியஅமெரிக்காவின் நிகழ்வுகளை பல்வேறு இடங்களில் உள்ள நண்பர்கள் வாயிலாக உடனுக்குடன் தெரிந்து வந்தேன். அவருக்குப் பின் வந்தவர்களிடம் அவரளவிற்கு கவர்ச்சியும், உள்ளத் திண்மையும் ஆளுமைத் திறன் இல்லை என்றபோதிலும் டோரிஜோஸ் துவக்கிய பாரம்பரியம் தொடரவே செய்தது. அப்பிராந்திய முரண்பாடுகளைக் களைய மேற்கொண்ட முயற்சிகளும் தொடர்ந்தன. கால்வாய் ஒப்பந்தத்தின்படி பனாமாவை விட்டு அமெரிக்காவை வெளியேற்ற நெருக்குதல் தரப்பட்டது.

தனது முன்னோடியின் பாதையைப் பின்பற்றும் வேகத்தை டோரிஜோஸின் வாரிசாகிய மானுயேல் நோரிகாவிடம் பார்க்க முடிந்தது. நான் நோரிகாவை நேரடியாகச் சந்தித்தது இல்லை. லத்தின்அமெரிக்க மக்களை ஏழ்மையிலும், அடக்குமுறையிலும் வைத்திருப்பதற்கான காரணிகளை அகற்றுவதற்கான தொடக்க முயற்சிகளை அவரிடம் என்னால் காணமுடிந்தது. ஜப்பான் நிதியுதவியுடன் அடுத்தக் கால்வாய் கட்டும் திட்டத்தைத் தொடர்வதில் தீவிர கவனம் செலுத்தினார். ஆனால் எதிர்பார்த்தபடியே தனது முயற்சிகளுக்கு அவர் அமெரிக்கா மற்றும் அதன் தனியார் நிறுவனங்களிடமிருந்து கடும் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருந்தது. இதுதொடர்பாக நோரிகோ இவ்வாறு எழுதினார்.

அமைச்சகத்தில் செயலாளரான ஜார்ஜ் ஷல்ட்ஸ் பன்னாட்டு கட்டுமான நிறுவனமான பெக்டெல்லின் முன்னாள் தலைமை அதிகாரியாவார். பாதுகாப்புச் செயலாளர் காஸ்பர் வெய்ன்பெர்கர் பெக்டெல்லின் துணைத்தலைவராக இருந்தவர். தன்னைத் தவிர

வேறு யாரும் பணம் கொழிக்கும் கால்வாய்க் கட்டுமானத் திட்டத்தில் கை வைக்கக்கூடாது என்று நினைக்கிறது பெக்டெல். கால்வாய் கட்டுமானத்தின் மூலம் ஜப்பான் செல்வாக்கு பெற்றுவிடும் என்று அஞ்சுகிறது புஷ், ரீகன் நிர்வாகம். இதில் பாதுகாப்பு அம்சங்கள் மட்டுமல்ல வர்த்தக நலன்களும் பறிபோவதாகக் கருதுகிறார்கள். அமெரிக்க கட்டுமான நிறுவனங்கள் பல பில்லியன் டாலர்களுக்காக வரிந்து கட்டுகின்றன.

ஆனாலும் நோரிகோ டோரிஜோஸ் அல்ல. தனது முன்னால் தலைவர் அளவிற்கு செல்வாக்கோ சமயோசிதத் திறனோ பெற்றவரல்ல. ஊழலிலும், போதைமருந்து விவகாரங்களிலும் வேண்டாத பெயர் பெற்றவர். தனது அரசியல் போட்டியாளரான லூகோ ஸ்பாடாபோராவை கொல்ல முயன்றதாக சந்தேகிக்கப்பட்டவர்.

சிஐஏவுடன் ரகசிய உறவு கொண்ட ஜி 2 எனும் பனாமாப் பாதுகாப்புப் படையின் உருவாக்கத்தில் பெயர் பெற்றவர். அந்தக் கோதாவில் சிஐஏவின் இயக்குனர் வில்லியம் ஜே.கேஸியுடன் உறவை வளர்த்துக்கொண்டவர். அந்த உறவை சிஐஏ தனது கரீபிய, மத்திய, அமெரிக்கத் தெற்குப் பிராந்திய ஆட்டத்திற்குப் பயன்படுத்திக்கொண்டது. உதாரணமாக 1983 ல் ரீகன் நிர்வாகம் கிரனடாவை ஆக்கிரமிப்பதற்கு முன் எச்சரிப்பதற்கு காஸ்ட்ரோவிடம் நோரிகாவை தூது செல்லுமாறு கேட்டார் கேஸி. கேனல் நோரிகா கொலம்பியர்களுக்கு மத்தியிலும் போதை மருந்து கடத்தல்காரர்கள் மத்தியிலும் சிஐஏ ஊடுருவ ஒத்துழைத்தார்.

பனாமாப் பாதுகாப்புப் படையின் ஜெனரலாகவும் தலைமைக் கமாண்டராகவும் 1984 இல் பதவியுயர்வு பெற்றார். கேஸி பனாமா நகர விமானநிலையத்தில் இறங்கியதும் எங்கே என் பையன்? எங்கே என் பையன் நோரிகா? என்று கேட்டதாக ஒரு செய்தி உண்டு. அதேபோல நோரிகா வாஷிங்டன் வந்தபோது கேஸி வீட்டில் இருவரும் தனிப்பட்ட முறையில் சந்தித்துக்கொண்டதாகவும் சொல்லப்படுவதுண்டு. சில ஆண்டுகளுக்குப் பின்னர் இதை நோரிகா ஒப்புக்கொண்டு கேஸியுடனான உறவு தனக்கு ஒரு பாதுகாப்புணர்வை அளித்ததாகக் கூறியதுண்டு. தனது நாட்டிற்கு ஜி 2 போல அமெரிக்க அரசாங்கத்திற்கு சிஐஏ ஒரு பலம் வாய்ந்த சக்தி என்று அவர் கருதியிருந்தார். கால்வாய்ப் பகுதியில் உள்ள ராணுவத்தளத்திற்கும், கால்வாய் ஒப்பந்தத்திலும்தான் அமெரிக்காவிற்கு எதிரான நிலைபாடு கொண்டிருந்தபோதிலும் கேஸி தனக்குப் பாதுகாப்பு அளிப்பார் என்று நம்பியிருந்தார்.

நீதியின் சமத்துவத்தின் சின்னமாக விளங்கிய டோரிஜோஸின் வழி வந்த நோரிகா ஊழலுக்கும், சர்கேட்டிற்கும் பெயர் பெற்று விளங்கினார். ஜூன் 12 1986 அன்று நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் புலிட்ஜர் விருதுபெற்ற பத்திரிகையாளர் முதல்பக்கத் தலைப்புச் செய்தியில் பனாமாவின் வலிமைமிக்க மனிதர் கள்ளப் பணத்திற்கும், போதைத் தொழிலுக்கும் துணைபோனவர் என்று எழுதி அவரது குற்றங்களை உறுதிப்படுத்தினார். லத்தீன்அமெரிக்க தொழில்கள் பலவற்றில் பினாமிப் பங்குதாரர் என்று குற்றம் சுமத்தினார். அமெரிக்கா, கியூபா இரண்டு நாடுகளுக்கும் இரட்டை உளவு முகவராக இருந்ததாக அப்பத்திரிகை எழுதியது. ஹூகோ ஸ்படாபோராவின் தலை நோரிகாவின் உத்தரவால்தான் துண்டிக்கப்பட்டது. நேரடியாகவே போதைமருந்து கடத்தல் தொழிலில் ஈடுபட்டிருந்தார் என்றும், அனைத்து முக்கியமான போதைமருந்துகளும் பனாமாவில் புழங்கிக்கொண்டுள்ளன என்றும் எழுதியது. அக்கட்டுரையுடன் மிகைப்படுத்தாத ஓவியத்தையும் வெளியிட்டு கட்டுரை அடுத்த நாளும் தொடரும் என்று கூறப்பட்டிருந்தது.

நோரிகாவிற்கு இருந்த மற்ற பிரச்சனைகளுடன் அமெரிக்க ஜனாதிபதியும் ஒரு சுமையை ஏற்றி வைத்தார். பனாமா அபாய நிலைக்கண்ணி என்ற பத்திரிகையாளர்களின் வர்ணனையில் புஷ் பாதிப்படைந்திருந்தார். ராணுவப்பள்ளியை பதினைந்தாண்டுகள் நீட்டித்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்ற அமெரிக்காவின் வேண்டுகோளுக்கு நோரோகோவின் நிர்தாட்சண்யமான மறுப்பு சிறப்புக் கவனம் பெற்றது. ஜெனரலின் நினைவுகள் நமக்கு சுவாரஸ்யத்தை அளிக்கிறது.

டோரிஜோஸின் அடியொற்றிச் செல்வதை நாம் பெருமையாகக் கருதுகிறோம். அதை அமெரிக்கா விரும்பவில்லை. ராணுவப் பள்ளி நிறுவவோ அல்லது அது தொடர்பான பேச்ச வார்த்தை நடத்தவோ விரும்புகிறது. மத்தியஅமெரிக்காவில் யுத்த தயாரிப்பு நடவடிக்கைக்கு அப்பள்ளி அவசியம் என்று கூறுகிறார்கள். ஆனால் அமெரிக்கர்களின் அப்பள்ளி நமக்கு எரிச்சலூட்டுகிறது. வலதுசாரி ராணுவத்தின் மரணப் படைக்காக இங்கே நமது மண்ணில் ஒரு பயிற்சித் தளம் இருப்பதை நாம் விரும்பவில்லை என்கிறார் நோரிகோ.

எனவே அமெரிக்கா நடவடிக்கையில் இறங்கும் என்று உலகம் எதிர்பார்த்தே இருந்தது. ஆனால் 1989 டிசம்பர் 20 அன்று இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் ஒரு நகரத்தின் மீது மிகப் பயங்கரமான விமானத்தாக்குதல் நடத்தப்பட்ட செய்தியறிந்து உலகமே

அதிர்ச்சியுற்றது. எந்தக் குரலும் எழுப்பமுடியாத சாமான்ய மக்களின் மீது நடத்தப்பட்டத் தாக்குதல் அது. பனாமாவோ, அதன் மக்களோ அமெரிக்காவிற்கோ அல்லது வேறுநாட்டிற்கோ எந்த வகையிலும் அச்சறுத்தலாக இல்லை. சர்வதேச விதிகளுக்குப் புறம்பான இந்தப் போரை அமெரிக்காவின் நியாயமற்ற நடவடிக்கை என்று எதிர்த்தன உலகநாடுகளும், பத்திரிகைகளும்.

இதே ராணுவ நடவடிக்கை அப்பட்டமான பெரும் படுகொலைகள் புரிந்த, மனிதஉரிமை மீறல் குற்றங்கள் புரிந்த பினோசெட், சிலி, ஸ்ட்ரேஸ்னரின் பராகுவே, சோமோஸாவின் நிகாரகுவா, டே அவுபசனின் எல்சால்வடார், சதாமின் ஈராக் போன்ற நாடுகளில் மேற்கொண்டிருந்தால் உலகம் ஓரளவு புரிந்து கொள்ளும். அதிகாரத்தைத் தம் கையில் வைத்திருந்த அரசியல்வாதிகளுக்கும், பன்னாட்டு நிறுவன அதிகாரிகளுக்கும் பணிய மறுத்தது தவிர வேறெந்தக் குற்றமும் செய்யாதவர்கள் பனாமா மக்கள். கால்வாய் மீதான ஒப்பந்தம் மதிக்கப்பட வேண்டும் என்று விரும்பினார்கள். சமூக சீர்திருத்தவாதிகளிடம் அதுபற்றி கலந்தாலோசித்தார்கள். ஜப்பான் உதவியுடன் புதிய கால்வாய் கட்டுவதற்கு முயற்சித்தார்கள். அதன்விளைவாகப் பேரழிவை எதிர்கொண்டார்கள். நோரிகா இதுபற்றி

''நான் தெளிவுபடுத்த விரும்புவது இதுதான். 1986 இல் கட்டவிழ்த்து விட்ட பொய்ப்பிரச்சாரம் இப்போது 1989 இல் ஆக்கிரமிப்பில் முடிந்துள்ளது. இது கால்வாய் சுதந்திரமான பனாமாவின் கட்டுப்பாட்டில் இருப்பதை விரும்பாததன் விளைவு. எதிர்காலத்தில் கால்வாய் இறையாண்மை கொண்ட சுதந்திரப் பனாமாவின் கையில்தான் இருக்கும், ஜப்பானின் ஆதரவுடன். மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி அவர்களின் நலனுக்காக என்று கூறி, என்னைச் சுட்டுக் கொன்றுவிட்டு தங்களது வணிகத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக ஷல்ட்ஸும், வெய்ன்பர்கரும் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்'' என்று அறிக்கை வெளியிட்டார்.

ஒரு மனிதர் மீது அவதூறைப் பரப்பித் தன் செயலுக்கு நியாயம் கற்பித்தது வாஷிங்டன். தன் நாட்டு இளைஞர்களையும், இளம்பெண்களையும் ஏவி விட்டு அப்பாவி மக்களையும் எண்ணற்றக் குழந்தைகளையும் கொன்று குவிக்கவும், பெரும்பகுதிப் பனாமாவை தீயிட்டுக் கொளுத்தவும் முழுக் காரணி நோரிகா என்றது. அவரைப் போதைமருந்து கடத்தும் பூதமாகவும் மக்களின் விரோதியாகவும் கதை கட்டியது. அப்படிப்பட்ட ஒருவன் ஆரும் இருபது லட்சம் பேர் கொண்ட நாட்டை கைப்பற்றுதல்

குற்றமாகாது. அந்த நாட்டின் நிலம் உலகின் கண்களுக்குப் பெருமதிப்பு உடையது என்பதற்காக இந்த ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை. நோரிகாவின் பொருட்டே ராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கூறியது அமெரிக்கா.

''இந்த ஆக்கிரமிப்பு என்னைப் பல நாட்களுக்குக் கடுமையாகப் பாதித்தது. நோரிகாவிற்கு பலமான மெய்க்காவல் வளையம் உண்டு என்பது தெரிந்தாலும் ரோல்டோலை, டோரிஜோஸைப் போல அவரை ஒநாய்கள் குதற முடியாது என்று சொல்ல முடியுமா?'' அந்த மெய்க்காவலர்களில் கூட அமெரிக்க அதிகாரிகளிடம் பயிற்சி பெற்றவர்கள் இருப்பார்கள். அவர்களே நோரிகாவைக் கொல்லலாம். அல்லது அவர்களுக்குப் பணம் கொடுத்துக் கொல்லச் செய்யலாம்.

ஆக்கிரமிப்புகள் குறித்து நிறைய சிந்தித்தேன், படித்தேன். எனவே உலக ஏகாதிபத்தியமாவதற்கு அமெரிக்கா நாகுக்கு, நளினங்களை விட்டு நேரடியாகக் களத்தில் இறங்கிவிட்டது. ரீகன் நிர்வாகத்தைக் காட்டிலும் தான் வேகமாகச் செயல்படுவதை, ஏகாதிபத்தியமாவதற்கு எத்தனை பெரிய நேரடித் தாக்குதலில் இறங்குவோம் என்பதை உலகிற்கு உணர்த்துவதற்காக புஷ் நிர்வாகம் இறங்கிவிட்டதாகத் தோன்றியது. அதற்கும் மேலாக டோரிஜோஸைக் கொன்றுவிட்டு அந்த இடத்தில் தனக்கு ஆதரவான பொம்மை அரசைத் தன்னால் நிறுவமுடியும் என்பதை ஈராக்கிற்கு உணர்த்துவதற்காகவும் எடுக்கப்பட்ட நடவடிக்கை இது என்று நினைத்தேன்.

பல நூல்களை எழுதியவரும், நியூயார்க் பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் முக்கியப்பங்கு வகிப்பவருமான ஷோட்டிங் ஹூன் என்ற நூலில் சுவாரஸ்யமான அவதானிப்பைப் பதிவு செய்துள்ளார்.

அமெரிக்காவில் ஆட்சியாளர்கள் உலகின் மூலை முடுக்கெங்கும் பரவி ஆயிரக்கணக்கான வலிமைமிக்கவர்களுடன், பலம்வாய்ந்த சக்திகளுடன், ராணுவ ஆக்கிரமிப்பாளர்களுடன், யுத்தப் பிரபுக்களுடன் உறவாடிக்கொண்டுதான் இருக்கின்றனர். அவர்களில் ஒருவரான நோரிகா மட்டுமே இப்போது அமெரிக்கர்களின் கண்களுக்குத் தெரிய வந்துள்ளார். 225 ஆண்டுகால பாரம்பரியமிக்க அமெரிக்க வரலாற்றில் ஒருபோதும் செய்திராத வகையில் தன் நாட்டிற்குள் அந்நியச் சட்டங்களை மீறியதாக இன்னொரு நாட்டிற்குள் புகுந்து அதன் ஆட்சியாளரை அமெரிக்காவிற்குத் தூக்கிக்கொண்டு வந்து விசாரணையும், தண்டனையும் தரவிருக்கிறார்கள்.

குண்டு வீச்சைத் தொடர்ந்து தான் நெருக்கடியில் சிக்கிக் கொண்டதாக உணர்ந்தது அமெரிக்கா. வாலில் நெருப்புப் பற்றிக் கொண்டதாகக் கருதியது. தன்னைப் பற்றிய வதந்திகளுக்கு மூட்டை கட்டியிருக்க வேண்டும் புஷ் நிர்வாகம். ஆனால் இப்போது பயங்கரவாதச் சட்டத்தின் பிடியில் மாட்டிக்கொண்டது. கடுமையான குண்டுவீச்சு நிகழ்த்தப்பட்டப் பகுதிகளில் மூன்று நாட்களாக பத்திரிக்கையாளர்களையும், செஞ்சிலுவைச் சங்கத்தினரையும் நுழையவிடாமல் ராணுவம் தடுத்து நிறுத்தி விட்டு, கொல்லபட்டவர்களைசிப்பாய்கள் எரியூட்டிய, புதைத்த உண்மை தெரிய வந்தது. குற்றவாளிகள் குறித்தும், தவறான நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் குறித்தும் என்ன ஆதாரங்களைப் பெற முடிந்தது என்று ஊடங்கள் எழுப்பிய கேள்விகளுக்கும், குண்டுவீச்சில் கொல்லப்பட்டவர்கள், உரியநேரத்தில் மருத்துவம் அளிக்கப்படாமல் உயிரிழந்தவர்கள் எத்தனை பேர் என்பதற்கும் அமெரிக்க அரசிடம் பதில் இல்லை.

ஆக்கிரமிப்பிற்கான பல்வேறு காரணங்களையோ அல்லது கொலையுண்டவர்களின் உண்மையான எண்ணிக்கையையோ நம்மால் தெரிந்துகொள்ள முடியாது. பாதுகாப்புச் செயலாளர் ரிச்சர்டு சென்னி கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை ஐநூறிலிருந்து அறுநூறு வரை என்கிறார். சுதந்திரமான மனித குழுக்கள் கணக்கில் மூவாயிரம் பேரிலிருந்து ஐயாயிரம் பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம், இருபத்தி ஐயாயிரம் பேர் வீடற்றவர்களாக்கப்பட்டனர். நோரிகாவைக் கைது செய்து மியாமி கொண்டு சென்று விசாரணை நடத்தி நாற்பதாண்டுகள் சிறைத் தண்டனை விதித்தனர். அந்த நேரத்தில் போர்க்குற்றவாளியாக அறிவிக்கப்பட்டவர் அவர் மட்டுமே.

உலகமே கொந்தளித்தது, சர்வதேச விதிமீறலுக்காகவும், இக்கோளத்திலேயே வலிமைமிக்க ராணுவம் ஏதுமற்ற அப்பாவி மக்கள் மீது எவ்விதக் காரணமும் இன்றி தாக்குதல் தொடுத்ததற்காகவும். ஆனால் அமெரிக்கர்களில் சிலர் மட்டுமே விதிமீறல் நடந்துள்ளது என்பதையும், வாஷிங்டன் போர்க்குற்றம் புரிந்துள்ளதையும் உணர்ந்திருந்தனர். மக்களுக்கு உண்மை தெரியாது. அதற்குப் பல காரணங்கள் உண்டு. அரசின் கொள்கை, பத்திரிகையாளர்களையும், தொலைக்காட்சியினரையும், காங்கிரஸ் உறுப்பினர்களையும் தொலைபேசியில் அழைத்து நாமிருந்த அபாயகரமான நிலையில் இதைத்தவிர வேறு நடவடிக்கை எடுக்க

முடியாது என்று வாதிட்டது வெள்ளை மாளிகை. இப்போது மக்களுக்குத் தேவை இலட்சியத்தைவிட நாயகர்களே என்று பத்திரிகையாளர்களும் கருதின.

இதற்கு ஒரே ஒரு விதிவிலக்கு பீட்டர் எய்ஸ்னர். நியூஸ் டே பத்திரிகையின் ஆசிரியரும், அசோசியேட்டட் பிரஸ் செய்தி முகவருமான அவர் தொடர்ந்து பல ஆண்டுகளாக பனாமா ஆக்கிரமிப்புப் பற்றிய செய்திகளையும், ஆய்வுகளையும் அளித்து வந்தார். எய்ஸ்னர் எழுதி 1997 இல் வெளியிட்ட த மெமொரீஸ் ஆப் மானுயேல் நோரிகா; அமெரிக்காஸ் பிரிஸனர் என்ற நூலில்

''நோரிகாவிற்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் கொலைகளும், அழித்தொழிப்புகளும், அநீதியும் இழைக்கப் பட்டிருக்கின்றன. அந்நிகழ்வுகளுக்காக நிறைய பொய்கள் அவிழ்த்துவிடப்பட்டுள்ளன. அமெரிக்காவின் அடிப்படைக் கொள்கையான ஜனநாயகமே மிரட்டலுக்குள்ளாகி இருக்கிறது. மோசமான சர்வாதிகாரியின் கொடுமையான பிடியில் இருந்து பனாமாவை மீட்பதற்காக என்று ராணுவச் சிப்பாய்களுக்கு கொலை உத்தரவு இடப்பட்டுள்ளது. அவர்கள் இக்காரியத்தைச் செய்ததும், அந்நாடே (அமெரிக்கா) ராணுவத்தின் பின் நின்றது.''

நோரிகாவிடம் மியாமிச் சிறையில் எடுத்த பேட்டி உட்பட நீண்ட ஆய்வில் அவர் நிறுவுவது

''முக்கியமான விபரங்களை வைத்துப் பார்க்கும்போது நோரிகா மீது குற்றம் சுமத்துவதற்கான ஆதாரங்களே இல்லை. ஒரு அந்நிய நாட்டின் ராணுவத் தலைவர் என்ற வகையிலோ இறையாண்மை உடைய நாட்டின் தலைவர் என்ற வகையிலோ பனாமாவை ஆக்கிரமிக்கும் அளவிற்கு அது அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு மிரட்டலாக இல்லை'' எனும் எய்ஸ்னர் தொகுத்துக் கூறுவது.

பனாமா ஆக்கிரமிப்பின் போதும் அதற்கு முன்னரும் நிலவிய அரசியல் சூழ்நிலைகளையும், எனது செய்திகளையும் வைத்து ஆராய்ந்து பார்க்கும்போது பனாமா மீதான ஆக்கிரமிப்பு அப்பட்டமான ராணுவத் தலையீடாகும். வல்லாதிக்க அமெரிக்க ஆட்சியாளர்களும் அவர்களது பனாமியக் கூட்டாளிகளும் தங்களது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக அநாவசியமான ரத்தக் களரியை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

கொலம்பியாவில் இருந்து பனாமாப் பிரிக்கப்பட்ட காலந்தொட்டு டோரிஜோஸிற்கு முந்தைய காலம் வரை அமெரிக்காவின் கைப்பொம்மைகளாகச் சேவகம் புரிந்த, அரியாஸ்

குடும்பமும், சிறுகும்பலும் பனாமாவில் ஆட்சியில் அமர்த்தப்பட்டன. புதிய கால்வாய் ஒப்பந்தம் விவாதத்திற்கு வந்தது. சுருங்கச் சொன்னால் எந்த ஆவணமும் இல்லாமல் கால்வாயைத் தனது கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்தது வாஷிங்டன்.

இந்நிகழ்வுகள் எனக்கு மெய்ன் கால அனுபவங்களை நினைவூட்டின. எனக்குள் மீண்டும் மீண்டும் ஒரேவிதமான கேள்விகள் எழுந்துகொண்டிருந்தன. பல்வேறு முடிவுகளை எடுக்கும் அதிகாரத்தில் இருப்போர் வரலாற்று முக்கியத்துவமான நேரங்களில் எத்தனை லட்சம் ஆண்களும், பெண்களும் அதற்கானத் தாக்கத்தை அளித்துள்ளார்கள் என்பதை இதுதான் சரியானது என்பதற்கு மாறாக தன்னலனை முன்னிறுத்தி எத்தனை முடிவுகள் எடுக்கப்படுகின்றன? அரசின் உயரதிகாரிகள் எத்தனை பேர் சுயபேராசைக்குப் பதிலாக நாட்டிற்கு விசுவாசமாக இருக்கிறார்கள்? ஜனாதிபதியின் பலவீனத்தை மூடி மறைப்பதற்காக எத்தனை போர்கள் நடத்தப்படுகின்றன?

பனாமா மீதான ஆக்கிரமிப்பால் ஏற்பட்ட விரக்தி, ஸ்டோன் வெப்ஸ்டருக்கு நான் கொடுத்த உத்திரவாதத்தையும் மீறி, இப்போதைக்கு டோரிஜோஸை மையப்படுத்தி புத்தகம் எழுதலாம் என்று நினைத்தேன். இந்த உலகில் எத்தனை அநீதிகள் நிகழ்கின்றன என்பதை டோரிஜோஸ் கதையின் வாயிலாக வெளிப்படுத்துவதோடு என்னை அழுத்தும் குற்றவுணர்ச்சியில் இருந்து மீள்வதற்கும் முயன்றேன். இந்த முறை நண்பர்களின் ஆலோசனைக்கோ, பார்வைக்கோ அனுப்புவதில்லை என்று தீர்மானித்துவிட்டேன்.

அந்த நூலை எழுத எழுத பல இடங்களில் எத்தனை பிரமாண்டமான வேலைகளை பொருளாதார அடியாட்களாகிய நாங்கள் செய்து முடித்திருக்கிறோம் என்பதை நினைத்து மலைத்துப் போனேன். சில நாடுகளில் செய்த வேலையை மட்டும் முன்வைப்பது என்று தீர்மானித்தேன். சரியாகத்தான் வந்தது. ஆனால் நான் செய்த வேலைகளால், அந்த இடங்கள் அடைந்த மோசமான கதி மனதைப் பிசைந்தது. எத்தனை மோசமான சூழல்களைச் செய்திருக்கிறேன் என்பதை நினைத்துப் பார்த்ததுண்டு தான். என்னை நானே ஆத்ம பரிசோதனை செய்திருக்கிறேன். இருந்தாலும் அதற்குள்ளேயே இருந்ததால் விளைவுகள் அப்போது இத்தனைத் துல்லியமாகத் தெரிந்ததில்லை. எனது கவனம் முழுதும் அன்றாட வேலைகளிலேயே இருந்துவிட்டது. அந்த வகையில் ராணியும் அவனது இந்தோனேசிய நண்பர்களும் எழுப்பிய பிரச்சனைகள், ஹாவர்டு பார்க்கர் என்னுடன் நடத்திய விவாதம்

அனைத்திலும் எரிச்சலுற்றேன். பனாமாவில் பிடலுடன் சுற்றியபோது அவன் காட்டிய கால்வாய்ப் பிரதேசத்திலும், சேரிப்பகுதியிலும், டிஸ்கோதேயிலும் ஒரு தாக்கம் பெற்றிருந்தேன். ஈரானில் யாமின், டாக்டருடன் நடத்திய உரையாடல்கள் மனதை இடைவிடாமல் தொந்தரவு செய்தன. இவற்றை எழுத்தில் கொண்டுவரும்போது அனைத்து நிகழ்வுகளும் கண் முன்னே தோன்றின. எனது வேலைகளின் விரிந்த சித்திரத்தைக் காணாமல் இருப்பது எத்தனை வசதியானது என்பதையும், ஆகவே எனது செயல்பாடுகளின் மெய்யான விளைவுகளையும் தவிர்க்க முடிந்திருக்கிறது என்பதையும் புரிந்துகொண்டேன்.

எவ்வளவு சின்ன மாற்றங்களுக்கும் எத்தனை பெரிய உள் அனுபவங்கள் நிகழவேண்டியிருக்கிறது. என்னிலையை ஒரு சிப்பாய் படிமத்தில் நிறுத்திப் பார்க்கிறேன். துவக்கத்தில் பிறரைக் கொல்ல அவன் மனம் இடந்தருவதில்லை. அந்த நிலையில் அவன் ஒரு சாமான்யனாகத்தான் இருக்கிறான். ஆனால் சொந்த உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய நெருக்கடி ஏற்படும்போது முதல் எதிரியைக் கொல்கிறான். இச்செயல் அவனையறியாமல் உணர்ச்சி வயப்பட்டு நிகழ்ந்துவிடுகிறது. பின்னர் இறந்தவனின் குடும்பத்தை நினைத்துப்பார்த்துக் கழிவிரக்கமடைகிறான். காலப்போக்கில் அடுத்தடுத்த போர்க்களங்களைச் சந்திக்க நேரிடுகிறது. நிறைய மக்களைக் கொல்கிறான். அவன் மனது இறுகிவிடுகிறது. பின்னர் ஒரு முழுமையானத் தொழில்முறைச் சிப்பாய் ஆகிவிடுகிறான்.

நானும் ஒரு தொழில்முறை சிப்பாய் போன்றவன்தான். உலக ஏகாதிபத்தியத்தை உருவாக்க எத்தனைக் குற்றங்களைச் செய்திருக்கிறோம் என்பதை முழுமையாகப் புரிந்துகொள்ள உண்மையை ஒப்புக்கொண்டாக வேண்டும். மனிதர்கள் எப்படி இவ்வளவு கொடூரமான செயல்களைச் செய்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. உதாரணமாக தன் குடும்பத்தை நேசிக்கிற நல்ல ஈரானியன் ஒருவன் ஷாவின் பயங்கரமான ரகசியப் போலீஸுக்கு வேலை செய்ய முடிகிறது. எத்தனை நல்லவர்களான ஜெர்மானியர்கள் ஹிட்லரின் உத்தரவிற்குப் பணிந்தார்கள். எத்தனை நல்ல ஆண்களும், பெண்களும் பனாமா நகரத்தின் மீது குண்டு வீசினார்கள்.

பொருளாதார அடியாள் என்ற வகையில் நான் ஒரே ஒரு பென்னியைக் கூட தேசியப் பாதுகாப்புப்படையில் இருந்தோ, அல்லது அரசாங்க முகவரிடமிருந்தோ பெற்றதில்லை. எனக்கான ஊதியத்தை மெய்ன்தான் வழங்கியது. தனித்த குடிமகனாகிய நான், ஒரு தனியார் நிறுவனத்திற்கு வேலை செய்தேன். இப்படிப்

புரிந்துகொண்டதால்தான் என்னால் ஒரு பன்னாட்டு நிறுவனத்தின் அதிகாரியாக அடியாள் வேலையை முழு மனதோடு செய்ய முடிந்தது. உலகஅரங்கில் இப்போது புதிய வடிவிலான சிப்பாய் காட்சி தருகிறான். இவன் என்ன செய்கிறான் என்பதை அறியாமலே வேலையைச் செய்துகொண்டிருக்கிறான். இதுபற்றி நான் எழுதியது

''குறைந்த கூலிக்கு ஆட்களைத் தேடி இன்று தாய்லாந்திற்கும், பிலிப்பைன்ஸ், பொலீவியா, போஸ்ட்வானா மற்றும் இதுபோன்ற நாடுகளுக்கு அலைகிறார்கள். ஏற்கனவே வஞ்சிக்கப்பட்ட மக்களை, பலவகைகளிலும் தங்கள் குழந்தைகளைப் போதிய சத்தின்றி வாட விட்ட, பட்டினியால் வாடுகிற, புழுதியில் படுத்துப் புரள்கிற, நல்லவாழ்க்கைக்கான அனைத்து நம்பிக்கைகளையும் இழந்துவிட்ட, அடுத்தநாளுக்கான கனவும் பறிக்கப்பட்ட மக்களிடம் அதிவிரைவாகச் சுரண்டுவதற்காக அவர்களைத் தேடிப் போகிறார்கள். சகல வசதிகளும் நிரம்பிய தங்களது மன்ஹாட்டன், சான்பிரான்சிஸ்கோ அலுவலகங்களில் இருந்து இளம்பி ஆடம்பர ஜெட்விமானத்தில் கண்டம் விட்டுக் கண்டம் தாவிப் பறக்கிறார்கள். முதல்வகுப்பு ஒட்டல் அறைகளில் தங்குகிறார்கள். உயர்தரமான உணவகங்களில் உண்கிறார்கள். பின்னர் சுரண்டலுக்காக ஏழை எளிய மக்களைத் தேடி அலைகிறார்கள்.''

''அடிமை வியாபாரம் இன்றும் நடந்துகொண்டுதான் இருக்கிறது. அது எங்கே என்று பார்க்க வெகுதூரம் ஆப்பிரிக்கக் காடுகளுக்குள் அலைய வேண்டியதில்லை. பணத்தை மூட்டை கட்டிக்கொண்டுபோய் சார்லஸ்டன்னிற்கும், கர்டாஜெனாவிற்கும் ஹவானாவிற்கும் அலைந்து அடிமைகளை ஏலத்தில் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏதுமற்ற மக்களை மிக எளிதாக வேலைக்கு அமர்த்த முடியும். பெரிய கட்டடங்களைக் கட்டி அதில் நீல நிற ஜீன்ஸ், மினுமினுப்பான ஜெர்கின், டென்னிஸ் ஷூக்கள், தானியங்கிகளுக்கான உதிரிப்பாகங்கள், கணினி நுண் பொருட்கள், இதுபோன்ற ஆயிரக்கணக்கான பொருட்களை உற்பத்திசெய்ய வைத்து விருப்பத்திற்கு ஏற்றபடி தேர்வு செய்ய சந்தைகளில் விற்கிறார்கள். அல்லது இந்த கேடுகெட்ட வேலைகளைத் தம் கையால் தொடாமல் தொலைதூரத்தில் உள்ள உள்ளூர் முதலாளிகளை தங்களுக்காக செய்ய வைக்கிறார்கள்.''

இந்த வேலைகளைச் செய்யும் அதிகாரக் கூலிகள் தாம் செய்வது தம்மளவில் சரியென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். குறைந்த கூலிக்கு ஆள் பிடிக்க வந்தவர்கள் அந்நாடுகளைச் சுற்றிப்பார்த்துத் தொன்மைச் சிதைவுகளை படமெடுக்கிறார்கள் தங்கள் குடும்பத்தினருக்குக் காட்ட. ஆய்வரங்களில் கட்டுரைகள்

வாசித்து ஒருவர் முதுகை ஒருவர் தட்டிக்கொடுத்து சிற்சிறு யோசனைகளை பகிர்ந்து கொள்கிறார்கள். தூரத் தீவுகளில் வாழும் மக்களிடம் இன்னமும் நீடிக்கும் பழக்கங்கள் குறித்து இகழ்ந்துபேசி கேலிச்சிரிப்புச் சிரிக்கிறார்கள். அவர்களது முதலாளிமார்கள் தாங்கள் செய்யும் தொழிலை கச்சிதமாகச் சட்டப்படி செய்ய வக்கீல்களை அமர்த்திக் கொள்கிறார்கள். மருத்துவர்களை அமர்த்தி சான்றிதழ் பெற்று உற்பத்தித்திறன் அற்றவர்களை ஆலையை விட்டுத் துரத்துகிறார்கள். ஆனால் மறுபுறத்தில் ஏழைகளுக்கு வேலைவாய்ப்பு அளித்து அவர்களை முன்னேற்ற முயற்சிப்பதாகப் பசப்புகிறார்கள்.

பழைய அடிமையாகிய வணிக வியாபாரி இவர்களைப் பார்த்துக் கூறுகிறான் நான் முழு மனிதனாகாத ஒரு உயிர்ப்பிராணியைத்தான் விற்றேன். அந்த அடிமை கிறித்துவத்திற்குத் தன்னை ஒப்புக்கொடுக்க ஒரு வாய்ப்பளித்தேன். தன் சமூக அடிப்படைக்கு, பொருளாதார அடிப்படைக்கு தன்னைப்போன்ற அடிமைகள் அவசியம் என்றுதான் அவன் புரிந்திருந்தான். ஆனால் நவீன அடிமைகளோ, இந்த ஏதுமற்ற மக்களோ கையில் ஒரு தம்பிடியும் இல்லாத நிலையில் ஒருநாளைக்கு ஒரு டாலர் கிடைத்தாலே புண்ணியம் என்று நினைக்கிறார்கள். தான் உலக சமூகத்தில் கரைந்துவிட்டதாகக் கருதுகிறான். ஏதுமற்ற மக்கள் தங்களது நிறுவனம் பிழைத்திருக்கத் தாங்களே ஆதாரம் என்று கருதுகிறார்கள். தங்களது வாழ்க்கைமுறைக்கு அதுதான் அடிப்படை என்றும் நினைக்கிறார்கள். தங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் பொருளாதார முறைதான் உலகத்தையே ஆட்டிப்படைக்கிறது என்பதையோ, அதுதான் தங்களது குழந்தைகளின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கிறது என்பதையோ நினைத்துப்பார்க்க முடியாது அவர்களால்.

அத்தியாயம் - 31

ஈராக்கில் மண்ணைக் கவ்விய அடியாட்கள்

எனது ஐபிஎஸிற்குத் தலைவராக 1980-களில் இருந்ததாலும், ஸ்டோன்வெப்ஸ்டருக்கு 90-கள் முழுக்க ஆலோசகராகவும் இருந்ததும் மற்ற யாரையும்விட ஈராக்கைப்பற்றி நிறைய தகவல்கள் தெரிந்துகொள்ள எனக்கு வசதியாயிற்று. அமெரிக்கர்கள் பெரும்பாலும் ஈராக் குறித்து குறைவாகவே அறிந்திருந்தனர். ராடார் திரையில் அந்நாட்டைக் காணமுடியாது என்பதால் எனக்கு அந்நாடு குறித்து விசேச ஆர்வம் இருந்தது.

உலகவங்கி, சர்வதேச நிதி நிறுவனம், அமெரிக்க வளர்ச்சி வங்கி, பிற பெக்டெல் போன்ற பன்னாட்டு நிறுவனங்களில் உள்ள எனது பழைய நண்பர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தேன். தொழில்முறை உறவிற்காக எனது மாமனாருடனும் அவ்வப்போது பேசிக்கொள்வதுண்டு. என்னுடன் அடிக்கடி பேசுகிற பொறியாளர்கள் பலர் ஐபிஎஸுக்கு அமர்த்தப்பட்டவர்கள், அதுபோக துணை ஒப்பந்ததாரர்களிடம் எனக்குள்ள உறவு இவற்றை வைத்துப் பார்க்கும்போது மற்ற நாடுகளைப் போல ஈராக்கில் பொருளாதார அடியாட்களின் பாச்சா பலிக்கவில்லை என்று தெரிந்தது.

ஈராக்கை எப்படியாவது இன்னொரு சௌதிஅரேபியாவாக மாற்றிவிட வேண்டும் என்பது ரீகன்-புஷ் நிர்வாகத்தின் கனவு. சௌதி அரச குடும்பத்தைப் பின்பற்றவேண்டிய பல நெருக்கடிகள் சதாம் ஹுசைனுக்கு இருக்கத்தான் செய்தது. திரைமறைவு விவகாரத்தைக் கவனித்தால் போதுமானது நல்ல பணம் அறுவடை செய்துவிடலாம். அத்துடன் பாலைவனத்தில் நவீன நகரங்கள் எழுந்து நிற்கும். குப்பைகளை ஆடுகள் மேய்வதற்குப் பதிலாக ட்ரக்குகள் வலம் வரும். கடல்நீரை குடிநீராக்குதல், கழிவுநீரைச்

சுத்திகரித்தல், தொலைத்தொடர்பு, வலைப்பின்னல், மின்னுற்பத்தி என உலகின் அதிநவீன நுட்பங்களையும் சௌதி இப்போது நுகர்ந்து கொண்டுள்ளது.

சர்வதேச விசயங்களிலும் அது செல்லப் பிள்ளையாக இருப்பது ஹுசைனுக்குத் தெரியும். அதன் பண விவகாரங்கள், உலகின் பல பகுதிகளில் பயங்கர கலக நடவடிக்கைகளில் ஈடுபடும் மதப் பழமைவாத அமைப்புகளுக்குச் செய்யும் உதவி ஆகியவற்றில் சௌதியின் பெயர் அடிபடும்போது அதன் வாஷிங்டன் நண்பர்கள் கண்ணை மூடிக்கொள்வார்கள். சொல்லப்போனால் ஆப்கானிஸ்தானில் ஒசாமா பின்லேடன் சோவியத் யூனியனுக்கு எதிராக நடத்தும் போரை அமெரிக்க வரவேற்கவே செய்தது தானடிக்கும் கொள்ளை மீது உலகின் கவனம் விழக்கூடாது என்பதற்காக அமெரிக்கா சௌதியின் மேற்படி நடவடிக்கைகளை மட்டுமல்ல இதுபோன்ற கலவரங்கள் எங்கு நடந்தாலும் அவற்றை ஊக்குவிக்கவே செய்தது.

பொருளாதார அடியாட்களின் இருப்பு 1980 களில் பாக்தாதில் மிகத் தீவிரமாக இருந்தது. சதாம் தங்கள் வலைக்குள் விழுந்து விடுவார் என்று நம்பினார்கள். எனக்கும் கூட அப்படித்தான் தோன்றியது. வாஷிங்டன்னுடன் சௌதியைப் போன்ற ஒரு உடன்பாட்டிற்கு வந்துவிட்டால் சதாம் தன் கையாலேயே தன் விதியை முடித்துக்கொண்டதுபோலாகும். பின்னர் அந்த செல்வாக்கை உலகின் பிற பாகங்களுக்கு அமெரிக்கா விரிவுசெய்து கொள்ளலாம்.

மக்களைத் துயரத்தில் ஆழ்த்தும் கொடுங்கோலாட்சி நடத்துவதோ, ஹிட்லருக்கு நிகரான பெருங்கொலைகள் புரிவதோ எல்லாம் ஒரு பொருட்டே அல்ல. இப்படிப்பட்டவர்களுடன் இணக்கமாக இருப்பதோடு அவர்களுக்கு அமெரிக்காவால் ஆதரவளிக்கவும் முடியும். அது ஒன்றும் அமெரிக்காவிற்குப் புதிதல்ல. எண்ணெய் வழங்கலுக்கு அமெரிக்க அரசின் பங்குப் பத்திரங்களைக் கேட்டால் கூட அளிப்பதற்கு நாங்கள் தயாராகவே இருந்தோம். அப்பத்திரங்களை அமெரிக்க பொறியியல் நிறுவனங்களுக்கு விற்று அவர் தன் நாட்டின் உள் கட்டுமானங்களை மேப்படுத்திக் கொள்ளலாம். ஈராக்கில் புதிய நகரங்களை உருவாக்கலாம். பாலைவனத்தை சோலை வனமாக்கலாம். நாங்கள் அவருக்கு ராணுவ பீரங்கிகளும், போர் விமானங்களும் விற்பதில் ஆர்வமாகவே இருக்கிறோம். அவரும் தன் நாட்டில் போர் ரசாயன ஆலைகளையும், அணுகுண்டுத் திட்டங்களையும் உருவாக்கலாம். இதை மற்ற நாடுகளுக்குச் செய்திருக்கிறோம்.

இன்றைக்கு முக்கியமானது என்று எடுத்துவைக்கக்கூடிய அனைத்திலும் அதிமுக்கியமானது ஈராக். அதன் எண்ணெய்க்காகவே முக்கியத்துவம் பெற்றுள்ளதாக பொதுக்கருத்து நிலவுகிறது. ஆனால் அதன் நீரும் நிலஅரசியலும் முக்கியமானதுதான். உலகின் முக்கியமான யூப்ரடீஸ், டைகரீஸ் ஆறுகள் பல்வேறு நாடுகள் வழியாக ஓடினாலும் ஈராக்கிலூடாக அதற்கு தனித்த முக்கியத்துவம் உண்டு. பல முக்கியமான வளங்களைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஈராக் அதிமுக்கிய வளமான நீரையும் தன் பிடியில் வைத்துள்ளது. ஆற்றல், பொறியியல் துறை அளவிற்கு நீர் இப்போது அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் முக்கியத்துவம் பெற்று வருகிறது. தனியார்மயமாதல் வேகத்தில் சிறிய நிறுவனங்களை ஏப்பம்விட்ட பெரு நிறுவனங்களின் கண் இப்போது நீர் மீது விழுந்திருக்கிறது. ஆப்பிரிக்காவில், லத்தீன்அமெரிக்காவில், மத்தியகிழக்கில் நீரை வியாபாரமாக்க முயற்சிக்கிறார்கள்.

நீர், எண்ணெய் இரண்டு அம்சத்திலும் ஈராக் மையமான இடத்தில் இருக்கிறது. அதன் எல்லை நாடுகள் ஈரான், குவைத், சௌதிஅரேபியா, ஜோட்ரான், சிரியா, துருக்கி ஆகியன. பாரசீக வளைகுடாவில் அதற்குக் கடற்கரையும் உண்டு. ஈராக்கிலிருந்து இஸ்ரேலுக்கும் சோவியத்யூனியனுக்கும் கணை ஏவுவது எளிது. பிரெஞ்சு செவ்விந்தியப் போரிலும், அமெரிக்கப் புரட்சியிலும் ஹட்சன் ஆற்று வெளி பெற்றிருந்த முக்கியத்துவத்திற்கு நிகரானது ஈராக்கின் நிலஅமைப்பு. பதினெட்டாம் நூற்றாண்டில் ஹட்சன் பள்ளத்தாக்கைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்போர் மொத்த கண்டத்தையும் அடக்கியாளலாம் என்பது பிரெஞ்சு, பிரிட்டிஷ், அமெரிக்கர்களுக்குத் தெரியும். அதுபோலவே இன்று ஈராக்கைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்போர் மொத்த மத்தியகிழக்கையும் தன் கைக்குள் கொண்டுவந்துவிடலாம் என்பது மிக எளிய உண்மை.

இவையத்தனையும் ஒருபுறமிருக்க அமெரிக்கப் பெருநிறுவனங்களின் பொறியியல் நுட்பத்தைச் சந்தைப் படுத்துவற்கான மிக விரிந்த களம் ஈராக்கில் உள்ளது உலகின் மிக தேர்ந்த எண்ணெய்ப் படிவங்களுக்கு மேல் ஈராக் அமர்ந்திருக்கிறது. (சிலபோது சௌதிக்கும் மேலாக). இதுவே உள் கட்டுமான, தொழில்மயத் திட்டங்களுக்குத் தேவையான நிதியாதாரத்தை உத்திரவாதப்படுத்துகிறது. அனைத்து பொறியியல், கட்டுமான, கணினி, விமான, ஏவுகணை நிறுவனங்களும், பீரங்கி உற்பத்தியாளர்களும், மருந்து மற்றும் ரசாயன நிறுவனங்களும் ஈராக் மீது வைத்த கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டு இருக்கின்றன.

பொருளாதார அடியாட்களின் சித்து வேலைகளுக்கெல்லாம் மசிபவராக இல்லை சதாம். இது புஷ் ரீகன் நிர்வாகத்திற்கு மிகப்பெரிய விரக்தியையும், ஆத்திரத்தையும் அளித்தது. ஜார்ஜ் புஷ்ஷிற்கு பனாமா போல ஈராக்கும் பாச்சா காட்டிக் கொண்டிருந்தது. சதாமை தன் கைகளுக்குள் விழத் தட்டுவதற்கான வழிகளைத் தேடத் தொடங்கியது. சதாம் 1990 இல் குவைத் சேக்கின் எண்ணெய் வயல்களை ஆக்கிரமித்தார். எவ்வித நியாயமும் இல்லாமல் பனாமாவை ஆக்கிரமித்து ஒராண்டு முடிவதற்குள், சதாமின் ஆக்கிரமிப்பிற்கு எதிராக சர்வதேச விதிக்கு ஆதரவாகக் குரல் எழுப்ப வந்துவிட்டார் புஷ்.

அனைத்தையும் ஒதுக்கிவைத்துவிட்டு ஈராக் மீது ராணுவத்தாக்குதல் நடத்தவும், சர்வதேசப் படையில் தன் பங்கிற்கு ஐந்து லட்சம் துருப்புகளை அமெரிக்க ஜனாதிபதி அனுப்பியதும் ஆச்சர்யமான ஒன்றல்ல. 1991 இன் துவக்க மாதங்களில் ஈராக் ராணுவத்தளங்கள் மீதும் நகரத் தெருக்களிலும் வான் தாக்குதல் நடத்தப்பட்டது. தரையிறங்கி அப்பாவி மக்கள் மீதும் ஆயுதமற்ற சிப்பாய்கள் மீதும் நூறுமணி நேரத் தாக்குதல் நடத்தப்பட்டது. குவைத் பாதுகாக்கப்பட்டது. ஈராக்கின் அனைத்து அதிகாரங்களையும் தன் கையில் வைத்திருந்த சதாம் நீதியின் முன் நிறுத்தப்படவில்லையானாலும் துரத்தியடிக்கப்பட்டார். அமெரிக்க மக்கள் மத்தியில் புஷ்ஷின் செல்வாக்கு 90 சதவீதம் உயர்ந்தது.

ஈராக் ஆக்கிரமிப்பின் போது நான் பாஸ்டனில் அலுவல் மீட்டிங்களில் கலந்துகொண்டிருந்தேன். ஸ்டோன் வெப்ஸ்டருக் காகவும் சில வேலைகள் செய்துதர வேண்டியிருந்தது. அலுவல் கூட்டங்களில் புஷ்ஷின் முடிவு ஆர்வமாக வரவேற்கப்பட்டதை அவ்வப்போது நினைவுபடுத்திக் கொள்வேன். அங்கிருந்தவர்கள் அனைவரும் போரில் வெற்றி பெற்றதற்காகப் பெரிதும் மகிழ்ச்சியடைந்தார்கள். ஒரு கொலைகார சர்வாதிகாரி தோற்கடிக்கப்பட்டதற்காக அல்ல. தமக்கு ஈராக்கில் புதிய வாய்ப்புகள் உருவாக்கப்படும், லாபங்கள் பெருகும், பதவி உயர்வுகள் அளிக்கப்படும் என்பதற்காக.

போரினால் நேரடி லாபம் கிடைக்கும் என்பதுடன் அந்த மகிழ்ச்சி நிறைவடைந்துவிடவில்லை. நாடெங்கிலும் மக்கள் தங்கள் ராணுவ பலம் நிரூபிக்கப்பட்டதற்காக அகமகிழ்ந்தார்கள். கார்டர் தோற்கடிக்கப்பட்டு ரீகன் வென்றது உட்பட இந்த அமெரிக்க மனப்பான்மைக்கு பல தத்துவார்த்தக் காரணங்கள் இருப்பதாக நம்புகிறேன். பனாமாக் கால்வாய் புதிய ஒப்பந்தத்திற்கான மறு பேச்சுவார்த்தைக்கு ரீகன் அழைப்பு விடுத்தது. ஏற்கனவே புகைந்து

கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் பற்றியெரிய வைத்து பனாமாவை ஆக்கிரமித்தற்கும், ஈரானிய பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்டதற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கருதுகிறேன்.

நாட்டுப்பற்று, செயல்துடிப்பிற்கான அறைகூவல் என்பதற்கு அடியில் மிகப்பெரிய அக மாற்றம் நிகழ்ந்து வருகிறது. அமெரிக்காவின் வணிக நோக்கு, பன்னாட்டு நிறுவனங்களில் சம்பளம் பெறுபவர்களின் உலகக் கண்ணோட்டம் ஆகியவற்றின் வழியாக உருவானது இந்த மாற்றம். ஒரு தேசமே உலக ஏகாதிபத்தியமாவதற்காக நெஞ்சுநிமிர்த்தி நடைபோடுகிறது. எங்கள் மனோதர்மத்தில் உருவான தனியார்மயம், உலகமயம் என்ற இரட்டை கருத்தாக்கம் நிதர்சனமாகி வருகிறது என்பதற்கான அறிகுறி இது.

நுணுகிப் பார்த்தால் இந்த எண்ணம் அமெரிக்காவிற்கு மட்டும் உரித்தான ஒன்றல்ல. உலக ஏகாதிபத்தியமாகும் கனவு அமெரிக்க எல்லையைத் தாண்டி அனைவருக்குள்ளும் துளிர்விட்டிருக்கிறது. ஏகாதிபத்தியம் என்ற கருதுகோளை அமெரிக்க நிறுவனங்கள் இன்று சட்டரீதியான நிஜமாக்கிக்கொண்டிருக்கின்றன. தங்கள் நிறுவனங்களுக்கு இசைவற்ற பல நாடுகளின் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் ஏற்ப தம்மை வளைத்து வணிக ஒப்பந்தங்களையும், வணிக அமைப்புகளையும், நடவடிக்கையும் உருவாக்கி உலக மயமாக்கலை மேலும் எளிமையானதாக மாற்றிக்கொண்டனர். ஜனநாயகம், சோசலிஸம், முதலாளித்துவம் என்ற வார்த்தைகளே அர்த்தமிழந்தன. நிறுவனவியமே நிஜமானது. உலக பொருளாதாரத்திலும், அரசியலிலும் செல்வாக்கு படைத்த ஒற்றைச் சக்தியாக தன்னை மட்டுமே முன்னிறுத்தி வளர்த்தெடுக்கிறது நிறுவனவியம்.

விசித்திரமான நிகழ்வாக 1990 நவம்பரில் எனது ஐபிஎஸ் விற்கப்பட்டபோது நான் நிறுவனவியத்தால் உறிஞ்சப்பட்டேன். அதில் எனக்கும் எனது பங்குதாரர்களுக்கும் பெருந்தொகை கிடைத்தது. ஆஷ்லேண்ட் எண்ணெய் நிறுவனத்திடமிருந்து எங்களுக்கு பெரும் நெருக்கடி கொடுக்கப்பட்டதே அதை விற்பதற்கு முதன்மையான காரணம். மாறாக எதிர்த்துப் போராடுவதற்கு அதிக விலை கொடுக்கவேண்டி வரும் என்பதை என் அனுபவத்தில் உணர்ந்து விற்றதால் பெருஞ்செல்வம் கிடைக்கப் பெற்றோம். இருந்தாலும் ஒரு எண்ணெய் நிறுவனமானது மாற்று ஆற்றல் உற்பத்தி நிலையத்தை வாங்குவது எனக்கு முரண்பாடாகவும், நான் ஏதோ துரோகம் இழைப்பது போலவும் தோன்றியது.

ஸ்வெ என் நேரத்தைக் குறைவாகவே எடுத்துக்கொண்டது. எப்போதாவது கூட்டங்களில் சரியான ஆலோசனை வழங்க பாஸ்டனுக்குப் பறப்பேன். சிலநேரம் ரியோ டி ஜெனிரோவிற்கு நிர்வாகச் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளுக்கு அனுப்பப்பட்டேன். சம்பளப் பேரேட்டில் என் பெயர் இருக்கும் நினைவூட்டலுக்காக அவ்வப்போது திட்ட மேலாளர்களின் அழைப்பின் பேரில் தனி ஜெட்டில் குவாதிமாலா செல்வேன். வேலையே செய்யாமல் இவ்வளவு அதிகமான சம்பளம் பெற்றதற்காக மனசாட்சி உறுத்தியது. தொழில் சிறப்பாக நடைபெறுவதற்கு என்னுடைய பங்களிப்பு குறைவானது என்றாலும் கூட முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் புரிந்துகொண்டேன். இருந்தாலும் இத்தனை பெருந்தொகை கொடுப்பதற்குக் காரணம் அது மட்டுமே அல்ல.

நான் நடுவாந்திரமானவன் என்ற எண்ணம் அலைக்கழித்தது. என்னுடைய இருப்பிற்கு நியாயம் செய்ய ஏதேனும் ஒரு முடிவிற்கு வந்தாக வேண்டும். முன்னர் செய்த பாதகமான செயல்களை ஈடு செய்யும் விதமாக வருங்காலத்தில் பயனுள்ள காரியங்கள் ஆற்ற வேண்டும். பொருளாதார அடியாளின் மனசாட்சி என்ற பிரதியை ஒரு மேலான தளத்தில் வைத்துத் தொடர்ந்துஎழுதிக் கொண்டிருந்தாலும் ஒரு சீராக எழுதவில்லை. அதை வெளியிட்டு விடுவேன் என்று நம்புவதற்கும் இல்லை.

அமேசான் காட்டில் ஷூவர் பழங்குடி மக்களுடன் பழகவும், அவர்களுடைய மருத்துவம், சுற்றுச் சூழல் காப்புணர்வு ஆகியவற்றைப் புரிந்துகொள்ளவும் விரும்பிய சிறுகுழுவிற்கு 1991-இல் வழிகாட்டியாகச் சென்றேன். அடுத்தடுத்த ஆண்டுகளில் அதற்கான தேவை வளர்ந்துகொண்டே இருந்ததால் கனவை மாற்றும் கூட்டணி என்ற சேவை அமைப்பைத் துவக்குவதற்கு அது தூண்டுதலாக அமைந்தது. தொழில்மய நாடுகளைச் சேர்ந்த மக்களின் பார்வையை மாற்றி பூமியை, பூமிக்கும் நமக்கும் உள்ள உறவை, வளர்ச்சி பற்றிய கனவை மாற்றுவதற்கான முயற்சியை மேற்கொண்டோம். விரைவில் பல நாடுகளில் இதேபோன்ற சுற்றுச் சூழல் சார்ந்த அமைப்பை உருவாக்க முடிந்தது. புவி நாள் பற்றிய சிந்தனையிலும், இலக்கிலும் தாக்கத்தை உருவாக்க வலைத்தளத்தில் இயங்கும் 13 அமைப்புகளைத் தேர்ந்தெடுத்தது. அதில் எங்களுடையதும் ஒன்று.

1990 களில் லாபநோக்கற்ற சேவை அமைப்புகளில் எனது ஈடுபாட்டை அதிகரித்துக்கொண்டேன். புதிய அமைப்புகளை உருவாக்கவும், உள்ள அமைப்புகளில் மற்ற நிர்வாகிகளுடன் இணைந்து செயல்பட்டும் உதவிகரமாக இருந்தேன். கனவை

மாற்றுவதிலும், லத்தீன்அமெரிக்க ஷூவர், அமேசான் பகுதி ஆச்சுவார், ஆண்டிஸ் மலைப்பகுதியைச் சேர்ந்த குவேச்சுவா குவாதி மாலா மேயாஸ் பழங்குடி மக்கள் மத்தியில் மற்றும் அமெரிக்கா, ஐரோப்பா நாடுகளில் கலாச்சாரத்தை கற்பிப்போரிடம் ஆர்வமுடன் வேலை செய்வதில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. ஸ்வெ எனது வேலைகளை வரவேற்றது. ஒருங்கிணைந்த பாதையில் என்ற அதன் கடப்பாட்டிற்கும் என் வேலை ஏற்றதாக இருந்தது. என்னுடைய அடியாள் வேலை பற்றிய விபரம் வெளிப்படாத, பழங்குடி மக்களுக்கான கல்விநூல்கள் பலவற்றை எழுதினேன். சலிப்போடு முடங்கிக்கிடப்பதற்குப் பதிலாக லத்தீன்அமெரிக்கா மற்றும் அரசியல் விவகாரங்களில் ஆர்வமுடன் ஈடுபடுத்திக்கொள்ளவும், எனக்கு விருப்பமான தோய்த்துக்கொள்ளவும் இது பயன்பட்டது.

நான் எழுதிய நூல்கள் பிரபலமடையத் தொடங்கின. குறிப்பாக த வோர்ல்டு அஸ் யூ ட்ரீம்டு என்பது. அதன் வெற்றியைத் தொடர்ந்து பல இடங்களில் பயிற்சி வகுப்புகளுக்கும், பேருரைகளுக்கும் அழைக்கப்பட்டேன். பாஸ்டனில், நியூயார்க்கில், மிலனில் நான் பார்வையாளர்கள் எதிரில் நிற்கும்போது உலகைக் கனவு காணவேண்டும் என்றால், நான் ஏன் அப்படி ஒரு உலகைக் கனவு காணவேண்டும்? என்ற முரண்பாடான கேள்வி எழும். இப்படிப்பட்ட மோசமான உலகின் உருவாக்கத்திற்காகவா நான் உழைத்தேன்?

1997-இல் கரீபியன் கடல் தீவான செயிண்ட் ஜான் சுற்றுலா இல்லத்தில் நான் பயிற்சி கொடுக்கவிருந்த ஒருவார கால ஒமேகா இன்ஸ்டிடியூட் முகாமிற்கு சென்றிருந்தேன். இரவு மிகத் தாமதித்து அறைக்குச் சென்றேன். காலையில் எழுந்து சிறிய பால்கனியில் உலவிக்கொண்டிருந்தேன். இதே குடாவில் தான் மெய்னை விட்டு விலகுவதென்று முடிவு எடுத்தேன். பல எண்ண அலைகள் என்னுள் மோத துவண்டு நாற்காலியில் அமர்ந்தேன்.

அந்த வாரம் முழுதும் பால்கனியில் செலவிட நேரம் கிடைத்தது. அங்கிருந்தபடி லெயின்ஸ்டர் குடாவை வேடிக்கைப் பார்ப்பேன். எனக்குள் என்னதான் நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முயற்சிப்பேன். சரி இதைச் செய்யலாம் முடிவெடுத்தாலும் அடுத்த அடி வைப்பதில்லை. எனவே இரண்டும் கெட்டானாக நின்றுகொண்டிருக்கிறேன். என்ன செய்ய விரும்புகிறேனோ அதைக் கனவாக்க வேண்டும். என் மாணவர்கள் என்ன கனவு காணவேண்டும் என்று அறிவுறுத்துகிறேனோ அதை

நான் மிகச் சரியாகப் பின்பற்றியாக வேண்டும். என் வாழ்க்கையில் என்ன விரும்புகிறேனோ அந்தப் பாதையில் போவதற்கு ஏற்ற வகையில் என் கனவை மாற்றிக்கொள்ள வேண்டும்.

வீடு திரும்பியதும், இப்போது செய்கிற ஆலோசகர் வேலையை விடுவதென்று தீர்மானித்துவிட்டேன். என்னை வேலையில் அமர்த்தியவர் அங்கிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். இப்போது அந்த இடத்தில் என்னிலும் வயதில் இளைய ஒருவன் இருக்கிறான். அவனுக்கு என் கதையெல்லாம் அனாவசியம். நிர்வாகச் செலவீனங்களைக் குறைக்கும் திட்டமுடைய அவனுக்கு என்னுடைய ராஜினாமா மகிழ்ச்சிக்குரிய செய்தியாகவே இருக்கும்.

நீண்டகாலமாக எழுதிக்கொண்டிருக்கும் புத்தகத்தை முடிப்பது என்று தீர்மானித்தேன். அந்தத் தீர்மானமே மகிழ்ச்சி தருவதாக இருந்தது. புத்தகம் குறித்த கருத்துக்களை நெருக்கமான நண்பர்கள் வட்டாரத்தில் பகிர்ந்துகொண்டேன். இவர்கள் பெரும்பாலானோர் சேவை நோக்கு அமைப்புகளில் பழங்குடி மக்கள் மத்தியிலும், மழைக்காடுகளைப் பாதுகாக்கவும் தங்களை அர்ப்பணித்துக்கொண்டவர்கள் வரவேற்பார்கள் என்ற எதிர்பார்ப்பிற்கு மாறாக தயக்கம் காட்டினர். பல ரகசியங்களை வெளிப்படுத்தும் அந்நூல் பின்னர் பிரச்சனைகளை உருவாக்கும். எனது கற்பித்தலையும், சேவைநோக்கு அமைப்புகளுக்கு உதவுவதையும் பாதிக்கும் என்று அஞ்சினர். இதில் பலர் பழங்குடி மக்களுக்காக அமேசான் நிலங்களை எண்ணெய் நிறுவனங்கள் கைக்குப் போகவிடாமல் தடுப்பதற்குப் பாடுபடுபவர்கள். என் மீதான மதிப்பைக் குறைக்கும், மொத்த இயக்கத்திலும் பின்னடைவு ஏற்படும். அவர்கள் எனக்கு அளித்துவரும் ஆதரவை விலக்கி விடுவதாகக்கூட பயங்காட்டினர்.

ஆக மீண்டும் ஒரு முறை புத்தகம் எழுதுவது தடைபட்டது. அதற்குப் பதிலாக அமேசான் உட்காடுகளில், இதுவரை நவீன உலகத்தின் கண்களுக்குப்படாத பழங்குடி மக்களின் வாழ்க்கையைப் பற்றி ஆர்வமுள்ளோருக்கு எடுத்துரைப்பதில் செலவிட்டேன். தொடர்ந்து அந்தப் பகுதியில்தான் 2001 செப்டம்பர் 11 வரை இருந்தேன்.

அத்தியாயம் - 32

நான் நுகர்ந்த செப் 11 இன் புகைநாற்றம்

செப் 10 2001 அன்று என்னுடைய ஸ்பிரிட் ஆப் த ஷூவர் நூலின் சக படைப்பாளியான ஷாகைம் ஸும்பி என்பவருடன் ஈக்குவடார் அமேசான் ஆற்றுப் பகுதியில் இருந்தேன். அடர் மழைக்காட்டினுள் உள்ள என் சகாவின் இனமக்களை காட்டுவதற்காக 16 வடஅமெரிக்கர்களுக்குத் தலைமை தாங்கிச் சென்றோம். அம்மக்களைப் பற்றி அறிந்து கொள்ளவும் அரிய மழைக்காடுகளைக் காப்பதற்கு உதவவுமே அந்நண்பர்கள் வந்துகொண்டிருந்தனர்.

ஷாகைம் சமீபத்திய ஈக்குவடார்-பெரு போரில் ராணுவச் சேவையாற்றியவர். எண்ணெய் அதிகம் நுகர்கிற நாடுகளுக்கு எண்ணெய் வழங்குவதற்கான போர்தான் அது என்றாலும் அந்நாட்டினர் அப்போரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள். நீண்டவருடங்களாகவே அவ்விருநாடுகளுக்கும் எல்லைப் பிரச்சனை இருந்து வந்தாலும் இப்போது உடனடியாகத் தீர்த்துக்கொள்ளவேண்டிய அவசரம் ஏற்பட்டுள்ளது. குறிப்பிட்ட வளமிக்க பகுதியில் எண்ணெய் எடுக்க யாருடன் பேச்சுவார்த்தை நடத்துவது என்ற அவசரம் எண்ணெய் நிறுவனங்களுக்கு. அதனால் எல்லையைத் தீர்மானித்தாக வேண்டும்.

ஷூவர்கள்தான் முதலில் பாதுகாப்பு அரணை அமைத்தார்கள். தாங்கள் கடுமையான தாக்குதல் நடத்தமுடியும் என்று நம்புகிற வகையில் அதிக எண்ணிக்கையும், படைச் சாதனங்களும் அவர்கள் வசம் இருந்தன. ஷூவர்களுக்கு போருக்குப் பின்னுள்ள அரசியல் குறித்தோ முடிவு எதுவானலும் அது எண்ணெய் நிறுவனங்களுக்குக் கதவைத் திறந்துவிடும் என்ற உண்மையையோ அறியமாட்டார்கள். தாங்கள் வீரப் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் அதனால் அந்நியச் சிப்பாய்களைத் தங்கள் படையில் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள்.

ஆற்றுக்குள் இறங்கும்போது ஒரு தொகுதி பேசும் கிளிகள் தலைக்கு மேல் பறந்துசெல்வதைப் பார்த்தோம். போர்நிறுத்த உடன்படிக்கை நீடிக்கிறதா? என்று ஷாகைமைக் கேட்டேன். ஆம் ஆனால் நான் உங்களுடன் போருக்குத் தயாராகவேண்டும் என்று கூறிவிட்டு, அவன் என்னையோ உடன் வரும் குழுவையோக் குறிப்பிடவில்லை என்பதைப் பின்னர் விளக்கினான். தங்கள் காடுகளின் பாதுகாப்பிற்கு எதிராக வருகிற அமெரிக்க எண்ணெய் நிறுவனத்துடனும், ராணுவத்துடனும் போரிடப் போவதை உறுதிப்படுத்தினான்.

ஹூவோரணி பழங்குடிகளுக்கு இழைத்ததைப் பார்த்திருக்கிறோம். காடுகளை அழித்தார்கள், ஆறுகளில் கழிவுகளைக் கொட்டினார்கள். குழந்தைகள் உட்பட நிறைய மனித உயிர்களைப் பறித்தார்கள். இன்று ஹூவோரணி மக்களின் இருப்பே கேள்விக்குறியாகிவிட்டது. எங்களுக்கு அப்பிடி நேர அனுமதிக்கப் போவதில்லை. எங்கள் பிரதேசத்திற்குள் எண்ணெய் நிறுவனங்களை வர விடமாட்டோம். அப்படி நுழைந்துவிட்டால் நாங்கள் பெருவியர்களே அல்ல. கடைசிப் பெருவியன் உள்ளவரை போராடத் துணிந்துவிட்டோம்.

அன்றிரவு மூங்கில் பிளாச்சுகளால் தரையிட்டு கூரை வேய்ந்த நீண்ட அழகான வீட்டின் நடுவே அமர்ந்து குளிர்காய்ந்து கொண்டிருந்தோம். ஷாகைமுடன் நடந்த உரையாடல் பற்றி விளக்கிக்கொண்டிருந்தேன். இதேபோல எத்தனை மக்கள் எண்ணெய் நிறுவனங்கள் மீதும் எங்கள் நாட்டின் மீதும் ஆத்திரமுற்றிருக்கிறார்கள் என்று பேசிக்கொண்டோம். ஷுவரைப் போல எத்தனை இனத்தை, அவர்களது கலாச்சாரத்தை, நிலத்தை இந்த எண்ணெய் நிறுவனங்கள் அழித்திருக்கும்? எவ்வளவு பேர் எங்கள் மீது வெறுப்பில் இருப்பார்கள்?

அடுத்த நாள் காலை எனது இரட்டை வழி (கேட்கவும்-பேசவுமான) ரேடியோ வைத்திருக்கும் சிறிய அலுவலகத்திற்குப் போனேன். அடுத்த சிலநாட்களில் எங்களை அழைத்துச்செல்வதற்கான விமானத்தை அனுப்பும்படிக் கேட்டேன். நான் பேசிக்கொண்டிருக்கும் போதே எனக்கு எதிர் முனையில் பெருத்த இரைச்சலைக் கேட்க முடிந்தது.

அடக் கடவுளே. எதிர்முனையில் இருந்த மனிதர் உரக்கக் கூவினார் நியூயார்க் தாக்கப்பட்டுள்ளது. வணிக ரேடியோவை முடுக்கிவிட்டார். சோகமான பின்னணி இசை போய்க்

கொண்டிருந்தது. அடுத்த அரை மணிநேரத்திற்கு நிமிடத்திற்கு நிமிடம் அங்கு சொல்லப்பட்ட அனைத்தும் பிறரைப் போலவே எனக்கும் வாழ்நாளில் மறக்கமுடியாத கூணம்.

எனது ப்ளோரிடா வீட்டிற்கு வந்த பின்னர், உலக வர்த்தக மைய இரட்டைக் கோபுரத்தைப் பார்ப்பதானால் ஜீரோ கிரவுண்டைத்தான் பார்க்க முடியும் என்று தெரிந்தது. எனவே நியூயார்க் பறக்கவேண்டும் என்று தோன்றியது. நண்பகலுக்கு முன்னரே தங்கியிருந்த அறையை விட்டு வெளியேறினேன். அது நவம்பர் மாத வெயில் நாள். இசைவில்லாத வெப்பம். ஒரு காலத்தில் அதிகநேரத்தை செலவிட்ட பகுதியான செண்ட்ரல் பார்க் வழியாக ஆர்வம் பொங்க நடந்துபோய்க்கொண்டிருந்தேன். வால்ஸ்ட்ரீட்டிற்கு மிக அருகில் உள்ள அப்பகுதி இப்போது ஏதுமற்று ஜீரோ கிரவுண்ட் என்று பெயர் பெற்றுவிட்டது.

அந்த இடத்தை நெருங்க நெருங்க ஆர்வம் குன்றி மனதில் பீதி கிளம்பியது. ஒருபோதும் காணாத பேரழிவு. அக்காட்சியும், நாற்றமும் முகத்தில் அறைந்தது. கட்டடத்தின் காங்கிரீட் இரும்புகள் முறுக்கியும், உருகியும் நின்றிருந்தன. நொறுங்கின சிதைவுகளில் புகைந்த துர்நாற்றம். சிதைந்த உடற்பாகங்கள், தீய்ந்த தசைகள். இவையத்தனையும் தொலைக்காட்சியில் பார்த்ததுதான் என்றாலும் நேரில் பார்க்கும்போது வேறுமாதிரியான பயங்கரமாக இருந்தது.

இதை நான் எதிர்பார்க்கவே இல்லை. குறிப்பாக மக்கள். அக்கம் பக்கத்தில் வேலை செய்பவர்கள், குடியிருப்பவர்கள். அழிவில் தப்பிப் பிழைத்தவர்கள் இரண்டு மாதங்கள் முடிந்த பின்னும் நம்ப விரும்பாமல் வெறித்தபடி அந்த இடத்தையே சுற்றிச் சுற்றி வந்தார்கள். தன் சிறியகடைக்கு வெளியே நின்றுதான் நம்பவியலாமையை தலையை உலுக்கி உலுக்கி வெளிப்படுத்திக் கொண்டிருந்தார் ஷூ சீர் செய்கிற எகிப்தியனாகிய அவர்.

இன்னும் எதையும் நிதானிக்க முடியவில்லை. என்னுடைய வாடிக்கையாளர்களை இழந்தேன். என் நண்பர்கள், உறவினர்கள் பலர் அங்கே இறந்துவிட்டனர் என்று ஆகாயத்தை நோக்கிக் கையைக் காட்டினார். அவன் மேலிருந்து குதித்ததைப் பார்த்தேன் என்று நினைக்கிறேன். உறுதியாகத் தெரியவில்லை. பலர் அதுபோல கை கோர்த்து பறக்கும்விதமாகக் குதித்தார்கள்.

மக்கள் பேசிக்கொண்டதை வைத்துப் பார்க்கும்போது, நியூயார்க் நகரத்தில் அது சட்டென்று நிகழ்ந்துவிட்டிருக்கிறது. மொழி மௌனமாகிவிட்டது. மக்களின் கண்கள் மட்டுமே

சந்தித்துக்கொண்டன. சோகம் கப்பியிருந்தது என்றாலும் பரஸ்பரப் பரிவு இருந்தது. அரைப் புன்னகைதான் ஆனால் அது மில்லியன் வார்த்தைகளைப் பேசின.

இந்த இடம் உணர்த்துவதற்கும் மேலாக ஏதோ ஒன்று இருக்கிறது. என்னால் முதலில் இனம் காண முடியவில்லை. பின்னர் தான் உறைத்தது. ஆம். வெளிச்சம். மன்ஹாட்டனின் கீழ்பகுதியே ஒரு இருண்ட பள்ளத்தாக்கு போல இருந்தது. நான் ஐபிஎஸ்-க்கு நிதி திரட்ட ஒரு புனிதப் பயணம் போல இங்கே வந்திருக்கிறேன். அப்போதெல்லாம் என்னுடைய வங்கியாளர்களுக்கு இப்படிப்பட்ட இடத்தில் விருந்தளிக்க வேண்டும் என்று கற்பனை செய்து கொள்வேன். வெளிச்சத்தைக் காணவேண்டும் என்றால் உலக வர்த்தக மையத்தின் உச்சிக்குப் போகவேண்டும். இப்போது எல்லாம் தரைமட்டமாக இருக்கிறது. பார்வையை மறித்துக் கொண்டு நின்ற கேன்யான்கள் இப்போது பிளக்கப்பட்டுவிட்டன. வானம் விரிந்து காட்சி தருகிறது. சிதைவுகள் மீது சூரியஒளி பட்டு வெப்பம் அலைகிறது. இப்போது வானம் வெளிச்சம் பார்க்கக் கிடைக்கிறது என்றாலும் என்னால் மகிழ்ச்சி கொள்ள முடியவில்லை. இங்கே வானம் விரிந்ததுபோல மக்களின் இதயமும் விரியுமா? சிதைவுகளில் நின்றுகொண்டு இப்படிச் சிந்திப்பதே குற்றமாகத் தோன்றுகிறது.

டிரினிட்டி தேவாலய முனையில் திரும்பி வால்ஸ்ட்ரீட் நோக்கி நடந்தேன். நியூயார்க் பழைய நகரம் இருள் போர்த்தியிருந்தது. வானம் இல்லை. ஒளி இல்லை. அனைவரையும் கடந்து முன்னோக்கி நடந்தேன். நிறுத்தப்பட்ட காருக்கருகில் ஒரு போலீஸ் இரைந்துகொண்டிருந்தார்.

அங்கிருந்த படிகளில் அமர்ந்தேன். பங்குச்சந்தைக் கல் கட்டிடத்தில் இருந்து காற்றை ஊதும் பேன்களின் இரைச்சல் அனைத்திற்கும் மேலாக உரத்து ஒலித்தது. தம் அலுவலகத்தில் இருந்து வெளியேறி வீடுகளை நோக்கியோ, உணவகங்கள் நோக்கியோ, அரட்டையடிப்பதற்கு பார்கள் நோக்கியோ சென்று கொண்டிருக்கும் மக்களைப் பார்த்தேன். நிதானமாக தங்களுக்குள் பேசிக்கொண்டே போனார்கள். பலர் யாருடனும் பேசாமல் வாய்மூடி மவுனிகளாகச் சென்றுகொண்டிருந்தனர். அவர்களை நேருக்கு நேராகப் பார்க்க முயன்றேன். முடியவில்லை.

காரிலிருந்து எழுந்த அலார ஒலி என் கவனத்தை ஈர்த்தது. ஒரு நபர் அலுவலகம் விட்டு வெளியே வந்து கார்ச் சாவியைக் காட்டி அலார ஒலியை நிறுத்தினார். நீண்டநேரம் அதேயிடத்தில்

அமைதியாக உட்கார்ந்திருந்தேன். சிறிதுநேரம் கழித்து எனது சட்டைப்பையில் இருந்து புள்ளிவிபரங்கள் அடங்கிய காகித மடிப்பை எடுத்தேன்.

தெருவில் காலை இழுத்தபடி ஒருவர் வந்தார். அவரது பாதத்தைப் பார்த்தேன். அந்த வெளுத்த தாடிக்காரர் ஒரு ஆப்கானியராக இருக்கவேண்டும். வால்ஸ்ட்ரீடில் வெயில் காலச்சூழலுக்குப் பொருந்தாத இறுக்கமான கோட் அணிந்திருந்தார்.

என்னையே உற்றுநோக்கினார். பின்னர் படிகளைப் பார்த்தார். படிகளை நெருங்கி வந்து ஒரு கெஜ இடைவெளி விட்டு எனக்குப் பக்கத்தில் அமர்ந்தார். அவர் என்னைப் பார்த்த விதம் உரையாடலுக்குத் தயாராவதுபோல இருந்தது.

இந்தப் பிற்பகல் நன்றாக இருக்கிறது இல்லையா?

அழகாக இருக்கிறது. இந்த நேரத்தில் சூரியஒளி நமக்குத் தேவைப்படுகிறது.

அவரது உச்சரிப்பு கரகரப்பாக இருந்தது.

நீங்கள் உலக வர்த்தக மையத்தைத் தானே குறிப்பிடுகிறீர்கள்?

ஆம் என்று தலையசைத்தார்.

நீங்கள் ஆப்கானியரா?

ஆம், பளிச்சென்று அடையாளம் காணமுடிகிறது இல்லையா? என்னை உற்றுநோக்கினார்.

நான் நிறைய பயணம் செய்பவன் என்பதால் ஓரளவு முடிகிறது. சமீபத்தில் கூட நான் காஷ்மீர் சென்றிருந்தேன்

காஷ்மீரா? அது போரின் கொந்தளிப்பில் இருக்கிறது இல்லையா? என்றபடி தாடியை நீவிவிட்டுக் கொண்டார்.

இந்தியாவும் பாகிஸ்தானும் இந்துக்களும் முஸ்லீம்களும் என்பதால் மதரீதியாகச் சண்டையிட்டுக்கொள்வது ஆச்சர்யமாக இருக்கிறது இல்லையா?

அவர் என்னை உற்றுப் பார்த்தார். அந்தக் கண்கள் அரக்கு நிறத்தில் இருந்துசோகத்தால் கிட்டத்தட்ட கருப்பாகிவிட்டிருந்தது. நியூயார்க் ஸ்டாக் எக்சேஞ் கட்டடத்தின் பக்கம் விரலைச் சுட்டிக் காட்டினார்.

சண்டைக்குக் காரணம் மதமல்ல, பொருளாதாரம் என்று தானே குறிப்பிடுகிறீர்கள். அப்படியும் இருக்கலாம் என்று நான் ஒப்புக்கொண்டேன்.

நீங்கள் ராணுவத்தில் இருந்தீர்களா?

அவர் சொல்வது உண்மையல்ல என்பதால் பல்லைக் கடித்துக் கொண்டேன். நான் பொருளியல் ஆலோசகர். என்னுடைய கையில் இருந்த புள்ளிவிபரக் காகிதத்தைக் காட்டி இதுதான் என் ஆயுதம் என்றேன்.

காகிதத்தை வாங்கிப் பார்த்துவிட்டு வெறும் எண்களா? என்றார்.

ஆம், இந்த எண்கள் உலகப் புள்ளிவிபரங்கள்.

மீண்டும் காகிதத்தில் ஒரு பார்வை ஓட்டிவிட்டு ஸாரி... என்னால் வாசிக்க முடியவில்லை என்று புன்னகைத்தபடி திருப்பிக் கொடுத்து விட்டார்.

இந்தப் புள்ளிவிபரம் கூறுகிறது ஒரு நாளைக்கு இருபத்தி ஐயாயிரம் பேர் பட்டினியால் சாகிறார்கள் என்று.

மென்மையாகப் பெருமூச்சு விட்டார். ஒரு நிமிடம் யோசித்துவிட்டு பின் கூறினார். கிட்டத்தட்ட நானும் அவர்களில் ஒருவன்தான் கலாந்தரில் எனக்கொரு சிறிய மாதுளம் பண்ணை இருக்கிறது. ரஷ்யர்கள் அங்கு வந்த பின்னர் முஜாகதீன்கள் மரங்களையும், வாய்க்காலையும் பதுங்குமிடமாக மாற்றியிருந்தார்கள். தன் கைகளை உயர்த்தித் துப்பாக்கி போல பாவனை செய்து சுட்டார்கள். என் மாதுளம் மரங்களும், வாய்க்கால்களும் நாசமாகிவிட்டன.

அதற்குப் பிறகு என்ன செய்கிறீர்கள்?

தலையை உலுக்கிவிட்டு உங்கள் புள்ளிவிபரங்களில் பிச்சைக்காரர்களைப் பற்றி ஏதேனும் விபரம் இருக்கிறதா? என்று கேட்டார்.

இதில் இல்லை. ஆனால் எட்டுக்கோடிப் பேர் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன் என்று கூறினேன்.

நானும் அதில் ஒருவனாக இருந்தேன் என்று கூறிவிட்டுத் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டார். மறுபடியும் பேச சிறிதுநேரம் எடுத்துக்கொண்டார். அதுவரை கனத்த மவுனத்துடன் இருந்தார். எனக்குப் பிச்சை எடுப்பதில் இஷ்டம் இல்லை. இடையில் என் குழந்தை இறந்துவிட்டது. அதற்குப் பின்னர் பப்பீஸ் வளர்க்கத் துவங்கிவிட்டேன்.

ஓப்பியம்மா.

ஆம் என்பது போல் தலையசைத்துவிட்டு என்னுடைய மாதுளம் மரங்கள் இல்லை. தண்ணீர் ஓடுவதற்கான வாய்க்கால்கள் இல்லை. குடும்ப ஜீவனத்திற்கு என்னதான் செய்வதாம்.

தொண்டையில் ஏதோ உருள்வது போலிருந்தது. சோகமும் குற்றவுணர்வும் என்னைக் கவ்வியது. ஒப்பியம் வளர்ப்பது படுமோசமானது. இருந்தாலும் இன்று பெரும் பணக்காரர்கள் கூட இதே வேலையைத்தான் செய்கிறார்கள் என்றேன்.

எனது ஆன்மாவை கண்டுவிட முயல்வதுபோல அவரது கண்கள் என் கண்களை ஊடுறுவிப் பார்த்தன. நீங்கள் ஒரு ராணுவத்தான் தான் என்று கூறி தனக்குத்தானே ஒரு உண்மையை உறுதிசெய்யும் விதமாக தலையை ஆட்டிக்கொண்டார். தனது காலை நிதானமாக எடுத்துவைத்து படிகளில் இறங்கத் தொடங்கினார். அவர் அங்கே இருக்கவேண்டும் என்று என் மனம் விரும்பினாலும் எதுவும் சொல்லத் திராணியற்றவனாக இருந்தேன். நானும் அவரைப் பின்தொடர ஆரம்பித்தேன். கடைசிப்படியில் ஒரு குறிப்புப் பலகையைக் கண்டு நின்றுவிட்டேன். நான் அமர்ந்திருந்த படிகளில் இருந்து இக்கடைசிப் படி வரை குறிப்புகளை ஹெரிட்டேஜ் ட்ரயல்ஸ் ஆப் நியூயார்க் (நியூயார்க்கின் பாரம்பரியப் பதிவுகள்) என்ற பெயரில் எழுதப்பட்டிருந்த வாசகம்:

''இந்த அருங்காட்சியகம் வெனீஸின் ஹாலிகார்தல்ஸ்ஸ் என்ற புனித மார்க்கின் நினைவகத்தின் உச்சியில் நிறுவப்பட்டுள்ள மணிக்கோபுர மாதிரியைக் கருத்தாக்கமாகக் கொண்டு வால் ஸ்ட்ரீட்டில் உள்ள இச்சுவற்றின் நீள அகலங்கள் அமைக்கப்பட்டுள்ளது. உலகில் அதி செல்வாக்குமிக்க நிதி அமைப்பான ஒரு வங்கியின் தலைமையகம், வானமளவிற்கு உயர்ந்த நம்பிக்கை பெற்ற ஒன்று என்பதைப் பறைசாற்றும் விதமாக 539 அடி உயரத்திற்குக் கட்டப்பட்டுள்ளது.''

நான் ஒருவித அச்சம் படர அக்கட்டத்தைப் பார்த்தேன். கடந்த நூற்றாண்டு முடிவுவரை 14 வால்ஸ்ட்ரீட்டில் உள்ள உலக வர்த்த மையம்தான் உலகின் நிதி ஆதிக்கத்தின் சின்னமாக விளங்கி வந்தது. வங்கியாளர்களுக்கும் ஒரு நம்பிக்கைச் சின்னமாக இருந்தது. எனது ஆற்றல் நிறுவனத்திற்கும் அதுதான் நிதி ஆதாரமாக இருந்தது. எனது பாரம்பரியத்திற்கு முக்கியப் பங்காற்றியுள்ளது. அந்த ஆப்கான் மனிதர் எனது பாரம்பரியமே ராணுவப் பின்புலம் கொண்டது என்று மிகப் பொருத்தமாகத்தான் கூறியிருக்கிறார்.

அடுத்தடுத்த எதேச்சைகளோடு ஆப்கானியருடன் உரையாடியதில் அன்றையப் பொழுது நிறைவுற்றது. எதேச்சை என்ற சொல் என்னைப் பிடித்து நிறுத்தி உன் வாழ்வை வடிவமைத்துக்கொள்ள எதேச்சைகளுக்கு என்ன எதிர்வினையாற்றப் போகிறாய் என்று கேட்கிறது. உலக வர்த்தக மையம் நிர்மூலமாக்கப்பட்டதற்கு நான் என்ன எதிர்வினையாற்றுவது?

நடந்துகொண்டே கூட்டத்திற்கு மத்தியில் அவரது தலையைத் தேடினேன். கண்டுபிடிப்பதற்கான வழி தெரியவில்லை. அந்தக் கட்டடத்தை அடுத்து ஒரு பிரமாண்டமான சிலை நீல பிளாஸ்டிக் காகிதத்தால் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது. சிலையில் அடிக்கல்லைப் பார்த்ததில் 26 பெடரல் ஹால், வால்ஸ்ட்ரீட் என்பது தெரிந்தது. இங்கேதான் 1789 ஏப் 30 அன்று ஜார்ஜ் வாஷிங்டன் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார். மக்கள் அனைவருக்கும் வாழ்க்கை விடுதலை மகிழ்ச்சி ஆகியவற்றை அளிப்பதாக உறுதியேற்ற இடம் இதுதான். ஜீரோ டிகிரி கிரவுண்டிற்கும் வால்ஸ்ட்ரீட்டிற்கும் மிகவும் பக்கத்தில் இருக்கிறது இது.

அந்த அடுக்ககத்தைச் சுற்றிக்கொண்டு பைன் ஸ்ட்ரீட்டிற்குச் சென்றேன். சேஸ் வங்கியின் தலைமையகத்தை நேருக்கு நேராகப் பார்க்கிறேன். ராக்பெல்லர் கட்டியது இந்தக் கட்டடம். இந்த வங்கியில் இருந்து எண்ணெய் நிறுவனங்கள் மூலமாக பணத்தை விதைத்து என்னைப் போன்றவர்களை அறுவடை செய்ய நாங்கள் நிறுவனவியத்தின் அடையாளமான உலக ஏகாதிபத்தியத்தை வளர்த்தெடுக்கிறோம்.

டேவிட் ராக்பெல்லர் 1960-இல் துவக்கிய உலக வர்த்தக மையக் கட்டடத் திட்டம் குறித்து நான் வாசித்தவற்றை நினைவுபடுத்திப் பார்த்தேன். சமீப ஆண்டுகளாக முரட்டுக் கடற்பறவையாக (அல்பெட்ராஸ்) கருதப்படுகிறது. இது விரயச் செலவுக் கட்டடம் என்றும், நவீன பைபர் ஆப்டிக் மற்றும் இண்டர்நெட் நுட்பங்களுக்குப் பொறுத்தமற்றது என்று பெயர் பெற்றுவிட்டது. இதன் நகரும் படிக்கட்டுச் செலவீனம் இதற்குப் பெருஞ்சுமை என்றும் கட்டடவியலாளர்களால் கருதப்பட்டது. இரட்டை கோபுரத்திற்கு டேவிட் - நிக்ஸன் இரட்டையர்கள் என்று பட்டப்பெயர் சூட்டியிருந்தனர் மக்கள். அந்த அல்பெட்ரோக் கடற்பறவைப் பறந்து சென்றுவிட்டது.

நான் தயங்கித் தயங்கி நடந்துகொண்டிருந்தேன். உச்சிப் பொழுதிலும் குளிர்ந்த காற்று அடிப்பது எனக்கு சோகமூட்டுவதாகவும், தீயஅறிகுறியாகவும் தோன்றியது. அதற்கான காரணம் தெரியவில்லை. அந்த எண்ணத்தை என்னிலிருந்து அகற்றி சமாதானப்படுத்த முயன்றேன். குண்டு வெடிப்பில் தீய்ந்து உருகிய காங்கிரீட் உலோகத்தையும், கருங்குழியில் இருந்து வெளியாகும் தீய்ந்த வாசத்தையும் நுகர்ந்தேன். தீய்ந்த இந்த இடம் நிலத்தின் மீது ஒரு பெரிய தழும்பாகிவிட்டிருக்கிறது. சிதைவிற்குத் தப்பிய கட்டத்தில் சாய்ந்துகொண்டு நீண்டநேரமாகத் தீய்ந்துபோன

குழியைப் பார்த்துக்கொண்டே இருந்தேன். சிதைவு நிகழ்ந்தபோது குறுக்கும் மறுக்கும் ஓடி நீயை அணைக்க முட்டி மோதியதைக் கற்பனைச் சித்திரமாகக் கொண்டுவர முயன்றேன். தீப்பற்றிய பயத்தில் மக்கள் மேலிருந்து குதிக்க முயன்ற காட்சியையும் கற்பனை செய்து பார்த்தேன். எதுவும் முடியவில்லை.

அதற்குப் பதிலாக அமெரிக்க அரசாங்கம் சௌதி ஒப்பந்த நிறுவனங்கள் மூலமாக பின்லேடனுக்கு ஆயுதம் வாங்க பணம் கொடுக்கும் காட்சிதான் கற்பனையில் தோன்றியது. கணினி வெற்றுத்திரைக்கு எதிரில் உட்கார்ந்திருப்பது போலத் தோன்றியது.

ஜீரோ கிரவுண்டிற்கு அப்பால் தீப்பற்றாமல் தடுக்கப்பட்ட நியூயார்க் தெருக்களைப் பார்த்தேன். சகஜ நிலைத் திரும்பிக் கொண்டிருந்தது. தெருக்களில் செல்லும் மக்கள் இந்த கோபுரச் சிதைவு குறித்து என்ன நினைத்திருப்பார்கள். நிச்சயமாகச் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது அவர்களால். ஆனால் மாதுளந்தோப்பு அழிந்தது பற்றியோ, ஒரு நாளைக்கு இருபத்தி ஐயாயிரம் மக்கள் பட்டினியால் சாகிறார்கள் என்பதோ அவர்களுக்குத் தெரியாது. தங்களுக்கிருக்கும் வேலை, கார், தங்கள் பணத்திற்கான வட்டி விகிதங்கள் போன்றவற்றிற்கு அப்பால் நாளைத் தம் குழந்தைகள் கையில் தரப்படவேண்டிய இந்த உலகத்தைப் பற்றியெல்லாம் யோசிக்க அவர்களுக்கெங்கே நேரமிருக்கப் போகிறது. அவர்களுக்கு ஆப்கானிஸ்தானைத் தெரியும். தங்கள் தொலைக்காட்சி காட்டிய ஆப்கானிஸ்தானை மட்டுமல்ல, அமெரிக்க ராணுவம் இறங்கி கூடாரம் அடித்து, பீரங்கிகளை இறக்கிவைத்து போர்களமாக்கிய ஆப்கானையும் தெரியும். ஆனால் அம்முதியவரின் ஆப்கானைத் தெரியுமா? ஒவ்வொரு நாளும் இருபத்தி ஐந்தாயிரம் பட்டினியால் இறப்பவர்கள் பற்றி இவர்கள் என்ன நினைப்பார்கள்?

நான் மீண்டும் கணினியின் வெற்றுத் திரை முன் அமர்ந்திருப்பது போன்ற பிரம்மை.

எனது கவனத்தை ஜீரோ டிகிரி கிரவுண்டுப் பக்கம் திருப்பினேன். சிறிதுநேரம் அமைதியாக அமர்ந்திருந்தேன். சட்டென்று அந்த நாடு நிச்சயமாக எங்களை பழி வாங்கிவிடும் எண்ணம் கொண்டிருக்கும். ஆப்கான் போன்ற நாடுகள் குறித்து யோசித்துப் பார்த்தால் எங்கள் மீது, எங்கள் ராணுவம், போலீஸ், எங்கள் நிறுவனங்கள் மீது, உலக ஏகாதிபத்தியத்தை நோக்கி நடைபோடுவதைக் கண்டு கடும் ஆத்திரம் கொண்டிருப்பார்கள்.

பனாமா, ஈக்குவடார், இந்தோனேசியா, ஈரான், குவாதிமாலா போன்ற ஆப்பிரிக்க நாடுகளைப் பற்றி ஆச்சர்யம் அடைந்தேன்.

நான் சாய்ந்திருந்த சுவற்றில் இருந்து என்னை மீட்டுக்கொண்டு அதைப்பார்த்தபடி நடந்தேன். ஸ்பானிஷில் கத்தியபடி ஒரு ஆள் கையில் செய்தித்தாளை ஆட்டிக்கொண்டு செல்வதைப் பார்த்தேன்.

நெருக்கியடித்துச் செல்லும் மக்கள் மத்தியில், வாகன இரைச்சலுக்கு இடையில் வெனிசூலாவில் புரட்சி வெடித்தது. என்று கூவிக்கொண்டு போனான்.

பத்திரிகையை வாங்கி தலைப்புச் செய்தி மீது நோட்டம் விட்டேன். ஜனநாயகரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வெனிசூலா அதிபர் சாவேஸ் பற்றிய கட்டுரை அது. லத்தீன்அமெரிக்கா மீதான அமெரிக்கக் கொள்கையின் பால் கொண்ட வெறுப்பின் வெளிப்பாடு இது.

என்ன ஆயிற்று வெனிசூலாவிற்கு?

அத்தியாயம் - 33

வெனிசூலாவைக் காப்பாற்றினார் சதாம்

பல ஆண்டுகளாக வெனிசூலாவைக் கவனித்து வருகிறேன். ஒரு நாட்டில் எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்டால் எத்தனை அலைக்கழிப்பிற்கு உள்ளாகும் என்பதற்கு மிகச்சிறந்த உதாரணம் வெனிசூலா. வெட்கங்கெட்ட நிறுவனவியச் சுரண்டலுக்கு ஆளான ஒரு நாட்டில் பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்கும் எத்தனை இடைவெளி நிலவும் என்பதற்கும் இந்நாடுதான் மிகச்சிறந்த உதாரணம். பழைய மாதிரியிலான என்னைப் போன்ற அடியாட்கள் புதிய பாணியிலான நிறுவனவிய பொருளாதார அடியாட்களுடன் ஒன்றிக் கலக்கும் இடமாகவும் வெனிசூலா இருந்தது.

வெனிசூலா 1998 பொதுத்தேர்தலில் ஏழை எளிய மக்களின், ஒடுக்கப்பட்ட மக்களின் மகத்தான ஆதரவுடன் சாவேஸ் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் நேரடி விளைவுகளைத்தான் இந்த ஜீரோ டிகிரி கிரவுண்டில் இருந்து வாசிக்கும் பத்திரிகையில் விவரிக்கப்பட்டிருந்தது. அரசு அமைப்புகள் அனைத்தையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர மிக முக்கியமான நடவடிக்கைகள் எடுத்தார். காங்கிரஸைக் கலைத்தார். உலக மயத்திற்கு எதிராகவும், அமெரிக்காவின் வெட்கங்கெட்ட ஏகாதிபத்திய ஆசையையும் கடுமையாகச் சாடினார். ஹைட்ரோ கார்பன் சட்டத்தை அறிமுகப்படுத்தினார். சமீபத்தில் விமான விபத்தில் கொல்லப்பட்ட ஈக்குவடார் ஜனாதிபதி ஜெய்மே ரோல்டோஷின் பெயரிலியே துணிச்சலுடன் அச்சட்டத்தைக் கொண்டு வந்தார். எண்ணெய் நிறுவனங்களின் ராயல்டித் தொகை இரட்டிப்பாக்கப்பட்டது. அரசுக்குச் சொந்தமான தன்னாட்சி அதிகாரம் உடைய பெட்ரோலியோஸ் தே வெனிசூலா என்ற எண்ணெய் நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்போரை மாற்றி அரசுக்கும் மக்களுக்கும் விசுவாசமாக இருப்போரை அமர்த்தியதன் மூலம் அதன்மீது அரசின் உரிமையை மறு உறுதிப்படுத்தினார்.

பொருளாதார உலகில் வெனிசூலாவின் எண்ணெய் வளம் முக்கியமான இடத்தை வகித்தது. 2002-இல் உலகில் எண்ணெய் ஏற்றுமதியில் நான்காவது இடத்தையும், அமெரிக்காவிற்கு எண்ணெய் வழங்கும் நாடுகளில் மூன்றாவது இடத்தையும் வெனிசூலா வகித்தது. 40000 ஊழியர்களைக் கொண்ட அரசு எண்ணெய் நிறுவனத்தின் ஆண்டு வருமானம் ஆண்டிற்கு ஐம்பது பில்லியன் டாலர். வெனிசூலாவின் எண்ணெய் உற்பத்தியில் 80 சதவீதத்தை அரசு ஏற்றுமதி செய்தது. வெனிசூலா பொருளாதாரத்தின் உயிர்நாடியாக இருந்த எண்ணெய் ஏற்றுமதியை அரசின் கட்டுப்பாட்டில் கொண்டுவந்ததன் மூலம் உலக அரங்கில் முக்கிய பங்கு வகிக்கும் தனது எண்ணத்தைச் சாவேஸ் நிறைவேற்றிக்கொண்டார்.

எண்பது ஆண்டுகளுக்கு முன்தமது நாட்டின் மீது எழுதப்பட்ட துன்பகரமான விதி சாவேஸின் கைகளால் நல்லதோர் முடிவிற்கு கொண்டுவரப்பட்டதாக அனேக வெனிசூலேவியர்கள் கருதினர். டிசம்பர் 14 1922 ஆம் ஆண்டு மராகாய்போவில் மிகப்பெரிய எண்ணெய் ஊற்று பீய்ச்சி அடித்தது. தொடர்ந்து மூன்று நாட்களாக நாளொன்றிற்கு ஒரு லட்சம் பீப்பாய் எண்ணெய் பொங்கி நிரம்பியது. ஒற்றை நிலவியல் நிகழ்வு வெனிசூலாவின் பொருளாதார விதியையே மாற்றிவிட்டது. 1930-ல் அந்நாடு உலகின் பெரிய எண்ணெய் ஏற்றுமதியாளராக மாறியது. தங்கள் பிரச்சனைகளுக்கு எண்ணெயை ஒரு தீர்வாக நினைத்தனர் வெனிசூலேவியர்கள்.

அதன் எண்ணெய் வருமானம் அடுத்த நாற்பது ஆண்டுகளில் லத்தீன்அமெரிக்க நாடுகளிலேயே வெனிசூலாவை பணக்கார நாடாக மாற்றிவிட்டது. மக்கள் ஆரோக்கியம், கல்வி, வேலை வாய்ப்பு, ஆயுள், குழந்தைகள் பாதுகாப்பு அனைத்து துறைகளிலும் புள்ளிவிபரங்களில் மிகப்பெரிய மாற்றம் நிகழ்ந்தன. வணிகம் வளமையடைந்தது.

ஒபெக் நாடுகள் 1973-ல் விதித்த எண்ணெய்க் கட்டுப்பாட்டை அடுத்து எண்ணெய் விலை விண்ணைத் தொட்டது. வெனிசூலாவின் பட்ஜெட் நான்கு மடங்கானது. இப்போது பொருளாதார அடியாட்கள் களத்தில் இறங்கினர். அக்கண்டத்திலேயே இல்லாத அளவிற்கு உள்கட்டுமானத்தைப் பெருக்கவும், தொழிற்சாலைத் திட்டங்களுக்காகவும் சர்வதேச கடன்கள் வாரியிறைக்கப்பட்டன. அதற்குப் பின்னர் நிறுவனலிய அடியாட்கள் 1980 களில் வெனிசூலாவில் இறங்கினர். அவர்களது பற்களுக்கு வகையான தீனி கிடைத்தது. கணிசமான தொகையினரான நடுத்தர வர்க்கத்தின்

நுகர்வுத் தேவையை ஈடுசெய்வதற்கு ஏற்ற சந்தை உருவானது. பெரும் எண்ணிக்கையில் இருந்த ஏழை எளிய மக்கள் சிறிய தொழிற்சாலைகளிலும் உதிரித்தொழில்களிலும் தம் ரத்தத்தை உழைப்பாகச் சிந்தினர்.

எண்ணெய் விலை சரிந்தபோது வாங்கிய கடனை வெனிசூலாவால் திரும்பச்செலுத்த முடியவில்லை. 1989-இல் பன்னாட்டு நிதியம் வெனிசூலா மீது நிறுவினவியத்தின் மூலமாகவும் வேறு பலவகைகளிலும் கடுமையான நெருக்கடிகளைக் கொடுத்தது. அதற்கு எதிர்வினையாற்றும் விதமாக கடும் போராட்டத்தில் இறங்கினர் வெனிசூலேவியர்கள். இருநூறு பேர் கொல்லப்பட்டனர். எண்ணெய் அனைத்து வளங்களையும் தந்துவிடும் என்ற அர்த்தமற்ற மாயை கலகலத்துப் போனது. 1978 க்கும் 2000 க்கும் இடைப்பட்ட காலத்தில் வெனிசூலாவின் தனிநபர் வருமானம் 40 சதவீதம் சரிந்தது.

வறுமை அதிகரிக்க மக்களின் கோபம் தீவிரமடைந்தது. நடுத்தர வர்க்கம் ஏழை மக்களுக்கு எதிராக நின்றது. எண்ணெய் உற்பத்தியைச் சார்ந்த நாடுகளின் நிலை கடும் ஏற்ற இறக்கங்களைச் சந்தித்தன. பொருளாதாரச் சரிவின் சுமை நடுத்தரவர்க்கத்தின் தலையில் விழுந்தபோது நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் வறுமைக்குள் தள்ளப்பட்டனர்.

புதிய சூழல் சாவேஸிற்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தது. வாஷிங்டன்னுக்கு எதிரான முரண்பாடு வலுத்தது. வெனிசூலாவின் புதிய அதிபர் புஷ் நிர்வாகத்திற்குச் சவாலாக மாறினார். செப்11 தாக்குதலுக்கு முன்னர் வெனிசூலாவை வழிக்குக் கொண்டுவருவதற்கான வழிகளைத் தேடியது வாஷிங்டன். பொருளாதார அடியாட்கள் தோல்வியுற்ற சூழலில் ஒநாய்களை அனுப்புவது பொருத்தமானதுதானா?

செப் 11 நிலைமைகளைத் தலைகீழாக மாற்றிவிட்டது. ஆப்கான் ஈரான் ஆக்கிரமிப்பிற்கு உலகநாடுகளின் ஆதரவைத் திரட்டுவதில் கவனம் செலுத்தினர், புஷ்ஷும் அவரது ஆதரவாளர்களும். அத்துடன் அமெரிக்கப் பொருளாதாரத்திலும் பின்னடைவு ஏற்பட்டிருந்தது. வெனிசூலா நீருபூத்த நெருப்பாக இருந்தது. எப்படியிருந்தாலும் சாவேஸும், புஷ்ஷும் ஜூனி விடும்போதுதான் அது பற்றிக் கொள்ளும். ஒருபுறம் எண்ணெய் வழங்கும் ஈராக்கும், மற்ற மத்தியகிழக்கு நாடுகளும் மிரட்டல் விட்டுக்கொண்டிருக்கும் சூழலில் வெனிசூலா பிரச்சனையை நீண்டகாலத்திற்குத் தள்ளிப்போட முடியாத நிலை.

நான் ஜீரோபாய்ண்ட், வால் ஸ்ட்ரீட் ஆகிய பகுதிகளில் சுற்றியலைந்தது, ஆப்கான் முதியவரைச் சந்தித்தது, சாவேஸ் குறித்து அறிந்துகொண்டது அனைத்தும் நீண்டகாலமாகத் தவிர்த்து வந்த எனது செயல்பாடுகளின் விளைவுகளைத் தீவிர பரிசீலனைக்கு உள்ளாக்கும்படித் தூண்டியது. நான் ஒரு பொருளாதார அடியாளாக இருந்து செய்துவந்த வேலைகள் மகளின் அடுத்த தலைமுறைக்கு எதிர்விளைவுகளைத் தரும் என்பதை மறுப்பதற்கு இல்லை. ஏதேனும் ஒரு பரிகாரத்திற்கான நடவடிக்கையை இனியும் தள்ளிப்போட முடியாது. நிறுவனவியத்தைப் பற்றிய உண்மைகளையும், மக்கள் எங்களை வெறுப்பதற்கான காரணத்தையும் புரிந்து விழிப்பூட்டும் வகையில் என் வாழ்க்கையைத் தெளிவாக அமைத்துக்கொள்ள வேண்டும்.

மீண்டும் எழுதத் தொடங்கினேன். ஆனால் அவ்வாறு எழுதும்போது எனது வாழ்க்கைக் கதை மிகவும் பழமையடைந்து விட்டதாகத் தோன்றியது. எனவே அதைப் புதுப்பிக்க ஏதேனும் செய்யவேண்டும் என்று கருதினேன். ஆப்கான், ஈராக், வெனிசூலா ஆகிய நாடுகளில் ஒரு பயணம் மேற்கொண்டு , தற்கால நிறுவனவியத்தைப் பற்றிய விமர்சனத்தை அதில் சேர்க்க வேண்டியிருந்தது. உலகவிவகாரங்களின் முரண்நகைக்கு இந்நாடுகள் எடுப்பான உதாரணம் என்று தோன்றியது. மக்களின் கவனத்தை ஈர்க்கும் தலைவர்கள் (கொடூரமான தலீபான், மனநிலை பிறழ்ந்த சதாம், பொருளாதாரத்தை சீர்செய்ய முடியாத சாவேஸ்) அந்நாடுகளின் கொந்தளிப்பான அரசியல் சூழ்நிலையை கையாண்டு வந்தனர். பிரச்சனைகளின் ஆழத்தை நுணுகிப் பார்த்துத் தீர்ப்பதற்குப் பதிலாக ஒரேவிதமான அணுகுமுறையைத்தான் நிறுவனவியம் மேற்கொண்டு வந்தது. தனது வழக்கமான பாதைக்கு குறுக்கே நிற்கும் தலைவர்களைத் தீர்த்துக்கட்டுவது ஒன்றுதான் அதன் கைவசம் இருந்த தீர்வு. ஒருபுறம் ஆப்கானில் ராணுவம் தலையிட்டு விட்ட சூழலில், ஈராக்கில் ராணுவம் இறங்குவதைத் தவிர்க்கமுடியாத நிலையில் வெனிசூலா மீதான அமெரிக்காவின் நடவடிக்கை புலப்படாத ஒன்றாக இருந்தது. சாவேஸ் எப்படிப்பட்டவர் என்பதைப் பார்க்கவில்லை. சர்வதேச ஏகாதிபத்தியமாக உருவெடுக்கும் நிறுவனவியப் போக்கிற்குக் குறுக்கே நிற்கும் ஒரு தலைவரை அமெரிக்கா எப்படி எதிர்கொள்கிறது என்பதே எனது அக்கறை.

பயணத்தை ஒருங்கு செய்வதற்கு முன்பே உலகச்சூழலில் மிகப்பெரிய மாற்றங்கள் நடந்தேறிவிட்டன. லாப நோக்கற்ற சேவைக்காக 2002 வாக்கில் தென்னமெரிக்காவில் பல பயணங்கள்

மேற்கொண்டேன். சாவேஸின் பொருளாதார நடவடிக்கையால் திவாலான வெனிசூலாக் குடும்பம் ஒன்று என்னுடன் அமேசானுக்குப் பயணம் மேற்கொண்டது. அமேசான் காடுகளிடையே பயணித்தபோது நாங்கள் நெருங்கிய நண்பர்களானோம். தங்களது நியாயங்களை என்னுடன் பகிர்ந்து கொண்டனர். அதேநேரத்தில் அதற்கு முரணாக சாவேஸை தென்னமெரிக்காவின் மீட்பர் என்று கருதியவர்களையும் நான் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது. எப்படிப்பட்ட உலகத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் பொருளாதார அடியாட்கள் வேலை செய்தோமோ அதற்குரிய அறிகுறியை காரகாஸில் நடந்த நிகழ்ச்சிகள் தெளிவுபடுத்தின.

வெனிசூலாவும், ஈராக்கும் 2002 டிசம்பரில் நெருக்கடியின் உச்சகட்டத்தை அடைந்தன. இரண்டும் அமெரிக்காவிற்கு சம பலமிக்க எதிரிகளாக உருவெடுத்தன. ஈராக்கில் சதாமைப் பணிய வைப்பதற்கு பொருளாதார அடியாட்களும், ஓநாய்களும் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. இறுதிப்பட்சத் தீர்வான நேரடி ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு எங்களைத் தயார்படுத்திக்கொண்டிருந்தோம். ஈரானில் ரூஸ்வெல்ட் செய்த அதே காரியத்தை வெனிசூலாவில் செய்வதற்கு புஷ் நிர்வாகம் துணிந்துவிட்டது. அதுகுறித்து நியூயார்க் டைம்ஸ் எழுதியது

''சாவேஸை பதவியில் இருந்து அகற்றுவதற்காக நடைபெறும் 28 நாள் வேலைநிறுத்தத்தை ஆதரித்து லட்சக்கணக்கானோர் வெனிசூலாத் தெருக்களில் இறங்கிவிட்டனர்.''

சுமார் முப்பதாயிரம் எண்ணெய் ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் பங்கேற்றிருப்பதால் உலகின் ஐந்தாவது பெரிய எண்ணெய் நாடாகிய வெனிசூலாவிற்கு மிகப்பெரிய பொருளாதார இழப்பை ஏற்படுத்தும்.

சமீப நாட்களாக வேலைநிறுத்தத்தின் தீவிரம் மட்டுப்பட்டுள்ளது. வேலைநிறுத்தத்தில் பங்கேற்காத தனது ஆதரவாளர்களைக் கொண்டு அரசிற்குச் சொந்தமான எண்ணெய் நிறுவனங்களில் வழக்கமான உற்பத்தியைச் செய்ய முடியும் என்று நினைக்கிறார் சாவேஸ். எண்ணெய் நிறுவனங்களும் தொழிற்சங்கத் தலைவர்களும் கூட்டாக நடத்தும் வேலைநிறுத்தத்தின் நெருக்கடி சாவேஸ் அரசைக் கவிழ்த்துவிடும் என்று நினைக்கின்றனர்.

ஈரானில் மொஸாடெக்கைக் கவிழ்த்துவிட்டு அவரிடத்தில் மன்னர் ஷாவினை அமர்த்துவதற்கு இதே உத்திதான் சிஐஏவால் மேற்கொள்ளப்பட்டது. இப்போதைய வெனிசூலா நிகழ்வுகளுக்கு

அதுதான் மிகப்பொருத்தமான உதாரணம். ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர், ஐந்து பதின்களுக்குப் பின்னர் வரலாறு தனது சுழற்சியைப் பூர்த்திசெய்வதுபோல் தோன்றுகிறது. அரை நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் எண்ணெய்தான் அனைத்தையும் தீர்மானிக்கும் சக்தியாக இருந்துகொண்டிருக்கிறது.

சாவேஸின் ஆதரவாளர்கள் தொடர்ந்து எதிரிகளுடன் மோதிக்கொண்டிருந்தனர். துப்பாக்கிச் சூட்டில் பலர் கொல்லப்பட்டதாகவும், டஜன் கணக்கானோர் படுகாயமுற்றதாகவும் செய்திகள் வந்துகொண்டிருந்தன. ஒநாய்க் கும்பலில் பல ஆண்டுகள் பணிபுரிந்த எனது பழைய நண்பருடன் பேசினேன். அவரும் என்னைப் போலத்தான் நேரடியான அரசு சேவையின் கீழ் வருபவரல்ல. ஆனால் பல நாடுகளில் அரசு சார்பான வேலைகளை நிறைவேற்றிக் கொடுத்தவர். இராணுவப் பள்ளியில் பயின்ற பல அதிகாரிகள் காரகஸ் வேலைநிறுத்தங்களை நடத்துவதற்குத் தன்னை அணுகியதாகவும் தான் மறுத்துவிட்டதால் அப்பொறுப்பு பிறரிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதாகவும், அவ்வேலையை ஏற்றுக்கொண்டவர்களுக்குத் தாங்கள் செய்யும் வேலைகளின் விளைவுகள் என்ன என்பதைத் தெரிந்தேதான் செய்கிறார்கள் என்றும் சொன்னார்.

எண்ணெய் நிறுவன அதிகாரிகளும், வால் ஸ்ட்ரீட்டும் இந்த வேலைநிறுத்தத்தால் எண்ணெய் விலை அதிகரிக்கக்கூடும் என்றும் அமெரிக்காவின் முதலீடு வெனிசூலாவில் குறையும் என்றும் பயந்தனர். மத்தியகிழக்கில் நெருக்கடி ஏற்பட்டிருந்தபோதிலும் புஷ் நிர்வாகம் தன் முழுச் சக்தியையும் திரட்டி சாவேஸைத் தூக்கி எறிவதில்தான் குறியாக இருக்கிறது என்பது எனக்குத் தெரிய வந்தது. இந்தச் சூழலை வரலாற்றுப் பின்னணியுடன் நியூயார்க் டைம்ஸ் எடுத்து வைத்ததுடன் இப்போதைய நிகழ்வில் வெனிசூலாவில் ரூஸ்வெல்டின் பாத்திரத்தை ஏற்றுநடத்துவது யார் என்று அடையாளம் காட்டவும் செய்தது.

பனிப்போருக்கு முன்னரும் பின்னரும் தனது அரசியல் பொருளாதார நலன்களுக்காக மத்திய மற்றும் தென்னமெரிக்காவில் சர்வாதிகார அரசுகளையே ஆதரித்து வருகிறது அமெரிக்கா.

சின்னஞ்சிறிய நாடான குவாதி மாலாவில் 1954ல் ஜனநாயகரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை சிஐஏ மூலமாகக் கவிழ்த்துவிட்டு அதனிடத்தில் தான் அமர்த்திய வலதுசாரி அதிகாரக் கும்பல் இடதுசாரி கலகக்காரர்களை வேட்டையாடுவதாகக் கூறி நான்கு பதின்மங்களாக இரண்டு லட்சம் அப்பாவி மக்களைக் கொன்று குவித்தது.

சிலியில் சிஐஏவின் ராணுவச் சதியின் மூலம் 1973 முதல் 1990 வரை ஜெனரல் பினோசெட்டை ஆட்சியில் அமர்த்தியது. பெருவில் ஜனநாயகத்தை சிதைத்துவிட்டு பத்தாண்டுகளாக மக்களிடம் மரியாதையற்ற அல்பெர்ட்டோ பிஜுமோரி மற்றும் அவரது உளவுத் துறைத் தலைவரான கீழ்த்தரமான விளாடிமிரோ எல்.மொண்டஸினோஸ் மூலமாக பொம்மை அரசை நடத்தி வருகிறது.

மானுயேல் நோரிகாவை அகற்றுவதற்கு 1989-ல் அமெரிக்கா பனாமாவில் புகுந்தது. இத்தனைக்கும் நோரிகா இருபதாண்டு காலமாக அமெரிக்காவின் உளவுத்துறைக்கு நம்பகமான தகவலாளியாக இருந்தவன். நோரிகாவின் இடதுசாரி அரசுக்கு எதிராக ஆயுதங்களைப் பறிக்கவும், ஈரானுக்கு ஆயுத விற்பனை செய்வதன் பின்னணியிலும் மூத்த புஷ் நிர்வாகத்தின் அதிகாரிகள் செயல்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டது.

லத்தீன்அமெரிக்க விவகாரங்களில் புகழ்பெற்ற ஓட்டோ ஜெ.ரிச் இதுதொடர்பாக விசாரிக்கப்பட்டார். ஆனால் அவர் மீது குற்றம் பதியப்படவில்லை, பின்னர் இவர் அமெரிக்காவிற்கான வெனிசூலாத் தூதராகவும், அமெரிக்க உள்துறைச் செயலாளராகவும் நியமனம் பெற்றார். சாவேஸின் வீழ்ந்தால் அது ஒட்டோவின் மணிமுடிக்கு ஒரு இறகாகும்.

ரீச்சும், புஷ் நிர்வாகமும் சாவேஸின் வீழ்ச்சிக்காக ஏதேனும் மதுக் கொண்டாட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தால் அதைப் பாதியிலேயே நிறுத்தவேண்டி வந்திருக்கும். எதிர்பாராதவிதமாக சாவேஸ் மீண்டும் எழுப்பத்திரண்டு மணிநேரத்தில் அதிகாரத்தில் அமர்த்தப்பட்டார். ஈரானில் மொஸாடக்கைப் போல் பலவீனப்பட்டுப் போகாமல் சில உயர்அதிகாரிகள் எதிராக இருந்த போதிலும் சாவேஸ் இராணுவத்தைத் தன் பக்கபலமாக வைத்துக் கொண்டார். அது மட்டுமல்லாமல் வலிமை வாய்ந்த எண்ணெய் நிறுவனங்களும் அவருக்குத் துணையாக நின்றன. பெட்ரோலஸ் டி வெனிசூலா நிறுவனம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தை முறியடித்து சகஜ நிலைக்குத் திரும்பியது.

பிரச்சனைகள் தீர்ந்து இயல்புநிலை ஏற்பட்டதும் சாவேஸ் எண்ணெய் நிறுவன ஊழியர்களின் மீது அரசின் பிடியை இறுக்கினார். விசுவாசமற்ற ராணுவ உயரதிகாரிகளைக் களையெடுத்தார். தனக்கு எதிரான முக்கியஸ்தர்களை நாட்டைவிட்டு ஓடச் செய்தார். வாஷிங்டன் ஒத்துழைப்புடன் தேசிய வேலைநிறுத்தத்தை நடத்திய எதிர்க்கட்சித் தலைவர்களை இருபதாண்டு காலம் சிறையில் அடைக்க உத்தரவிட்டார்.

ஒட்டுமொத்தத்தில் நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் புஷ் நிர்வாகத்திற்கு எதிராக முடிந்தது. இதுகுறித்து ஆய்வு அறிக்கை வெளியிட்ட லாஸ் ஏஞ்சலீஸ் டைம்ஸ் எழுதியது

ராணுவத் தலைமை மற்றும் சமூகத் தலைமையின் ஒத்துழைப்புடன் சாவேஸை அதிகாரத்தில் இருந்து அகற்றுவதற்கு பல மாதங்களாகவே கலந்துரையாடியதாக செவ்வாயன்று புஷ் அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர். முயற்சி தோல்வியடைந்ததால் கீழ்த்தரமான கவிழ்ப்பு வேலையில் ஈடுபட்டது வெட்ட வெளிச்சமானது.

இத்தோல்வி பொருளாதார அடியாட்களின் தோல்வி மட்டுமல்ல ஓநாய்களுக்கும் தோல்வியாக முடிந்தது. 1953-இல் ஈரான் நடவடிக்கையில் இருந்து 2003 வெனிசூலா முற்றிலும் மாறுபட்டிருந்தது. வாஷிங்டன் அடுத்து எடுக்கப்போகிற நடவடிக்கையை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருந்தேன்.

வெனிசூலா நெருக்கடி தற்காலிகமாகவேணும் தீர்க்கப் பட்டிருக்கிறது. சதாம் உசேனால் சாவேஸ் காப்பாற்றப்பட்டிருக்கிறார். ஈரான், ஆப்கான், வெனிசூலா மூன்று நாடுகளையும் ஒரேநேரத்தில் புஷ் நிர்வாகத்தால் சமாளிக்க முடியவில்லை. சமாளிப்பதற்கான ராணுவ பலமோ, அரசியல் ஆதரவோ தற்போதைக்கு இல்லை. சாவேஸிற்கு நெருக்கடி குறைந்திருந்தாலும் விரைவில் நிலைமைகள் மாறும். எதிர்ப்புகளைச் சந்திக்கவேண்டி வரலாம் என்று கருதினேன். வெனிசூலா நிகழ்வு ஒரு விதிவிலக்குதானே தவிர நிம்மதிப் பெருமூச்சுவிடும் அளவிற்குக் கடந்த ஐம்பது ஆண்டுகளில் பெரிய மாற்றம் எதுவும் நிகழ்ந்துவிடவில்லை.

அத்தியாயம் - 34

மீண்டு எழும் ஈக்குவடார்

நான் கவனித்துவந்த நிகழ்வுகளில் வெனிசூலா எடுப்பான முன்னுதாரணம். ஆனால் அதிமுக்கியத்துவம் வாய்ந்த போர் இன்னொரு நாட்டில் நடக்க இருப்பதாகத் தோன்றியது. அப்படி நிகழ்வதால் போரில் பெரும் பொருளும், மனித உயிர்களும் அழிக்கப்படலாம் என்பது மட்டுமல்ல, உலகப் பேரரசு எனும் விருப்பத்திற்கு அப்பால் வேறுசில காரணிகளும் அடங்கியிருக்கின்றன. வங்கியாளர்கள் வணிக நிறுவனர்கள், அரசியல்வாதிகள் எனும் பெரும் படைகளுக்கு அப்பால் நவநாகரீகத்தின் ஆன்மாவின் அடியாழத்தில் இருந்து எழும் போராக அது இருக்கும். அந்தப் போர் நடைபெறும் இடம் நான் முதன்முதலாக அமைதிப் படையின் மூலமாக பணியாற்றிய நாடான ஈக்குவடாராக இருக்கும்.

நான் சென்றிருந்த 1968 இல் இருந்து அச்சின்னஞ்சிறு நாடு நிறுவனவியத்தால் ஈவுஇரக்கமின்றி சுரண்டப்பட்டு வந்துள்ளது. எங்கள் காலத்தைச் சேர்ந்தவர்களும், நிறுவனவியத்தினரும் அந்நாட்டை திவாலாக்கிவிட்டோம். அந்நாட்டில் உள் கட்டுமானத்தை நிர்மாணிக்க நாங்கள் அளித்த பில்லியன் கணக்கான டாலர்கள் கடனை அந்நாட்டின் பணக்காரக் குடும்பங்கள் தங்கள் வளமைக்குப் பயன்படுத்திக் கொண்டனர். அதன் விளைவால் அந்நாட்டின் வறுமை 60 லிருந்து 70 சதவீதம் அதிகரித்தது. வேலையின்மை 15 லிருந்து 70 சதவீதமாக உயர்ந்தது. பொதுக்கடன் 240 மில்லியன் டாலரிலிருந்து 16 பில்லியன் டாலராக அதிகரித்தது. ஏழைமக்கள் அனுபவித்த தேசிய ஆற்றல் 20 லிருந்து 6 சதவீதமாகக் குறைந்தது. இன்று தனது தேசிய பட்ஜெட்டில் ஈக்குவடார் 50 சதவீதத்தை கடனைத் திருப்பிச்செலுத்தியாக வேண்டும். அதன் விளைவால் வளர்ச்சித்திட்டங்கள் ஏதுமின்றி ஏழை மக்கள் மேலும் மோசமான வறுமையின் கீழ் தள்ளப்படுவார்கள்.

இந்நாட்டின் அழிவிற்குக் காரணம் திரைமறைவு வேலைகள் மட்டுமல்ல என்பதைச் சூழல் மிகத் தெள்ளத் தெளிவாக

எடுத்துரைக்கிறது. அமெரிக்காவில் ஆட்சிசெய்த ஜனநாயகக் கட்சி குடியரசுக் கட்சி இவை இரண்டின் அந்நியச் சுரண்டல் கொள்கையாகும். இந்நடவடிக்கையில் பன்னாட்டு வங்கிகளும், அந்நிய நிதி நிறுவனங்களும், பன்னாட்டு நிறுவனங்களும் அடக்கம். இச்சுரண்டலில் அமெரிக்காதான் முக்கிய பங்கு வகிக்கிறது என்றாலும் அதுமட்டுமே அல்ல.

கடந்த மூன்று பதின்களாக ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் இணைந்து செயலாற்றித்தான் ஈக்குவடாரை இந்நூற்றாண்டின் துவக்கத்தில் இந்த நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். என்னைப் போன்ற சிலர் நாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அறிந்தே செய்துகொண்டிருக்கிறோம். பலர் தங்களது செயல்களின் விளைவுகள் என்ன என்பதை அறியாமலே தங்களது தொழில், பொறியியல் இலக்கை எட்டுவதற்காக அவ்வேலைகளைச் செய்வதாக கற்பிக்கப்பட்டிருக்கிறார்கள். என்னைப் போன்றவர்கள் பேராசை பிடித்த மேலதிகாரிகளின் பரிசுப் பொருட்களுக்காகவும், தண்டனைகளுக்குப் பயந்தும் நிறுவனங்களின் தாளத்திற்கு ஏற்ப ஆடிக்கொண்டிருக்கிறார்கள். இவை அனைத்திலும் மோசமானது என்னவென்றால் பலர் இந்த ஏழைநாடுகளின் வளர்ச்சிக்குத் தாங்கள் மெய்யாகவே உதவுவதாக நினைத்துக்கொண்டிருப்பதுதான்.

அறியாமலும் ஏமாற்றப்பட்டும் திரைமறைவு வேலைகளில் பங்கேற்காதபோதும் ஏகாதிபத்திய அமைப்பால் உருவாக்கப் பட்டவர்கள் என்பதற்கு சான்றாக விளங்குகிறார்கள். லஞ்சம் கொடுக்கப்பட்டவர்களையும், மிரட்டப்படுபவர்களையும் காணவேண்டுமென்றால் வேறெங்கும் தேடிப்போகவேண்டிய அவசியமே இல்லை. அவர்கள் அனைவரும் பன்னாட்டு நிறுவனங்களால், வங்கிகளால், அரசு முகவர்களால் ஏற்கனவே வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். சம்பளம், போனஸ், பென்சன், ஆயுள் காப்பீடு என்ற பெயரால் அவர்களுக்கு லஞ்சம் வழங்கப்படுகிறது. சமூக மதிப்பு, குழந்தைகளின் எதிர்காலக் கல்வி போன்ற விசயங்களை பேசமுடியாத அளவிற்கு மிரட்டி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

நிறுவனவிய முறை வெற்றிகரமாகச் செயல்பட்டு வந்தது. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் ஈக்குவடார் நிறுவனவியத்தின் பொறியில் வகையாகச் சிக்கிக்கொண்டது. பெரும் வட்டிக்காரனிடம் தன் மகளுக்கோ அல்லது தன் சிறிய வியாபாரத்திற்கோ கடன் வாங்கியவன் சிக்கிக்கொண்டு மீள முடியாமல் மீண்டும் மீண்டும்

கடன் வாங்குவதைப் போல ஈக்குவடார் சிக்கிக்கொண்டிருக்கிறது. கொடுத்த கடனைத் திரும்பப்பெறும் காலம் கனியக் காத்திருக்கிறோம். ஈக்குவடாரின் மழைக்காடுகள் கடல் போன்ற எண்ணெய் வளத்தின் மீது நிலை கொண்டுள்ளது. அதை முற்றாக உறிஞ்சி எடுப்பதற்கான வாய்ப்பிற்காக காத்திருக்கிறோம்.

சுபாரு அவுட் பேக் வாகனத்தில் காடுகளுக்கு நடுவேயுள்ள ஷெல் நகரத்திற்கு க்யாட்டோவில் இருந்து செல்கிற அந்த நாளும் 2003ன் துவக்கத்தில் வந்தது.சாவேஸ் மீண்டும் தன் பதவியைத் தக்கவைத்ததன் மூலம் புஷ்ஷை வெற்றி கொண்டு விட்டார். சதாம் தன் களத்தில் காலூன்றி தன் மீது வரும் தாக்குதலை எதிர்கொள்ளத் தயாராகி விட்டார். கடந்த முப்பது ஆண்டுகளாக இல்லாத அளவிற்கு எண்ணெய் இறக்குமதி சரிந்தது. நிறுவனவியத்தின் லாபமும் இறங்கு முகம் கண்டது. எனவே விழுந்த ஓட்டையை அடைக்க வேண்டிய கட்டாயம். கொடுத்த கடனுக்காக ஈக்குவடாரின் சதையை அறுக்கும் தருணம் வந்துவிட்டது.

பாஸ்டஷா ஆற்றை பெரும் பூதாகரமாக மறித்து நிற்கும் அணையில் படகுப் பயணம் செய்யும்போதுதான் சற்று நினைத்துப் பார்த்தேன். ஈக்குவடாரில் நடப்பது காலங்காலமாக பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையில் சுரண்டுவோருக்கும், சுரண்டப்படுவோருக்கும் இடையில் நடைபெறும் வழக்கமான வர்க்கப்போர் அல்ல. இந்தப் போர்தான் நாம் நாகரீக வளர்ச்சி பெற்றவர்களா இல்லையா என்பதை தெளிவாக வரையறுக்கப் போகிறது. அமேசான் மழைக்காடுகளை எண்ணெய்ச் சுரண்டலுக்குத் திறந்துவிடுமாறு இச்சின்னஞ் சிறிய நாட்டை நாம் நெருக்கிக் கொண்டிருக்கிறோம். அதனால் ஏற்படும் பேரழிவு எத்தகையது என்பது அளவிடமுடியாது.

நாம் அளித்த கடனுக்கு ஈடாக இதைக் கோருவதாக கூறிக்கொண்டாலும் எதிர்விளைவுகள் மீண்டும் நிவர்த்தி செய்ய முடியாத அளவிற்குப் பயங்கரமானவை. பல்லாயிரக்கணக்கான பழங்குடி மக்களின் வாழ்வையும் கலாச்சாரத்தையும் சிதைப்பது மட்டுமல்லாமல் இயற்கையின் சமநிலையைப் பேணுவதற்கு உதவும் ஆயிரக்கணக்கான விலங்கினங்கள், உயிரினங்கள், ஊர்வன, பறவையினங்கள், பூச்சியினங்கள், மீன் இனங்கள் மற்றும் தாவர இனங்களை முற்றாக அழித்துவிடும் நமது அமேசான் மழைக்காட்டின் தலையீடு. இவற்றில் பல தாவரங்கள் அரிய மூலிகைப் பண்பு வாய்ந்தவை. நமது தொழிற்சாலைகள் வெளியிடும் கார்பனைக் கவர்ந்து உயிர்களுக்கு அவசியமான உயிர்வளியை வெளியிடுபவை அமேசான் காடுகள். உலகின் மிக

முக்கியமான நீராதாரங்களில் ஒன்று இது. இக்காட்டினை பாதுகாப்பதற்காக சூழலியலாளர்கள் முன் வைக்கும் வாதங்கள் நம் ஆன்மாவில் ஆழமாக பதிக்கப்பட்டுள்ளது.

பண்டைய ரோமானியப் பேரரசின் பாதையில் ஆதிக்கப்போக்கைத் தான் கடைப்பிடிப்போம் என்றால் நாம் அடிமைத்தனத்தை ஒழித்துவிட்டதாகப் பெருமையடித்துக் கொள்வதில் எந்த அர்த்தமும் இருக்க முடியாது. வரலாற்றில் இதற்கு முன்னர் இருந்த எந்த வலிமையான, மோசமான ஆதிக்க சக்தியைவிடவும் நாம் எதார்த்தத்தை தான் பயங்கரமான ஆதிக்க சக்தியாக இருப்போம். ஈக்குவடார் குறித்து நாம் உருவாக்கியுள்ள கொள்கை எத்தகைய குறுகிய நோக்கு உடையது, நம் கூட்டு மனசாட்சி இக்கொள்கைக்கு எப்படி உடன்படுகிறது என்பது எனக்கு ஆச்சர்யத்தை அளிக்கிறது.

எனது அமைதிப்படை சேவையின் போது நான் பார்த்த தாவரங்கள் செழித்து நிரம்பிய ஆண்டிஸ் மலைச்சரிவுகள் இப்போது மொட்டையாகிக் கிடப்பதை வாகனத்தின் கண்ணாடி வழியாகப் பார்த்து, என் கண் முன்னே நிகழும் இந்த எதார்த்தத்தை ஒப்புக்கொள்ள முடியவில்லை. ஈக்குவடாரில் என்னால் இப்போது நடப்பதுதான் ஒவ்வொரு நாட்டிலும் நடக்கிறது என்ற உண்மையை புரிந்து கொண்டேன். எனது கபடமற்ற பருவமான 1960 களில் இருந்து இந்நாட்டுடன் தொடர்பு கொண்டிருப்பதால் இப்பிரதேசத்தின் மீது கூடுதலான பற்று கொண்டுள்ளேன்.

உலகிற்குக் கிடைத்த அரிய பொக்கிஷம் ஈக்குவடாரின் மழைக்காடுகள். ஆனால் அதற்காக ஈரான் பாலைநிலத்தையும் அம் மக்களையும் நாம் நிராகரித்துவிட முடியாது. இந்தோனேசிய ஜாவா மலைகளும், பிலிப்பைன்ஸின் அழகான கடற்கரைகளும், ஆசியாவின் ஸ்டெப்பி புல்வெளிகளும், ஆப்பிரிக்காவின் சவான்னா பிரதேசமும், வடஅமெரிக்கக் காடுகளும், ஆர்டிக் பகுதி பனிப்படலங்களும் அமேசான் மழைக்காடுகளைவிட அழிவின் விளிம்பில் உள்ள உலகின் மற்ற பிரதேசங்களைவிட சற்றும் குறைந்தவை அல்ல. இவை ஒவ்வொன்றுமே நமது தனிப்பட்ட மற்றும் கூட்டு ஆதிக்க மனதை நோக்கி கேள்வி எழுப்புபவைதான்.

எனக்கு அப்போது சில புள்ளிவிபரங்கள் நினைவிற்கு வந்தன. பணக்கார நாடுகளில் உள்ள ஐந்தில் ஒரு பங்கினருக்கும், ஏழைநாடுகளில் உள்ள ஐந்தில் ஒரு பங்கினருக்கும் இடையில் உள்ள விகிதாச்சார இடைவெளி 1960 இல் 30;1 ஆக இருந்து 1995 இல் 74;1 ஆக மாறிவிட்டது. அதாவது பணக்கார நாட்டினரின் வருமானம் இரண்டரை மடங்கு அதிகரிக்க ஏழைநாட்டு மக்களின் வருமானம்

அந்த அளவு குறைக்கப்பட்டுள்ளது. தாங்கள் செய்த உதவியால் ஏழைநாடுகளில் மக்களின் வாழ்க்கைத் தரம் வெகுவாக உயர்ந்து விட்டதாக தம்பட்டம் அடித்துக்கொண்டிருக்கின்றன பன்னாட்டு வங்கிகளும் கடன் வழங்கும் நிதி அமைப்புகளும்.

போர்க்களத்தின் விளிம்பில் நிற்கும் பலநாடுகளில் ஈக்குவடாரும் ஒன்று. அங்கு இருக்கும் நேரத்தில் என் மனதில் இச்சிந்தனைகள் தோன்றுவதால் ஈக்குவடார் விசேச இடத்தை என்னில் எடுத்துக்கொண்டது. அது 2003 ஆம் ஆண்டு. 35 ஆண்டுகளுக்குப் பிறகு அமைதியை உருவாக்குவதற்காக ஒரு அமெரிக்க அமைப்பின் சார்பாகச் சென்றுள்ளேன். முப்பது ஆண்டுகளுக்கு முன் என்னால் உருவாக்கப்பட்ட போரைத் தடுப்பதற்காக வந்துள்ளேன்.

ஆப்கானிலும், ஈராக்கிலும், வெனிசூலாவிலும் இப்போது நடைபெற்று வரும் நிகழ்ச்சிப்போக்குகளைக் கவனித்தால் இனியொரு போர் உருவாகாமல் தடுத்துவிடுவோம். இருந்தாலும் ஈக்குவடாரின் நிலைமை முற்றிலும் மாறுபட்டது. அமெரிக்க ராணுவம் களத்தில் இறங்கவேண்டிய தேவை இல்லை. இங்கே அமெரிக்காவின் ஆலோசனைகளையும் அதிநவீன ஆயுதங்களையும் பெற்றுள்ள ஈக்குவடார் ராணுவத்தையும், நிறுவனங்களின் கூலிப்படையினரையும், அமெரிக்காவின் ஒநாய்களையும் எதிர்கொள்ள இந்நாட்டில் பழங்குடி மக்கள் நாட்டுத் துப்பாக்கிகளையும், ஈட்டிகளையும், வாள்களையும் ஏந்தி நேருக்கு நேராகக் களத்தில் நிற்கின்றனர். இத்தகைய போர் நடப்பது அமெரிக்க மக்கள் பெரும்பாலானோருக்குத் தெரியாது.

ஒரு எண்ணெய் நிறுவனத்தின் தொழிலாளர்கள் சிலரை ஈக்குவடார் பழங்குடி மக்கள் பணையக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர் என்று 2002 டிசம்பர் மாதம் குற்றம் சாட்டப்பட்டது. இம்மக்களுக்கு அல்-கொய்தாவுடன் தொடர்பு இருப்பதாக வதந்தி பரப்பப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட எண்ணெய் நிறுவனம் அப்பகுதியில் எண்ணெய் எடுப்பதற்கு முறையான அனுமதி பெறவில்லை என்பதுதான் பிரச்சனைக்குக் காரணம். துவக்க ஆய்வுகளே தற்போது மேற்கொள்ளப்படுவதாகவும், அதைச்செய்ய தங்களுக்கு அனைத்து உரிமைகளும் உள்ளதாக அந்நிறுவனம் கூறிக் கொண்டது. இதைப் பழங்குடி மக்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

எண்ணெய் நிறுவனம் முறையான அனுமதியின்றி அத்துமீறி அப்பகுதிக்குள் நுழைந்தது. என்று பழங்குடி மக்களின் தலைவர்கள் சுட்டிக்காட்டினர். போராளிகள் கையில் ஆயுதங்கள் இல்லை. அவர்கள் மிரட்டவும் இல்லை. சொல்லப்போனால் எண்ணெய்

நிறுவன அதிகாரிகளுக்கு அக்கிராம மக்கள் விருந்து அளித்துள்ளனர். விருந்தில் சிக்கா என்ற நாட்டு மது வழங்கப்பட்டிருக்கிறது. போராளிகள் அளித்த ஊக்கத்தால் நிறுவன வழிகாட்டிகள் வழிதவறிப் போய்விட்டனர். ஆனால் நிறுவன ஊழியர்கள் பிடித்து வைக்கப்படவோ, நடமாடுவதற்கு அனுமதி மறுப்போ எதுவும் விதிக்கப்படவில்லை.

நான் வேலை செய்த நிறுவனம் விற்கப்பட்ட 1990-இல் காடுகளைக் காக்கும் போரில் நானும் பழங்குடி மக்களுடன் இணைய விருப்பம் தெரிவித்தபோது அவர்கள் இந்த உலகம் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ அப்படித்தான் இருக்கும். வடக்கே இருப்பதுபோன்ற பிரமாண்டமான கட்டடங்களும் விண்ணை முட்டும் ஆலைகளும் எங்களுக்கும் வேண்டும் என்று கனவு கண்டோம். ஆனால் அவை எம்மை அதள பாதாளத்தில் தள்ளக்கூடியவை என்பதை இப்போதுதான் உணர்கிறோம் என்று கூறியது இப்போது என் நினைவிற்கு வந்தது.

முதலில் நம் கனவை மாற்றிக்கொள்ள வேண்டியுள்ளது என்று ஷூவர்கள் கூறினர். கடந்த பத்தாண்டுகளாக பல்வேறு தொண்டு அமைப்புகள், தனிநபர்களின் உழைப்பிற்குப் பின்னரும் அந்தக் கனவில் எந்த மாற்றமும் நிகழவில்லை என்பது மட்டுமல்ல நிலைமை முன்னிலும் மோசமாகி வருகிறது.

எனது பயணத்தின் முடிவில் காட்டிற்கு மத்தியில் உள்ள ஷெல் நகரத்திற்குச் சென்றேன். அங்கு ஈக்குவடார் பழங்குடியினரான கிச்சுவா, ஷூவார், அச்சுவார், ஷிவியார், ஸப்பாரோ போன்றவர்களின் பிரதிநிதிகளுடன் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவர்கள் பலர் காடுகளினூடே நடந்தே வந்திருக்கிறார்கள். சிலருக்கு தொண்டுநிறுவனங்கள் விமான ஏற்பாடு செய்திருந்தன. பிரதிநிதிகள் பலர் பாரம்பரியமான பல வண்ணப்பூச்சு உடை அணிந்திருந்தனர். சிலர் நவீன பாணியில் டி-சட்டையும், ஷூவும் அணிந்திருந்தனர்.

குற்றம்சாட்டப்பட்ட பழங்குடியினப் பிரதிநிதிகள் பேச்சை முதலில் ஆரம்பித்தனர். நிறுவனத் தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டதும் ராணுவத்தினர் நூற்றுக்கணக்கில் அக்கிராமத்தில் புகுந்தனர். கோண்டாப் பழம் கனியும் பருவம் அது. ஆண்டிற்கு ஒரு பருவத்தில் விளையும் கோண்டா பழத்தை பழங்குடி மக்கள் புனிதமானதாகக் கருதுகின்றனர். கோண்டா பழுக்கும் காலத்தில்தான் அவற்றை உண்ண வரும் பல பறவை இனங்கள் இனப்பெருக்கம் செய்யும். எனவே பறவை வேட்டை அப்பகுதியில் தடைசெய்யப்பட்டிருந்தது.

ஆனால் மக்களின் தடையை ராணுவத்தினர் பொருட் படுத்தவில்லை என்பதை மிகுந்த துயரத்துடனும் வேதனையுடனும் விவரித்தார். களியாட்டத்திற்காகவும், உணவுக்காகவும் பறவைகள் ராணுவத்தால் வேட்டையாடப்பட்டன. தோப்புகளும் வயல்வெளிகளும் சிதைக்கப்பட்டன. ஆறுகளில் மீன் பிடிக்க குண்டுகள் வீசிப்பட்டன. உள்ளூர் வேட்டைக்கருவிகளைப் பறித்த ராணுவம் வளர்ப்பு விலங்குகளையும் தின்று தீர்த்தது. முறையற்ற வகையில் கழிப்பிடங்கள் உருவாக்கினர். ஆறுகளில் நீர் நிலைகளில் எண்ணெய் கழிவையும், குப்பையையும் கொட்டி மாசுபடுத்தினர். பெண்கள் வன்புணர்விற்கு உள்ளானார்கள். உணவுக்கழிவுகள் அகற்றப்படாததால் புதிய விஷஜந்துக்கள் அப்பகுதியில் தோன்றின.

எங்களுக்கு இருந்தது இரண்டே வாய்ப்புகள்தான். ஒன்று எதிர்த்து நிற்பது, மற்றொன்று சகித்துக்கொண்டு போவது. எதிர்த்து நிற்பதற்கான நேரம் இன்னும் வரவில்லை என்ற முடிவிற்கு வந்தோம். ராணுவத்தினரின் அத்துமீறல்களைத் தடுக்க உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்தோம் என்று விளக்கினார். உண்ணாவிரதம் என்று கூறினாலும் அது விருப்பப் பட்டினி என்பதுதான் அதன் உட்பொருள். குழந்தைகளும் பெண்களும் உணவுப் பற்றாக்குறையால் நோய்களுக்கும் பலவீனத்திற்கும் உள்ளாயினர்.

தாங்கள் மிரட்டப்பட்டதாகவும், லஞ்சம் அளிப்பதாக ஆசை காட்டப்பட்டதாகவும் கூறினர். ஒரு பெண்மணி தன் மகன் ஆங்கிலமும், ஸ்பானிஷும் பழங்குடி இனமொழி பலவும் தெரிந்தவன். ஒரு தொண்டு நிறுவனத்தில் தாராளமான சம்பளம் பெறுகிறான். ஆனால் ஒரு எண்ணெய் நிறுவனம் அவன் பெறுவதைப் போல பத்து மடங்கு சம்பளம் தருவதாக ஆசை ஊட்டியது என்று கூறினார். ஒரு இளைஞன் இதுபோன்ற ஆசைக்கு எப்படி இணங்காமல் இருப்பான். இப்போது தொண்டு நிறுவனத்தினரை அவன் எதிரியாகவும், எண்ணெய் நிறுவனத்தை நட்பு சக்தியாகவும் கருதுகிறான். இனி அவனை எங்களில் ஒருவனாக நினைக்கமுடியாது என்று கூறி உடலைக் குலுக்கிக்கொண்டார்.

பாரம்பரிய மந்திரவாதியைப் போன்ற தலைப்பாகை அணிந்திருந்த ஒரு முதியவர் கூறியது எங்கள் சார்பாக எண்ணெய் நிறுவனங்களிடம் பேசுவதற்கு நியமிக்கப்பட்டவர்கள் விமான

விபத்தில் கொல்லப்பட்டுவிட்டனர். அந்த இடம் வினாடி கூடத் தாமதம் இன்றி எண்ணெய் நிறுவனத்து ஆட்களால் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது.

மூன்று லட்சத்திற்கு ஒரு பெரும் நிலப்பரப்பை மரம் அறுக்கும் நிறுவனத்திற்கு அளிக்கும் ஒப்பந்தத்தை ஒருவர் வாசித்துக் காட்டினார். பழங்குடிப் பிரதிநிதிகள் மூவரின் கையெழுத்து அதில் இருந்தது. ஆனால் அக்கையெழுத்து உண்மையானது அல்ல. எப்படி இவ்வளவு உறுதியாகச் சொல்கிறேன் என்றால் இக்கையெழுத்து ஒன்றிற்கு உரியவன் என் சகோதரன். பழங்குடிப் பிரதிநிதிகளின் பெயருக்குக் களங்கம் விளைவிப்பதுதான் இந்நிறுவனங்களின் வேலை என்று அம்முதியவர் கூறினார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் இவ்வாறு நடப்பவை அனைத்துமே எண்ணெய் நிறுவனங்கள் துளையிட இன்னமும் அரசு அனுமதி பெறாத இடங்களில்தான். அரசு அனுமதி கிடைத்து விட்டால் எண்ணெய் நிறுவனங்களின் ஆட்டத்திற்கு அளவே இருக்காது. அங்கு அமர்ந்து இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த எனக்குத் தோன்றியது என்னவென்றால் இதை சிஎன்என் தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்தால் அமெரிக்க மக்களின் எதிர்வினை என்னவாக இருக்கும் என்பதுதான்.

தொடர்ந்து ஆர்வம் செலுத்தக்கூடியதாக இருந்தாலும் கூட்டங்கள் மூலம் தெரிந்துகொண்ட உண்மைகள் நிம்மதியைக் குலைப்பவனவாக இருந்தன. தேநீர், உணவு இடைவேளைகளில் தனிப்பட்ட முறையில் பேசிக்கொண்டிருந்தபோது ஈராக் மிரட்டப்படுவதற்கான காரணங்களைத் தெரிந்துகொள்வதில் மிகவும் ஆர்வமாக இருந்தனர் அப்பழங்குடி மக்கள். சமீபித்துக் கொண்டிருக்கும் ஈராக் போர் ஈக்குவடார் செய்தியில் முன்னிடத்தைப் பிடித்துக்கொண்டது. காடுகளுக்கு நடுவே வசிப்பவர்களும் போரைப்பற்றித் தெரிந்து வைத்திருந்தனர். அமெரிக்கச் செய்திகளில் இருந்து மாறுபட்ட தன்மை உடையனவாய் இருந்தன ஈக்குவடார் பத்திரிகைச் செய்திகள். புஷ்க்கு உரிமையான எண்ணெய் நிறுவனம் குறித்தும், அதில் துணை ஜனாதிபதி சென்னி ஹாலிப்டன் மூத்த அதிகாரியாகப் பணியாற்றுவது குறித்தும் பத்திரிகைகள் விவாதித்தன. இவை எழுத்தறிவற்ற மக்களுக்கும் படித்துக் காட்டப்பட்டன. அமேசான் மழைக்காட்டில் வசிப்பவர்கள் உலகநாகரீகம் அறியாத

காண்டுமிராண்டிகள் என்றுதான் பொதுக்கருத்து உருவாக்கப் பட்டுள்ளது. ஆனால் உலக ஏகாதிபத்தியத்தின் ஆன்மாவை நோக்கிய கேள்விகள் இங்கிருந்துதான் எழுப்பப்படுகின்றன.

ஷெல் நகரத்தில் இருந்து திரும்பும் வழிநெடுகிலும் அமெரிக்கர்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் இடையிலான வித்தியாசங்கள் குறித்துதான் யோசித்துக்கொண்டே வந்தேன். பள்ளிகளில், கல்லூரிகளில் நிறையப் படிக்கிறோம், தொலைகாட்சிகளில் நீண்டநேரத்தை செலவளிக்கும் நமக்குத் தெரியாத பல விசயங்களை நாம் பழங்குடி மக்களிடமிருந்துதான் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. லத்தீன்அமெரிக்கா முழுதும் பிரபலமான புனிதக் கழுகின் முன்னுரைப்பு என்ற தொன்மைக் கதையைப் போன்ற உலகின் பல நாடுகளிலும் உள்ளதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஒவ்வொரு கலாச்சாரத்திற்கும் அதன் தொன்மைக் கதைகளுக்கும் பெரும் மாற்றங்களின் துவக்க ஆண்டாகிய 1990 களில் ஒரு பெரும் முக்கியத்துவம் இருப்பதாகத் தோன்றுகிறது. இந்திய இமயமலைப் பிரதேசம், இந்தோனேசிய இடுகாடுகள், வட அமெரிக்காவின் பழங்குடிப்பகுதிகள், ஆண்டிஸ் மலைத்தொடரில் இருந்து அமேசான் முகடு வரை, மத்தியஅமெரிக்காவில் உள்ள புராதன மாயன்கள் ஆகியோரின் கதைகள் மனிதகுலத்தின் வரலாற்றுத் தொகுப்புகள். நம் காலத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும் நிறைவேற்றுவதற்கான இலக்கு ஒன்று இருந்தது.

சொல்லப்பட்டக் கதைகளின் தலைப்பு மாறியிருக்கலாம். ஆனால் அவற்றின் மூலக் கருத்தில் ஒரு ஒற்றுமை காணப்படுகிறது. புதுயுகம், முப்பதாவது லட்சமாண்டு, அக்குவேரியம், ஐந்தாவது சூரிய யுகத்தின் துவக்கம், பழைய யுகத்தின் முடிவும் புதிய யுகத்தின் தொடக்கமும் என்று பல்வேறு பெயர்களில் கூறப்பட்டாலும் அவற்றின் சாரமாக இருப்பது பெருங்கழுகு மற்றும் கழுகின் கூற்று என்பதுதான். காலங்காலமாக மனிதஇனம் இரண்டு வெவ்வேறு திசைவழிகளில்தான் பயணித்து வருகிறது. ஒன்று ஆன்மாவின் குரலுக்குக் கட்டுப்பட்ட பெருங்கழுகுப் பாதையிலும், மற்றது மனசாட்சியைப் பற்றிக் கவலைப்படாத அறிவால் இயங்கும் கழுகின் பாதையிலும் பயணித்து வருகிறது. 1490 களில் இரண்டு பாதைகளும் ஒன்றையொன்று எதிர்கொள்ளும். கழுகு பெருங்கழுகை அதாவது அறிவு ஆன்மாவை வெற்றி கொள்ளும்.

மீண்டும் 500 ஆண்டுகள் கழித்து பெருங்கழுகு, கழுகிற்கு இடையே சந்திப்பு நிகழும். அவ்வாறு சந்திக்கும்போது மோதலைக் கைவிட்டு ஒன்றுடன் ஒன்று கலக்குமானால் மனிதஇனம் இதற்கு முன் கண்டிராத அற்புதமான சந்ததியை உருவாக்கும் என்பதுதான் இக்கதைகளின் மையப்பொருள்.

இக்கூற்றை பல்வேறு தளங்களுக்கும் பொருத்திப் பார்க்கலாம். பழங்குடிகளின் ஆழமான அறிவையும் நவீன தொழில் நுட்பத்தையும் ஒன்று கலப்பதென்று எடுத்துக் கொள்ளலாம். வடக்கு யின்னிற்கும் தெற்கு யாங்கிற்கும்* இடையில் இணைப்பை ஏற்படுத்தி சமன் செய்வதென்று பொருள் கொள்ளலாம். உலகை ஒரு பன்மய ஆற்றல் என்று புரிந்துகொண்டால் மனிதஇனம் முன்னிலும் தேர்ந்த விழிப்புணர்வு பெற்ற இனமாக தன்னை உருவாக்கிக் கொள்ள முடியும்.

புதுயுகத்தில் மனிதன் எத்தகைய பண்புடையவனாக இருப்பான் என்ற கேள்விக்கு பெருங்கழுகுத் தத்துவம் விடையிறுக்கிறது. நமது ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை உண்டு என்பதைக் காணச் சித்தமாக இருக்கவேண்டும். ஈராக்கிலும், ஈக்குவடாரிலும் கழுகு (சிஐஏ மொர்) அதாவது அறிவு ஏற்படுத்தியுள்ள பேரழிவுகளை நாம் கண் திறந்து பார்க்க வேண்டும். ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து நம்மை நாமே தட்டி எழுப்பி விழிப்பு பெறவேண்டும். இன்று உலகில் மிகுந்த செல்வ வளம் படைத்த நமது அமெரிக்காவின் பூர்வகுடி மக்களாகிய நாம் வெற்று நாடகங்களிலும், கால்பந்தாட்டத்திலும், டாலர் செண்ட் கணக்குகள் பார்ப்பதிலும் செலுத்தும் கவனத்தை திசைதிருப்பி நாம் யார்? என்ற கேள்வியை எழுப்பிப்பார்க்க வேண்டும். நமது சந்ததியினரின் வாழ்க்கை குறித்து சிந்திக்கவேண்டும். கேள்விகள் எழுப்ப அஞ்சுவது மிகப் பயங்கரமான விளைவுகளை உருவாக்கும்.

---

* (Yin:Yang) ஒன்றையொன்று சார்ந்து அதேசமயம் முரண்பட்டு இயங்கும் சீன நாட்டுத் தத்துவத்தின் குறியீடு.

அத்தியாயம் - 35

அதிகாரவர்க்கத்தின் பொய் முகம்

பத்தாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அமெரிக்கா ஈராக் மீது இரண்டாவது முறையாக 2003-ல் தாக்குதல் தொடுத்தது. பொருளாதார அடியாட்களின் பாச்சா பலிக்கவில்லை. ஓநாய்களின் வேட்டை விரயமாக முடிந்தது. எனவே ஆயிரக்கணக்கான அமெரிக்க ஆண்களையும் பெண்களையும் பாலைஞ் சுடுமணலில் கொலைபாதகம் புரிய ஏவிவிட்டனர். இந்த ஆக்கிரமிப்பு குறித்து சௌதி அரச குடும்பம் என்ன கருதுகிறது? என்ற முக்கியமானதொரு கேள்வி எழுப்பப்பட்டது. சௌதியை விட ஈராக்கின் எண்ணெய் வளம் அளப்பரியது. அப்படி இருக்க சௌதியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கு என்ன மரியாதை வேண்டிக் கிடக்கிறது?

பனாமாவில் நோரிகாவைப் போலவே சதாமின் இறுதிக் கட்டத்திற்கும் அதன் வடிவத்தை மாற்றும். பனாமாவில் நமது பொம்மையை உட்காரவைத்துவிட்ட பிறகு டோரிஜோஸும், கார்ட்டரும் பேச்சுவார்த்தையில் கண்ட ஒப்பந்தத்தை செல்லாக்காசாக்கி கால்வாயை நமது கைகளுக்குள் கொண்டுவந்து விட்டோம். ஈராக்கைபொறுத்தமட்டில் முதலில் நாட்டை நம் கட்டுபாட்டிற்குள் கொண்டுவந்ததும் ஒபெக்கை உடைக்க முடியாதா என்ன? சௌதி மன்னர் நமது உலக எண்ணெய் அரசியலுக்குக் குறுக்கே நிற்பாரா என்ன? ஆப்கானில் உள்ள அல்-கொய்தாவிற்கு எதிராக நமது சக்தியைச் செலவிடுவதற்குப் பதிலாக புஷ் நிர்வாகம் ஏன் ஈராக் மீது பாயவேண்டும் என்று சில மேதாவிகள் கேள்வி எழுப்புகிறார்கள். புஷ் என்ற எண்ணெய் வியாபாரியின் கண்ணோட்டத்தில் பார்த்தால் தீவிரவாதத்தை அழிக்கும் முயற்சி இரண்டாவதாகவும்,. எண்ணெய் சுரண்டல் தானே முதலிடம் பெறுவதாகவும் இருக்கும்.

ஒபெக் தன்னை மறு உறுதிசெய்துகொள்வதற்கான சாத்தியமும் இதில் இருக்கிறதுதான். ஈராக்கை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருகிற பட்சத்தில் மற்ற எண்ணெய்

வள நாடுகள் தங்களது எண்ணெய் விலையை உயர்த்தவோ அல்லது வழங்குதலைக் குறைத்துக்கொள்ளவோ முடியாத நிலை ஏற்படும். பன்னாட்டு நிதி அரசியலுக்கு வெளியில் மிகச் சிலரின் கட்டுப்பாட்டில் உள்ள எண்ணெய் அதிகாரத்திற்கு எதிராகத் தன்னை நிலையைத் தக்கவைக்க நிறுவனவியம் பெரும் சிரத்தை எடுக்க வேண்டி வரலாம். ஈராக்கை ஆக்கிரமிக்கும் ஒற்றைக் காரணியே உலகின் முதல் ஏகாதிபத்தியம் தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளிவிடலாம்.

ஒட்டுமொத்தமாகத் தொகுத்துப் பார்க்கும்போது உலகின் செலாவணி ஊடகமான டாலரை அச்சடிக்கும் உரிமையைத் தன் வசம் கொண்டிருப்பதால்தான் அமெரிக்கா ஏகாதிபத்தியமாக நீடித்துக்கொண்டிருக்கிறது. அந்த வகையில் ஈக்குவடார் போன்ற நாடுகளுக்கு நாம் கடன் கொடுக்கக் காரணம் அவற்றை திரும்ப வசூலித்துவிடலாம் என்ற நம்பிக்கையில் அல்ல. அவர்களைக் கடனகாரர்களாக வைத்திருப்பதே நமக்கு லாபகரமானது என்பதுதான். கடன் பெற்ற நாடுகளின் சதை எப்போதும் அறுக்கப்படலாம் என்ற பயத்திலேயே வைத்திருப்பதுதான் நமது நோக்கம். கடன் கொடுப்பதன் மூலம் நமது நிதிவளம் சீரழிந்து விடாதா? நாம் டாலர் அச்சிடுவது தங்கத்தின் கையிருப்பை பொறுத்தது அல்ல. உலகில் டாலருக்கு உள்ள செலாவணிச் சந்தையைப் பொறுத்து என்பதால் அந்த மதிப்பு உள்ளவரை நம்முடைய நிதிநிலை சரிவதற்கான வாய்ப்பு இல்லை.

டாலரை அச்சிடுவதற்கு பெற்றுள்ள உரிமை நமக்கு அளவற்ற வலிமையை அளிக்கிறது. கொடுத்த கடனைத் திரும்பப் பெறாமலே மீண்டும் மீண்டும் கடன் கொடுக்கமுடியும் என்பது போக நமக்கு நாமே பெருங்கடனை வழங்கிக்கொள்ளலாம். 2003 இன் துவக்கத்தில் அமெரிக்காவின் தேசியக் கடன் 6 ட்ரில்லியன் டாலராக இருந்தது. அந்த ஆண்டின் இறுதியில் அது 7 ட்ரில்லியன் டாலராகக் கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதாவது தோராயமாக ஒவ்வொரு அமெரிக்கக் குடிமகனின் தலையிலும் 24000 டாலர் கடன் சுமத்தப்பட்டுள்ளது. இக்கடனில் பெரும்பகுதி நாம் நுகர்வுப்பொருட்கள் வாங்கிய வகையில் ஜப்பானுக்கும் சீனாவிற்கும் செலுத்தவேண்டியதாக குவிந்து கிடக்கிறது.

உலகின் செலாவணியாக டாலர் நீடிக்கும் வரை நிறுவனவியம் தன்னை விரிவுப்படுத்திக்கொண்டே போவதற்கு எந்தத் தடையும் இல்லை. ஒருவேளை நமக்குக் கடன் கொடுத்த

ஜப்பானோ சீனாவோ தங்கள் நாணயத்தின் மதிப்பை டாலருக்கும் மேலாக உயர்த்திக்கொள்வார்களானால் அப்போது நிலைமைத் தலைகீழாகி விடும். அப்போது அமெரிக்கா கிடுக்கிப் பிடியில் மாட்டிக்கொண்டது போலாகி விடும்.

டாலருக்கு மாற்றாக இன்னொரு நாணயம் உருவாகாது என்று சொல்வதற்கு இல்லை. சர்வதேச நிதி அரங்கில் அடியெடுத்து வைத்த 2002 ஜனவரி 1 முதல் யூரோவின் மதிப்பு நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. ஒபெக்கிற்கு புதிய வாய்ப்பை அளிக்கிறது யூரோ. நமது ஈராக் ஆக்கிரமிப்பிற்கு எதிராக நிற்குமானால், நமக்கு எதிராக ராணுவ பலத்தைக் காட்டுவது என்று இறங்கினால் ஒபெக் டாலருக்குப் பதிலாக யூரோவை ஏற்றுக்கொள்ளுமானால் அப்போது உலகஏகாதிபத்தியத்தின் அஸ்திவாரமே ஆட்டங்கண்டு விடும். நமக்குக் கடனளித்த நாடுகள் யூரோவில்தான் தரவேண்டுமென்று கோரினால் அதன் விளைவு படுமோசமானதாக இருக்கும்.

அன்று 2003 ஏப் 18 புனிதவெள்ளி. எனது வீட்டில் இருந்து சற்றுத் தொலைவில் உள்ள என் அலுவலகத்திற்குச் சென்றேன். ஒரு பழைய கார்நிறுத்தும் இடத்தைத்தான் அலுவலகமாக மாற்றி வைத்திருந்தோம். கம்யூட்டர் முன் அமர்ந்து நியூயார்க் டைம்ஸ் வலைத்தளத்தில் நுழைவதற்கு முன்னர் பலவாறாக யோசித்துக் கொண்டிருந்தேன். திரை பளிச்சிட்டு ஈராக்கைப் புனரமைக்கும் ஒப்பந்தத்தை அமெரிக்கா பெக்டெல்லுக்கு வழங்கியுள்ளது என்ற தலைப்புச் செய்தி தோன்றியதும் பழைய நினைவுகள் மங்கி நான் பொருளாதார அடியாளாக வேலை செய்த நாட்கள் மனத்திரையில் ஓடின.

மிகப்பெரிய திட்டத்தை புஷ் நிர்வாகம் பெக்டெல்லுக்கு வழங்கியுள்ளது என்பதுதான் செய்திக் கட்டுரையின் சாரம். அக்கட்டுரையின் இறுதியில் தம் நாட்டைப் புனரமைக்கும் மகத்தான காரியத்தில் அமெரிக்காவின் செல்வாக்குமிக்க பன்னாட்டு நிறுவனத்துடனும், உலகவங்கியுடனும் ஈராக்கியர்கள் இணைந்து செயல்படுவார்கள் என்று கூறப்பட்டிருந்தது.

செல்வாக்கு என்று கூறுவதுகூட பெக்டெல்லைக் குறைத்து மதிப்பிடுவதாகிவிடும். இதே டைம்ஸில் பெக்டெல்லுக்கு வாஷிங்டன்னிலும், ஈராக்கிலும் பெருந்தொடர்புகள் உள்ளன என்ற தலைப்பில் முன்பு ஒரு கட்டுரை வெளியாகி இருந்தது. அதன் தொடர்ச்சியாகத்தான் இக்கட்டுரையும் இருந்தது. இறுதிப் பகுதியை வாசித்தேன்.

தேசிய அமைதிப் படையுடன் பெக்டெல் நெருக்கமான உறவு கொண்டுள்ளது. ரீகனின் உள்துறை செயலாளராக இருந்த ஜார்ஜ் பி.ஷல்ஸ் தான் இதன் தலைமை நிர்வாகியாக இருந்தார். அவருடன் பணியாற்றும் கஸ்பர் வெய்ன் பர்கரும் முன்னர் உள்துறைச் செயலாளராக இருந்தவர்தான். ஷல்ஸ் இப்போது பெக்டெல்லின் ஆலோசகராக இருக்கிறார். தற்போது தலைமை நிர்வாகியாக இருக்கும் ரிலே பி.பெக்டெல் தனது ஏற்றுமதிக் கவுன்சிலுக்குப் பணியாற்றுமாறு புஷ்ஷால் கேட்கப்பட்டுள்ளார்.

இதுதான் நமது இன்றைய வரலாறு. உலகப் பேரரசின் கதைச் சுருக்கம். முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் என்னை ஒரு பொருளாதார அடியாளாக கிளேடின் தயாரித்ததன் விளைவு இன்று பத்திரிகைச் செய்தியாகி இருக்கிறது. ஒவ்வொரு மனிதனையும் தன் பிடிக்குள் கொண்டுவரும் நிறுவனவியத்தின் முயற்சி வெற்றி பெற்றதற்கான அடையாளம் இது.

நமது ராணுவம் ஈராக்கில் ஒரு பேரழிவை ஏற்படுத்திவிட்டு பின்னர் நாமே புனரமைப்பதற்கான ஒப்பந்தங்கள் குறித்துதான் இக்கட்டுரை பேசுகிறது. இதை வாசிக்கும்போது எனக்கு சௌதி அரேபியாவின் கருப்புப் பண விவகாரம் (சாமா) நினைவிற்கு வருகிறது. அதில் பாலைவனத்தின் மன்னர் பாரம்பரியத்துடன் அமெரிக்கப் பொறியியல் கட்டுமான நிறுவனமும், பெட்ரோலியத் துறையும் கைகோர்த்துச் செயல்பட்டன. நிலவியல் அரசியலில் புதிய கூட்டணி உருவாக்கத்திற்கும் சாமா வழி வகுத்தது. அப்பிராந்தியத்தில் சௌதி மன்னர் குடும்பத்தின் அதிகாரத்தை உறுதிப்படுத்தி அக்குடும்பத்தை நமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது.

சௌதிகளைப்போல சதாமும் நமக்கு இணக்கமாக இருந்ததிருந்தால் ஆட்சியில் தொடர்ந்திருக்க முடியும் என்ற உண்மையை எத்தனை பேர் அறிந்திருப்பார்கள். அவரது ஏவுகணைகளும், இரசாயன ஆலைகளும் பாதுகாப்பாக இருந்திருக்கும். மேலும் தேவையான சிலவற்றை நாமே கூட அவருக்காக உருவாக்கியிருக்கலாம். அப்போதும் அவற்றை நம்மவர்கள்தான் பராமரித்திருப்பார்கள். அது சௌதியைக் காட்டிலும் இணக்கமான அணுகுமுறையாக இருந்திருக்கும்.

ஆனால் இன்றுவரை இந்த உண்மையை பல பத்திரிகைகள் வெளியுலகிற்குக் கொண்டுவரக்கூடாது என்பதில் கவனமாக இருக்கின்றன. இப்போது பட்டவர்த்தனமாகிவிட்டது. முழுமையானது என்று சொல்லமுடியாவிட்டாலும் வெளிச்சத்திற்கு கொண்டு

வந்துள்ளது. ஒருவேளை நியூயார்க் டைம்ஸ் இச்செய்தியை உள்நோக்கத்துடன் வெளியிட்டிருக்குமோ என்ற சந்தேகத்தில் சிஎன்என் வலைத்தளத்திற்குச் சென்று பார்த்தேன். அதிலும் ஈராக் ஒப்பந்தத்தை பெக்டெல் கைப்பற்றியது என்று தலைப்பிட்டு மற்றொரு புதிய கோணத்தில் இவ்விசயத்தை அலசியிருந்தது சிஎன்என்.

இவ்வொப்பந்தத்தைப் பெற போட்டிக்கு நின்ற நிறுவனங்களுள் ஒன்று ஹாலிபர்டினுடைய கெலாக் பிரவுன் அண்ட் ரூட் கிளை. இதன் தலைமை நிர்வாகியாக இன்றைய துணை ஜனாதிபதியான டிக்ஜென்னி பணியாற்றியுள்ளார். ஹாலிபர்டன் பெற்றுள்ள ஒப்பந்த மதிப்பு சுமார் ஏழு பில்லியன் டாலர்கள். எண்ணெய் நிறுவனங்களுக்குரிய அவசரப் பராமரிப்பு சேவையை இரண்டு வருடங்களுக்கு மேற்கொள்ள ஒப்பந்தம் வகை செய்கிறது.

உலகஏகாதிபத்தியமாவதற்கான ரகசியம் வெளிப்படத் துவங்கிவிட்டன. அமெரிக்கா அளிக்கும் கடன், செய்கிற ஏமாற்று, மக்களை நிரந்தர அடிமைகளாக்குதல், அவர்களை எப்போதும் தம் பிடிக்குள் வைத்திருப்பதற்கான முயற்சி போன்ற ஏகாதிபத்தியத் தந்திரங்களைப் பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை. தனது வெட்கங்கெட்ட வரலாற்றின் தொடர்ச்சிதான் ஈராக் தாக்குதல் என்று கோடிட்டு காட்டப்படவில்லை. ஏகாதிபத்தியத்தின் புதிய பரிமாணமும், நுட்பமும் அதில் வெளிப்படவில்லை என்றாலும் உண்மை கசியவிடப்பட்டுள்ளது.

மெதுமெதுவாக வெளியாகும் இவ்வுண்மைகள் நான் நீண்ட காலமாக தள்ளிப்போட்டுக் கொண்டிருக்கும் எனது செயல்பட்டைத் துவக்குவதற்கு உந்துவிசையாகத் திகழ்ந்தது. இந்தோனேசியாவிற்கு முதல்பயணம் மேற்கொள்ளும் முன்பே எனக்குள் குற்றவுணர்வு வேர்விட்டு இன்று வரை பேயாக ஆட்டுவிக்கிறது.

எனக்குள் தோன்றும் இக்குற்றவுணர்வும், கேள்விகளும், மனவலியும் இல்லாமல் போயிருந்தால் நானும் மற்றவர்களைப் போல காலத்தின் ஒட்டத்தில் கரைந்து போயிருப்பேன்.

பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகளின் தலைப்புகளைப் பார்த்தால் ஏதோ அவை பன்னாட்டுப் பெருநிறுவனங்களும், வங்கிகளும், அரசாங்கமும் ஒன்றிணைந்து கூட்டுக்கொள்ளை அடிக்கிற உண்மையை வெளிப்படுத்தப்போகிறதோ என்று தோன்றும். ஆனால் அவை மெய்ன் பத்திரிகையில் வெளியான எனது சுருக்கச்சான்றிதழ் அளவிற்குக்கூட உண்மையைக் கூறுவதாக இல்லை. ஈராக் அமெரிக்காவைப்போல மாறவேண்டும் என்ற

விருப்பம் எந்த ஈராக்கியருக்கும் இல்லை என்ற விசயம் ஒருபுறம் இருக்க நமது விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக உள் கட்டமைப்பை உருவாக்குகிறோம் என்ற பெயரில் நம் நிறுவனங்கள் பெருந்தொகையை பெறுகின்றன என்பதையும் அக்கட்டுரைகள் வெளிப்படுத்தவில்லை.

இந்த அமைப்பு செய்து வரும் தவறுகளைக் களைய வேண்டுமென்றால் நபர்களை மாற்றினால் போதுமானது என்பது தான் அக்கட்டுரைகளின் சாரம். இப்படிப்பட்ட உள்நோக்கம் கொண்ட கட்டுரைகள்தான் வஞ்சகத் தந்திரங்களை நியாயமான கோட்பாடுகளாக்குகின்றன. இவைகளால்தான் வரலாறு பற்றிய நமது கண்ணோட்டம் தரம் தாழ்ந்து போனது. தொலைக்காட்சிகள் நமது சிந்தனைகளை மழுங்கடிக்கின்றன. தேசம் எனும் ஒரு கப்பல் தத்தளிக்கும்போது அதில் பயணிக்கும் ஒவ்வொருவரும் தனிப்பொறுப்பு ஏற்க வேண்டும் என்பதை மறந்து எல்லாம் தன் போக்கில் சரியாகும் என்ற மதர்ப்பான சிந்தனை மக்கள் தலையில் ஏற்றப்பட்டுள்ளது. எந்தத் தவறுகளையும் வரும் தேர்தலுக்குப் பின் சரிசெய்து விடலாம் என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம்.

ஆனால் ஏகாதிபத்தியத்தின் உண்மை முகம் எவரும் கற்பனை செய்யமுடியாத அளவிற்குப் பயங்கரமானது. உலகமக்களை அழித்து தன்னைத் தானே அழித்துவிடும் பேராசை கொண்டது. பல்லாயிரக்கணக்கான நெடிய போராட்டத்தின் விளைவால் மனித குலம் இறுதியாக கண்டடைந்துள்ள அமைப்புமுறை இதுதான். இதைவிட சிறப்பான ஒன்று இல்லை என்று நம்பவே நாம் விரும்புகிறோம். கடினமான உண்மையைவிட இலகுவான பொய்மையே நமக்கு உவப்பாக உள்ளது. பொருளாதாரம் வளர வளர மக்களின் நலன் அதிகரிக்கும் ஒரு கட்டத்தில் துவக்ககட்ட குறைபாடுகள் களையப்பட்டு அனைத்தும் சுபிட்சமாகிவிடும் என்று ஒருவருக்கொருவர் பொய்யான நம்பிக்கையை உருவாக்கிக் கொள்கிறோம். கடைக்கோடி மனிதனையும் சுரண்டலுக்குள்ளாக்கும் இந்த பொருளாதார வளர்ச்சி என்ற நெருப்பை ஊதி வளர்ப்பவர்களின் கருத்தை மறுபரிசீலனை செய்தாக வேண்டும்.

ஈராக்கிலும், பனாமாவிலும், கொலம்பியாவிலும் மக்களைக் கொன்று குவிப்பதும் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்குவதும் அவர்களது பொருளாதார வளர்ச்சியின் பொருட்டே என்ற கோட்பாட்டை உருவாக்கி தாங்கள் செய்யும் அனைத்து அறக்கேடுகளையும் நியாயப்படுத்துகின்றன ஓநாய்க் கும்பலும், குள்ளநரிக்கூட்டமும். இந்தக் கோட்பாட்டை உயர்த்திப் பிடிப்பதற்கு ஏற்ப புள்ளிவிபர தயாரிப்பு முறை உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு நகரத்தை குண்டு வீசி

அழித்துவிட வேண்டியது. பின்னர் அந்த அழிமானத்தின் மீது கட்டுமானங்களை எழுப்பி சில புள்ளிவிபரங்களை நிறுவினால் போதும் அந்நகரம் பொருளாதாரத்தில் உச்சநிலையை அடைந்ததாக நியாயப்படுத்தப்படும்.

பொய்மை நிறைந்த நம் வாழ்க்கையின் பொய்மை எனும் புற்றுக் கட்டிகளை பகட்டான வெளிப்பூச்சுக்கள் மறைத்து விடுகின்றன. உண்மை எனும் எக்ஸ்கதிர் கொண்டு ஊடுருவிப் பார்க்கும்போது நிதர்சனங்கள் பேரதிர்ச்சி தருவதாக இருப்பதை உணரமுடியும். உலக வரலாற்றில் இதுவரை எந்த சாம்ராஜ்ஜியமும் பெற்றிராத அளவு பலமும் செல்வவளமும் பெற்றுள்ள நமது பேரரசில்தான் கொலைகளும், தற்கொலைகளும், குழந்தை வன்புணர்வும் பேரளவில் நடைபெற்று வருகின்றன. நாளுக்கு நாள் பெருகி வரும் இவ்வேதனையை பிறரிடம் பேசப் பயந்து வாய்க்குள்ளேயே அமுக்கிக்கொள்கிறோம்.

இத்தீமைகள் அனைத்திற்கும் காரணம் யாரோ ஒருவரின் சதிச்செயல் என்று பழிசுமத்த முடிந்தால் அது சௌகர்யமானது தான். ஆனால் இவற்றின் உற்பத்தி ஸ்தானமே நிறுவனவியம்தான். நமது பேரரசே நிறுவனத்தையும், சர்வதேசிய வங்கிகளையும் சார்ந்து இருப்பவை என்பதால் அன்னமிடும் இடத்தில் கன்னம் வைக்க முடியாது நம்மால்.

மானிட்டரில் தோன்றும் தலைப்புச் செய்திகள் எனக்குள் மேலும் பல கேள்விகளைக் கிளர்த்தின. இந்த அமைப்பானது நமக்கு ஒரு வீட்டையும், காரையும் வழங்கிவிட்ட பின்னர் அதை எதிர்ப்பதற்கு என்ன இருக்கிறது. ஆனால் இதே அமைப்புதான் அன்றாடம் 23,000 மக்களைப் பட்டினியால் சாகடிக்கிறது. அவர்களுக்கு இந்த அமைப்பின் மீது எப்படி வெறுப்புத் தோன்றாமல் இருக்கமுடியும்?..... இந்த உண்மையை நீங்கள் அறிந்துள்ளபோதிலும் இந்த அமைப்பு வழங்கும் வசதிகளை அனுபவித்துக்கொண்டு எப்படி அதற்கு எதிராக குரல் கொடுக்க முடியும். இது தன்னைத் தானே அழித்துக்கொள்ளக்கூடியது என்ற யூகம் எழுந்தாலும் அதற்கு எதிராகக் குரல் கொடுக்கும் துணிச்சலை எங்கிருந்து பெறுவீர்கள். ஒரு கப் காபி அருந்தினால் தேவலாம் போல் இருந்தது. அலுவலகத்தில் இருந்து வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தேன்.

வீட்டுவாசலில் பாம் பீச் போஸ்ட் பத்திரிகை கிடந்தது. அதிலும் பெக்டல் பற்றிய கட்டுரை வெளியாகி இருந்தது. அதில் உள்ள தேதியைக் கவனித்தேன். ஏப்ரல் 18. இங்கிலாந்தினருக்கு

மறக்கமுடியாத நாள் அது. புரட்சியின் பால் ஈடுபாடு கொண்ட என் பெற்றோர்களால் அந்த நாள் என் மனதில் அழுத்தமான இடத்தைப் பெற்றுள்ளது. அந்த நாளைப் பற்றிய கவிதையும் என் மனதில் அழுத்தமாகப் படிந்துவிட்ட ஒன்று.

குழந்தைகளே
உற்றுக் கேளுங்கள்....
பால் ரிவேரியின்
நள்ளிரவுக் குதிரை ஓட்டம்
உங்கள் காதுகளில் ஒலிக்கிறதா?
எழுபத்தி ஐந்தாம் வருடம்.
பிரசித்திபெற்ற
ஏப்ரல் பதினெட்டாம் நாளை
நினைவிற்கொண்டிருப்போர் அரிதிலும் அரிது.

இந்த ஆண்டு புனிதவெள்ளி பால் ரிவேரியின் குதிரைப் பயண நாளில் வருகிறது. பத்திரிகையின் தேதியைப் பார்த்ததும், கொல்லன் ரிவேரி தன் தொப்பியை வீசியபடி காலனிய அமெரிக்காவின் நியூ இங்கிலாந்து நகர இருண்ட தெருக்களில் செல்வது என் மனத்திரையில் ஓடியது. இங்கிலாந்துப் பேரரசு அமெரிக்க மக்கள் மீது படையெடுத்து வரும் செய்தியை தன் உயிரைப் பணையம் வைத்து அறிவித்தார் ரிவேரி. தேசப்பற்று மிக்க அமெரிக்கர்கள் தேசத்தைத் தற்காத்து இங்கிலாந்தைத் திருப்பியடித்தனர்.

அவர்களுக்கு அந்த ஆற்றலை அளித்த சக்தி எது? சுதந்திரப் போரில் இறங்கத் துணிந்ததற்கான காரணம் என்ன? அந்தப் போருக்குத் தலைமை ஏற்ற பலர் பெரும் பணக்காரர்கள். தங்கள் தொழிலையும் பணையம் வைத்து அவர்களைப் போராட்டத்தில் இறங்கத்தூண்டிய உந்துசக்தி எது? அதில் பங்கேற்ற பலருக்கும் தனிப்பட்ட நோக்கங்கள் இருந்திருக்கலாம். ஆனால் அச்சிற்சிறு நெருப்புகளை ஒன்றுதிரட்டி வரலாற்றின் ஊழிப்பெரு நெருப்பாக மாற்றிய சக்தி எது?

இந்தக் கேள்விகள் என்னுள் எழுந்தபோது தோன்றிய வார்த்தைகள் இவைதான்

''தன்னலம் கொண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பிறரையும் அழித்து தன்னையும் அழித்துக்கொள்ளக்கூடியது என்ற உண்மையை மக்கள் உணரும் விதத்தில் எடுத்துச்சொல்லப்பட்டதால் பெரு நெருப்புப் பற்றிப் படர்ந்தது. இறுகிக் கிடந்த காலனிய மக்களின் இதயங்களிலும், சிந்தனைகளிலும் டாம்பெய்ன், தாமஸ் ஜெபர்சன்

ஆகியோர் தம் ஆற்றல்மிக்க உரையால் பெரும் இளர்ச்சி ஏற்படுத்தியிருந்தனர். குடியேற்ற மக்கள் காலனி ஆதிக்க சாம்ராஜ்ஜியத்திற்கு எதிராகக் கேள்வி எழுப்பினார்கள். உண்மைகள் வெளிப்பட்டன. பொய்மைகள் முடிவுக்கு வந்தன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் எத்தகைய மோசடிகளைச் செய்து தங்களை அடிமைப்படுத்தியுள்ளது என்பதை உணர்ந்து கொண்டார்கள்."

அமெரிக்காவின் இயற்கை வளங்களை இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்வதே உன்னதமான பொருளாதார அமைப்பு என்றும், அதுதான் தங்கள் நல்வாழ்விற்கு வழிவகுக்கும் என்று ஏமாற்றுவதைப் புரிந்துகொண்டார்கள். உலகிற்கு மனித நாகரீகத்தைக் கற்றுக்கொடுப்பது அதுதான் உலகில் சக்தி வாய்ந்தது என்ற பிரிட்டிஷ் பேரரசின் தம்பட்டம் வடிகட்டிய மோசடி என்ற உண்மை தெரிய வந்தது. அவர்களது பொருளாதார அமைப்பானது பலரைச் சுரண்டி சிலரைக் கொழுக்க வைக்கிறது என்பதை உணர்ந்தார்கள். இந்த உண்மை மக்களால் உணரப்படும் வரைதான் பிரிட்டிஷ் பேரரசு ஏற்றுக்கொள்ளப்பட்டும், சகித்துக் கொள்ளப்பட்டும் வந்தது.

காபிக் கோப்பையை நிரப்பிக்கொண்டு மீண்டும் கணினித் திரைமுன் அமரும் வரை சொற்களின் வலிமை குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தேன். சிஎன்என் வலைத்தளத்தை மூடிவிட்டு நேற்று இரவு எழுதின பக்கங்களை எடுத்துப் படித்துப் பார்த்தேன்.

இந்தக் கதை சொல்லப்படவேண்டியது. நாம் பயங்கரமான நெருக்கடிகளை எதிர்கொண்டாக வேண்டும் என்றாலும், வெல்வதற்கான வாய்ப்புகளும் இருக்கத்தான் செய்கின்றன. பொருளாதார அடியாளின் இந்தக் கதை நாம் சந்தித்து வரும் நெருக்கடிகள் பற்றியும் அவற்றிற்கான காரணங்களையும் எடுத்துரைக்கிறது. கடந்தகாலத் தவறுகளைப் புரிந்துகொள்வதன் மூலமே எதிர்காலத்தை சிறப்பானதாக மாற்றிக்கொள்ள முடியும். அதற்காக இந்தக் கதை சொல்லப்பட்டாக வேண்டும். வரலாறு நெடுக நீடித்த நெருக்கடிகளைத் தீர்க்கும் வலிமையும், செல்வாக்கும் பெற்றுள்ள ஒரு நாடு என் நாடு. என்னைப் பொருளாதார அடியாளாக அமர்த்திக்கொண்ட நாடு. அதுதான் நான் பிறந்த அமெரிக்கா.

இந்த முறை இந்த எழுத்து வேலையில் இருந்து பின்வாங்கப் போவதில்லை. என் வாழ்வில் நிகழ்ந்த எதேச்சையான நிகழ்வுகள் மூலமாகவும், விரும்பி ஏற்றுக்கொண்ட செயல்கள் மூலமாகவும் இன்று இந்த நிலையை அடைந்துள்ளேன். இனி தொடர்ந்து முன்னோக்கியே செல்வேன்.

நியூ இங்கிலாந்து நகரத் தெருக்களில் கூவிச்சென்ற ரிவேரியை நினைத்துக்கொண்டேன். டாம்பெய்னின் வார்த்தைகள் மக்களின் செவிகளைச் சென்றடைந்த செய்தி முன்னரே அந்த வெள்ளிக் கொல்லனுக்குத் தெரிந்திருக்கும்தான். டாம்யெனின் வார்த்தைகளை மக்கள் தம் வீடுகளில் பேசிக்கொண்டார்கள், விவாதித்தார்கள், விடுதிகளில் உரையாடப்பட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கோர முகத்தை டாம்பெய்ன் அமெரிக்க மக்களுக்கு வெளிச்சமிட்டுக் காட்டியிருந்தார். தன் நாடு விடுதலை, நலவாழ்வு என்ற கோட்பாட்டிற்கு தேசம் தன்னை அர்ப்பணித்திருப்பதாகவும் அதுவே மகிழ்ச்சியை உறுதிப்படுத்தும் என்று ஜெபர்சன் அறிவித்திருந்தார். இவற்றால் ஊக்கம் பெற்ற மக்கள் பிரிட்டிஷுக்கு எதிராக தெருவில் இறங்குவார்கள் என்ற நம்பிக்கையுடன் ரிவேரே குதிரைப் பயணம் மேற்கொண்டார்.

வார்த்தைகள்.

இனியும் காலங்கடத்துவதை விட்டு விட்டு துவக்கிய எழுத்து வேலையை முடிக்கவும், இந்நூலை வார்த்தைகளால் இட்டு நிரப்பவும் தீர்மானகரமாக முடிவு எடுத்தேன்.

முடிவில் இருந்து ஒரு தொடக்கம்

இந்த நூலின் முடிவிற்கும் துவக்கத்திற்கும் வந்து விட்டோம். அடுத்து என்ன செய்வது என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். நிறுவனவியத்தின் பைத்தியக்காரத்தனத்தையும், தற்கொலைப் பிடிவாதத்தையும் அழிவை நோக்கிய அதன் வேகத்தையும் எப்படித் தடுத்து நிறுத்துவது என்ற கேள்வி எழலாம். இந்நூலை முடித்துவிட்டு இந்த உலகை எதிர்கொள்ளத் தயாராவீர்கள்.

இந்த எண்ணம் ஏற்படுமானால் நான் சில யோசனைகளைச் சொல்வேன்.

ஈராக்கில் பெக்டெல் ஹாலிபர்டன் என்ன செய்தன என்பது பற்றி கடந்த அத்தியாயங்களில் நான் சுட்டிக்காட்டிய அனைத்தும் இன்று பழஞ்செய்திகள். இதை வாசிக்கும் இந்நேரம் அவை பொருத்தமற்றவைகளாகத் தோன்றலாம். ஆனால் அதன் முக்கியத்துவம் காலத்திற்கு அப்பாற்பட்டவை. இந்நூலைப் படிப்பவர்கள் செய்திப் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் முன்வைக்கும் கண்ணோட்டத்தில் இருந்து மாறுபட்ட ஒரு கண்ணோட்டத்தை உங்களுக்கு அளிக்கும் என்று உறுதிபட நம்புகிறேன். சொல்லப்படும் செய்திகளின் அடியோட்டமாக சொல்லப்படாத உண்மைகள் உறைந்திருப்பதை உங்களால் உணர முடியும். அதுதான் இந்நூலின் சாராம்சம்.

என்பிசி செய்தி நிறுவனம் ஜெனரல் எலக்ட்ரிக்கிற்குச் சொந்தமானது. ஏபிசி செய்தி டிஸ்னி நிறுவனத்திற்குச் சொந்தமானது. சிபிஎஸ் வயாகாமுக்கு உரிமையானது. ஏஓஎல் டைம் வார்னர் எனும் பிரமாண்டத்தின் ஒரு பகுதிதான் சிஎன்என். இங்குள்ள அனைத்து மாத, வார, தினசரி பத்திரிகைகள், பதிப்பகங்கள் அனைத்தும் ஏதோ ஒரு பெரும் நிறுவனத்திற்குச் சொந்தமாகவே இருக்கின்றன. எனவே அவை தம் உரிமையாளருக்கு விசுவாசமாகவே நடந்துகொள்ளும். தம் நிறுவன நலன்களுக்கு ஏற்றவாறுதான் செய்திகளைத் திரித்து வெளியிடும். நிறுவனவியத்தின் ஒரு பகுதியாகத் தான் அவை இயங்கும்.

அனைத்துச் செய்திகளும் நிறுவனத்திற்குக் கட்டுப்பட்டவைதான். எனவே அவை முன்வைக்கும் செய்திகள் அனைத்தும் உள்நோக்கம் கொண்டவையாக இருக்கும். தங்கள் நிறுவனத்தை நிலைநிறுத்தவும் அதன் வலிமையை அதிகரிப்பதற்கும் ஏற்றவாறுதான் செய்திகள் வெளியிடப்படும். செய்தி நிறுவன அதிகாரிகள் செய்திகளுக்கு உண்மையானவர்கள் அல்ல. தமது நிறுவனத்தின் நலனுக்காகத் தம்மை அர்ப்பணித்துக்கொண்டவர்கள். தங்கள் தொழிலில் நிறமையானவர்களாக இருக்கலாம். ஆனால் உண்மைக்குப் புறம்பானவர்கள். எதிரிகளை நிர்மூலமாக்குவதில் ஈவு இரக்கமற்றமற்றவர்கள். எனவே செய்திகளுக்கு உள்ளே பொதிந்திருக்கும் உண்மைகளைத் தேடிக் கண்டடைவது நம்முடைய பொறுப்பாக இருக்கிறது. நீங்கள் கண்டடைந்த உண்மைகளை உங்கள் குடும்பத்தினரிடமும், நண்பர்களிடமும் பகிர்ந்துகொள்ளுங்கள், பரப்புங்கள்....

நீங்கள் பின்பற்றுவதற்கான பட்டியல் ஒன்றைத் தயாரித்தளிக்கிறேன். உடனடியாக நம் பெட்ரோல் நுகர்வை குறைத்துக்கொள்ள வேண்டும். 1990-இல் நாம் ஈராக் மீது தாக்குதல் தொடுத்தபோது நமது எண்ணெய் இறக்குமதி எண்பது லட்சம் பீப்பாய்களாக இருந்தது. அதுவே நாம் 2006-இல் ஈராக்கை ஆக்கிரமித்தபோது ஒருகோடியே இருபது லட்சம் பீப்பாய்களாக அதிகரித்துவிட்டது. காரணம் அந்த அளவிற்கு நமது நுகர்வு வெறி அதிகரித்துவிட்டது. அடுத்த முறை நீங்கள் ஷாப்பிங் செல்லும் முன் மனதை ஒருநிலைப்படுத்தி எதில் எல்லாம் உங்கள் தேவைகளைக் குறைத்துக்கொள்ள முடியும் என்று யோசித்துப் பாருங்கள். வீட்டின் பரப்பை, உடைகளை, தளவாடங்களை, அலுவலகத் தேவைகளை கூடிய மட்டிலும் குறைக்கப் பாருங்கள். தங்களுடைய அரைவயிற்றுக்காக நாளெல்லாம் உங்கள் பொருட்களைத் தயாரிப்பதற்காக உழைக்கிற மக்களை நினைத்துப் பாருங்கள். நமது நுகர்விற்காக எந்தஅளவிற்கு புவியை மாசுபடுத்துகின்றன என்பதைக் கணக்கிட்டு அதற்குக் காரணமான பன்னாட்டு நிறுவனங்களுக்கு எதிராகக் குரல் எழுப்புங்கள். தடையற்ற வர்த்தகத்திற்கு வகை செய்யும் ஒப்பந்தங்களை எதிர்த்திடுங்கள்.

தற்போதுள்ள அமைப்பு முறை தவறானது என்று கூறுவதற்கு இல்லை. இதன் மீது நாம் நம்பிக்கை கொள்வதற்கான சாத்தியங்கள் உண்டு. நிறுவனவியத்தைத் தாங்கிப் பிடிப்பதற்காக உருவாக்கப் பட்டதல்ல இவ்வமைப்பு. நிறுவனவியத்தின் போக்குகள் மட்டும் தவறானவை என்று கருதமுடியாது. அவற்றின் அடிப்படைக்

கோட்பாடுகளே மனிதஅறத்திற்கு எதிரானவைதான். நிறுவனவிய அதிகாரிகளே தவறான புரிதலின் அடிப்படையில்தான் இயங்குகின்றனர்.

இப்பன்னாட்டு நிறுவனங்களின் திறன் அனைத்தும் மக்களின் நலனுக்காகப் பயன்படுத்தப்படுமானால் அது எவ்வளவு சிறப்பாக இருக்கும்? நைக், மெக்டோனால்டு, கொக்கோகோலா நிறுவனங்கள் பசித்த ஏழைகளுக்கு உணவு அளிப்பது, உடுத்த உடையற்றோருக்கு உடையளிப்பது போன்ற செயல்களில் இறங்கினால் எத்தனையோ கோடி மக்கள் பயன்பெற முடியும். நிலவில் கால்பதிப்பதை விட, சோவியத் யூனியனைச் சிதைப்பதைவிட, பிரமாண்டமான நிறுவனங்களைக் கட்டியெழுப்புவதைவிட இந்த உலகில் வறுமையை ஒழிப்பது எளிதான செயல்தான். நமது குழந்தைகளைச் சுயமாகச் சிந்திக்கத்தூண்டும் வகையில் கல்வியில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். கேள்விகள் எழுப்பவும், சுதந்திரமாக செயல்படும் வகையிலும் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும். இதை வாசிக்கிற நீங்களே ஒரு முன்னுதாரணியாக இருக்கலாம். நீங்கள் கற்றுக் கொடுப்பவராகவும், அதேநேரத்தில் கற்றுக்கொள்பவராகவும் இருங்கள்.

நமது வாழ்வின் பிரிக்கமுடியாத அம்சமாகிவிட்ட நிறுவனவியத்திற்குப் பாதகமான அம்சங்களைப் பின்பற்றுங்கள். எங்கெல்லாம் சாத்தியமோ அங்கெல்லாம் நிறுவனவியத்திற்கு எதிராகப் பேசுங்கள். கடிதம் எழுதுங்கள், மின்னஞ்சல் தொலைபேசி செய்யுங்கள். பள்ளிவாரியங்கள், ஆணையங்கள் ஆகியவற்றிற்குத் தேர்தல் நடைபெறும்போது அறிவும், தெளிவும் பெற்றவர்களுக்கு வாக்களியுங்கள். முற்போக்கான உள்ளூர் சட்டங்களை ஆதரியுங்கள்.

ஷூவார் இன மக்கள் என்னிடம் பத்தாண்டுகளுக்கு முன்னர் சொன்னதை உங்களுக்கு எடுத்துரைக்க விரும்புகிறேன். மாசுபடுத்தும் தொழிற்சாலைகள், சந்தடிமிக்க நகரங்கள், நெரியும் தேசிய நெடுஞ்சாலைகள் என்ற துர்மோகத்தை விட்டு விட்டு இயற்கையை மதிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். பொறுப்புணர்வு மிகுந்த உலகக்குடிமகனாக இருங்கள். சமத்துவத்தின் அடிப்படையிலான இனிய கனவைக் காண்போம். நம்மை மாற்றிக்கொள்வது ஒன்றும் நம் சக்திக்கு அப்பாற்பட்டதல்ல.

இப்போதிருப்பதைக் காட்டிலும் மேலும் சிறப்பான உலகை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அனைவரது தேவைக்கும் உரிய நீரையும், உணவையும், நோய்களைச்

சீரோக்குவதற்கான மருந்துகளையும் உலகின் எந்த மூலைக்குத் தேவைப்பட்டாலும் அவற்றைக் கொண்டுசேர்ப்பதற்கான போக்குவரத்து வசதிகள் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இப்போது உண்டு. அனைவருக்கும் கல்வியறிவை வழங்க வேண்டும். போர்கள் தேவையற்றவை என்பதை உணர வேண்டும். சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்காத தொழில்நுட்பங்கள், கருவிகள் போன்றவை மட்டுமே உருவாக்கப்பட வேண்டும்.

இந்நூல் ஒரு பரிந்துரைப்பு சீட்டு அல்ல. நிறுவனவியத்திற்கு பகடைக் காயாகச் செயல்பட்ட, தன்னை ஒரு அடியாளாக மாற்றிக்கொள்ள அனுமதி கொடுத்தவனின் ஒப்புதல் வாக்குமூலம். எந்தத் தவறுகளில் இருந்தும் தன்னைச் சமாதானப்படுத்திக்கொண்டு இந்த லஞ்சமும் ஊழலும் நிறைந்த அமைப்பு கொடுத்த சகல சௌகர்யங்களையும் தானும் அனுபவித்த ஒருவனின் வாக்குமூலம். தான் தெரிந்துகொண்டிருந்த அனைத்து உண்மைகளையும் மீறி இந்த உலகின் ஏழை எளிய மக்களைச் சுரண்டவும், இவ்வுலகின் வளங்களைக் கொள்ளையடிக்கவும் பேராசை கொண்ட ஒருவனின் வாக்குமூலம். உலகின் பெரும் பணக்கார நாட்டில் பிறந்த ஒரே தகுதியைக் கொண்டு அனைத்து வசதிகளையும் பயன்படுத்திய ஒருவனின் வாக்குமூலம். அனைத்துச் செல்வங்களும் உடைய ஒரு நாட்டில் தன் பெற்றோர் மட்டும் ஏழையாக இருப்பதாகக் கருதி தன்னிரக்கம் கொண்ட ஒருவனின் வாக்குமூலமே இந்நூல். உலகின் ஏகாதிபத்தியமாகும் வெறியில் ஒரு நாடு உலகமக்களைக் கொன்று குவிக்கிறது, உலகின் சுற்றுச்சூழலை தன் லாபவேட்டைக்காக மாசுபடுத்துகிறது என்ற பொருளாதார உண்மைகளைக் கற்றுத்தெளிந்த பின்னர் அதைத் தடுத்துநிறுத்த உறுதிபூண்ட ஒருவனின், பிறரை அதற்காகத் தயார்ப்படுத்தும் செயலில் இறங்கிய ஒருவனின் ஒப்புதல் வாக்குமூலமே இந்நூல்.

இதில் சொல்லப்பட்ட பல அம்சங்கள் உங்கள் சொந்த அனுபவங்களுக்கு நெருக்கமாக இருக்குமானால் நம் இருவருக்கும் இடையே பொதுவான அம்சங்கள் இருப்பதாகவே அர்த்தம். நாம் வெவ்வேறு சாலைகளில் பயணித்துக்கொண்டிருக்கலாம். நம்மிருவருக்கும் வாகனங்கள் ஒரேமாதிரியானவை. ஒரே பெட்ரோலைத்தான் இருவரும் வாகனங்களில் நிரப்பிக்கொள்கிறோம். ஒரே நிறுவனத்தின் உணவகங்களின் வெவ்வேறு கிளைகளில் உண்கிறோம்.

தவறுகளை ஒப்புக்கொள்வதே விழிப்படைவதற்கான முதல் தேவையாகும். நான் மனதளவில் சுதந்திரமாக இருப்பதற்கு இந்த ஒப்புதல் வாக்குமூலம் பெரிதும் பயன்படும்.

இனி உங்களைச் சுயபரிசீலனை செய்வதற்கான கட்டம் வந்துவிட்டது. நீங்கள் யார் என்பதையும், இப்போதுள்ள நிலையை எப்படி அடைந்தீர்கள் என்பதையும், அடுத்து செல்லவேண்டிய இடம் எது என்பது பற்றியும், நீங்கள் செய்த செயல்களுக்காக ஏன் வெட்கமடையவோ அல்லது பெருமிதம் கொள்ளவோ வேண்டும் என்பதையும் பரிசீலித்துப் பார்க்கவேண்டும். அவ்வாறு செய்யும் பரிசீலனை மூலமாகப் பெறும் உணர்வு மனச் சுதந்திரத்தை அளிக்கும். இதை எழுதுகிற இக்கணத்தில் பெரும் வலிமையையும், மறுபறம் அவமானத்தையும் ஒருசேரப் பெறுகிறேன். இதை எழுதும்போது அச்சவுணர்வு கொள்ளும் அதேவேளை விடுதலை உணர்வையும் இன்பத்தையும் பெறுகிறேன்.

நான் இதை ஒப்புக்கொள்வதற்குக் காரணம், நான் மற்றவர்களை எப்படி ஏமாற்றினேன், இந்த மோசமான அமைப்பிற்கு என்னை நானே எப்படி அடிமைபோல ஒப்புக் கொடுத்தேன். இத்தேசத்தை நிர்மாணித்தவர்களின் கனவுகளை நனவாக்க அடுத்து நான் செய்யவிருப்பது என்ன? இத்தேசத்தின் அடிப்படை லட்சியங்களான நல்வாழ்வு, பூரணஇன்பம், சுதந்திரம் ஆகியவற்றை நம் நாட்டினருக்கும் இவ்வுலக மக்கள் அனைவரும் பெற நான் செய்யப்போவது என்ன? வறுமையை ஒழிக்கவும் இன்னொரு செப்11 வராமல் தடுக்கவும் நான் தேர்ந்தெடுக்கவுள்ள பாதை எது? கொடூரமான சமநிலையற்ற அமைப்பை நடத்துபவர்கள் பரிதாபத்திற்குரியவர்களே தவிர பின்பற்றுதலுக்குரிய ஹீரோக்கள் அல்ல. அவர்கள் அனுபவிக்கும் பண்ணை வீடுகளும், உல்லாசப் படகுகளும், பேரின்பத்தை அளிப்பவை என்ற மாயையை ஊடகங்கள் பரப்புகின்றன. உண்மையை நாம் கற்றுக்கொள்வது எப்படி? நம் பிள்ளைகளைகளுக்குக் கற்றுத்தருவது எப்படி?

இந்தக் கேள்விகள் அனைத்தும் நம் காலத்தில் கேட்கப்பட வேண்டியவை. நம் காலத்திற்குரிய வகையில் சுயசிந்தனையுடன் இவற்றிற்கான விடையைத் தேட வேண்டியுள்ளது. இந்நாட்டிற்காகத் தம்மை அர்ப்பணித்த தாமஸ் பெய்னும், ஜெபர்சன் போன்றோரும் இன்னமும் நம்முடன் இருந்துகொண்டுதானிருக்கிறார்கள். அவர்களின் வார்த்தைகள்தான் இன்றும் நமக்கு எழுச்சியூட்டுகின்றன. தமது பண்ணைகளையும், வாழ்வாதாரங்களையும் இழந்து பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்திற்கு எதிராகப் போராடியவர்கள், இந்நாட்டின் அடிமைஇன மக்களை மீட்கப் போராடியவர்கள், பாசிச அபாயத்தில் இருந்து இந்த உலகைக் காக்க தம் இன்னுயிரை ஈந்த தியாகிகள் அனைவரின் ஆன்மாக்களும் இன்னமும் நம்முடன்

உரையாடிக்கொண்டுதான் இருக்கின்றன. இவர்கள் அனைவரின் போராட்டத்திற்கு உணவும் உடையும் அளித்த எளியவர்களின் ஆன்மாவும், நாம் பெற்ற வெற்றிகளைக் காத்து நிற்க பயிற்றுவித்தவர்கள், ஓவியர்கள், விஞ்ஞானிகள், உடலுழைப்பு செய்வோரின் ஆன்மாக்களும் நம்முடன் இருந்து நமது செயல்பாடுகளைக் கவனித்துக்கொண்டுதான் இருக்கின்றன.

நமக்கான நேரம் இது. நாம் ஒவ்வொருவரும் போர்க்களத்தில் அடியெடுத்து வைப்பதற்கான நேரம் இது. முக்கியமான கேள்விகளை எழுப்பி அவற்றிற்கான விடைகளை நாமே கண்டறிந்து அவற்றின் வழியாக ஆன்ம பரிசோதனை செய்து கொள்வதற்கான நேரம் இது. நடவடிக்கையில் இறங்குவதற்கான நேரம் மிகச்சரியாக இதுவேதான்.

உங்கள் வாழ்வில் நிகழ்ந்த எதேச்சைகளும், அவற்றை நீங்கள் கையாண்ட முறையும்தான் இந்த நிலைக்குப் பொறுப்பாகும். அதுவே உங்களை இந்த நிலைக்கு கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது.

***